நாவலர் மாநாடு

விழா மலர்

க.கு.சா 1052

நல்லூர் - யாழ்ப்பாணம்
1969

நாவலர் மாநாடு

விழா மலர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

கொழும்பு

அச்சுப்பதிவு :

மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட்

161, செட்டியார் தெரு, கொழும்பு.


நாவலர் அவரே யாவார்
நமது சைவாகமத்தின்
காவலர் அவரே!

மாந்தளிர் மேனி யானை
மலர்விழி யழகி னானைத்
தீந்தமிழ் வாயி னானைச்
செபமணிக் கையி னானைக்
காந்தமின் சாரம் போலக்
கவர்ந்திடுந் தோற்றத் தானை
ஏந்திசை பரவி னானை
என்னுளே வணங்கி னேனே.

வரம்பெறு வாக்கி னானை
வஞ்சமில் நெஞ்சி னானை
உரம்பெறு மேனி யானை
உயர்சிவ சமயம் வாழ
நிரம்பிய பணிசெய் தானை
நீள்தவ வேள்வி யானைப்
பரம்பொருட் பற்றி னானைப்
பற்றினர் பற்றற் றாரே

நாவலர் அவரே யாவார்
நமதுசை வாகமத்தின்
காவலர் அவரே; இன்பக்
கனிதமிழ் அமுதம் ஊறும்
பாவலர் அவரே; எங்கள்
பைந்தமிழ் உலகை யாளும்
கோவலர் அவரே! வெற்றி
கொட்டுக முரச மிங்கே!

— கவியோகி— சுத்தானந்த பாரதியார்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்

அன்பும் ஆர்வமும் பொங்கிக் கரை புரண்டோட, வெள்ளம் போல் மக்கள் ஈட்டம் திரண்டு வர, தலைநகரிலிருந்து நாவலர் பெருமான் திருவுருவச் சிலை யாழ்ப்பாணம் நோக்கிப் பவனி சென்ற காட்சி, யாவர் நினைவிலும் என்றும் நிறைந்திருப்பதாகும். மொழி, சமயம், பண்பாடு ஆகிய துறைகள் யாவற்றிலும், சமூ மக்கள் முன்னேற உந்துகின்றதொரு விழிப்புணர்ச்சி மலர்ந்தது கண்டு நெஞ்சில் உவகை பொங்குகின்றது; உள்ளம் பூரிக்கின்றது. அப் பூரிப்பின் விளைவே இந்த மலர். சைவமும் தமிழும் தழைக்க, நாம் வாழ உதித்த ஆதவனும் நாவலர் பெருமான் திருவடிகளுக்கு அன்புக் காணிக்கையாக இம் மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

நா. இரத்தினசபாபதி
மாநாட்டுக் குழுத் தலைவர்



சமர்ப்பணம்



முன்னுரை

ஒரு நாட்டில் தோன்றிய பெரியோரினாலேயே அந்நாடு பெரும் புகழ் பெறுவது. எம் ஈழ நாட்டுப் பெரியரிற் பெரியராய் விளங்கியவர் நாவலர் பெருமானவர். அவருடைய பெருமையையும் அவர் ஆற்றிய பணியையும் அவனி முழுவதும் அறியும். யாவரும் அறிவோம். அறிந்துமென்? இதுகாறும் அப்பெருமகற்கு ஒரு நினைவுச் சின்னம் நிறுவினேமா? எதிர்காலத் தமிழினத்தினதும் சைவ நெறியினதும் நன்மையைக் கருதிக் கருதி அப்பெருமான் சிந்தித்துச் சிந்தித்து, பெருமுழக்கிட்டு எடுத்து இடித்துச் சொல்லிச் சொல்லிச் செயலாற்றி யாற்றி, எத்துணைத் தியாகஞ் செய்தார்! அவர் தோன்றியிராவிட்டால் எம் நிலை எந்நிலையாயிருந்திருக்குமோ என்று எண்ணியெண்ணி நன்றிக் கடன் செலுத்த வேண்டிய யாம், இழைத்த தவறெல்லாம் போக, இன்றுவது விழிப்புணர்ச்சி பெற்றுள்ளமை எமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கின்றது. யாம் உய்தி நெறி கடைப்பிடித் தொழுகுதற்கு அவர் காட்டிய உயரிய வழிகள் பலப் பல. அவற்றுள் ஒரு சிலவற்றையேனும் கடைப்பிடித் தொழுகாவிடின், எமக்குக் கழுவாயும் உண்டுகொல்! 'செய்தி கொன்றோர்க்கு உய்தியில்' என்றன்றே கூறினன், பண்டைத் தமிழன். ஆகவே, ஒரு சிலவற்றையேனுங் கைக்கொண்டொழுகின் யாம் உய்யலாம்; ஓங்கலாம்.

மக்களிடையே இந்த விழிப்புணர்ச்சி உண்டாகியிருக்கும் இக்காலத்தில் முதற்கண், எம் அஞ்சலியையும் நன்றியையும் நாவலர் பெருமானுக்குத் தெரிவிக்கு முகமாக எம்சபை இச்சீலை நாட்டு விழாவை நடாத்துகின்றது. பன்னூருண்டுகட்கு ஒரு கால் நிகழ்வதும், ஈழச் சரித்திரத்திற் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கத்தக்கதும், எதிர்கால மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவதுமாகிய இவ்விழா நிகழ்ச்சித் தொடர்பில் நாலவர் பெருமானது பெருமையையும் நற்பணிகளையும், அவர் தம் நல்லுபதேசங்களையும் நினைவுகூரச் செய்யும் ஒரு சிறப்பு மலரையும் வெளியிடத் துணிந்தோம்.

இம் மலர் கண்ணும் மனமுங் கவரும் தண்ணறு மலராக அமைய வேண்டுமென்பது எம் ஆசை. அதற்கு நறுமணம் ஊட்டவல்ல நற்றமிழ் அறிஞர்களை நாடினேம். ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு துறையை வகுத்து அவ்வத்துறையிற் சிறப்புக் கட்டுரைகளைத் தருமாறு கேட்டோம். யாம் கருதியவாறு அமைதற்குக் கிடைத்த கட்டுரைகள் எல்லாம் வாய்த்திலவெனினும், பெற்றவற்றைக் கொண்டு உற்றவகையில் இம் மலரை அழகுபடுத்தலானேம். இதனை நான்கு பிரிவுகளாக அமைத்துள்ளோம். முதலிரு பிரிவினுள்ளும், கட்டுரைகளை ஓரளவு பொருளொற்றுமையை அடிப்படையாகக் கொண்டு வரிசைப் படுத்தினேம். ஈற்றில் யாம் சேர்த்துள்ள குறிப்புகள் நாவலர் பெருமான் காலத்தை நன்குணரவும் அதன் வாயிலாக நாவலர் பெருமான் நிலையையும் பணிகளையும் பல்வகையாக மதிப்பிடவும் பயன்படுமென்று கருதுகின்றேம்.

இம் மலருக்கு ஆசிகள் வழங்கிய அறிஞர்கள் பலர். இம் மலரை இன்னிதின் உருவாக்குவதற்குப் பல்லாற்றலும் உதவினோர் பலர். இவர்கட்கெல்லாம் எம் நன்றிக் கடப்பாட்டைக் கூறுகின்றேம்.

இம் மலரை வெளியிடுவதற்கு உதவியவர்களுக்கும், மலர் வெளியீட்டு ஆலோசனைக் குழுவினர்க்கும், மலரைக் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுதவிய மெய்கண்டான் அச்சக அதிபர் திரு. நா. இரத்தினசபாபதி யவர்களுக்கும் நன்றி யுரியதாகுக.

இம் மலரில் வெளிவரும் கட்டுரைகளிற் காணும் கருத்துக்களுக்கு அக்கட்டுரைகளை எழுதியோரே பொறுப்பாவரன்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினர் எவ்வாற்றலும் பொறுப்பாகார் என்பதையும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகின்றேம்.

''செப்பலுற்ற பொருளின் சிறப்பினுல்
அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால்
இப்பொ ருட்கென் னுரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால்''

என்னுஞ் சேக்கிழார் திருவாக்கையே அவையடக்கமாகக் கூறி இம் முன்னுரையை முடிக்கின்றேம்.

இங்ஙனம்,
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை.

අග්‍රාණ්ඩුකාර කාර්යාලය
மகா தேசாதிபதியின் கந்தோர்
Governor-General's Office

රජ වාසල, කොළඹ, ශ්‍රී ලංකාව.
இராணி மாளிகை, கொழும்பு, இலங்கை.
Queen's House, Colombo, Ceylon.

No.PS/M/8(65)

21st June 1969.

MESSAGE.

I am indeed very happy to be able to send this Message and associate myself with the ceremonies organised by the Srila Sri Arumuga Navalar Sabhai to commemorate the life and work of the late Arumuga Navalar.

The late Sri Arumuga Navalar, born in 1822, devoted his entire life to Saiva revivalism and Tamil scholarship at a time when a large number of people in the North were being weaned away from their ancient culture and religion and Hindu society needed leadership.

Arumuga Navalar's life of dedication, his integrity of purpose and crusading zeal will always be a source of inspiration for generations to come.

I am glad that the Srila Sri Arumuga Navalar Sabhai which has been founded to commemorate the life and work of the late Srila Sri Arumuga Navalar is actively pursuing its object of keeping alive the inspiring traditions for which the Navalar devoted his entire life. The erection of a statue of the Navalar in the place of his birth at Nallur, Jaffna, will help keep alive the memory of this great savant and inspire posterity to follow the ideals he cherished.

GOVERNOR-GENERAL.

Prime Minister
Ceylon

Colombo, 23rd June, 1969.

Message from the Hon. Prime Minister to the Arumuga Navalar Supplement & Souvenir

Srila Sri Arumuga Navalar, the Saivite reformer and Tamil Scholar takes his place besides other national figures like the Ven. Migettuwatte Gunananda and the Ven. Anagarika Dharmapala, who played a valiant role in restoring the confidence of the people in their faith, language and culture.

Born at a time when western customs and values held pride of place, Arumuga Navalar, who saw his people in danger of falling under the spell of alien influences, strove to restore to his people a sense of self-respect and understanding of the values and virtues of their heritage.

In this mission, Arumuga Navalar trod the same path as did the Ven. Anagarika Dharmapala when he exhorted the people in the South to an awareness and appreciation of the richness of their culture.

The Navalar's crusading zeal, integrity of purpose and courage won for him a following which exemplified the lofty principles he advocated. It was with such beginnings that the Saiva revival was born in the northern parts of this country.

I am glad that the Srila Sri Arumuga Navalar Sabai, which is dedicated to keeping alive the message of the Navalar, is today commemorating the life and work of this great son of Ceylon in a fitting manner.

The erection of a statue of Navalar in the place of his birth at Nallur will go a long way towards keeping fresh the thought of this Savant in the hearts of his countrymen.

DUDLEY SENANAYAKE
Prime Minister.

பிரதம அமைச்சர்
இலங்கை.

கொழும்பு,
1969, யூன் 23.

ஆறுமுக நாவலர் நினைவு மலருக்கும் சிறப்பு மலருக்கும்
கௌரவ பிரதம அமைச்சர் வழங்கிய

ஆசிச் செய்தி

சைவசமய சீர்திருத்தச் செம்மலும் தமிழ்ப் பேரறிஞருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், இந்நாட்டு மக்கள் தமது சமயம், மொழி, பண்பாடு ஆகிய வற்றில் மீள நம்பிக்கை கொள்ளுமாறு அஞ்சாநெஞ்சோடு அரும்பணி ஆற்றிய வண. மிகெட்டுவத்தே குணானந்த, வண. அநகாரிக தர்மபால ஆகிய ஏனைத் தேசியப் பெருமக்கள் வரிசையில் இடம்பெறும் ஒருவராவர்.

மேனாட்டுப் பழக்க வழக்கங்களும் பயன் மதிப்புக்களும் மேலோங்கி ஆதிக் கஞ் செலுத்திய ஒரு காலத்திலே தோன்றிய ஆறுமுகநாவலர், தமது நாட்டு மக்கள் அன்னிய நாகரீக மோகத்தில் வீழ்ந்து அவலமுறும் ஆபத்திலிருப்பதைக் கண்டு, அம் மக்கள் தம் பாரம்பரியச் செல்வத்தின் மதிப்பையும் சிறப்பையும் அறிந்து தன்மான உணர்வோடு தலைநிமிர்ந்து வாழ அரும்பாடுபட்டவர்.

இந்த அரும்பணியை ஆற்றுவதில், ஆறுமுகநாவலர் சென்ற வழியும், தென்னி லங்கையில் உள்ள மக்களைத் தங்கள் பண்பாட்டு வளத்தை உணர்ந்து நயக்கு மாறு வலியுறுத்தி வந்த வண. அநகாரிக தர்மபால சென்ற வழியும் ஒன்றே.

நாவலரின் போராடும் ஆர்வமும், நோக்கத்தின் செம்மையும், அஞ்சா நெஞ்சமும் காரணமாக மக்களிற் பலர் அவரையே தலைவராக மதித்துப் பின் பற்றி, அப் பெருமான் கடைப்பிடித்த உயர்ந்த கொள்கைகளை உலகுக்கு எடுத்துக் காட்டினர். இந்த வகையிலே இந்நாட்டின் வடபாற் சைவ மறுமலர்ச்சி அன்று தோன்றியது.

நாவலரின் நற்பணியை நிலைநாட்டுவதே தன் பணியாகக் கொண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை இந்தப் பெருமகனரின் வாழ்க்கையையும் தொண்டையும் தகுந்த முறையில் நினைவுகூரு முகமாக இன்று விழா வெடுப்பது கேட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

நாவலரின் சிலையை அவர் பிறந்த நல்லூரிலே நாட்டுவது, நாட்டு மக்களின் இதயங்களில் இப்பெரியாரது நினைவை என்றென்றும் நிலைபெறச் செய்வதற்குப் பெரிதும் உதவியாயிருக்கும்.

டட்லி சேனநாயக
(பிரதம அமைச்சர்)

ஆசிச் செய்தி

அறிவு ஆற்றல் படைத்த தலைவர்கள் பலர் எம்மினத்தில் தோன்றியுள்ளனர். ஆனால் அவர்களுள் ஒரு சிலர்தான் தம் அறிவாற்றலை, தாம் பெற்ற அனுபவத்தைத் தாம் பிறந்த தாய்நாட்டுக்கும், தாம் சேர்ந்த இனத்திற்கும், தாம் பேசும் மொழியின் வளத்திற்கும் பயன்படுத்தியுள்ளனர். இத்தகைய குறிப்பிடத்தக்க ஒரு சிலருள் திருப்பெருந்திரு. ஆறுமுக நாவலரும் ஒருவராவர். மேல்நாட்டு நாகரிகத்துக்கும் வாழ்க்கை முறைக்கும் அடிமையாகித் தமிழினம் தன்னிலை தவறித் தத்தளித்த வேளையில் அவர்களுக்கு ஓர் வழிகாட்டியாக—கலங்கரை விளக்கமாக—விளங்கியவர் நாவலர் அவர்கள்.

ஈழம் வாழ் தமிழினத்தின் மிக நெருக்கடியான காலத்தில் நாவலர் தோன்றிப் பணிபுரிந்திராதிருப்பின் தமிழருடைய வரலாறே வேறு விதமாய் அமைந்திருக்கும்.

நாவலரின் சமயப்பணி முக்கியத்துவம் உடையதாயினும், அவர் தமிழுக்கும் தமிழ்ப் பிள்ளைகளின் கல்விக்கும் தனி மனிதனாக நின்று ஆற்றிய பணி என்றும் நன்றியுணர்வுடன் போற்றுதற்குரியது. நாவீறு படைத்த நாவலர் தமிழின் உரைநடையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணி அளவிடற்கரியது. எண்ணத்தில் ஏற்றம் கொண்டு எழுத்தில் எழுச்சி கூட்டிப் பேச்சில் வெல்லும் சொல் கையாண்டு தமிழ் மக்களை வழிப்படுத்தி நெறிப்படுத்திய பெருமை நாவலரையைச் சார்ந்ததாகும்.

தாம் கொண்ட கொள்கைக்காக தம் வாழ்வுக் குறிக்கோளுக்காக தன்மான உணர்வோடு இறுதிவரையும் போராடி வெற்றி கண்டவர் நாவலர். அவரின் இலட்சியப் பற்றும் நெஞ்சுறுதியும் இன்னல் பலவற்றுக்கு ஆளாகி அல்லலுறும் தமிழினத்துக்கும் தமிழ்த் தலைவர்களும் அரும் பாடமாக அமையவேண்டுமென்பது எம் விருப்பம்.

சா. ஜே. வே. செல்வநாயகம் பா.உ.

அல்பிறட் கவுஸ் கார்டின்,
கொழும்பு-3,
23-6-63.

Message

The services to Saivaism and to the Tamil language rendered by Arumuga Navalar of revered and unperishable memory can hardly be equalled. It is no exaggeration to state that, if not for Navalar, Saivaism and Tamil would hardly have survived in Ceylon.

Navlar was not only a Tamil scholar but had mastered the English language as well.

Although he was a devoted Saivite he was not hostile or antagonistic towards other religions What he objected to, and opposed strenuously, was the proselytising activities of certain misguided missionaries of that day.

As he felt that Saivaites were getting converted to Christianity primarily because of their ignorance, or inadequate knowledge, of the tenets of their own religion, he embarked on a systematic campaign of explaining and elucidating the principles and tenets of Saivaism. This he did by delivering lectures throughout the length and breadth of the Tamil areas, and by publishing a series of pamphlets and books explaining the principles of the Saiva religion in such simple manner as could be grasped by the old as well as the young.

He was a firm believer in the wholesome principle that education should be imparted with a religious background. Hence he established Saiva schools in Jaffna, Kopay, Mathagal and Chidamparam to ensure that Saiva students were educated in a Saiva atmosphere He set up a printing press in Jaffna, and later in Madras, in order to publish his books and pamphlets on Saivaism, which had been out of print.

As a result of his untiring, devoted and strenuous efforts, the process of Saivaites being converted to Christianity, which had assumed large proportions, was effectively halted and Saivaites thereafter fearlessly practised their religion and defended and propagated the tenets of their religion against the ignorant and unenlightened onslaughts of the followers of other religions.

Navalar's activities were not confined to the literary and religious arena. He took a deep and abiding interest in the social welfare of his compatriots and in politics as well when Sir P Ramanathan contested a seat in the Legislative Council, it was Navalar who led the election campaign in support of his candidature. He was also a social worker of no mean repute. When Navalar realised that the Government Agent of Jaffna was not performing his duties to the satisfaction of the people, he made representations to the authorities in Ceyl and to the Secretary of State for Colonies in England and succeeded in putting an end to the maladministration of Jaffna by the then Government Agent.

When there was an outbreak of cholera in Karaiyur, the Government of the day segregated he patients in special areas and had them treated, but Navalar unmindful of the risk to his health and life and ignoring considerations of caste and creed, went direct to the people affected and attended on them.

The speeches and writings of Navalar were not confined to Tamil Ceylon. He dilivered lectures and wrote and published books on Tamil and Saivaism, in Tamil Nadu also. The excellence of his writings and speeches won for him the admiration and regard of the people of Tamil Nadu. If today the Tamils of Ceylon enjoy the regard and respect of our brethren in South India, it is largely due to the unparalleled services to the Tamil language and to Saivaism rendered by Navalar.

It is therefore most appropriate that the grateful Tamil nation has rallied together to honour Navalar - the versatile leader of the Saiva Renaissance in Ceylan, the religious and social reformer, the literary genius and distinguished orator,

G. G. Ponnampalam Q. C.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபைத் தலைவர்

நீதியரசர். மாண்புமிகு வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

விடுத்துள்ள செய்தி

"நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
யாத்தனறி வெங்கே யறை"

மேற்கூறிய பொன்மொழிகளில் அறிவிற் சிறந்த பெரியார் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களின் சேவையை மிக்க அழகாகவும் சுருக்கமாகவும் போற்றினர். ஆங்கிலேய அரசினரின் ஆதிக்கம் செறிந்து விளங்கிய பத்தொன்பதாம் நூற்றாண்டில், அவ்வரசாங்கத்தின் ஆதரவோடு பாதிரிமார்கள் இந்நாட்டு மக்களுக்குப் போதித்த மேல் நாட்டு நாகரிகத்தையும் மதத்தையும் அவர்கள் அவாவுடன் பின்பற்றித் தேசிய நாகரிகத்தையும் சைவத்தையும் புறக்கணித்துத் தாய்மொழியைக் கைவிட்டு அரசாங்க மொழியாகிய ஆங்கிலமே தஞ்சமெனக் கருதி நிலைகுலைந்திருந்த காலத்தில், ஈழத்தின் தவப்புதல்வனாய்த் தோன்றிய ஆறுமுக நாவலரின் அரிய சேவையினாலன்றே தேசிய நாகரிகமும், மதமும், மொழியும் புத்துயிர் பெற்றுத் தழைத்தன. சைவத்துக்கும் தமிழுக்கும் தம் வாழ்நாள் முழுவதையுமே அப்பெரியார் அர்ப்பணஞ் செய்தார். பாதிரிமார் தமது கலாச்சாரத்தையும், மதத்தையும் வளர்ப்பதற்கு எவ்வித முறைகளைக் கையாண்டார்களோ அதே முறைகளையே அவர்களை எதிர்ப்பதற்குத் தாமும் கையாண்டார். பாதிரிமார் சைவத்தை நிந்தித்துப் பிரசுரித்த துண்டுப்பிரசுரங்களைக் கண்டித்து அவர் விடுத்த மறுப்புக் கண்டனங்கள் சைவாபிமானிகளுக்கு உற்சாகத்தையும் ஆர்வத்தையும் அளித்ததுமன்றிப் பாதிரிமாரை வெட்கமடையவுஞ் செய்தன. அவர் பொழிந்த பிரசங்கமாரிகள், போலிப் போதனைகளால் வரண்டிருந்த மக்களின் உள்ளங்களைக் குளிரச் செய்து அவர்களின் தாய்மொழிப் பற்றையும், புராதன மதப்பற்றையும் மறுமலர்ச்சி அடையச் செய்தன. சைவ சமயத்தைப் பற்றிய நூல்களைத் தாமே எழுதிப் பிரசுரித்ததோடு செய்யுள் நடையிலிருந்த அரிய இலக்கிய நூல்களையும் சமய நூல்களையும் எளிய வசன நடையிலெழுதி யாவரும் அந்நூல்களிலிருந்த விபாக்கிஷங்களை அனுபவிக்குமாறு தமது அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரித்தார். அதுவுமின்றி, சைவப்பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்கு ஓர் சைவாங்கில பாடசாலையை ஸ்தாபித்தார்.அன்று அவர்கள் இட்ட வித்திலிருந்தே தற்போது யாழ் நகரிலே பிரபல கல்லூரியாய் விளங்கும் இந்துக் கல்லூரி உருவெடுத்தது. அவர் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலை சென்ற நூறு ஆண்டுகளுக்கு மேலாகச் சைவத்துக்கும் தமிழுக்கும் அரிய சேவை செய்துவருகிறது.

இத்தகைய அரும்பணியாற்றிய அவதார புருஷனுக்கு அவர் மறைந்து 90 ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் தமிழ் மக்களின் அன்புக்காணிக்கையின் ஒரு சிறு பகுதியாகச் சிலை நாட்டப்படுகிறது. இச்சிலை வருங்காலச் சந்ததியின் உள்ளத்தே நம்பிக்கையையும் பேருணர்வையும் ஊட்டுவதாக! நாவலர் பெருமானுக்குச் சிலை நாட்டுவது இச்சபையின் பல திட்டங்களில் ஒன்றாகும். இன்னும் பல பணிகளைச் செய்வதற்கு இச்சபை திட்டமிட்டுள்ளது. பொதுமக்களின் தாராளமான ஒத்துழைப்புடன் அவற்றை எல்லாம் காலப்போக்கில் எம் சபை நிறைவேற்றுவதாகும்.

இம்மாதம் 29ம் தேதி நல்லூரில் நடைபெறும் சிலை திறப்பு விழா நாட்டில் மாபெரும் உற்சாகத்தையும் மகத்தான ஆதரவையும் பெற்றுள்ளது. சகல இன மதப்பெரியார்களும் சென்ற 24ம் தேதி கொழும்பில் நடைபெற்ற நாவலர் சிலை வழியனுப்பு விழாவில் குதூகலத்துடன் கலந்து கொண்டு நாவலருக்கு அஞ்சலி செலுத்திய வைபவம் தனித்துவம் மிக்க நிகழ்ச்சியாகும்.

நாவலர் வாழ்க! அவர் புகழ் ஓங்குக!



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

ஆட்சிக் குழு

தலைவர்:

மாண்புமிகு நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம்

பொதுச் செயலாளர்:

திரு. ம. ஸ்ரீகாந்தா ஒ. பி. ஈ.
(நிரந்தரச் செயலாளர், காணி, மின்விசை, நீர்ப்பாசன அமைச்சு)

கூட்டுப்பொருளாளர்கள்

செனட்டர். த. நீதிராசா ஜே. பி.

திரு. நா. இரத்தினசபாபதி மெய்கண்டான் அதிபர்

உபதலைவர்கள்:

பேராசிரியர் டொக்டர். அ. சின்னதம்பி

திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (உபசபாநாயகர்)

கலாநிதி. எச். டபிள்யு. தம்பையா கியூ. சி.

திரு. கு. பாலசிங்கம்
(நிரந்தரச் செயலாளர், ககாதார அமைச்சு)

திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை ஒ. பி. ஈ.

செனட்டர். மு. திருச்செல்வம் கியூ. சி.

உதவிச் யெசலாளர்கள்

திரு. நா சோமகாந்தன் திரு. ஐ. தி. சம்பந்தன்

திரு. க. க. சுப்பிரமணியம்

குழு உறுப்பினர்கள்:

திரு. ஏ. சி. நடராசா, நியாயதுரந்தரர்

திரு. சி. அரங்கநாதன் கியூ. சி.

திரு. த. முருகேசபிள்ளை சி. ஏ. எஸ்.
(யாழ். உதவி அரசாங்க அதிபர்,)

திரு. ச. அம்பிகைபாகன் பி. ஏ.

திரு. சி. சின்னத்துரை (அதிபர் கல்கி பீடி ஸ்தாபனம்)

திரு. கே. எம். காளியப்பாபிள்ளை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

நாவலர் மாநாட்டு மத்திய குழு

தலைவர் :

திரு. நா. இரத்தினசபாபதி
மெய்கண்டான் அதிபர், கொழும்பு-13.

செயலாளர் :

திரு. நா. சோமகாந்தன்
110, கோட்டடி வீதி, கொழும்பு-12.

பொருளாளர் :

திரு. எஸ். சிவசுப்பிரமணியம்
சிறுப்பர், ஸ்டேட் பாங்க், கொழும்பு-1

கலாசார பகுதிப் அமைப்பாளர்,

திரு. ஐ. தி. சம்பந்தன்
துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனம், கொழும்பு-1.

சிலை தேசபவனி அமைப்பாளர் :

திரு. பொ. அட்சரமூர்த்தி
கணக்காளர், நீர்ப்பாசன இலாகா, இரத்மலானை.

தேசபவனியின் பாதுகாப்பு ஒழுங்கு :

திரு. கா விஸ்வலிங்கம்
பொலிஸ் தலைமை அலுவலக நிர்வாக அதிகாரி.

பொது இணைப்பாளர்கள்:

திரு. ம. ஸ்ரீகாந்தா O. B. E.
நிரந்தரச் செயலாளர், காணி மின்விசை அமைச்சு

செனட்டர் த. நீதிராசா J. P., M. M. C.
89, புதுச்செட்டித் தெரு, கொழும்பு-13.

யாழ். விழா ஏற்பாடுகளின் இணைப்பு அலுவலாளர்கள் :

திரு. த. முருகேசபிள்ளை
உதவி அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

திரு. கே. தனபாலசிங்கம்
வடபிரதேச வருமானவரி அதிகாரி, யாழ்ப்பாணம்

"மாநாட்டுச் செய்தி" ஆசிரியர் :

திரு. நா. சோமகாந்தன்

சிறப்பிதழ் பொறுப்பாளர் :

திரு. க. க. சுப்பிரமணியம்
வரிமதிப்பாளர், சுங்கப்பகுதி, கொழும்பு-1.

சிலை தேசபவனி அமைப்பாளர்கள்

செனட்டர். த. நீதிராசா ஜே. பி., எம். எம். சி.
திரு. நா. இரத்தினசபாபதி
திரு. பொ. அட்சரமூர்த்தி
திரு. சி. சிவசுப்பிரமணியம்
திரு. ஐ. தி. சம்பந்தன்
திரு. பொ. தேவதாசன்

மாநாட்டு ஏற்பாடுகளின் மத்திய இணைப்பாளர்கள்,

திரு. ம. ஸ்ரீகாந்தா
செனட்டர். த. நீதிராசா
திரு. நா. இரத்தினசபாபதி
திரு. என். சோமகாந்தன்
திரு. க. க. சுப்பிரமணியம்
திரு. ஐ. தி. சம்பந்தன்

மலர் ஆலோசகர் குழு



தலைவர்:

திரு. கி. லக்ஷ்மணன் M. A., Dip. Ed.

உறுப்பினர்கள்:

தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை

திரு. செ. வேலாயுதபிள்ளை B. A. (Hons.)

முதலியார் குலசபாநாதன்

திரு. க. செ. நடராசா M. A.

அமைப்பாளர்:

திரு. நா. சோமகாந்தன்

எமது நோக்கம்

நாவலர் பெருமான் திருவுருவச் சிலை நாட்டு விழா நாளில் அப்பெருமானது நினைவாக வெளியிடப்படும் மலர் உருவத்திலும் உள்ளமைப்பிலும் உள்ளுறையிலும் மலர்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டாக இலங்கவேண்டுமென விரும்பினேம். வியாபார விளம்பரங் களும் பகட்டு ஆரவாரங்களுமின்றிக் கனமும் காத்திரமும் கொண்ட அரிய பொக்கிஷமாக இம்மலர் அமையவேண்டுமெனக் கருதினேம்.

நமது சமயம், மொழி, பண்பாடு ஆகிய அனைத்திலும் நாவலர் பெருமான் ஏற்படுத்திய திருப்பத்துக்கும் அவர் வகித்த இமாசலமனைய தோற்றத்துக்கும் ஏற்ற வகையிலும், அம் மகானது பெயரால் இன்று நம் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையிலும் இம்மலர் அமையவேண்டுமெனவும் விழைந்தோம்.

ஈழத்து அறிஞர்கள், தென்னகத்து அறிஞர்கள், இந்து, இஸ் லாம், கிறிஸ்தவ அறிஞர்கள் ஆகிய பலரும் தத்தம் சூழலுக்கும் மனே நிலைக்கும் ஏற்ப நாவலர் பெருமானைப் பற்பல கோணங்களிலுமிருந்து ஆராய்வதற்கும், சமயப்பணி, தமிழிலக்கியப்பணி, இலக்கணப்பணி, கல்விப்பணி, சமுதாயப்பணி, பதிப்புப்பணி இன்னோரன்ன துறைகள் மூலம் நாவலர் பெருமானின் சேவைகளை மதிப்பிடுவதற்கும் இம் மலர் அரிய சாதனமாக அமையவேண்டுமெனவும் திட்டமிட்டோம். அவ்வாறு செய்வதே நாவலர் பெருமானின் தனிச் சிறப்புக்களைத் துலக்குவதற்கும் அவரைப் பூரணமாக மதிப்பிடுவதற்கும் சிறந்த வழி என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

கால நெருக்கடி காரணமாக மிக விரைந்து அச்சிடவேண்டிய நிலைமை ஏற்பட்டமையால் சிற்சில குறைகள் ஏற்பட்டுள்ள போதிலும் எம் நோக்கங்கள் குறிப்பிடத்தக்க அளவு நிறைவேறியமை கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

இம்மலர் இவ்வளவு சிறப்பாக வெளிவருவதற்குப் பலவகை யிலும் துணைபுரிந்த அறிஞர்களுக்கும் அன்பர்களுக்கும் எமது நன்றி உரியது.

கி. லக்ஷ்மணன்
தலைவர்
மலர் ஆலோசகர் குழு

பொருளடக்கம்

சமர்ப்பணம்
ஆசிச் செய்திகள்
முன்னுரை
பொருளடக்கம்

I

		பக்கம்
1.	ஆசிச் செய்தி	1
2.	வாழ்த்துரை	3
3.	நாவலரும் புராண படனமும்	5
4.	ஞானஞாயிறு நாவலர் பெருமான்	9
5.	தற்கால உரைநடையின் தந்தை	15
6.	நாவலர் வகுத்த பாதை	19
7.	தமிழ் இலக்கியத்துக்கு நாவலர் புரிந்த பணி	23
8.	நாவலரும் தமிழ் மொழியும்	31
9.	நாவலரும் நற்றமிழும்	37
10.	நாவலர் கல்விப் பணி	45
11.	கல்வித் துறையில் தீர்க்க தரிசனம்	51
12.	நாவலர் சைவக்காவலர்	55
13.	உசாத்துணை	57
14.	நாவலரும் பதிப்பாசிரியப் பண்பும்	61
15.	தமிழ் உரைநடையின் தந்தை	63
16.	பத்திரிகையில் நாவலரின் எழுத்து நடை	65
17.	நாவலரின் இலக்கணப் பணி	75
18.	மறைவளர்த்த நாவலரும் முஸ்லிம் நேசன் ஆசிரியரும் ...	81
19.	நாவலர் காலம்	87
20.	ஆறுமுக நாவலரின் ஆளுமை	91
21.	ஒப்புயர்வில்லா நாவலன்	95
22.	தமிழ் செய்த தவம்	99
23.	கந்தபுராணங் காக்கும் கலாசாரம்	101

24.	நாவலர் எழுதும் முதல் விஞ	.. ...	105
25.	நாவருக்கு என்ன தெரியும்	... ...	109
26.	நாவலர் பெருமான்	... ...	113
27.	நாவலர் வழிவந்த சமுதாயம்	... ...	115
28.	தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர்	... ...	~~119~~ 125
29.	நாவலரும் பதிப்புப் பணியும்	... ...	129
30.	அச்சாளர் ஆறுமுக நாவலர்	... ...	137

II

1.	திருநின்ற செம்மையே செம்மை	... ...	1
2.	சிவநெறி	... ...	9
3.	அகப்பொருளில் அருட்பொருள்	.. ..	15
4.	நாவலர் காலத்து புலவர்கள்	... ...	21
5.	நாவலருக்குப் பின் ஈழத்து உரையாசிரியர்கள்	... ..	29
6.	மனிதாபிமான மாண்பாளர்கள்	... ...	37
7.	மாதோட்டம்	... ...	43
8.	ஈழமும் சிதம்பரமும்	... ...	49
9.	முந்தியும் இருந்த சிந்துகள்	... ...	55
10.	ஈழத்தில் தமிழ் நாடகங்கள்	... ...	61
11.	தமிழில் விஞ்ஞானமும் ஈழநாட்டின் பணியும்	... ...	65
12.	Bharata Natyam and Ceylon	.. ..	73

III

1.	நல்லூர் ஆறுமுக நாவலனூர்	... ...	1
2.	நாவலன் சிரடிகள் வாழி	... ...	5
3.	நாவலர் தாள் இறைஞ்சுதும்	... ...	7
4.	கனிதமிழ் ஈழத்தோங்க கலங்கரை விளக்கம் ஆனேன்	...	8

IV

1.	நாவலர் வாழ்க்கைத் திகதிகள்	... ...	1
2.	ஆறுமுக நாவலரின் வரலாற்றுடன் தொடர்புடையோர்	..	5
3.	நாவலர் காலத்து வாழ்ந்த பெரியோர்கள்	...	13
4.	நாவலர் காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க சம்பவங்கள் சில	...	19
5.	நாவலர் நூல்கள்	... ...	25
6.	நாவலரைப் பற்றிய நூல்கள்	.. ..	27

திருவாவடுதுறை ஆதீனகர்த்தா

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி

அவர்கள் அளித்துள்ள



சைவவுலகம் செய்த தவப்பயனால் யாழ்ப்பாணத்து நல்லூரிலே தோன்றி இலக்கண இலக்கிய தருக்க நீதி நூல்களனைத்தையும் நல்லாசிரியர் முகமாகக் கற்றுணர்ந்து அவைகளைச் செவ்வே சிந்தித்துத் தெளிந்து நல்லொழுக்கத்துக்கொரு நாயகமாய் வாய்மையே நல்லுருவாய்ச் சிவபத்தி, சிவனடியார் பத்தி, சிவாகம பத்தி முதலியவைகளால் முதிர்ந்து ஒப்பாரு மிக்காருமின்றி யாவர்க்குமினியவராய் வித்துவ சிகாமணியாய் சைவ சித்தாந்த ஞான பானுவாய்த் திக்கெல்லாம் மெய்ப்புகழ் பெற்று விளங்கிப் பரமதகண்டனமும், சுவமததாபனமும் செய்து அழியாத செயத்தம்பம் நிறுத்தி நம் முடைய பஞ்சாக்கர தேசிகர் ஆதீனத்திலே குருமூர்த்தத்தின் திரு முன்னர் உபய சந்நிதானமும் வீற்றிருக்கும் கொலுமண்டபத்திலே தம்பிரான் கூட்டமும் வடமொழி தமிழ்மொழி வல்ல வித்துவசனங்களும் கூடியிருந்த பெரும் பேரவையிலே அதியற்புதமாக வேதாகமப் பிரமாணங்களும், திருமுறைகளின் பிரமாணங்களும் மெய்கண்ட சாத்திரப் பிரமாணங்களும் கொழிக்க நாமகள் நாவிலிருந்து தாண்டவஞ் செய்ய யாவரும் சிரக்கம்பம் செய்யுமாறு சைவ சமயச் சொன்மழை பொழிந்து பெருமகிழ் வூட்டிய சைவத் தமிழ்ப் பெருமகனுருக்கு அவர்கள் இயற்பெயரொடு சார்த்தி ஆறுமுக நாவலர் என்னும் பட்டம் வழங்கிப் பல சிறப்புக்களையும் செய்து பாராட்டிய நமது ஆதீனம், இன்று அப்பெருமகனரது திருவுருவச் சிலையைப் பதிட்டித்து இக்கால மக்களும் அவர்களுடைய நெறியைப் பின்பற்றிச் செந்தண்டமிழ் மொழியையும், சித்தாந்த சைவ சமயத்தையும் உண்மையாக வளர்த்துப் பரப்பித் தொண்டு செய்ய முற்படுமாறு செய்யும் எல்லா வகையான முயற்சிகளையும் மிக மிகப் பாராட்டுகிறது.

நாவலரவர்கள் சிறந்து செய்த தொண்டுகளின் நினைவுச் சின்னமாக அவர்களால் பதிக்கப்பெற்ற நூல்களனைத்தையும் கொண்ட நூலகமும் அமைக்க இருப்பது மிகப்

பொருத்தமானதே. நூல்களை ஆராய்ந்து பரிசோதித்துப் பிழையறப் பதிப்பதில் அவர் களுக்கு ஈடும் எடுப்பும் எவரும் இல்லையென்பதை உலகம் இன்றும் சொல்லிக்கொண் டிருத்தல் கண்கூடு.

நமது நாவலரவர்கள் 1849 ஆண்டில் ஆதீனத்துக்கு வந்தபோது மேலகரம் ஸ்ரீ மகாசந்நிதானத்துடன் அளவளாவியிருந்து மகிழ்ந்த காலத்திலே நன்னூல் விருத்தி யுரை, இலக்கணக்கொத்து, தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, தர்க்க சங்கிரகம், அன் னம்பட்டீயம், சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் பொழிப்புரைகளைக் கொடுத்தருளி அவைகளை ஆராய்ந்து பதிக்கும்படி செய்தது. ஸ்ரீ நாவலரவர்கள் 1851 ஆம் ஆண்டிலே விருத்தியுரையை ஆராய்ந்து பதித்து வெளியிட்டார்கள். காலக் கிரமத்திலே மற்றை நூல்களும் வெளிவந்தன.

நாவலரவர்கள் செந்தமிழ் நூல்களைப் பலப்பல மாணவர்களுக்கு அறிவுறுத்தித் தமிழை வளர்த்தார்கள். சைவசமய பரிபாலனம் நன்று ஆற்றினர்கள். நடுநிலை தவ றுத பெருமை அவர்கட்கே உரியது. அவர்கள் காலத்திலே பதித்த நூல்களனைத்தை யும் (முதற் பதிப்பு) தொகுத்து வைத்தல் பெரிதும் இன்றியமையாத பெருந் தொண்டு.

நமது நாவலரவர்களை நினைவுகூர்வதற்கு ஆவனவெல்லாம் செய்தல் தமிழர் கடமை, சைவசமயிகள் கடமையுமாம்.

ஸ்ரீவழ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

அவர்கள் வழங்கிய

வாழ்த்துரை



உலகில் தமக்கென வாழாது பிறர்க் கெனவே வாழ்வோர் ஒரு சிலரே. இத்தகையோ ராலேயே உலகம் நிலைபெற்றுள்ளது என்பர் ஆன் றமைந்த அறிவினை உடையோர்.

'' பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் ''

என்னும் திருக்குறளும்,

'' உண்டால் அம்மஇவ்வுலகம்.....
.....
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே ''

என்னும் புறப்பாட்டும் நோக்கற்பாலன.

இத்தகைய தமக்கென வாழாப் பிறர்க்குரியா ளர் வரிசையில், அண்மையில் வாழ்ந்த யாழ்ப்பா ணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் ஒருவராவார். தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்வோர், தமது ஒப்புரவாண்மையால் பிறரது உடல் நலத் திற்கு உழைப்பவரும், உயிர் நலத்திற்கு உழைப்ப வரும் என இரு திறத்தினராய் இருப்பர். அவருள் ஆறுமுக நாவலர் பிறரது உயிர்நலத்திற்கு உழைப் பதிலேயே தமது வாழ்நாள் முழுவதையும் செல விட்டவர்.

'' ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து ''

என்னும் அறிவுரையாலும்,

'' கற்றல் கேட்டல் உடையார் பெரியார் '' என்னும் அருள் மொழியா லும் **'' உயிர்நலத்திற்கு** முதலாவது வேண்டப்படுவது கல்வி '' என்பது நன்கு விளங்கும்.

தமிழ் மக்களிடையே இத்தகைய கல்வி வளர் வதற்குத் தம் வாழ்நாள் முழுதும் நாவலர் செய்த நற்பணிகள் பல. இளஞ் சிறுர்கள் திருத்தமான தமிழ்க் கல்வியை எளிதிற்பெறுவதற்குத் தமிழ் மொழியில் உரைநடைப் பாடப் புத்தகத்தை வகுப்பு முறையாக முதலிலே தோற்றுவித்தவர் ஆறுமுக நாவலரே. அதனுடன் இலக்கணச் சுருக் கமும் எழுதி வெளியிட்டார். ஆத்திசூடி, கொன் றைவேந்தன் முதலிய சிறு நீதி நூல்கட்கு உரை எழுதினர். நடுத்தரக் கல்வியாளர்க்கு உதவுமாறு நன்னூற்குக் காண்டிகை உரை பரீட்சை விஞக்களுடன் எழுதி, இறுதியில் இலக்கண அப்பி யாசங்கள் பலவற்றைத் தந்தார். இவற்றிற்கெல் லாம் தாம் ஆக்கியோராய் இருந்ததன்றியும், பதிப்பாசிரியரும் தாமேயாய் இருந்து **இவை** பிழையற்ற தூய பதிப்பாக வெளிவரச் செய்

தமை இவரது அரும்பணிகளுட் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பள்ளிச் சிறார்கள் முதற் பெரும்புலவர் வரை உள்ள அனைவருக்கும் பயன்படும் வகையில் முதற் பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதல் திருக்குறள், கந்தபுராணம், பெரிய புராணம் வரை சிறந்த பதிப்பாக நாவலர் வெளியிட்ட தமிழ் நூல்கள் அளவிறந்தன. 'நாவலர் பதிப்பு' என்றாலே, 'தூய பதிப்பு' என்னும் எண்ணம் தமிழுலகத்தில் நிலைத்த ஒன்றாகிவிட்டது. நாவலரது இத்தமிழ்ப்பணி இல்லையாயின், தமிழ் நூல்கள் பல ஏட்டளவில் இருந்து மறைந்துவிட்டிருக்கும்.

தமிழ்ப் பணியைக் காட்டிலும், சைவப் பணியே நாவலரது உள்ளத்திற் பெரிதும் வேரூன்றி இருந்ததும், அவரது பெருமைக்குச் சிறந்த காரணமாய் அமைந்ததும் ஆகும். பெரிய புராணத்திற்கு அவர் எழுதியுள்ள சூசனம் ஒன்றே அவரது சிறந்த சைவப் பணிக்குப் போதிய தொன்று. மற்றும், சைவ சமய நெறி உரை, கோயிற் புராண உரை முதலியவை குறிப்பிடத்தக்கன. இவரது முதற் சைவ விஞ்விடை, இரண்டாம் சைவ விஞ்விடைகள் இளமையிலேயே மக்களைச் சைவ சமய உணர்வுடையவர்களாகச் செய்ய வேண்டும் என்னும் கருத்துடன் எழுதப்பட்டவை என்றாலும், அவைகள் முதியோரும் கற்றுப் பயனடையும் வகையிலும் விளங்குகின்றன. மக்களை இளமையிலேயே நல்வழிப்படுத்தற்கு இவர் தமது பாலபாடத்தில் எழுதியுள்ள நீதி வாக்கியங்கள் கண்டு மகிழ்தற்குரியன. இளஞ் சிறார்களைச் சைவ சமயப்பற்றும், அறிவும் உடையராக்குதற் பொருட்டு இவர் தில்லையில், 'சைவப்பிரகாச வித்தியாசாலை' என்னும் பள்ளியை நிறுவி நடத்தினமை, இவரது சைவ சமய ஆக்க வேலைகளுள்ளே தலையாயது.

தாம் கற்றும், பிறர்க்குச் சொல்லியும், எழுதியும் வந்த ஒழுக்கங்கள் பலவற்றையும் தாம் முற்ற உடையராய் இருந்தமையும், சிவபிரானிடத்திலும், சிவனடியாரிடத்திலும் இவருக்கிருந்த அளவிலாப் பத்தியுமே மேற்குறித்த எல்லாவற்றையும் விட இவர்பால் நாம் கண்டுணர்ந்து பாராட்டுதற்குரிய பெருஞ் சிறப்புடையன.

ஆறுமுக நாவலர் அவர்கள் தாம் பிறந்த நாடாகிய ஈழத்தைக் காட்டிலும் தமிழ் நாட்டிற்கே பெரிதும் நலம் புரிந்து வாழ்ந்தார். அதனால், அந்நாட்டவரைவிடத் தமிழ்நாட்டவரே அவரை என்றும் மறவாது போற்றுதற்குரியவர். ஆயினும், அவர் பிறந்த நாட்டினர் — சிறப்பாக யாழ்ப்பாணத்து மக்கள்—அவரிடம் பேரன்பு கொண்டு அவர்வழி நிற்றல் இயல்பே. இவ்வகையில் நாவலரது புகழைப் பரப்புவதும், அவர் புரிந்த பணிகளைத் தொடர்ந்து செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருவது கொழும்பு நகரில் நிறுவப்பெற்றுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை. இச்சபையினர் வருகின்ற ஆனிப் பூரணையில் நாவலர் பிறந்த யாழ்ப்பாணத்தில் அவரது உருவச்சிலை நிறுவி, மலர் வெளியிட்டு விழாக்கொண்டாட முயன்று வருவது மிக்க மகிழ்ச்சிக்குரியது.

சபையின் முயற்சிகள் வெற்றி பெறுக, மலர் நன்முறையில் வெளிவந்து பயனளிக்க விழா இனிது சிறக்க, பங்குபற்றிப் பணிபுரிவோர் பலரும் நலம் பல பெற்று நீடுவாழ்க எனச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளை நினைந்து வாழ்த்துகின்றோம்.

உ

கணபதி துணை.

சேதுபுராணம்.

சைவாசாரியராகிய

நிரம்பவழகியதேசிகர்

அருளிச்செய்தது.

இஃது

இராமநாதபுரசமஸ்தானம்

ம. ரா. ரா. ஸ்ரீ

பொன்னுச்சாமித்தேவரவர்கள்

வேண்டுகோளின்படி,

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து,

சென்னபட்டணம்

கலாரத்நாகரம்

என்னும்

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

அக்ஷயஶ புரட்டாதிமீ.

Registered copyright.

அக்ஷய வருஷத்தில் நாவலர் பதிப்பித்த
சேதுபுராணம்—முதற்பதிப்பு.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை



வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியிற் புதியன்
மூதக் கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய்நின்ற அமலன்

இச் செய்யுள் சிங்கமுகாசுரன் கூற்றுய்ச் சூரனமைச்சியற் படலத்தில் வருகின் சூரபன்மன் சுப்பிரமணிய சுவாமியைப் பொருள் செய்யாது, ''நேற்றைப் பாலன்'' என்றிகழ்ந்தான். தமையனது அறியாமைக் கிரங்கிச் சுப் பிரமணியப் பிரபாவத்தை மனமுருகி இடித்துரைத்தான் தம்பியாகிய சிங்கமுகாசுரன்.

இற்றைக்குத் தொண்ணூற்றேழு வருடங்க ளுக்கு முன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே கந்தபுராண படனம் நடந்தது. சூரனமைச்சியலில் வரும் 'வேதக் காட்சி' என்ற பாடலுக்கு ஆறுமுக நாவலர் பயன் சொன்னார். நாவலர் மருகரும் மாணவருமான வித்துவ சிரோமணி பொன்னம் பலபிள்ளை வாசித்தார். 1872 ஆம் ஆண்டில் இது நடந்தது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே சிவதீக்ஷை பெற்ற பிராமணர்களே புராண படனஞ் செய்து வருவது வழக்கம். அது இன்றும் நடந்து வருகின் றது. இது பொதுவிதி. நாவலர் விஷயத்திலும் வித்துவ சிரோமணி விஷயத்திலும் பொது விதி யைக் கொள்வதில்லை. கோயிலார் இந்த இருவ ருக்கும் விசேட மதிப்புச் செய்துவந்தார்கள்.

வித்துவ சிரோமணி இலக்கிய இரசனையில்- இரசனையை எடுத்துக் காட்டுவதில்— ஈடும் எடுப் பும் இல்லாதவர். அவருக்குப் பயன் சொல்லுவ தன்றி வாசிக்கிற வழக்கம் கிடையாது. அவர் வாசிக்க விரும்பினாலும் அவர் வாசிக்கப் பயன் சொல்லுகிறவர் யார்? யாருக்குத் துணிவு வரும்.

இத்துணைச் சிறந்த வித்துவ சிரோமணி அன்று அடங்கி ஒடுங்கி மிக்க அச்சத்துடன் வாசித்தார். நாவலர் பயன் சொன்னார்.

மாமனூர் முன்னிலையில் இந்த மருகரைக் காணுவது அபூர்வம். அன்று, ''மருகர் வாசித்தார். மாமனூர் பயன் சொன்னார்'', என்றுல் யாவரும் நம்பவே மாட்டார்கள். கற்பனைக் கெட்டாத அந்தக் காரியத்தை எப்படியோ கோயில் மானேஜர் ஒழுங்கு செய்துவிட்டார்.

மானேஜர் செய்த இந்த ஒழுங்கு முன்னமே எங்கும் பரவிவிட்டது. மூலை முடுக்குக்களிலுள்ள வித்துவான்களும் வந்துவிட்டார்கள். புராணங் கேட்கும் ஆர்வமுள்ள பெண் ஆண் அத்தனை பேருங் குழுமி விட்டார்கள். எள்ளிட இடமின்றி எங்கும் நெருக்கம் மிக்கபோதும் அமைதி குடி கொண்டிருந்தது. யாவரும் மாமனையும் மருகரையும் மாறிமாறிப் பார்த்தபடி இமையவர்களா யிருந்தார்கள்.

''காலத்துக்கும் விஷய குண பாவத்துக்கும் ஏற்ப, எச் சுதியில் எவ் விராகத்தில் வாசிக்கப் படுகிறதோ, அச் சுதியில் அவ்விராகத்திற் றனே பொருள் சொல்லவேண்டும்'' என்பது நாவலர் எழுதிய சிவபுராண படன விதி. அவ் விதிக்குப் பரிபூரண இலக்கியமாய் இருவரும் திகழ்ந்தார்கள்.

பதவுரை பொழிப்புரை நடந்ததன் மேல் விரிவுரை நடந்தது. வேதக் காட்சி சாத்திர ஞானம். அது பாச ஞானம். உபநிடத் துச்சியில் விரித்த போதக் காட்சி பசு ஞானம். பசுவாகிய ஆன்மா பாசத்தை விலகித் தன்னைப் பிரம மயமாகக் காணும் ஞானம் அந்த ஞானம். 'நான் பிரமம்' என்னும் ஞானம் அது. பாச பசு ஞானங்கள் இரண்டுக்கும் இறைவன் எட்டாதவன். அவனருளாலே தான் அவனை எட்டுதல் கூடும். அவனருள் பதி ஞானம்.

மூவகை ஞானத்தின் இயல்பையும், நேற்றைப் பாலனின் பிரபாவத்தையும் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் உபநிடதங்கள் சிவாகமங்கள் என்னும் அதிப் பிரபல பிராமணங்கள் வாயிலாகவும், அநுபவ அநுபூதிமான்கள் வாயிலாகவும் விரிவுரை ஊற்றெடுத்துப் பெருகியது. நீண்ட கால தத்துவம் அணுப் பிரமாணமாய்ச் சுருங்கிக் கழிந்தது.

சரீரம் புளகங் கொள்ளக் கண்ணீர் ததும்ப மாமனூர் முகத்தை நோக்கியது நோக்கியபடி சித்திரப் பாவை போல ஆடாமல் அசையாமல் இருந்தார் மருகர் வித்துவ சிரோமணி. மருகரின் நிலை சபை யெங்கும் பரவியது. கல்லால் முனிவர்கள் போலக் காட்சியளித்தார்கள் கற்றவர் நிரம்பிய சபையினர்கள்.

ஒரு காலத்திலே தருமபுரத்திலே குமரகுருபரர் ''ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள'' என்று, பெரிய புராணத்தில் வரும் அருமைச் செய்யுளுக்கு விரிவுரை நிகழ்த்தி யருளினர். அந்த விரிவுரையை, வேதக் காட்சிக்கு அன்று நடந்த விரிவுரை ஞாபகஞ் செய்வதா யிருந்தது.

ஒருமுறை தமது பிரசங்க முறை யல்லாத தொரு நாளில், வண்ணைச் சிவன் கோயிலில், தமக்கு அன்று ஆயத்தமில்லை என்று கூறி, நம்பால் ''மரணத்துக்கு ஆயத்த மில்லை'' என்று, ஆயத்தஞ் செய்யாமல் ஒரு பிரசங்கம் செய்தவர் நாவலர். அந்தப் பிரசங்கம் அவர் செய்த பிரசங்கங்களில் தலை சிறந்ததும் உருக்கம் நிறைந்ததுமாகும். அவ்வாறே வேதக் காட்சிக்குச் செய்த புராண விரிவுரையும் அவர் செய்த புராண விரிவுரைகளில் தலைசிறந்ததும் உருக்க மிக்கதுமாகும்.

குறிப்பிட்ட இரு நிகழ்ச்சிகளையும் கேட்டவர்களைக் கண்டவர்களைக் கண்டு கேட்டாலே நம்மை யறியாமலே நம்மை யிழப்ப தொரு மெய்ப்பாடு உண்டாகும்.

★

இறைவன் சந்நிதி இறைவன் புகழே இயம்பு தற்குரிய இடமாம். எந்த நிகழ்ச்சியும் இறைவனைப் பராமுகஞ் செய்தற்குபகாரமாயிருத்தலாகாது. சிந்தனை வாக்குச் செயல் மூன்றும் இறைவனடியிற் சென்று குவிதற் குரிய இடமே சந்நிதி.

இறை சந்நிதியில் மல பந்தனை மனிதன் ஒருவன் தலைமை வகிப்பதும், ஒருவரை யொருவர் புகழ்ந்து சொற்பொழிவு நிகழ்த்துவதும் சந்நிதி விரோதமாம். புராண படனங் கூட வடக்கே இறை சந்நிதியில் நடப்பதில்லை. அங்கே வித்தியாமண்டபம் புறம்பாயுண்டு. நமது நாட்டிலுள்ள சிறிய கோயில்களில் புறம்பாய் மண்டபமின்மையால், இறை சந்நிதியிலேயே சந்நிதி விரோதம் நிகழாத முறையிற் புராண படனம் நடந்துவருகின்றது. ஒருவர் தலைமை வகித்து இன்னார் வாசிப்பார், இன்னார் பயன் சொல்லுவார் என்று சொல்லுவதில்லை. சொல்லாமலே காரியம் நடக்கும். அசுரன் ஒருவன் சுவாமியை இழித்துரைக்கும் பகுதியைப் படிக்கும்போதும் அவன் அறியாமைக் கிரங்கிச் சுவாமியின் பெருமையில் விம்மிதங் கொள்ளும் முறையிலேயே புராண படனம் நடக்கும்.

சந்நிதி விரோத மின்றி, ஒருவர் வாசிக்க மற்றொருவர் பயன் சொல்லுகின்ற இந்த முறை, யாழ்ப்பாணத்துக்கே உரிய தொரு சிறப்புமுறை.

இந்த முறை யார் எப்பொழுது வகுத்தமைத்தது என்பது ஆராயத்தக்கது.

★

''கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணம் பாடிய காலத்திலேதானே, கந்தபுராண படனம் யாழ்ப்பாணத்தில் தொடங்கிவிட்டது. அப்பொழுதுதானே தனிச் சிறப்புமுறையான புராண படன முறையும் இங்கே அமைந்து விட்டது போலும்'' என்று எண்ண இடமுண்டு. எண்ணுவதற் காதாரம் பின்வருமாறு:

★

யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்கள் ஒருவர் பின் ஒருவராய்ப் பன்னிருவருக்கு மேற் பட்டவர்கள். அவர்களுள் தல்வனை தமிழரசனின் மந்திரி புவனேகவாகு. அவர் பிராமணர். கங்காதரக் குருக்கள் என்பது அவர் இயற்பெயர். அவர் கி. பி. 950 இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டினார்.

''இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா
மாண்டதெல்லை
அலர்பொலி மாலைமார்ப னும்புவ னேகவாகு
நலமிகு யாழ்ப்பாணத்து நகரிகட்டு வித்து நல்லை
குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித் தானே''

என்ற பாடல் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. ''தொண்ணூற்றே டெழுபத்து நான்கின்'' என்றும் பாடம் உண்டு. சகாத்தத்துடன் எழுபத்தேழு ஆண்டைக் கூட்ட வருவது கிறிஸ்தாப்தம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு 170 வருடம் முந்தியது கந்தபுராணம்.

''ஏதமறு சகாத்த மெழுநூற்றின் மேலாய்
இலகு கந்தபுராண மரங்கேற் றினனே''

என்பதனால் அறியத்தக்கது.

★

இராச வம்சத்தவனும் கவிதையிலும் இசையிலும் வல்லோனுமான வீரராகவன் என்பவன் கச்சியப்ப சுவாமிகளோடு உடன் கற்றவன் என்கிறது தமிழ்ப்புலவர் சரித்திரம். (அ. குமாரசுவாமிப் புலவர் எழுதியது.) இந்த வீரராகவனே யாழ்ப்பாடி. மாருதப்பிரவல்லி வயிற்றிற் பிறந்த வாலசிங்கனிடம் மணற்றி என வழங்கிய யாழ்ப்பாணத்தைப் பரிசிலாகப் பெற்றுத் தமிழரசர்களுக்கு முன்னமே யாழ்ப்பாணத்தை ஆண்டவன் அந்த யாழ்ப்பாடி. இவன் அந்தகன் அல்லன். அந்தகக் கவிவீரராகவன் என்ற கவிஞன் வேறு; வீரராகவஞன யாழ்ப்பாடி வேறு. இந்த யாழ்ப்பாடியுடன் வந்தவர் கச்சிக் கணேசையர் என்பவர். கச்சி காஞ்சிபுரம். இவர் யாழ்ப்பாடியின் அநுசரணையில், நல்லூருக்குத் தெற்கே சித்திவிநாயகர் ஆலயத்தை அமைத்து ஒரு பாடசாலையையும் நடத்தினவர்.

★

''கச்சியப்பரின் சகபாடியாகிய யாழ்ப்பாடியும், கச்சிக் கணேசையரும் கச்சியில் நடந்த கச்சியப்ப சுவாமிகளின் கந்தபுராண அரங்கேற்றத்திற் பங்குபற்றியிருப்பர். அந்த இருவரும், கந்தபுராணம் உதயஞ் செய்தபோதே, அதன் பிள்ளைமைப் பிராயத்திலே தானே, அதனை யாழ்ப்பாணத்துக்குக் கொணர்ந்து, புதியதொரு தனிமுறையை இந் நாட்டுக் கோயில்களுக்கேற்ப அமைத்து, கோயில்கள் தோறும் கந்தபுராண படனத்தையும் ஏனைய புராண படனங்களையும் நடத்தியிருப்பர்'' என்றிங்ஙனம் ஊகிக்கலாம்.

புராண படனம் தனித்ததொரு முறையில் யௌவன தசையை அடைந்து, உச்ச நிலையில் விளக்கமுறச் செய்தவர் ஆறுமுக நாவலர்.



பரவு புகழ் ஆறுமுகநாவலர்

திருவாவடுதுறையாதீன மகாவித்துவான்

ஸ்ரீமத் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள் பாடியன

தரவு கொச்சகக் கலிப்பா

1. அகத்தியந்தொல் காப்பியமுன் னூயபல விலக்கணமுஞ்
சகத்தியல்பல் விலக்கியமுஞ் சாற்றுபர மதநூலு
மகத்துவமெய்ப் பொருணூலு மதியமையப் பயின்றுணர்ந்து
சுகத்தியலு மநுபூதித் தோன்றலா யமர்பெரியோன்.

2. மாறுபடு பரசமய வழிய னேத்து மறமாற்றி
யாறுபடு செஞ்சடிலத் தண்ணலா ரருணெறியே
தேறுபடும் படிவளர்த்துத் திகழுமா தவமுடையோன்
வீறுபடு சிவனடியார் மேன்மைமுழு மையுமுணர்ந்தோன்.

3. கருள்விரவு தலைக்கழிக்குங் கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவு மைந்தெழுத்தும் பொருளாகக் கொண்டுவப்போன்
றெருள்விரவு சுத்தசைவ சித்தாந்தப் பெருஞ்செல்வ
னருள்விரவு பரவுபுக ழாறுமுக நாவலனே.

சைவப்பயிர் வளர்க்கு மெழிலி

விருத்தம்

4. மன்னுபெருந் தமிழ்ப்பாடை யிலக்கணமு மிலக்கியமும் வரம்பு கண்டோன்
பன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன் சிவாகமநூற் பரவை மூழ்கி
யுன்னுமநு பூதியெனும் விலைவரம்பி லாமணிகை யுறக்கொண் டுள்ளா
னின்னுநய குணத்தினனுய்ச் சைவமெனும் பயிர்வளர்க்கு மெழிலி போல்வான்.

5. நீடுபுகழ்த் திருக்கேதிச் சரந்திருக்கோ ணசலமிந் நிலவா நின்ற
நாடுபுகழ்த் தலம்பொலியாழ்ப் பணத்து நல்லூர்வாழ் நகராக் கொண்டோன்
றேடுபுக ழுருவமைந்த கந்தவே டவத்துதித்த செல்வன் யாரும்
பாடுபுக ழாறுமுக நாவலனவ் வாறச்சிற் பதிப்பித் தானே.

ச. தண்டபாணி தேசிகர்

மகாவித்வான், சித்தாந்தப் பேராசிரியர்,
உரைவளம், விரிநூற் புலவர்,
முதல்வர் கனகசபைப்பிள்ளை கல்லூரி,
நாகை.



நீரும் என்பது இனிமை, இனிமையான தேன் இவற்றையுணர்த்தும் பெயராக இருந்தது. இழுமென இடையருது ஒழுகும் இயல்பு பற்றித் தேனே யுணர்த்தியது என்றும், அதன் பிறகு அதன் பண்பாகிய இனிமைக்கு ஆயிற்று என்றும், பின்னர் மயக்கும் பொருள்களுக்கும் பெயராக அமைந்தது என்றும், சொற்பொருட் பயணத்தை விளக்கும் ஆய்வு நூல் உணர்த்துகிறது.

ஆகவே, நாடு என்றால், தேன் போலும் இனிய நாடு; இடையருத பண்பாட்டில் ஒழுகி வரும் நாடு என்ற சிறந்த பொருளோடு சிந்தனைக்கு வருகிறதல்லவா?

இந்நாடு ஆதியிலே தமிழகத்தின் தென் பகுதியாகவே இருந்தது. உவர்க்கடல் ஊடறுத்துத் தாயும்-சேயுமாகப் பிரித்து வைத்துவிட்டது. அதனால் இன்று இரு நாடுகளாக எண்ணுகிறோம். ''தாயும் பிள்ளையும் ஒன்றுயிருந்தாலும் வாயும்-வயிறும் வேறுதான்'' என்பது போல, பொருளாதாரம், அரசியல் இவற்றால் வேறுபட்டிருப்பினும், ''தாயைப்போல மகள், நூலைப் போலச் சேலை'' என்பது போல, சில குணங்களால் ஒன்றுபட்டேயிருக்கிறது.

தாயின் அரவணைப்பிலிருந்து விலகிய குஞ்சுக்குப் பருந்து முதலான பல பகைகளால் துன்பமும் நலிவும் தோன்றுதல் போலத் தாய்நாட்டிலிருந்து பிரிந்த சேய்நாட்டிற்குச் சமயநிலையாலும், கல்வியாலும், பண்பாட்டாலும் இன்னல்கள் பல விளைந்தன. அதனால், மாற்றங்கள் மலிந்தன.

வான்கோழி யாட்டத்தைக் கண்டு கான மயில் தன் நடையை மறந்து, அதன் நடையைக் கற்றுக்கொண்டது போலப் படிப்பிற்காகவும் பதவிகளுக்காகவும், பெண்டுபிள்ளை, பொருள் போகம் இவற்றிற்காகவும் ஈழத்து மக்கள் புறச் சமய மரபுகளைப் பற்றி, நடையாலும் உடையாலும், உணவாலும் ஒழுக்கத்தாலுங் கூட வேறுபடத் தொடங்கினர்.

அரசியல், பொருளாதாரம், வாணிபம் என்ற போர்வையில் ஒளிந்து வந்த இஸ்லாமிய கிறித்துவ சமய மக்கள் தத்தங் கொள்கைகளைப் பொருளாதாரமும் உத்தியோகங்களுமாகிற எருவைப் பரப்பி விதைத்தனர்.

தாய் நாடாகிய தமிழகத்திலோ சிவாலயங்களையும், சிவத் திருமேனிகளையும் என்றும் அழி

யாத கலங்கரை விளக்கங்களாகப் பெற்றுச் சிவானந்த சாகரத்திலே சிவாகம நெறி பற்றிச் சிவபோகக் கப்பலே ஓட்டித் தடையிலா வாணிகம் செய்து வந்த தமிழ் மக்கள் மிண்டிய மாயாவாதம் முதலான சண்டமாருதம் வீச வழி விலகி, பிறவிக்கடலில் மோகச் சுழலில் அறியாமையாகிற சுறுமீனின் வாயிலகப்பட்டுத் தவித்தனர்.

அக்காலத்து வானம் எங்கும் மயக்க ஞான மாகிய இருள் கப்பிக் கிடந்தது. மோகமாகிய மேகம் சூழ்ந்து கிடந்தது. அதனால், மக்கள் சிவ சூரியனே உள்ளவாறு உணரும் ஆற்றல் இழந்தனர்; ஒன்றிலும் உறுதியும் துணிவும் இன்றித் தவித்தனர்; காய்ச்சலுக்கு ஒரு கடவுள்; கனற்றுதலுக்கு ஒரு கடவுள்; பொன்னுக்கு ஒரு கடவுள்; போருக்கு ஒரு கடவுள் எனத் தத்தம் ஆசைக்கும் தேவைக்கும் தகப் பல கடவுளரைப் போற்றத் தொடங்கினர்.

ஆகாயம் ஒன்றே குடங்கள் தோறும், குண்டு சட்டிகள் தோறும் பலவாக அதனதன் அளவாக விளங்குதல் போலப் பரப்பிரமமாகிய உயிர் ஒன்றே உடம்புகடோறும் ஒன்றிப் பலவாகத் தோன்றுகின்றன. ஆதலால், இது குடாகாயம், இது பராகாயம் என்ற வேற்றுமை யுணர்ச்சியற்று நான் பிரமம் எனத் தெளிந்து, என்றும் பிரம சாட்சாத்காரத்தில் இருப்பதே முத்தி. உயிர் பல—பிரமம் ஒன்று எனல் உண்மை ஞானம் அன்று என்னும் ஏகான்ம வாதம் எளிமையாக மக்களிடையே ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தது.

இத்தகைய சூழ்நிலையிலே, தென்னிலங்கையிற் றோன்றிய ஞானஞாயிறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்! ஞாயிறு தோன்றிய இடத்திற்கு மட்டும் ஒளியைத் தருவதன்று. உலகம் எங்கும் ஒளியையும் வெப்பத்தையும் தந்து விளக்கத்தையும் வளர்ச்சியையும் அளிக்கும். அதுபோலவே இந்த ஞானஞாயிறும் தென்னிலங்கையில் நல்லூரிலே தோன்றி ஞாலம் தமிழகம் எங்கும் ஒளியை வீசிற்று. வெப்பத்தைத் தந்தது. ஞானப்பயிரை வளர்த்தது.

இந்த ஞான ஞாயிறு உச்சிவானத்தை யடைந்த காலத்திலே திருவாவடுதுறையாதீனத்திலே அக்காலத்தே ஞானவரசு செலுத்திய ஸ்ரீலஸ்ரீ சிலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் அவர்களும், இளைய பட்டத்து எழுந்தருளியிருந்த அருங்கலை விநோதர் அம்பலவாண தேசிகர் அவர்களும் 'நாவலர்' என்ற பட்டத்தைச் சூட்டிப் போற்றிப் புகழ்ந்து சிவப்பணிக்கே ஆளாக்கினர்கள். ஆதலால், சிவஞான ஞாயிறு தில்லையிலேயே வாழ்வதாயிற்று.

சிவஞான ஞாயிற்றுச் சிந்தனை முழுதும் தாய் நாட்டையும் சேய் நாட்டையும் திருத்திச் சிவப் பணி ஒன்றிலேயே ஈடுபடுத்தவேண்டும். அதிலும் தாய் திருந்தினால் சேய் திருந்துவாள். ஆதலால், தாய்நாட்டைத் திருத்தும் பணியை முதலில் தொடங்குவோம் என்று அதற்குரிய திருவருளை நாடியிருந்தனர்.

தமிழகத்திலே, கல்வியிலும், சமய ஒழுக்கங்களிலும், திருக்கோயில் வழிபாட்டு முறைகளிலும் இருந்த குறைபாடுகள் இவர்கள் ஞானக் கண்ணிற்கு முதலிற் றென்றின. இவற்றை எப்படித் திருத்தலாம் என்ற ஆய்வுள்ளம் இவர்களை அரித்து வந்தது. 'அஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையாது;' 'விதையின் தன்மைதானே விளைச்சலில் வரும்'—ஆகவே, விதையை இளமையிலேயே திருத்தவேண்டும். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் ஆகையால், கல்வி முறையை மாற்றி அமைத்துச் சிறுவர் சிறுமியர்கள் உள்ளத்திலேயே சிவ நெறியைப் பரப்பவேண்டும் என்று எண்ணினர்கள்.

அதற்காகத் தில்லையிலும், வண்ணார்பண்ணையிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார்கள். அவற்றில், இளமை தொட்டே தம்மிடம் பயின்று நல்லொழுக்கம், நற்சிந்தனை, தன்னலத் தியாகம் இவற்றைப் பெற்ற ஆசிரியர்களை நியமித்தார்கள். ஆசிரியரும் - அவர்கள் போதனையும் நன்கமைந்தாலும், போதிக்கத்தக்க பாடப் புத்தகங்கள் இல்லாத குறை புலனுயிற்று. அதற்காக முதற்பாலபாடம், இரண்டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம் என்ற மூன்று புத்தகங்களை எழுதினர்கள். அவற்றையே தம் பள்ளிகளிற் பாடமாக அமைத்துப் படிப்பிக்கச் செய்தார்கள். புத்தகங்களால் விளையும் நன்மையையறிந்த ஏனைய பிற பள்ளிகளும் இப் பாடங்களையமைத்து முன்னேறின. பாலபாடங்களில் முதற்பாடம் கடவுள், இரண்டாம் பாடம் ஆன்மா; இப்படியாகச் சிவ பரத்துவமும், தத்துவ ஆராய்ச்சியும், சமய ஒழுக்கங்களும் குருலிங்க சங்கம இயல்புகளும் முறையாக மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றவை. மேலும், அரிதின் அறியக்கூடிய ஆகம சாரங்களும், புராண வரலாறுகளும் வசன வடிவாக வெளிவந்தன. அவற்றையே வகுப்பிற்குத் தகப் பாடங்களாகப் படிப்பித்து வந்தார்கள். அதனால், ஒரு கல்லில் இரு மாங்காய் விழுந்தது போல, இலக்கணக் குறைபாடில்லாத எளிய இனிய தமிழ் நடையும் வளர்ந்தது. கூடவே சமயக் கருத்துக்களும் வளர்ந்தன.

விளைவைக் கண்டு உழவன் மகிழ்வது போலச் சைவமும் தமிழும் ஒருங்கு தழைப்பதைக் கண்டு உள்ளம் பூரித்த இவர்கள், கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், வில்லி பாரதம் முதலியவைகளையும் ஆராய்ந்து பதிப்பித்தார்கள். இவர்கள் பதிப்பிற்கு அக்காலத்துதே தனித்த தொரு மதிப்பிருந்தது. தமிழறிஞர்களின் மனத்தைக் கவர்ந்தது. இப்படி, முதலிற் போதனைப் பணி, அதனையடுத்துப் பாடப் புத்தகப்பணி, அதனையடுத்து வசன காவியப்பணி, அதனையடுத்து காவியப்பணி, அதனையடுத்து இலக்கணச் சுருக்கம் காண்டிகையுரை விளுவிடை முதலிய இலக்கணப் பணிகள், சமயத்திற்காகச் சைவ விளுவிடைகள், சைவசமய நெறியுரை முதலிய பணிகள் வளர்ந்து வந்தன.

அடுத்து, முதியோரையும் கேள்வி வாயிலாகத் திருத்தவேண்டும் என்ற சிந்தனை பிறந்தது. பல நாள் முயன்று ஆசிரியர்க்கு அடங்கி ஒடுங்கி, இருவென இருந்து சொல்லெனச் சொல்லிக் கற்கின்ற கல்வியைச் சில மணித் துளிகளிற் செம்மையாகச் சொல்லுவார் சொல்லக் கேட்டு முதியோரும் பயன் அடைவார்களே என எண்ணி இவர்கள் மரபுவழி தவறுத தம் பேச்சாற்றலால் இரு நாட்டிலும் சொன்மாரி பெய்து சைவத்தமிழ்ப் பயிரை வளர்த்து வந்தார்கள். அதனால் இவர்களைச் ''சைவமெனும் பயிர் வளர்க்கும் எழிலிபோல் வான்'' என மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாராட்டினார்கள்.

சொற்பொழிவில் இவர்கட்கு என்று தனித்த பாணி :—

இக்காலத்திலே பல மேடைப் பேச்சாளர்களைப் பார்க்கிறோம். ஏன் உபதேச குரு மூர்த்திகளாக இருக்க வேண்டியவர்கள் கூட உபந்நியாசகர்கள் ஆகிறார்கள். பேச்சுக்களோ தண்ணீரிற் கலந்த பாலாக உள்ளது. நாம் அன்னப் பறவையாக இருந்தால், மலைகெல்லி எலியைப் பிடிப்பது போல, பெருமுயற்சி செய்து சில கருத்துக்களை உணரலாம். அன்றியும் எத்தனை ஏச்சுக்களும் ஏத்துதலும் தூற்றுதலும் உள்ளன. இவற்றிற்கும் பேச்சின் தலைப்பிற்கும் ஒரு தொடர்பும் இராது. இவர்கள் பேச்சோ எடுத்த பொருளுக்கு ஏற்றதாக—தரம் குறையாததாக—போற்றுதலும் புகழ்ச்சியும் கொண்டு ஆட்களை ஏய்க்காததாக—உண்மைக்கு உறைவிடமாக இருக்கும் என்றும், இடையே மக்களை நகைக்கவைக்கவேண்டும் என்பதற்காகக் கோமாளித்தனமும் குறும்பும் கலந்து பேசமாட்டார்கள். 'நாம் பேசுவது சிவத்தையும்-சிவனடியாரையுமே. இதில் நகைச்சுவைக்கு இடம் எங்கே' என்பார்கள் என்றும், அன்றியும், 'ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவோ தீய வழுக்கியும் வாயாற் சொலல்' என்னும் வள்ளுவர் வாய் மொழிக்கு இலக்காக இருக்கும் என்றும், இராமநாதபுரம் பொன்னுச்சாமித்தேவர் அவர்கள் பாராட்டுவார்கள் என்று சிவசாமிச் சேர்வைகாரர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

புராணங்களைப் பிரசங்கிப்பதில் இவர்கள் கையாண்ட முறையே தனிமையானது. ஏடு வாசிப்பவரை வரலாற்றுச் சந்தர்ப்பத்திற்கும், பாடலுக்கும் ஏற்ற இராகத்திற் படிக்கச் செய்து தாமும் அதே இசையிற் பயன் சொல்லுவார்களாம். அதிலும் பொழிப்புரை, கருத்துரை, அநஞ்சொற் பொருள், சொல் நயம் பொருள் நயங்கள், சாத்திரக் கருத்துக்கள், திருமுறை மேற்கோள்கள், இலக்கணக் குறிப்பு - இந்த முறையிலேயே பயன் சொல்லுவார்களாம். யாரேனும் விரைந்தெழுதுவாரோ, பதிவு செய்வாரோ இருந்து எழுதினால் அழகான உரை நூல்கள் பல வற்றைத் தமிழுலகம் பெற்றிருக்கக் கூடும் என்று சிதம்பரம் வாமதேவ முருகபட்டாரகர் மொழிவார்கள் என, அவர்கள் மகனார் தமிழாசிரியர் மாணிக்கபட்டாரகர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

1920-ம் ஆண்டில் தலைமையாசிரியராக விளங்கிய ம. க. வேற்பிள்ளை ஐயா அவர்கள் கந்த புராணம் முழுமையும் வைதிக முறைப்படி பாடம் சொல்லக் கேட்கும் பேறு எங்கட்குக் கிடைத்தது. அதில் அவர்கள் சொன்ன சில குறிப்புக்களைத் தருகின்றேன்:

நொத்தாரிசு பொன்னையா உபாத்தியாயர் அவர்கள் நல்லூர்க் கந்தசாமி கோயிலிலே வெள்ளி செவ்வாய்க்கிழமைகளிலும், சிறப்பு நாட்களிலும் கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லிக் கொண்டு வந்தார்களாம். ஒருநாள் அவர்கட்கு உடம்பு நலமில்லையாம். ஆதலால், பயன் சொல்லும் முறை முட்டுப்பட்டதாம். கோயில் நிர்வாகிகள் நொத்தாரிசு ஐயாவைக் கண்டு தங்கள் நிலையிற் சொல்லுவார் யாரும் இல்லையே! இந்நிகழ்ச்சி இரண்டொரு நாட்களுக்கு நிறுத்தி வைத்தால் என்ன என்று கேட்டார்களாம். அப்போது ஐயா அவர்கள் ''நிறுத்தி விடலாம்; இன்று சுக்கிரவாரம்; திருக்கல்யாணப்படிப்பு; இதனை எண்ணிப் பல்லாயிரமக்கள் கூடுவார்களே! நாம் முன்னரே அறிவியாமையால் ஏமாற்றமாக அல்லவா முடியும். நாம் அதனைச் செய்ய விரும்பவில்லை. இருக்கட்டும். நமது கந்தப்பிள்ளை மகன் இருக்கிறார்: அவர் நன்றாகப் பயன் சொல்லுகிறார் என்று கேள்வி. அவரை இன்று சொல்லச் செய்தால் என்ன?'' என்றார்

களாம். கோயில் அதிகாரிகள் நாவலர் ஐயா அவர்களிடம் தெரிவிக்க, அவர்களும் 'திருவருள்' என ஒத்துக்கொண்டார்கள்; மேடைக்கு வந்தார்கள்; ''திகடசக்கர'' எனக் காப்புச் செய்யுளைக் கூறினர்கள். திருவருள் அனைவர் காதிலும் செய்யுளோடு கலந்து பாய்ந்தது. எடுத்த எடுப்பிலேயே சபைகளை கட்டியது. இளைஞர் இவ்வளவு நன்றாகப் பயன் சொல்லுகிறாரே என்று எல்லாரும் வியந்து பார்த்துக்கொண்டேயிருந்தனர். சபைகளை கட்டி இருப்பதை மக்கள் வியந்து கொண்டாடுவதையும் சிலர் மூலமாகச் செவியுற்ற நொத்தாரிசு ஐயா அவர்கள், தம் நோவையும் மறந்து ஒரு தூண் மறைவில் வந்திருந்து கேட்டார்களாம்.

அப்போது இமயமலையரசன் உமாதேவியாரைச் சிவபெருமான் திருக்கரத்தில் ஒப்புவித்துத் தத்தம் செய்து கொடுக்கும் பகுதியாகிய

''பூசனை புரிந்த பின்னர்ப் புவன மீன்றருள்
தன் கையைப்
பாசம தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர்
கரத்துள் வைத்து
நேசமொ டளித்தேன் என்ன நெடுமறை
மனுக்கள்கூறி
வாசநல் லுதகம் உய்த்தான் மருகன்
என்றவனை உன்னி''


என்ற பாடல் நடந்துகொண்டிருந்தது. நாவலர் ஐயா அவர்கள் ''மருகன் என்றவனை உன்னி'' என்ற பகுதிக்கு ''எங்குள பொருளுங் கோளும் ஈதலும் தானே யாகும் சங்கரனை மருமகன் என்று எண்ணித் தருக்குக் கொண்டு தன்தலை யிழந்து ஆட்டுத்தலையைப் பெற்றவனுகிய தக்கனை மனத்திலே எண்ணி, அத்தகைய அவல நிலை தனக்கு என்றேனும் நேர்ந்துவிடக் கூடாதே என அஞ்சித் தத்தம் செய்து கொடுத்தான்'' என்று பயன் கூறி, 'என்றவன்' விளையாலணையும் பெயர் எனவும் இலக்கணமுங் கூறினர்களாம். இருந்து கேட்ட அறிஞர்கள் அனைவரும் அற்புதம் அற்புதம் என வியந்தார்களாம். தூண் மறைவில் உடல் வருத்தத்துடனிருந்த நொத்தாரிசு ஐயா அவர்களும் மன நிறைந்த மகிழ்ச்சியால், தாம் மறைவிலிருந்ததையும் மறந்து, 'ஆகா' எனச் சத்தம் இட்டார்களாம். நாவலர் ஐயா அவர்கள் சிறிது துணுக்குற்று நாண, நொத்தாரிசு அவர்கள் ''மிக நன்றாக இருக்கிறது. கச்சியப்ப சிவனார் திருவுளக் கிடக்கை இதுதான்'' என்று பாராட்டினர்கள். அது முதல் நொத்தாரிசு ஐயா அவர்கள் வர இயலாத போதெல்லாம் இவர்கட்கே வாய்ப்புக் கிட்டுவதாயிற்று.

இரண்டொரு நாட் கழித்து, திருவவதாரப் பகுதிக்குப் பயன் சொல்லும் வாய்ப்பும் இவர்கட்கு வழங்கப்பட்டது. இது கேட்ட மக்கள் இன்றும் ஓரமுத மழையும் அரதனக் குவியலும் கிடைக்கப் போகிறது என்று திரளாகக் கூடியிருந்தார்களாம். அப்போது ''அருவமும் உருவமாகி'' என்ற கந்தப் பெருமான் திருவவதாரக் கவி படிக்கப்பட்டதாம். அதில் 'முருகன் வந்தாங்கு உதித்தனன்' என்ற பகுதிக்கு ''முற்கூறிய திருமேனிச் சிறப்புக்களுடன் எழுந்தருளி வந்தது போலத் தோன்றினார்'' எனப் பயன் கூறி, ''வந்தாங்கு'' என்பதில் ''ஆங்கு'' உவம உருபு என இலக்கணக் குறிப்புக் கூறினர்களாம். இதுவரை மக்கள் 'முருகன் வந்து ஆங்கு உதித்தனன்' எனப் பிரித்து 'முருகப் பெருமான் வந்து அவ்விடத்துத் தோன்றினார்' என்ற உரையையே கேட்டவர்கள். அவர்கள் சிந்தையில் ''பெம்மான் முருகன் பிறவான் இறவான்'' ஆகையாலே முருகன், வந்தது போலத் தோன்றினார் என இறைவனுக்குள்ள நித்திய சுதந்திரமும் பரத்துவமும் கெடாத வண்ணம் உரை கூறியதற்காக உள்ளம் பூரித்தார்களாம். இங்ஙனம் பல உரைக் குறிப்புக்களை உதவினர்கள், ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள்.

பதிப்பருமைக்குச் சில நிகழ்ச்சிகள்:—

வில்லிபுத்தூரார் பாரதத்தை அச்சிடத் தொடங்கிய காலம். ஆதிபருவத்தில் குருகுலச் சருக்கம் அச்சாகிக் கொண்டிருந்தது. சதாசிவப் பிள்ளை அவர்கள் இரண்டு ஏடுகளை எடுத்துக் கொண்டு வந்து ஐயா அவர்கள் முன் நின்றார். ஒரு பகுதியைக் குறித்துக் காட்டி, ''எது, சிறந்த பாடம்? எதனைப் போடுவது?'' எனக் கேட்டார். நாவலர் ஐயா அவர்கள் இரண்டு ஏடுகளையும் வாங்கிப் பார்த்தார்கள். குறித்த பகுதி கன்னன் பிறப்பைப் பற்றியது. ஒன்றில், ''இந்திராதியர் அவரவர் இரந்தன தரத்தக்க மைந்தனனவன் தன்னைப் பயந்தனள்'' என்றிருந்தது. மற்றொன்றில், ''இந்திராதிபர் அவரவரிரந்தன தரத்தக்க மைந்தனனவன் தன்னைப் பயந்தனன்'' என்றிருந்தது. நாவலர் ஐயா அவர்கள் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, ''நீர் சிறந்த பாடம் எது எனக் கருதுகிறீர்?'' எனக் கேட்டார்கள்.

சதாசிவப்பிள்ளை அவர்கள் ''இந்திரன் முதலான தேவர்கள் இரந்தனவற்றைத் தரத்தக்க மைந்தன் எனப் பொருள் தருவதால், இந்திரன் கவச குண்டலங் கேட்ட வரலாறும் துணை செய்வதால் இந்திராதியர் என்ற பாடமே சிறந்தது'' என்பது என் கருத்து என்றார்கள்.



நல்லூர் கந்தசுவாமி கோயிலில் தாபிப்பதற்காக, நாவலர் வேண்டியபடி, 1871-ல் இந்தியாவிலிருந்து எடுப்பிக்கப்பட்ட சுப்பிரமணியர் தெய்வயானை, வள்ளிநாயகி விக்கிரகங்கள். இந்த விக்கிரகங்கள், பின்பு, தென்மராட்சியைச் சேர்ந்த விடத்தற்பளையில் உள்ள வயற்கரைக் கந்தசுவாமி கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டன.

ஐயா அவர்கள் சிரித்துக்கொண்டே, ''அப் படியா? மீளவும் சிந்தித்துப் பாரும். மற்றதையும் பாரும். வேறும் சிறப்புத் தோன்றலாமே!'' என் றார்கள்.

பிள்ளையவர்கள் சிறிது நேரம் சிந்தனை செய்து, 'ஒன்றும் புலப்படவில்லையே' என்றார்கள்.

நாவலர் ஐயா அவர்கள், ''காவியம் என்றால் பின் பின் நிகழும் நிகழ்ச்சிகளை முன்னரே குறிப் பாக உணர்த்தும் உயர்வு அமைந்தது. இதனை அணியிலக்கண ஆசிரியர்கள் 'பீஜம்' என்பர். 'இந் திராதிபர்' என்ற பாடம் கண்ணன் புண்ணி யத்தை யாசித்ததையும், இந்திரன் கவசகுண்ட லங்களை யாசித்ததையும் ஒரு சேரக் குறிக்கும் சொற்றொடர். ஆகவே, இரு பொருளும் ஒருங்கு அமைய இந்திரா—திருமகள். இந்திராதிபர்—திரு மகள் கேள்வனுகிய கண்ணபிரான். இந்திர+அதி பர்—இந்திரன் முதலான திக்குப் பாலகர்களும் தலைமை பூண்ட பிற தேவர்களும், இங்ஙனம் இரு வரலாறுகளையும் விளக்குவதால் இந்திராதிபர் என்ற பாடத்தையே துணிந்து போடலாமே'' என்றார்களாம்.


கன்னபருவம் அச்சாகிக் கொண்டிருந்த நேரம். பிள்ளையவர்கள் ஐயா அவர்களிடம் வந்து, ''ஓர் ஐயம்; கன்னன் ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை யகத்ததோ புறத்ததோ அறியேன் எனப் போர்க்களத்திற் கிடக்கிறான். அப்போது கண் ணன் இரவல அந்தணனாக வந்து 'நீ செய்த புண் ணியம் அனைத்தும் உதவுக' எனக் கேட்கின்றாரே! இது நியாயமா? இதனை யறிந்துகொள்ள விரும்பு கிறேன்'' என்றார்கள்.

நாவலர் ஐயா அவர்கள், ''தம்பி! நீ கேட்பது நல்ல இடம். கன்னன் தான தருமங்களாகிய பசு புண்ணியம் பல செய்தவன். அவன் விரும்பியதோ ஏழேழு பிறப்பிலும், இல்லையென்றுரைப்போர்க்கு இல்லையென்றுரையா இதய நீ அளித்தருள் என் பதே. கண்ணனுக்கோ அவனுக்குத் தந்நிலையாகிய பரம பதத்தை யளிக்கவேண்டும் என்பது. ஆகை யால் பயன் கருதிச் செய்த பசு புண்ணியப்பலன் பொன் விலங்குபோல மறு பிறவிக்கு ஏதுவானது. அதனையும் அவனுடைய கருவி கரணங்கள் சுழன்று, செயலற்றுச் சிந்தை ஓய்ந்து இருக்கிற நிலையிலே நிட்காமியமாக்கத் தாம் பெற்றுக் கொண்டால் அவனைப் பரமபதம் சேர்க்கலாம் என எண்ணிய கண்ணன் கருதிய கருணைச் செயல் எனக் கொள்ளலாமல்லவா?'' என்றார்களாம்.

இங்ஙனம் பாடஞ் சொல்லுங் காலத்தும், பதிப்பித்த காலத்தும் சொன்ன நயங்கள் பல என்று ஆசிரியப் பெருந்தகை ம. க. வேற்பிள்ளை ஐயா அவர்களும் பொன்னேதுவா மூர்த்திகள் அவர்களும், முருகபட்டாரகர், சொக்கலிங்க ஐயா முதலியவர்களும் சொன்ன வியக்கத்தக்க பகுதி கள் பல. அவற்றைத் தொகுத்துச் சிந்தித்தாலே பல நூற் பெருமைகளை யறிய வாய்ப்பாகலாம்.

இவ்வண்ணம் தம் வாழ்க்கையைத் தவ வாழ்க்கையாக மாற்றிச் சிவம் பெருக வாழ்ந்த நாவலர் பெருமானுக்குச் சிலை எடுத்தலும் சிந் தனையில் இருத்துதலும் செந்தமிழ்ச் சைவ மக்கள் செய்யவேண்டிய கடமைகளிற் றலையாயவை.

நாவலர் பெருமான் புகழ் வாழ்க; சிலையமைக் கும் செல்வர்கள் சிறந்து வாழ்க.



நாவலர் பெருமை

பண்டிதர் இ. நமசிவாயதேசிகர்

1. சிவமதமுந் தமிழ்மொழியுஞ் செகத்னிதிடை சிவந்தொனிரப்
புவிபரவும் பரசமயம் புகலகன்று முழுதொளிரத்
தவருளமு மிகமலரத் தைவிகத்தி னுலுதித்த
நவிலருஞ்சி ராறுமுக நாவலர்சீர் வாழியவே.

2. தூயதமி ழிலக்கணமுஞ் சுவைதவழு மிலக்கியமும்
பாயசிவ மதநூலும் பகர்தருக்க நுலுமெலா
மாயுமுணர் வினிற்சோதித் தச்சேற்றி யுலகளித்த
நாயகமா ராறுமுக நாவலர்சீர் வாழியவே.

3. எல்லோரு மினிதுணர வியற்சொல்லி னவையகற்றித்
தொல்லோரு மறியாத துய்யதமிழ் வசனநடை
நல்லுழி னெமக்களித்த நாவலர்க்கு ணன்மணியாம்
நல்லூரி லாறுமுக நாவலர்சீர் வாழியவே.

4. காட்டாற்றி னெழுக்குடைத்தாக் கருதுபொருட் செறிவாலே
கேட்டாரைப் பிணிப்பதுவாக் கிளந்தநவ சுவையுடைத்தாப்
பாட்டாக்கு நாவன்மை படைத்தழியாப் புகழெல்லா
நாட்டாக்கு மாறுமுக நாவலர்சீர் வாழியவே.

5. பொய்வாது புரிகின்ற புலவரெலா நலிவெய்த
மெய்வாது புகன்றுபொருள் மிளிர்தருக்க நெறிகாட்டி
எய்யாத விறற்சிங்க மெனச்சபையி னிருந்தோங்கும்
பொய்யாத நாவலர்சீர் புவியின்மிசை வாழியவே.

பேராசிரியர் வி. செல்வநாயகம் B.A. (Lond) M.A.
தமிழ்த் துறைத் தலைவர்
இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை



நாவலர் செய்துள்ள தமிழ்ப் பணிகளுள் காலத்துக்கு ஏற்ற வகையிலே தமிழ் உரை நடையை வளரச் செய்வதற்கு அவர் கையாண்ட வழிவகைகள் பாராட்டற்குரியவை. நாவலரது உரைநடையிற் காணப்படும் சிறப்பியல்புகளை நன்கு ஆராய்ந்தறிந்தவர்கள் அவரை, 'தற்கால உரைநடையின் தந்தை' என்றும், 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்றும் பாராட்டியுள்ளனர். தமிழுரைநடை வரலாற்றை நோக்கின், காலத்திற்கு ஏற்றவாறு தமிழுரைநடை வளர்ச்சி பெறுதல் வேண்டும் எனக்கொண்டு முயன்ற மூவருள் வீரமாமுனிவர், சுப்பிரமணிய பாரதியார் ஆகிய இருவரும் பொதுமக்கள் படித்தறிவதற்கு ஏற்றதாக உரைநடை அமைதல்வேண்டும் என்பதை மனத்திற் கொண்டு அதற்கு வேண்டிய முயற்சியை மேற்கொண்டார்கள் என்பதை அவர்களின் நூல்களைக் கொண்டே அறியலாம்.

'தமிழ் வசனநடை இப்போதுதான் பிறந்து பல வருஷமாகவில்லை' என்று பாரதியார் கூறியுள்ளது சிந்தித்தற்குரியதொன்றாகும். முற்காலத்திலேயே தமிழில் நான்கு உரைநடை வகைகள் வழக்கிலிருந்தன எனத் தொல்காப்பியர் கூறியிருக்கவும், பாரதியார் இப்போதுதான் தமிழ் வசனநடை பிறந்தது என்று கூறியது முரண்பாடுடையதாகத் தோன்றினும், பாரதியார் கூற்றில் உண்மை உண்டு என்பதை உரைநடை பற்றி ஆராய்ந்தவர் எவரும் ஒப்புக்கொள்வர். தமிழ் நூற் பயிற்சி இல்லாத ஒருவனும் படித்தோ கேட்டோ பொருளை உள்ளவாறு உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் உரைநடை முற்காலத்திலே தமிழில் இருக்கவில்லை என்பதை மனத்தில் வைத்துக்கொண்டுதான் பாரதியார் மேற்கண்டவாறு எழுதியிருத்தல் வேண்டும் எனக் கொள்ளல் தகும். 'கூடிய வரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமமென்பது என்னுடைய கட்சி..... எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது' என்று அவர் தொடர்ந்து கூறிச் செல்வதிலிருந்து, பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே உரைநடை அமைதலே சிறப்புடைத்தென அவர் கருதியிருந்தார் என்பது தெளிவாகின்றது. வீரமாமுனிவர் தமிழுரைநடை பற்றி யாதும் கூறவில்லை யெனினும், பொது மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே உரைநடை அமைதல் வேண்டும் என்னும் கருத்துடையவராகவே அவர் இருந்தனர் என்பதை அவர் எழுதிய வேதியர் ஒழுக்கம் முதலிய நூல்களைக் கொண்டு அறியலாம். அவர் காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்கள் கையாண்ட கற்

ரூர்க்கு மட்டுமே புலப்படக்கூடிய நடையிலே எழுத முடியாமையால், பொதுமக்களுக்குரிய நடையில் வேதியரொழுக்கத்தை எழுதத் துணிந்தார் எனக் கொள்ளல் முடியாது. அவர், தொன்னூல் விளக்கத்தைக் கற்றோர் மட்டுமே படித்தற்கென எழுதினராகலின், உரையாசிரியர்களைப் போல உயரிய நடையினை அந்நூலிற் கையாண்டுள்ளனர். ஆகவே, உயரிய நடையைக் கையாளக்கூடிய திறமை அவருக்கு இருந்தபோதும், பொது மக்களும் படித்துப் பொருளறியக் கூடிய நடையிலே நூலை எழுதினலன்றி, அது பொதுமக்களுக்குப் பயன்படாது என்பதை மனத்திற் கொண்டுதான் வேதிய ரொழுக்கத்தை எழுதினரெனக் கொள்ளுதல் பிழையாகாது. அங்ஙனம் அதனை எழுதியபோது பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்ட ஒரு நடையினை அவர் பயன்படுத்தலாயினர். ஆகவே, கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் என்னும் கருத்து, பாரதியாருக்கு இருந்தது போலவே வீரமாமுனிவருக்கும் இருந்தது எனக் கொள்ளல் தகும். இதனாலேதான், வீரமாமுனிவர் 'தமிழ் உரைநடையின் தந்தை' என்று போற்றப்படுகின்றனர்.

மக்களின் அறிவு வளர்ச்சிக்குத் தமிழ் உரைநடை ஒரு சாதனமாக அமைதல் வேண்டும் எனக் கொண்டு மேற் கூறிய இருவரும் எழுதியது போலவே நாவலரும் பொதுமக்களைச் சமய நூற் பயிற்சியும் அறிவும் உடையவர்களாக ஆக்குதற்பொருட்டு, அவர்களுக்கு ஏற்ற வலுப் பொருந்திய ஒரு நடையினை உருவாக்கத் துணிந்தனர் என்பதை அவர் இயற்றிய பெரிய புராண வசனத்துக்கு எழுதிய முகவுரைகொண்டு தெளியலாம்.

'நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும், கல்வியில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக்கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும்..... பெரும்பான்மையும் இயற் சொற்களும் வட சொற்களும் பிரயோகிக்கப் படும் சுத்தியரூபமாகச் செய்து, வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பொரும்பான்மையும் சந்திவிகாரங்களின்றி, அச்சிற் பதித்தேன்' என அவர் எழுதியிருப்பதை நோக்குமிடத்து, தமிழில் உரைநடை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதுபற்றி அவருக்கு இருந்த எண்ணக் கருத்துத் தெளிவாகப் புலப்படுகின்றது. பாரதியார் உரைநடை எப்படி அமைதல் வேண்டும் என்று உரைப்பகுதி அவர் கூறிய கருத்துக்கு இணங்க அமைந்திருத்தல் போல, நாவலர் தம் கருத்தைக் கூறிய இவ்வுரைப்பகுதி அமையாது, கல்வியறிவுடையோர்க்கு மட்டுமே புலப்படக்கூடியதாக அமைந்திருத்தற்கும் ஒரு காரணம் கூறலாம். உரைநடை பொதுமக்களுக்கு ஏற்றவாறு நெகிழ்ச்சியடைதல் இன்றியமையாதது என்பதை அக்கால மரபுக் கிணங்கவும் கல்வியறிவுடையோர் விருப்பிற் கிணங்கவும் கூறவேண்டியதாயிற்று எனலாம். அவர் அவ்வாறு கடின நடையிற் கூறுதற்கு அக்காலச் சூழ்நிலைதான் முக்கிய காரணமாயிருந்தது. நாவலர் காலத்தில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகள், சபாபதி நாவலர் முதலானோர் கையாண்ட, எச்சங்களின் உதவிகொண்டு நீண்டு செல்லும் சந்திவிகாரமுடைக் கடின நடைவகைகளோடு பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம் ஆகிய நூல்களில் நாவலர் கையாண்டுள்ள நடையினை ஒப்பிட்டுப்பார்க்குமிடத்திலேதான் நாவலருடைய நோக்கத்தைத் தெளிந்து கொள்ள முடிகின்றது. பொது மக்களுக்குப் பயன்படாதது காலத்திற்கு ஏற்ற தொன்றாகாது என்பதை நாவலரைப் போல அவர் காலத்து ஏனை எழுத்தாளர்கள் உணரவில்லை. அதனாலேதான் பொதுமக்களுக்குப் பயன்படாத நடையினைப் பிறர் கையாண்டனர். மக்களின் அறிவு விருத்திக்கு ஏற்ற ஒரு கருவியாக உரைநடையை அமைப்பதற்கு நாவலர் மேற் கொண்ட வழிவகைதான் அவரை நாம் 'தற்கால உரைநடையின் தந்தை' என்று பாராட்டுதற்கு ஏதுவாகின்றது. நடையிலே கடின சந்திகளை நீக்குதற் பொருட்டும் ஒத்திசையில் நெகிழ்ச்சியை ஏற்படுத்துதற் பொருட்டும் ஏகாரத்தையும் பிற இடைச்சொற்களையும் இடையிடையே பெய்து வாக்கியங்களை இலகுப் படுத்தியதோடு, எச்சங்களைப் பெய்து வாக்கியங்களை நீட்டிச் செல்லும் வழக்கிற்கு மாறுக, எச்சங்களை முற்றுக்கிச் சிறுச் சிறு வாக்கியங்களை அமைத்தும் தரிப்பிசைக் குறி முதலிய ஆங்கிலமொழிக் குறியீட்டு முறைகளைத் தக்கவாறு உபயோகித்தும், தமிழுரைநடை வரலாற்றிலே ஒரு புதிய திருப்பத்தை நாவலர் ஏற்படுத்தினர் எனலாம். இதற்கு ஓர் உதாரணமாக நாவலர் எழுதிய பாலபாடம் இரண்டாம் புத்தகத்திலுள்ள முதல் வாக்கியத்தைக் கூறலாம். அது வருமாறு:

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே, ஆம்.''

இந்த வாக்கியம் அந்நூலின் முதற்பதிப் பிலுள்ளவாறு தரப்பட்டுள்ளது. பொருட்டாம் என்னும் சொற்றொடர் பேச்சு வழக்கில் ஒரு பொருளையும் எழுத்து வழக்கில் இன்னொரு பொருளையும் குறிப் தால், தாம் கருதிய பொரு ளைக் குறித்தற் பொருட்டு அதனை இரு சொற் களாக ஏகாரம் பெய்தும் தரிப்பிசைக்குறியிட்டும் எழுதியுள்ளனர். இதே போல, வாக்கியங்களைப் பொருள் எளிதிற் புலப்படுமாறு அமைத்தற்கு நாவலர் கையாண்ட வழிவகைகள் பலவற்றை அவர் நூல்களிலும் கட்டுரைகளிலும் காணலாம். இவ்வாறு சில உபாயங்களை மேற்கொண்டு வசனங்களை அமைத்துக் காட்டியதனால் தமிழுரை நடை வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை நாவலர் ஏற்படுத்தினர் எனலாம்.

பொதுமக்கள் அறிவு விருத்திக்கு ஏற்ற ஒரு கருவியாகத் தமிழில் உரைநடை அமைதல் வேண்டும் என்பதை மனத்திற் கொண்டு தற் கால உரைநடைக்கு வழிவகுத்துத் தமிழ்ப்பணி புரிந்த நாவலர், தம் காலத்தில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகள் முதலானோர் போன்று நீண்ட வாக்கியங்களை அமைத்து எழுதுவதையும் கைவிடவில்லை என்பதைத் திருவிளையாடற் புராண வசனத்திலே, புராண வரலாறு கூறு மிடத்திலே முதல் வாக்கியமாக அமைந்துள்ள 'நித்தியராய், வியாபகராய்.....' எனத் தொடங்கி 'அளவிறந்த பெருங்கருணையோடு வீற் றிருந்தருளுவர்' என முடியும் ஏறக் குறைய 200 சொற்களாலாய வாக்கியத்தைக் கொண்டு அறி யலாம். இத்தகைய பொருட் செறிவும், ஒத்திசைச் சிறப்பும், ஆற்றொழுக்கான போக்கும், தெரிந்தெடுத்து அமைத்த சொற்களும் பொருந் திய வாக்கியங்களை அவர் எழுதியிருத்தலை நோக் கும் பொழுது, கல்வியறிவுடையோர் மனங் கொள்ளக்கூடிய வகையிலே எப்பொருளையும் வசன நடையில் அமைத்தெழுதும் ஆற்றல் அவருக்கு இருந்தது என்பதைத் தெளிவாகக் காணலாம். அவர் இயற்றிய பெரிய புராண சூசனமும் சில கண்டனக் கட்டுரைகளும் அவர் 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

கல்வியறிவில்லா மக்களும் வாசித்து எளிதிற் பொருளுணரும் பொருட்டு வடமொழிச் சொற் களை ஆவசியகமாகிய இடங்களிலன்றிப் பிற இடங்களில் உபயோகித்தல் தகாது எனக் கூறிய நாவலர் பெரிய புராண வசனத்திலும் பிற நூல்களிலும் வட எழுத்துக்களோடு கூடிய வட மொழிச் சொற்களைப் பெருமளவிற்குப் பயன் படுத்தியிருத்தல் பொருந்துமோவெனின், அவர் காலம் வடமொழிச் சொற் பிரயோகத்தை மக் கள் பெரிதும் விரும்பிய காலமாதலின், காலத் திற்கு ஏற்ற வகையிலே உரைநடையை அமைத் தற் பொருட்டு வடமொழிச் சொற்களை அவர் பயன்படுத்தினரென்று ஓரளவிற்குச் சமாதானம் கூறுதல் கூடும். வடவெழுத்தோடு கூடிய வட மொழிச் சொற்கள் சோழப் பெருமன்னர் காலம் தொடக்கமாகத் தமிழிற் புகுந்தமையையும், அதற்கான காரணங்களையும் தமிழறிஞர்கள் நன்கு அறிவார்கள். சமயக் கருத்துக்களையும் தத்துவக்கருத்துக்களையும் கூறுதற்கு சமணர்களும் வைணவர்களும் அக்காலத்தில் மணிப்பிரவாள நடை யொன்றைத் தமிழில் உருவாக்க வேண்டி யிருந்தது. அது நாயக்கமன்னர் காலத்தின்பின் சிறிது சிறிதாகக் கைவிடப் பட்டபோதும், வட மொழிக் கருத்துக்களைத் தமிழிற் கூறும் போது வடமொழிச் சொற்களை உபயோகிக்கும் வழக்கு நாவலர் காலத்திலும் இருந்து வந்ததனால், அதற் கிணங்க வடமொழிச் சொற்களைப் பயன்படுத் தினர் எனக் கூறுதலும் அமையும்.

நாவலர் காலத்தில் சைவசமயம் நிலை தளர் வற்கான காரணங்களுள் ஒன்று கிறித்த மதப் பிரசாரம்; மற்றது சைவர்களிடத்திலே சைவ சமய நூலறிவும் சமய அனுட்டானான அறிவும் ஆசாரமும் குறைவாக இருந்தமை. ஆகவே, மக்களிடையே சைவசித்தாந்தக் கருத்துக்களையும் வேதாகமக் கருத்துக்களையும் பரப்புதற்கு எழுதிய நூல்களிலும் பிறவற்றிலும் அக்கருத்துக்களை வட மொழி நூல்களிலுள்ளவாறு வெளிப்படுத்துதற்கு வடமொழிச் சொற்களையும் சொற்றொடர்களை யும் பெருமளவிற்குப் பயன்படுத்தினர் என்றும் கூறலாம். வடமொழி எழுத்துக்களிலே தமிழ்ப் பயிற்று வந்துள்ள எழுத்துக்களை மக்கள் எல் லோரும் அறிந்திருத்தல் வேண்டும் என அவர் கருதியிருந்தமையாற்போலும் முதலாம் பால பாடத்திலேயும் வடவெழுத்தோடு கூடிய வட மொழிச்சொற்களை அவர் புகுத்தியிருத்தலைக் காணலாம்.

சிவ சிந்தாமணி

திருவாவடுதுறையாதீன மகாவித்துவான்
மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்

ஆசிரியப்பா.

கந்தவே டவத்திற் கருதரன் பான்முன்
வந்தவே ளென்ன வந்தவ தரித்தோ
னீற்றெடு கண்மணி நிறையப் பூண்பார்ப்
போற்றெடு பொலியும் புண்ணிய புருட
னவநெறி யாய வனைத்துங் களைந்து
சிவநெறி வளர்க்குந் திப்பிய குணத்த
னெழுத்து முதலாக வியம்பிலக் கணமும்
வழுத்திலக் கியமும் வரம்புகண் டெழுந்தோன்
சமயம் விசேடந் தகுநிரு வாணமென்
றமையுமுத் திக்கையு மடைவுறப் பெற்றோன்
சுமங்கல விசேடச் சுருதியா மூலா
கமங்களின் முப்பொருள் கருதுபே ரருளான்
யுத்தியி னமைத்துணர்ந் தோங்க னுபூதி
சித்தியுற் றமைந்த சிவசிந் தாமணி
கற்றுணர் புலவருட் களிக்கு
முற்றுண ராறு முகநா வலனே.

கலாநிதி க. கைலாசபதி
இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு.



''முன்னிருந்த எங்கள் சமயாசாரியர்கள் தாம் தரிசனஞ் செய்யப்போன தலங்களில் எல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம் போன இடங்களிலெல்லாம் லோகோபகாரமான சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தனர்.''

இது கைலாசபிள்ளை எழுதிய நாவலர் சரித்திரம் நான்காம் அதிகாரத்தில் வருகின்றது. தம்மைச் சமயகுரவர்கட்கு ஒப்பிடுதல் சிறிதும் பொருந்தாதென்றும் அவர்களது ''அடிப்பொடிக் குள்ள மகத்துவத்தில் ஆயிரத்தி லொன்று தானும்'' தமக்கு இல்லை யென்றும் நாவலர் பணிவடக்கத்துடன் கூறியுள்ள போதும், நாவலரைப்பற்றி எழுதிய பலர் அவரை ஐந்தாம் குரவர் என்றே வருணித்திருக்கின்றனர். முன் வந்த சமய குரவர்கள் புறச்சமயங்களைச் சாடித் தஞ்சமயத்தை நிலைநாட்டினர், அவரோடு ஐவரா மென்ன, பரசமய கோளரியாக விளங்கியவர் நாவலர் என்பது யாவருமறிந்ததொன்றே. ஆயினும், வரலாற்றடிப்படையில் அமைந்த இவ் வொப்புமையில் வேறுபாட்டைச் சுட்டிக் காட்டியுள்ளார் கைலாசபிள்ளை. முன்னவர் பாட்டிலே பதிகங்கள் பாடினர்; பின்னவர் உரை நடையிலே பேசியும் எழுதியும் பணிபுரிந்தவர். இவ்வேறுபாடு கவனத்திற்குரியது. ''வசனம் போலப் பாட்டுக்கள் இக்காலத்திற் பிரயோசன முடையவைகளல்ல என்று கருதியே பாட்டுப் பாடுதலை இவர் குறைத்துக் கொண்டார்''— கைலாசபிள்ளையின் இக்கூற்று கட்டுரைத் தொடக்கத்திலுள்ள மேற்கோளுக்கு விளக்கம்.

தனது காலத்துக் கேற்றவை எவை என்ப தனையும் இன்றியமையாதன எவை என்பதையும் சிந்தித்துத் தெளிந்து அவற்றைச் செயற்படுத்தி யமையே நாவலரது சிறப்புக்கும் தனித்துவத் துக்கும் அடிப்படையாகும். அதாவது நாவலரின் தற்கால உணர்வே அவரை அவரது சமகாலத் தவர் பலரினின்று வேறுபடுத்தித் தனிச்சிறப் புடையராய்க் காட்டுகின்றது. நாவலர் வரலாற் றுப் பெருமகன். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆவசியகமாயிருந்த சிற்சில கருமங்களை நிறைவேற்றியவர். நன்கு ஆற்றப்பட்ட அக் கருமங்கள் பிறருக்கு ஆதர் சமாக அமைந்தன. அவையே புதுப்பாதை காட் டும் புதுப்பணிகளாயும் அமைந்தன.

நாவலர் காலத்தில் இருவகைக் கண்ணோட்டம் எம்மவரிடையே இருந்தன. ஆங்கிலக் கல்வி கற்றவர்களிற் பெரும்பாலானோர் ''தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று'' துரைத்தன மனோபாவத்துடன் வாழ முற்பட்டனர். தம்மையாண்ட வெள்ளையரைப் பின் பற்றியும் அவரை முன்மாதிரியாய்க் கொண்டும் ''குட்டித் துரை'' களாக வாழ்வதில் இன்பமும் பயனுங் கொண்டனர். இவர்கள் ஓடுகின்ற நீரில் அடிபட்டு மிதந்து செல்பவர்கள். சம்பளம், பதவி, பட்டம் முதலியன மதிக்கப்படும் பொருள்களாய் விளங்கின. உதாரணமாக, பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதராயிருந்த நாவலர், துரை பல தரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும் அவ்வுத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்த பொழுது, அவரது தமையன்மார் ''நீ என்ன புத்தியீனஞ் செய்து கொண்டாய்; இந்தச் சம்பளம் இனி நீ எங்கே பெறுவாய், இனிமேல் உனக்கு உலகத்திலே என்ன மதிப்பு'' என்று அவரைக் கண்டித்தனராம்.

(பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நாவலர். 1968 பக். 5)


இத்தகையோர் ஒரு வகையினர்.

பிறிதொரு வகையினர். தமிழ்ப் புலமைத் துணைமாத்திரங் கொண்டு குறுநிலத் தலைவர்களது அவைகளையும் ஆதீனங்களையும் அண்டிப் பிழைத்துக் கொண்டிருந்தனர். தமக்குத் தெரிந்த சில ''இலக்கிய'' நூல்களைப் படிப்பதிலும் படிப்பிப்பதிலும், ''பிரபுக்களுக்குப் பிரபந்தங்கள் செய்து வயிறு வளர்த்த வித்துவான்கள்'' அவர்கள். தமது காலச் சமுதாய உணர்வெதுவுமின்றித் தம்மளவில் நிறைவுணர்வுடன் அத்தகையோர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் சீவித்த சமஸ்தான ஆதீன உலகிலும் பட்டம் பதவிக்குக் குறைவில்லை. கவிராயரும் மகாவித்துவான்களும் கம்பீர நடை போட்டு நாட்டிலே திரிந்தனர். உதராணமாக, சென்ற நூற்றாண்டிலே மரபு வழித் தமிழ்ப் புலமைக்குச் சிகரமாய் விளங்கியவரான திரசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815 - 1875) நாவலரவர்கள் 'நாவலர்'ப் பட்டம் பெற்ற காலத்தில், ''ஊர்தோறுமுள்ள சிவஸ்தலங்களுக்கு அவ்வூரிலுள்ளவர்களின் கேள்விப்படி புராணங்கள் செய்து அரங்கேற்றிக்கொண்டும், அந்தாதி கோவை உலாப் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தங்களை நூற்றுக்கணக்கிற் செய்து கொண்டும், தம்மைத் தொடரும் பிள்ளைகளுக்குப் பெரும் பாலும் தாமியற்றிய நூல்களைப் பாடஞ் சொல்லிக்கொண்டும், ஆங்காங்குள்ள செல்வர்களின் ஆதரவிற் காலங்கழித்தவர்'' (மே பக்கம் 9) இத்தகையோர் தமது காலச் சமுதாயத்துடன் ஒட்டாது 'பழைய' உலகில் வாழ்ந்தவர்கள்.

இவ்விருவகை மாந்தரையும் எண்ணிப் பார்க்கும் பொழுதே நாவலரின் புதுமையும் மகத்துவமும் புலனுகின்றன. நாவலர் பிறந்த குடும்பம் வறுமை என்பதை அறியாதது. தனது உடன்பிறந்தாரைப் போல நாவலரும் வேதனத்துக்கு உத்தியோகம் பார்த்திருக்க வேண்டியவர். அது நடக்கவில்லை. சமயத்தையும் மொழியையும் கற்பித்தலையே இலட்சியமாகக் கொண்டிருந்தாலும் திருவாவடுதுறை போன்ற ஆதீனத்தை அணுகியிருப்பின், சின்னப்பட்டமாகவோ ஆதீன மகா வித்துவானுகவோ வீற்றிருந்திருக்கலாம். அம்பலவாண நாவலர், சபாபதி நாவலர் முதலியோரும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் அவ்வாறு தான் இருந்தனர். அல்லது பொன்னுச்சாமித் தேவரை அண்டியிருந்தால் சேது சமஸ்தானத்தின் வித்துவ வரிசையில் முற்பட வீற்றிருந்திருக்கலாம். அதுவும் நடக்கவில்லை. ஒன்று 'நவீன' வாழ்க்கை முறை மற்றது 'பழைய' வாழ்க்கை முறை. பழமை, புதுமை என்னும் பெயர் வேறு பாடிருப்பினும், இரண்டும் ''உண்டிருந்து வாழ்வதற்கு'' உகந்த நெறிகளாயே யிருந்தன. இவைதான் அக்காலத்திற் பெரும்பாலாரும் தழுவிய இலகுமதமாயிருந்தன. இவையிரண்டினையும் ஒதுக்கித் தள்ளிப் பிறர் நலம் என்ற மகோன்னதமான இலட்சியத்துக்குத் தம்மை அர்ப்பணித்ததே நாவலர் காட்டிய புதுப் பாதைக்கு வித்தாகும். இவ்வித்திலிருந்து விரிந்தனவாக ஐந்து முதன் முயற்சிகளைக் குறிப்பிடலாம்:

1. தமிழிலே முதன் முதலாகப் பிரசங்கம் செய்தார்.
2. தமிழிலே கட்டுரை என்பது முதலில் இவரால் நல்ல முறையில் எழுதப்பட்டது.
3. தமிழில் எழுந்த பாடநூல்களுக்கு இவரே வழிகாட்டி.
4. வசன நடையிற் குறியீட்டு முறையை முதன் முதலிற் புகுத்தினர்.
5. சைவ - ஆங்கில பாடசாலையை முதன் முதன் ஆரம்பித்தவர்.

இவ்வைந்து சாதனைகளையும் நிரற்படுத்தினாலும் நாவலரது வரலாற்றுப் பணியையோ அல்லது வரலாற்றில் அவருக்குரிய இடத்தையோ முற்றுக அறிந்தவராகோம். ஆயினும், அவற்றை ஓரளவு அறிந்து கொள்வதற்கு இச்சாதனைகள் பற்றிய சில செய்திகள் உதவும் என்பதில் ஐயமில்லை. அதற்கு முன் ஒன்று சொல்லல் வேண்டும். வரலாற்றுப் பெரியவரொருவர் ஒரு கருமத்தைப்



''ஆறுமுக நாவலர் சரித்திரம்'' எழுதியவரும், நாவலரின் சீடரும், பெருமகனுமாகிய த. கைலாசபிள்ளை. நாவலர் சிவபதமடையும் தருணம் கடைசியாகக் கூறிய வார்த்தை ''கைலாசபிள்ளையைக் கூப்பிடுங்கள்'' என்பதாகும்.

—உபயம்: க. சதாசிவன்.

புதுவதாகச் செய்வதும் உண்டு; செய்து வெற்றி காண்பதும் உண்டு. புதிதாக ஒன்றைச் செய்ய முயல்பவர் பலர்; காலத்தின் தேவை பலரை உந்துகிறது. ஆயினும், இரண்டொருவர் அத்தேவையின் முழுத்தன்மையையும் உள்ளுணர்ந்து அதனை நிறைவேற்றி வைக்கின்றனர். அவரே செயற்கரிய செய்பவர். அதாவது, புதுமையுணர்வு மாத்திரம் போதாது. அதனைப் பூரணப்படுத்தும் பக்குவமும் பொருந்தவேண்டும். உதாரணமாக, நாவல் என்ற இலக்கிய வகையைத் தொடங்கி வைத்தவர் வேதநாயகம் பிள்ளை. ஆனால், பிரதாப முதலியார் சரித்திரம் இன்று இலக்கியச் சிறப்புடையதாகப் போற்றப்படுவதில்லை.

(மு. வரதராசன், கணேசையர் நினைவு மலர். 1960 பக். 103)

அதுபோலவே மேற்கூறிய ஐந்து முயற்சிகளும் நாவலருக்கு முன்னர் எவராலும் மேற்கொள்ளப் படவில்லை எனக் கூறவேண்டியதில்லை. ஆயினும், தமிழ்-சைவம் என்ற கோட்பாட்டிற்குள் இவற்றைப் பழுதறச் செய்து முடித்தவர் நாவலரே. இதற்கோர் உதாரணங் காட்டுவோம். நாவலர் வசன பாடப் புத்தகங்கள் எழுதுவதற்கு முன்னரே, ஏறத்தாழ 1820-ஆம் ஆண்டளவிலிருந்தே, சென்னைக் கல்விச் சங்கம் சில தமிழ் நூல்களையும் வெளியிட்டு வந்தது. சென்னையில் அக்காலத்திற் புகழுடன் விளங்கிய வித்துவான் சிதம்பர பண்டாரம், தாண்டவராய முதலியார், சிவக்கொழுந்து தேசிகர் முதலிய இயற்றமிழ்ப் போதனாசிரியர்கள் இச்சங்கத்து முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். வெள்ளைக்காரத் துரைமாரின் கருத்துக்கிணங்கச் சில பழைய தமிழ் நூல்களைப் புதுப்பித்தும், சில ஆங்கில நூல்களை மொழி பெயர்த்தும் வெளியிட்டனர். ஆனால், நாவலரே தமிழ்மாணவருக்கு ஏற்ற புதிய பாலபாடங்களை எழுதினர். இது பற்றி அக்காலத்திற் சென்னையில் நடைபெற்ற Native Public Opinion என்னும் ஆங்கிலப் பத்திரிகை மதிப்புரையாகக் கூறியுள்ளது மனங்கொளத்தக்கது:

''இந்த அறிஞர் எழுதிய பாலபாடங்களைத் தவிரவு இங்குள்ள வித்தியாசாலைகளில் உபயோகித்தல் வேண்டுமென்று நாம் திடமாகச் சொல்லுவோம்; இச் சென்னையிலுள்ள வித்தியா சங்கத்தார் வெளியிடும் வசன பாட புத்தகங்களைக் காட்டிலும் நாவலர் பாலபாடங்கள் எவ்வாற்றானும் சிறந்தவையாகும். வித்தியா சங்கத்தார் வெளியிட்ட புத்தகங்களை நாவலரவர்கள் எழுதிய பாலபாடங்களோடு ஒப்பிட நினைத்தமைதானும் தவறெனலாம்.''

(மு. இராமலிங்கம், நாவலர் நினைவு மலர், 1938, பக். 94)

மாணவரின் மனவளர்ச்சியையும் கல்வி வளர்ச்சியையுங் கருத்திற்கொண்டு 'சுதேசிய'த் தேவைகளை நிறைவேற்ற நாவலர் பாலபாடங்களை எழுதியதன் தருக்கரீதியான முடிவே அவர் எழுதி வெளியிட்ட இலங்கைப் பூமிசாஸ்திரம். அவர் எழுதத் தொடங்கியிருந்த தமிழ், ஆங்கிலம்-தமிழ், வடமொழி-தமிழ் அகராதிகளும் இத்தகைய கல்வித் தேவையினால் உந்தப் பெற்றனவே.

உரைநடையை எழுதியதிலும் நூல்களைப் பதிப்பித்ததிலும் நாவலருக்கு முன்னோடிகள் பலரிருந்திருக்கின்றனர். ஆனால், அவர்களுக்கும் நாவலருக்கும் நோக்கு நிலையில் வேறுபாடுண்டு. பெரியபுராண வசனத்திலே முகவுரையில், ''அதனைப் பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை ஆவசியகமாகிய திரிசொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்படுங் கத்தியரூபமாகச் செய்து, **வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்திவிகாரங்களின்றி அச்சிற் பதிப்பித்தேன்**'' என்று எழுதியிருக்கிறாரல்லவா? இக்கூற்று உன்னித்தற்குரியது. நாவலரை அவர் யுகத்துப் பிற பதிப்பாசிரியரினின்றும் பிரித்துக் காட்டுவது இச்சமுதாய நோக்கேயாம்.

''தமிழ் கற்றோர் நினைவிலிருந்து நீங்கி ஏடுகளில் வசிக்கத் தொடங்கியது..... இந்தத் துர்ப்பாக்கிய நிலையை இங்கே ஓர் ஆறுமுக நாவலர் அவர்களும், அங்கே ஒரு மழவை மகாலிங்கையர் அவர்களும் சிந்தித்தார்கள். நாவலர் அவர்களின் சிந்தனை 'மக்களுக்கு அத்தியாவசியம் பயன்படுபவைகள் எவை?' என்ற வினவுடன் எழுந்தது. மகாலிங்கையர் அவர்களின் சிந்தனை 'மிகப் பழமையானது எது?' என்ற வினவுடன் எழுந்தது.''

(சி. கணபதிப்பிள்ளை, கணேசையர் நினைவு மலர், பக்.93)

மேற்சொன்ன வினவுடன் எழுந்த சிந்தனையின் செயற்பாடாகவே ஐம்பெரும் புது முயற்சிகள் எமது சமுதாயத்துக்கு மிகவும் வேண்டற்பாலனவாயிருந்த நற்சாதனைகளாயமைந்தன. ஆசீனங்களோடு சமயமும் சமஸ்தானங்களோடு புலமையும் முடங்கிக் கிடந்த சூழ்நிலையில் இவையிரண்டையும் பரந்துபட்ட மக்களுக்கு உடைமையாக்க முனைந்தமையே நாவலரது தலையாய புதுமுயற்சியாகும்.

நாவலர் புதிதாகச் செய்த முயற்சிகள் அவரது பெருநோக்கத்துக்கு ஏதுக்களாகவே கருதப்பட்டன என்பது நினைவில் நிறுத்த வேண்டியது. இவற்றின் மூலம் ''சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையே'' தன்னை இருபது வருட காலம் இரவும் பகலும் தொண்டாற்றச் செய்தது என்று **சைவசமயிகளுக்கு விக்ஞாபனம்** *(1868)* என்னும் கட்டுரையில் எழுதியுள்ளார். பேராசை மட்டும் இருந்தாற் போதுமோ? வழிவகைகளும் காணல் வேண்டுமன்றே! இவற்றைத் தனது எதிர்க்கட்சியினரிடமிருந்தே பெருமளவிற்குப் பெற்றுத் தமதாக்கிக் கொண்டார். ''நாமும் ஏன் அந்தப் பாதிரிமார்கள் போலக் கிளம்பி நமது சைவசமயத்தைப் பரப்பலாகாது? இந்தக் கேள்வி, சென்ற நூற்றாண்டில் ஒரே ஒருவருக்குத்தான் உதித்தது அவரே நம் ஆறுமுகனார்.''

(சுத்தானந்த பாரதி, நாவலர் பெருமான், பக். 33)

இக்கட்டுரையின் முற்பகுதியிலே நாம் குறிப்பிட்ட இருவகையினரும் பாதிரிமாரது கல்வி பிரசார முறைகளைப் புறநிலையில் வைத்து நோக்கினர் அல்லர். புதுவாழ்வை மோகித்தவரும் பழைய நெறியிலேயே ஆழ்ந்திருந்தவரும் மேலை நாட்டுக் கல்வி-கலாசார ஆதிக்கத்தின் பண்பையும் பயனையும் காணவியலாதவராயிருந்தனர். நாவலர் கண்டு தனித்துநின்று சமர் புரிந்தார். காலமும் இடனும் நோக்கி எதிரியின் பாணங்களுக்குப் பதிற்பாணங்கள் சமைத்தமையே அவரது வரலாற்றுப் பணியின் இரகசியமாகும். இதனை எத்தனை அழுத்திக் கூறினும் தகும். ''பாதிரிமார் யாழ்ப்பாணத்துக்கு வராவிடின் நாவலராற்றிய அரும் பெரும் பணிகள் நிகழ்தற்குத் தருணமெழுந்திராது.''

(க. கணபதிப்பிள்ளை, நாவலர் நினைவு மலர். பக். 15)

இவ்வுண்மையினையே தனக்கேயுரிய நடையிற் கூறியுள்ளார் பண்டிதமணியவர்கள்:

''உண்மையை நோக்குமிடத்துப் பதினைந்து வருடக் கிறிஸ்த சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது. பதினைந்து வருடக் கிறிஸ்த சூழல் அமையாதிருந்தால் ஆறுமுக நாவலர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை.''

(சி. கணபதிப்பிள்ளை நாவலர், 1968. பக். 6)

தனது காலத்துச் சின்னஞ் சிறிய மனிதரிலிருந்து வேறுபட்டுப் 'புதுமை'யில் அடிபட்டுப் போகாமலும், பழைமையில் அமிழ்ந்து போகாமலும் இரண்டையும் தரம் பிரித்து இனங்கண்டு புதுவழி கண்டமையாலேயே, **தத்துவ விசாரணி** பத்திராதிபர், ''சென்னை முதல் ஈழமீருகவுள்ள இத்தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கினை இல்லாதவர்'' என்று நாவலரை வருணித்தார். நாவலராலே தமிழ்த் தாதாவாகிய சி. வை. தாமோதரம் பிள்ளை, தமது சேனுவரைய விளம்பரத்திலே *(1868)* நாவலரவர்கள் ''தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கினையில்லாதவர்'' என்று விசேடித்தமை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்றே தோன்றுகிறது.

கலாநிதி பொ. பூலோகசிங்கம்
இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு.

தமிழ் இலக்கியத்துக்கு நாவலர் புரிந்த பணி

தமிழையும் சைவத்தையும் பேணி வளர்த்த புரவலராகவும் புலவராகவும் விளங்கிய ஆரியச் சக்கரவர்த்திகளைத் தொடர்ந்து ஈழவளநாட்டின் தமிழ்ப்பகுதிகள் வேற்றுமொழியைத் தாய்மொழி யாகக் கொண்ட வேற்றுமதத்தினரின் ஆட்சிக் குட்பட்டன. பதினேழாம் நூற்றாண்டின் முற் கூறிலே போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி ஆளத்தொடங்கினர். அவர்கள் ஆட் சிக்காலம் குறுகியதாக இருந்தபோதும் தம் மதத் தின் வளர்ச்சிக்கு அவர்கள் வித்திட்டுச் சென்ற னர். ஞானப்பள்ளின் ஆசிரியர்,

"பேரான பாராளும் பிடுத்துக்கால் மனுவென்றன்
பிறதானம் வீசவே கூவாய் குயிலே"

எனப் போர்த்துக்கேய மன்னனை வாழ்த்துகின் றார். இவ் வாழ்த்து தமிழ் வாழ்த்தல்ல; சமய வாழ்த்து. போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொண்டனர். பதி னேழாம் நூற்றாண்டின் நடுக்கூறு முதலாகப் பதி னெட்டாம் நூற்றாண்டின் கடைக்கூறுவரை தமி ழ்ப்பகுதிகள் இவர்கள் ஆட்சியின் கீழ் இருந்தன. ஒரு நூற்றாண்டினும் நீண்டதாக நிலவிய ஒல்லாந் தர் ஆட்சியைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சி வந்தது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தம தாட்சியைத் திடப்படுத்துவதிலேயே நாளைப் போக்கினர். கண்டியில் நிலவிய அரசும் ஈழத்தின் பல்வேறு பகுதிகளிற் பல்வேறு காலங்களிலெழுந்த சுதந்திர முயற்சிகளும் அவர்களுக்கு அமைதியின் மையையே அளித்தன. இந்நிலையிலே தங்கள் சம யப் பிரசாரகருக்குப் பூரண உதவியை அவர்கள் தரமுடியவில்லை; அவர்கள் தந்தது வலாற்கார மான மதமாற்றமே. வலாற்காரத்தின் பெறுபேறு எக்காலத்திலும் நிலைபேறு உடைத்தாயிருத்தல் கடினமாகும். இவர்களைத் தொடர்ந்த ஆங்கிலே யர் 1815-இற் கண்டியரசினை வீழ்த்தித் தமதாணை ஈழம் முழுவதும் செல்லுபடியாகச் செய்தனர். நாடு முழுவதும் ஒரே அரசின் கீழ் இயங்கியதால் ஆங்கிலேயர் ஆட்சி முன்னையவர் ஆட்சியிலும் வலுவுடைத்தாகத் திகழ்ந்தது. ஆட்சியை நிலை நிறுத்தச் சமுதாய ஒத்துழைப்புத் தேவைப்பட் டது. சமுதாய மனமாற்றத்தைச் சமயத்தின் மூலம் செய்யக் கருதினர்கள். தமது சமயத்தோடு தமது பண்பாடும் கலாசாரமும் வேரூன்றினால், ஆட்சி மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவொன் றாக அமையலாம் என்ற கருத்தாற் 'புரோடெஸ் டாண்டு' பாதிரிமார் வருகையை ஆளுநர் ஆதரித் தனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மேலைத் தேயங்களிலிருந்து சமயத்தாபனங்கள் பல 'அஞ் ஞானி' களைத் தெளிவித்து, 'பரிசுத்த ஆவி' புகப்

பண்ணப் பல திசைகளிலும் பிரசாரகர்களை அனுப் பின. ஈழத்திற்கும் அதன் வடபகுதிக்கும் வெஸ்லி யன் சங்கம், சர்ச்சுச் சங்கம், அமெரிக்கன் சங்கம் முதலிய செல்வவளமுள்ள சங்கங்களைச் சேர்ந்த பாதிரிகள் வந்தனர். இவர்கள் 'சுதேசி'களை மத மாற்றம் செய்யப் பல வழிகளையும் பின்பற்றினர். வேற்று மதங்களுக்கு எதிரே சைவத்தின் நிலை அமைந்திருந்தவாற்றை நாவலர் எழுதிய யாழ்ப் பாணச் சமயநிலை (1872), நல்லூர்க் கந்தசாமி கோயில் (ஆடி 1875, புரட்டாதி 1875), மித்தி யாவாத நிரசனம் (1876) முதலிய பிரசுரங்கள் தெளிவாக உணர்த்துகின்றன. சைவ குருமார் பாதிரிகளின் முன்பு வலுவுடைய அரணாக எதிர் த்து நிற்க முடியாதிருந்த நிலையையும் சைவ சமய த்தின் பேரால் நடந்த ஊழல்கள் புறச்சமயிகளுக்கு அளித்த வாய்ப்புகளையும் இப் பிரசுரங்கள் எடுத் துரைக்கின்றன. மேற்கூறப்பட்ட நான்கு பிரசுரங் களும் தோன்றுவதற்கு முன்பே நாவலர் இத்த கைய சமய பேத நிலையைக் காட்டியுள்ளார். ரௌத் திரி வருடம் வைகாசி மாதம் (1860) எழுதிய 'விக்கியாபனம்' ஒன்றிலே நாவலர் மேல்வரு மாறு கூறுவர்1:

''கிறிஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமயநூலைத் தாங்கள் கற்றும், வெகு திரவியங் களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவர்க்கும் போதித்தும், வரு கிறபடியினாலே, அவர்கள் சமயம் எத்தேசங்களி லும் வளர்ந்தோங்கி வருகின்றது. நம் முடைய சைவசமயிகள் சைவநூல்களைக் கல் லாமையினாலும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளி தில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமய மாகிய சைவசமயம் வரவரக் குன்றுகின்றது.''

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலநிலையையும், ஆங்கிலேயர் காலநிலையையும் ஒப்பிட்டு மேல்வரு மாறு கூறியுள்ளமை ஈண்டு கவனிக்கற்பாற்று2: ''பறங்கியர் ஒல்லாந்தர் காலத்திலே சைவசமயத் துக்கு வந்த வருத்தம், சிரங்கு வருத்தம் போன் றது. அது வெளித்தோல் வருத்தம். உள்ளூறச் சமயம் உயிரைப் பற்றி நின்றது. ஆங்கிலேயர் காலத்திலே சமயத்துக்கு வந்த வருத்தம் கசவருத் தம் போன்றது. உயிரைக் கொல்லுகின்ற வருத் தம் அது. உட்பகையான வருத்தம். புறப்பகையில் உட்பகை பொல்லாதது.''

மேன்மை பெற்ற சைவநெறியும் அதன் போக்கிடாக அமைந்த பண்பாடும் கலாசாரமும் குன்றுஞ் சூழ்நிலையிலே ''ஈழநாட்டை மூடியிருந்த மாயாவிருளைச் சீத்து ஞானப்பிரகாசம் காலுமாறு முற்கூறிய ஞானப்பிரகாசர் மரபிலே நல்லூரிலே ஆறுமுகநாவலர் உற்பவித்தனர்''3

அவர் கூற்று மூலமே அவர்பணி வெளியாகின்றது: ''கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்ம தேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல் லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்.'' நாவலரின் சுயசரிதைக் குறிப்புகள் போன்று விளங்கும் 'விக்கியாபனம்' (1868) ஒன்றிலே தமதாசையை நாவலர் இவ்வாறு கூறியுள்ளார்4. நாவலர் காலத்துச் சூழ்நிலை சமய மறுமலர்ச்சியை வேண்டி நின்றது. எனவே, அவர் சமயப்பணியை உயிராகக் கொண்டார். அந்தச் சமயத்தொண்டிற்குத் தமிழ்க் கல்வி கருவியாக அமைந்தது. ஆதலால், ஆறுமுகநாவலரின் இலக்கியப் பணியை நோக்கும் போது நாம் அது சமயத்தின் நிலைக்களத்தை யுடைத்து என்பதை மனங்கொளல் அவசியமா கின்றது.

தமிழ் இலக்கியக் கதியை நோக்கின், அது ஆரம்ப தசையில் உலகியற்பண்பு மிக்கதாகவும் பின்பு சமயப்பண்பு மேலோங்கப் பெற்றதாகவும், அண்மைக் காலத்திலே இருவகைப் பண்புகளும் முரணி நிற்கும் தன்மையையுடையதாகவுமிருப் பதைக் காணலாம். சேர சோழ பாண்டியராம் மூவேந்தர் ஆட்சி செலுத்திய காலப்பிரிவிலே எழுந்த இலக்கியப் படைப்புகள் பெரும்பாலும் சமயச் சார்பற்றனவாய் விளங்குகின்றன. பரி பாடல் என்னும் தொகைநூலிலே சமயப்பண்பும் உலகியலும் சில பாடல்களில் இணைந்து காணப்படு வதை நாம் அறியமுடிகின்றது. ஆற்றுப்படை யினைத் திசைதிருப்பும் படைப்பாகத் திருமுருகாற் றுப்படை விளங்குகின்றது. இதனைத் தொடர்ந்து சமயப் பண்பு தமிழ் இலக்கியத்தில் மேலோங்கு கின்றது. சமயவுண்மைகளை இலக்கணத்திலிடம் பெறும் நூற்பாக்கள் போலக் கூறும் தன்மையை யும் அதனைப் பத்தியின் அடிப்படையில் உணர்ச்சி யூட்டிக் கூறும் பண்பையும் நாம் காணலாம். பத்தியிலக்கியத்தைப் பேணிப் பேரிலக்கியங்கள் கதைகூற முற்பட்டன. பேரிலக்கியத்தின் ஒடுக்கத் திலே தலபுராணங்களும் தல சம்பந்தமான பிர பந்தங்களும் பெருகின. பிரபந்த வகைகளின் பெருக்கத்திலே உலகியற் பண்பு இடம்பெற்ற

போதும் இருபதாம் நூற்றாண்டின் விடியலிலேயே அது மீட்டும் தன்னிலை அடைந்தது.

ஆறுமுகநாவலரவர்கள் வாழ்ந்த காலத்து இலக்கிய இயல்பினை நாம் நோக்கின் நாவலர் தந்த தமிழ் எவ்வாறு அமையும் என்பதை உணர லாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கிய நெறியின் ஒரு கிளைக்குச் சிறந்த எடுத்துக்காட் டாக விளங்குபவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. நாயக்க மன்னரின் ஆட் சிக் காலத்திலே தமிழ் இலக்கியம் ஆதீனங்களின் வளர்ப்புப் பிள்ளையாக விளங்கிற்று. மீனாட்சிசுந் தரம் பிள்ளை திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கினார்கள். ஆதீன கல்வியில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி போன்றவை இடம்பெறவில்லை என்ப தற்கு உ. வே. சாமிநாதையர் கூற்றுகளே சான்று கின்றன. தமிழ் இலக்கியத்திற் குறிப்பிடத்தக்க ஒரு பிரிவே, இக் கல்வியால் ஒதுக்கி வைக்கப்பட் டது. மீனாட்சிசுந்தரம்பிள்ளை ஆனந்தக்களிப்பு, ஊசல், லாலி, கப்பற்பாட்டு முதலியவற்றைப் பாடியபோதும் இவர் படைப்புகளிற் பெரும்பா லானவை தலபுராணங்களும் தல சம்பந்தமான பிரபந்தங்களுமேயாம். ஆறுமுகநாவலரும் இந்தக் கிளையின் முக்கியஸ்தர்களில் ஒருவரே. ''நாட்டுக் கோட்டைச் செட்டிகள் சிலருடைய வேண்டு கோளின்படி தேவகோட்டைத் தலபுராணத்தை ஐந்நூறு செய்யுள்வரையிற் பாடினரென்றும் கேள்வி?'' என்பர் அ. சதாசிவம்பிள்ளை[5]. நாவலர் பாடிய ஏனைய தனிப்பாடல்களும் கீர்த்தனங்களும் தெய்வ சம்பந்தமானவை. அவர் தமது ஆசிரியர் சரவணமுத்துப்புலவர் மீதும் மாணவர் வி. சுப்பிர மணியபிள்ளை மீதும் பாடிய சரம கவிகளே அவர் மானிடர்மீது பாடிய செய்யுள்களாம்.

ஆயினும், ஆறுமுகநாவலரை இலக்கியக் கதி யால் ஈர்த்துச் செல்லப்பட்டவர் என்று கூறல் முற்றும் பொருந்துவதன்று. தமிழகத்திலே இருந் ததைவிட ஈழத்திலே கிறித்தவர்களாற் சைவர்க ளிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி தீவிரமாக இருந்தது. குறைந்த தொகையினராகத் தமிழ் மக்கள் ஈழத்தில் இருந்தமையும் மடாலயங்கள் முதலியன ஈழத்தில் இல்லாதிருந்தமையும் கிறித் தவ வளர்ச்சிக்குத் துணையாகவிருந்தன. இதனாலே கிறித்தவரின் தீவிரமான மதப்பிரசாரம் சைவப் பிரசாரகரைத் தோற்றுவித்தது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ''பெயரளவில் திருவாவடு துறை ஆதீனம் ஆறுமுகநாவலரைத் தந்ததேயா யினும், உண்மையை நோக்குமிடத்துப் பதினான்கு வருடக் கிறிஸ்த சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது. பதினான்கு வருடக் கிறிஸ்த சூழல் அமையாதிருந்தால் ஆறுமுகநாவலர் என்றொரு வர் யாழ்ப்பாணத்தில் இல்லை'' என்று இக் கருத்தை எடுத்துரைத்துள்ளார்[6].

இலக்கியம் என்பது யாது, அது எவ்வாறு அமையவேண்டும் என்று தற்போதைய ஆய்வுக் களத்தில் நின்று நாம் நாவலரை அணுகுவது பொருந்தாது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டம் முதலாக மேலைத்தேயக் கல்வி முறையில் விமர்சனப்பார்வை பல வழிகளிலும் ரசனை மரபி லிருந்து வேறுபடத் தொடங்கியது. இலக்கியம் பற்றிய கருத்துக்கள் பல இதன் பெறுபேறாக வந்துள்ளன. அக்கருத்துக்களை அளவுகோலாகக் கொண்டு தமிழரின் பண்டைய இலக்கிய நோக்கை அளவிட முயறல் இடர்ப்பாடுகள் பல வற்றை தோற்றுவிக்கும் பெற்றியுடைத்து. ஒரு மக்கட் கூட்டத்தினரின் இலக்கிய சிந்தனை ஒரு காலப்பிரிவிலே எவ்வாறு அமைந்திருந்தது: சிருஷ்டி கர்த்தாக்கள் அந்தச் சிந்தனை வழியிலே எவ்வாறு இயங்கினர் என்பதே பொருத்தமான நோக்காகும்.

சமயப் பணியே தலையாய நோக்காகக் கொண்ட நாவலர் தமிழ்ப்பணி செய்தார். இலக் கியப் பணி புரிந்தார். நாயன்மாரும் ஆழ்வார் களும் சமயப்பணி புரிந்தனர் என்று கூறுவோர், அவர்கள் இலக்கியப்பணி ஆற்றினர் என்ற கூற்றை மறுப்பது கடினம். இலக்கியப்பணி என்ற உணர்வோடு செய்யவில்லை என்று கூறுவோரும் உளர். இறைவன்மாட்டு அன்பு பூண்டு அவனரு ளாலே அவன் தாள் பாடிய அடியார்கள் தமது பண்டைய இலக்கிய மரபையும் பேணிப் புதுவழி யிலே செல்லக் காலெடுத்துக் கொடுத்தவர்கள் என்பதைப் பத்தியிலக்கியப் பயிற்சியுடையாருக் குக் கூறவேண்டா. ஆறுமுக நாவலரும் சமயக் குரவர் வழியிலே சமயப்பணி செய்யப் புறப்பட்டு இலக்கியப்பணி செய்தார். தர்மாவேசத்தோடும் இலட்சிய வேட்கையோடும் அல்லும் பகலும் சமயப்பணி புரிவதற்கென்றே தன்னை அர்ப் பணித்த நாவலர் இலக்கியவுணர்வோடு அப்பணியைச் செய்தார்.

''அறம் பொருளின்பம் வீடடைத லுற்ற பயனே'' என்பது தமிழ் இலக்கணக் கொள்கை[7]. இதனால் மக்கட் குறுதி பயப்பனவாகிய நாற் பொருளைப் பயக்கும் நெறியன நூல்கள் என்பது போதரும். ''கல்வி கேள்விகள் இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்ய மாட்டார்கள்'' என்பது நாவலர் கூற்று[8]. இவ்வாறு கூறிய நாவலர் தமது காலத்துத் தமிழ்க் கல்வியின்

நிலையை ஆங்காங்கே கூறிச் செல்கின்றார். ''தமிழ் கற்றவர்களே நடுவுநிலைமையின் வழுவாது பரீக்ஷை செய்து, அதில் வல்லவர்களென நன்கு மதிக்கப் பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுக்கும் சபையார் இக்காலத்தில் இல்லாமையால், தமிழ்க் கல்வியில் வல்லவர் களும், வல்லவர்களல்லாதவர்களும் ஒப்ப மதிக்கப் படுகிறார்கள். அதனால், நமது தேசத்தாருக்குத் தமிழ்க் கல்வியில் விருப்பமும் முயற்சியும் சிறிதா யினும் இலவாயின[9]'' இங்கிலிசுப் புத்தகங்கள் சிலநாட் கைக்கொண்டு திரிந்தோரெல்லாம், B. A., B. L., M. A. முதலிய பட்டங்கள் தமக்குத் தாமே படைத்திட்டுக்கொண்டு, இறுமாந்து திரிய லாமே. பயன் என்னையோ! சிறுவரும் இகழ்தற் கிடனுமே! இங்கிலிசில் இப்படிச் செய்யத்துணி பவர் யாருமில்லையே! தமிழ்க்கல்வியொன்று பகிடிக் கிடனுயிற்று!![10] ''பாதிரிமாருடைய தமிழ்ப்பள்ளிக்கூடங்களிலே படிப்பிக்கிற உபாத் தியாயர்கள் தமிழை நன்றாகக்கற்றுக்கொண்டவர் களல்லர்; அவர்களிற் பெரும்பான்மையோர் சம்பள நிமித்தம் கிறிஸ்து சமயத்திற் புகுந்த வர்கள்; கிறிஸ்து சமயத்திற் புகுந்தமையின் பொருட்டே அவர்கள் உபாத்தியாயருத்தி யோகம் பெற்றவர்கள். அங்கே படிப்பிக்கப்படும் புத்தகங்களிற் பெரும்பாலன சுத்தத் தமிழ் நடையின்றி இலக்கணப் பிழைகளினுல் நிறைந் தவைகளும் சைவதூஷணங்களினுற்பொதிந்தவை களுமாய் உள்ளவைகள். அங்கே படித்தவர்கள் திருத்தமாகிய கல்வியில்லாதவர்களும் ஒரு சமயத் திலும் பற்றில்லாத நிரீச்சுரவாதிகளுமாகின்றார் கள். அவர்கள் பேசுந் தமிழோ அன்னிய பாஷை நடையோடு கலந்த அசுத்தத் தமிழ்[11]''. ''சைவ சமயிகளே!..... உங்கள் சமய குருமாருள்ளே சிலரொழிய, மற்றவர்கள் அந்தியேட்டிப் பட்டோலைதானும், இன்னுஞ் சொல்லின் அந்தி யேட்டியென்னும் பெயர்தானும் பிழையற எழுத அறியார்களே''[12].

இத்தகைய நிலையிலே, சமயப்பணி புரியப் புறப்பட்ட நாவலர் தமிழ்ப்பணி புரிய நேர்ந்தது. ''திராவிடமென்னும் வடமொழி தமிழென்று யிற்று''[13] எனவும் ''இத்தென்னுட்டில் வழங்கு தல் பற்றித் தமிழ்மொழி தென்மொழியெனவும் படும். சமஸ்கிருதம் பொதுவாயினும், ஆதியிலே வடதிசையினின்றும் தென்திசைக்கு வந்தமை யால், வடமொழியெனப்படும்[14]'' எனவும் நாவலர் கூறியிருப்பதைக்கொண்டு சிலர் நாவல ருடைய தமிழுணர்ச்சியைச் சந்தேகிப்பர். இதே நாவலர் ''சமஸ்கிருதமும் தமிழும், சிவபெரு மானுலும் இருடிகளாலும் அருளிச் செய்யப்பட்ட இலக்கண நூல்களே உடைமையாலும், ஆன்றோர் களாலே தழுவப்பட்டமையாலும் தம்முள்ளே சமத்துவமுடையனவேயாம்''[15] என்று கூறி யிருப்பதை நோக்கின் அக்கருத்திற்கு இடமில்லை என்பது தெரியவரும்.

''.....நமது தமிழ்நாடெங்கும் பாடசாலை களைத் தாபித்து, பிள்ளைகளுக்குச் சமயநூல்களை யும், அவைகளுக்கு வேண்டும் கருவிநூல்களையும், 'முனிவரும் மன்னவரும் முன்னுவ பொன்னன் முடியும்' எனவும், 'வறியார் இருமையறியார்' எனவும் அருளிச்செய்தபடி இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக்காரணமாய் உள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகிக நூல் களைக் கற்பித்தலும்.....மிக மேலாகிய புண்ணி யங்களாம்''[16] என ஆசை பற்றி அறையலுற்றார் ஆறுமுகநாவலர். அவ்வாசையினை இன்னல்கள் மத்தியிலும் நிறைவேற்ற முயன்றவர் நாவலர். வண்ணார்பண்ணையும் சிதம்பரமும் நாவலர் பதிப் பித்த, பதிப்பிக்க வேண்டி எழுதியும் திருத்தியும் முடித்த, பதிப்பிக்கும் பொருட்டு எழுதவும் திருத்தவும் தொடங்கிய நூல்களும் அவர்தம் லட்சியக் கனவுகளை நனவாக்கும் முயற்சியிற் குறிப்பிடத்தக்க வெற்றியீட்டியதைப் பறை சாற்றுவன. சமயப்பணியை முக்கிய நோக்காகக் கொண்ட நாவலர் சமய நூல்களை மட்டுமன்றிக் கருவிநூல்களையும் 'லௌகிக' நூல்களையும் கற்பிக்க வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டமை அவர்தம் தமிழ்ப்பணியைக் கோடி காட்டி விடுகின்றது. சிதம்பரத்திலே வித்தியா சாலை நிறுவும் பொருட்டு விடுத்த 'விக்கியா பனம்' ஒன்றிலே (1860), ''பிள்ளைகளுக்குப் பாலபாடங்கள், நிகண்டு, திருவள்ளுவர் முதலிய நீதிநூல்கள், சிவபுராணங்கள், இலக்கணம், கணிதம், தருக்கம், வெளிப்படையாகிய வசன நடையிற் செய்யப்பட்ட சைவசமய நூல்கள், பூகோள நூல், ககோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மை நூல், வாணிக நூல், அரசநீதி, சிற்ப நூல் முதலானவைகளைப் படிப் பிக்க வேண்டும்''[17] என்று முப்பிரிவிலும் அடங்க வேண்டிய நூல்களை வகுத்துரைத்தார். 'தமிழ்ப் புலமை' என்னுங் கட்டுரையில் தமிழ் கற்கப் புகுஞ் சைவசமயிகளுக்கு, கற்க வேண்டியன வற்றைப் படிமுறையில் வரிசைப்படுத்தித்தந்துள் ளார்.[18] பாலபாடங்கள்: இலக்கணச் சுருக்கம், நிகண்டு, நீதிநூல்கள்: அருட்பாக்கள், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம், உபதேசகாண்டம், கோயிற்புராணம், சேதுபுராணம், பதினெராந்திருமுறையிற் பிரபந் தங்கள், குமர குருபரசுவாமிகள் அருளிச்செய்த

பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்கள்: இலக்கண நூல்களும் உரைகளும், பூகோளநூல், கோள நூல், அங்க கணிதம், வீச கணிதம், க்ஷேத்திர கணிதம், தருக்க நூல்கள் என்ற வரிசையிலமைத்துக்கூறுகின்றார். இவ்வாறு கூறுவதோடு நின்றுவிடாமல் இந்நூல்கள் தமிழ் மாணவருக்குக் கிடைக்கக்கூடிய வழிவகைகளையும் நாவலர் செய்ய முற்பட்டார். நூல்களையும் உரைகளையும் திருத்திப் பதிப்பித்தும் தாமாகவே சில வற்றை இயற்றி அச்சிட்டும் தமிழ்க் கல்விக்கு நாவலர் தொண்டாற்றினர்.

''தமிழ்க்குருகுலத்தில் பிரமசாரிகள் படிக்கப் பாடப் புத்தகம் தேடிஞேம். 'நாவலர் பால பாடத்தைவிட நயமான புத்தகம் உண்டா? அதையே மாணவர் படிப்பது சிறந்தது' என்றார் வ. வே. சு. ஐயர்'' எனச் சுத்தானந்த பாரதியார்கள் கூறியுள்ளார். [19] தற்கால விமர்சகர்கள் தமது தந்தையாகக் கொள்ளும் வ. வே. சு. ஐயரின் கூற்று ஈண்டு குறிப்பிடத்தக்கது. நாவலர் முறைவகுத்துப் பாலபாடம் எழுதிக்காட்டியவர். இவரியற்றிய மூன்று பாலபாட நூல்களும் [20] படிமுறை வளர்ச்சியிலே தமிழ்க் கல்வி போதிக்க உதவுவன. சென்னையில் நடைபெற்ற Native Public Opinion என்னும் பத்திரிகையிலிருந்து தெடுத்து 'இலங்காபிமானி' 1872-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் திகதி வெளியிட்ட செய்தியிலுள்ள மேல்வரும் பகுதி நாவலர் பாலபாடங்களைத் தரங்காட்டுவன [21]: ''இச் சென்னையிலுள்ள வித்தியா சங்கத்தார் வெளியிடும் வசன பாடப் புத்தகங்களைக் காட்டிலும் நாவலர் பால பாடங்கள் எவ்வாற்றானும் சிறந்தவையாகும். வித்தியா சங்கத்தார் வெளியிட்ட புத்தகங்களை நாவலரவர்கள் எழுதிய பாலபாடங்களோடு ஒப்பிட நினைத்தமைதானும் தவறெனலாம்..... நாவலர் எழுதிய பாலபாடங்கள் மூலமாக அந்நிய நாட்டிலிருந்து இங்கு வருவோர் இந்நாட்டு மக்களின் பழக்கவழக்க ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் அறிதலாகும்.'' மேலும் பாலபாடங்கள் தமிழ் மொழிப் பயிற்சிக்குச் சிறப்பாகப் பயன்படுவன என்பதைத் தமிழாசிரியர் உணர்வர். ''முதலாம் பாலபாடத்துச் சொற்கூட்டங்களை அவதானித்தால்.....அவை பிற்காலத்தில் நாம் பிழைவிடும் சொற்களின் சரியான உருவங்களாக இருக்கும்'' என்னுங் கூற்றுக் காண்க. [22]

'அன்னிய பாஷைநடையோடு கலந்த அசுத்தத்தமிழை' பரிகாரஞ் செய்ய முற்பட்ட நாவலர் பாலபாடங்களோடு நின்றுவிடவில்லை. மொழி வளத்திற்கேதுவாகிய நிகண்டில் அடங்கிய சொற்களையும் அவைகளின் பொருள்களையும் அறியும் பொருட்டு சூடாமணி நிகண்டுரையைப் பதிப்பித்தார்; இயன்றளவு பிழையில்லாமல் பேசவும் எழுதவும் பழகும் பொருட்டு, யாவரும் புரிந்து கொள்ளும்படி, எளிய உரைநடையிலே இலக்கணச் சுருக்கம் தந்தார்; இலக்கண விளுவிடை ஈந்தார். இவற்றைப் பயின்றவர்கள் தொடர்ந்து தமிழ்மொழியைப் பயில, வழக்கிலிருந்த உரைகளில் மாணவர்களுக்கு விளங்கவேண்டுவன வற்றை மேலும் விளக்கியும், அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய குறிப்புகள் பல கூட்டியும், பகுபத முடிபு சில காட்டியும், சொல்லிலக்கண சூசி சேர்த்தும், இன்றியமையாத அப்பியாசங்களைத் தொகுத்தும் நாவலர் புதிய முறையில் நன்னூலுக்குக் காண்டிகையுரை எழுதினர். தமிழிலே உயர்கல்வி பயில்வோர் கற்பதற்காக நன்னூல் விருத்தியுரை, இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறுவளி, பிரயோகவிவேகவுரை, இரத்தினச் சுருக்கம் முதலியனவற்றைப் பதிப்பித்தார். சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் சென்னையிலுள்ள ஊ. புஷ்பரதச்செட்டியாரது கலாரத்நாகரவச்சுக்கூடத்தில் விபவ வருடம் புரட்டாதி மாதம் (1868) பதிப்பித்து வெளியிட்ட தொல்காப்பியம் சேனவரையருரையைப் பரிசோதித்துத் தந்தவரும் நாவலரவர்களே. ஆரம்பக் கல்வி பயில்வோர் முதலாக உயர்கல்வி பெறுவோரீறுகத் தமிழ்மொழியின் இலக்கணத்தைக் கற்கும் பொருட்டு நாவலர் இலக்கண நூல்களைப் பதிப்பித்தார். நாவலர் எழுதத் தொடங்கிய நூல்களுள் ஐந்து மொழிபற்றியவையே. அகராதி (தமிழ்), அகராதி (சமஸ்கிருதம் தமிழ்), அகராதி (இங்கிலிஷ் தமிழ்), இலக்கண விளுவிடை முதற் புத்தகம், சமஸ்கிருதவியாகரணசாரம் முதலியன அவர் எழுதத்தொடங்கியவைகளுள் அடங்குவன.


தமிழ்மொழியைப் பேணி, பல இலக்கண நூல்களைப் பதிப்பித்த நாவலர் 'எடுத்த விடயத்தை நியாயம் வழுவாமல்' எழுதிப் பழகும் பொருட்டு தருக்கசங்கிரகத்தை யுரையுடன் பதிப்பித்தார். தருக்கபரிபாஷையைப் பதிப்பிக்கும் பொருட்டு அவரெடுத்த முயற்சி முற்றுப்பெறுமுன் இறையடிநீழல் சேர்ந்தார்.

நாவலருக்குத் தமிழ்ப்பணியில் இருந்த ஈடுபாட்டைச் சிறப்பாக வலியுறுத்துவது அவரியற்றிய இலங்கைப் பூமிசாத்திரம்; சமயப்பணி மட்டுமே நோக்காகக் கொண்டவர் புவியியல் பற்றிய நூலை எழுதவேண்டியதில்லை.

நாவலர் பதிப்பித்த, பதிப்பிக்கமுயன்ற நூல்களுட் பாலபாடங்கள், நிகண்டு, இலக்கண நூல்கள், தருக்கநூல், பூகோள நூல் ஒழிந்தவை சமய நூல்கள் என்று கூறுவர். அவர் எந்நூல்களை இலக்கியங்கள் என்று கருதினர் என்பது ஈண்டு கவனிக்கற்பாற்று. 'தமிழ்ப்புலமை' என்னுங் கட்டுரையிலே ''பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், உபதேசகாண்டம், கோயிற்புராணம், காசிகாண்டம், கூர்மபுராணம், சேதுபுராணம், காஞ்சிப்புராணம், திருத்தணிகைப்புராணம், பதினெராந் திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக'' என்று அவர் கூறியுள்ளார். இக்கூற்றினுல் நாவலர் இலக்கியம் பற்றிக் கொண்டிருந்த கருத்து ஓரளவு புலனாகும். நாவலர் பதிப்பித்த நூல்களிற் பல அவர் இலக்கிய வரிசையிற் சுட்டிய நூல்வகைக்குள் அடங்குவனவாக இருக்கக் காணலாம்.

அவ்வகைக்குள் அடங்காதனவாகக் கொள்ளக்கூடியனவற்றையும் நாவலர் பதிப்பித்தார்: பதிப்பிக்க முயன்றார் என்று கூறவும் இடமுண்டு. ''பிரமதேவருடைய திருவவதாரமாய் விளங்கிய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்'' [23] என்று திருக்குறளாசிரியரை நாவலர் கருதிய போதும் அவருக்குக் குருபூசை செய்வது 'ஆவசியகம்'' என்று கூறும்போது ''தமிழ் வழங்கு நிலமெங்கும் நல்லறிவுச்சுடர் கொளுத்தியருளிய'' [24] தன்மையை அடையாகக் கூறுவதைக் காணலாம். திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி வித்துவப் போட்டியில் எழுந்தது; சமயநோக்கிலன்று. இத்தகைய அந்தாதிக்கு நாவலரவர்கள் உரையெழுதித் தமது வித்துவத்தன்மையைக் காட்டியுள்ளார். நைடதம் 'புலவர்க்கௌடதம்' என்று சிறப்பிக்கப்படுவது. நைடதப் பாட்டொன்றினையிட்டுக் களத்தூர் வேதகிரி முதலியாருக்கும் நல்லூர் சரவணமுத்துப்புலவருக்குமிடையே உண்டுபட்ட தருக்கம் 'உதயதாரகை'யில் நீண்டு வளர்ந்தது. [25] நாவலரவர்களும் தமதாசிரியர் சரவணமுத்துப் புலவருடன் சேர்ந்து வேதகிரி முதலியாருடன் வாதங்கள் சில செய்தமை உதயதாரகையால் வெளியாகின்றது. [26] ''சைவசித்தாந்த தீபகராய், செந்தமிழ்ப் பரிபாலனராய், சிவபுண்ணியப் பேறு உடையராய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலராம் நம்பெருந்தகையார் ஓருரையியற்றியுள்ளார்'' நைடதத்திற்கென, நைடதமூலத்திற்கு விருத்தியுரை 'புதுக்கியும் திருத்தியும் விளக்கியுஞ் சேர்த்துக் கொடுத்த' மேலைப்புலோலி வித்துவான் நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் தாம் நைடதத்திற்கெழுதிய 'நாத்தியுரை' யிற் கூறுகின்றார். [27] ''திருச்சிற்றம்பலக்கோவையாரின் முதற்பதிப்பில் 'இனி வெளிவரும் நூல்கள்' என்ற விளம்பரத்தில் சிந்தாமணியின் பெயர்காணப்படுகிறது'' என்று புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் கூறியதாக 'என் சரித்திரம்' எழுதிய உ. வே. சாமிநாதையர் கூறுகிறார். [28] ''வேளாளர் பெருமையையும்வண்மையையும்ஏரெழுபதுதிருக்கைவழக்கம் என்னும் இருசிறுகாப்பியங்களாலும் விளக்கினவர்'' [29] கம்பர். இவ்விரு நூல்களையும் நாவலர் பதிப்பித்ததாகக் கூறுவர்: இவை சமயவுணர்வால் தூண்டப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டன என்று கூறல் பொருந்துவதாகத் தெரியவில்லை. ''தற்பாதுகாப்பிற்காக - அந்நியர் ஊடுருவலைச் சமாளிப்பதற்காக - தமிழ்ச் சமுதாயமும் தனது அன்றைய நிலையை அப்படியே கட்டிக்காக்க விரும்பியது'' [30] என்ற கூற்றே ஈண்டு பொருத்தமானது. இரகுவமிசம் அரிதுணர்த்தற் பாலனவாகிய கவிகள் பலவற்றையுடையது. ஈழத்தை இகழ்ந்தவருக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்த உதவுவது. எனவே, நாவலர் இதனைப் பதிப்பிக்க முயன்றார்: அம்முயற்சி அவர் மருமகனுலேயே ஈடேறியது. எனவே நாவலர் தமிழ் வளர்க்கவும் வந்தவர் என்பதைத் திருக்குறள், திருச்செந்தினிரோட்டகயமக வந்தாதியுரை, நைடதவுரை, இரகுவமிசம் முதலியன வலியுறுத்துகின்றன. நாவலரவர்கள் இலக்கிய நோக்கோடு பதிப்பித்த, பதிப்பிக்க முயன்ற நூல்களுக்கு ந. ச. பொன்னம்பலபிள்ளை எவ்வகையிற் காரணமாயிருந்தனர் என்பது ஆய்வுக்குரியதாம்.

பண்டைய நூல்களைப் பேணிப் பாதுகாக்க விழைந்த நாவலர் அந்நூல்கள் மக்களிடையே பரவவேண்டும் எனவும் விரும்பினர். மக்கள் விரும்பத்தக்க முறையிலே அவற்றை அறிமுகஞ் செய்தாலன்றி அவர்களிடையே அவை செல்வாக்குப்பெறமாட்டாவென்பதை உணர்ந்த நாவலருக்குக் கிறித்தவர் சூழல் வழிகாட்டிற்று. கிறித்தவர் பிரசாரத்திற்குச் செய்யுளைப் பயன்படுத்தாது வசனத்தைப் பயன்படுத்தியதையும் வசனரூபமானவை மக்களிடையே ஏற்றுக்கொள்ளப்படும் பண்புடையதாக இருந்ததையும் கண்ட நாவலர் தாமும் இலக்கியங்களை வசனநூல்கள் மூலம் அறிமுகஞ் செய்தார். பெரியபுராணவசனம் பரிதாபி வருடத்திலேயே (1852) வெளிவந்து விட்டது. கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகியனவற்றையும் நாவலர் வசனரூபமாக்கத் தொடங்கினர்: ஆனால், அவற்றை அவர் மாணாக்கரே முடித்தளித்தனர். பொதுமக்களுக்



யாழ்ப்பாணக் கச்சேரி இருந்த பழைய கட்டடம். இங்கேதான் நாவலர் வந்து, அச்சுக்கூடம் நிறுவுவதற்கு அரசாங்க அதிபரான டைக் (Dyke) துரையிடம் அனுமதி பெற்றார்.

—உபயம்: க. சதாசிவம்.

குப் புராண இலக்கியங்களை நன்முறையில் வசன மாக்கித் தர முன்வந்த நாவலர் பண்டித வர்க்க இலக்கியத்தின் குறிப்புப் பொருளை விளக்க முயன் றார். நாவலர் எழுதிப் பதிப்பிக்கத் தொடங்கிய பெரியபுராண சூசனம் பெரியபுராணத்தின் உட் கிடக்கையைத் தெளிவாக உணர்த்துவதை நோக்கமாகவுடையது. சமயத்தளத்திலே நின்று நாவலர் இலக்கியப்பணி புரிந்தமைக்குப் பெரிய புராண சூசனம் சான்று பகருகின்றது.

---

1 ஆறுமுகநாவலர் சரித்திரம்: த. கைலாசபிள்ளை; சென்னை வித்தியாநுபாலனயந்திரசாலை; நான்காம் பதிப்பு (1955) பக்கம் 43 - 44.

2 மரகதம் (இளங்கீரனுற் கொழும்பில் வெளியிடப்பட்ட மாத சஞ்சிகை), தை 1962: 'உண்மை நாவலர்'

3 செந்தமிழ் (மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு) தொகுதி 12 பகுதி 10; ஆவணி, 1914: ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை: 'ஈழமண்டலப் புலவர்' (பக. 318)

4 ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம்: வே. கனகரத்தின உபாத்தியாயர்; இரண்டாம் பதிப்பு (1968) யாழ்ப்பாணம் நாவலர் நூற்றாண்டு விழாச் சபையினர் வெளியீடு; சுன்னகம்: திருமகள் அழுத்தகம்: பக் 94-95

5 பாவலர் சரித்திரதீபகம்: அ. சதாசிவம்பிள்ளை; மானிப்பாய் ஸ்ரேங் அஸ்பரி இயந்திரசாலை (1886) பக். 34

6 நாவலர்-பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வெளியீடு. யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை (1966) பக். 6

7 நன்னூல், சூ. 10.

8 ஆறுமுகநாவலர் சரித்திரம்: த. கைலாசபிள்ளை, பக். 43

9 ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு — முதற்பாகம் பக். 31 (மூன்றும் பதிப்பு, 1954)

10 ,, ,, முதற்பாகம் பக். 26 (மூன்றும் பதிப்பு, 1954)

11 ,, ,, முதற்பாகம் பக். 44 (மூன்றும் பதிப்பு, 1954)

12 ,, ,, முதற்பாகம் பக். 65 (மூன்றும் பதிப்பு, 1954)

13 நான்காம் பாலபாடம்: 'தமிழ்'

14 ,, ,, 'தமிழ்'

15 ,, ,, 'தமிழ்'

16 ஆறுமுகநாவலர் சரித்திரம்: த. கைலாசபிள்ளை, பக். 44

17 ,, ,, ,, பக். 47

18 ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு-முதற்பாகம், பக் 28-32

19 நாவலர் பெருமான்: சுத்தானந்த பாரதியார்; புதுச்சேரி புதுயுக நிலைய வெளியீடு; புதுச்சேரி: ஸ்ரீ அரவிந்தாஸ்ரம அச்சுக்கூடம் (1948) பக். 2

20 நாவலரியற்றிய மூன்றும் பாலபாடம் நான்காம் பாலபாடமாக வழங்குகின்றது; சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகரான ச. பொன்னம்பலபிள்ளை எழுதிய பாலபாடம் மூன்றும் பாலபாடமாக வழங்குகின்றது

21 நாவலர் நினைவுமலர் (சா. பொ. இரத்தினம் தொகுத்தது) சுன்னகம், திருமகள் அச்சுயந்திரசாலை (1938) பக். 94

22 தினகரன் தமிழ்விழா சிறப்பு மலர் (1960): 'ஆறுமுக நாவலர் வசன நடை': கனக. செந்திநாதன், பக். 116

23 நான்காம் பாலபாடம்: 'தமிழ்'

24 இரண்டாம் சைவவிஞ்விடை, குருசங்கமசேவையியல், 361

25 பாவலர் சரித்திர தீபம்: அ. சதாசிவம்பிள்ளை; பக். 132

26 யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்: சிவகாசி அருணாசலக் கவிராயர்: இரண்டாம் பதிப்பு (1934); பருத்தித்துறை: கலாநிதியந்திரசாலை: முகவுரை பக்8

27 நைடதமூலமும் விருத்தியுரையும்: சென்னை: வித்தியாரத்நாகர அச்சுக்கூடம் (1930)

28 என் சரித்திரம்; சென்னை: கபீர் அச்சுக்கூடம் (1950) பக். 801

29 தமிழ்ப்புலவர் சரித்திரம்: அ. குமாரசுவாமிப்புலவர்; கொக்குவில்: சோதிடப்பிரகாசயந்திரசாலை (1916), பக். 61

30 மரகதம் (தை, 1962) பதிப்பாசிரியர் - நாவலர்

க. கைலாசபதி

நாவலர் புகழை நானே சொல்லவல்லேன்

''சைவ உதயபானு''ப் பத்திராதிபர்,
திரு. க. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள்

ஆசிரிய விருத்தம்

1. சிவம்பழுத்த செஞ்சுவையே தேனே பாகே தெவிட்டாத
தெள்ளமிர்தத் திரளே மேலாந்
தவம்பழுத்த தனிவடிவே திருவெண் ணீறு தயங்குதிரு
மேனியுடைக் குருவே மிக்க
வவம்பழுத்த புறச்சமய திமிர மோட்டி யத்துவித
சுத்தசித்தாந் தத்தி னுண்மை
நவம்பழுத்த பொருள்காட்டிச் சைவ நாட்டு நாவலனே
நீனைக்காணு நாளெந் நாளே.

2. தேனூறும் வாசகமோ ராறு நூறுந் திருக்கோவை
யென்னுமகப் பொருள்சேர் செய்யு
ணூறு முரைத்ததிரு வாத வூர னுவலர்கோன்
காழியர்கோ னல்வா கீசன்
போனீறு மைந்தெழுத்துஞ் சைவ நூலும் புவியினிடை
நனிவிளக்கும் புனிதா மேலை
வானேறும் பொழினல்லை சேரு நன்னு வலப்பெருமா
னினைக்க ணு நாளெந் நாளே.

கட்டளைக் கலித்துறை

3. முன்னுளிற் கம்பன் கவிகள மேக முதற்புலவர்
தந்நா வலிமையைக் காட்டின ரேயன்றிச் சைவநெறி
நற்தா வலப்பெரு ம னுனைப் போனனி நாட்டினரோ
வித்தா வினும்புல வோர்திரி வார்பல ரென்பயனே.

4. தேனே கனியோ வெனவே சுவைக்குஞ் செழுந்தமிழிற்
ருனே தனக்கிணை யாகி யுதித்துயர் சற்குருவாய்
வானேர் புகழ்நல்லை வந்தரு ணுவலன் வான்புகழை
நானே சொலவலன் சேடனுங் கூறிட நாணுவனே.

செஞ்சொற்கொண்டல்
வித்துவான் சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.,



"நல்லிலகு நாறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே? கருதியெங்கே?....."

சி. வை. தாமோதரனார்.

உரைநடைத் தொன்மை:

மொழியின் இரு கூறுகளாக உள்ளவை உரைநடை, கவிதை என்ற இரண்டும் ஆம். இவற்றுட் கவிதை உரைநடையினும் சிறப்புடையது என்று கூறுவர். கவிதை படிப்போனைத் தன்வயப்படுத்தும் பெற்றி உடையது. உரைநடையும் அத்திறன் உடையது என்றாலும், கவிதைக் கலை கற்பனை, உணர்ச்சி, ஒலிநயம் முதலிய அனைத்தும் உடையதாக, இயற்றுவோன் உள்ளத்து எழும் உணர்வினைப் படிப்போன் மனத்துப் பதிப்பதாக உள்ளது.[1] உரைநடையில் விளங்கும் அநுபவம் கவிதையில் மேம்பட்டுத் தோன்றுவதாகும். உரைக்கும் போக்கில் கவிதையே சங்ககாலத்தே சிறப்புற்றிருந்தது என்று கூறலாம். ஆசிரியப்பாவும் அதன் இயல்பையே உடைய நூற்பா ஆகிய சூத்திரமும் பெருவழக்கில் உரைநடை போல இருந்த காலம் சங்ககாலம் என்று கூறலாம். உரைநடை இலக்கியங்கள் பின்னே தோன்றுவதற்கு இவையே மூலமாக இருந்தன என்று கூறுவதிலும் தவறில்லை.

"மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து
கொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல்
வேண்டும்" [2]

"குறுமையும் நெடுமையும் அளவிற்
கோடலின்
தொடர்மொழி யெல்லாம்
நெட்டெழுத்தியல" [3]

"வினையி னீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்" [4]

என்றெல்லாம் வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் பலவற்றைக் கூர்ந்து நோக்கினால், உரைநடையின் சாயல் அங்கெல்லாம் ஒளிவிடக் காணலாம்.

1. "Words have not only meanings. They have also what are called Associations; and poetry is fuller of meaning than Prose because it uses these associations far more than Prose does" — *L. S. Harris*, "The Nature of English Poetry" (1933) P. 20.

2. தொல்காப்பியம். நூற்பா *1610.*
3. தொல்காப்பியம். நூற்பா *50,*
4. தொல்காப்பியம். நூற்பா *1594.*

உரையாசிரியர் ஒப்பம்:

பழந்தமிழ் உரையாசிரியர்கள் கவிதை கட்குப் பொருள் விரித்து எழுதினர்கள். தொல் காப்பியரே உரைநடைத் தோற்றத்திற்கு இலக் கணம் வகுத்துள்ளார். நான்கு வகையில் அவர் உரைநடையைப் பாகுபடுத்தியுள்ளார். கற் றோர்க்கே பயன்பெறுமாறு எழுதப்பட்ட உரை யாசிரியர்களது உரைப்பகுதிகள் தமிழகத்து உரைநடையின் தொன்மையையும் நன்மையை யும், அழகையும், ஆற்றலையும் விளங்கிக் கொள் ளுதற்கு விழுத்துணை புரிகின்றன. இறையனர் களவியல் உரை, இளம்பூரணர், கல்லாடர் உரை கள், சேனவரையர், பேராசிரியர் உரைகள், தெய்வச்சிலையார், நச்சினர்க்கினியர் உரைகள் அடியார்க்கு நல்லார், குணவீர பண்டிதர் உரை கள், பரிமேலழகர் முதலிய பதின்மர் உரைகள் ஆகிய அனைத்தும் செப்பமுற அமைந்த சீரிய உரை நூல்கட்குத் தக்க எடுத்துக் காட்டுக்கள். திருமாலைப் பரவும் நாலாயிரத் திவ்விய பிரபந் தத்திற்கு எழுதப்பெற்றுள்ள நப்பின்னை, நஞ்சீ யர், பெரியவாச்சான் பிள்ளை ஆகியோரது வட மொழியும் தமிழும் கலந்த உரைப்பகுதிகள் தனிவகையாகக் கொண்டு மதிக்கத்தக்கன. இவற்றின் ஊடே அரிய தமிழ்ச் சொற்களும், இனிய நயமும் விளங்குவதால் இவற்றைக் கற் போர் பெரும்பயன் பெறுதல் கண்கூடு. இந்த உரைநடை நூற்றாண்டு தோறும் வளர்ந்து தமிழை வளப்படுத்தி வரும் பாங்கில் பத்தொன் பதாம் நூற்றாண்டில் ஈழத்துப் பெரும்புலவர் ஆறுமுக நாவலர் அவர்கள் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றார். உரையாசிரியர் காலத்தே திறம்பெறத் தோன்றிய தமிழ் உரைநடை நாவ லர் காலத்தே, அவரது சீரிய தொண்டு நலத் தால் ஆக்கமும் ஊக்கமும் பெற்றது.

நாவலர் நற்பணி:

கி. பி. 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டேனிசுக்காரராகிய சீகன் பால்கு ஐயர் (Ziegenbalg) தமிழகம் போந்து தமிழ் எழுத்துக்களை அச்சுக் கருவிகளின் பொருத்தும் முயற்சியில் ஈடு பட்டார்; அவர் கி. பி. 1716ம் ஆண்டில் தமிழ் இலத்தீன் இலக்கண ஒப்பியல் நூல் (Comparative Study of Tamil and Latin Grammar) எழுதினர் இத்தாலியப் பெரியார் தத்துவ போதக சுவாமி கள், புதுவை ஆனந்தரங்கம்பிள்ளை, வீரமாமுனி வர் (18ம் நூற்றாண்டு) சிவஞான முனிவர். பேரூர் சாந்தலிங்க முனிவர் ஆகிய பலர் தமிழ் உரைநடையிற் பெரும் பங்கு பற்றிப் பணியாற் றும் நேரத்தே தமிழ்த் தாய் செய்த நல்லூழால் தோன்றினர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர். அவரால் தமிழ்மொழி பெற்ற மிகப் பெரிய வளர்ச்சி உரைநடை வளர்ச்சி என்று கூறுவது பெரிதும் உண்மையாகும்.

'தமிழ் உரை நடைத் தந்தை' நாவலர்:

'வசன நடை கைவந்த வல்லாளராக' நாவ லர் விளங்கினர். தமிழ்மொழி கவிதைக் கலை உயர்வுடன் உரைநடைச் சிறப்பும் ஓங்கித் திகழ் தல் வேண்டும் என்பது இச் சான்றோரின் கருத்து ஆகும். தமிழ் உரை நடையின் தந்தை என்று வல்லோர் இவரைப் போற்றலாயினர். டிரைடன் (Dryden) போன்று இவர் தமிழ் உரைநடைக்கு அமைந்தார் என்று பாராட்டுவர். இவர் எழு திய நடை செந்தமிழ் நடையாகும். எளிமையும் இனிமையும் தவழ இவர் எழுதினர்; உரைநடை யிலும் செம்மை தோன்ற, உணர்ச்சிகளை வெளிப்படுத்த இயலும் என்று காட்டினர். ஆங்கில மொழியிற் சிறப்புற்று விளங்கும் குறி யீட்டு இலக்கணத்தை, நாவலர் தமிழுக்குக் கொண்டு வந்து பொருத்தினர்; இதனால், உரை நடை எழுதுவோன் உணர்ச்சியைப்பயில்வோனும் இனிது பெறமுடிந்தது. கிறித்தவர் வேதமான விவிலியநூலைத் தமிழில் மொழி பெயர்த்த இப் பெருந்தகையாளர், தமிழ் எண்களையே அதிற் கையாண்டு தம்முடைய தமிழ்ப்பற்றை உரிய இடத்து ஓங்கச் செய்துள்ளார்.

செந்தமிழ்க் காதல்:

இலக்கண வழு இல்லாமல் எழுத வேண்டும் என்ற உணர்ச்சியை முதற்கண் பின்பற்றிக் காட் டியவர் நாவலரேயாவர். எளிய இனிய சொற் களைத் தேர்ந்து, தாம் கூற விழையும் கருத்துக்களை இனிது பாகுபாடு செய்து கொண்டு, உணர்ச்சி ததும்ப எடுத்தெழுதும் திறம் இவர்க்கு இயல் பாயிற்று. தாம் எழுதுவது புராண வசனமாயி னும், புதிய படைப்பாயினும், பாட்டின் உரை யாயினும், பாடநூலாயினும் எங்கும் ஒரே கொள்கை உடையவராய் நாவலர் வாழ்ந்தனர். சிவநெறியின் மாட்டு இவ்வருட் புலவர் வைத் திருந்த அன்பிற் சிறிதும் குறைந்ததன்று இவர் செந்தமிழின்மாட்டுக் கொண்டிருந்த காதல்.

புதிய போக்கு:

விஞ விடை வடிவில் (Catechism) தமிழ் இலக்கணத்தையும், சைவசமய உண்மைகளையும் இவர் படைத்தார். மாணாக்கர்கள் எளிதில்

மொழியின் நுட்பங்களையும், சமயத்தின் சால்பு களையும் விளங்கிக் கொள்வதற்கு இம்முறை பெரி தும் துணைபுரியலாயிற்று. இவற்றை மனப்பாடம் செய்து பழகுதற்கு இம்முறை பெரிய வாய்ப் பாயிற்று. சைவசமய வினா விடையும், இலக்கண வினா விடையும் இவ்வாறு பேரிடம் பெற்றுப் பிறங்குவன வாயின. தேவை எனத் தாம் கருது மிடங்களில், இவர் வடசொற்களையும் விரவியெ ழுதினர். ஆயினும் இவ்வாட்சி அளவிற் குறையே என்பது உற்று நோக்கி உணரத் தக் கதாகும்.

பதிப்புப் பெரும்பணி:

ஏட்டுச் சுவடிகளாக இருந்த தமிழ் நூல் களைக் கி. பி. 19ம் நூற்றாண்டில் முதன்முதலாக அச்சிற் பதிப்பித்த பதிப்பாசிரியர்கள் பலராவர். ஆனால் எந்தெந்த நூல்கள் யார் யாரால் முதன் முதல் அச்சிடப் பெற்றன என்றறிவதற்கு முறை யான சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை : ஆறு முகநாவலர், தாண்டவராயமுதலியார், இராமச் சந்திர கவிராயர், முகவை இராமானுச கவிராயர் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர், திருத் தணிகை விசாகப் பெருமாளையர், களத்தூர் வேதகிரி முதலியார், மயிலை சண்முகம் பிள்ளை, தில்லையம்பூர் சந்திரசேகரக் கவிராச பண்டிதர், வீராசாமிச் செட்டியார், சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர், உ. வே. சாமிநாதையர் என் பவர்கள் அப் பதிப்பாசிரியர்கள் என்று கூறலாம். வித்தியானுபாலன யந்திரசாலை என்ற அச்சகம் சென்னையில், நாவலர் நற்றமிழ்ப் பனுவல்களை நாளும் வெளியிடுவற்கு நற்றுணை புரிந்தது.

கட்டுரையாக்கம்:

தமிழ் மக்களது உரைநடை வளமில்லாமல் இருந்த தென்றும், அவர்கள் அல்லற்பட்டவாறு இங்ஙனம் என்றும் உவின்சிலோ தம் தமிழ் ஆங் கில அகர வரிசையில் (1862) எழுதுகின்ற பகுதி, நாவலர்க்கு முந்திய உரைநடை நிலையை நன்கு விளக்குவதாகும்: "தமிழனுடைய உரைநடை இன்னும் உருவடையாத நிலையில் தான் உள்ளது; அதனைச் செவ்வையாக ஆக்குவதற்குப் புலவோர் செய்யும் முயற்சி நற்பலன் நல்கும். பாக்களை விரைந்து பாடும் ஆற்றலுள்ள பல தமிழ் நாட்ட வர்கள் பிழையின்றி உரைநடை யெழுதும் திற னின்றி உள்ளனர்" 5 இந்த நிலை நாவலரால் மாற்றப் பெற்றது என்பது உண்மை. பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கந்தபுராண வசனம், பாலபாடம், சைவ வினா விடை, இலங்கைப் பூமிசாத்திரம், சிதம்பர மான்மியவசனம் முதலிய பல நூல்களை நாவலர் திறம்பெற எழுதி மேலையோர் கண்ட குறையைக் களைந்தார். தமிழன் கவிதை பாடுவான்; உரை நடையும் வரைவான் என்று உலகுணர்ந்து பாராட்டிடச் செய்தார். 'உதயதாரகை' 'இலங்கை நேசன்' என்ற யாழ்ப்பாணத்து இதழ் களில் இவ்வருட் புலவர் எழுதிய கட்டுரைகள் நாவலரது 6 நடைச் சிறப்பினை அனைவரும் கண்டு உணரும்படி செய்தன. 6A

கல்விச் சிந்தனைகள்:

பழமையும் பெருமையும் உடைய திருவா வடுதுறை யாதீனம் நாவலரது பேச்சுத் திறனை யும், அதனால் அருந்தமிழ் மொழி பெற்றுவரும் பெரும்பலனையும் கண்டு வியந்து 'நாவலர்' என்றபட்டத்தை அவர்க்கு நல்கி அரும்புகழ் கொண்டது. ஆதலின் புதிய தமிழின் இருகூறுகளாகிய புத்தகத்துறை, மேடைத்துறை ஆகிய இருபெருந்துறைகளிலும் ஈடும்எடுப்புமற்ற பணிபல செய்து உயர்ந்தார்நாவலர்.மேலைநாட்டு மொழியினிடத்துப் பெருவிருப்பம் கொண்டு மக்கள் ஓடிய காலத்தே தமிழ்ப்பாடசாலைகளைச் சிதம் பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் நாவலர் நிறுவியது குறிப்பிடத்தக்க மற்றொரு மொழிப் பணியாகும். இளஞ்சிறார் உள்ளங்களிலேயேதமிழ் மொழியின் எளிமைப்பண்பும் இனிமை பண்பும் பதியுமானால், எதிர்கால மன்பதையில், மொழி காக்கப் பெறும் என்பது நாவலர் கொண்டிருந்த நன்னினைவு என்று கூறலாம். கல்வி பற்றியும் தாய்மொழி பற்றியும் இவ்வருட் புலவர் கொண் டிருந்த கருத்துக்கள் மிக விழுமியன. அவை பற்பல ஆண்டுகள் சிந்தித்துச் சிந்தித்துக் கண்ட ஆய்வு முடிவுகளாகவே தோற்றுகின்றன. அவற்றை இக்காலக்கல்வியாளர் கருத்திற் கொண்டு திட்டம் வகுத்திடுவரேல் பெரும்பயன் விளையும் என்பது உறுதி. 6B

நாடக நற்பணி

உரைநடை நூல்களை யன்றி நாடக நூல் யாப்பிலும் நாவலர்க்குப் பெரிதும் ஈடுபாடு

5. "Its prose style is yet in a forming state, and will well repay the labours of accurate Scholars in moulding it properly; many natives, who write poetry readily, cannot write a page of Correct prose" — Winslow's preface to the Tamil English Dictionary (1862)

6A. சுணைசையர் நினைவுமலர் — ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மலர் (1960) — "ஈழம் வளர்த்த உரைநடை" —திரு. F. X. C. நடராசா— பக். 70.

6B. Vide "The Educational Thought of Navalar" — By. J. Thananjayarajasingam's recent articles in "Hindu Organ" weekly of Jaffna.

உண்டு. இவரது தந்தையார் ப. கந்தப் பிள்ளை (1766 - 1842) கூழங்கைத் தம்பிரானிடந்துத் தமிழ்கற்ற பெரும்புலவர். இருபத்தொரு நாடக நூல்களை இயற்றியவர் என்பர். இவர் தொடங்கி முடிக்காமல் விட்ட இரத்தின வல்லி விலாசம் என்ற நாடகத்தை நாவலரே பாடி முடித்தனர். நாடகந் தமிழும் வளர்தல் வேண்டும் என்ற நல்லுள்ளம் கொண்டவர் நாவலர் என்பதற்கு இதனினும் வேறு சான்று தேவையில்லை என்று கூறலாம்.

தமிழ் இலக்கிய இலக்கணப் பணிகள்:

திருவள்ளுவர் பரிமேலழகர் உரை, வில்லி புத்தூரர் பாரதம், திருக்கோவையார் உரை, தொல்காப்பியம், சேனவரையம், இராமாயணம் பாலகாண்டம், நன்னூற் காண்டிகை, நன்னூல் விருத்தி, சூடாமணி நிகண்டுரை, இலக்கணக் கொத்துரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறுவளி, பிரயோக விவேக உரை, இலக்கணச் சுருக்கம், தருக்க சங்கிரகம், திருமுருகாற்றுப்படை உரை, மருதூரந்தாதி உரை, அபிராமி அந்தாதி உரை, திரிகடுக உரை, சிதம்பர மும்மணிக் கோவை, நால்வர் நான்மணி மாலை, ஏரெழுபது, நீதிநெறிவிளக்கம், ஆத்தி சூடி கொன்றை வேந்தன் உரை, நல்வழி உரை, நன்னெறி உரை, வாக்குண்டாம் உரை. மறைசை யந்தாதி உரை. அருணகிரி அந்தாதி உரை. திருக் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி. திருச்செந்தூர் அகவல். முதலிய பனுவல்கள் நாவலரது பெரும் பங்கு தமிழ்மொழி இலக்கண இலக்கிய வரலாற் றில் உண்டென்பதற்குத் தக்க சான்று உரைப் பனவாக உள்ளன, இவற்றிற் பல நூல்கள் தோன்றியிராவிட்டால். தமிழ் உலகின் புதிய தலைமுறையினர் இவற்றைப் பற்றி அறிந்து கொள்ளவே வாய்ப்பில்லாது போயிருக்கும் என்பது உண்மை,

நடைச் சிறப்பியல்புகள்:

நாவலரது நடை குறித்து முன்னும் கூறப் பட்டது, அவரது நடை ஆற்றொழுக்கானது; எளியது; இனியது; செந்தமிழால் ஆகியது; இலக் கணப் பிழையற்றது, வழூஉச் சொற்றொடர்பு நீத்தது; வரம்பு கடவாதது, இனிய உவமைகள், பழமொழி முதலியவும் இவரது உரைநடை நூல் களில் விரவியிருக்கும். அவை எடுத்துக் கொண்ட பொருளை இனிது விளக்கவும். செம் மைப்படுத்தவும். சிந்தையிற் பதிக்கவும் பெரிதும் பயன்படுமாறு சேர்க்கப் பட்டிருக்கும். தக்க மேற் கோள்கள் இல்லாது இவரது உரைநடை செல்லுவதில்லை. அம்மேற் கோள்களை இடம் விளங்கா மேற்கோள்களாகச் செய்து. படிப் போரைக் கருத்துக் குழப்பத்திற்கு ஆட்படுத்தி விடாமல், எந்த நூலில் எந்தப் பகுதி என்று அவ்விடத்தேயே காட்டி மேலே செல்லுவது நாவலர் நல்லியல்பாகும். ஓசை நயம், செல்லாட்சி, வசனப் பொருளை வலியுறுத்தல், வசனத்துள் வரும் தொடர்பு முறைகள், சொற்புணர்ச்சிகளைப் பின்பற்றுதல் ஆகிய சிறப்புக்களை நாவலர் நடை உடையது என்பதை ஈழத்துப் புலவர் பலரும் எடுத்துக் காட்டியுள்ளனர்.[7] ஆங்கிலச் சொற்களை அவ்வவ் வொலிப்பு முறை யிற் சிறிது வேறுபடுத்தி இவர் தம் உரைநடைப் பருதியிற் சேர்த்தலும் உண்டு. கவர்னர், கம் மிஷனர், கவர்ன்மெண்டு ஏசண்டு, சுப்பிரீங் கோட்டு யூரிமார், டிஸ்திறிக் கோட்டுப் பிறக்கி ருசி, கிறிமினல் வழக்கு என்பவை சில எடுத்துக் காட்டுகள். வடசொற்களை, வடவெழுத் தொரீஇ எடுத்தாளுகின்ற இயல்புடைய இவர் இவ்வாறு ஆங்கிலச் சொற்களையும் பெரும் பாலான அம்மொழி ஒலிகளை நீக்கிவிட்டுத் தமிழுக் கேற்றபடி மாற்றிச் சேர்த்தெழுதும் இயல்பை இச்சொற்கள் காட்டுவனவாம். தனித் தமிழில்தான் எழுத வேண்டும் என்று கூறுவோர் இருதிறத்தினராவர். ஒருசாரார் தமிழொலிக் கேற்றபடி ஒலிமாற்றிக் கையாளலாம் பிற மொழிச் சொற்களை என்பர்; தமிழில் மொழி டெயர்த்துப் படைத்தே ஆளல் வேண்டும் என்பர் பிறிதொரு சாரார். முன்னவர் பக்கம் சேர்ந் திடும் கருத்தே நாவலருடையது என்பதற்கு அவரது சொல் ஆட்சி நமக்குச் சான்று நல்குகின்றது.

நாவலரது சொற்றொடர்கள் பெரும்பாலும் சிறியனவே, ஆனால் திரு. வி. க. அவர்களுடைய தைப் போன்று பெரிதும் குறைந்தன வல்ல. புராண வசனங்களிலே வேண்டுமாயின், நாவலரது சொற்றொடர்கள் நீண்டிருக்கக் கூடும். பொது உரைநடை, நூல்கள், கட்டுரைகளில் அவர் கையாளும் சொற்றொடர்கள் குறைவான சொற்களைக் கொண்டனவாகவே இருக்கும்; ஒரு நூலாசிரியரது சரித்திரச் சுருக்கத்தினை எழுதும்போது. சொற்றொடர்கள் புராண வசனங்களில் உள்ள சொற்றொடர்களைப் போன்று நீளம் உடையனவாகவே இருக்கும்.

இரண்டு இடங்கள்:

"இந்நூலாசிரியராகிய சுவாமிநாத தேசிகர் சற்றேறக் குறைய நூற்றெண்பது நான்கு

7. Ibid. — பக்கம். 72 — 76.

வருஷத்திற்குமுன் பாண்டி வளநாட்டிலே. பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே திருவவதாரஞ் செய்து, இளமைப் பருவத்தே திருக்கைலாச பரம்பரையில் விளங்காநின்ற திருவாவடுதுறையாதீனத்தைச் சார்ந்து, அக்காலத்தில் அவ்வாதீனத்தில் எழுந்தருளியிருந்த ஞான தேசிகரிடத்தே சமய தீக்ஷையும் விசேஷ தீக்ஷையும் பெற்று, சிவாசிரமத்திற்குரிய துறவறத்தை அடைந்து, அவ்வறத்திற்கு விதித்த நூல்களை ஐயந்திரிபின்றி ஓதியுணர்ந்து, அவ்வாறொழுகித் தவத்தான் மனந்தூயராகி, தம்முடைய ஞான தேசிகரது அருமைத் திருமேனியை விட்டு நீங்காது, அத்தேசிகரது அருட்பணிவிடையை அன்போடு செய்து கொண்டு அணுக்கத் தொண்டராய் அமர்ந்திருந்தனர்.''[8]

''அன்னதானம் முதலிய தானங்களைச் சற்பாத்திரத்திலே செய்வது புண்ணியம்; அசற்பாத்திரத்திலே செய்வது பாவம். சற்பாத்திரங்களினுள்ளும் கருமயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது ஒரு பிறப்பளவு நிற்கும்; தபோயாகஞ் செய்வோர்க்கு கொடுத்தது ஒரு நூறு பிறப்பளவு நிற்கும்.''[9]

வடசொல்லாட்சி -

சங்ககாலத்தில் நூற்றுக்கு இரண்டு, பதினெண்கீழ்க் கணக்கில் நூற்றுக்கு நான்கு அல்லது ஐந்து, ஆழ்வார் நாயன்மார் காலத்தில் நூற்றுக்குப் பத்து அல்லது பதினைந்து, மணிப்பிரவாளம் காலத்தில் அளவுக்கு மீறுதல் ஆகிய நிலைகளில் தமிழிற் கலந்துள்ள வடசொற்களைப் பற்றி ஆய்ந்து முடிவுகாண்பர் பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார்.[10] வடமொழி கற்ற தமிழறிஞர் தமிழ் நூல்களில் புகுத்திய வட மொழிச் சொற்கள் பெரும்பாலன எனலாம். இரண்டு மொழிகளும் கலந்து புதுமொழியாக வேண்டும் என்னும் ஆர்வத்தால் வலிந்து புகுத்துவது வேறு. நாவலர் கற்ற வடநூலறிவு இயல்பாக அவர் எழுதும் அருந்தமிழ் நடையில் ஆங்காங்கு வந்து விரவக்காண்கின்றோம் ஆதலின் முன்னே கூறப்பட்டவகையில் அவரது வடசொற்களை நாம் கணித்தல் வேண்டும்.

நாவலர் புகழ்:

தமிழ்மொழி நாவலரால் பெற்ற நலங்கள் எண்ணற்றவை. தமிழ் இலக்கிய வரலாற்றில், புதிய உரைநடையாக்கத்தில் நாவலர் பெற்றுள்ள இடம் இமயம் போன்றது. ஆதலின் ''நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே'' என்று பேரறிஞர் திரு. சி. வை. தாமோதரனார் கேட்ட கேள்வி புனைந்துரை வகையாற் பாடப்பட்டதன்று; முற்றிலும் உண்மை என்றே கொள்ளத் தக்கதாகும். ''வையமீன்ற தொன்மக்கள் உளத்தினைக் கையினுலுரை காலமிரிந்திடப் பையநாவை யசைத்த பழந் தமிழ் ஐயை'' புகழ் உள்ளனவும் நாவலர் புகழும் நின்று நிலவும் என்பது உறுதி.

8. இலக்கணக் கொத்து — நாவலர், 5-ம் புதிப்பு—1952.
9. நாவலர் — ரௌத்திரி ஆண்டின் வெளியீடு.
10. மொழி வரலாறு — டாக்டர். மு. வரதராசன் — (1957) பக்கம். 109.

ஆறுமுக நாவல சற்குரு

(மட்டுவில், திரு. ம. க. வேற்பிள்ளைப் புலவர் அவர்கள்)

ஆறுமுக நாவல னெனுஞ்சபாப் பிரசங்க சிங்கமிங் கவதரித்த
தாருமறி வாரவன தறிவொழுக் கங்கல்வி யறிகிலார் யாதுமறியார்
தேறுமுக மொன்றிலேற் கறிவுசிறி தருள்செய்த தேசிகோத் தமனுமிவனே
செந்தமிழி னூலுரைக டந்ததிங் குரைசெயச் சேடனுன் முடிவதாமோ
நீறுமுக முறுவித் தருங்கண்டி கைக்கலனி னேயமிகு வித்தெங்கணு
நிகமாக மம்பூசை நீலநிறீஇ விட்டதிவ னிமலப்ர சங்கநிதியே
சாறுதனு மாதத்தி னிற்பத்து வீறவருள் சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே சந்த்ரபுர தல்வாசனே.

திருத்தொண்ட ரைச்சிவ மெனக்கொண்ட வன்சைவ சித்தாந்த சிகைகண்டவன்
சிவகாம சுந்தரி சபாநடே சன்பாத சீர்த்திக ளெலாம்விண்டவன்
உருக்கொண்ட புண்ணியத் துயிரனுன் றன்பெய ருருடியாக் கொண்டவுழவன்
உயர்தரத் தருமகல் லூரிபல் லூரினு மொழுங்குற நடாத்துத்தமன்
செருக்கொண்ட யேசுமத மேங்குபு திடுக்கிடத் திறல்கொண் டடர்த்ததிரன்
றிவ்யசிவ பூசா துரந்தரன் சமயகுரு சென்மசை வத்துறவிதித்
தருக்குண்ட துர்ப்படா டோபநா வலரல்லர் சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே சந்த்ரபுர தலவாசனே.

— ஈழமண்டல சதகம்.

விருத்தம்

திருவாளன் றிருவெழுத்தைந் திடையுரு தொலிக்குமெழிற் றிருவாக் குஞ்சற்
குருபாதங் கருதுள மும் விபூதியொ ளி தயங்குதிரு மேனி யுஞ்சொற்
பொருளாளுந் திராவிடநின் மலமறைகொ டிருக்கரமும் பொலிந்த நல்லை
யருளாள னுறுமுக நாவலனெங் குருபரனுக் கடிமை செய்வாம்.



சென்னையில் தங்கசாலைத் தெருவிலுள்ள நாவலர் அச்சகத்தில், அன்னார் உபயோகித்த புத்தகப்பலகை, விபூதிச் சம்புடம், அக்குமாலை, ஆகியன இன்றும் பேணி வைக்கப்பட்டுள்ளன.

— உபயம்: க. சதாசிவன்.

பேராசிரியர் சி. கயினர் முகமது, M. A.



"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவ தில்லை" [1]என்றார் பாவேந்தர் பாரதிதாசன், இது நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்க்கு மிகவும் பொருந்தும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி வாழ்ந்த நாவலர் இன்று நம் நெஞ்சங் களிலெல்லாம் ஏன் என்றும் தமிழன்பர் தம் உள் ளங்களிலெல்லாம் நிலையாகத் தங்கிவிடும் தகுதி யினைப் பெற்றுவிட்டார். இவர்தம் புகழொளி தமிழ் கூறும் நல்லுலகம் எல்லாம் பரவியுள்ளது. இன்று இவர்தம் திருவுருவம் சிலையாக வடிக்கப் பெற்று நிலையாக அமைய இருக்கின்றது.

இன்றைய ஈழம் பண்டைத் தமிழகத்தின் ஒரு பகுதியாகவே திகழ்ந்ததென்பர். நிலநூல் நிபுணரும், வரலாற்று வல்லுநரும், மொழியியல் அறிஞரும், சங்ககாலச் சான்றோர் ஈழத்துப் பூதந் தேவனார் முதலாக நம்காலத்து விபுலானந்த அடி கள் ஈறாக 2312 புலமை சான்ற தமிழ்ப் பேரறி ஞர் ஈழ நாட்டில் தோன்றி இன்பத் தமிழுக்கு அன்புத் தொண்டாற்றியுள்ளனர். இப்புலவர் பெருமக்களுள் பன்மீன் நடுவண் பான்மதிபோல பேரொளி வீசுகின்றார் நல்லூர் தந்த நம் நாவலர்.

"தமிழ், சமயம் ஆகிய இரண்டும் என் இரு கண்கள்; அவ்விரண்டும் ஒளிகுன்றாமல் இறுதி வரை காத்துப் பயன்கொள்வதே என் கடன். அவை வாழப் பணிபுரிதலே என் வாழ்வின் குறிக் கோள்" [3] எனக் கொண்டு செந்தமிழுக்கும் சைவத்திற்கும் தனிப்பெருந் தொண்டாற்றியுள் ளார். இவ்வரும் இருபெரும் பணிகளுக்காகத் தம் இனிய வாழ்வையே அர்ப்பணித்துவிட்டார்.

திண்ணைப் பள்ளியிலே சுப்பிரமணிய உபாத் தியாயரிடம் கல்விப் பயிற்சியைத் தொடங்கிய நாவலர், இருபாலைச் சேனாதிராய முதலியாரிட மும் சரவணமுத்துப் புலவரிடமும் தமிழ் இலக் கண இலக்கிய நூல்களைத் துறைபோகக் கற்றார். வடமொழிப் பயிற்சியும் கைவரப் பெற்றார். இரு மொழிக் கடல் நீந்திய நாவலர் ஆங்கிலப் பயிற்சி யும் பெறும் பொருட்டுப் பேர்சிவல் ஐயர் நடத் திய ஆங்கிலப் பள்ளியிற் பயின்றார். இவர்தம் மும்மொழிப் புலமை கண்ட பாதிரியார் இவர் திறனைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினர். தம் பள்ளியில் ஆசிரியராக நியமித்தார்; ஆங்கில மும் அருந்தமிழும் பயிற்றுவிக்கச் செய்தார்; பாதி ரியாரும் நாவலரிடம் நற்றமிழ்ப் பயிற்சி பெற்று வந்தார்.

நாவலரின் அரும் புலமையையும் அறிவுத் தெளிவினையும் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழி யறிவினையும் கண்ட பாதிரியார் இவரைத் தமது வேத நூலாகிய விவிலியத்தைப் பிழையற்ற

இனிய தமிழிற் பெயர்த்திடும் பணியில் ஈடுபடுத் தினர். இதற்கிடையில், சென்னையிலிருந்த கிறித் தவ சபையார் விவிலியத்தைத் தமிழ்ப்படுத்தியுள் ளதாகக் கேள்விப்பட்டு, நாவலரையும் அழைத் துக்கொண்டு பாதிரியார் சென்னை போந்தார். சென்னையிலுள்ளார் சென்னைக் கிறித்தவ சபை மொழிபெயர்ப்பே சிறந்ததென வாதித்தனர். இறுதியில் இரண்டையும் சீர்தூக்கி எது சிறந்தது என முடிவு கூறும் பொறுப்பைப் பெரும்புலவர் மழவை மகாலிங்க ஐயரிடம் விட்டனர். இரண் டையும் ஒப்பு நோக்கிய மழவைப் பெரும் புலவர் ஈழத்து மொழிபெயர்ப்பே இனியது எனக் கூறி னர். நாவலரின் நற்றமிழ் கொழிக்கும் மொழி பெயர்ப்பு புலவரைக் கவராது இருக்குமோ? இவர்தம் மொழிபெயர்ப்பே அச்சேறும் அருஞ் சிறப்பையும் பெற்றது.

பெர்சிவல் ஐயர் ஆற்றிவந்த பயனுள்ள பணி களைக் கூர்ந்து கவனித்து வந்தார் நம் நாவலர். அவர்தம் கல்விப் பணியாலும் கொள்கைப் பிர சுரங்களாலும் சமயப் பிரசாரத்தாலும் தமிழ்ப் பெருமக்கள் தம் சமயம் விட்டுக் கிறித்தவ சமயம் புகுந்தனர். இச்சமய மாற்றம் கண்டு சைவச் சான்றோர் மரபில் தோன்றிய நாவலர் பொங்கி எழுந்தார். தம் சமயத்து அருமை பெருமை அறி யாது 'ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்க ளாய் வாழும்' தமிழ் மக்களைக் கண்டு உள்ளம் குமுறினர்: 'விழிமின், எழுமின், அறியாமை யாய விருளிலாழ்ந்து துயிலாதீர், உங்கள் முன்னோ ரளித்த அருஞ் செல்வமாகிய பழமையைக் கைவிடாதீர்'[4] என முழங்கினர்.

இது குறித்து நூற்றுக்கணக்கான துண்டுப் பிரசுரங்களும் சிறு வெளியீடுகளும் அச்சாகி உலா வந்தன. கோயில்களிலும் பாடசாலைகளிலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. செந்தமி ழும் சைவமும் செழிக்கும் பொருட்டு 1848ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினர். 1864ஆம் ஆண்டில் சிதம்பரத்திலும் சைவப்பிர காச வித்தியாசாலை நிறுவினர். '1875ஆம் ஆண் டளவில் புலோலியிலும் சைவ வித்தியாசாலை இவரால் நிறுவப்பட்டதென்று அறியக்கிடக்கின் றது.'[5]

மேனாட்டார் வருகையினால் தமிழ் மொழிக் குச் சில நன்மைகளும் தோன்றின. அவற்றுள் ஒன்று, அச்சியந்திரம் அறிமுகமானது. இதற்கு முன்னர் பல நாட்களாக உழைத்துப் பெரும் பொருட் செலவு செய்து ஓர் ஏட்டுச்சுவடியினைப் பெற வேண்டியிருந்தது. ஓலை நறுக்கில் எழுத் தாணி கொண்டு எழுதுவது மிகவும் சிரமம். அத னைப் படிப்பதும் சிரமம். பல பிரதிகள் எடுக்கவும் முடியாது. சிலவே எடுப்பினும் பலநாள் நிலைத் திருக்காது. விலையோ மிகவும் அதிகம்.

'வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதி என் னும் நூலை 1835ஆம் ஆண்டுக்கு முன்பு ஓலைச் சுவடிப் பிரதியை 10 பவுன் (ஏறக்குறைய 150 ரூபா) கொடுத்து வாங்கியதாகப் பெர்சிவல் ஐயர் தம்மிடம் கூறியதாகவும். அதே அகராதி அச்சுப் புத்தகமாக வெளிவந்தபோது பிரதி ஒன்று 2½ ஷில்லிங்கு (ஏறக்குறைய 2 ரூபா) க்கு கிடைத்த தாகவும், 1865ஆம் ஆண்டில் மர்தாக்கு என்பவர் எழுதியிருக்கிறார்.'[6] எல்லார்க்கும் நூல்கள் எளி தில் கிடைக்கத் துணை செய்தது அச்சு யந்திரமே.

சங்கம் வைத்து மொழிவளர்த்த நம் முன் னோர் தங்கம் நிகர் பாடல்களையும் நூல்களையும் படைத்தளித்தனர். இவற்றுள் கடலின் அடி வயிற்றுள் மறைந்தன பல. கனலின் செந்நாவிற்கு இரையாயின வேறு பல. சிதலின் சுவைக்கு இரை யாயின இன்னும் பல. நம்மவரின் கவனக் குறை வாற் கரைந்து குறைந்து போன நம் இலக்கண இலக்கியச் செல்வங்களை இவ்வச்சியந்திரத்தின் உதவியால் மறையாமற் புத்தொளி வீசச் செய்த னர் தமிழ்ப் பேரறிஞர். அவரை நம் நாவலர் தலைமை சான்றவர்.

தாளும் கோலும் அச்சியந்திரமும் இல்லாத முற்காலத்தில் ஓலை நறுக்கில், எழுத் தாணி கொண்டு எழுதும் துன்பம் இருந்ததனால் கருத் துக்களுக்குச் சுருங்கிய செவ்விய வடிவு கொடுக்க வேண்டிய இன்றியமையாமை இருந்தது. ஆத லின் கவிதை, கதை, வரலாறு, மருத்துவம், தத் துவம், நீதிபோன்ற அனைத்தையும் செய்யுள் வடி விலேயே அமைத்தனர்.

'19ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழி அடைந்த வீறுப்புகளில் முதன்மையானது வசன நூல்கள் வளர்ச்சி யடைந்ததாகும்; இந்த நூற் றாண்டுக்கு முன்பு தமிழில் வசன நூல்கள் மிகக் குறைவாகவே இருந்தன. இல்லை என்றே சொல்ல லாம்.'[7] என மயிலை சீனி வேங்கடசாமி கூறு கிறார்.

'தமிழினுடைய வசன நடை இன்னும் உரு வடையா நிலையில்தான் இருக்கிறது.'[8] என உவின் ஸ்லோ கூறுகிறார். 'பாட்டுகளுக்கு எழுதப்பட்ட உரைகள் தவிர மருத்துவம் கணக்கு இலக்கணம் அகராதிகள் உட்பட எல்லாத் தமிழ் நூல்களும் செய்யுளாகவே எழுதப்பட்டுள்ளன.'[9] என மர் தாக் குறிப்பிடுகிறார்.

''தமிழ் மொழியார் சூத்திரஞ் செய்யுளென்னும் இரண்டிற்றானே நூலியற்றுப; உரையாணியன்ற தொல்லாசிரியர் தமிழ் நூல் அரிதென்றுணர்க''[10] எனச் சபாபதி நாவலரும் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு செய்யுள் நடையிலே பயின்றிருந்த இலக்கியம், கணிதம், மருத்துவம், வரலாறு, அகராதி போன்ற நூல்களைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் நிகண்டு முதலிய கருவி நூற் பயிற்சி வேண்டும். ஒரு நூலைக் கற்பதற்கே நெடுநாள் வேண்டியிருந்தது. பல நூற் பயிற்சி எவ்வாறு எளிதிற் கைகூடும்? இத்துன்ப நிலையை நீக்க விழைந்த நாவலர் 1849ஆம் ஆண்டில் வண்ணார் பண்ணையில் வித்தியாநு பாலன யந்திரசாலையை நிறுவி வசன நூல்கள் பல இயற்றி அச்சிட்டு வெளியிட்டார். பாடசாலை மாணவர் பயிலும் பொருட்டு உரை நடையில் இலக்கிய இலக்கண நூல்கள் செய்தார். வாத நூல்களும் வெளியிட்டார். சமயப் பெருநூல்களையும் உரை நடையில் வடித்துத் தந்தார்.

'வசன நடை கைவந்த வல்லாளர்'[11] எனப் பரிதிமாற் கலைஞர் பகர்கின்றார். 'உரை நடையை உயிர் நடையாக முதல் முதல் கையாண்ட பெருமை நாவலரையே சாரும்'[12] எனப் புலவர் மாயாண்டி பாரதி கூறுகின்றார். 'மேற்கூறிய உரை நடை நூலியற்றியவர்கள் யாவருள்ளும் தலைசிறந்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்.....உயர்ந்த தமிழ் நூல்களையும் சைவ நூல்களையும் பிழையற நன்கு பதிப்பித்தும் சைவசமயச் சொற்பொழிவுகள் இயற்றியும் மாணவர்க்கு வேண்டும் சிறு உரைநடை நூல்கள் பல இயற்றியும் உழைத்தமையால் இவர் பெருமை இன்றும் நின்று நிலவுகின்றது. என்றும் நிலவுதற்குரியது'[13] எனப் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை கூறுகிறார். 'தமிழ் உரை நடை ஆறுமுக நாவலரால் ஒருவகைத் திருத்தமும் அழகும் பெற்றது'[14] எனத் தமிழ்க் கலைக் களஞ்சியம் குறிப்பிடுகிறது. 'உரை வேந்தர், எனவும் தற்கால உரை நடையின் தந்தை' எனவும் போற்றப்பெறுகிறார்.

இவரது உரை நடையில் எளிமையும் தெளிவும் இனிமையும் எழிலும் இழைந்து வரும்; தொடர்ந்து படிக்கத் தூண்டும் சுவையும் கவர்ச்சியும் இருக்கும்; சொல்லின்பம் மட்டும் கருதுபவரல்லர். பொருளைப் பெரிதும் மதிக்கும் பெருந்தகை; வட சொல்லும் கலந்து வரும்; சொல் வளம் மிகுந்து கனிவும் பொலிவும் பெற்றிலங்கும்.

நாவலர் படைப்புக்களில் பெரிய புராண வசனம் சிறந்ததெனக் கருதப்பெறுகின்றது. இதனை நாவலர் இயற்றிய வரலாறு புதுமையானதாகும். கையில் பெரிய புராண சுவடியுடன் அச்சகத்திற்குச் செல்வார்; அச்சுக் கோப்பார் பக்கத்தில் நிற்பார்; ஒவ்வொரு பாடலாகப் படித்துப் பொருளை மனத்தில் வரித்துக்கொண்டு ஒவ்வொரு சொல்லாகச் சொல்வார். அச்சுக்கோப்பவரும் எழுத்துக்களைக் கோத்து முடிப்பார். முன்கூட்டியே எழுதித் திருத்திச் செம்மைப்படுத்திக்கொள்ளாமல் இவ்வாறே பெரிய புராண வசனம் முழுமையும் வடிவம் பெற்றுள்ளது. எனினும், இது மொழி வளமும் வனப்பும் பெற்றுப் பிழையற்றுப் பொலிவுடன் பிறங்குகின்றது.

இவ்வாறு தோன்றிய நாவலர்தம் அரும் படைப்பில் ஒரு சிறு பகுதி :

''சிறுத்தொண்ட நாயனார் வைரவரை வேண்டி உண்ணப் புகலும் வைரவர் தடுத்தருளி ''ஆறு மாசத்திற்கு ஒருமுறை உண்ணுகின்ற நாம் உண்ணுமளவும் தரியாமல், எப்பொழுதும் உண்ணுகின்ற நீர் உண்பது என்னை! நம்முடன் உண்ணும் பொருட்டு உமக்குப் புத்திரன் உண்டேல் அழையும்'' என்றார். சிறுத்தொண்ட நாயனார் தரியாது எழுந்து, மனைவியாரோடும் விரைந்து வீட்டுக்குப் புறத்திலே போய், ''புதல்வனே வா'' என்று அழைக்க, மனைவியாரும் நாயகரது பணியிலே நிற்பாராகி ''சீராளனே! செய்யமணியே! சிவனடியார் அடியேங்கள் உய்யும் பொருட்டு உடனுண்ண உன்னை அழைக்கின்றார், வா'' என்றழைத்தார். அப்பொழுது அப் புதல்வர் பரமசிவனது திருவருளினாலே, பள்ளிக்கூடத்தினின்றும் ஓடி வருபவர்போல வந்தார்: தாயார் அவரை எடுத்துத் தழுவி நாயகர் கையிற் கொடுக்க, அவர் ''இனிச் சிவனடியார் திருவமுது செய்யப்பெற்றோம்'' என்று மனமிக மகிழ்ந்து, அப்புதல்வரை விரைவில் கொண்டு அடியவரைத் திருவமுது செய்வித்தற்கு உள்ளே வந்தார். அதற்குமுன் வைரவர் மறைந்தருள, சிறுத்தொண்ட நாயனார் அவரைக் காணுமையால் மனங்கலங்கித் திகைத்து விழுந்தார். கலத்திலே இறைச்சிக் கறியமுதைக் காணுமையால் அச்சமுற்றார்.''[15] சிறுத்தொண்ட நாயனாரின் செயற்கரிய செயலினைச் செப்பும் இப்பகுதி இனிய சொல்லோவியமாக விரிந்து நாவலரின் நடை வளத்தை நவில்கின்றது.

சிவனடியார் போற்றும் இச் செந்தமிழ்க் சுவைப்பியத்தில் நாவலர் கொண்ட பற்று வியப்பிற்குரியது. இவர்தம் தமையனார் தியாகராசனார்

'பெரிய புராணத்தில் வரும் கதைகளெல்லாம் கட்டுக் கதைகள்தானே!' எனத் தன் நண்பரிடம் சொன்னராம். இதனைக் கேள்விப்பட்ட நாவலரின் உள்ளம் பதைத்தது; உடல் அணு ஒவ்வொன்றும் துடித்தது. கையிலே கத்தியுடன் கடுகிச் சென்றார். சீறிவந்த தம்பியைக் கண்ட தமையனார் திகைத்து வீட்டின் உள்ளே சென்றுவிட்டார். இக்காப்பியத்தின்மீது கொண்ட பற்று உடன் பிறந்த பாசத்தையும் கடந்து நின்றுவிட்டது.16

வனப்பு மிக்க வசன நூல்கள் எழுதி வெளியிட்ட நாவலர் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களுக்கு உரையும் செய்துள்ளார். ஓலைச்சுவடியில் மடிந்துகொண்டிருந்த மதுரத் தமிழ் நூல்களைக் கூர்ந்து நோக்கிப் பிழையறப் பதிப்பித்து எளிதில் மக்கள் பெற்று மகிழச் செய்தார். பாடபேதங்களிருக்குமானால் பரிசீலித்து நுணுகி ஆய்ந்து ஏற்புடையதை எடுத்துக்கொள்வார். விருப்பு வெறுப்புகளுக்கேற்ப கூட்டியோ குறைத்தோ மாற்றியோ மருவியோ பதிப்பிக்கும் போக்கினை நாவலரிடம் பார்க்கவே முடியாது.

நாவலர் பதிப்பு புதுமையும் பொலிவும் பெற்றுத் திகழ்ந்தது. எழுத்துப் பிழை இலக்கணப் பிழைகள் இல்லாமல் நிறுத்தக் குறியீடுகளைப் பொருத்தமாக அமைத்துப் படிப்பார்க்கு விருப்பூட்டுமாறு பகுதி பகுதியாகப் பிரித்துப் பதிப்பிப்பார். 'குறியீடுகளைச் செம்மையாக அமைத்து முதன் முதலில் தமிழ் நூல்கள் வெளியிட்டவர் நாவலரே'17

இவரது பதிப்பிற் காணப்பெறும் பொலிவினையும் தெளிவினையும் கண்ட சேதுபதி மன்னர் பொன்னுச்சாமித் தேவரும் பாண்டித்துரைத் தேவரும் பாராட்டினர். வலிய வந்து பெரிய தொரு அச்சியந்திரம் அமைக்கும் பணியில் உதவினர்.

இவர் செய்யுளியற்றும் திறமும் பெற்றிருந்தார். செய்யுளில் இயற்றியவை சிலவே. இலங்கைப் பூமிசாஸ்திரம்கூட எழுதினர். கணித வாய்பாடுகளும் இயற்றினர்.

இவர் புதிதாய் இயற்றியும் பரிசோதித்தும் புத்துரை கண்டும் வெளியிட்ட நூல்கள் 57 என்பர்.18

சூடாமணி நிகண்டு-உரையுடன், சௌந்தரிய லகரி-உரையுடன், 1, 2, 4ஆம் பால பாடங்கள், பெரிய புராண வசனம், நன்னூல் விருத்தியுரை, திருமுருகாற்றுப்படை, திருச்செந்தினி ரோட்ட யமகவந்தாதியுரை, சிவாலய தரிசன விதி, சைவதூஷண பரிகாரம், சுப்பிரபேதம், சூளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், கந்த ரலங்காரம், கந்தரனுபூதி, ஏரெழுபது, திருக்கை வழக்கம், புட்ப விதி, மறைசை யந்தாதி, கோயிற் புராணமூலம், திருக்குருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, சிதம்பர மும்மணிக்கோவை. உபநிடத உரை, பட்டணத்துப் பிள்ளையார் பாடல், அருணகிரிநாதர் வகுப்பு, சைவ விளக்க விடை முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம், மருதூரந்தாதியுரை. திருச்செந்தூரகவல், விநாயக கவசம், சிவகவசம், சத்திகவசம், திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், திருச்சிற்றம்பலக் கோவையுரை, சேது புராணம், பிரயோகவிவேக உரை, தருக்க சங்கிரகம், உபமான சங்கிரகம், இரத்தினச் சுருக்கம், இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, கந்தபுராணம், பதினெராந் திருமுறை, நால்வர் நான்மணிமாலை, கோயிற் புராண உரை, சைவ சமய நெறியுரை, தொல்காப்பியச் சொல்லதிகாரம்-சேனாவரையருரை, இலக்கணச் சுருக்கம், சிதம்பரமான்மியம், கந்தபுராண வசனம், அனுட்டான விதி முதலாம் இரண்டாம் புத்தகம், சிவஞானபோதச் சிற்றுரை, யாழ்ப்பாணச் சமய நிலை, இலக்கண விளக்க விடை, இலங்கைப் பூமிசாத்திரம், நன்னூற் காண்டிகை உரை, பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம்.

''மேலும் சமூக அரசியல் பிரச்சினைகளில் ஈடுபட்டுக் காலந்தோறும் வெளியிட்ட கட்டுரைகள் கண்டனங்கள் மிகப் பல. அவற்றுள் சில நாவலர் பிரபந்தம் எனும் பெயரில் வந்திருக்கின்றன. இவரியற்றிய கீர்த்தனங்களும் பாடல்களும் சில உண்டு. எண்ணிறந்த பிரசங்கங்களும் புராண வியாக்கியானங்களும் இவர் செய்தவை எழுதப்படவே இல்லை.''19

நூலாசிரியராக, உரையாசிரியராக, உரை நடை கண்ட உயர்புலவராக, கவிஞராக, எழுத்துக் கலையில் இணையற்று விளங்கிய நாவலர் பேச்சுக் கலையிலும் பீடுநடை போட்டு வந்தார். 'எழுத்துக் கலையில் வல்லார் பேச்சுக் கலைக் கல்லார்' எனும் பழமொழி பொய்த்துவிட்டது நம் நாவலரிடத்தில்.

பேர்சிவல் ஐயர் நடத்திவந்த பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றியபோதும் இராப் போதில் மாணவர்க்கு இலவசமாகப் பாடம் சொல்லித் தந்தபோதும் திருக்கோயிலில் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தபோதும் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் உரையாற்றி வந்தார்.

நாவீறு படைத்த நம் நாவலரிடம் சிறந்த பேச்சாளர்க்கு வேண்டிய தகுதிகளெல்லாம் பொருந்தியிருந்தன. நூலறிவும் நுண்ணறிவும் பரந்த சொல்லாட்சியும் சிறந்த நினைவாற்றலும் கலைத் தெளிவும் உலகியல் நடையும் கொண்டு விளங்கினார். காட்சிக்கினிய தோற்றப் பொலிவும் கொண்டிருந்தார். 'வெண்ணீறு விளங்கும் மேனியும் கண்டிகை அணி செய்யும் கழுத்தும் பட்டிடை பொலியும் பருவுடலும் புதுவண்ணமும் கால்மேல் கால்வைத்தமரும் காட்சியும் யாவரையும் கவர்வன '20

இந் நல்ல தகுதிகள் யாவும் கொண்ட நம் நாவலர் நாட்டு மக்களைக் கவர்ந்து வந்தார். இவர்தம் புகழை எடுத்துக்காட்டிய ஒரு நிகழ்ச்சி நினைவுகூரத்தக்கது.

வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் வாரச் சொற்பொழிவு தொடர்ந்து நடந்துகொண்டு வந்தது. ஒரு வாரம் கார்த்திகேய ஐயர் என்பார் பேச இசைந்திருந்தார். நாளும் நேரமும் வந்தன; கூட்டமும் கூடியது; பேச்சாளரும் வந்தார்; ஆனால் சொற்பொழிவாற்றினாரில்லை. நாவலரிடம் விரைந்து சென்று, 'என் தாயார் உடல் நலம் கெட்டிருப்பதால் தாங்களே என் கடன் ஆற்றுங்கள் 'எனக் கூறிவிட்டுப் பதிலுக்கும் காத்திராமல் விரைந்து வெளியே சென்றுவிட்டார். நாவலரை விளித்து, 'இன்றும் தாங்களே உரையாற்றுங்கள்' எனக் கூட்டத்தினர் குரலெடுத்தனர். திகைத்துப் போன நாவலர், 'ஆயத்தமில்லை' என்று கூறினார். கூட்டத்திலிருந்தவரோ எதிர்ப்புக் குரலும் ஏளன நகைப்பும் எழுப்பினர். இதனைக் கண்ட நாவலரின் உள்ளத்தில் உணர்ச்சி பொங்கியது; எழுந்தார்; அமுத மழை பொழிந்தார்! 'ஆயத்தமில்லை' என்பதையே தலைப்பாகக்கொண்டு 'மரணத்திற்கு ஆயத்தமில்லை' எனும் கருத்தில் அரியதோர் உரையாற்றினார்; கேட்டார் அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.

இவர்தம் நாவன்மை நானிலமெங்கும் பரவியது. 1849ஆம் ஆண்டில் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் இவர்தம் புலமையையும் சொல்லாற்றலையும் அறிந்து மகிழ்ந்து அறிஞர் அவையில் ''நாவலர்'' எனும் பட்டத்தினை அளித்தார். இச் சிறப்புப் பெயராலேயே பெரும்பாலும் இவர் அழைக்கப்பெறுகிறார். ''நாவலர்'' எனும் சொல் பொதுவாக நாவில் வல்லாரைக் குறிக்கும்.

'செந்நாவலர் பரசும் புகழ்த்திருப் பெருந்துறை யுறைவாய் '21 எனத் திருவாசகம் புலவரைக் குறிக்கின்றது.

'நாவலர்க ணுன்மறையே '22 எனத் தேவாரம் (296-3) அந்தணரைக் குறிக்கின்றது.

'நாவலர் சொற்கொண்டார்க்கு நன்கலால் தீங்குவாரா '23 எனச் சீவகசிந்தாமணி (206) அமைச்சரைக் குறிக்கின்றது.

இவ்வாறு பலரைக் குறிக்கும் பொதுச் சொல் நம் நாவலர்க்கே உரிய சிறப்புப் பெயராக அமைந்துள்ளது. தமிழ்கூறு நல்லுலகில் பிள்ளை என்றுல் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையையே குறிக்கும். ஐயரென்றுல் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரையே குறிக்கும். இரண்டும் மரபுப் பெயர்கள். ஆனால், எல்லா மரபினர்க்கும் பொதுச் சொல்லாக அமையும் நாவலர் என்றுல் நல்லூர் தந்த நற்றமிழ் வாணர் ஆறுமுக நாவலரையே குறிக்கும் என்பது தனிச் சிறப்பாகும்.

32 ஆண்டுகளாக இவராற்றிய சொற்பொழிவுகள் எண்ணிலடங்கா. இதனால், தமிழ்ப் பெருமக்கள் எய்திய பயன்கள் சொல்லில் அடங்கா. எனவேதான்,

'சொற்பொழிவாற்றுவதில் இணையற்றவர் '24 எனத் தமிழ்ப் புலவர் அகராதி பாராட்டுகின்றது.

'பாவாணர் மெச்சச் செய்யும் பிரசங்கமும் பார்த்தினி நாம், நாவார வாழ்த்திடும் நாளு முண்டோ நல்ல நாவலனே '25 என நெஞ்சம் நெகிழ்கின்றார் ஒரு புலவர்.

'கல்லாதவரின் கல்நெஞ்சும் கனியப் பேசும் கனிவுடையோன் '26 எனக் கூறுகின்றார் கவிமணி.

'சைவமெனும் செஞ்சாலி யோங்கச் சிறந்த பிரசங்க மழை அஞ்சாது பொழியும் அருள் முகில் '27 எனப் போற்றுகிறார் ஒரு சைவப் பெரியார்.

'சாகையிலே தமிழ் படித்துக் சாக வேண்டும் '28 என்றார் புதுவை பயந்த புதுமைக் கவிஞர். நம் நாவலர் நோய்வாய்ப்பட்டிருந்த இறுதிக் காலத்தில் கல்லியும் கனிவிக்கும் மணிவாசகப் பாடலைத் திரும்பத் திரும்ப நெஞ்சுருகிப் பாடிக் கொண்டிருந்தாராம். 32 ஆண்டுகள் செந்தமிழும் சைவமும் தழைத்திட நற்பணிகள் பலவாற்றியுள்ளார்.

இவ்வாறு நாவலர் நல்ல நூலாசிரியராக, உயர்ந்த உரையாசிரியராக, சிறந்த பதிப்பாசிரியராக, நாவீறு படைத்த நாவலராக, ஒழுக்கத்தின்

சிகரமாக, தன்னலம் துறந்து பிறர்நலம் பேணும் பெற்றியாளராகத் திகழ்ந்து தமிழ் மக்களுக்கும் மொழிக்கும் அளப்பரும் தொண்டாற்றியுள் ளார் நாவலர். இவர்தம் பெரும் பணிகளை அரும் புலவர் பெருமக்கள் வியந்து பாராட்டியுள்ளனர்:

'நல்லநக ராறுமுக நாவலர்பி றந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே—
எல்லவரும்
ஏத்துபுரா ணகமங்க ளெங்கேபிர சங்கமெங்கே
அத்தனறி வெங்கே யறை'29

எனக் கேட்கின்றார் சி. வை. தாமோதரம்பிள்ளை.

'அகத்தியந் தொல்காப்பியமுன் னூயபல
விலக்கணமுஞ்
சகத்தியல்பல் லிலக்கியமுஞ் சாற்றுபர
மதநூலும்
மகத்துவமெய்ப் பொருணூலு மதியமைப்
பயின்றுணர்ந்து
சகத்தியலு மனுபூதித் தோன்றலாய்
அமர்பெரியோன்'30

எனப் பாராட்டுகின்றார் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

'மும்மொழியில் வல்லுநராய் மூதறிவு
மிக்கவராய்
நம்மொழியும் சிவநெறியும் நன்முறையில்
தழைத்திடவே
செம்மைநெறி தவறுத துறவுநெறி தாம்மேவி
அம்மம்ம! அவர்செய்த அருந்தொண்டை
என்னென்பேன்'31

என வியந்து போற்றுகின்றார் கீரனார்.

'ஆடும் தில்லை யம்பலவன் அடிகள் மறவா
அன்புடையோன்
பீடு பெறவே செந்தமிழைப் பேணி வளர்த்த
பெரும்புலவன்
நீடு சைவம் இவ்வுலகில் நிலவச் செய்த
குருநாதன்
நாடு புகழும் ஆறுமுக நாவ லன்பேர்
மறவோமே'32

என நெஞ்சுருகி அஞ்சலி செய்கின்றார் கவிமணி.

'நாவலரைப்போல முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்கள் இல்லை. ஒருவேளை இருந் தாலும் அவரைப்போலத் தமிழ் மொழியையும் நல்லொழுக்கத்தையும் சைவ சமய த் தை யு ம் வளர்த்துத் தமிழ் வசன நடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நாட்டார்க்கு உதவி செய்தவர் வேறெருவரும் இல்லை. பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப்போல் ஒருவரும் இல்லை'33 என்று சென்னை உயர்நீதிமன்றத் தலைவர் நீதிபதி சதா சிவ ஐயரும் நாவலர் பணிபற்றி நல்ல தீர்ப்பு வழங்கியுள்ளார்.

வாழ்க நாவலர் புகழ்! வளர்க அவர்தம் பணி! என நாமும் வாழ்த்துவோமாக!

---

1. பாரதிதாசன் கவிதைகள். 2ஆம் தொகுதி
2. ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள். பக்கம் vi
3. நாவலர் பெருமான். பக்கம் 23
4. ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள். பக்கம் 26
5. ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள். பக்கம் 27
6. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் பக்கம் 18
7. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் பக்கம் 122
8. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் பக்கம் 125
9. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் பக்கம் 125
10. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் பக்கம் 129
11. தமிழ் இலக்கிய வரலாறு (சி. பாலசுப்பிரமணியன் எம். ஏ.. எம். லிட்.) பக் 236
12. நாவலர் பெருமான் (மாயாண்டி பாரதி] பக்சம்
13. தமிழ் இலக்கிய வரலாறு (கா. சுப்பிரமணியபிள்ளை M. A., M. L.) பக்கம் 159
14. தமிழ்க் கலைக் களஞ்சியம் (தமிழ் வளர்ச்சிக் கழகம்)
15. நாவலர் பெருமான் (வித்துவான் மாயாண்டி பாரதி) பக்கம் 82

16. நாவலர் பெருமான் ,, ,, பக்கம் 45
17. நாவலர் பெருமான் ,, ,, பக்கம் 73
18. ஈழநாட்டின் தமிழ்ச் சுடர் மணிகள். பக்கம் 18
19. கலைக் களஞ்சியம் (தமிழ் வளர்ச்சிக் கழகம்)
20. நாவலர் பெருமான் பக்கம் 109
21. திருவாசகம்
22. தேவாரம். 297-3
23. சீவகசிந்தாமணி. 206
24. தமிழ்ப் புலவர் அகராதி. பக்கம் 40
25.
26. மலரும் மாலையும் கவிமணி) பக்கம் 34
27. நாவலர் பெருமான் பக்கம் 146
28. பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி
29. நாவலர் பெருமான். பக்கம் 146
30. நாவலர் பெருமான். பக்கம் 57
31. நாவலர் பெருமான். பக்கம் 57
32. மலரும் மாலையும். பக்கம் 34
33. நாவலர் பெருமான். பக்கம் 85

இவ்வாய்வுக் கட்டுரைக்குத் துணை செய்த நூல்கள் :

1. நாவலர் பெருமான் (வித்துவான் கா. மாயாண்டி பாரதி)
2. ஈழநாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள்
(திரு. மு. கணபதிப்பிள்ளை)
3. தமிழ் இலக்கிய வரலாறு
(திரு. சி. சுப்பிரமணியன் M. A., M. L.)
4. தமிழ் இலக்கிய வரலாறு
(பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை M. A., M. L.)
5. கலைக் களஞ்சியம்
6. Tamil Lexicon
7. தமிழ்ப் புலவர் அகராதி (திரு. ந. சி. கந்தையாபிள்ளை)
8. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்
(திரு. மயிலை, சீனி வேங்கடசாமி)
9. பாரதிதாசன் கவிதைகள்
10. மலரும் மாலையும் (கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை)

அச்சகமும் பதிப்பீடும்

"ஆறுமுக நாவலர் தம்முடைய அச்சகத்திற்கு, "வித்தியாநுபாலன யந்திரசாலை" எனப் பெயர் வைத்தார். அந்த அச்சகத்திலே தான் முதன் முதலில் நல்ல தமிழ்ப் பாடப் புத்தகங்கள் உருவாயின. ஆறுமுக நாவலர் நன்கு சிந்தித்து, வகுப்புகளுக்கேற்ற பாடப் பொருள்களைத் தேர்ந்தெடுத்து, அவ்வவ் வகுப்புக்கு ஏற்றபடி எளிமையாகவும், கடுமையாகவும் உள்ள உரைநடையைக் கையாண்டு பாடங்களை எழுதிப் பதிப்பித்தார். பாடத் திட்டங்களையும், அவற்றைப் போதிக்கும் முறைகளையும் அவரே தனியொருவராக நின்று வகுத்தார். யாவும் சிறப்பான முறையில் அமைந்தன. பாடப் புத்தகங்கள் மட்டுமல்லாமல், சமய நூல்களும் நீதி நூல் விளக்கங்களும், பிற தமிழ் உரைநடை நூல்களும் எழுதித் தம் அச்சகத்திற் பதிப்பித்தார்.

— நாரா நாச்சியப்பன்

"ஆறுமுக நாவலர்" 1964 — பக்கம். 24.

தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி

யாழ்ப்பாணத்து, நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் ஒரு அவதார புருஷர். இடையிருட் கடைக்காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளிபோல தமிழகத்தில் தளரும் சைவமும் தமிழும் தழைய, அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவார். முன்னே பல பாகங்களிலும் தமிழகத்திலிருந்து தான் பெற்ற சில சிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி, ஒரு காலத்து ஒரு முகமாகப் பழங்கடனைத் தீர்த்து என்றுந் தீர்க்கொணாவாறு தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலரென்றல் அது மிகையாகாது.

எஸ். சோமசுந்தர பாரதி.



வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையைக் கொண்டு நடாத்துவதற்கென, நன்னித் தம்பி முதலியார் உபகாரம் செய்த 400 ரூபாவை மூலதனமாகக் கொண்டு, யாழ்ப்பாணம் மிட்டாய்க்கடைச் சந்தியில் நாவலர் வாங்கிய வர்த்தக சாலையும் ஏனைய கடைகளும்.

—உபயம்: க. சதாசிவம்.

ச. அம்பிகைபாகன்



அந்நியர் ஆட்சி ஏற்படுமுன் யாழ்ப்பாணத்திலே கல்வி வளம் பெற்றிருந்த தென்பதற்குப் போதிய சான்றுகளுள. யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை 13-ம், 14-ம் நூற்றாண்டுகளில், அதாவது ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில், உச்ச நிலையை அடைந்ததென்று கூறலாம். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ச் சங்கமிருந்து, அரசர்களின் ஆதரவோடு தமிழை வளர்த்து வந்தது. சரஸ்வதி மகால் என்னும் ஒரு நூல் நிலையமும் இருந்ததாக அறியக் கிடக்கிறது.

போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்திலும், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும், அங்கும் இங்குமாகச் சில தமிழ்ப் புலவர்கள் இருந்த போதிலும் தமிழ்க் கல்வி மிகவும் கீழ்த்தசையை அடைந்து விட்டது. நாவலர் அவர்கள் தோன்றிய காலத் தமிழ்க் கல்வியின் நிலையை அவர்கள் சரித்திரத்தை எழுதிய, அவர்களின் தமையனார் மகனரும் மாணவருமாகிய, திரு. கைலாசபிள்ளை அவர்கள் பின்வருமாறு வர்ணித்துள்ளார்கள் :

'' நமது சமயம் தப்பியிருந்தது போல, தமிழ்ப் பாஷையும் தப்பியிருந்தது. இங்கிலிசு அரசு வந்த பின்னரும், அனேக தமிழ்ப் பண்டிதர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள். அவர்கள் நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சிவஞான முனிவர் முதலியோர் போன்ற திறமையுடையவரல்லராயினும், தமிழ்ப் பாஷையிலே மிகவும் பாண்டித்தியம் படைத்தவர்கள். ஆயினும் இவர்களுட் சிலர் தாம் கற்றதைத் தம் பிள்ளைகளுக்குத்தானும் சொல்லிக் கொடுக்கமாட்டார்கள். சிலர் பிறரிடமிருந்து ஏடுகளை வாங்கித் தாம் பிரதி செய்துகொண்டு பாட ஏட்டை இயன்றளவு பிழை படுத்திவிட்டுக் கொடுப்பார்கள். ஒரு வித்துவான் தாம் கற்ற காலத்தில் எழுதிய சில குறிப்புக்களை மரணிக்குங் காலத்தில், தமக்குமுன்னே சுட்டுப்போட வேண்டுமென்று சொல்லிச் சுடுவித்து அதன் பின்னரே தம் உயிர் போகப் பெற்றார். இப்படிப்பட்ட காலமே நாவலர் தோன்றிய காலம்.'' [1] மேலே கூறப்பட்ட நிலையை மாற்றி, தமிழ்க் கல்வியும், சமயக் கல்வியும் வளர்ந்தோங்கும்படி செய்ததே நாவலர் கல்விப் பணியாகும் — அதன் விரிவைக் கீழே காண்பாம் :

திண்ணைப் பள்ளிக்கூடம்

நாவலர் அவர்கள் தோன்றிய காலத்தில் யாழ்ப்பாணத்திலும், தமிழ் நாட்டிலும் ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்குத் திண்ணைப் பள்ளிக்

1 ஆறுமுக நாவலர் சரித்திரம். பக்கம் - 3

கூடங்களுக்கே பிள்ளைகள் சென்றனர். இத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் ஆசிரியர் வீட்டுத் திண்ணைகளிலேயே நடைபெறும். ஆசிரியர் ஒருவரே இருப்பர். அவருக்கு உதவியாக அவரிடம் கற்கும் மேல் வகுப்பு மாணவர் கீழ் வகுப்பு மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பர். காலத்துக்கேற்ப நாவலர் அவர்களும் தமது ஆரம்பக் கல்வியைச் சுப்பிரமணியபிள்ளை யென்பவர் நடாத்திய திண்ணைப் பள்ளிக்கூடத்திற் பெற்றார். அங்கு தமிழ் நெடுங்கணக்கு, எண்சுவடி, நீதி நூல்கள், நிகண்டு முதலியவற்றைக் கற்றார்.

இத் திண்ணைப் பள்ளிக்கூட முறை—ஆங்கிலத்தில் இதைச் சட்டாம்பிள்ளை முறை (Monitorial System) யெனக் கூறுவர் — மேல் நாடுகளுக்குச் சென்ற வரலாற்றைச் சிறிது கவனிப்பாம் : 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னையில் கல்விப் பணியாற்ற ஸ்கொற்லாந்து தேசத்தைச் சேர்ந்த டாக்டர் அண்டிறு பெல் என்பவர் வந்தார். அவர் ஒருமுறை சென்னை நகரில் நடைபெற்று வந்த ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தை அவதானிக்க நேர்ந்தது. அங்கு மேல் வகுப்பு மாணவர் கீழ் வகுப்பு மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பதையும், அங்கு ஓர் ஆசிரியர் இருந்த போதிலும் வகுப்புகள் ஒழுங்காகவும், சிக்கனமாகவும் நடைபெறுவதையும் அவதானித்தார். இம் முறையை முதன் முதலில் தாம் நடாத்திய ஆண்பிள்ளைகள் அனுதை இல்லத்திற் புகுத்தினர். அங்கும் இது வெற்றிகரமாக நடப்பதைக் கண்டு இம்முறையை இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் பரப்பினர். இச் சட்டாம்பிள்ளை முறை சென்னையிலிருந்தே மேல் நாட்டுக்குச் சென்றதென்பதைப் பலர் அறியாமலிருப்பதால் இங்கு கூறினம். மேலும், நாவலர் அவர்களும் இம்முறையைப் பின்பற்றியே யாழ்ப்பாணம் மெதடிஸ்ற் ஆங்கிலப் பாடசாலையில் (பின்னர் இது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாக வளர்ந்தது) மேல் வகுப்புகளில் கற்கும் பொழுது, கீழ் வகுப்பு மாணவருக்கு ஆங்கிலமும், மேல் வகுப்பு மாணவருக்குத் தமிழும் கற்பித்து வந்தார்.

தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சி

நாவலர் அவர்கள் காலத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சமய நூல்களையும் கற்க விரும்பினோர் சிறந்த தமிழ் வித்துவான்களை யடைந்து குருசீட முறையில் கல்வி கற்று வந்தனர். அக்காலத்தில் வித்துவான்கள் இருக்கும் இடங்களே தமிழ்க் கல்லூரிகளாக விளங்கின. கல்வியில் அதிகம் ஊக்கம் காட்டிய நாவலர் அவர்களை, சரவணமுத்துப் புலவரிடத்தும், சேனாதிராய முதலியாரிடத்தும் படிப்பதற்கு இவர்களுடைய தமையன்மார் ஒழுங்கு செய்தனர். ஆனால், இவ்வித்துவான்கள் நாவலர் அவர்களுடைய கல்விப் பசியைத் தீர்க்கக்கூடிய நிலையிலிருக்கவில்லை. பெரும்பாலும் தாமாகவே அனேக நூல்களைக் கற்றுக் கொண்டார். உயர்தரக் கல்வியைத் தமிழிற் பெறுவதற்குத் தாம்பட்ட கஷ்டங்களே, பிற்காலத்தில் தகுதிவாய்ந்த மாணவரைச் சேர்த்து இலவசமாகக் கற்பிக்க இவர்களை ஊக்கியிருக்க வேண்டும்.

ஆங்கிலங் கற்றல்

நாவலர் அவர்களின் விவேகத்தையும் கல்வியில் அவர்கள் காட்டிய ஊக்கத்தையும் கண்ட அவர்களின் தமையன்மார் அவர்களை ஆங்கிலப் பாடசாலையிற் சேர்க்க விரும்பினர். அக்காலத்து ஆங்கில பாடசாலைகளெல்லாம் கிறீஸ்தவர்களாலேயே நடாத்தப்பட்டு வந்தன. இந்தப் பாடசாலைகளின் முக்கிய நோக்கம் மதமாற்றமாகும். வட்டுக்கோட்டை செமினேறி யாழ்ப்பாண க் கல்வி வளர்ச்சிக்கு அரிய சேவை செய்து வந்தது. சி. வை. தாமோதரம்பிள்ளை, கரொல் விசுவநாதபிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை முதலிய மேதாவிகள் தோன்றுவதற்கு ஏதுவாயிருந்தது. ஆனால் அமெரிக்காவிலிருந்து, 1855-ம் ஆண்டில் வந்த விசாரணைக் குழு, இந்த செமினேறி கிறீஸ்தமதத்தைப் பரப்புவதற்குப் போதிய உதவி செய்யவில்லையெனக் கண்டு, அதை மூடும்படி உத்தரவிட்டனர். இதற்குப் பதிலாகக் கிராமங்கள் தோறும் கிறீஸ்த பாடசாலைகளைத் திறக்கும்படி ஆலோசனை கூறினர். மேலும் நாவலர் அவர்கள் காலத்தில் யாழ்ப்பாணம் மெதடிஸ்ற் பாடசாலைக்கு அதிபராகவிருந்த வண. பார்சிவல் என்பவர் யாழ்ப்பாணக் கல்வி விருத்திக்கு அரும்பாடுபட்டவர். மெதடிஸ்ற் பாடசாலையைச் சிறந்த கல்லூரியாக்க அரிய திட்டங்களை வகுத்தவர். ஆனால் இங்கிலாந்திலிருந்த மெதடிஸ்ற் சபை கிறீஸ்த மதத்தைப் பரப்புவதில் அவர் கவனம் செலுத்தவில்லையெனக் கண்டனஞ் செய்தனர். இதனால் தாம் யாழ்ப்பாணத்தில் வகித்து வந்த பதவியைத் துறந்து சென்னை சென்று தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டனர். 2

---

2 இவை பற்றிய விபரங்களை அறிய விரும்புவோர் பின்வரும் நூல்களைப் படிக்கவும்:

1. A Century of English Education J.V. Chelliah Pages 70-71
2. Jaffna Central College Centenary Memorial Edition Pages 23–25.

முன் கூறியபடி வண. பார்சிவல் அதிபராக விருந்த காலத்தில்தான் நாவலர் அவர்கள் மத்திய கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். அங்கு கற்று மேல் வகுப்புக்கு வந்ததும், கீழ் வகுப்பு மாணவருக்கு ஆங்கிலமும், மேல் வகுப்பு மாணவருக்குத் தமிழும் கற்பித்து வந்தார். 1841ல் பார்சிவல் இவர்களைத் தமது தமிழ்ப் பண்டிதராக நியமனஞ் செய்தார். பண்டிதராகவிருந்து பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்க உதவி செய்தார். மத்திய கல்லூரியில் மாணவனுகவும், ஆசிரியராகவும், பண்டிதராகவும் பதினன்கு ஆண்டுகள் வரையிற் கழித்தார். இக்காலத்தில் மிஷனரிமார் சைவப் பிள்ளைகளைக் கிறீஸ்தவராக்குவதற்குச் செய்த சூழ்ச்சிகளையெல்லாம் அறிந்தார். அறிந்தவர் அச்சூழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஆவன செய்ய விரதம் பூண்டார்.

மாணவருக்கு வகுப்பு நடத்துதல்

வண. பார்சிவலுக்குத் தமிழ்ப் பண்டிதராக விருந்து கொண்டே 1846-ம் ஆண்டு தொடக்கம் தக்க மாணவரைச் சேர்த்து இரவிலும், காலையிலும் இலவசமாகக் கல்வி கற்பித்து வந்தனர். இப்படிப் படித்தவரிற் பலர் பிற்காலத்தில் அளப்பரிய தொண்டாற்றினர். இவர்களுள் சதாசிவம்பிள்ளை, ஆறுமுகம்பிள்ளை, பொன்னம்பலபிள்ளை, செந்திநாதையர் என்பவர்கள் முக்கியமாகக் குறிப்பிடப் படவேண்டியவர்கள். சதாசிவப்பிள்ளை நாவலர் அவர்களைப்போல் நைட்டிகப் பிரமச்சாரியாக விருந்து, அவர்களின் தர்மத்தை நெடுங்காலம் பரிபாலித்து வந்தவர். ஆறுமுகம்பிள்ளை பின்னர் ஆறுமுகத்தம்பிரானுகிப் பெரிய புராணத்துக்குச் சிறந்த உரை கண்டவர். பொன்னம்பலபிள்ளை நாவலர் அவர்களின் மருகன். இவர் வித்துவ சிரோமணியாக விளங்கி, புராணங்களுக்கு உரை சொல்வதிலும், மாணவருக்குப் பாடஞ் சொல்வதிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாராய் நாவலர் அவர்கள் மாணவ பரம்பரையை விருத்தி செய்தவர். செந்திநாதையர் பிற்காலத்தில் காசிவாசி செந்திநாதையர் என அழைக்கப்பட்டு தமிழ் வடமொழி இரண்டையும் துறைபோகக் கற்று நீலகண்ட பாஷியத்தைத் தமிழில் மொழி பெயர்த்ததோடு, ''தேவாரம் வேதசாரம்'' முதலிய நூல்களை எழுதியவர்.

நாவலர் அவர்கள் கல்விக்கு வேறு பணியாற்றிபிராவிட்டாலும் மேற் குறிக்கப்பட்டோர் போன்ற மேதாவிகளைத் தோற்றுவித்ததொன்றே அவர்கள் யாழ்ப்பாணச் சரித்திரத்திற் சிறப்பான இடம் பெறுவதற்குப் போதிய ஏதுவாகும்.

பிரசங்கம்

நாவலர் அவர்கள் காலையிலும் மாலையிலும் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பித்ததோடு முதியோர் கல்வியிலும் கவனம் செலுத்தினர். மிஷனரிமார், சைவக் கிரியைகளையும், விக்கிரக வழிபாட்டையும், புராணக் கதைகளையும் பரிகாசம் பண்ணி, பிரசங்கங்கள் செய்தும், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும் வந்தனர். இவற்றைக் கண்டித்து நாவலர் அவர்கள் 31-12-1847 தொடக்கம் வெள்ளிக்கிழமை தோறும், வண்ணூர் பண்ணைச் சிவன் கோயிலிற் பிரசங்கம் செய்யத் தொடங்கினர். இக் கைங்கரியத்தில் இவர்களுக்கு உதவியாக இவர்களுடன் ஒருங்கு கற்ற கார்த்திகேய ஐயர் இருந்தார். இவர்கள் பிரசங்கம் செய்யும் பொழுது பட்டுடை, திரிபுண்டரம், கௌரி சங்கம், தாழ்வடம் முதலியன தரித்து சிவப் பொலிவுடன் விளங்குவார். இவர்கள் பிரசங்கத்துக்கு எடுத்துக்கொண்ட பொருள்கள் சில பின் வருவன:— கடவுள் வாழ்த்து, உருத்திராக்ஷதாரணம், சிவபத்தி, வேதாகமங்கள், திருவிழா, சிவலிங்கோபாசனை, யாக்கை நிலையாமை, சிவதீட்சை, மகளிரொழுக்கம் முதலியன.

இப் பிரசங்கங்கள் பரமத கண்டனத்துக்கும் சுவ மதஸ்தாபனத்துக்கும் பேருதவி புரிந்தன. இவர்களின் பிரசங்கங்கள் யாழ்ப்பாணத்திலும் தமிழ் நாட்டிலும் சைவ மக்கள் மத்தியிற் பெரு விழிப்பை ஏற்படுத்தின. இதனுல் கிறீஸ்தவ பாதிரிமார் பெரும் பரபரப்படைந்து பார்சிவலுக்கு நாவலர் அவர்களைப் பற்றி முறையிட்டனர். நாயன்மார்கள் காலத்தில் சைவ மக்களின் புனர் வாழ்வுக்குத் தேவாரங்கள் எப்படிப் பயன்பட்டனவோ, அப்படியே 19-ம் நூற்றுண்டில் இவர்கள் பிரசங்கங்கள் உதவின. இப்பிரசங்கங்கள் மூலம் நாவலர் அவர்கள் பரசமய கோளரியானர்.

சைவப் பிரகாச வித்தியாசாலைகளைத் தாபித்தல்

மிஷனரிமார் தங்கள் பள்ளிக்கூடங்களில் மறு பாடங்களோடு, சமயத்தை ஒரு முக்கிய பாடமாகக் கற்பித்து வருவதைக் கண்ட நாவலர் அவர்கள் சமய அடிப்படையில் வித்தியாசாலைகளை ஸ்தாபிக்க நிச்சயித்தனர். தமது வாழ்க்கையின் இலட்சியத்தைத் தாம் எழுதிய விஞ்ஞாபனம் ஒன்றில் தெளிவாக எழுதியுள்ளார். அவர்கள் கூறியவற்றைக் கீழே காண்க :—

''நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ, நிறை

வேறுதோ என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலங்கள் தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப் பிரசாரகர்களும் தேவைப் படுவார்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும் விவேகமும், கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம், வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கண விலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர் களுள்ளே தேர்ச்சி அடைந்தவர்களை உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்.'' [3]

நாவலர் அவர்களின் மேற் கூறிய கருத்து நிறைவேறுவதற்கு 1848-ம் ஆண்டில் ஒரு வழி பிறந்தது. அவ்வாண்டிலேதான் முதல் சைவப்பிரகாச வித்தியாசாலை வண்ணைச் சிவன் கோயில் முன்பாகவுள்ள ஒரு வீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர்தான் இவ் வித்தியாசாலைக்கென நிரந்தரமான நிலமும் கட்டடமும் ஏற்பட்டன. ஆசிரியர் களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணமில்லாததால் வீடுதோறும் பிடியரிசி தண்டி, அதனை விற்றுச் சம்பளங் கொடுத்துவிட்டார். பின்னர் சேர்க்கும் கூலிக்கும் சேர்ந்த அரிசி காணுதபடியால் பிடியரிசி சேர்ப்பதும் நின்றுவிட்டது. ஆசிரியராகக் கடமையாற்றிய சதாசிவம்பிள்ளை போன்றோர், இவர் களுடைய மாணவராயிருந்தபடியால் நெடுங் காலம் சம்பளம் வாங்காது கல்வி கற்பித்து வந்தனர். எவ்வளவு பண நெருக்கடி இருந்தபோதிலும் மாணவரிடமிருந்து பணம் வாங்கியது கிடையாது. இப்படியிருக்கும் காலத்தில் பாடசாலைக் கென இரு கடைகளை வாங்க விரும்பினர். கையில் பணமில்லாதபடியால் மன மிக நொந்து இறைவனை வேண்டினர். இறைவனருளால் கொழும்பிலிருந்த தனவந்தரும், சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மாமனாருமான நன்னித்தம்பி முதலியார் அவர்கள் பண உதவி செய்ய முன் வந்தனர். அவர்கள் உதவிய பணத்தைக் கொண்டு இரு கடைகளும் வாங்கப்பட்டன.

அக்காலத்து அரசாங்கம் கிறீஸ்த மத சார் புடையதாக விருந்தபடியால் இவ்வித்தியாசாலைக்கு 20 வருடங்களுக்கு மேலாக அரசாங்கத் தினிடமிருந்து பண உதவி கிடைக்கவில்லை. பல இன்னல்களிருந்த போதிலும் தாம் ஏற்படுத்திய வித்தியாசாலைகளை முறையாக நிர்வாகம் செய்து வந்தார்கள். ஆண்டு தோறும் வித்தியாசாலைகளைப் பற்றிய அறிக்கையை (வரவு செலவுக் கணக்கு உட்பட) வெளியிட்டதோடு, தக்காரைக் கொண்டு மாணவர்களைப் பரீட்சித்து வந்தார்கள். எக்கருமத்தைச் செய்தாலும் ''செய்வன திருந்தச் செய்'' என்னும் முதுமொழியை இலட்சியமாக வைத்துச் செயலாற்றினார்கள்.

வண்ணார்பண்ணை சைவ வித்தியாசாலையைத் தொடர்ந்து கொழும்புத்துறை, கோப்பாய், பருத்தித்துறை, ஏழாலை முதலியவிடங்களில் வித்தியாசாலைகள் தோன்றின.

நாவலர் அவர்கள் கல்விப் பணி யாழ்ப் பாணத்தோடு அமையவில்லை. சைவர்களுக்குச் சீவ நாடியாக விளங்கும் சிதம்பரத்திலும் ஒரு சைவ வித்தியாசாலையை 1864-ம் ஆண்டில் நிறுவினர். இவ்வித்தியாசாலையை நிறுவுவதற்குப் பணம் உதவியவர்கள் யாழ்ப்பாணத்தவர்களே என்பதை நாம் மறக்கலாகாது.

இவற்றுக்கு மேலாக, சிதம்பரத்தில் சைவப் பிரசாரகர்களையும்ஆசிரியர்களையும்பயிற்றுவதற்கு ஒரு தாபனம் நிறுவுவதற்கு விரிவான திட்டமொன்றை வெளியிட்டார். அவர்களின் மதிப்பீட்டின்படி இதற்கு ரூபா. 80,000 வரை தேவைப் பட்டது. போதிய ஆதரவில்லாதபடியால் இக் கனவு நிறைவேறவில்லை.

சைவாங்கில வித்தியாசாலையைத் தொடங்குதல்

மெதடிஸ்ற் மிஷனரிமார் கில்னர் கல்லூரி என்னும் ஓர் ஆங்கில பாடசாலையை வண்ணார் பண்ணையில் நடாத்தி வந்தனர். அதில் கல்வி கற்ற மாணவர் சம்பளம் கட்டிப் படித்து வந்தனர். இப் படிச் சம்பளங் கட்டிப் படித்தவர்களிற் பலர் சைவப் பிள்ளைகள். இவர்கள் அங்கு படித்துவரும் பொழுது 1871-ம் ஆண்டில் அக்கல்லூரி அதிபர் சைவப் பிள்ளைகளைத் திருநீறு அணிந்துகொண்டு வரக்கூடாதெனக் கட்டளையிட்டனர். திருநீறு அணிந்துகொண்டு சென்ற பிள்ளைகளைத் திருநீற்றை அழிக்கும்படி உத்தரவிட்டனர். அப்படி அழிக்க விரும்பாத பிள்ளைகளைப் பாடசாலையை விட்டு வெளியேறும்படி கூறினர்.

இக்கல்லூரியிலிருந்து வெளியேறிய பிள்ளைகளின் பெற்றோர் நாவலர் அவர்களை அணுகி, தம்

---

3 ஆறுமுக நாவலர் சரித்திரம் - கைலாசபிள்ளை. பக்கம் : 50

பிள்ளைகளின் கல்விக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும்படி வேண்டினர். இதன் விளைவாக சைவாங்கில வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டது. இவ்வித்தியாசாலை நான்கு வருடங்கள் நடாத்தப் பட்டும் கிறீஸ்தவ பாதிரிமாரின் எதிர்ப்பினால் அரசாங்க உதவி கிடைக்கவில்லை. இவ்வித்தியாசாலைக்கு அரசினர் அங்கீகாரம் இல்லாதபடியால் மாணவர் தொகை வரவரக் குறையத் தொடங்கியது. இக்காரணங்களினால் இவ்வித்தியாசாலை 1874ல் மூடப்பட்டது. ஆனால் இம்முயற்சி வீண் போகவில்லை. பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தோன்றுவதற்கு இது முன்னோடியாக விருந்தது.

பாடப் புத்தகங்கள் வெளியிடுதல்

வித்தியாசாலைகளை ஆரம்பித்த பின் அவ்வித்தியாசாலைகளில் உபயோகிப்பதற்கேற்ற பாடப் புத்தகங்கள் இல்லாமை கண்டு அக்குறையை நிவிர்த்தி செய்ய முன்வந்தார்கள். வகுப்புக்கும் வயதுக்கும் ஏற்ற முறையில் மூன்று பாலபாடங்களை எழுதி வெளியிட்டார்கள். கடுஞ் சந்திகளைப் பிரித்தும், குறியீடுகளை உபயோகித்தும் முதன் முதலில் நூல்களை வெளியிட்டவர் இவர்களே. கீழ்வகுப்புகளில் உபயோகிக்கப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவற்றுக்கு உரையும் இவர்களாலேயே எழுதப்பட்டன.

இலக்கணத்தை எளிதிற் போதிப்பதற்கு உதவியாக இலக்கண விளுவிடை, இலக்கணச் சுருக்கம் முதலியவற்றையும் வெளியிட்டார்கள். சைவ சமயத்தைப் போதிப்பதற்கு இரண்டு சைவ விளுவிடைகள் இவர்களால் எழுதப்பட்டன. இந்த இரு சைவ விளுவிடைகளையும் நான்காம் பாலபாடத்தையும் ஒருவன் செவ்வனே கற்பானேயாகில் அவன் வாழ்க்கைக்கு வேண்டிய சமய உண்மைகளை அறிந்துகொள்வான். இக்காலக் கல்வி முறையில் இவை இடம்பெறுதிருப்பது பெருங் குறையாகும்.

பாலபாடங்களைப் பற்றி 1872-ம் (நாவலர் வாழாத காலத்தில்) வெளிவந்த சென்னை (Native Public Opinion) என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதப்பட்ட மதிப்புரையிற் சில பகுதிகளின் மொழிபெயர்ப்பைக் கீழே காண்க:—

> "தமிழ் முதலாந் தேச பாஷை பாஷைகள் குன்றத் தலைப்பட்டுள்ள இக்காலத்திலே பாண்டிய மன்னர்கள் காலத்திலிருந்த பழைய புலவர் வித்துவான்களை யொத்த சிலர் இக்காலத்திலும் விளங்குதல் ஒரு பெரும் ஆறுதலாகும். சிலர் என இங்கு நாம் குறித்தவருட் பிரதான மானவர்கள் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்னும் இரு வருமாவர். இவ்விருவருள் பிள்ளையவர்கள் சிறந்த புலவராவர். இவர் பாடிய நூல்கள் பல. நாவலர் அவர்கள் இக்காலத்திற் கிசைந்த தமிழ் வசன நடை இயற்றுவதில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். இவருக்கு முன்னிருந்த அறிஞர்களும் இப்படியான தமிழ் வசன நடை எழுதமாட்டார்கள்..... நாவலர் அவர்கள் தாம் எழுதிய முதன் மூன்று வகுப்புகட்குரிய பாலபாடங்களை அபிப்பிராயம் பெறும்படி எமக்கு அனுப்பியுள்ளார்கள். அவருடைய தமிழ் வசன நடையைப் பற்றி நாம் ஏதும் கூறப் புகுதல் மிகையாகும். பால பாடங்களை எழுதவேண்டிய முறையிலேயே எழுதியுள்ளார். இந்த அறிஞர் எழுதிய பால பாடங்களைத் தவருது இங்குள்ள வித்தியாசாலைகளில் உபயோகித்தல் வேண்டுமென்று நாம் திடமாகச் சொல்வோம். இச்சென்னையிலுள்ள வித்தியாசங்கத்தார் வெளியிடும் வசன பாடப் புத்தகங்களைக் காட்டிலும் நாவலர் பாலபாடங்கள் எல்லாவற்றினும் சிறந்தவையாகும். வித்தியா சங்கத்தார் வெளியிட்ட புத்தகங்களை நாவலர் எழுதிய பாலபாடங்களோடு ஒப்பிட நினைத்தமை தானும் தவறெனலாம். இனி நாவலர் பால பாடங்களில் எடுத்தாளப்பட்டிருக்கும் அரிய விஷயங்கள் சாலச் சிறந்தனவாகும்." [4]

நாவலர் அவர்கள் முன்மாதிரியைப் பின்பற்றி நூற்றுக்கணக்கான சைவ வித்தியாசாலைகளும், இந்துக் கல்லூரிகளும் தோன்றிச் சைவத்துக்கும் தமிழுக்கும் அருந் தொண்டாற்றின. அரசாங்கம் இப்பாடசாலைகளையும் கல்லூரிகளையும் பொறுப் பேற்றதனால் சைவ சமய வளர்ச்சிக்குப் பாதகமேற் பட்டிருக்கின்றது. முன்போல இவை மூலம் சமயத்தை வளர்க்க முடியாது. நாவலர் அவர்கள் தாபிக்க எண்ணிய சைவப் பிரசாரகர் பயிற்சிக் கல்லூரியை இனித் தாமதிக்காது நிறுவவேண்டும். இத்தகைய கல்லூரி ஒன்றின் மூலமே நமது சமயத்தை வளர்க்கலாம்.

---

4 நாவலர் நினைவு மலர் - 1938, ஈழகேசரி வெளியீடு. பக்கங்கள் : 93 - 94.

நாம் நாவலருக்குச் செய்யும் கைம்மாறுகள்

சுத்தானந்த பாரதியார்
1948 இல் கூறியவை

1. நாவலருக்கு யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் சென்னையிலும் சிலை நாட்ட வேண்டும்.

2. அவர் படத்தைப் பெரிதாக வர்ணப் பொலிவுடன் அச்சிட்டு ஒவ்வொரு தமிழரும் வீட்டில் வாங்கி வைக்க வேண்டும். அதைக் காணும்போதெல்லாம் தமிழுக்கும் சமயத்திற்கும் அவ்வாறு தியாகத் துணிவுடன் உழைக்கும் எழுச்சி பெறவேண்டும்.

3. நாவலர் பால பாடம், வசன நூல்கள் இவற்றை ஒவ்வொரு தமிழரும் படிக்க வேண்டும்.

4. தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் முதலிய பதி நூல்களைத் தமிழர் மதக்கடனாக ஓதி உணர வேண்டும்.

5. நாவலர் வழியைப் பின்பற்றி, நயடெங்கும் கல்வி பரப்ப வேண்டும்; நல்ல தமிழ் நூல்களை அச்சிட்டுப் பரப்ப வேண்டும்.

6. தமிழர் முன்னேற்றத்திற்குத் தடை செய்யும் தீமைகளை வீறுடன் கண்டித்து நீக்க வேண்டும்.

7. திருக்கோயில்களில் வேதமுழக்கத்துடன் தேவார திருவாசகங்கள் முழங்கச் செய்ய வேண்டும்.

8. தமிழர் தம்மால் இயன்ற மட்டும் சிவ சன்மார்க்கத்தில் வைராக்கியமாக நடக்க வேண்டும்.

கி. லக்ஷ்மணன். எம். ஏ.
அதிகாரி, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

கல்வித் துறையில் தீர்க்கதரிசனம்

எவ்வளவோ காலத்துக்குப் பின்பு நிகழும் காரியங்களை எவ்வளவோ காலத்துக்கு முன்பே தம் உள்ளொளியால் அறிந்து உரைக்கக்கூடியவர் எவரோ அவரே தீர்க்க தரிசி. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது 1947 இல். ஆயினும் அதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே சுப்பிரமணிய பாரதி

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே"

என்று பாடிவிட்டார். பாரதி இறந்தது 1921 ஆம் ஆண்டில். ஆயினும் அவர் இப்பாடலை 1909 ஆம் ஆண்டுக்கு முன்பே பாடிவிட்டார். அவர் இப்பாடலைப் பாடியபோது இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான அறிகுறிகள் அதிகமாக இருக்கவில்லை. அப்படியிருந்தும் சுதந்திரம் அடைவோம் என்று பாரதி பாடவில்லை. சுதந்திரம் அடைந்து விட்டோம் என இறந்த காலத்திலே பாடியதிலே பாரதியின் தீர்க்க தரிசனத்தைக் காண்கின்றோம்.

பாரதியைப் போலவே நாவலரும் ஒரு தீர்க்க தரிசி. பின் நடக்கப்போவதை ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்தான் பாரதியால் உணரக்கூடியதாயிருந்தது. ஆனால் நாவலர் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குப் பின் நிகழ்ந்தவற்றை நூறு ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்த பெருமையை உடையவர். பின் நிகழவிருந்தவற்றை நாவலர் சொல்லில் மட்டும் சொல்லி நின்று விடவில்லை. செயலிலும் செய்து காட்டிய சிறப்புடையவர்.

அண்மைக் காலத்திலே கல்வித் துறையிலே நிகழ்ந்த சில திருப்பங்களை மட்டுமே உதாரணமாகக் கொண்டு நாவலருடைய தீர்க்கதரிசனத்தை இங்கு ஆராய்வோம். முதலில் இலங்கையை எடுப்போம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற ஆண்டு 1948. இதற்குச் சற்று முன்னும் பின்னுமாக இலங்கைக் கல்வித் துறையிலே மிகப் பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பிரதானமான மூன்றை இங்கு குறிப்பிடுவோம். இலவசக் கல்வி, தாய்மொழி மூலம் கல்வி, சமயக் கல்வி ஆகியவையே அம்மூன்றும்.

இலவசக்கல்வி - அண்மையில் 1945
நாவலர் ஆரம்பித்தது 1846

1945 இல் இலங்கையில் இலவசக் கல்வியைத் திரு C. W. W. கன்னங்கரா ஆரம்பித்த

போது 'விலைமதிக்க முடியாத முத்து' என அதனை எல்லோரும் பாராட்டினர். பலருடைய ஆலோசனைகள், அறிக்கைகள், ஆரவாரங்கள் ஆகியவற்றுடனேயே இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக் கல்வித்துறையிலே இலவசக் கல்வி ஏற்படுத்தப்பட்டபோது அது மிக மிக முக்கியமான திருப்பமாகவும் உலகிலேயே வேறெங்கும் இல்லாத மிகப் பெரிய சாதனையாகவும் கொண்டாடப்பட்டது.

இடையிலே அற்றுப்போய், பின் இவ்வளவு ஆராய்ச்சியோடும், ஆரவாரத்தோடும் ஏற்படுத்தப்பட்ட இந்த இலவசக் கல்வியை நாவலர் தான் தனியாகவே சிந்தித்து எதுவித ஆரவாரமுமின்றிச் சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன் அதாவது 1846 ஆம் ஆண்டே ஆரம்பித்துவிட்டார் என்பது பலருக்கு வியப்பாக விருக்கலாம்.

நாவலர் காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலுமிருந்த பள்ளிக்கூடங்களெல்லாம் பிள்ளைகளிடம் சம்பளம் வாங்கிக் கொண்டே படிப்பிக்குமிடங்களாயிருந்தன. வேதனம் பெறுது கற்பிப்பதே உத்தமம் என்பதை முதன்முதலில் சிந்தித்த சிறப்பும் சிந்தித்தது மட்டுமன்றிச் செயற்படுத்திய பெருமையும் நாவலருக்கே உரியவை.

1945 இல் இடம்பெற்ற இலவசக் கல்வியை 1846 இலேயே ஆரம்பித்தமை கல்வித்துறையில் மட்டுமன்றி அதனோடு பின்னிப் பிணைந்து இயங்கும் சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளிலும் நாவலருக்கிருந்த தீர்க்கதரிசனத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

தாய்மொழி மூலம் கல்வி - அண்மையில் 1946
நாவலர் தொடங்கியது 1848

இலங்கைக் கல்வித்துறையிலே ஏற்பட்ட அடுத்த மிகப்பெரிய திருப்பம் ஆரம்ப வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழக இறுதி வகுப்பு முடிய எல்லாப் பாடங்களையும் தாய் மொழி மூலம் புகட்ட ஆரம்பித்தமையேயாகும். 1946 இல் முதன் முதலாகத் தொடங்கிய இப்போதனை மொழி மாற்றம் படிப்படியாக உயர்ந்து 1957 இல் எஸ்.எஸ்.சி. பரீட்சை தாய்மொழிமூலம் நடைபெறுவதற்கும் 1963 இல் பி. ஏ. பரீட்சை முதன் முறையாகத் தாய் மொழியில் நடைபெறுவதற்கும் ஏதுவாயின. போதனைமொழி விஷயத்திலே இந்தியாகூட இன்னும் சாதிக்க நினையாத அரிய சாதனையை இலங்கை சாதித்துள்ளது. தமிழுக்குத் தாய்நாடாகிய தென்னிந்தியாவிலே உள்ள பல்கலைக்கழகங்களிலே கலையியற் பாடங்கள்கூட இன்னும் ஆங்கிலமூலமே புகட்டப்படுகின்றன. சேய்நாடாகிய இலங்கையில் பி. ஏ. பரீட்சை முழுவதையும் தமிழிலே நடத்தத் தொடங்கி இன்று ஆண்டுகள் பலவாகிவிட்டன. தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் போதனைமொழி இன்றும் ஆங்கிலமாயிருப்பதையும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் மாணவர்களுக்குத் தமிழே போதனை மொழியாகச் சென்ற பல ஆண்டுகளாக இருந்து வருவதையும் படித்தவர்களுட்கூடப் பலர் அறியாதிருக்கலாம்.

எந்த மாணவனுக்கும் கல்வியூட்டுவதற்கு அவனுடைய தாய்மொழியே மிகச் சிறந்தது என்பதே பலதேசக் கல்வி நிபுணர்களும் உளதத்துவ விற்பன்னர்களும் கண்ட முடிபு. பல கால அனுபவத்தைக் கொண்டும் பலவித ஆராய்ச்சிகளைச் செய்துமே அவர்கள் இந்த முடிவுக்கு வந்தார்கள். நாவலர் எதுவித ஆராய்ச்சியுமின்றி நூறுண்டுகளுக்கு முன்பே இந்த முடிவுக்கு வந்து விட்டார். நாவலர் காலத்திலிருந்த முக்கியமான பாடசாலைகள் யாவும் ஆங்கிலத்தையே போதனைமொழியாகக் கொண்டவை. நாவலர் கல்வி பயின்றதுகூட அத்தகைய பாடசாலையிலேயே. இருந்தும் அவர் முதலிலே தாபித்த வித்தியாசாலை தமிழையே எல்லாப் பாடங்களுக்கும் போதனைமொழியாகக் கொண்டது. இப்பாடசாலையை அவர் தாபித்த ஆண்டு 1848. நாவலர் தம் கால மாணவர்களுக்குக் கற்பிக்கத் திட்டமிட்ட பாடங்களுள் பூகோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மைநூல், வாணிகநூல், அரசநீதி, சிற்பநூல் முதலானவைகளைக் குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும். இவை யாவும் தாய் மொழி மூலமே கற்பிக்கப்பட வேண்டுமென்பது அவருடைய கொள்கையாயிருந்தது.

1946 இல் எவ்வளவோ ஆராய்ச்சிகளுக்கும் அறிக்கைகளுக்கும் பின்னல் ஏற்பட்ட இப் போதனைமொழி மாற்றத்தைத் தம் தீர்க்கதரிசனத் திறத்தால் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன் (1848 இல்) உணர்ந்து செயலாற்றியவர் நாவலர். அத்தகையதொரு மேதாவிலாசம் அவரிடமிருந்தது.

தாய்மொழிமூலம் கற்பிக்கத் தொடங்குவதைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய பெரிய பிரச்சினை தாய்மொழியிலே ஒவ்வொரு பாடத்திலும் தரமான நூல்களைத் தயாரித்தல். தாய்மொழி மூலம் கற்பிப்பதே சிறந்தது என்பதை இற்றைக்கு நூறுண்டுகளுக்கு முன்பே உணர்ந்த நாவலர், தாய்மொழியிலே ஒவ்வொரு பாடத்துக்கும் தரமான நூல் எழுதப்பட வேண்டியதன்

அவசியத்தையும் உணரத் தவறவில்லை. அவர் எழுதிய இலங்கைப் பூமிசாத்திரம் என்ற நூலொன்றே அவருடைய சிந்தனை சென்ற வழிக்குச் சான்று பகருவதற்குப் போதுமானது. எனவே இந்த வகையிலும் நாவலர் ஒரு முன்னோடியாகின்றார்.

சமயபாடம் கட்டாயமாயது - அண்மையில் 1955
நாவலர் செய்தது 1848

சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியமையே இலங்கைக் கல்வித் துறையிலே அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மூன்றாவது பெரிய மாற்றம். ஜி. சி. ஈ. பரீட்சைக்குக் காலத்துக்குக் காலம் கட்டாய பாடமாக நியமிக்கப்பட்ட பாடங்களைக் கொண்டே நாட்டை நிர்வகித்தவர்கள் கல்வியில் எதை முக்கியமெனக் கருதினார்கள் என்பதை ஓரளவு உணர்ந்து கொள்ளலாம். ஆங்கிலம், கணக்கு, தாய்மொழி ஆகியவை கட்டாய பாடங்களாக இருந்து வந்தன. 1965 இலிருந்து ஜி. சி. ஈ. பரீட்சைக்குச் சமயபாடமும் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. கல்வியைப் பற்றிய அடிப்படையான நோக்கம் மாறியதையே சமயபாடத்தைக் கட்டாயபாடமாக்கிய இச் செயல் பிரதிபலிக்கின்றது. 1965 க்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே அதாவது 1955 இலேயே எல்லா அரசாங்க பாடசாலைகளிலும் சமயம் கட்டாய பாடமாக்கப் பட்டுவிட்டது. இலங்கைக் கல்விப் போக்கு சென்ற நாற்பது ஐம்பது ஆண்டுகளாக எங்கெங்கெல்லாமோ சுற்றிச் சுழன்று ஈற்றிலேதான் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இந்த நிலையை அடைந்தது. ஆனால் நாவலர் அவர்கள் நூறாண்டுகளுக்கு முன் எடுத்த எடுப்பிலேயே சமயக்கல்வியை மையமாக வைத்து ஏனைய யாவற்றையும் அதற்குத் துணையானவை யாக்கித் தம் கல்வித்திட்டத்தை அமைத்தார். பாட விதானத்தில் சமய பாடத்துக்கு நாவலர் கொடுத்த முக்கியத்துவத்தை நிலைநாட்ட ஆதாரம் தேடி அலையத் தேவையில்லை. கல்வி சம்பந்தமாக எழுதிய எழுத்து எதிலும், செய்த செயல் ஏதிலும் இந்த நோக்கமே மேலோங்கி நிற்பதை எவரும் எளிதாகக் காணலாம்.

மேனாட்டுக் கல்வி நிபுணர்கள் கல்வியின் நோக்கம்பற்றிப் பற்பல கோட்பாடுகளை இன்று வரையறை செய்து அவற்றுக்கு வெவ்வேறு பெயர்களும் கொடுத்துள்ளார்கள். சூழலைச் சிறந்த முறையில் பயன்படுத்துவற்கான பயிற்சியை அளிப்பதே கல்வியின் நோக்கம் எனச் சிலரும், புலனுகர்வுகளைப் பூரணமாக அனுபவிப்பதற்கு வேண்டிய யாவற்றையும் உற்பத்தி செய்யவும் பின் அவற்றைப் பூரணமாகப் பயன்படுத்திப் பூரண சுகம் பெறவும் பயிற்றுவதே கல்வியின் நோக்கம் என வேறு சிலரும், நிலையற்ற சரீரத்தைக் கொண்டு நிலையான ஆன்ம ஈடேற்றத்தை அடைவதற்கான வழிகளைப் பயிற்றுவதே கல்வியின் நோக்கமென இன்னும் சிலரும் கூறுவர். இவை தவிர இன்னும் வெவ்வேறு நோக்கங்களைக் கூறுவாரு முளர். இத்தகைய கோட்பாடுகளைக் குறிக்க ஆங்கிலத்திலே Pregmatism, Naturalism, Realism, Idealism எனப் பலபெயர்களும் வழங்குகின்றன. அண்மைக்காலத்தில் இலங்கைக் கல்வியாளர் ஒழுக்கத்தையும் ஆன்ம ஈடேற்றத்தையுமே கல்வியின் அடிப்படை நோக்கமாகக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். சமயபாடம் கட்டாயமாக்கப்பட்டமை, இரண்டு புதுப் பல்கலைக்கழகங்கள் சமய அடிப்படையில் தாபிக்கப்பட்டமை, இம்மாதம் அநுராதபுரத்தில் புத்த குருமாருக்கெனப் புதிதாக ஒரு பல்கலைக் கழகம் தொடங்குவது ஆகியவை யாவும் இப்போக்கை நன்கு புலப்படுத்துகின்றன.

நல்லொழுக்கத்துக்கும் ஆன்ம ஈடேற்றத்துக்கும் வழி வகுப்பதே கல்வியின் முக்கிய நோக்கம் என்பதே ஆறுமுக நாவலரின் திடவட்டமான முடிவு என்பதற்கு அவர் கல்வி சம்பந்தமாக எழுதிய ஒவ்வொரு அட்சரமும் சான்று பகருகின்றன. நூறாண்டுகளாகச் சரியான குறிக்கோளில்லாது எங்கெங்கெல்லாமோ திரிந்து நூறாண்டுகளுக்கு முன் நாவலர் கொண்டிருந்த முடிவுக்கே இன்றைய இலங்கை திரும்பிக் கொண்டிருக்கின்றது. நாவலரது தீர்க்க தரிசனத்துக்கு இதுவும் சான்றாகும்.

பாடநூல்கள் எழுதும் முறையில் முன்னோடி

சிறுவருக்குரிய பாட நூல்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் இன்று பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இங்கும் நாவலர் முன்னோடியாகவே இருந்திருக்கின்றார். வெற்று வசனங்களும் அதிக பயனில்லாத வசனங்களும் இல்லாமல் பொருள் பொதிந்த வசனங்களும், மேலே குறிப்பிட்ட கல்வியின் முக்கிய நோக்கத்துக்கு ஏற்ற வசனங்களும் கட்டுரைகளுமே அவர் எழுதிய பால பாடங்களில் அமைந்திருப்பது அவற்றைக் கூர்ந்து நோக்குவார் எவருக்கும் புலனாகும்.

பிரதிபேதமின்றிப் பதிப்பித்தல் - அண்மையில் 1959
நாவலர் செய்தது 1861

பழைய நூல்களைப் பதிப்பிப்பதும் கல்வித் துறையோடு மிக நெருங்கிய ஓர் அம்சமாகும்.

இங்கும் நாவலரது சிறப்பைக் காண்கின்றோம். ஆதிகாலத்தில் ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பாடல்களை அச்சிடும்போது பல ஏடுகளை ஒப்பிட்டுப் பரிசோதித்து அச்சிடுவதே வழக்கம். ஏட்டுக்கு ஏடு சிற்சில சொற்கள் மாறுபடக்கூடும். ஓர் ஏட்டிலே உள்ள ஒரு பாட்டில் காணப்படும் ஒரு சொல்லுக்குப் பதிலாக வேறோர் ஏட்டிலே வேறொரு சொல் காணப்படும். இவற்றுள் எது பாட்டைப் பாடிய புலவன் கையாண்ட சொல் என்பதை நிச்சயிப்பது சிரமமாயிருக்கும். அப் பாட்டை அச்சிடுவோர் ஓர் ஏட்டிலுள்ள சொல்லைப் பிரதி பேதம் எனக் குறிப்பிட்டு அடியிலே அச்சிடுவது வழக்கம். இவ்வாறு பிரதி பேதங்கள் அனேத்தையும் அச்சிடுவதே ஏற்றதெனப் பலரும் கருதி வந்தனர். முதலில் நல்லதெனக் கருதப் பட்ட இந்த முறை காலப்போக்கில் தொல்லையானதெனக் கருதப்படலாயிற்று. பாடலிலுள்ள சொற்கள் பலவற்றுக்குமேல் இலக்கங்களும் அடியில் அவ்விலக்கங்களுக்குரிய பிரதிபேதச் சொற்களும் நிறைந்து கற்போருக்கு, பெரும்பாலும் மாணவருக்குத் தொல்லையையும் மலைப்பையும் உண்டு பண்ணுவனவாயின. கோபாலகிருஷ்ண மாச்சாரியார் வெளியிட்ட இராமாயணத்தைப் பார்த்தால் பிரதிபேதப் பெருக்கம் தெரியும்.

பிரதிபேதச் சொற்களையும் பழைய ஏடுகளையும் மீண்டும் ஆராய்ந்து மிகப் பொருத்தமான சொல்லைமட்டும் ஏற்றுக்கொண்டு, ஏனைய சொற்களை அகற்றிவிட்டுப் பிரதிபேதமில்லாதபடி நூல்களைப் பதிப்பதே நல்லது என்ற எண்ணம் அண்மையிலே ஏற்பட்டது. இதன் விளைவாக அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே பல வித்துவான்கள், பண்டிதர்கள், எம்.ஏ.பி.எச்.டி. பட்டதாரிகள் பலரும் பல ஆண்டு முயன்று இராமாயணத்தைப் பிரதி பேதமில்லாமல் அச்சிட்டுள்ளார்கள்.

இந்த முயற்சியையும் நாவலர் நூறுண்டுகளுக்கு முன்பே செய்யத் தொடங்கி விட்டார். நாவலர் பதிப்பித்த திருக்குறள் ஒன்றே உதாரணத்துக்குப் போதும். பிரதிபேதம் இல்லாமல் நூலை வெளியிட்டதன் மூலம் நாவலர் இரண்டு சிறப்புக்களுக்கு உரியவராகின்றார். இவ்வளவு காலத்துக்குப் பின் இன்றைய அறிஞர்கள் அடைந்த முடிவை நூறுண்டுகளுக்கு முன்பே அடைந்தது முதற் சிறப்பு. இரண்டு அல்லது மூன்று சொற்கள் உள்ள இடத்து எது மிகப் பொருத்தமானது என்பதைத் துணிந்து கூறுவது இலகுவான செயலன்று. இன்று பல அறிஞர்கள் பலகாலம் ஒருங்கிருந்து ஆராய்ந்து செய்யும் அருஞ்செயலை அன்று ஆறுமுக நாவலர் தானே தனித்து நின்று செய்தமையே இரண்டாவது சிறப்பு.

படிமுறையாகப் பாடங்களையும் பாடநூல்களையும்அமைத்தல்,பல்கலைக்கழகங்களைநிறுவுதல், விரிவுரை (பிரசங்க) முறை மூலம் அறிவு புகட்டல், வித்துவான் பண்டிதர் பி. ஏ. முதலிய பட்டங்களுக்கான பரீட்சைகளை நடத்துதல், வயது முதிர்ந்தோருக்கு ஏற்ற போதனை வசதி அமைத்தல் (adult education), பிறமொழிகளிலிருந்து அறிவு நூல்களை மொழி பெயர்த்தல் ஆகியவை தற்காலக் கல்வித்துறையில் முக்கிய இடம் வகிப்பவை. இவை யாவும் இந்த நூற்றாண்டிலே விருத்தியடைந்தவை. ஆயினும் நாவலர் அவர்கள் கல்வி சம்பந்தமாகத் தொடங்கிய செயல்களையும் எழுதி வெளியிட்ட விக்கியாபனங்களையும் கூர்ந்து நோக்கினால் இங்கு குறிப்பிட்ட ஒவ்வொன்றைப் பற்றியும் சென்ற நூற்றாண்டிலேயே அவர் சிந்திக்கவும் செயற்படவும் தொடங்கிவிட்டார் என்பது புலனாகும்.

இவ்வாறு கல்வி சம்பந்தப்பட்ட பல துறைகளிலும் நாவலருக்கிருந்த தீர்க்க தரிசனத்தையும் ஒவ்வொரு துறையிலும் அவர் முன்னேடியாகத் திகழ்ந்த சிறப்பையும் உன்ன உன்னப் பெருவியப்பு ஏற்படுகின்றது. அவர் ஒரு சாதாரண மனிதர் அல்லர்; அசாதாரண ஆற்றல் கைவரப் பெற்ற ஓர் அதீதர் என்ற எண்ணமே மேலோங்குகின்றது.



நாவலரின் நூல் பதிப்புத் திறனை மெச்சி, அன்னரைக் கொண்டு திருக்குறள், திருக்கோவையார் முதலியவற்றைப் பதிப்பித்த இராமநாதபுரம் சமஸ்தான மந்திரி பொன்னுச்சாமி தேவர். நாவலருக்கு சாதரா சாத்திக் கௌரவித்தவர்.

— உபயம்: க. சதாசிவேல்.

நாவலர் சிவக்காவலர்

தவத்திரு நாவலர் தமிழ்மணிப் புரவலர்
சிவத்திரு நாவலர் சைவக் காவலர்
உள்ளந் தோறும் உருக்கொண் டுள்ளார்
தமிழும் சைவமும் தழைத்திடு மட்டும்
ஆறுமுக நாவலர் அமரராய் வாழ்வார்.
கச்சி யப்பரின் கந்த புராணமும்
சேக்கி ழாரின் செவ்விய வாக்கும்
விளங்கு மட்டும் விளங்கும் எங்கள்
நாவலர் பெருமை நவிலப் போமோ?
ஒள்ளிய தெள்ளிய வுரைநடை வகுத்தே
பால பாடம் நாலுடன் சைவ
வினவிடை இலக்கண விளக்கம் முதலா
முத்து முத்தாய் முத்தமிழ் வகுத்த
சித்தர் நாவலர் சிலையைத் தமிழர்
மனதொறு நாட்டி வழிபடத் தகுமே.
இன்றுநம் சைவம் இருக்கிற தென்றால்
அன்றவர் செய்த அருந் தொண்டாலே.
இன்று நந்தமிழ் இலகுவ தெனலாம்
அன்றவர் கோத்த அமர நூல்களால்!
திரு வாசகமும் திருமுறை நூல்களும்
புரா ணங்களும் புண்ணியச் செல்வமும்
வேதா கமக்கலை விரியறி வெல்லாம்
அளந்து கொடுத்தார் ஆறு முகனார்
அளப்பறு பெருமையின் அளக்கர் அவரே!
தமிழர் உய்யத் தமிழகம் உய்யப்
பேசினர், எழுதினர் பெருந் தொண்டாற்றினர்.
ஆசியால் நாமும் ஆளா னதுவே!
நாவலர் பெருமான் நாவலர் நாடகம்
எனும் இருநூலால் என்னுள் ளன்பை


நாவலர்க் களித்தேன்; பாவலர் புலவர்
ஆய்ந்தந் நூல்களை ஏய்ந்தன கொண்டே
ஆயிரக் கணக்கில் அச்சிட் டெங்கும்
ஆங்கிலந் தனிலும் ஓங்கிட விளக்கிப்
பெரியார் பெருமையைப் பேசுக நன்றே
எத்தனை எத்தனை இயற்பணி செய்தார்.
சைவத் திற்குச் சிகரம் போன்றார்
தமிழுக் கரியணை தந்தார்; தமிழர்
மரபு வாழ மாண்பணி புரிந்தார்
காலக் கேட்டைக் கலங்கிடத் தாக்கி
ஆலயத் திருத்தம் அஞ்சா திற்றினர்.
ஆகம விதிப்படி அரன் வழிபாடு
நடக்க வுக்கிய நாவலர் பெருமான்.
திருக்குறள் வழியே தீந்தமிழ் மக்கள்
ஒழுகி உயர்நிலை ஓங்கிடச் செய்தார்.
உலகெலாம் அவரிசை ஓங்குக நீடே
நாவலர் பெருமை நமக்கே பெருமை
நாவலர் வழியே நடந்துய் வோமே!

மாந்தளிர் மேனி யானை
மலர்விழி யழகி னனைத்
தீந்தமிழ் வாயி னனைச்
செபமணிக் கையி னனைக்
காந்தமின் சாரம் போலக்
கவர்ந்திடுந் தோற்றத் தானை
ஏந்திளை பரவி னனை
என்னுளே வணங்கி னேனே.

வரம்பெறு வாக்கி னனை
வஞ்சமில் நெஞ்சி னனை
உரம்பெறு மேனி யானை
உயர்சிவ சமயம் வாழ
நிரம்பிய பணிசெய் தானை
நீள்தவ வேள்வி யானைப்
பரம்பொருட் பற்றி னனைப்
பற்றினர் பற்றற் றாரே

நாவலர் அவரே யாவார்
நமதுசை வாகம த்தின்
காவலர் அவரே; இன்பக்
கனிதமிழ் அமுதம் ஊறும்
பாவலர் அவரே; எங்கள்
பைந்தமிழ் உலகை யாளும்
கோவலர் அவரே! வெற்றி
கொட்டுக முரச மிங்கே!

அ. வி. ம.



நாவலர் பெருமான் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்து தந்த படைப்புக்களைப் பற்றித் தமிழ் கூறு நல்லுலகம், அவருக்குப் பின் சென்று கழிந்த ஒரு நூற்றாண்டாக வியந்தும் நயந்தும் பேசி, அவருக்கு நன்றி தெரிவித்துள்ளது. பள்ளியிற் பயிலும் பச்சிளஞ் சிறார் முதற் பல்கலைக் கழகில் கள் வரையும் படித்துப் பயன் கொள்ளத்தக்க பல நூல்களை அப் பெருமான் ஆக்கியும், ஆய்ந்து அச் சேற்றியும் அளித்துள்ளார். இதனால், இளைஞரும் முதிர்ந்தோரும் இவரைத் தம் உசாத்துணையாகக் கொள்ளக் காணலாம். தமிழ் என்னும் கடலிலே இலக்கண வழுக்களாகிய பாறைகளையும், ஐயந் திரிபுகளாகிய சுழிகளையும் விலக்கி, இன்பமாக முன்னேறிச் சென்று எய்தவேண்டிய துறையை அடைவதற்கு இவருடைய படைப்புகளே எமக்கு ஏமப்புணையாக உதவுகின்றன.

கல்வியை வளர்த்துப் பரப்புவதற்கு வாழும் தமிழே வாய்ப்புடைய கருவியெனக் கண்டு பேச்சு வழக்கிலுள்ள தமிழை இலக்கண நெறிக்கமையச் செம்மைபடுத்தி, இனிய பல உரைநடை நூல்களை எழுதி உதவியவர் நாவலர். இவருடைய உரைநடை நூல்களிலே பண்டை உரையாசிரியர்களின் இலக்கணச் சீர்மையும் பேச்சு வழக்குத் தமிழின் நேர்மையும் கலந்துள்ள மையால், அவை காதுக்குங் கருத்துக்கும் இனிக் கின்றன. இன்று, பேச்சு வழக்கிலே பிழைபட வழங்கும் எத்தனையோ சொற்கள், சொற்றொடர் கள் ஆகியவற்றின் திருந்திய வடிவத்தை நாம் நாவலருடைய பாலபாடங்களிற் பார்க்கிறோம். அனுபானம், அந்தியேட்டி, சர்த்தி, புடவை, பூசினிக் காய், என்பன போன்ற சொற்களைத் திருத்தமாக எழுதத் தெரியாதவர், படித்தவருள்ளேயே பலர் இன்றும் இருக்கின்றனர். அநாதப் பிள்ளை (அ+நாத : தலைவனை இல்லாத) என்ற சொல்லை அநாதைப் பிள்ளை என்று எழுதுவோர் எத்தனை பேர்? முதற் புத்தகம் என்று எழுதுவதறியாமல் 'முதலாம் புத்தகம்' என்று பிழையாக எழுது வோர் எத்தனை பேர்? இருபத்து மூன்று, நூற்று மூப்பத்து மூன்று, ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பது என்பன போன்ற எண்ணுப் பெயர்களை 'இருபத்தி மூன்று' 'நூற்றி முப்பத்திமூன்று' 'ஆயிரத்தித் தொளாயிரத்தி ஐம்பது' என்று பிழையாக உச்சரிப்பதையும் எழுதுவதையும் நாம் நாளும் காண்கிறோம். இன்னைரன்ன சொற் களையும் சொற்றொடர்களையும் எவ்வாறு திருத்த மாக எழுத வேண்டுமென்பதை, நாவலர் முதற் பாலபாடத்திலிருந்தே கற்பித்துள்ளார். பிழை யில்லாமலே பேசப் பழகு என்பது நாவலரின் முதற் பால பாடத்திலே முப்பத்தேழாம் பாடத்திலே

வரும் பதினெராம் வாக்கியம். இப்பாலபாடங்களை முறையாகக் கற்றுவரும் மாணக்கர் **பாழ்ங்கிணறு, வரகுசோறு, புழுகுசம்பா, கீழ் காற்று, மேல் காற்று** (இவை முதற் புத்தகத்தில் வருவன) **ஏரிகரை, விறகு கட்டு** (இவை இரண்டாம் புத்தகத்தில் வருவன) என்பனபோன்ற சொற்றொடர்களைப் புணர்ச்சி வழுவில்லாது திருத்தமாக வழங்கப் பழகிக் கொள்வர்.

இனிப் பழைய சொற்களும், சொற்றொடர்களும் வாக்கிய அமைப்புக்களும் காலப்போக்கிற் புதுவடிவம் பெற்று, உலக வழக்கில் நிலைபெற்றுள்ள விடத்து, நாவலர் அவற்றையும் தழுவிக் கொண்டுள்ளார். **வெயில்** என்பது பழைய வடிவம்; **வெய்யில்** என்பது புதுவடிவம்; நாவலருடைய பாலபாடங்களில் வெய்யில் என்ற சொல்லே பலகாலும் பயின்று வருகின்றது. இவ்வாறே **வியர், வியர்வை** என்ற பழைய சொற்களுக்குப் பதிலாக, 'வெயர்வை' என்ற புதுவடிவத்தையே நாவலர் பெரும்பாலும் கையாண்டுள்ளார். குற்றுதல், பழையது; குத்துதல் புதியது. நாவலர், **அரிசி குற்றுகிறேன்** (முதற் புத்தகம் 13 ஆம் பாடம்) என்றும், **'நெற்குத்துதல்'** (நான்காம் புத்தகம், கற்பு) என்றும் ஆண்டு காட்டியுள்ளார். **'மற்று'** என்ற இடைச் சொல்லடியாகப் பிறக்கும் பெயரெச்சம் **மற்றை** என்று வருவதே பண்டை வழக்கு; பிற்காலத்தில் அது மற்ற என்று வழங்குகிறது. நாவலர் இரு வடிவங்களையும் ஆண்டுள்ளார்.

(உ-ம்) 1. **மற்றைப் பெண்கள்** என்றது கன்னியரையும் பிறன் மனைவியரையும் பொதுப் பெண்களையும். (நான்காம் புத்தகம் — வியபிசாரம்)

2. **மற்ற நாள்** உதய காலத்திலே சிவபத்தர்கள் எல்லாருங் கூடிவந்து, சுந்தரமூர்த்தி நாயனருக்குப் பரவையாரை விதிப்படி விவாகஞ் செய்து கொடுத்தார்கள். (பெரிய புராண வசனம்' சுந்தரமூர்த்தி நாயனர் புராணம். பக்கம் 21)

இவை 'கடிசொல்லில்லைக் காலத்துப் படினே' (தொல். எச்சவியல் சூ. 56) என்ற தொல்காப்பியர் விதியால் அமைத்துக் கொள்ளப்படும். இவ்வாறே ஏனைய வழக்குக்களையும் காணலாம்.

பொருஉப் பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமையை 'இன்' உருபு கொடுத்து எழுதுவதே பண்டை வழக்கு. தொல்காப்பியர் இதனை 'இதனின் இற்று இது' என்ற வாய்பாட்டால் விளக்குவர் (தொல். சொல். வேற்றுமை இயல். சூ. 16) நன்னூலாரும் 'இன்' (இல் என்பது இன் உருபின் வேற்றுவடிவம்) உருபே கூறியுள்ளார். ஆனால், இக்கால வழக்கில் இது வேறுபட்டு வருவதை உணர்ந்த நாவலர், தாம் எழுதிய இலக்கணச் சுருக்கத்திலே இப் புது வழக்குக்கு விதி செய்து தந்துள்ளார் (இவர் பொருஉப் பொருளை எல்லைப் பொருள் என்பர்.)

> ''ஒரோவிடத்து எல்லைப் பொருளிலே காட்டிலும், பார்க்கிலும் என்பவைகள், முன் ஐகாரம் பெற்றுச் சொல்லுருபுகளாக வரும்'' (இலக்கணச் சுருக்கம், அங்கம் 211)

'அவனைக் காட்டிலும் பெரியனிவன்' என்றும் 'இவனைப் பார்க்கிலுஞ் சிறியனவன்' என்றும் அவர் இதற்கு உதாரணமுங் காட்டியுள்ளார். ஆயினும், தம்முடைய பாலபாடங்களில் இந்த அமைப்புக்களோடு, இன்னுஞ் சில புதிய அமைப்புக்களையும் தந்துள்ளார்.


உ-ம்: 1. **என்னைப் பார்க்கினும்** அவன் நன்றாக வாசிப்பான்.

2. **பணத்தினும் பார்க்கப்** பெரியது நல்ல பெயர். (முதற் பாலபாடம், 28ஆம் பாடம்)

3. கல்வியும் அறிவும் நல்லொழுக்கமும் செல்வமும் அழகும் **தமக்குப் பார்க்கிலும் பிறருக்கு** மிகப் பெருகல் வேண்டுமென்று நினைத்தல் வேண்டும். (பாலபாடம், நான்காம் புத்தகம் நல்லொழுக்கம்)

இனித் தேற்றப் பொருள் தரும் **வேண்டும்** என்னுஞ் சொல் 'தல்' 'அல்' என்னும் ஈற்றையுடைய தொழிற் பெயரையடுத்து வருவதே பண்டை வழக்கு. உ-ம் போதல் வேண்டும், **உண்ணல் வேண்டும்.** (பார்க்க, நன்னூற் காண்டிகை உரை, சூ. 339) ஆனால், இக்கால வழக்கில் அச்சொல் (அதாவது வேண்டும் என்பது) செய வென்னும் வாய்பாட்டு எச்சச் சொல்லோடு (இதனை ஈறுதிரிந்த தொழிற்பெயர் என்பர் ஒரு சாரார்) சேர்ந்தே பெரும்பாலும் வரக் காண்கின்றோம். நாவலர் இருவகை வழக்கையும் ஒப்புக் கொண்டுள்ளார்.

உ-ம்: 1. இப்படிப்பட்ட கடவுளை நாம்.....எந்த நாளும் வணங்கித் **துதித்தல் வேண்டும்.** (பாலபாடம் முதற் புத்தகம், 45 ஆம் பாடம்)



1870-ம் ஆண்டில், நாவலர் இந்தியாவினின்றும் யாழ்ப்பாணம் திரும்பியபோது, நன்றியுடைய சைவப் பெருங்குடிகள் கடல்போல திரண்டு நாவலரை எதிர்கொண்டு அழைத்த இடமான ரேகுத்துறை.

— உபயம்: ந. சதாசிவன்.

2. நம்முடைய செயல்கள் அனைத்தும் சுருதிக்நம் யுக்திக்கும் இசைந்திருக்க **வேண்டும்** (பாலபாடம், இரண்டாம் புத்தகம், நீதிவாக்கியம். 31)

இவை ''புதியன புகுதல்'' என்ற விதியால் (நன்னூல் சூ. 462) அமைத்துக் கொள்ளப்படும். ஏற்கும் நிலையம் என்ற சொற்கள் ஏற்கு நிலையம் என்றுகாது, ஏல் நிலையமென்றே ஆகுமென இக்காலத்திற் சிலர் வாதிக்கின்றனர். இத்தகையோர், நாவலர் எழுதிய இலக்கணச் சுருக்கத்தின் 146 ஆம் அங்கத்தில்,

'மகரத்தின் முன் மெல்லினம் வரின், இறுதி மகரம், இருவழியினுங் கெடும்' என்று விதியிருப்பதைக் கண்டிலர் போலும். நாவலர், 'கற்குநூல்' போன்ற தொடர்களை வழங்கியுள்ளாராதலின், **'ஏற்கு நிலையம்'** என்பதும் ஏற்புடைத்தேயாகும்.

இக்காலத்தவர், 'ஏரிக்கரையிலே செம்படவர் மீன் உலர்த்துவர்' என்று எழுதுகின்றராயினும், நாவலர் 'எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்நியாசி ஒரு ஏரி கரை மேலே போனர்' (பாலபாடம், 2 ஆம் புத்தகம், கதை 1) என்றே எழுதிக் காட்டுகிறர். நன்னூற் காண்டிகை உரையிலே,

'இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
கசதபமிகும் **விதவாதன மன்னே** (சூ.165)

என்ற சூத்திரத்தின் உரைப் பகுதியில் நாவலர் பின்வருமாறு இதற்கு இலக்கணம் அமைத்துள்ளார்.

1. ''விதவாதன பெரும்பாலும் மிகும் எனவே, விதந்தன சிறுபான்மை மிகும் எனவும், விதவாதன சிறுபான்மை மிகா எனவுங் கூறினராயிற்று. அவை வருமாறு:

2. '' ஏரிகரை, குழவிகை, முழந்தகை 'பழமுதிர்சோலை மலைகிழவோனே' என்றும், கூப்புகரம், ஈட்டுநனம், நாட்டுபுகழ் என்றும் முறையே வேற்றுமையிலும் அல்வழியிலும் பின் **விதவாதன மிகாவாயின**''

இவ்விதியால், 'ஏரிக்கரை' என்றும் 'மலைக்கிழவோனே' எழுதுவது பிழையென்பது பெறப்படும்.

இனி, உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் வல்லின மெய்யின்முன் இயல்பாகும் என்ற விதியே தொல்காப்பியத்திலும், நன்னூலிலும் (சூ. 182) இலக்கணச் சுருக்கத்திலும் (அங்கம். 125) உளது.

இவ்விதிக் கமையவே, உருபுபுணர்ச்சி, வரகு சோறு, விறகுகட்டு, அரசுகட்டில், முரசுகண் என்றற்றொடக்கத்துச் சொற்றொடர்களை ஆன்றோர் வழங்கியுள்ளனர். ஆறுமுகநாவலரும் இவ்விதி பிழையாமலே எழுதியுள்ளார். ஆயினும், மரபுப் பெயர், மரபுச் சொல், மரபுத் தொடர் என்ற வழக்குகளை நாம் இக்காலத்திற் காண்கின்றோம். மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், சிவஞானமுனிவர் போன்ற சான்றோரே **மரபுப் பெயர்** என்ற தொடரை ஆண்டுள்ளனர் (பார்க்க: நன்னூல் (சூ. 274 மயிலைநாதர்), 275 (சங்கரநமச்சிவாயர்). இதனை 'விதவாதன மன்னே' என்ற இலேசினாலே அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

இனி, நாவலர் பதிப்பித்த நூல்களிலே அவர் கொண்ட சில பாடங்கள் வியக்கத்தக்கவை. அவை ஏட்டுப் பிரதிகளில் உள்ள பாடபேதங்களுள் நூலாசிரியர் கருத்துக்குப் பொருந்தியவை எவையென நுனித்துத் துணியும் நாவலருடைய நுண்மாணுழை புலத்துக்குச் சான்றாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக இரண்டொன்றைத் தருவாம். நாவலருடைய திருக்குறட் பதிப்பிலே,

'எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா
[முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு' (குறள் 110)

என்ற குறளுக்கு ஒப்புமைப் பகுதியாக, புறநானூறு, 34 ஆம் பாட்டு, அடிக்குறிப்பிலே காட்டப்பட்டுள்ளது, ''ஆன்முலையறுத்த.....'' என்று தொடங்கும் இப்புறப்பாட்டின் மூன்றாம் அடியைக் ''**குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்**'' என்றே நாவலர் காட்டியுள்ளார். இதற்கொப்பப் பரிமேலழகருடைய உரைப்பகுதியிலும் ''பெரிய வறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலையறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும் ''**குரவர்த் தபுதலும்** முதலிய பாதகங்களைச் செய்தல்'' என்ற வாக்கியம் வருகின்றது. இவ்வாறிருப்பவும் பிறர் பதிப்பித்த புறநானூற்றிலே, இச்செய்யுளடி ''பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்'' என்றே காணப்படுகிறது. அவர்கள், நாவலர் கொண்ட பாடத்தைப் பாடபேதமாகவும் காட்டினரல்லர். இனித் திருக்குறளைப் பதிப்பித்தோருள் வித்துவான் ச. தண்டபாணிதேசிகர் (தருமபுர ஆதீனப் பதிப்பு) ''**குரவர்த் தபுதலும்**''

என்றே பரிமேலழகர் உரைப்பகுதியைக் கொண்டுள்ளார்; ஆனால் பிறர் (சைவசித்தாந்தக் கழகப் பதிபபு) ''பார்ப்பார்த் தபுதலும்'' என்று அப் பகுதியைத் திருத்தியுள்ளனர். இது, பிற பதிப்புக்களிலுள்ள புறநானூற்றுப் பாடலை அடியொற்றிச் செய்யப்பட்டதாகலாம். ஆனால், முன்சொன்ன தண்டபாணி தேசிகர், தாம் காட்டும் ஒப்புமைப்பகுதியில் இப் புறநானூற்றுப் பாட்டைக் காட்டி, 'குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும் என்பது முன்னிய பாடம் போலும்' என்று அடிக்குறிப்பெழுதியுள்ளார். நாவலர் கொண்ட பாடமோ, பிறர் கொண்ட பாடமோ எது சிறந்ததென்பதை அறிவுடையோர் அறிந்து தெளிக.

இவ்வாறே, பத்துப் பாட்டில் வரும் திருமுருகாற்றுப் படையின் 38 ஆம் அடியை,

'கோழி யோங்கிய **வென்றடு விறற் கொடி**'

என்று பிறர் பாடங் கொண்டு பதிப்பித்துள்ளார். வென்று பின் அடுதல் என்று பொருள் கொள்வது சிறவாதெனக் கருதிய நாவலர், தாம் பதிப்பித்த திருமுருகாற்றுப்படை உரையிலே, இவ்வடியை 'கோழி யோங்கிய வேன்றடு விறற் கொடி' என்று பாடங் கொண்டு, என்று அடு என்று சொற்களைப் பிரித்து 'பகைவரை வஞ்சியாது எதிர்நின்று கொல்லும்' என்ற நச்சினார்க்கினியாரின் உரைப்பகுதிக்குப் பொருந்த வைத்துள்ளார். ஏட்டுப் பிரதிகளிலே எகரத்துக்கும் ஏகாரத்துக்கும் வேற்றுமையில்லாமையால், **வேன்றடு** என்பதையே **வென்றடு** என்றும் வாசிக்கலாம். பிறர் **வென்றுடு** என்று பாடங்கொண்டதையே நாவலர் **வேன்றடு** என்று பாடங் கொண்டு பதிப்பித்துள்ளார். நாவலர் கொண்ட பாடமே பொருளுக்குப் பொருந்துவதாயும் உயர்ந்த பொருள் தருவதாயும் உளது.

இனி, புறநானூறு 279 ஆம் பாட்டிலே,

'இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று **மயங்கி**
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்
[துடீஇ.....
ஒருமனல்ல திவ்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே.

என்ற பாடம் பிற பதிப்புக்களிலே காணப்படுகிறது. மறக்குல மாதொருத்தி மனந்துணிந்து தன் ஒரு மகனைச் செருக்களம் செல்ல விடுபவள் **மயங்கினள்** என்றல் பொருந்தாது. இது முயங்கி என்று இருத்தலே சிறப்புடைத்து. முயங்கி என்பதைப் பாடபேதமாகக் காட்டியுள்ளனராயின் அதுவே சிறந்ததாக ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கும்.

பொருட் சிறப்புள்ள பாடங்களை நாம் நாவலர் பெருமானின் பதிப்புக்களிலும் அவரை அடியொற்றிய புலவர் நூல்களிலும் கண்டு களிக்கலாம். அவர் செய்து வைத்த அருந்தொண்டு என்றும் மங்காது சிறக்க.

செந்தமிழ்ச் செல்வர்,
சைவ சமய சிரோமணி,
பேராசிரியர்,
வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம். ஏ., பி. ஓ. எல்.



மலர்தலே உலகிற் முக்கண்ணன் என்னும் பெயரால் குறிக்கப்படும் மூர்த்திகள் இருவர். ஒருவர் முழுமுதற் பரம்பொருளாம் சிவபெருமானும், அவர்தம் திருமகனாராம் விநாயகப் பெருமானும் ஆவர். இதனை ''முக்கண்ணன் என்றரனை முன்னோர் மொழிந்திடுவர்'' என்னும் வாக்காலும், ''மூன்று விழி நால்வாய் ஆனை முகன்'' என்னும் தொடராலும் முறையே சிவபெருமானையும், கணபதியையும் குறித்துப்பாடி இருப்பது கொண்டு நன்கு தெளியலாம். ஆனால், பொதுவாக முக்கண்ணன் என்றதும் மக்களுக்கு விநாயகப் பெருமானுடைய நினைவு எழாது. பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி யெம்மான் நினைவே உண்டாகும். அதுபோலத் தமிழகத்தும் -எந்நாட்டிடத்தும் - நாவலர் என்று குறிப்பிடத் தக்கவர்கள் ஒரு சிலர் இருப்பினும், நாவலர் என்றதும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் நினைவுதான் எவருக்கும் வருமே ஒழியப் பிறர் நினைவு வராது. இஃது உண்மை. வெறும் புகழ்ச்சி அன்று. காரணம் நம் யாழ்ப்பாண ஆறுமுக நாவலர் அவர்கள் அந்த அளவுக்குப் பொதுவாகத் தமிழ் நாட்டிலும் சிறப்பாகச் சைவ உலகிலும் பெயர் பெற்றுத் துலங்குபவர் ஆவார்.

நாவலர் என்னும் சிறப்புப் பெயர் அவர்க்கு ஏன் வந்துற்றது என்பதை யான் விளக்க வேண்டுவதின்று. அப் பெயரின் பொருளே அவருக்கு அப் பெயர்ப் பொருத்தத்தினை நன்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. நாவன்மையில், அதாவது பேச்சு வன்மையில் ஈடும் எடுப்பும் இன்றி இருந்ததனால் அன்றே அவர் அப்பெயரால் சிறப்பிக்கப்பட்டனர். இவர்தம் சிறப்புப் பெயர் இவருடைய இயற்பெயராகிய ஆறுமுகம் என்பதையும் தன்னுள் அடக்கிக் கொண்டது என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம். 'நாவலர்' என்றதும் யாவரும் ஆறுமுக நாவலர்தாம் என்று உணரும் நிலையில் அச்சிறப்புப் பெயர் அமைந்து விட்டது.

இத்தகைய சீருக்கும் சிறப்புக்கும் பெரும் புகழுக்கும் காரணராகிய நாவலர் அவர்கள் தமிழகத்திற்கும் சைவ உலகிற்கும் ஆற்றியிருக்கும் அரும் பெரும் தொண்டுகள் பற்பலவாகும். அவை இன்னின்ன என்று யான் எடுத்தியம்பப் புகின், ஏடு இடந்தராது. ஆதலின், அவர்தம் பலவாய தொண்டுகளிற் பதிப்பாசிரியப் பண்பாம் அத் தொண்டினை மட்டும் ஈண்டு எடுத்தியம்ப முற்படுகின்றேன்.

ஒரு நூலைப் பதிப்பிக்க முற்படும் பேரறிஞர் கள் நடுநிலையிலிருந்து பிறழக்கூடாது. உள் ளதை உள்ளவாறு பதிப்பிக்க வேண்டும். தம் போக்கிற்கும், கருத்திற்கும் மற்றும் பல கார ணங்களுக்குமாக மூல பாடத்தை மாற்றிப் பதிப் பித்தல் கூடாது. இங்ஙனம் மூலபாடத்தை மாற் றிப் பதிப்பித்த நூல்கள் பல உண்டு. இதற்கு இரண்டோர் எடுத்துக்காட்டுகளை ஈண்டுக் காண் போமாக.

இராயாமணத்தில், பாலகாண்டக் கடிமணப் படலத்தில் வரும்,

''என்று நான் முகன்முதல் யாவரும் யாவையும்
நின்றபே ரிருளினை நீக்கி நீள்நெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திடும்
தன்திரு நாமத்தைத் தானும் சாத்தியே.''

என்னும் பாடலை நோக்குக. ஈண்டு நாமம் என் பதற்கு திருமாலியர்கள் தம் நெற்றியில் இட்டுக் கொள்ளும் நாமம் என்று பொருள் கொண்டு, அதற்கேற்பச் சாற்றியே (சொல்லியே) என்று இருக்க வேண்டிய சொல்லை அணிந்து கொண்டு என்று வலிந்து பொருள் கொண்டு சாத்தியே என்றே பதிப்பித்துள்ளனர். நாமம் என்பதற்குத் திருமாலின் திருப்பெயர் என்னும் பொருளை எண்ணிலர்.

கம்பர் திருநாமத்தின் (திருமண்ணின்) சிறப் பைத்தான் எண்ணிப் பாடினர் என்பதற்கு ஆழ் வார்களின் அருள் வாக்குகளிலும் திருநாமத்தின் சிறப்பைப்பற்றி (திருமண் சிறப்பைப் பற்றி) ஒரு பதிகம் உண்டா? இல்லை. ஆனால், திருநாமத் தைப்பற்றிய (திருப்பெயரைப் பற்றிய) சிறப்பு ஆழ்வாரின் திருவாக்கில் உண்டு. ஆகவே, சாத்தி என்பது பாடம் அன்று; சாற்றி என்பதே சரி யானபாடம் என்பது தெரிகிறது அன்றே?

இவ்வாறே வில்லிபுத்தூரார் பாரதத்திலும் உள்ள மூலபாடத்தை மறைத்துப் பதிப்பிக்க முன் வருகின்றவர்களும் உண்டு. இதனையும் ஓர் எடுத்துக்காட்டால் நன்கு உணரலாம். வில்லி யாரது பாரத ஆரணிய பருவத்து அர்ச்சுனன் தவநிலை சருக்கத்தில் வரும்

''ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத்
தொருவன் அந்தப்
போரேனம் தனைத்தேடிப் புறப்பட்டான்.''

என்னும் பாட்டில் வரும் ''ஓர் ஏனம் தனைத் தேட'' என்னும் தொடருக்குத் ''திருமாலாகிய ஒப்பற்ற பன்றி தன்னைத் தேட'' என் னும் பொருள் இருத்தலின், அப்பொருளை மறைப்ப தற்கு ஓர் ஏனத்தை (ஓர் அம்பாகிய கருவியை) தேடி எடுத்துக் கொண்டு என்று பொருள் படும் படி தேட என்பதை தேடி என்று மாற்றியும் பதிப்பித்துப் பொருள் கூற முற்படுகின்றனர். இங்ஙனம் மூலபாடத்திற்கு மாறுகப் பாட பேதத்துடன் பதிப்பித்துள்ள நூல்கள் பற்பல.

இவ்வாறு மூலபாடத்தை மறைத்துப் பதிப் பிக்கும் போக்கு நம் நாவலர் பெருமானிடத்து ஒரு போதும் இலது. இது முக்காலத்தும் உண்மை. இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் நிறுவினால் உண்மை விளங்கும். திருக்குறளில் செய்ந்நன்றி அறிதல் என்னும் தலைப்பின் கீழ் அமைந்துள்ள பத்தாவது குறளாகிய

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'' [உய்வில்லை

என்னும் குறளுக்கு விளக்கம் தந்த பரிமேலழகர் ''பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன் முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்த தலும் பார்ப்பார்த் தபுதலும் முதலிய பாதகங்க ளைச் செய்தல்'' என்று விளக்கி இருக்கின்றனர்.

இங்குக்கூறப்பட்ட ''பார்ப்பார்த் தபுதலும்'' என்பதன் கருத்துக்குரிய மூல பாடம் குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும் என்பதே ஆகும். என்பதனை நிலை நாட்டும் முகத்தால் நம் நாவ லர் பெருமான் தாம் பதிப்பித்த திருக்குறள் பரிமேலழகர் உரை நூலின் அடிக்குறிப்பில் புற நானூற்றுப் பாடலையே எடுத்துக் காட்டிப் பார்ப் பாரைத் தபுதல் என்பது சரியான பாடம் அன்று என்பதை நாம் உய்த்து உணர நன்கு நிறுவியுள் ளனர். என்றாலும் தாம் பதிப்பித்துள்ள திருக் குறள் பரிமேலழகர் உரையில் ''பார்ப்பார்த் தபுதல்'' என்பதை மாற்றாமல்அப்படியே பதிப்பித் துள்ளனர். மாற்ற வேண்டும் என்று எண்ணி இருந்தால் ''பார்ப்பார்த் தபுதல்'' என்பதை ''குர வர்த் தபுதலும்'' என்று மாற்றிப் பதிப்பித்திருப் பார் அல்லரோ? நம் நாவலர் அவர்கள் பதிப் பாசிரியப் பண்பிற்கு உரியவர் ஆதலின், அவர் அவ்வாறு செய்திலர். இது குறித்தே நல்லறிஞர் கள் நாவலர் பதிப்புக்கு ஒரு தனிச்சிறப்புக் கொடுக்கின்றனர். இதற்குக் காரணம் நாவலர் பதிப்பிலே பிழை இராது என்பதே. இவர் தம் நுண் மாண் நுழை புலத்தின் மாண்பை அறிந்தே திரு. சி. வை. தமோதரம்பிள்ளை அவர்கள்.

''நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமிழ் எங்கே சுருதிஎங்கே-எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்கள் எங்கேப ரங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை.'' எனப் போற்றி னர்கள்.



சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய பணி புரிந்தவர் திரு. ஆறுமுகநாவலர் அவர்கள். அன்னார்க்குத் திருவுருவச் சிலை வைப்பது மிகவும் பொருத்தமாகும். இதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளுகின்றேன்.

பாதிரிமார் வேதநூல்களை மொழி பெயர்த்துப் பொதுமக்களிடையே தம் மதத்தைப் பரப்ப முயன்றபோது, அதற்கு மாற்றாக மக்களிடையே இந்து சமய உணர்ச்சியைப் பரப்ப, இந்துக்கள் இராமாயணம், பாரதம், போன்ற நூல்களை உரைநடையில் எழுதலாயினர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, ஆறுமுகநாவலர் அச்சகம் ஒன்றை நிறுவி, அதன் வாயிலாகச் சைவ நூல்களை நன்கு பதிப்பித்தார். சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியும் உரைநடை நூல்களை இயற்றியும் வளர்ச்சியின்றித் தளர்ச்சியுற்றுக் கிடந்த தமிழ் மொழிக்குப் புத்துயிரளித்தவரும் இவரே. குறிப்பாக, உரைநடைக்கு இவர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரிது. தாம் கற்ற பண்டை நூல்களிலிருந்து பல தொடர்களையும் செய்யுள்களையும் உரைநடையாக அமைத்து விடுதலே ''உயரிய'' செந்தமிழ் நடையெனக் கொள்ளப்பெற்ற காலத்தில், ஆறுமுக நாவலர், விளங்கக் கூடிய எளிய தமிழில், எழுதத் தொடங்கினர். தெளிந்த பொருளும் வீர உணர்ச்சியும் உரைநடையில் உண்டாகும் பொருட்டுக் குறியீட்டிலக்கணத்தைத் தமிழ் உரைநடையில் முதன் முதற் பயன்படுத்தியவரும் இவரே. இவர் மொழிபெயர்த்து இயற்றிய விவிலிய நூலிலும் (Bible) இவர் தமிழ் இலக்கங்களையே பயன் படுத்தியிருப்பது பாராட்டுக்குரியது.

இலக்கண வழு இல்லாத தூய்மையான எளிய நடையை முதன் முதற் கையாண்ட பெருமையும் நாவலருக்கு உரியது. ''வைதாலும் வழுவின்றி வைவாரே'' என்று இவரைப்பற்றி ஒருவர் புலம்பியதாகக் கூறுவர். இவருடைய உரைநடை நூல்கள் இன்றும் படித்து இன்புறத்தக்கனவாய் இருக்கின்றன. மேலை நாட்டுக் கல்வியின் பயனாக, ஆங்கில இலக்கிய நயங்களிற் கவர்ச்சியுடையவராய், நாவலர் அதன் நயங்களைத் துய்த்து இன்புறத் தொடங்கினர். அதனாலேயே, தமிழிலும் நல்ல உரைநடை நூல்கள் எழுத வேண்டுமென்ற ஆர்வம் இவருக்கு ஏற்பட்டது. மெதாடிஸ்ட் காட்சிசம் (Methodist Catechism) என்ற கிறித்தவ சமய நூலைப் பின்பற்றிச் சைவ வினா விடை என்னும் நூலை நாவலர் இயற்றினர், இலக்கண நூல் ஒன்றையும் வினாவிடை வடிவத்தில் பலரும் எளிதில் படித்து உணர்வதற்கேற்ப நாவலர் எழுதியுள்ளார். இவருடைய சைவ

வினா விடை, முதற் புத்தகத்திலிருந்து, ஒரு பகுதியைத் தருவோம். ஒரு சில வடசொற்களும் (மணிப்பிரவாள நடையும்) அக்காலத்து எழுத்துக்களிற் பெரு வழக்கில் இருந்தமை இதிலிருந்து தெரியவரும்.

கடவுளியல்

1. **உலகத்திற்குக் கருத்தா யாவர்?**
   சிவபெருமான்.

2. **சிவபெருமான் எப்படிப்பட்டவர்?**
   என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்.

3. **சிவபெருமான் ஆன்மாக்களுக்குச் செய்யுந் தொழில்கள் எவை?**
   படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றும்.

15. **பாவங்களாவன யாவை?**
   கொலை, களவு, கள்ளுக் குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், விபசாரம், சூதாடுதல் முதலானவைகள்.

நாவலர் மிகக் கடுமையான நடையிலும் எழுதியுள்ளார். இரவது கடுந்தமிழுக்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவோம். ஒருநாள், காலை 7-30 மணி அளவில், நாவலர் கடற்கரையில் நடந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு வீட்டில் தீப்பற்றிக் கொண்டது. அதைப்பற்றி நீதி மன்றத்தில் நாவலர் சாட்சி கூற நேர்ந்தது. ''தீப்பற்றியபோது எத்தனை மணியிருக்கும்? தாங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?'' என்று நீதிபதி நாவலரைக் கேட்டார். நாவலர் ஆங்கிலத்தில் மறுமொழி கூறியதை ஐரோப்பிய நீதிபதி விரும்பவில்லை; எனவே, மொழிபெயர்ப்பாளரைத் திணற வைக்கும் நோக்கோடு, கடுமையான தமிழ் நடையில் நாவலர் பின்வருமாறு விடை பகர்ந்தார்:

''அஞ்ஞான்று எல்லி எழ நானுழிப் போதின்வாய்
ஆழி வரம்பணித்தே
காலேற்றுக் காலோட்டப் புக்குழி''

இதை மொழி பெயர்க்க இயலாமல், நீதிமன்றத்திலுள்ள அலுவலர் தடுமாறினராம். பின்னொரு முறை, ஒரு கடையில், தேங்காய் விலை என்ன? என்று கேட்பதற்கு, ''அம்மையே நீவிர் தெங்கங்காய்களை மாறல் எங்ஙனமோ? என்றாராம்.

ஆறுமுக நாவலரின் நடையை மணிப்பிரவாள நடை என்றே சொல்லலாம் என்பது சிலர் கருத்து. சான்றாக அவரது திருவிளையாடல் வசனம், பெரிய புராண வசனம் ஆகியவற்றையும் பின்வருவனபோன்ற கடிதங்களையும் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

அன்னதானம் முதலிய தானங்களைச் சற்பாத்திரத்திலே செய்வது புண்ணியம், அசற்பாத்திரத்திலே செய்வது பாவம். சற்பாத்திரங்களுள்ளும், கருமயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது ஒரு பிறப்பளவு நிற்கும், தபோயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது நூரு பறப்பளவு நிற்கும், செபயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது மகாசங்கார காலமளவு நிற்கும். இதற்குப் பிரமாணம்—சிவதருமோத்திரம், நான்வது பலவிசிட்ட காரணவியல்.

(ரௌத்திரி வருஷம் வைகாசி மாதம் 21ந் திகதி நாவலர் எழுதிய முதல் விக்கியாபனத்தில் ஒரு பகுதி)

கவர்னர், கம்மிஷனர், கவர்ன்மெண்டு ஏசண்டு, சுப்பிரிங் கோட்டு யூரிமார், டிஸ்திறிக் கோட்டுப் பிறக்கிருசி, கிறிமினல் வழக்கு முதலிய சொற்றொடர்களை நாவலர் பயன்படுத்தியுள்ளார். இவற்றை இக்காலத்திற் பயன் படுத்த வேண்டுமென்று சொல்வது பெருந்தவறென்று அறிஞர் பலர் கருதுகின்றனர். இந்தக் கருத்துக்களில் ஓரளவு உண்மையிருக்கிறது. ஆனால், இலக்கிய நலன் ஆய்பவர்கள் உரிய ஆசிரியர் வாழ்ந்த சூழ்நிலை, காலம், அக்காலத்தில் இலக்கியம் இருந்த நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அவர்களுடைய நூல்களை ஆராய முற்படவேண்டும், அந்த அளவிற் பார்க்கும் போது, நாவலர் தமிழ்மொழிக்கு ஆக்கம் தந்திருக்கிறார் என்பதைத் தடையின்றி ஒப்புக் கொள்ளலாம். அவருடைய மொழிப்பணி பின்வரும் ஈரடிகளால் இனிது விளங்கும்:

''நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே? சுருதியெங்கே?''

— சி. வை. தாமோதரம்பிள்ளை

சுருங்கச் சொன்னால், ஆங்கில மொழியில் டிரைடன் என்பவர் உரை நடைக்குத் தந்தையாக விளங்குவது போலவே, தமிழ் உரை நடையின் தந்தையாக ஆறுமுக நாவலர் மிளிர்கின்றார். இதையொட்டியே, ''வசன நடை கைவந்த வல்லாளர்'' என்று கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இவரைச் சிறப்பித்திருக்கிறார். பாட்டுக்கொரு புலவன் பாரதியென்றால், உரை நடைக்கு ஒரு புலவன் ஆறுமுகநாவலர் என்று சொல்லத் தோன்றுகிறது.



1848-ம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் நாவலர் ஆரம்பித்த சைவப்பிரகாச வித்தியாசாலை. ஊர்தோறும் வித்தியாசாலை நிறுவும் பணியில் நாவலர் புரிந்த முதலாவது சாதனை இதுவாகும். வண்ணை மனோகரா திரைப்பட மாளிகை இருக்கும் இடத்திலே இந்த வித்தியாசாலை பூர்வத்தில் தாபிக்கப்பட்டது. இப்பொழுது இது, வண்ணை, நாவலர் வீதியில் இருக்கிறது.

க. சதாமகேசன்



"நாகரீகம் படைத்த மனிதனுக்குள்ள முதலாவது அறிவுத் தேவை புதினப் பத்திரிகை" என்றார் 'உதயதாரகையின் ஆரம்ப கருத்தாக்களுள் ஒருவரான பூர்பண்டிதர் (Dr. Daniel Poor). இற்றைக்கு ஒன்றேகால் நூற்றாண்டுக்கு முன்பு, யாழ்ப்பாணத்தில் அமெரிக்க சிலோன் மிஷன் இப்பத்திரிக்கையை ஆரம்பிக்க உத்தேசித்திருந்த பொழுது பூர் பண்டிதர் என்னும் அமெரிக்க மிஷனரி கூறிய இக்கூற்று நவநாகரீக வாழ்வில் புதினப் பத்திரிகையின் இன்றியமையாமையை இரத்தினச் சுருக்கமாக விளக்கப் போதுமானது.

புதினப் பத்திரிகை என்றால் என்ன? சமாசாரங்களை எழுத்து வடிவில் தரும் சாதனம் புதினப் பத்திரிக்கை. "எண்ணங்களின் போக்கு வரவை நடத்தும் பெரிய சாதனம் பத்திரிகைகள்" என்றார் கவியோகி சுத்தானந்த பாரதியார். இங்கிலிசில் புதினம் என்பது "நியூஸ்" (News) என்று வழங்கும். முன்னாட்களில் "நியூஸ்" என்பதற்குப் பதிலாக இன்ரெலிஜென்ஸ் என்ற சொல்லே இங்கிலிசில் புதினம் என்ற பொருள்பட உபயோகிக்கப்படுதல் பெருவழக்காக விருந்தது. இன்ரெலிஜென்ஸ் (intelligence) என்பது அன்று ஒற்றாடலைக் குறிக்கும் பொதுவான இங்கிலிசுச் சொல்லாகவும் இருந்தது. இச் சொல் பத்திரிகை உலகில் புதினத்தைக் குறிப்பது காரணத்தோடுதான். புதியனவாக வரும் தகவல்களுள் இராணுவ இரகசியங்கள் போன்றனவும் அடங்கும். பத்திரிகைகள் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தில், இத்துணை இரகசியங்களைப் பற்றிய தகவல்களைத் தந்தவர்கள் ஒற்றர்கள் ஆதலால், ஒற்றர்களின் பணியான ஒற்றாடலைக் குறிக்கும் இன்ரெலிஜென்ஸ் என்னும் இங்கிலிசுச் சொல்லு, (ஒற்றர்களின் தகவல் தரும் பணியை ஒத்த வேலையைப் பத்திரிகைகள் செய்யத் துவங்கிய திலிருந்து) புதினத்தைக் குறிக்கும் பொதுச் சொல்லாயிற்று.

"எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்"

என்னும் திருக்குறளுக்கேற்ப, உலக சமாசாரங்களைச் சரியாக அறிந்துகொள்ள வேண்டியது அரசனின் தொழிலாகும். அதனாற்றான், அரசர்கள், தங்களுக்கு உலக சமாசாரங்களை அறிவிக்கும் ஒற்றர்களைத் தமது ஊனக் கண்ணுக்குச் சமானமானவர்களெனக் கருதியதோடு அவர்கள் தம் சேவை நாட்டுக்குத் தேவை என்றும் கண்டனர். மக்களுக்காக, மக்களினால் மக்கள் ஆட்சி நடைபெறும் நியதியுள்ள இக் காலத்தில், எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை வல்லறிதல் முடி

சூடிய வேந்தன் தொழில் மாத்திரமன்று; முடி சூடா மன்னனுக விளங்கும் ஒவ்வொரு குடிமக னின் தொழிலுமாகும். ஆனல், அ தி கா ர ம் பெடத்த மன்னனுக்கு ஒற்றர்கள் நியமித்து அவர்கள் மூலமாகத் த ன க் கு த் தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்குள்ள வல்லமை குடி மகனுக்கு இல்லை. அப்படியென்றல், எல்லார்க் கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும் வல்லறி வதற்கான கடமையைக் குடிமகன் நிறைவேற்று வது எங்ஙனம்? இவ்விடத்திற்றன் பூர் பண்டிதர் போன்றவர்களின் புத்திமதி தேவைப்படுகிறது. ஆம். வேந்தனுக்கு ஒற்றர்கள் ஊனக் கண்ணுக விளங்குவதைப் போல, குடிமகனுக்குப் பத்திரிகை ஞானக்கண்ணுக விளங்குகிறது.

இன்று, தமிழ்ப் பத்திரிகைக்குப் பத்திரிகை உலகில் தக்க இடமுண்டு. சினிமா போன்று, அல் லது மேடை நாடகம் போன்று தமிழ்ப் பத் திரிகையும் எமது அபிமானத்திற்குப் பாத்திர மாக இருக்கிறது. ''பத்திரிகை உலகம் சன நாயக அரசின் நான்காவது உறுப்பு மண்டலம்''[1] என்ற உண்மையை நிரூபிக்கும்படியாகத் தமிழ்ப் பத்திரிகையும் இன்று உலக நடையில் உயர்ந் துள்ளது.

சமீபகாலத்தில் தமிழகத்தில் அரசியல் மாற் றம் உண்டுபண்ணிய சக்திகளுள் தமிழ்ப் பத்தி ரிகை குறிப்பிடத்தக்கது.[2]

பத்திரிக்கைக்கும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும் நெருங்கிய உறவுண்டு; கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், எண்ணச் சுதந்திரம் என்பன சனநாயக உ ல கி ல் ம னி த னி ன் அடிப்படை உரிமைகளாகக் கணிக்கப்படுவன. இவ்வுரிமைகளின் அ த் தா ட் சி ப் பத்திரங்கள் பத்திரிகைகள் என்றல் மிகையாகாது. தமிழ்ப் பத்திரிகைகளும் இப்படியானவை என்று சுட்டிக் காட்ட வேண்டியதில்லை. பத்திரிகைத் தமிழ், இவ்வடிப்படை உரிமைகளுக்காக நமது தமிழ் மொழி எடுத்த மறு அவதாரம் என்றலும் தகும்.

புனிதமான நிகழ்ச்சிகள்

க ரு த் து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு ஆதார சுருதியாகவுள்ளவை உலகில் அவ்வப் போது நிகழும் உண்மைச் சம்பவங்கள். சுதந்திரர் களாகிய பத்திரிகையாளர்கள் உண்மை நிகழ்ச் சிகளைத் தெய்வமாகப் போற்றுவர்;[3] உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பொது நன்மைக்காகத் தமது கருத்தை வெளியிடுவர்; உண்மை நிகழ்ச்சிகளைத் திரிக்காமல், மறைக்கா மல், உள்ளதை உள்ளவாறு கூறி நீதிவழிச் செல் வர். இவர்கள்தாம் இவ்வடிப்படை உரிமைகளின் பாதுகாவலர்கள். பத்திரிகைத் தமிழுக்கு வழி காட்டியவர்களுள் முக்கியமானவரான யாழ்ப் பாணத்து நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நீதி வழுவா நெறிமுறையில் வாழ்ந்த வர்கள் ஆதலால் அவர்களிடம் இப்பண்பு குடி கொண்டிருந்தது. இதற்கு உ தா ர ண மா க, அவர்கள் எழுதிய விடயங்களிலிருந்து ஒரு பகுதி யைத் தருகிறோம்.

''ஸ்ரீ குமாரசுவாமி,கொழும்பு சட்டநிரூபண சபையிலே ஒரு கேள்வி கேட்டார். அது என்ன?'' போன வருஷம் விளைவில்லாததினாலே இந்த வரு ஷம் விதை நெல்லுக்கு முட்டுப்படுகிற சனங் களுக்கு விதை நெல்லு கொடுக்கும் பொருட்டுக் கவர்மெண்டு கட்டளை செய்ததன்றே. அந்தக் கட்டளைப்படியே விதை நெல்லுக் கொடுக்கப் பட்டதா? எங்கெங்கே கொடுக்கப்பட்டது? அவ் விஷயத்திலே செய்துகொண்ட உடன்படிக்கை என்ன? என்றதுதான் அந்தக் கேள்வி..... நல்லது இந்தக் கேள்விக்கு கொலோனியல் சக்கிடுத்தார் கொடுத்தமறு மொழி என்ன?

அது இது — ''வடமாகாணத்து ஏ ச ண் டு சந்தேகமில்லாமல் விதை நெல்லுக் கொடுத்திருக் கிறார். விபரமாகிய அறிவிப்பு வேண்டுமானல் வருவிக்கப்படும்'' என்பதுதான்.

''என் அ ன் ப ர் க ளே, பார்ச்சுத்துரை கொடுத்த இந்த மறுமொழியைச் சற்றே சீர் தூக்கிப்பாருங்கள். என்ன துணிவுகொண்டு இந்த மறுமொழி கொடுத்தார்? தாம் யாது யாது தீங்கு செய்யினும் அந்தந்தத் தீங்கெல்லாம் தம் முடைய தலைமைக்காரர்கள் வாயிலாக மறைப் பித்துத் தாம் இனிது தப்புவித்துக்கொண்டு துள்ளுதலிலே உயர்வொப்பில்லாத பண்டிதர் நமதுதுவைவனந்துரைஎன்பதுபார்ச்சுத்துரைக்கு இனிது விளங்கும் போலும்.....''

நாவலர் 1877-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 22-ந் திகதி ''இலங்கை நேசன்'' (1-ம் புத்தகம், இலக்கம் 22) பத்திரிகையில் ''இது நல்ல சமயம்'' என்ற தலைப்பில் எழுதி வெளிப்படுத்திய விடயத் திலுள்ள இப் பகுதியை ஈருறுப்புக்களாகப் பிரித் தால், ஸ்ரீ குமாரசுவாமி சட்டநிரூபண சபையில் கேட்ட கேள்வியையும் அதற்குக் கொலோனியல் சக்கிடுத்தார் கொடுத்த மறுமொழியையும் ஒரு றுப்பாகவும் நாவலரின் கருத்துரையை இன்னொரு றுப்பாகவும் பிரிக்கலாம். முன்னைய உறுப்பி

லுள்ள கேள்வி நாவலருக்கு விருப்பமான கேள்வி யாகவும், மறுமொழி வெறுப்பானதாகவும் அமைந்தவை, அவற்றை நாவலர் புனிதமான உண்மைகளாகப் பாவித்து உள்ளதை உள்ள வாறே கூறி, பின்னைய உறுப்பிலே தம் கருத்தை உரைத்துள்ளார். இங்கே தம் கருத்து என்பது பொதுசனங்களுக்கு உபயோகமாகும் கருத் தாம்.

புதினம் என்னும் உயிர்நாடி

அறிவுச் சாதனமாகிய புதினப் பத்திரிகை யின் பிரதான பணி, சமாசாரங்களைத் தெரிவிப் தாகும்.[1] சமாசாரப் பத்திரிகையின் உயிர்நாடி யான அமிசம் செய்தி. செய்தி அல்லது புதினம் என்றால் என்ன? ''புதிய நிகழ்ச்சி எதனையுங் கொண்ட அறிக்கையே புதினம்''[2] என்பர். என் றாலும் புதினம் என்பதைப்பற்றிப் பல பொதுக் கருத்துக்கள் உள்ளன. இவற்றுள் சூடான புதி னம், குறித்து வைப்பதற்கான புதினம், விளக்கி உரைப்பதற்கான புதினம் ஆகியன அடங் கும்.[3] இக்கருத்துக்களுக்கு அமையும்படியாக, பல் வேறு வகையான புதினங்களையும் எழுதும் முறை நாவலர் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. உதா ரணமாக, 1865-ம் ஆண்டு நாவலர் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நிகழ்த்திய பிரசங்கத்தின் சரித்திர முக்கியத்துவம் காரண மாக அவர் அந் நிகழ்ச்சியைக் குறித்துப் பாது காக்க விரும்பினர். விரும்பவே சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையின் முதலாம் வருட ஆவேதனத்தில் நாவலர் பின்வருமாறு எழுதினர்.[4]

''.....மார்கழி மாதம் ரதோற்சவதினத்திற்கு முதற்றினமாகிய 27-ம் திகதி சோமவாரத்திலே நமது வித்தியாசாலையிலே வெகுஜன சமூகத்திலே அவர்கள் கூற்றுக்கள் எல்லாவற்றையும் கண்டித்து சைவாகமங்கள் முக்கிய பிரமாணங்க கள் என்றும், சிவதீக்ஷை உயர்வுடையதென் றும்..... ஆதியிலிருந்த தில்லைவாழந்தணர்கள் சிவதீக்ஷையும் சிவாகம உணர்ச்சியும் சிவாகமா நுஷ்டானமும் உடையவர்களென்றும், தற்காலத் திலுள்ள பூசகர்கள் சிவதீக்ஷையும், சிவாகம வுணர்ச்சியும் சைவானுஷ்டானமும் இல்லாதவர் களாய் இருந்து கொண்டு சிதம்பராலயக் கிரியை களைச் செய்தல், சிவவாக்கும் நடேசர் திருமேனி யுமாகிய சிவாகம்த்துக்கும் வியாக்கிரபாதமுனி வர் பதஞ்சலிமுனிவர் தில்லை மூவாயிரமுனிவர் என்பவர்களுடைய அனுஷ்டானத்துக்கும் விரோ தமே என்றும், பலசாத்திரப் பிரமாணங்கள் கொண்டு விரித்துப் பிரசங்கித்தேன்''. இச் செய்தி, குறித்துப் பாதுகாப்பதற்கான புதினத் தின்பாற்படும் (News as record).

சர்ச்சை

பத்திரிகை நடைத் தோற்றங்களுள் இன் னொன்று சர்ச்சையாகும். பத்திரிகைகள் பல தரப்பட்ட விடயங்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும். பத்திரிகைப் பணியின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான அமிசங்களுள் ஒன்று ''சர்ச்சை'' ஆகும். சர்ச்சைக்களத்திலே முரண் பட்ட கருத்துக்கள் மோதும்பொழுது, அவற் றைத் தாங்கிவரும் சொற்கள், சொற்றொடர்கள் ஆகியன சீவகளையுடையதாயிருக்கும். முரண் பட்ட கருத்துகளை மோதவிட்டு, முடிவில் மனத் தெளிவை உண்டுபண்ணுவதே சர்ச்சை செய்வ தன் அடிப்படை நோக்கமாகும். சர்ச்சையை இங்கிலிசில் (controversy) என்பார்கள். நாவலர் உதயதாரகை, இலங்கைநேசன், இலங்காபிமானி ஆகிய பத்திரிகைகளில் பல வாத விடயங்களை எழுதி, சர்ச்சை பண்ணுவதிலும் தமது கைவண் ணத்தைக் காட்டியுள்ளார்.

நாவலர் ''உதயதாரகையில்'' தமது தமிழ் உபாத்தியாயரான சரவணமுத்துப் புலவருடன் கூடி, களத்தூர் வேதகிரி முதலியாருடன் இலக் கண, இலக்கிய விடயமாகச் சர்ச்சை செய்தார். அதனால் நாவலரின் பெயர் தமிழ் நாட்டிலும் எட் டிற்று.[1] நாவலர் உதயதாரகையிலும் இலங்கா பிமானியிலும் இலங்கை நேசனிலும் பலதரப் பட்ட விடயங்கள் எழுதியவர். ''நாவலர், உதய தாரகை, இலங்கைநேசன் முதலிய சஞ்சிகைகளிற் பகிரங்கஞ் செய்த விடயங்கள் பல. அவற் றுள்ளே, சில கற்பவர்க்குத் திருத்தங் கொடுக்கும் வித்தியா விடயங்கள், சில பலர்க்கும் பொது வான திருத்தங்களையும் நன்மைகளையும் பயக்கும் விடயங்கள், சில தம்முடைய விடயங்களுக்கு மாறாய் எழுந்தவைகளைக் கண்டிக்கும் விடயங் கள், சில சைவநெறி நிறுவுதற்குக் காரண மான விடயங்கள், சில பரசமய விடயங்கள், சில வாத விடயங்கள்[2] உதயதாரகை 1841ல் ஆரம்பிக்கப்பட்ட ''மோர்னிங் ஸ்டார்'' என்னும் இங்கிலிசுப் பத்திரிகையின் தமிழ்ப் பக்கமாகும். ஆறுமுகநாவலர் விடய தானஞ் செய்த இலங்கைநேசன் பத்திரிகை எப் பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்று சரியாகச் சொல்ல முடியவில்லை. இலங்கை சாசனசாலைக்குக் கிடைத்த இலங்கைநேசன் பத்திரிகையின் ஆகவும் முந்திய பிரதி (''புத்தகம்'') 1877ல் கிடைத்ததாக அங்குள்ள இடாப்பு[3] வாயிலாக அறியக்கிடக்கிறது. இலங்கைநேசனில் நாவலர்

எழுதிய வாதவிடயங்களுள் ஒன்று ''ஓர் விளை வுக்கு விடை'' என்ற தலைப்பில் அமைந்தது. (இலங்கை நேசன் 1ம் பக்கம் இலக்கம் 22) அவ் விடயத்தில் கடைசிப் பந்தி இது.

''சனங்கள் கோயிலுக்கு வெளியே பொங்கிப் படைத்தலிலே தமக்கு அல்லது தம்முடைய சுற் றத்தாருக்கு அரிசி வரவு குறைகின்றதென்று மானிப்பாய் ''ஒரு சைவன்'' என்பவர் பதைபதைக்கிறார் போலும். பண்டாரங்கள் சனங் களுடைய அரிசியை வாங்கிச் சுவாமிக்கு நிவேத னத்திற்கும் அச்சனங்களுடைய பசிக்கும் உபயோ கப்படுத்தாது வீடு சேர்ப்பது சிவாகம சம்ம தமோ. சனங்கள் சுவாமி சந்நிதானத்திலே தாங்கள் சுசியோடு பொங்கி, மந்திரத் தோடா வது, மந்திரமில்லாமல் ''பிள்ளையாரே இதை ஏற்றுக்கொள்ளும்'' என்றுவது, தாங்களே பத்தி யோடு நிவேதித்துத் தாங்களும் தங்கள் குழந்தை களும் புசித்துப் பசித்து வந்த பிறருக்கும் கொடுத்து வீடு சேர்வது சிவாகம சம்மதமோ. சிவாகமம் வல்லவர்கள் வாய் திறக்கட்டும். கோயி லிலே சுவாமியைத் தீண்டிப் பூசை செய்ய உரிமை யில்லாத சாதியார்கள் சுவாமி சந்நிதானத்திலே தங்கள் தங்களுக்கு விதித்த இடங்களிலே பாவனை யாக அருச்சனை செய்து நிவேதிக்கலாம் என்பது சிவாகம விதி. அதிபாதகமாகிய தேவத்திரவியா பகார முதலிய பலபாதகமுஞ் செய்கிற போலிச் சைவர்கள், அதிபாதகத்திற்றுழ்ந்த, அதிபாதக துல்லியத்திற்றுழ்ந்த, மகாபாதகத்திற் றுழ்ந்த, உபபாதகதுல்லியத்துள் ஒன்றுகிய புலாலுண்ணல் செய்யுஞ் சூத்திரரில் உயந்தவர்களாமோ கெட்டி கெட்டி''.

''ஒரு நடுவன்'' என்ற புனை பெயரில் நாவலர் எழுதிய இவ்விடயம் நீதியான சர்ச்சையின் சிகரம் ஆகும்.

அறிமுகப் பாணி

பத்திரிகையில் பிரமுகரை அறிமுகஞ் செய் தல், படவிளக்கம் செய்தல், ஆகிய தேவைகளுக் குக் கையாளப்படும் பாணி தனிநடையுடையது. சிறிய வாக்கியங்களில் விடயத்தை இயன்ற அளவுக்குச் சுருக்கிச் சொல்லுதல் இந்நடைக்குரிய பொதுப்பண்பாகும்.

நாவலர், ''இலங்கைநேசன்'' (2ம் புத்தகம், இலக்கம் 6) பத்திரிகையில் ''வெகுசனத் துரோ கம்'' என்னும் தலைப்பில் எழுதிய விடயத்தில் அறிமுகப்பாணியின் சாயலைக் காணலாம். அப் பகுதி இது.

''முதலித்தம்பி சின்னத்தம்பி — இவர் பரம் பரைப் பிரபுவாகிய இராசவரோதயர் பேரர்; பிர சித்திபெற்ற கச்சாய் சின்னப்புவுடைய மருமகன்; மன்னர் கச்சேரி முதலியாராயிருந்த அருளம்பல முதலியாருடைய தம்பி; வரையாது கொடுக்கும் வள்ளல்; வேதாந்த சாத்திரப் பயிற்சி யுடையவர்''.

இப் பகுதி கம்பராமாணத்தில், விசுவாமித் திரர் இராமனைச் சனகனுக்கு அறிமுகப்படுத்து வதை ஞாபகப்படுத்தி, அறிமுகப்படுத்தும் முறைக்குக் கட்டளைக் கல்லாய் அமைந்திருக் கிறது.

''கிண்டல்'' நடை

பத்திரிகையின் நோக்கங்களுள் ஒன்று சமூ கத்தைச் சீர்திருத்துவதாகும். சீர்திருத்தப் பட வேண்டியவர்களைச் ''சந்திக்கு இழுத்து'' கிண்டல் செய்யும் பண்பும் பத்திரிகைப் பாணிக்குரியதாகும்.

நாவலர் தாமெழுதிய ''யாழ்ப்பாணச் சமய நிலை'' என்னும் சிறு பிரசுரத்தில் போலிச் சமயி களைக் கிண்டல் பண்ணும் பகுதியில் இந்நடை பலமுகமாக மேலோங்குவதைக் கவனிக்கலாம். அப்பகுதியைக் காட்டுதும்:

''பூசினிக்காய் எடுத்தவனைத் தோளிற் றெரி யும் என்றுற் போல ஒருபாயஞ் சொல்லுவேன் கேளுங்கள்.....இப்புத்தகத்தை வாசிக்கும் பொழுதுங் கேட்கும் பொழுதும் வாய் முறுத்தலி லும், உதடு துடித்தலிலுங், கண் சிவத்தலிலும், முகங் கறுத்தலிலும், சரீரம் படபடத்தலிலும் இடையில் எழுந்து ஓட்டம் பிடித்தலிலும் அவர் களை அறிந்து கொள்ளலாம். விடாதேயுங்கள்''.

இப் பகுதியை வாசிப்பவர்களுக்கு, நாவலர் குறிப்பாலுணர்த்தும் பேர்வழிகள் எழுந்து ஓட்டம் பிடிப்பதைப் போலவும் அவர்களைத் தாங்கள் துரத்துவதைப் போலவும் உணர் வுண்டாகும் அல்லவா?

கேள்வி பதில்

பத்திரிகையில், வாசகர்களுடன் நேரடியான தொடர்புண்டாகும் பகுதிகளுள் ஒன்று, ''கேள்வி பதில்'' பகுதியாகும். இப்பகுதிக்குப் பெயர்போன பத்திரிகைகளும் உண்டு. கேள்வி களுக்குச் சமயோசிதமாகவும், சுவாரஸ்யமாக வும், சுடச்சுடத் தக்கதாகவும் பதிலிறுப்பதில்



வண்ணார்பண்ணையில் நாவலரின் வித்தியாநுபாலன அச்சியந்திர சாலை இருந்த இடம். இன்றும் அன்னாரது நினைவுச் சின்னமாக விளங்குகிறது.

— உபயம்: க. சதாசிவசேன்.

நாவலர் கைதேர்ந்தவர். கந்தமடப்பிரபு என்பவர் ஒரு பத்திரிகை வாயிலாக நாவலரைக் கேட்ட கேள்விக்கு நாவலர் ''மித்தியாவத நிரசனம்'' என்னும் தலைப்பில் எழுதி வெளிப்படுத்திய சிறு பிரசுரத்தில் பதில் கொடுப்பதைக் காணலாம்.

நாவலர் அளித்த பதில் இது-

சைவப் பிரசாரகர் தமது சுற்றத்தார்களுட் சிலர் தமது போதனைக்கு அமைந்து நடவாமையினலே தாம் பிறருக்குப் போதிக்கலாகாது என்பாயாயின், ஒரு வைத்தியர் தமது சுற்றத்தாருட் சிலர் தாம் கொடுக்கும் மருந்தை உட்கொண்டு வியாதியைப் போக்கிக்கொள்ளாமையாலே பிறருக்கு வைத்தியம் செய்யலாகாது என்பாய் போலும்.

பொதுப் பாஷை

இன்று அநேக மொழிகளிலே பத்திரிகைகள் வெளிவருகின்றன. பத்திரிகைகள் பல்வேறு மொழிகளில் வெளிவந்தாலும், அவற்றிற்கெல்லாம் பொது மொழியாகவுள்ளது இங்கிலிசு மொழி. உலகப் பொது மொழியாக விளங்கும் இங்கிலிசு பத்திரிகையுலகப் பொது மொழியாகவுமுள்ளது. ஆகவே, பத்திரிகை உலகத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு இங்கிலிசு தெரிந்திருக்க வேண்டியது ஆவசியம். ஆறுமுக நாவலருக்கு இந்த அநுகூலமான நிலை வந்து வாய்ந்திருந்தது. நாவலர் இங்கிலிசு, தமிழ் என்னும் இரு பாஷைகளையும் நன்கு கற்றவர் என்னும் பெயரும் இங்கிலிசைத் தமிழ்ப்படுத்துவதிலும் தமிழை இங்கிலிசுப்படுத்துவதிலும் இவருக்கு நிகர் இவரே என்னும் பெயரும் இவர் பார்சிவல் பாதிரியாரின் (Peter Percival) இங்கிலிசுப் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே யாழ்ப்பாணம் முழுவதும் பரவிற்று.[1] இத்திறமை காரணமாகவே நாவலர் பார்சிவல் பாதிரியாரால் ''பைபிளை''த் தமிழாக்கும்படி பணிக்கப்பட்டார்.

மொழிபெயர்ப்புக் கலை

தமிழ்ப் பத்திரிகையில், குறிப்பாக, தமிழ்த் தினசரியில் வெளிவரும் விடயங்களுள் கணிசமான அளவு விடயங்களுக்கு இங்கிலிசிலுள்ள விடயங்களே மூலமாக இருக்கிறது. உள்நாட்டுச் செய்தித் தந்திகளும் பெரும்பாலும் இங்கிலிசிலேயே உள்ளன. இவற்றை, பத்திரிகைக் காரியாலயத்தில் உள்ளவர்கள், மொழிபெயர்க்கும் பொழுது, சம்பந்தப்பட்ட செய்தி ஒரு மொழி பெயர்ப்பு என்ற எண்ணமே வாசகர் மனதில் எழாதவிதமாகத் தமிழில் செய்ய வேண்டும். வேற்று மொழியிலுள்ள விடயத்தைச் சரியாக-ஐயந்திரிபற-அறிந்து, தமிழில் சிந்தித்து, தமிழில் எழுத வல்லவராலேயே இப்படி மொழி பெயர்க்க முடியும். ஆறுமுக நாவலருக்கு இத் திறமையிருந்தது. ''இவர் வேறொரு பாஷையிலே நினைத்து மீளத் தமிழில் எழுதுகிறவர் அல்லர்; தமிழிலே நினைத்து மீளத் தமிழிலே எழுதுகிறவர்''1. நாவலர், கிரேக்கம் (Greek) எபிரேயு (Hebrew) இங்கிலிசு ஆகிய மூலபாஷைகளிலுள்ள ''பைபிள்'' நூல்கள் வாயிலாக விடயத்தை அறிந்து, தமிழில் ஆக்கிய ''பைபிள்'' மொழிபெயர்ப்புக் கலைவண்ணத்துக்கு உதாரண நூலாகும். ''The Navalar Version of the Bible'' எனப்படும் ''நாவலர் பைபிளி''லிருந்து ஒரு பகுதியைத் தருதும்:-

''பூலோகத்தாரே நீங்களனைவரும் யெகோவாவை நோக்கி ஆனந்த முழக்கமிடுங்கள்-மகிழ்ச்சியோடே யெகோவாவுக்கு ஆராதனை செய்யுங்கள். துதிபாடிப்பாடி அவர் சந்நிதியிற் செய்யுங்கள்-யெகோவாவே தேவன், நம்மை சிருட்டித்தவர். அவர், நாமல்ல; நாம் அவர் சனம், அவர் மேய்க்கும் ஆடு; இதை உணர்ந்து கொள்ளுங்கள்-துதியுடனே அவர் வாசல்களிலும் வாழ்த்துதலுடனே அவர் பிரகாரங்களிலும் பிரவேசியுங்கள்-யெகோவாவே தயாபரர்; அவர் தயை என்றுமுள்ளது; அவர் சத்தியம் தலைமுறை தோறும் நிற்கும். ஆதலால் அவரைத் துதித்து அவருடைய நாமத்தை வாழ்த்துங்கள்''2

மொழிபெயர்ப்பு என்றல் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு நாவலரின் பைபிள் மொழிபெயர்ப்பு ஓர் உதாரணமாகும். மொழிபெயர்ப்பு என்றல் எப்படி அமைய வேண்டும் என்பதை, நாவலர் பத்திரிகைத் தமிழையும் மனதில் வைத்தே ஓரிடத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்: 3

''இங்கிலிசு மிக மலிந்த தற்காலத்திலே இரண்டு பாலுக்குற்றி என்று பொருள்படுகிற'' ''என்றதற்கு இரண்டு இரும்பு மரப் பூட்டு என்று கீழ்க் கோட்டிலே மொழிபெயர்த்து நகையாடப்பட்ட ஒருவர் தமது உத்தியோகத்தினின்றும் தள்ளப்பட்டாரோ''.

1874 ல் நாவலர் எழுதி வெளிப்படுத்திய ''மித்தியவாத நிரசனம்'' என்னும் சிறு பிரசுரத்தில் மொழிபெயர்ப்புச் சீர்கேட்டையிட்டு மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

இக்காலத் தமிழ்ப் பத்திரிகைகளில் மூடத் தனமான மொழி பெயர்ப்புகள் இல்லாமலில்லை. நாவலர் காட்டிய வழியில் தமிழ்ப் பத்திரிகையுல கத்தில் மொழிபெயர்ப்பைச் சாதிப்பதற்கு இன் னும் கனகாலம் பிடிக்கும் எனத் தோன்றுகிறது.

அயற் சொற்களும் பத்திரிகைத் தமிழும்

ஒரேமொழி பேசும் மக்கள், உலகின் பல பாகங்களிலும் சிதறி வாழ்ந்தாலும் அவர்களை யெல்லாம் ஓர் இனத்தவர்களென்ற உணர்வுடன் பிணைத்து வைத்திருக்கும் சத்திகளுள் பத்திரிகை யும் ஒன்றாகும். விஞ்ஞானத்தின் வேகத்தில் உல கம் சுருங்கிவரும் இக்காலத்தில் முழு உலகவிட யங்களையும் பிரதிபலிக்கும் மிகப்பெரிய சாதன மான பத்திரிகையில் அயற் சொற்கள் சொற் றொடர்கள் ஆகியன விரவுதல் இயல்பானது,

தமிழ்ப் பத்திரிகை இதற்கு விதிவிலக்கல்ல. உதாரணமாக பத்திரிகையுலகப் பொது மொழி யான இங்கிலிசிலுள்ள சொற்கள் சொற்றொடர் கள் முதலியன பத்திரிகைத் தமிழில் விரவுதல் தவிர்க்க முடியாது. தினசரிப் பத்திரிகையில் உல கச் செய்திப் பக்கம், விளையாட்டுப் பக்கம் ஆகிய பக்கங்களில், துருப்பு (troop), கமிட்டி (committee), கிறிகட் (cricket), சம்பியன் (champion) ஆகிய இங்கிலிசுச்சொற்களைக் காண லாம். தவிர விஞ்ஞானம், நுண்தொழில் சம்பந்த மான புதிய கருத்துக்களைக் கொண்ட புத்தகம் புதிய அயற்சொற்களைப் பத்திரிகைத் தமிழுக்கு அறிமுகம் செய்து கொண்டிருக்க வேண்டுமாத லால், இவ்வழியாகவும் தமிழ்ப் பத்திரிகையில் அயற்சொற்கள் விரவும்.

தமிழ் நடையும் இங்கிலிசு நடையும்

இவ்வாறுக வேற்றுமொழிச் சொற்கள் அவ் வப்போது பத்திரிகைத் தமிழில் விரவுமாதலால், அவற்றை நாவலர், காட்டிய வழியில், அவற்றின் பொருள் முக்கியத்துவத்திற்கும் ஆயுட்கால வரம்புக்கும் ஏற்றவாறு தமிழ் நடைப்படுத்தி யேனும் தமிழ் நடைப்படுத்தாமல் · இங்கிலிசு நடையிலேனும் எழுதலாம்.

ஆறுமுக நாவலர் தமது பத்திரிகைத் தமி ழிலே சில இடங்களில் அயற் சொற்களாகிய இங் கிலிசுச் சொற்களைத் தமிழ் நடைப்படுத்தியும், ஏன்னும் சில இடங்களில் இங்கிலிசு நடையிலும் எழுதியிருக்கிறார். உதாரணமாக, கொலீஜ் (college) என்னும் இங்கிலிசுச் சொல்லைக் கலீசு என்று தமிழ் நடைப்படுத்தியும், றிப்போர்ட் (report) என்னும் இங்கிலிசுச் சொல்லை இறிப் போர்ட்டு என்று தமிழ் நடைப்படுத்தாமல் அப் படியே இங்கிலிசு நடையில் எழுதியும், அவ்வச் சொற்களின் பொருள் முக்கியத்துவத்திற்கும் ஆயுட்கால வரம்புக்கும் ஏற்றவிதமாக எழுதியுள் ளார்.

இயற் சொற்கள்

நாவலர் வேற்றுமொழிப் பிரயோகங்களைத் தமிழ்ப் பத்திரிகையில் கையாண்டவிடத்திலும், அவற்றிற்குச் சமமான தமிழ்ப் பிரயோகங்களைக் கையாண்ட விடத்திலும் பொது மக்களிடத்தில் இயல்பாக எழுந்த பிரயோகங்களைக் கையாண் டார். உதாரணமாக, இங்கிலிசில் ''ஜேர்ண லிஸ்ட் (journalist), '' நியூஸ் பேப் பர் மன்'' (newspaperman) என்பன பத்திரிகைக் கலைஞ ரைக் குறிக்கும் ஒரு பொருட் சொற்களாகும். இவற்றுள் ஜேர்ணலிஸ்ட் என்னும் சொல், பெரும்பாலும், பத்திரிகையுலக வழக்காகவும், நியூஸ் பேப்பர்மன் என்னும்சொல் உலக வழக் காகவுமுள்ளன. இவற்றுள் முதலாவது சொல் ''பத்திரிகையாளர்'' என்றும் இரண்டாவது சொல் ''பத்திரிகைக்காரர்'' என்றும் தமிழில் வழங்கும். இப்பொருள்படும் சொல்லை நாவலர் தமிழ்ப் பத்திரிகையில் கையாளவேண்டிய விடத்தில் ''பத்திரிகையாளர்'' என்னும் பிர யோகத்தைத் தவிர்த்து, பொது மக்களிடத்தே இயல்பாக எழுகின்ற ''பத்திரிகைக்காரர்'' என்ற சொல்லையே கையாண்டார். உதாரணமாக நாவ லர் ''இலங்கை நேசன்'' (1 ம் புத்தகம், இலக் கம் 22) பத்திரிகையில் ''இது நல்ல சமயம்'' என்னும் தலைப்பில் எழுதி வெளிப்படுத்திய விட யத்தில் வரும் ''கமிஷனர்களுடைய றிப்போர்ட் டுப் புத்தகம் பொய் பொதிந்தது என்பது உங்களுக்குத் தெரியும்; பத்திரிகைக்காரர்க ளுக்குத் தெரியும்'' என்னும் வாக்கியத்திலுள்ள ''பத்திரிகைக்காரர்கள்'' என்னும் இயற்சொல்லைக் கவனிக்கவும்.

திசைச் சொற்கள்

பத்திரிகைத் தமிழிலே திசைச் சொற்கள் பல் கிப் பெருகி விரவிவரும் இயல்புண்டு. ஆறுமுக நாவலர் காலத்திலிருந்தே இவ்வியல்பு இருந்து வருகிறது. என்றாலும் நாவலர் தமது பத்திரி கைத் தமிழில் ஆவசியகம் வேண்டற்பாலன வாகிய திசைச் சொற்களையே கையாண்டார். உதாரணமாக, நாவலர் ''இலங்கை நேசன்'' (முதலாம் புத்தகம், இல. 22) பத்திரிகையில் இது நல்ல 'சமயம்' என்ற தலைப்பில் எழுதிய விடயத்தில் ஒரு பகுதியைத் தருதும்-

''. . . .யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு (college). அதற்குத் தலைவர் (Principal) துவைனந்துரை; உபாத்தியாயர்கள், ''பாவந் தோன்றிய நாளையிற் ரேன்றிய பதகன்'' ஆகிய சில உத்தியோகத்தர்கள். அவர்கள் படிப்பிக்கிற தாலுகா பள்ளிக்கூடங்கள் (Taluk schools.) சில தலைமைக்காரர்களுடைய தானங்கள்'' ''தாலுகா'' என்னும் இந்துஸ்தானிச் சொல், தமிழில் கூற்றகம் என்ற பொருள்படும் திசைச் சொல்லாகும்.

''நாவலர் அவர்கள் இத்திசைச் சொற்களைப் பெரிதும் வழங்காதிருந்தமை, இவை ஒன்றிரண்டாய்ப் பலவாய் மலிந்து, தனித்தமிழ் மொழியின் தொன்னலம் மங்கி, நாளடைவில் புதுவதோர் பாஷையாக மாறிவிடும் என்ற ஐயப்பாட்டினாற் போலும்''. என்று பிரமஸ்ரீ சோ. ராமஸ்வாமி சர்மா எழுதிய ''நாவலர் வசன நடை'' என்னும் நூலில் கூறியுள்ளார்.

நாவலரின் பத்திரிகைத் தமிழில் திசைச் சொற்கள் மிகவும் சிறுபான்மையாக இருத்தலே அவர் அவற்றை அதிகமாக உபயோகித்தலே விரும்பவில்லை என்பதற்குச் சான்றாகும். ஆனால் தமிழ்ப் பத்திரிகைகளில் திசைச் சொற்கள் வரவரப் பல்கிப் பெருகி வருகின்றன. ''நகல் மசோதா வாபீஸ்'', ''சாக்கார் ராஜினாமா?'' என்பன போன்ற செய்தித் தலைப்புக்களையும் மாமூல், அமுல், ஜாமீன், இலாகா, வக்காலத்து, ஆஜர், ரோந்து, லேவாதேவி, சிப்பந்தி, வாரிசு என்பன போன்ற சொற்களையும் (இந்துஸ்தானிச் சொற்களை) தற்காலத் தமிழ்ப் பத்திரிகைகளில் சர்வ சாதாரணமாகக் காணலாம்.

இக்காலத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் கண் மூடித் தனமாகத் திசைச் சொற்களை மேன் மேலும் அள்ளிச் சொரிந்து வருகின்றன. ஆற்றை நீந்திக் கடக்க முற்பட்டவன் மரக்கட்டை என்றெண்ணி முதலையைக் கட்டிப்பிடித்த கதை போல, நாம் சொற்பஞ்சத்தைச் சமாளிப்பதற்காகத் திசைச்சொற்களை தஞ்சம்புகுந்த வரலாறு தமிழ்ப் பத்திரிகையுலகில் உருவாகாது பார்த்துக் கொள்ளவேண்டியது, இக்காலப் பத்திரிகைகளின் பொறுப்பாகும்.

பத்திரிகையின் கடமை

பத்திரிகையின் கடமை சனங்களுக்குப் பொது நன்மை செய்வது என்று ஆறுமுக நாவலர் கூறியுள்ளார். 1. பத்திரிகை செய்ய வேண்டிய பொது நன்மைகளுள் ஒன்று மக்களின் தாய் மொழியைப் பேணி வளர்ப்பதாகும். பத்திரிகைத் தமிழ், தாய் மொழியாகிய தமிழை வளர்க்க உதவ வேண்டும். பத்திரிகைத் தமிழ், தாய்மொழியாகிய தமிழினின்றும் பிரிந்து வேறுபட்டுச் செல்லும் ''புதுவதோர் பாஷையாக'' வளரக் கூடாது. அப்படி அது வளர்ந்தால் தாய் மொழிக்கு ஆபத்தாக முடியும்; வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் கொண்டு போன கதையாக முடியும். பத்திரிகைத் தமிழ் தாய்மொழியை வளம் படுத்துவதற்குப் பதிலாக, புதுவதோர் பாஷையாகப் பரிணமித்துத் தாய் மொழியை விழுங்கினால், தாய் மொழிக்கு நட்டமில்லை; தமிழ் பேசும் மக்களுக்கே நட்டமாகும். இன்று விடயமறிந்த வாசகர்கள் இதனை உணர்ந்துள்ளனர். வாசகர்களின் கல்வியறிவு ஓங்கிவரும் இக்காலத்தில் அவர்கள் இவ்விதம் உணர்வது இயற்கையானதே. இன்றைய வாசகர்கள் (பத்திரிகை ஞானமுள்ள வாசகர்கள்) பத்திரிகை நல்ல தமிழில் எழுதப்பட வேண்டுமென்று விரும்புகின்றனர். நல்ல தமிழ் செந்தமிழ். செந்தமிழ் என்பது செவ்விய தமிழ். [2]

கொடுந் தமிழ்

நமது புதுத் தமிழ் வளர்ச்சியை மனங் கொள்ளாத பத்திரிகைகளே கொடுந் தமிழை எழுதி, தமிழைக் கெடுத்து வருகின்றன.

இப் பெயர்ப்பட்ட பத்திரிகைகள், இழி சொற் பிரயோகங்களைக் கையாளுவதற்குக் காமம் சம்பந்தப்பட்ட விடயங்கள் நல்ல வாய்ப்பளிக்கின்றன. கொடுந்தமிழை ஊக்கும் பத்திரிகையை வாசிக்கக்கூடாது. ''தீய பத்திரிகைக்குத் தூண செய்கிறவன் தீமையை விருத்தி செய்கிறவன்'' என்று நாவலர் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

பின்னுரை

சென்ற நூற்றாண்டில் ஆறுமுக நாவலர் பெருமான் செந்தமிழ் விடயமாகப் பல முயற்சிகள் செய்தனர்[1]; தமிழ்ப் பத்திரிகைகளிலும் இவ்விடயமாக இயன்றவரை சாதித்தனர். அவர் படிக்கும் காலத்திலேயே செந்தமிழ் இயக்கங் கண்டவர்.[2]

பண்டைத்தமிழ் இலக்கியத்தோடு ஒட்டிய ''கடினமான'' நடையில் எழுதுவதற்கு நாவலருக்குப் பூரணமான ஆற்றலிருந்த போதிலும் அவர், தற்காலத் தமிழுக்கேற்ற வகையில் இலகு

வான செந்தமிழ் எழுதிப் பத்திரிகைத் தமிழுக்கு வழிகாட்டினர்.

பத்திரிகைத் தமிழை, எழுத்துப் பிழை, சொற் பிழை, வசனப் பிழை முதலிய சாதாரண இலக்கணப் பிழையின்றி, இயன்ற அளவு தமிழ் நடையில் சாதாரண எழுத்து வாசிக்க அறிவுள்ள வர்களும் சிரமமின்றிப் புரிந்து கொள்ளத்தக்க முறையில், எளிய செந்தமிழில், நாவலர் எழுதி யுள்ளார்.

தமிழக அரசின் முன்மாதிரி

வாசகர்கள், தமிழ்ப் பத்திரிகைகளில் நல்ல தமிழ் எழுதப்பட வேண்டும் என்று எதிர்பார்க் கின்றனர். அதே சமயம், இன்று தமிழ் நாட்டில் நல்ல தமிழைப் பேணிப் பாதுகாத்து, வளர்ப்பது இராச்சியக் கொள்கையாகி, நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது. ஆகையால், பத்திரி கைத் தமிழின் எதிர்காலம் ஒளிமயமாவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆறுமுக நாவ லர் அவர்கள் தமிழ் மொழி விடயமாகக் கண்ட கனவு நனவாகும் அறிகுறிகள் காணப்படுகின் றன. திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் பதவியேற்றதும் முதலிற் செய்த காரியங்களுள் ஒன்று, (1967-ம் ஆண்டு புதுவருடப் பிறப்பன்று) சென்னை அரசாங்கக் காரியாலயத்தின் முன்னிலை யில் ''சென்னை அரசாங்க செக்கிறிரேறியட்'' என்ற பெயர்ப்பலகையில் எழுதப்பட்டிருந்த பெயரை ''தமிழக அரசு தலைமைச் செயலகம்'' என்று தூய செந்தமிழில் மாற்றி எழுதியதாகும். காலம் சென்ற தமிழக முதலமைச்சர் சி. என். அண்ணாத்துரை அவர்களே புதிய பெயர்ப் பல கையைத் திறந்து வைத்து, தமிழக அரசின் தூய செந்தமிழ்க் கொள்கையை அடையாளமாக வலு வுக்குக் கொண்டு வந்ததிலிருந்து இக்கொள்கை இன்று தீவிரமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழக அரசின் தூய செத்தமிழ்க் கொள்கை பத்திரிகைத் தமிழிலும் பிரதிபலிப்பது இயல்பா னதே. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பீ டம் ஏறுவதற்கு முன்னமேயே, அக் கட்சிப் பத்திரி கைகளில் தூய செந்தமிழ் மயக் கொள்கை பிரதிப லிக்கத்துவங்கிவிட்டது. உதாரணமாக, 15-2-67ல் வெளியான ''நம்நாடு'' தேர்தல் சிறப்பிதழில், அடங்கிய விடயங்கள் ''ஞாயிறு போற்றுதும் எழு ஞாயிறு போற்றுதும்'' என்ற தூய செந்தமிழ்த் தலைப்புடனே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்கே, ''எழு ஞாயிறு'' என்பது, தி. மு. கழகச் சின்ன மான ''உதயசூரியனை''க் குறிப்பது. பத்திரிகைத் தமிழில், செய்தி சேகரிப்பவரைக் குறிக்கும் ''நிருபர்'' என்னும் வட சொல்லுக்குப் பதிலாக, ''செய்தியாளர்'' என்ற செந்தமிழ்ச் சொல்லை தி. மு. க. பத்திரிகைகள் பிரயோகித்து வருகின் றன. உதாரணமாக, 18-2-67ல் வெளியான ''நம்நாடு'' பத்திரிகையில் ''காமராசருடன் சென்ற செய்தியாளருக்கு மதுபானம்'' என்று வரும் செய்தித் தலைப்பிலுள்ள ''செய்தியாளர்'' என்னும் செந்தமிழ்ச் சொல்லைக் குறிப்பிடலாம். இவ்வாறான அறிகுறிகளை முன்னிட்டுப் பத்திரி கைத் தமிழ் செந்தமிழ் மயமாகி, நன்னெறி யத னிற் செல்லத் தலைப்பட்டுவிடும் என்று துணிந்து கூற இடமுண்டு. இது வரவேற்கத் தக்கது.

பத்திரிகைத் தமிழைச் செந்தமிழ் மயமாக் கும் பொழுது ஆறுமுக நாவலர் காட்டிய வழி யில் செல்வது நலம்.

---

1. Frank Luther Mott, historian of American Journalism, in his book, ''A Free Press'', says as follows:– ''This doctrine of the indispensability of mass communication has been generally accepted. Considerably more than a hundred years ago, it became customary to refer to newspaper as the 'Fourth Estate' of the government because, the English Parliament was said to be composed of 'three estate - the Lords Spiritual, the Lords Temporal and the Commons. 'But', wrote Macauly in 1828, 'the gallary in which the reporters sit has become a 'Fourth Estate'. Later, Carlyle attributed a similer remark to Edmund Burke.''

2. நம்நாடு, முரசொலி, தினமணி, தினத்தந்தி, மாலைமுரசு, மித்திரன் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். 5-3-67ல் வெளியான ''மாலைமணி''யில் (பக்கம் 7) ''பத்திரிகை களின் பணி'' பற்றிய பகுதி பார்க்க.

3. It was an independent Journalist called C. P. Scott of the ''Manchester Guardian'' who said, facts are sacred but comment is free.''

1. It was the '' pectator'' which proclaimed in 1822 that the chief object of the newspaper is to convey intelligence.

2. ''News is the report of any new thing'', defines Frank Luther Mott.

3. According to Frank Luther Mott, there are at least eight concepts of news, which invite our attention They are:- (1) News as timely report (2) News as record (3) News as objective fact (4) News as interpretation (5) News as human interest (6) News as picture (7) News as prediction (8) Sensational news.

4. த. கைலாசபிள்ளை எழுதிய ''ஆறுமுகநாவலர் சரித்திரம் (பக்கம் 84) பார்க்க.

1. த. கைலாசபிள்ளை எழுதிய ''ஆறுமுகநாவலர் சரித்திரம்'' (பக்கம் 10-11) பார்க்க.

2. சுன்னகம் குமாரசுவாமிப் புலவர் இயற்றிய ''தமிழ்ப் புலவர் சரித்திரம்'' பக்கம் (38 பார்க்க).

3. இலங்கைச் சாசன சாலையிலுள்ள (List of Tamil & Malayali news paper) இடாப்பின் படி இச்சாசன சாலைக்குப் பின்வரும் ஆண்டுக் கிரமப்படி, சென்ற நூற்றாண்டில், பதியப்பட்ட பத்திரிகைகள்:

1864 உதயதாரகை, 1865 பாலியர்நேசன், 1868 இலங்கை பாதுகாவலி, 1870 புதினதிபதி, 1873 புதினலங்காரி, 1876 கத்தோலிக்க பாதுகாவலன், 1877 இலங்கை-நேசன், 1880 உதயபானு, 1882 விஞ்ஞான வர்த்தினி (Intellectual Preceptor), 1882 முஸ்லிம் நேசன், 1884 சைவாபிமானி, 1885 சன்மார்க்க போதினி, 1886 சர்வஜன நேசன் (Universal Friend). 1866 இலங்கை தினவர்த்தமானி, 1889 இந்துசாதனம் 1895 இஸ்லாம் மித்திரன், 1896 மாணவன்.

1. த. கைலாசபிள்ளையின் ''ஆறுமுகநாவலர் சரித்திரம்'' (பக்கம் 9) பார்க்க.

1. த. கைலாசபிள்ளையின் ''ஆறுமுகதாவலர் சரித்திரம்'' (பக்கம் 73) பார்க்க.

2. ''பழைய புதிய உடன்படிக்கைகள் அடங்கிய வேதப் புத்தகம். இஃது இங்கிலாந்து முதலிய சருவதேசச் சங்கத்தின் உத்தரவின்படி மூல பாஷைகளிலிருந்து மொழி பெயர்த்து முந்திய பெயர்ப்புக்களைக் கொண்டு பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகரம் அமெரிக்க மிஷன் அச்சுக் கூடத்தில்பதிப்பிக்கப்பட்டது (1850)''. இவ்வாக்கியங்களைக்கொண்ட முகப்பையுடைய இந் நூலின் 99 ம் தோத்திரம் (Psalm 99) பார்க்க.

3. ''மித்தியாவாத நிரசனம்'' பார்க்க (நாவலர் பிரபந்தத் திரட்டு-இரண்டாம் பாகம், பக்கம் 129).

1. நாவலர் தமது காலத்திலேயே பொதுமக்களிடத்தில் பத்திரிகை ஞானத்தைப் பரப்பப் பிரசாரம் செய்தவர். உதாரணமாக, ''இலங்கை நேசன்'' (2 ம் புத்தகம், இலக்கம் 6) பத்திரிகையில் ''வெகுசனத் துரோகம்'' என்ற தலைப்பில் நாவலர் எழுதிய விடயத்தில், ''பத்திரிகையின் கடமை யாது? சனங்களுக்குப் பொது நன்மை செய்வது'' என்று வரும் வினாவிடையைக் கூறலாம். ''நிய பத்திரிகைக்குத் துணை செய்கிறவன் நீமையை விருத்தி செய்கிறவன்'' என்று கூறி ''வெகுசனத் துரோகம்'' என்னும் விடயத்தை நாவலர் முடிப்பது கவனிக்கத் தக்கது.

2. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம் சிறப்புப்பாயிர உரை பார்க்க.

1. ஆறுமுக நாவலர் 1870ல் இந்தியாவினின்றும் யாழ்ப்பாணம் திரும்பியபோது தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில்,

''செந்தமிழ் விஷயமாகவும் சைவ விஷயமாகவும் தாம் ஏதும் அற்பத் தொண்டு புரிந்திருந்தால் அத்தொண்டு எல்லாம் வல்ல இறைவனது திருவருட் குரியதாகும் என்றும் எவருள்ளமும் உருகும் வண்ணம் கனிவுடன் பேசி முடித்தார்'' என்று 22-2-1870ன் ''இலங்காபிமானி'' பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

2. ''அந்தக் காலத்திலே அப்பள்ளிக்கூடத்திலே.....சுத்த செந்தமிழ் பேசுவதிலும் எழுதுவதிலும் இவருக்குச் சமமாக ஒருவருமில்லை என்னும் பெயரும் யாழ்ப்பாணம் முழுவதும் பரம்பின'' (த. கைலாசபிள்ளையின் ''ஆறுமுக நாவலர் சரித்திரம்'', பக்கம் 9 பார்க்க.)

ஏற்ற வழிகாட்டி

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் தமது சைவப்பிரகாச வித்தியாசாலைகளின் பொருட்டுப் பிரசுரம் செய்த பாலபாடங்கள் செந்தமிழ் நடையிலே செவ்விதின் எழுதப் பெற்றவை. இவைகளில் நான்காவது பாலபாடம், செம்பாகமான உரை நடையிற் பயில விரும்பும் தற்கால மாணவர்க்கு நல்ல நடைவண்டியாக இரா நின்றது. தோரணியாகச் சரித்திரம் கதை முதலிய எழுதுவதற்கான நடைபயில வேண்டுவார்க்கு, நாவலருடைய பெரியபுராண வசனம் ஏற்ற வழி காட்டியாக இரா நின்றது. இவர் இயற்றிய ஏனை வசன நூல்களாவன, திருவிளையாடற் புராண வசனம்—கோயிற் புராண வசனம்—சிதம்பர மான்மிய வசனம்—இலங்கைப் பூமிசாஸ்திரம்—கந்த புராணத்தில் ஒரு பகுதி முதலியனவாம்.

கல்லூரி மாணாக்கர்கள், தமிழில் வசன நடையிற் பழகி, தாங்கள் எழுதவேண்டிய வியாசங்களைச் செம்மையாக எழுதுவதற்கு ஆதர வாகத் தக்க சில தமிழ் வசன நூல்களைக் குறித்துக் கொடுக்குமாறு, வருஷந்தோறும் தமிழாசிரியர்களைக் கேட்பதுண்டு. என்னளவிலே அவர்களை நான் ஒதும்படி சொல்வதெல்லாம், முறையே பஞ்சதந் திரம், விநோதரச மஞ்சரி, ஆறுமுக நாவலருடைய பெரிய புராண வசனம், நான்காவது பாலபாடம் என்பவை.

தி. செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ.

''தமிழ் வியாசங்கள்''

செ. வேலாயுதபிள்ளை
கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.



நாவலரது இலக்கணப் பணி, அவரது கல்விப் பணியின் ஒரு கூறாகும்; அவரது கல்விப் பணியே தமிழ்ப்பணியுமாகும்; இப்பணியோ அவரது சைவப்பணியின் கூறாகும். ஆகவே, நாவலரது இலக்கணப் பணியை ஆராயுமிடத்து, அதனை இந்தச் சார்பில் வைத்து நோக்குதல் இன்றியமையாதது. இல்லையேல், அதனை நாம் முழுமையாக விளங்கிக் கொள்ளல் இயலாது. நாவலர் புதுமையாக ஒன்றை நாட்ட முயன்ற வரல்லர். தொன்று தொட்டு வந்த சைவத்தை நிலை நாட்டுவதே அவரது குறிக்கோள். சைவத்தை நிலைநாட்ட முயன்ற போது, அதனோடு ஒருங்கியன்ற தமிழையும் தமிழர் கல்வி முறையையும் அவர் நிலைநாட்ட வேண்டியவ ராஞர். நம்மவர் தொன்மையை மறந்து, அன்னிய நாகரிகத்தில் அழுந்திய காலத்தே அவர் தோன்றியவராதலாற் பழமையைப் பாதுகாப்பது அவரது கடமையாயிற்று. காலத்தை யொட்டி அவர் சில புதுமைகளைப் புகுத்தி யுள்ளார் என்பதையும் நாம் மறத்தலாகாது. அவ்வாறு அவர் புகுத்திய புதுமை, நமது மரபுச் செல்வம் இயல்பாக வளர்ந்து வருங்காலத்து நிலைபெறுவதற்கு வழிவகுத்து விட்டது.

இலக்கணம் கருவி நூல்

கல்வியின் பயன் கடவுளை அடைதல் என்பது தொன்று தொட்டு நம்மவர் போற்றிய கொள்கையாகும். இந்தக் கொள்கை,

> ''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றா ளொழாஅ ரெனின்'' (குறள், 2)

என வள்ளுவர் வாய்மொழியாக வெளிவந்து, பழந் தமிழரின் கல்வி முறையைத் தலைமுறை தலைமுறையாக உருவாக்கியுள்ளது. இதனால் நம்முன்னோர் கற்றற்குரிய நூல்களை அறிவு நூல்க ளெனவும் கருவிநூல்களெனவும் வகுத்தனர். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்கள் அறிவுநூல் களாம்; அந்நூல்களை அறிதற்குக் கருவிகளாய நிகண்டு, இலக்கணம், தருக்கம் முதலியன கருவி நூல்களாம் [1]. கருவி நூல்களின் துணையோடு அறிவுநூல்களைக் கற்று, கற்றபடி நின்றொழுகி, இறைவன் நற்றாள் சேருவதே கல்வியின் முடிந்த பயனும். இந்த ஒழுங்கிலே இலக்கணக் கல்வியும் இறுதியில் வீடுபேற்றுக்குத் துணைசெய்வதாகும். இதனை,

''எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னுகும் —
மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற்
பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்'' [2]

என்னும் பழம் பாடலொன்று தெளிவுபடுத்து கின்றது. ஈண்டு எழுத்தென்றது இலக்கணத்தை.

தமிழ்க் கல்வியில் இலக்கணம் பெறும் இடம்

மொழித்திறத்தின் முட்டறுத்தற்கு இலக் கணம், தருக்கம் என்னும் இவை இரண்டும் இன்றி யமையாதன. இலக்கணத்தை எழுத்தென்றலும் தருக்கத்தை எண்ணென்றலும் பண்டையோர் வழக்கு. வள்ளுவர்.

''எண்ணென்ப வேனை யெழுத்தென்ப
விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு'' *(குறள், 392)*

என்றும், ஔவையார்,

''எண்ணெழுத் திகழேல்'' *(ஆத்திசூடி, 7)*
''எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்''
(கொன்றைவேந்தன், 7)

என்றும் இவற்றை வற்புறுத்தியுள்ளனர். 'எண்' என்பது கணிதம் என்பர் பரிமேலழகர். ஆறுமுக நாவலரும் இக்கொள்கை பற்றியே மேற் காட்டிய ஔவையார் சூத்திரங்களுக்குப் பொருள்கூறி யுள்ளார். ஆயினும், அவர் பதிப்பித்த திருக் கோவையார் உரையிலே, ''ஏரணங்காணென்ப ரெண்ணர்'' என்று வருஞ் சிறப்புப் பாயிரச் செய்யுட் பகுதிக்கு எழுதிய குறிப்பிலே, 'எண்' என்பது தருக்கநூலுக்குப் பெயர் என்று எழுதி, அதனை வலியுறுத்துவதற்குப் பரமத திமிரபானுத் திருக்குறளையும் வடநூல் வழக்கையுஞ் சான்று காட்டியுள்ளார். 'எண்' என்பதற்கு எவ்வாறு பொருள் கொள்ளினும், 'எழுத்து' என்பது இலக்கணத்தையே குறிக்குமென்பதில் எவருக் குங் கருத்துவேறுபாடில்லை. மொழியின் வளத்தை யும் பொருளுணர்த்தும் ஆற்றலையும் அறிந்து, உண்மைப் பொருள் தெளிவதற்கு இலக்கணக் கல்வி இன்றியமையாததென்றே எம்முன்னோர் இதனைப் போற்றி வந்தனர்.

நாவலர் போற்றிய இலக்கண மரபு

தமிழ் மொழி மிகப்பழங் காலந்தொட்டே செவ்விய இலக்கண வரம்புடையதாய்த் திகழ்ந்து வருகின்றது. மொழியியல்புக்கும் பகுத்தறிவுக்கும் ஒத்தவகையில் அமைந்த இதன் இலக்கணம் இதன் வளர்ச்சிக்கு ஊறு செய்யாது, உறுதுணை யாயிருந்தமையால் எத்தனையோ ஆண்டுக்கால மாக இது தன் இயல்பிற்றிரியாது, இளமை குன்றாது, என்றுமுள தென்றமிழாகப் பயின்று வருகின்றது. வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்ட முதனூலையுடையது தமிழ் [3] என்ற கொள்கை தொல்காப்பியர் காலந் தொட்டே நிலவி வருகின்றது. சிவபெருமானே தமிழ்க் கழகத்தில் ஒரு புலவராயமர்ந்து தமிழா ராய்ந்தார் என்ற மரபு இறையனர் களவி யலுரைப் பாயிரத்திலே பதிவு செய்யப்பட்டுளது. திருவிளையாடற் புராண முடையார் தமிழின் பெருமை பேசுமிடத்து இதனை விதந்தெடுத் தோதுகின்றார்:

''கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ
டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பகுந்தமிழ்னை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா
மொழிபோல்
எண்ணி டப்படக் கிடந்ததா வெண்ணவும்
படுமோ'' [4]

இஃது உண்மையாக, புனைந்துரையாக; தமிழ்ச் சைவ உலகிலே இந்த மரபு உறுதியாய் நிலை பெற்றுள்ளது. ஆரியமும் செந்தமிழும் தம்முள் ஒத்த பெருமையுடையன வென்பதும், இரு மொழிக்கும் கண்ணுதலாரே முதற் குரவ ரென் பதும் சைவர்களின் உறுதியான நம்பிக்கை, ஆறுமுக நாவலர் தமது நான்காம் பால பாடத்திலே, 'தமிழ்' என்னுங் கட்டுரையில் இவ்வாறு எழுதியுள்ளார்:

''சமஸ்கிருதம், தமிழ் என்னும் இரண்டு பாஷைக்கும் முதலாசிரியர் சிவபெருமான். சிவபெருமான் சமஸ்கிருதத்துக்கு இலக்கண நூல் பாணினி முனிவருக்கும், தமிழுக்கு இலக்கணநூல் அகத்திய முனிவருக்கும் அருளிச்செய்தார். அம்முனிவர்கள் இருவரும் முறையே அம்முதனூல்கள் இரண்டின் வழி யாகப் பாணினீயம், அகத்தியம் என்னு நூல் களை அருளிச் செய்தார்கள்..... சமஸ் கிருதமும் தமிழும், சிவபெருமானாலும் இருடி களாலும் அருளிச்செய்யப்பட்ட இலக்கண நூல்களை உடைமையாலும், ஆன்றோர் களாலே தழுவப்பட்டமையாலும், தம் முள்ளே சமத்துவமுடையனவேயாம்.'' [5]

அகத்தியம் என்னும் முதனூலொன்று இருந்ததா என்று இன்று ஆராய்ச்சியாளர் ஐயங் கொள்கின்றனர்; ஆரியம் வேறு, தமிழ் வேறு



சைவ உலகின் தலைமைப் பீடம் போன்ற திருவாவடுதுறை ஆதீனம். இங்குதான், 1849-ம் ஆண்டு, ஆறுமுக நாவலருக்கு அருங்கலை விஞ்ஞைதரான சின்னச் சன்னிதானம் சுப்பிரமணிய தேசிகர், '' நாவலர் '' என்ற பட்டம் சூட்டிக் கௌரவித்தார்.

— உபயம் : கு. சதாசிவன்.

என்றும் அறுதியிட்டுக் கூறுகின்றனர். ஆயினும், இன்று எமக்குக் கிடைத்துள்ள பழைய இலக்கண மான தொல்காப்பியத்திலே, அக்காலச் சான் றோர் இருமொழிகளையும் ஒப்பக் கற்றுவந்தனர் என்பதற்குச் சான்றுண்டு. இளம்பூரணர் முத லாகத் தொல்காப்பியத்துக்கு உரைகண்ட பழந் தமிழ் ஆசிரியர் எல்லாரும் இரு மொழியறிவும் உடையவராகவே காணப்படுகின்றனர். இவர்கள் அறிந்தோ, அறியாமலோ அளவு கடந்து தமிழிலே ஆரியமொழிக் கொள்கைகளைப் புகுத்தி விட்டனர் என்று இக்கால மொழியியலறிஞர் குற்றமுங் கூறுகின்றனர். ஆனாற் காலப் போக்கில் வளர்ந்த இந்த இலக்கண மரபே நிலைபெற்று விட்டது. தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியார், சேனவ ரையர், தெய்வச்சிலையார், கல்லாடனார் என்று பலர் உரை வரைந்துள்ளனராயினும், இவர் களுள் இருமொழியும் நிலைகண்டுணர்ந்தவரான சேனவரையர் உரையையே அறிஞருலகம் இன்று வரையும் ஆதரித்து வருகின்றது.

நன்னூலும் சிவஞான முனிவர் இலக்கண மரபும்

தொல்காப்பியம் பரந்து விரிந்த இலக்கண மாய் அமைந்திருத்தால், அதனைச் சுருக்கியும், இடைக்காலத்து மொழிவளர்ச்சியைத் தழுவியும் பவணந்தி முனிவர் பதின்மூன்றும் நூற்றாண்டிலே மாணாக்கரின் பொருட்டு நன்னூல் என்னும் சிற்றிலக்கண நூலொன்றைச் செய்தார். பவணந்தி முனிவர் சைன மதத்தவராயிருந்த போதும், சைவத்தமிழுலகம் அதனை வரவேற்றது. பதினேழாம் நூற்றாண்டிலே தடித்த சைவப் பற்றும் வடமொழிப்பற்று முடையவராய் விளங் கிய சுவாமிநாத தேசிகர் தாம் செய்த இலக் கணக்கொத்து என்னும் நூலிலே தமது சைவப் பற்றுக் காரணமாக நன்னூலை ஓரிடத்துப் பழித் துக் கூறியவர் பிறிதோரிடத்திலே அதன் பெருமை பேசவுந் தயங்கவில்லை:

'இலக்கணமாவது தொல்காப்பிய மொன்றுமே' என்றும், நன்னூல் கற்பது 'வாணாள் வீணாள்' கழிப்பதாகும் என்றும் தமது பாயிரத்தின் முற்பகுதியிற் கூறிய தேசிகர், அடுத்து ''முன்னூலொழியப் பின்னூல் பலவி னுள் நன்னூலார்தமக் கெந் நூலாரும் இணையோ வென்னுந் துணிவே மன்னுக'' என்று அதன் பெருமை பேசுகிறார்.[6] இவ்வாறு தேசிகர் முன் பின் முரணுகக் கூறிய நன்னூலுக்கு, முன்னர் மயிலைநாதர் என்னும் சைனப் புலவர் நல்லதோர் உரை வரைந்திருந்தாராகவும், தேசிகருடைய மாணாக்கராகிய சங்கர நமச்சிவாயப் புலவரே புதியதோர் விருத்தியுரையை வரைந்தார். அவர் 'பல்களிக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான்' என்று பவணந்தி முனிவரையும் பாராட்டியுள்ளார்.

சங்கரநமச்சிவாயர் மயிலைநாதரைப் பின் பற்றியவராயினும், அவருரையிற் காணப்படாத பல அரிய செய்திகளைத் தந்துள்ளார்; சில இடங் களில் மயிலைநாதரை மறுத்துள்ளார்; தொல்காப் பியத்தையும் நன்னூலையும் ஒப்பிட்டு, ஒற்றுமை வேற்றுமைகளையும் விளக்கியுள்ளார். சைவ சித்தாந்த நூற்கருத்துக்களையும் மேற்கோள்களை யும் ஆங்காங்கே காட்டித் தமது உரையைச் சைவமணங் கமழச் செய்துள்ளார். பதினெட் டாம் நூற்றாண்டிலே வடமொழியும் தென் மொழியும் நிலைகண்டுணர்ந்து, இலக்கணம், இலக்கியம், தருக்கம், சைவசித்தாந்தம் ஆகிய துறைகளிலே தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்த மாதவச் சிவஞான முனிவர், சங்கர நமச்சிவாயர் செய்த நன்னூலுரையின் நயங் கண்டு, தாம் அதற்கோர் தனியுரை செய்ய விரும்பாது, தம்முரையை வேண்டிய வேண்டிய இடங்களிற் சேர்த்துச் சங்கர நமச்சிவாயரின் உரையையே திருத்திப் புதுக்கித் தந்தார். இது புத்தம் புத்துரை என்றும் நன்னூல் விருத்தி யுரை என்றும் வழங்கலாயிற்று.

சிவஞான முனிவர், சைவசித்தாந்த முதனூ லாகிய சிவஞானபோதத்துக்கு மாபாடியம் என் னும் பேருரை வரைவதற்கு ஒரு பயிற்சியாகவே தொல்காப்பிய உரைகளைத் துருவி ஆராய்ந்து, தொல்காப்பியப் பாயிர விருத்தி, முதற் சூத்திர விருத்தி ஆகியவற்றையும் இலக்கண விளக்கச் சூறாவளி, தருக்க சங்கிரகம் என்பவற்றையும் செய்து, தமது இலக்கண அறிவையும் தருக்க அறிவையும் கூர்மையாக்கிக் கொண்டவர். தொல் காப்பிய உரைகளிலே இலைமறை காய்போல் இருந்த அரிய இலக்கணமுடிபுகளையும் நுட்பங் களையும் தொகுத்துத் தந்த சுவாமிநாத தேசி கரின் இலக்கணக் கொத்தைக் கருத்தூன்றிக் கற்றவர். இவ்வாறு ஈட்டிய அறிவை யெல்லாம் அவர் தமது நன்னூல் விருத்தியிலே இடமறிந்து பெய்துள்ளார். இலக்கணக் கொத்திலுள்ள பல உரைச் சூத்திரங்களையும் உரைப் பகுதிகளையும் அவ்வாறே தமது விருத்தியுரையிற் காட்டியுள் ளார். தெரிநிலைவினை, குறிப்புவினை, ஆகுபெயர், அன்மொழித்தொகை என்பன போன்று இலக் கணப் புலவர்களைக் கலக்கிய பல விடயங்களைத்

தமது நுண்மாண் நுழைபுலத்தால் தெளிவாக்கித் தந்தவர். இத்தகைய பல சிறப்புக்களைப் பெற்ற நன்னூல் விருத்தியுரை, இவர் காலத்தும் இவருக்கு முன்பும் தோன்றிய பல இலக்கண நூல்களையும் உரைகளையும் தலையெடுக்கவிடாது தடுத்துவிட்டது. பதினேழாம் நூற்றாண்டிலே வைத்தியநாத நாவலர் செய்த இலக்கண விளக்கமும், பன்னிரண்டாம் நூற்றாண்டிலே குணவீர பண்டிதர் செய்த நேமிநாதமும், புத்தமித்திரர் செய்த வீரசோழியமும் வழக்கிழந்தமைக்கு இந்த நன்னூல் விருத்தியுரையே காரணமெனலாம், சிவஞானமுனிவர் செய்த விருத்தியுரையே புலமைக்குப் பெருந்துணையாய், புலவர் புலத்தினை அளக்கும் அளவு கோலாய், திருக்குறள், திருக்கோவையார், சங்க இலக்கியங்கள், மெய்கண்ட நூலுரைகள் இவற்றைப் படித்துய்ய உதவும் உறுதுணையாய் அமைந்தது.' [7]

நாவலரின் இலக்கணப் புலமை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலே தோன்றிய நாவலர் இந்த இலக்கணச் செல்வத்தையே மரபுச் சொத்தாகப் பெற்றவர். நாவலர் பலவகையிலும் மாதவச் சிவஞான முனிவரை யொத்தவர். சிவஞான முனிவரது இலக்கண இலக்கிய தருக்க சைவசித்தாந்த அறிவையெல்லாம் அவர் அப்படியே எஞ்சாது பெற்றிருந்தாரெனல், மிகையாகாது. பதினெட்டாம் நூற்றாண்டிலே சிவஞான முனிவர் எவ்வாறு தந்நிகரில்லாது திகழ்ந்தாரோ, அவ்வாறே பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாவலரும் திகழ்ந்தார். திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகர் விரும்பியவாறு, நாவலர் சிவஞான முனிவரது தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தியையும்பாயிரவிருத்தியையும்இலக்கணவிளக்கச் சூறாவளியையும் 'பலபிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து' வெளியிட்டார். அவ்வாறே இலக்கணக் கொத்துரை, தருக்கசங்கிரகம் அன்னம் பட்டீயம், பிரயோகவிவேகம் ஆகிய நூல்களையும் அவர் பரிசோதித்து வெளியிட்டார். இவையாவும் இவருடைய இலக்கணப் பயிற்சி வன்மையைக் காட்டும், பழந்தமிழ் நூல்களைத் தேடி ஆய்ந்து பதிப்பித்தவர்களுள் முன்னோடியாய் விளங்கிய சி. வை. தாமோதரம் பிள்ளை, தொல்காப்பியச் சேனாவரையத்தை அச்சேற்ற விரும்பி, அதனைப் பரிசோதித்துத் தருவதற்கு நாவலரையே நாடினரென்றால், நாவலரின் இலக்கணப் புலமைக்கு வேறு சான்று வேண்டா.

நாவலர் செய்தவை

நாவலரின் கல்வித் திட்டத்திலே, இளைஞர்களுக்கு அறிவு வழங்குவதே முதலிடம் பெற்றது. ஏனைப் புலவரெல்லாம் கற்றோர்க்கு நூல் எழுதுவதிலே காலங் கழிக்க, நாவலர் இளைஞர்க்குக் கல்வியூட்டுவதிலே நாட்டங்கொண்டிருந்தார். சைவத்தை நிலைநாட்ட வேண்டுமாயின், தமிழை வளர்க்க வேண்டுமாயின், வழிவழிவந்த அறிவுச் செல்வத்தைக் காக்க வேண்டுமாயின், தமிழ் இளைஞர் தருந்த சூழலிலே கல்விகற்க வாய்ப்புச் செய்துதர வேண்டியது இன்றியமையாதெனக் கண்டார் நாவலர். ஆதலால், கல்வி கற்கும் மாணாக்கருக்கு வேண்டிய இலக்கண இலக்கிய நூல்களை இயற்றுவதிலே நாவலர் முனைந்துநின்றார். சேனாவரையத்தையேனும் நன்னூல் விருத்தியுரையையேனும் இளஞ்சிறார்க்குக் கற்பித்தல் இயலாது. அந்த உயர்ந்த இலக்கணங்களைப் பின்னர்க் கற்றுத் தேறுவதற்கு இளஞ்சிறார்க்கு அடிப்படை இலக்கண அறிவு வேண்டும். ஆதலாலே ஆறுமுக நாவலர் இலக்கணவிளக்கம், இலக்கணச் சுருக்கம், நன்னூற்காண்டிகையுரை என்னும் மும்மணிகளை உரைநடையில் எழுதினர். இவை யொவ்வொன்றும் ஒன்றினொன்று உயர்ந்தவையாய், இளைஞர் எளிதில் விளங்கிக்கொள்ளும் பான்மையில் அமைந்துள்ளன. இவற்றை முறையாகக் கற்றுத் தேறிய மாணாக்கர் பின்னர் நன்னூல் விருத்தியிலும் தொல்காப்பியக் கடலிலும் குதித்துச் சுழியோடலாம்.

இளைஞர்களுக்கு விளக்கம் மூலம் இலக்கணத்தை உணர்த்தும் முறையை நாவலர் கிறித்தவப் பாதிரிமாரிடமிருந்து கற்றிருக்கலாம். பண்டைய உரையாசிரியரும் மாணாக்கனை முன்னிலைப்படுத்தி விளக்கமுறுப்பி விடையிறுக்கும் முறையில் உரையெழுதும் வழக்கமுடையவராயிருந்தனர் என்பதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. நாவலரது இலக்கண விளக்கம், இலக்கணங் கற்கப்புகும் இளம் மாணாக்கர் எளிதில் உளங் கொளத்தக்க வகையில் இயற்றப்பட்டுள்ளது. மாணாக்கரின் அறிவுக்கும் அனுபவத்துக்கும் மொழியாற்றலுக்கும் ஏற்ற வகையிலே விளக்களும் விடைகளும் அமைந்துள்ளன. வேண்டாத விரிவுகளும் சிக்கலான இலக்கண நுட்பங்களும் இங்கே தவிர்க்கப்பட்டுள்ளன. இஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர் மொழியதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களையுடையது. எழுத்தியல், பதவியல், புணரியல் என்னும் மூன்று இயல்களில் எழுத்ததிகாரத்தையும், பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்னும்

நான்கு இயல்களிற் சொல்லதிகாரத்தையும், தொகை நிலைத்தொடரியல், தொகாநிலைத் தொடரியல், ஒழிபியல் என்ற மூன்று இயல்களில் தொடர்மொழி இலக்கணத்தையும் 172 வினுக் களுக்கு விடையிறுக்குமுகமாக நாவலர் சுருக்கித் தந்துள்ளார். மாணுக்கரின் வயதுக்கேற்ற வினு விடைகளுக்கு உதாரணமாக 167 ஆம் வினு வையும் விடையையும் இங்கே காட்டுவாம்.

வினு: ஏகார விடைச்சொல் எத்தனை பொரு ளைத் தரும்?

விடை: ஏகாரம் இரண்டு பொருளைத் தரும். அவையாவன:

(க) தேற்றம் உ-ம். உண்டே கடவுள்.

(உ) பிரிநிலை உ-ம். அவனே யெடுத்தான்.

இலக்கணச் சுருக்கத்தில் ஏகாரத்துக்கு ஏழு பொருள் கூறிய நாவலர் இங்கே இரு பொருள் மட்டுங் கூறியது கவனிக்கத்தக்கது.

இலக்கண வினுவிடையைக் கற்ற மாணுக்கர் அடுத்துக் கற்பதற்காக நாவலர் எழுதிய இலக் கண நூல், இலக்கணச் சுருக்கம் என்பது. இதுவும் முன்னையது போலவே மூன்று அதிகாரங்களையும் பத்து இயல்களையும் கொண்டது. ஆனால் 406 அங்கங்களிலே, நன்னூற்காண்டிகையிற் சொல் லப்பட்ட எல்லா விடயங்களையும் தொகுத்து வகைப்படுத்திக் கூறுகிறது. மாணுக்கருக்கு மொழிப் பயிற்சியும் இலக்கியப் பயிற்சியும் உண் டாகத்தக்க வகையிலே வரைவிலக்கணங்களும் உதாரணங்களும் தரப்பட்டுள்ளன. இலக்கண நூல் என்பதற்கு நாவலர் கூறிய வரைவிலக் கணத்தை இனி எவரும் திருத்தவோ புதுக்கவோ இயலாது.

> ''இலக்கண நூலாவது, உயர்ந்தோர் வழக் கத்தையுஞ் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதுதற்கும் பேசுதற்குங் கருவியாகிய நூலாம்.''

இவ்வாறே குற்றியலுகரத்துக்கு நாவலர் எழுதிய வரைவிலக்கணம், நன்னூலார் வரை விலக்கணத்தை வென்று, மாணுக்கர் உள்ளத்தில் நின்று விட்டது.

> ''குற்றியலுகரமாவது, தனிக் குற்றெழுத் தல்லாத மற்றை எழுத்துக்களுக்குப் பின்னே மொழிகளினிறுதியில் வல்லின மெய்களில் ஏறிநிற்கும் உகரமாம்.''

இலக்கணச் சுருக்கம் நன்னூலை அடியொற்றிச் செல்வதாயினும் சிற்சில இடங்களிலே சிறிது மாறு பட்டுஞ் செல்கின்றது. உதாரணமாக, மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களைக் கூறுமிடத்து, நன்னூலார் கூறிய ஙகரத்தை நாவலர் விட்டுள் ளார்; அவ்வாறே இறுதிநிலையிலும் எகர உயிரை விட்டு ஏனைய உயிர்களைக் கூறுகின்றார். இவை தொல்காப்பியர் கூறுவதோடும் மொழி வழக் கோடும் ஒத்திருக்கின்றன.

இனி, பதவியலிலே நாவலர் பகுபத உறுப் புக்களை விரிவாக எடுத்து விளக்கி, நூலின் இறுதியிற் பல்வேறு பகுபதங்களுக்கு முடிபுங் கூறிச்செல்கின்றார். நன்னூலார் பகுபதவியலிற் கூறிய வடமொழியாக்கத்தை நாவலர் தமது இலக்கணச் சுருக்கத்திற் கூறாது விட்டது கவனிக் கத்தக்கது.

> ''தமிழ் கற்கப்புகும் சைவசமயிகள் முன்னர்ப் பாலபாடங்களைப் படித்துக் கொண்டு, இலக் கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து, இயன்ற அளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக.'' 7

என்று நாவலர் கூறுகின்றார். ஆனால், தமிழ் கற்றவர்களுமே தம்முடைய ஐயங்களைத் தீர்ப் பதற்கு இலக்கணச் சுருக்கத்தை ஒரு கைந் நூலாகக் கொள்ளலாம். அத்தகைய திட்ப நுட் பம் வாய்ந்ததாக எழுதப்பட்டிருக்கின்றது இலக் கணச் சுருக்கம். தொல்காப்பியரும் நன்னூலாரும் வரையறுக்காது பொதுப்படக் கூறிய சொற் புணர்ச்சி விதிகளை, நாவலர் வகைப்படுத்தி, வரையறுத்துத் தந்திருப்பது பாராட்டத்தக்கது. உதாரணமாக ஒன்றைக் காட்டுவாம்:

> வேற்றுமைப் புணர்ச்சியில் மகர வீற்றுச் சொற் களின் ஈறு கெட, வருமொழி வல்லெழுத்து மிகும் என்று தொல்காப்பியர் கூறுவர்:
> எழுத்து சூ. 310
> நன்னூலார்இப்புணர்ச்சியைஇருவகைப்புணர்ச் சிக்கும் பொதுவாகக் கூறுவர். (நன். சூ. 219)

ஆனால் நாவலரோ இலக்கணச் சுருக்கத்தில், ''மகரத்தின் முன் வல்லினம் வரின், வேற்று மையினும், அவ்வழியிலே பண்புத்தொகை யினும், உவமைத் தொகையினும், இறுதி மகரங் கெட்டு வரும், வல்லினம் மிகும். எழு வாய்த் தொடரினும், உவமைத் தொகையினும் செய்யுமென்னும் பெயரெச்சத் தொடரினும், வினைமுற்றுத் தொடரினும், இடைச் சொற்

ருடனிலும், இறுதி மகரம் வரும் வல்லெழுத் திற்கு இனமாகத் திரியும்'' என்று வரை யறுத்துக் கூறுவர். [8] இவ்வாறு நாவலர் வரையறுத்துத் தருமிடங்கள் வேறும் பல இந்நூலில் உண்டு.

இலக்கணச் சுருக்கத்தைக் கற்றபின் மாணாக்கர் நன்னூலிலே இறங்கலாம். இதற்காக நாவலர் செய்த பணி, நன்னூற் காண்டிகை உரையை மாணாக்கருக்கு வழங்கியதாகும். இந்த உரையை நாவலரே முற்றுஞ் செய்தார் என்று சொல்வதற்கில்லை. அச்சேறி வெளிவந்துள்ள நூலிலே, ''இது யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் திருத்தியும் விளக்கியுங் கூட்டியும் புதுக்கியது'' என்று காணப் படுவதால், நாவலர் பங்கு யாதென்பது பெறப் படும். நாவலரின் காலத்திலே வாழ்ந்தவரும் நாவலருடைய நண்பரும் வடமொழி தென் மொழியாகிய இருமொழியும் வல்லவருமான திருத்தணிகை விசாகப் பெருமாளையர், நன் னூலுக்குக் கருத்துரை, பதப்பொருள், உதா ரணம் என்னும் மூன்றுமுடைய முக்காண்டிகை என்னும் உரையை எழுதினர். இம்முக்காண் டிகையோடு வினாவிடை என்னும் இரண் டனையுஞ் சேர்த்து ஆறுமுக நாவலர் ஐங்காண் டிகை செய்தார் என்ப. அதுவே இக்காலத்து ஆறுமுக நாவலர் காண்டிகையுரையென வழங்கு கின்றது. சங்கர நமச்சிவாயப் புலவர் செய்த உரையைச் சிவஞான முனிவர் திருத்திப் புதுக் கியது போலவே, நாவலரும் விசாகப் பெரு மாளையர் செய்த உரையைத் திருத்திப் புதுக்கி யுள்ளாராகலாம். எவ்வாறாயினும், நாவலரின் கைவண்ணம் இந்நூலிலே நன்கு புலனாகின்றது. இஃது எல்லாவகையிலும் சிவஞான முனிவரின் நன்னூல் விருத்தியை அடியொற்றிச் சென்று, அதன் அருமை பெருமைகளை யெல்லாம் ஓரளவு தன்பாலுங் கொண்டுளது. இதனைக் கற்ற மாணாக்கர், பின்னர் விருத்தியை எளிதிற் பயின்று கொள்ள வல்லவராவர். இளைஞர் உலகிலே நாவலரது காண்டிகையுரை என்றென்றும் வாழும் நெடுவாழ்வு பெற்றுள்ளது.

முடிவுரை

இதுகாறுங் கூறியவற்றால், தொன்று தொட்டு வந்த தமிழ் இலக்கண மரபைப் பாதுகாத்தமையும், காலத்துக் கேற்பப் புதிய வழக்குக்களை ஏற்று மொழிவளர்ச்சிக்கு நெறிவகுத்தமையும், கல்வி பயிலும் மாணாக்கரிடை இலக்கண அறிவு பரவுதற்கு வழிவகுத்தமையுமே ஆறுமுக நாவலர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கணத்துக்குச் செய்த பெருந் தொண்டாகு மென்பது பெறப்படும்.

இருபதாம் நூற்றாண்டிலும், இனிவரும் நூற் றாண்டுகளிலும் நாவலருடைய இலக்கண நூல்கள் கல்வியுலகில் நிலைநின்று, நற்றமிழ் வழக்கு வாழை யடி வாழையாக நிலைக்க வழிவகுக்குமென நம்பலாம்.

---

1. ஆறுமுக நாவலர், நான்காம் பாலபாடம், 'கல்வி'.
2. திருக்குறள், பரிமேலழகர் உரை மேற்கோள், 392 ஆம் குறள் உரை.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ஆ 96.
4. பரஞ்சோதிமுனிவர், திருவிளையாடற் புராணம், திரு நாட்டுச் சிறப்பு, செய். 57.
5. ஆறுமுகநாவலர், நான்காம் பாலபாடம், 'தமிழ்'.
6. சுவாமிநாத தேசிகர், இலக்கணக் கொத்துரை, பாயிரம் 7 ஆம் 8 ஆம் சூத்திர உரைகளைப் பார்க்க.
7. ச. தண்டபாணிதேசிகர், நன்னூல் விருத்தியுரை, ஆதீனப் பதிப்பு, முகவுரை பக். 8.
8. ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, 5. தமிழ்ப் புலமை, க. பக். 25.
9. இலக்கணச் சுருக்கம், அங்கம் 144, மகரவீற்றுப் புணர்ச்சி.



யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்களால் கட்டப்பட்டதும், பின்னர் பறங்கியரால் இடிக்கப்பட்டதும், சென்ற நூற்றாண்டில் புனருத்தாரணம் செய்யப்பட்டதுமான நல்லூர் கந்தசுவாமி கோயில். நல்லூர்க் கந்தனே நாவலர் உபாசனாமூர்த்தியாகக் கொண்டு பூசித்து உய்தவர்.

எஸ். எம். கமாலுத்தீன்
B. A. (Cey.), B. ED. (Toronto),
DIP. LIB. (Ceylcn)
நூலகர், பொது நூல் நிலையம்,
கொழும்பு.

மறைவளர்த்த நாவலரும் முஸ்லிம் சமூக எழுச்சியும்

இந்நாட்டு மக்களின் சமய, கலாசார வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி சிறப்பு மிக்க தொன்றாகும். இக்கால கட்டத்தில் சமய, கலாசாரத் துறைகளில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் வழியாகவே அரசியற் சுயநிர்ணய வேட்கை வளர்ந்து, இந்த நூற்றாண்டில் எமது நாட்டில் சுயாட்சி மலர்வதற்கு ஏதுவாயிற்று.

எனவே, எமது நாட்டின் சுதந்திரத்திற்கு வித்திட்டவர்கள், அந்நிலையை அடைவதற்கு மக்களின் உள்ளங்களைச் சமய, கலாசாரத் துறைகளில் தன்னம்பிக்கை யூட்டிப் பக்குவப்படுத்திய பெருமக்களே யென்பது மிகைக் கூற்றாகாது.

தென்னிலங்கையிலே, சிங்கள மக்களிடையே மோஹொத்திவத்த குணனந்த தேரோ, (1833-1890), கேனல் எச். எஸ். ஒல்கொட், (1832-1907) அநகாரிக தர்மபாலா (1864-1933) முதலான பௌத்த அறிஞர்களும், முஸ்லிம்களிடையே அறிஞர் சித்திலெப்பை, (1838-1898) டி. எல். எம். அப்துல் அஸீஸ், (1867-1915) வாப்பிச்சி மரைக்காயர் (1829-1925) போன்ற இஸ்லாமிய ஊழியர்களும் தத்தம் சமூகத்தவரிடையே முதன்மையாகக் கல்வி வளர்ச்சியையும், அதோடு இணைந்து சமய, கலாசார மறுமலர்ச்சியையும் இக்காலப் பிரிவில் ஏற்படுத்தி வந்தார்கள்.

இப்பெரியார்களும் இன்னுமிவர்கள் போன்ற வேறு பலரும் ஒருங்கே ஆற்றிவந்த சமுதாயச் சீரமைப்புப் பணியினை இதே காலப் பிரிவில் வட இலங்கையிலே தனியராகவும், தன்னிகரில்லாதவராகவும் நின்று நடாத்திய பெருமை தமிழ் மகனும் தவத்திரு ஆறுமுக நாவலருக்கே உரித்தாகும். வெள்ளையர் ஆதிக்கத்துக்கு வடக்கே உருவான எதிர்ப்புச் சக்திகளனைத்திற்கும் விளைகளமாய் அமைந்தது நாவலரின் நற்பணியே யாகும். இவ்வகையில் இலங்கையின் சுதந்திரத்திற்கு வழிகோலிய முன்னோடிகளுள் நாவலர் சிறப்பு மிக்க ஒருவராகத் திகழ்கிறார்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தமது வாழ்க்கையையே தியாகம் செய்த நாவலர் பெருமான் பல்வேறு துறைகளில் தமது ஆற்றலை நிலை நாட்டிச் சென்றுள்ளார். எனினும், இதுகாறும் நாவலர் தம் இனத்தவரைத் தமது சமய கலாசாரத் துறைகளிலிருந்து விலகிச் செல்லச் செய்து கொண்டிருந்த சக்திகளை எதிர்த்து நின்ற ஒரு தீவிர சமயப் பாதுகாவலராக மட்டுமே எமக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். அண்மைக் காலத்

திலேதான் நாவலரை வேறுபல கோணங்களில் இருந்தும் காணும் முயற்சிகள் நிகழ்ந்து வருகின்றன. இதுவே சர்வ சமய ஒருமைப்பாட்டினை விழையும் இக்காலத்திற்கேற்றதாகும். மேலும், நாம் நாவலரை முழுமையாகக் காணுதற்கு உதவுவதுமாகும்.

இவ்வழி நின்றே இச்சிறு கட்டுரையிலே நாவலர் பெருமானின் நற்பணிகள் சம காலத்தே இலங்கையின் மற்றொரு சிறுபான்மைச் சமூகமான முஸ்லிம் சமூகத்தவரிடையே சமய கலாசார மறுமலர்ச்சிக்கு வழிகோலிய பேரறிஞராம் சித்திலெப்பை மீது ஏற்படுத்தியிருக்கக்கூடிய தாக்கத்தையும், இவ்விரு பெரியார்களிடையே காணப்படும் ஒருமைப்பாடுகளையும் ஆய்வதற்கு விழைகிறேன். இந்நாட்டுத் தமிழ் மக்களோடு முஸ்லிம்கள் மொழியால் ஒன்றுபட்ட பாரம்பரியத்தை உடையவர்களாயிருத்தலின் இந்த முயற்சி மிகுந்த பயனளிப்பதாகவும், நல்லெண்ணத்தை வளர்க்கக்கூடியதாகவும் உள்ளது.

பொதுவாக இவ்விரு சமூக ஊழியர்களிடையேயும் பல துறைகளில் ஒற்றுமை காணப்படுகிறதெனினும், விரிவஞ்சிக் கல்வி, இலக்கியம் ஆகிய துறைகளையே இங்கு சிறப்பாக எமது கவனத்திற்குக் கொணர விரும்புகிறேன்.

அறிஞர் சித்திலெப்பையவர்கள் 1838-ம் ஆண்டில் கண்டியிலே பிறந்தார்கள். இவர்களது இயற் பெர் முகம்மது காசீம் என்பதாகும். செல்வாக்கு மிக்க குடும்பமொன்றிற் பிறந்த இவர் வழக்கறிஞராகத் தேறி, தொழில் ஏற்றுரெனினும் இஸ்லாமிய மார்க்கத் தத்துவங்களில் நாட்டங் கொண்டு தமது தொழிலைத் துறந்து தமது சமூக சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். நாவலரைப் போலவே எழுத்தாளராகவும், கல்விமானாகவும், சமயப் பிரசாரகராவும், அரசியல் அறிஞராகவும், சமூகச் சீர்திருத்த வாதியாகவும் இவர் விளங்கினர்.

நாவலர் காலத்தே எழுந்த கண்டன நூல்களைப் போலவே சித்திலெப்பை அவர்களின் காலத்தும் வழங்கிய கண்டனப் பிரசுரமொன்றில் இப்பெரியாரின் தகைமை மிகவும் விரிவாக தரப்பட்டுள்ளது. சித்தி லெப்பையின் சம காலத்தவரான அ. காதிறுபாட்சா என்பவர் இப்பெரியாரின் அறிவாற்றலையும், நற்பண்புகளையும் தமது தத்துவபர கண்டன திக்கார கண்டனம் என்ற சிறு நூலில் விளக்கியுள்ளார் :—

''பல பாஷைகளைப் பயின்று தெளிந்த நிபுணத்துவமுடையவரும் தீன் நெறியறிவுகளை விளக்கிய சிறந்த தீபிகை யொத்தவரும், தயை, ஈகை பொறுமை யாதிய மேன் குணாலயம் போன்றவரும், 'குபிர்' மத சத்துரு சங்கார வெற்றி மாலை பூண்டவரும் அட்டதிக்கெங்கணும் அரும் பெரும் பிரக்யாதி பெற்றவரும் மஹாசன சாதுக்கள் சபைகளிடத்தும் சாதுரிய சல்லாப உல்லாச வசனகெம்பீர சர்ச்சனரென மதிக்கப்பெற்ற கண்ணிய புருடரும் புண்ணிய சீலருமான கனம் சி. மு.''

நாவலர் பெருமான், அறிஞர் சித்திலெப்பையை விட வயதில் பதினாறு ஆண்டுகள் மூத்தவர். எனவே, நாவலரின் சமூகப் பணிகள் கல்வி, சமயம், கலாசாரம் ஆகிய துறைகளில் வளர்ந்து முதிர்ச்சியடைந்து வந்த காலத்திலேதான் சித்திலெப்பையவர்கள் தமது முயற்சிகளில் அடியெடுத்து வைத்தார்கள்.

சித்திலெப்பையவர்கள் தங்களுடைய ''முஸ்லிம் நேசன்'' பத்திரிகையை ஆரம்பித்த காலத்தில் ஆறுமுக நாவலர் இயற்கையெய்திச் சில ஆண்டுகள் கழிந்துவிட்டிருந்தன. நாவலரின் மறைவினைப்பற்றி, அறிஞர் சித்திலெப்பை தமது முஸ்லிம் நேசனில் (1883) தமிழ் மொழி பற்றி எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

''இற்றைக்குச் சில காலத்துக்கு முன் சரவணப் பெருமாளையர் நன்னூலுக்கு காண்டிகையுரை செய்தார். அதனையே இப்பொழுது நன்னூலிலக்கண உரையாகப் படித்து வருகின்றார்கள். அதிலுள்ள சூத்திரங்களும் உரைகளும் அதிகப் பிரயாசப்பட்டு குருமூலமாகப் படித்தாலன்றி அவைகளை நன்முயறிந்து அவதானிக்கக் கூடாத வைகளாயிருக்கின்றன. ஆனால் யாழ்ப்பாணத்திலே கீர்த்திபெற்றிருந்து இறந்து போன ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இலக்கணச் சுருக்கம், இலக்கண விளுவிடை யென்னுமிலக்கண நூல்களைச் செய்தார். அவைகள் இலேசாயிருத்தலாற் பெரும்பாலும் வாசித்தறியக் கூடிய நூல்களாம்''.

கல்வித் துறையிலே பின்தங்கியிருந்த முஸ்லிம் மக்களிடையே மார்க்க அறிவையும் பொது அறிவையும் வளர்ப்பதற்காகவும், கல்வியின் முக்கியத்துவத்தைப் பிரசாரம் செய்வதற்காகவுமே சித்திலெப்பையவர்கள் ஆரம்பித்த ''முஸ்லிம் நேசன்'' யாவரும் வாசித்தறியக்கூடிய எளிய வசன நடையில் அமையவேண்டியது அவசியமாயிருந்தது.

இந்தத் தேவையை சித்திலெப்பையவர்கள் நன்குணர்ந்திருந்தாரென்பது அவருடைய பின் வரும் கூற்றிலிருந்து தெளிவாகிறது :—

''இக்காலத்திலும் அதிகப் பிரயாசப்பட்டு இலக்கண இலக்கியங்களை வாசித்துத் தேர்ந்தவர் களும் அப்படியே பாடல்களைப் பாடுகின்றார்கள். அவைகளெல்லாம் வித்துவான்களுக்கு உபயோக மாயிருக்கும். ஆதலால் யாவருக்கும் விளங்கக் கூடிய வசன நடையாய்ப் புத்தகங்களைச் செய்வது மிக்க குறைவாயிருக்கின்றது. பாஷையானது தம் முடைய கருத்திலே தோன்றிய பொருளைப் பிற ருக்கு விளக்குதலாம்''.

மேலும் நாவலரின் இலக்கியப் பணியின் விளை வாக-உரைவளத்தின் வழியாக''முஸ்லிம்நேசன்'' ஆசிரியர் அப்பத்திரிகையின் ஆரம்ப காலத்தி லேயே உரைநடை பற்றிய தெளிவான கருத்தைப் பெற்றிருந்தாரென்பதற்கு ''எல்லாரும் விளங் கத்தக்க இலேசான சொற்களைப் பிரயோகிப்பதே மிகவும் அரிதாகும்; அதனாலல்லவா ஸ்ரீலஸ்ரீ ஆறு முக நாவலரவர்கள் முதலாயினோர் இலேசான சொற்களைப் பிரயோகித்து வந்தார்கள்'' என்று முஸ்லிம் நேசனிலுள்ள ஒரு கடிதத்திற் காணப் படும் வசனமும் சான்று பகர்வதாயுள்ளது.

சித்திலெப்பையவர்கள் இந்தவகையில் முஸ் லிம் நேசனையும் பின்னர் ஞானதீபத்தையும் தமது மக்களினதும் ஏனைய தமிழ்ப் பேசும் மக்களினதும் அபிமானத்தைப் பெறத்தக்க வகையில் வெளியிடு வதில் வெற்றி கண்டார் என்பதனை இப்பத்திரி கைகள் அக்காலத்தே சிறப்பாக முஸ்லிம்களி டையே ஏற்படுத்திய தாக்கம் எடுத்துக்காட்டுகின் றது. இச்சாதனைக்கு நாவலரின் இலக்கிய வழி பெரிதும் உதவியிருக்குமென்று நாம் ஊகிக்கலாம்.

நாவலரின் உள்ளத்தே உருவாகி, விளம்பரப் படுத்தப்பட்டு, பின்னர் அவரது மாணாக்கர்களால் நடாத்தப்பட்ட ''உதயபானு'' பத்திரிகை முஸ்லிம் நேசனைப் பற்றி எழுதியுள்ள பின்வரும் குறிப்பில் நாம் மேலே வெளியிட்ட கருத்துப் பிரதிபலிக்கப்படுகின்றது.

''இது (முஸ்லிம் நேசன்) கண்டியிலே பிறக் டர் காசீம் மரைக்காயருடைய முயற்சியினாலே தொடங்கப்பட்டது.....மகமதியர்க்கு மிகப் பிர யோசனமுள்ளது. வசனம் இயன்றளவு தெளிவா யிருக்கிறது.''. (22-1-1883)

நாவலர் 1849-ம் ஆண்டில் வண்ணார் பண்ணையில் தமது சைவப்பிரகாச வித்தியாசாலை யையும் அதைத் தொடர்ந்து கொழும்புத்துறை கந்தர்மடம், பருத்தித்துறை, மாதகல் முதலான பல இடங்களிலும், தமிழகத்திலே சிதம்பரத்தி லும் பாடசாலைகளை ஆரம்பித்ததன் நோக்கம் தமது வாழ்க்கையின் இலட்சியமாகிய சமயப் புன ருத்தாரணத்திற்குக் கல்வியொன்றே சிறந்த சாத னமென்ற நம்பிக்கையேயாகும். இந்த நம்பிக் கையே ''இவைகளெல்லாவற்றிற்கும் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்கே கருவி யாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என னும் பேரவாவேயாம்'' என்ற அவரது உரையில் தொனிக்கின்றது.

இதே அடிப்படையிலேதான் அறிஞர் சித்தி லெப்பை முஸ்லிம் பாடசாலைகளை நிறுவும் முயற்சி யிலீடுபட்டார். மேலும் முஸ்லிம்கள் ஆங்கிலத் தைப் புறக்கணித்து நவீன கல்வி முறைகளை ஆத ரிக்காமலிருந்த நிலையை மாற்றுவதற்கும் பெரும் பிரயத்தன்ம் எடுத்துக்கொண்டார். ''அவர்களு டைய சம்பிரதாயம் பழக்க வழக்கங்களுக்குப் பங்கமேற்படாமல் புதிய கல்வி முறையை''ப் புகுத்துவதே அவரது நோக்கமாயிருந்தது.

கொழும்பு சோனகத் தெருவில் ஆரம்பிக்கப் பட்ட அல்மத்ரஸதுல் கைரியா (1884) முதல் தற்போது கொழும்பு ஸாஹிருக் கல்லூரியெனப் பிரசித்திபெற்றுள்ள அல்மத்ரஸதுல் ஸாஹிரு (1892) வரை அவரது முயற்சியால் ஆரம்பிக்கப் பட்ட பல முஸ்லிம் பாடசாலைகள் கல்வியின் வழி யாக முஸ்லிம்களின் சமய கலாசார மறுமலர்ச் சிக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளே யாகும்.சித்திலெப்பையவர்கள் கொழும்பில் எடுத் துக்கொண்ட நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கள் அவர்கள் கண்டி திரும்பி அங்கேயும் (முதல் முஸ்லிம் பெண் பாடசாலை) கம்பளை, பொல்காவலை, குருணைக்கல் போன்ற பல இடங் களிலும் முஸ்லிம் பாடசாலைகளை ஏற்படுத்து வதற்கு ஏதுவாயின.

நாவலர் கல்விக்கு மத அடிப்படையை வற் புறுத்திச் சென்றது போலவே சித்திலெப்பையவர் கள் இஸ்லாமிய அறிவினோடு ஏனைய கலைஞானங் களையும் தம் மக்கள் பெறவேண்டுமென விழைந் தார். பரந்த அடிப்படையில் கல்வி அவசியமென் பதை அவர் பின்வருமாறு கூறுகிறார் :—

''கல்வி யென்பது பாஷையை வாசித்தறிவது மாத்திரமல்ல மன விரிவுக்கும் தெளிவுக்கும் உதவி யாகிய பலவித அறிவு நூல்களையும் நன்று யறிவதாம்''.

''கல்வி அறியாமையை அகற்றுவதோடு நில்லாமல் தன்னைத் தானே அறிய உதவும் ஒரு பெரும் சக்தி''.

அறபு மொழியிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்த சித்திலெப்பையவர்கள் தமிழிலும் மிகுந்த ஈடுபாடுடையவராயிருந்தார். இத்தகு ஆற்றல் அக்காலத்து முஸ்லிம்களிடையே அரிதாகும். இது பற்றியே ''உதயபானு'' பத்திராதிபர் ''பெரும்பான்மை மகமதியர் இப்படித் தமிழில் எழுதவல்லாரல்லர்'' என்று புகழ்ந்துரைக்கின்றார். மேலும் நாவலர் தமது உரைவளத்தால் அக்காலத்தே பிரபல்யப்படுத்திருந்த புராண இலக்கிய நூல்கள் சித்திலெப்பையவர்கள் கவனத்தைப் பெற்றிருந்தன. கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், காஞ்சி புராணம், பெரிய புராணம், சேது புராணம் முதலியவைகளைப் பற்றி முஸ்லிம் நேசனில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிளையாடற் புராணத்திலிருந்து பின்வரும் பாடல் முஸ்லிம் நேசனில் மேற்கோளாக எடுத்தாளப் பட்டுள்ளது :

''நெய்யுண் பூங்குழன் மடவ
ரானின் ஞெடும் வாது
செய்யும் பூசலுக் கெதிரலாற்
றீய வாய் திறந்து
வையும் பூசலுக் கெதிரலேன்
மானம் விற்றுன் போலுய்யும்
பாவையரே யதற்
கெதிரென உரைத்தான்.''

அக்காலத்துத் தமிழிலக்கிய வானிலே சித்திலெப்பையவர்கள் பிரபல்யமடைந்திருந்தமைக்கு முஸ்லிமல்லாத பல தமிழன்பர்கள் அவரோடு கொண்டிருந்த தொடர்பு சான்று பகிர்கின்றது. இந்தியாவிலும்,மலாயாவிலும்''முஸ்லிம்நேசன்'' செல்வாக்குப் பெற்றிருந்தது. மலாயாவில் பத்திரிகை நடத்திக்கொண்டிருந்த குலாம் காதிறு நாவலருக்கும் சித்திலெப்பையவர்களுக்கும் இடையே நடைபெற்ற இலக்கிய சர்ச்சை மிகப் பிரசித்தம் வாய்ந்ததாகும்.

இவ்விடத்தில் நாவலரின் தமிழ்ப் பணியையும் அவருக்குப் பின் தமக்கு ஆதரவளித்த ''முஸ்லிம் நேசன்'' ஆசிரியராம் சித்திலெப்பை அவர்களின் நற்பண்பையும் பற்றி அ. சண்முகோபாத்தியாயர் எனும் ஆசிரியர் வழங்கியுள்ள பின்வரும் புகழுரையை எடுத்துக்காட்டுதல் பொருத்தமாயிருக்குமென்று நம்புகிறேன்.

வாரூரு மாதியைத் தொழுமம்
பலவாண னில்லையிங்கே
சீரூர் மதி வேணிச் சிவப்பிர சங்கஞ் செயு
மேரு ரறுமுக நாவல ரில்லை யினியெவரே
நீரூ ரிலங்கையி லென்கவி கண்டிடு நீர்மையரே
சீரூரு மிப்பிர பந்தங்க டன்னைத் திகாந்த மட்டும்
பேரூரன் முசுலிம் நேசனே யென்னிற்
பெட்பு வைத்து
நீரூ ரிலங்கையி லெங்கும் பரப்பினை
நின்றுனக்கும்
பாரூ ருலகத்தில் யாரினை யாகப் பகருதற்கே''

முஸ்லிம் நேசனில் சித்திலெப்பையவர்கள் கவிதைகளுக்குச் சிறப்பிடமளித்து வந்தார்கள். கற்பிட்டியைச் சேர்ந்த சேகலாது மரைக்கார், யட்டியாந்தோட்டையைச் சேர்ந்த பக்கீர்தம்பி மிஸ்கீன் புலவர், வலிகாமம் செய்குசுலமாலெப்பை, செய்யது முஸ்தபா லெப்பை போன்ற பலருடைய கவிதைகள் முஸ்லிம் நேசனில் இடம் பெற்றன. நாவலர் சைவ வேதாகமத்தில் எவ்வளவு ஊறித் திளைத்திருந்தாரோ அதே போன்று சித்திலெப்பையும் திருக்குர்ஆன், ஹதீஸ் (நாயகத்தின் பொன்மொழிகள்) முதலியவற்றிலும், இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களுடைய இஸ்லாமிய தத்துவார்த்த நூல்களிலும் மிகுந்த பரிச்சயமுடையவர்களாயிருந்தார்கள். அறபு மொழியறிவின் மூலம் அவர்கள் பெற்ற இந்த சமய விளக்கமே அவர்களுடைய கல்விக் கொள்கைகளுக்கும், வாழ்க்கைத் தத்துவத்திற்கும் அத்திவாரமாய் அமைந்தது. தமிழ் மொழியை அவர்கள் உவந்து போற்றியது இந்த இஸ்லாமிய அறிவுக்கருவூலங்களைத் தமது முஸ்லிம் சகோதரர்களுக்கு அம்மொழியின் மூலம் வழங்குவதற்கேயாம்.

நாவலர் தமது சமய நூல்களில் வடமொழி விரவிய வசன நடையைக் கையாண்டதுபோலவே சித்திலெப்பையவர்கள் அறபுச் சொற்கள் பெய்த ஒரு நடையினை மேற்கொள்ளலானார். அவரது அறபுப் பாட நூல்களில் அறபுத் தமிழை அவர் கையாள நேர்ந்தது, இஸ்லாமிய தத்துவார்த்தங்களை விளக்க அறபு மொழி இன்றியமையாததாக இருந்ததனாலேயாம்.

நாவலரின் இலக்கியப் பணி மிகவும் விரிவான தொன்றாகும். சைவ சமய நூல்களைப் பெருமளவில் வெளியிட்டதோடு அம்மதத்தைப் பிறமத ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிப்பதற்காகத் தமது எழுத்தாற்றலை அவர் பிரயோகித்தார். மேலும் தமது ''இலட்சியத்தின் கருவியாகிய'' பாடசாலைகளுக்கான நூல்களையும் அவர் வெளியிடலா



யாழ்ப்பாணத்தில் நாவலரின் நினைவுச் சின்னங்களுள் ஒன்றான "நாவலர் வீதி". இந்த வீதியிலேதான், சைவப்பிரகாச வித்தியாசாலை, "நாவலர் அச்சுக்கூடம்", நாவலர் வளர்ந்த வீடு ஆகியன இருக்கின்றன.

— உபயம்: க. சதாசிவம்.

னர். இப்பணிகளுக்காக அவர் அச்சுயந்திரசாலை யொன்றையும் நிறுவிக்கொண்டார். இந்த முயற்சிகளின் பரப்பைக் காலஞ்சென்ற பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கே. கணபதிப்பிள்ளையவர்கள் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்கள் :—

"He established a printing press in Madras and brought out from it about 70 works carefully edited on good paper and clear print. He wrote some school books in prose which are unrivalled even today for their style and clear diction. Also he rendered some Puranas into Tamil prose".

(சென்னையில் அவர் ஓர் அச்சகத்தை நிறுவி சுமார் 70 நூல்கள் வரை வெளியிட்டார். அவர் இந்நூல்களைச் சுத்தமாகப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில் தெளிவான அச்சில் பதிப்பித்தார். வசன நடையில் சில பாட நூல்களையும் அவர் வெளியிட்டார். இவைகளின் நடையும், சொல்லாட்சியும் இதுகாறும் ஈடுசெய்யப்படவில்லை. சில புராண நூல்களையும் இவர் வசனமாக எழுதியுள்ளார்.)

சைவ சமய வளர்ச்சியே நாவலரின் மேலோங்கிய முயற்சியாகியதுபோல சித்திலெப்பையவர்களின் முயற்சிகளிலும் ஆத்மீக விளக்கமே முற்பட்டு நின்றது. சிறப்பாக அவர்களுடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் ஆத்மிக வேட்கை பெருக்கெடுத்து நின்றது. 1892-ம் ஆண்டில் சித்திலெப்பை ஆரம்பித்த "ஞானதீபம்" என்ற சஞ்சிகையும், "தன்னை அறிந்தவன் தன் இறைவனை அறிவான்" என்ற தத்துவ விளக்கமாக அமைந்த "அஸ்ராருல் ஆலம்" என்ற ஞான நூலும் அவர்களுடைய மனப் பக்குவத்தைக் காட்டுகின்றன.

சித்திலெப்பையவர்கள் இயற்றிய ஏனைய நூல்களான அல் ஹிதாயதுல் காசிமிய்யா, துஹ்பத்துன் நகுவு, சுறூத்துஸ் ஸலாத்து, ஞான தீபம், துருக்கியர் கிரீக்கர் யுத்த சரித்திரம், ஹசன்பேயின் கதை, என்பனவெல்லாம் முஸ்லிம்களிடையே சமயத்தை வளர்ப்பதையும், அவர்களுடைய முன்னோரின் சரித்திரப் பெருமை, இஸ்லாமிய கலாசார மாண்பு ஆகியவற்றை எடுத்தியம்புவதையுமே நோக்கமாகக்கொண்டிருந்தன. சைவ சமயிகளை நேர்வழிச் செலுத்த நாவலர் புராண இலக்கியத்தைப் பரப்பியது போலவே அறிஞர் சித்திலெப்பை இஸ்லாமிய அறிவுக்களஞ்சியத்தை முஸ்லிம்களுக்குத் தமது பத்திரிகைகளின் மூலம் நூல்கள் மூவாயிலாகவும் வழங்கினர்.

நாவலரைப் போன்று பல கல்விக் கூடங்களை ஆரம்பித்த சித்திலெப்பையவர்கள் தங்களுடைய பாடசாலைகளுக்கான பாட நூல்களை இயற்றியதில் காணப்படும் ஒருமைப்பாடு இங்கு கவனிக்கத் தக்கதாகும். விஞவிடையருவில் கருத்துக்களை வெளியிடும் முறை நாவலரைப் போன்று சித்திலெப்பையவர்களாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுடைய சிறந்த நூலான "அஸ்ருருல் ஆலம்" இம் முறையை அனுசரித்து எழுதப்பட்டதாகும்.

நாவலர் பாடசாலைகளுக்காகப் பல பால பாடங்களையும், இலக்கண விஞவிடை, இலக்கணச் சுருக்கம், இலக்கண விளக்கச் சுருவளி போன்ற இலக்கண நூல்களையும் ஆத்திசூடி கொன்றை வேந்தன் முதலிய நீதி நூல்களையும் மற்றும் பல நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

சித்திலெப்பையவர்களும் தமிழ்ப் பாட நூல் எழுதும் முயற்சியில் ஈடுபட்டார்கள். தமிழ் முதற் புத்தகம் ஒன்றை வெளியிட்டார்கள். முஸ்லிம் பிள்ளைகள் தங்கள் மார்க்க அறிவை நேரடியாகப் பெறுவதற்கு அறபு மொழியின் அவசியத்தை அவர்கள் நன்குணர்ந்து அறபு மொழிப் பயிற்சிக்கான பாட நூல்களையும் எழுதி வெளியிட்டார்கள். அறபு மொழிப் பயிற்சிக்கான விசேஷ நூலாகிய "அல் ஹிதாயத்துல் காசிமிய்யா" என்ற அறபு—அறபுத் தமிழ் நூலில் அவர்கள் எழுதிய முகவுரையில் தங்களுடைய பாடசாலை நூலெழுதும் முயற்சி பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள் :

"முதலில் நான் சிறு பிள்ளைகளின் உபயோகத்திற்காக முதலாவது புத்தகத்தை எழுதினேன். இந்த நூலில் எளிய சொற்களும் வாக்கியங்களும் உள்ளன. இந்த முறையை அனுசரித்தே இரண்டாவது, மூன்றுவது, நான்காவது, ஐந்தாவது பாட நூல்களையும் எழுதியுள்ளேன். இரண்டாவதாக நான் ஓர் இலக்கண நூலை மூன்று பாகங்கள் கொண்டதாக எழுதியுள்ளேன். நான்காவதாக ஒரு கணித நூலையும் எழுதியுள்ளேன். இவையெல்லாம் இலங்கைப் பாடசாலைகளில் பயிற்றப்படுகின்றன. அல்லாஹ்வின் அருளால் இந்தப் பாடங்களில் மேல் வகுப்புக்களுக்கும் நூல்களை நான் எழுதுவேன்".

பாடசாலைகளுக்காக நாவலர் எழுதிய நூல்களோடு சித்திலெப்பையவர்கள் எழுதிய நூல்களை ஒப்பு நோக்கி ஆராய்ந்தால் பல முக்கியமான விபரங்கள் வெளிப்படக்கூடும்.

சித்திலெப்பையவர்களின் இலக்கியப் பணியிலும், கல்வி வளர்ச்சிப் பணியிலும் அவர்களுக்கு ''கொழும்பில் இல்மு (கல்வி) விஷயத்தில் மிகு முயற்சி யெடுக்கிறவரும், மதறஸாக்கள் திறந்து பொருள்களைத் தாராளமாய் செலவு செய்து வருகிறவருமாகிய அரசி மரைக்காயர் வாப்பிச்சி மரைக்காயர் ''பாஸ்'' அவர்கள் உறுதுணையாயிருந்து வந்திருப்பதை மேலே நாம் கூறிய நூலிலும், அஸ்ரூருல் ஆலம் முதலிய நூல்களிலுமிருந்து நாம் அறியக்கூடியதாயிருக்கிறது.

நாவலரின் சமயத் தொண்டும், கல்வி வளர்ச்சிக்கான முயற்சிகளும் பலவிதமான எதிர்ப்புக்கள், கண்டனங்கள் நிதிப் பற்றாக் குறை முதலிய வசதியீனங்களைக் கண்டது போலவே சித்திலெப்பையவர்களும் தமது கொள்கைகளுக்கு மாறுபட்டவர்களின் நிந்தனைகளையும் கண்டனங்களையும் சமாளிக்கவேண்டியிருந்தது.

இறை நம்பிக்கையும் இலட்சியப் பிடிப்பும் உடையவர்கள் எத்தகைய தடைகள் ஏற்பட்ட போதும் உறுதியான உள்ளத்தோடு தமது முயற்சிகளில் வெற்றி காண்பார்களென்பதை இவ்விரு பெரியார்களும் தங்களுடைய அரிய வாழ்க்கையின் மூலம் நிரூபித்துள்ளார்கள். இவ்விருவரும் தத்தம் வாழ்க்கையில் நிரம்பிய அனுபவம் பெற்று முதிர்ச்சியடைந்த கட்டத்தில் வெளியிட்டுள்ள சில கருத்துக்கள் இவர்களுடைய ஆழ்ந்த இறை நம்பிக்கையையும் சேவையுள்ளத்தையும், பெருந் தன்மையையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இங்கு கீழே தரப்படும் வசனங்களை நாம் படிக்கும் பொழுது இப்பெரியார்களின் ஒப்பில்லாத தனிச் சிறப்பு நிலை எமது உள்ளத்தைத் தொடுவதாக உள்ளது.

நாவலர் தமது சைவப்பிரகாச வித்தியாசாலையில் (1879) தமது கடைசிப் பிரசங்கத்தை நிகழ்த்தினர். பிரசங்க முடிவிலே மக்களை நோக்கி ''நான் உங்களிடத்து கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டு வருஷகாலம் உங்களுக்குச் சைவ சமயத் துண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவ சமயம் குன்றிப் போகுமென்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். இன்னும் என்னைப்போல் படித்தவர்களும், சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவுகளைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க எவர் வருவார்? இதுவே எனது கடைசிப் பிரசங்கம்'' எனப் பொருள்பட பேசினர். இந்த உருக்கமான உரை அவையோரின் கண்களில் நீர் மல்கச் செய்தது.

சித்திலெப்பையவர்கள் 1897-ம் ஆண்டில் வெளியிட்ட அஸ்ரூருல் ஆலத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்:—

''சென்றஇருபத்தைந்து வருடங்களுக்குள்ளே இவ்விதமான ஆலிம்கள் மட்டுமல்ல, பெருங் கூட்டங்களாய்ச் சேர்ந்து எனக்கு விரோதித்தெழும்பி அவர்களின் பொருமையெனும் சூருவளிக் காற்றுக்கு நானும் எனது நன் முயற்சிகளுமகப்பட்டு நான் சலாமத்தென்னும் குடாவிற்கு வந்து சேர்ந்திருக்கிறேன்.

எனது நன் முயற்சிகளெனும் பயிர்கள் சிலது செழித்து வளர்ந்தோங்கியிருப்பவைகளில் அந்த விரோதமாயிருந்தவர்கள்தானும் செளக்கியமடைகிறார்கள். பொருமையெனும் அக்கினிக்கு அந்தப் பயிர்களிற் சிலது வாடிக் கருகியிருந்தாலும், எனது மவுத்துக்குப் பின் இவைகளெல்லாம் பொது நன்மைக்காக இன்னர் கட்டியதாக இருக்க நாங்கள் அநியாயஞ் செய்து அவைகளைக் கெடுத்தோமென்று சலித்துக் கண்ணீர் விட்டு அந்தக் கண்ணீரால் அப்பயிர்களை வளர்ப்பார்கள். ஆகிலும் அல்லாகுத்த ஆலா எனக்கு விரோதிகளாயிருந்தவர்களெல்லோரையுமெனக்குச் சிநேகிதர்களாகச் செய்தான். அவர்கள் என் பெயரிற் கிருபையாயிருக்கவும் என்னுல் அவர்கள் பிரயோசனமடையவும் அவர்களின் துஆ பறக்கத்தால் நான் பிரயோசனம் பெறவுஞ் செய்யும்படி அல்லாகுத்த ஆலாவிடம் துஆக் கேட்டு நிற்கிறேன்'' என்னே இவ்வுத்தமரின் பெருந்தன்மை!

இதுவரை நாம் கூறியவற்றிலிருந்து நாவலரின் நற்பணிகள் தமது சமூகத்தவருக்கு மாத்திரமன்றி தமிழைத் தம் மொழியாகக் கொண்ட அனைவருக்கும் பயனளித்து வருவதை நாம் தெளியக்கூடியதாயிருக்கிறது. நாவலர் தம் அறிவாற்றலால், மொழி வளத்தால், நோக்கத் தூய்மையால், உழைப்புத் திறமையால் இந்நாட்டவர் அனைவருக்கும் அரும் பெரும் பணியாற்றி வழி காட்டிப் போந்துள்ளார். எமக்கும் தமிழகத்தவருக்கும், தமிழ்ப் பேசும் எல்லா நாட்டவர்க்கும் அவர் பணி பொதுவாய் நிலவுகிறது.

இச்சிறு கட்டுரையில் நாவலர் பெருமானின் முயற்சிகளுள் ஒரு பகுதிக்கே இலங்கை வாழ் முஸ்லிம்களின் கல்வி, சமய கலாசார மறுமலர்ச்சித் தந்தையாம் அறிஞர் சித்திலெப்பையவர்களின் பணிகளோடு தொடர்பும், ஒருமைப்பாடும் காண முயன்றுள்ளேன். இத்துறையில் விரிவான ஆய்வுக்கு எனது முயற்சி திசை காட்டுமாயின் அதுவே எனக்குப் பெரும் திருப்தியாகும். அத்தகைய முயற்சி மிகுந்த பலனைத் தருமென்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கையுண்டு.

ச. தனஞ்சயராசசிங்கம்
தமிழ் விரிவுரையாளர்,
இலங்கைப் பல்கலைக்கழகம்

நவீனகாலம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே தமிழ்க் கல்வியின் நிலையும் தமிழாசிரியரின் நிலையும் தாழ்வுற்றிருந்தன. தமிழாசிரியரின் வீட்டுத் திண்ணையும் கொட்டிலும் அன்று பள்ளிக் கூடங்களாகக் காட்சியளித்தன. தமிழாசிரியர் தம் தொழிலினூற் பெறும் வேதனம் போதாமையால் மருத்துவம், உழவு முதலிய தொழில்களையும் செய்து வந்தனர். இத் தனிப்பட்ட தமிழாசிரியரை அடைந்த மாணாக்கர் ஒழுங்காகக் குறிப்பிட்ட நேரத்திற் படித்து வந்தனர் அல்லர். நூல்கள் யாவும் ஏட்டு வடிவிலிருந்தன. அவற்றினை ஒருவர் எளிதிற் பெற முடியாது. நூலொன்றன் ஏட்டுப் பிரதியினைப் பல முறை படியெடுக்கும் வழக்கமும் நிலவவில்லை. நூல்கள் ஏட்டிலிருந்தமையாற் பன்முறை பாடங் கேட்டுப்படிக்கும் பொழுதேமாணாக்கர்அவற்றினை மனப்பாடமாக்கும் வழக்கம் எழுந்தது.ஆசிரியரின் நன்மதிப்பை நாளடைவிற் பெற்ற மாணாக்கர் ஒருவர் சிலநாட்களுக்கு ஏடொன்றினை அவரிடமிருந்துபெறின் அது அம்மாணாக்கரின் பெரும்பேறெனக்கருதப்பட்டது. நிகண்டு, இலக்கணம் முதலிய கருவி நூல்களும், திருக்குறள், நாலடியார், வாக்குண்டாம், நல்வழி முதலிய நீதிநூல்களுமே அக்காலத்திற் கற்பிக்கப்பட்டு வந்தன. சமய நூல்களோ கற்பிக்கப்படவில்லை. தமிழ்க் கல்வியில் நாட்டமுற்றோர் தொகை மிகக் குறைவாயிருந்தது.

சேர் ரொபொட்டு பிறவுன்றிக்கு (Sir Robert Brownrig - *1812—1822*) என்னுந் தேசாதிபதி இலங்கையை ஆண்ட காலத்தில் கிறித்த சமயத் தொண்டர் பெருந் தொகையினராக வருவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டது. இத் தேசாதிபதி மக்களின் கல்வியையும் ஒழுக்கத்தையும் ஓங்கச் செய்வதற்குச் சமய நிறுவனங்கள் இன்றியமையாத சாதனங்களென உணர்ந்தார்.[1] இவ்வுணர்வின் விளைவாக *1805*ஆம் ஆண்டில் இலண்டன் மிசன் சங்கத்திலிருந்து நான்கு கிறித்தவத் தொண்டர் இலங்கைக்கு வந்தனர். அவர்களுள் வண.ஜெ.டி. பாம் (Rev. J. D. Palm) என்பவர் யாழ்ப்பாணத்திற் சமயப் பிரசாரஞ் செய்தார். இச் சங்கத்தினரைத் தொடர்ந்து பப்ரிஸ்ட்டு மிசன், வெசுலியன் மிசன்,அமெரிக்கன் மிசன்,ஆகிய சமய நிறுவனங்களிலிருந்து தொண்டர் முறையே *1811, 1813, 1815*ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வந்து தத்தம் சமயப்பணியினை ஆற்றத் தொடங்கினர். இச் சமயத் தொண்டர் தம் சமயப் பணியினைப் புதிதாகத் தொடங்கியதால் முதியோரை விட இளையோரிடம் செல்வாக்குப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்தனர். சுதேசிகள்

கல்விக்குரிய வசதிகள்போதியனவின்றி இடர்ப்படுவதைக் கண்ணுற்றனர். அவர்களின் கல்வியின் பொருட்டுப் பள்ளிக்கூடங்களை நிறுவி அவற்றின் மூலம் தம் சமயத்தினைப் பரப்ப எண்ணினர்.

இக் கிறித்தவ பாதிரிமாரின் முயற்சியினால் யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் பல பள்ளிக் கூடங்கள் எழுந்தன. இப் பள்ளிக்கூடங்கள் நவீன கட்டடங்களைக் கொண்டனவாயும் நவீன பாடத்திட்டத்தினைக் கொண்டனவாயும் விளங்கின. மேனாட்டிலிருந்து அச்சு இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டுப் பல நூல்கள் அச்சிடப்பட்டன. புதிய கட்டடங்களும், பாட நூல்களும், தளபாடங்களும் சுதேசிகளின் உள்ளத்தினைக் கவர்ந்தன. அவர்கள் பெரு விருப்புடன் தங்கள் பிள்ளைகளை இப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினர். இப் பள்ளிக்கூடங்களின் தலைமையாசிரியர் கிறித்தவப் பாதிரிமாராயிருந்தனர். அவற்றில் ஆசிரியர்த் தொழில் பார்ப்போர் யாவரும் கிறித்தவரே. கிறித்தவ சமய நூல்கள் அப் பாடசாலைப் பாடத் திட்டத்தில் இடம் பெற்றன. மாணாக்கர் எச் சமயத்தவரெனினும் விவிலியம் முதலிய கிறித்தவ இலக்கியங்களைக் கற்க வேண்டியநிலைமை ஏற்பட்டது. சைவப்பிள்ளைகள் விபூதி முதலிய சிவ சின்னங்களின்றியும் தம் தேவார திருவாசகம் முதலிய சமய இலக்கியங்கற்கும் வாய்ப்பின்றியும் இப்பள்ளிக்கூடங்களுக்குச் சென்று வரும் நிலை ஏற்பட்டது. இம் மாணாக்கரின் உள்ளத்தினை மாற்றுவதற்கான சூழ்ச்சிகளைத் திட்டமிடுவதிற் கிறித்தவ ஆசிரியர் தம் வாழ்நாளின் பெரும் பங்கினைப் போக்கினர். பண்டைக் காலத்திலே சமண பௌத்த சமயத் தொண்டர் கல்வித் தானம், அன்ன தானம், மருந்துத் தானம், அபய தானம் ஆகிய நால்வகைத் தானங்களைச் செய்தனர். நன் மாணாக்கர்க்கு ஊண், ஆடை, எழுத்தாணி, புத்தகம் முதலியன வழங்கினர் என்பதைக் கணிமேதையார் இயற்றிய ஏலாதி முதலிய இலக்கியங்களால் அறியலாம்:

> "ஊணெடு கூறை யெழுத்தாணி புத்தகம்
> பேணெடு மெண்ணு மெழுத்திவைமா—ணெடு
> கேட்டெழுதி யோதிவாழ் வார்க்கிந்தா
> ரிம்மையான்
> வேட்டெழுத வாழ்வார்விரிந்து."(ஏலாதி-63)

இவர்கள் சென்ற வழியிலே ஈழத்திற்குச் சமயப் பணியாற்ற வந்த மிசனறிமாரும் சென்றனர்.

இச் சமயத் தொண்டர் தங் குறிக்கோளாகிய சமய மாற்றத்திற்கு அரசாங்கத்தினர் நடத்தும் பாடசாலைகள் இடையூறு என உணர்ந்தனர். அரசினர் நடத்தும் பாடசாலைகளில் கிறித்தவ சமய நூலொன்றும் படிப்பிக்கப்படவில்லை. அங்கு சைவப் பிள்ளைகள் தம் சமயச் சின்னங்களைத் தரித்துச் செல்லலாம். அரசினர் நடத்தும் பள்ளிக்கூடங்களை மூடப்பண்ணித் தம் பள்ளிக் கூடங்களை மட்டும் நடத்தின், சுதேசிகளிற் பலரைத் தம் வசப்படுத்தலாமென்று இக் கிறித்தவ சமயத் தொண்டர் உணர்ந்தனர். இந் நோக்கத்துடன் அரசினர் தம் பாடசாலைகளுக்குச் செலவிடும் பொருளினைத் தமக்கு உபகரிப்பின் தம் பாடசாலைகள் மேலும் நன்னிலையில் நடத்தப்படுமென்றும் வேறு பல காரணங்கள் காட்டியும் வில்லியம் கோல்புறூக், கமெறன் ஆகிய இருவரைக் கொண்ட கொமிசன் இலங்கைக்கு வந்தபொழுது அக் கொமிசனைத் தமக்குச் சாதகமாக அறிக்கையினை அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்குமாறு சூழ்ச்சி செய்தனர். இதனை நாவலர் "சில காலத்துக்கு (1843) முன்னே கவர்ண்மெண்டார் இத் தேசத்தில் சில இங்கிலிசுப் பள்ளிக்கூடங்களைத் தாபித்துச் சில வருஷம் நடத்தினார்கள். அவைகளிலே கிறித்து சமய புத்தகமொன்றும் படிப்பிக்கப்படவில்லை. அங்கே சைவசமயப் பிள்ளைகளெல்லாரும் விபூதி தரித்துக்கொண்டே படித்து வந்தார்கள். அதைக் கண்ட பாதிரிமார்கள், கவர்ண்மெண்டுப் பள்ளிக் கூடங்கள் நிலைபெற்றால் தங்கள் கருத்து வாய்க்காது என்று நினைந்து இங்கிருந்த சில துரைமாரைத் தங்கள் வசப் படுத்திக் கவர்ண்மெண்டுக்கு வேறு நியாயங்காட்டி எழுதிவித்து அப் பள்ளிக்கூடங்களை எடுப்பித்திவிட்டு அவைகளுக்குக் கவர்ண்மெண்டார் செலவளிக்கும் பணத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களுக்கு ஆக்குவித்துக் கொண்டு அநீதியாகிய தங்கள் கருத்தையே நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். கவர்ண்மெண்டுப்பொருளுதவியைப்பெறும்பள்ளிக்கூடங்களிலே விபூதியை அழிக்கும் பொருட்டும் சமயநூல்களைப் படிப்பிக்கும் பொருட்டும் சமயப் பிரசங்கத்தைக் கேட்க வரும் பொருட்டும் பிள்ளைகளை வலாற்காரம் பண்ணுதல் கவர்ண்மெண்டாருடைய கருத்துக்கு முழுதும் விரோதமாம்."[2] எனக் கண்டித்ததிலிருந்து உணரலாம்.

இலங்கை அரசினர், வில்லியம் கோல்புறூக் கமெறன் ஆகிய இருவரைக் கொண்ட கொமிசன் ஒன்றை நிறுவினர். அவ்விரு கொமிசனரும் 1831ஆம் ஆண்டில் தாம் சமர்ப்பித்த அறிக்கையில் அரசினர் நடத்தும் தாய் மொழிப் பாடசாலைகள் மூடப்படல் வேண்டுமெனச் சிபார்சு செய்தனர். இச் சிபார்சின் விளைவாக 1843ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் அரசினர்

நடத்தி வந்த தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டன. இக் காலத்தொண்டு நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை (1848) தொடங்கும் வரையும் சைவப்பிள்ளைகள் கிறித்தவ சமய இயக்கத்தினர் நடத்தி வந்த பாடசாலைகளுக்கே செல்லும் இக்கட்டான நிலை நேர்ந்தது.

கிறித்தவப் பாதிரிமாரின் பாடசாலைகளிற் போதிக்கப்படும் ஆங்கிலக் கல்வியின் மோகம் சைவ சமயத்தவர் பலரைத் தம் சமயத்தை விடச் செய்தது. பலரைத் தாம் இதுகாறும் சாதி பற்றி ஒழுகிவந்த விதிகளையும் விலக்கச் செய்தது. ''பாதிரிமார்கள் இத் தேசத்துச் சில் பாலியர்களைக் குருமார்களாக்கி, றெவறெண்டுப் பட்டங் கொடுத்து விட்டார்கள். இங்கே நெல் அரிசி முதலியவையெல்லாம் ஒறுக்க றெவறெண்டுப் பட்ட மொன்றே மலிந்தது..... பாதிரிமாருடைய தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே படிப்பிக்கிற உபாத்தியார்கள் தமிழை நன்றாகக் கற்றுக்கொண்டவர்களல்லர். அவர்களிற் பெரும்பான்மையோர் சம்பள நிமித்தம் கிறித்து சமயத்திற் புகுந்தவர்கள்; கிறித்து சமயத்திற் புகுந்தமையின் பொருட்டே அவர்கள் உபாத்தியாருத்தியோகம் பெற்றவர்கள். அங்கே படிப்பிக்கப்படும் புத்தகங்களிற் பெரும்பாலான சுத்தத் தமிழ் நடையின்றி இலக்கணப் பிழைகளினால் நிறைந்தவைகளும் சைவ தூஷணங்களினாற் பொதிந்தவைகளுமாய் உள்ளவைகள். அங்கே படித்தவர்கள் திருத்தமாகிய கல்வியில்லாதவர்களும் ஒரு சமயத்திலும் பற்றில்லாத நிரீச்சுரவாதிகளுமாகின்றார்கள். அவர்கள் பேசும் தமிழோ அன்னிய பாஷை நடையோடு கலந்த அசுத்தத் தமிழ்''[3] முதலிய நாவலரின் கூற்றுக்கள் இக் காலக் கல்வி, சமயம் ஆகியவற்றின் நிலையினை உணர்த்தும். போலிக் கிறித்தவராயும் போலிச் சைவராயும் பல சைவர் நடித்தனர். அவர்களின் சமயப்பற்று அங்கவஸ்திரம் போலக் காலத்திற்கேற்ப மாற்றப்படவேண்டிய தொன்றாயிற்று.

சைவக் கோயில்களிலே வழிபாட்டுமுறைகள் செவ்வனே நடைபெறவில்லை. சைவாகம விதிகளுக்கும் குமார தந்திரம் போன்ற பிரமாண நூல்களுக்கும் புறம்பாகத் திருவிழாக்கள், பூசை, விக்கிரகந் தாபித்தல் முதலியன நடைபெற்று வந்தன. சைவக் குருமார்களிற் பலர் ''அந்தியேட்டிப் பட்டோலைதானும் இன்னும் சொல்லின் அந்தியேட்டியென்னும் பெயர்தானும் பிழையற எழுத''[4] அறியாதிருந்தார்கள். சைவாகமத்திற் சுலோக மொன்றாயினும் தேவார திருவாசகங்களில் பாடலொன்றாயினும் அறியாதிருந்தார்கள். திருநூற்றந்தாதியினைச் சைவ இலக்கியமாகமயங்கும் அறிவைப் பெற்றிருந்தனர். மாணிக்கவாசகரின் பத்திப் பாடல்களைத் தேவாரம் என்று கூறுவதில்லை என்பதை அறியாதிருந்தனர்.

பொதுமக்களுக்குக் காலத்துக்குக்காலம் சைவ சமய உண்மைகளை எடுத்துரைக்கும் சைவப் பிரசாரகர் இக் காலத்தில் இல்லை. சைவ சமய உண்மைகளை நிலைநாட்டிப் போலிப் பிற மதவாதிகளின் தூஷணத்தினை எதிர்த்து வெளியிடச் சைவர்களுக்குச் செய்தித் தாள்களில்லை. உதயதாரகை, கத்தோலிக்க பாதுகாவலன் முதலியனயாவும் கிறித்தவ கத்தோலிக்கரால் நடத்தப்பட்டவை. பாடசாலை, செய்தித்தாள், அச்சு இயந்திரம், பிரசங்கம் முதலிய சாதனங்கள் எவையும் இல்லாத நிலையிற் சைவம் வளர இடமேது? சைவக் கோயில்களிற் பல ஏற்கனவே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சியின் பயனாகக் கிலமடைந்தன. அக் கிலமடைந்த கோயில்களைப் புனருத்தாரணம் பண்ணுவிக்கப் போதிய ஊக்கங் கொண்ட சைவர் இல்லை. எம் மதமும் சம்மதம் என வாளா தாம் ஆற்றுப்படுத்தப்படும் வழியே செல்லும் பரதந்திரரே இக் காலத்திற் பெரும்பாலும் வாழ்ந்தனர்.

சைவக் கோயில்களில் தேவாரம் முதலியன பண்ணுடன் ஓதப்படுதல், புராணங்களுக்குப் பயன் சொல்லப்படுதல் முதலிய சிவ புண்ணியச் செயல்களுக்குப் பதிலாக வாண வேடிக்கைகளும் தாசிகள் நடனமும் சிற்றின்பப் பாடல்களும் பிற களியாட்டுக்களும் இடம் பெற்றன. இறைவனின் பேரில் உயிர்ப்பலி நிகழ்த்தப்பட்டது. கோவிலின் வருமானத்தினைத் தனிப்பட்டவர் உள்ளம் போகும் போக்கிற் செலவிட்டனர்.

தொன்மையான சைவக் குடியிற்றோன்றியவரிற் பலர் ''அன்னம் வஸ்திர முதலியவை பெற்றுப் படிக்கும் பொருட்டும் உபாத்தியாருத்தியோகம் பிரசங்கியுத்தியோகம் முதலிய உத்தியோகங்களைச் செய்து சம்பளம் வாங்கும் பொருட்டும், கவர்ண்மெண்டுஉத்தியோகங்களினிமித்தம் துரைமார்களிடத்தே சிபாரிசு செய்விக்கும் பொருட்டும், கிறித்து சமயப் பெண்களுள்ளே சீதனமுடையவர்களையும், அழகுடையவர்களையும் விவாகஞ் செய்யும் பொருட்டும், கிறிஸ்து சமயத்திலே பிரவேசிப்பாராயினர்கள்''[5] இப் புதிய கிறித்தவர்கள் மேனாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த பாதிரிமாருக்குத் தம் புதிய சமயப்பற்றினைக் காண்பிக்கும் நோக்குடன் சைவத்தை இகழ்ந்து பேசியும் எழுதியும் வந்தனர். குருட்டுவழி மும்மூர்த்திலட்சணம். துராசார விருத்தாந்தம் சைவ தூஷண பரிகார நிராகரணம், சுப்பிரதீபம், சைவ

மகத்துவ நிக்காரம், சைவ மகத்துவ திமிர பானு முதலிய சைவ தூஷண நூல்களை யும் எழுதினர். கிறித்தவப் பிரசங்கங்களும் கருத்தரங்குகளும் கிழமை தோறும் பள்ளிக் கூடங்களைச் சார்ந்த கிறித்தவக் கோயில்களிலும் தலைமையாசிரியர் இல்லங்களிலும் நடைபெற்று வந்தன.

ஆட்சியாளர் போக்கு

இக் காலத்து ஆட்சியாளரின் குறிக்கோளும் அனுதாபமும் கிறித்தவ மக்களின் முன்னேற்றத் திற்கு உழைப்பதாயிருந்தன. அரசாங்க அதிபர், மாவட்ட நீதிபதி முதலிய பொறுப்பு வாய்ந்த பெரும் பதவிகளை ஆங்கிலேயரே வகித்தனர். மணி யகாரர், உடையார், விதானை, முதலிய பதவிக ளுக்கும் கச்சேரியில் மொழி பெயர்ப்பாளர், பண் டசாலைப் பொறுப்பாளர், சிற்றாழியர் முதலிய பதவிகளே சுதேசிகளுக்குக் கிட்டின. சுதேசிகள் இப் பதவிகளை அடைவதற்குரிய தகுதிப்பாடுகள் பண்டுதொட்டு விதிக்கப்பட்டுள்ளன வெனினும் ஆட்சியாளரின் அதிகாரத்தினால் அவை நாளுக்கு நாள் வேறுபடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அர சினர், தமிழ்க் கல்வி விருத்திக்கு உழைத்து வந்த தனியாளர் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு உதவி யளிக்கவில்லை. உலகியல் என்ற போர்வையில் கிறித்தவ சமயப் பின்னணியிற் கல்வி கற்பிக்கப் படும் பாடசாலைகளே அரசினரிடமிருந்து பொரு ளுதவிபெற்றன. சைவக் கோயிற் திருவிழாக்கள் தக்க கார ண மின் றி த் தடைசெய்யப்பட்டன. கிறித்தவர் மருத்துவ நிலையங்களையும் பிற சமூக நலனுக்குரிய பொதுப் பணிகளையும் செய்வதிலும் அரசாங்க ஆதரவைப் பெற்றனர். எத் துறையி லும் சைவர் பின்தங்கும் நிலை ஏற்பட்டது.

போக்குவரத்துச் சாதனம் முதலியன

இக்காலத்துப் போக்குவரத்துச் சாதனங்களை யும் தொடர்புச் சாதனங்களையும் நோக்குவாம். ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குச் செல்வதற்கு மாட்டுவண்டியும் குதிரைவண்டியுமே விரைவான போக்குவரத்துச் சாதனங்களா யமைந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குக் கடல் வழியாகவே செல்லல் வேண்டும். கடிதங்கள் தமக் குரிய முகவரியினை அடைவதற்குப் பல நாட்கள் செல்லும். செல்வந்தர் குதிரைவண்டிகளிலும் பல்லக்குகளிலும் பிரயாணஞ் செய்தனர். நேரம் பார்த்துக் குறித்தவொரு வேலையைச் செய்யும் பழக்கம் ஏற்படவில்லை. பட்டணங்களிலும் கிரா மங்களிலும் கிறித்தவக் கோவில்களிலும் பள்ளிக் கூடங்களிலும் அடிக்கப்படும் மணியைக்கொண்டு காலத்தைப் பொதுமக்கள் கணித்து வந்தனர்.

இத்தகைய சூழலைப் பல தமிழர் உணர்ந்தி ருந்தும் வாளாவிருந்தனர். நாவலரே அச் சூழலை உணர்ந்து அதற்கெதிரான நெறியில் ''அலகில் கலைத்துறை தழைக்க அருந் தவத்தோர் நெறி வாழ'' உழைக்க முன்வந்தார். அதனாலன்றோ நாவலர் தமிழர் சமுதாயத்திற்கும் கல்விக்கும் சமயத்திற்கும் மொழிக்கும் ஆற்றிய அளப்பருந் தொண்டுகள் சிறப்புடையன. அத் தொண்டுக ளுக்கு இற்றைவரையும் ஈடும் இணையும்உண்டோ?

---

1. T. Ranjit Ruberu,
Education in Colonial Ceylon,
The Kandy Printers Limited, Kandy. 1962.

2. யாழ்ப்பாணச் சமயநிலை,
ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு,
த. கைலாச பிள்ளையால் திரட்டப்பட்டது.
வித்தியாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம்.
கலி; ரு0உரு.

3, 4. யாழ்ப்பாணச் சமயநிலை,
ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு,
த. கைலாச பிள்ளையால் திரட்டப்பட்டது.
வித்தியாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம்.
கலி; ரு0உரு.

5. யாழ்ப்பாணச் சமயநிலை,
ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு,
த. கைலாச பிள்ளையால் திரட்டப்பட்டது.
வித்தியாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம்.
கலி; ரு0உரு.

செவ்வேள்



ஆறுமுக நாவலர் இற்றைக்குத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி எய்தியுள்ளாராயினும், இன்றும் அவர் நம்மிடை வாழ்ந்து வருகின்றார். ஆம்; நாவலர் எழுதிய நூல்களிலே நாம் அவரைக் காண்கின்றோம். அவரோடு நேரே தொடர்பு கொள்ளாதவாறு காலம் நம்மைப் பிரித்துவைத்தபோதும், அவருடைய நூல்கள் அந்த அரிய தொடர்பை உண்டாக்கித் தருகின்றன. இந்த நூல்கள் வாயிலாக நாம் அப் பெருமானின் உள்ளத்தோடு உறவுகொண்டு அவருடைய ஆளுமை எத்தகைதென அறிகின்றோம்.

உண்மையிலே, ஒருவருடைய எழுத்திலும் நடையிலும் அவரது ஆளுமை வெளிப்படுகின்றது; அவர் எவ்வாறு சிந்தனை செய்கின்றாரோ, எவ்வாறு உணர்கின்றாரோ, அவ்வாறே எழுதுகின்றார். அவருடைய சிந்தனையிலே தெளிவும் வரையறையும் இருந்தால், அவருடைய எழுத்தில் இப் பண்புகள் நிழலாடும். 'உள்ளத்தில் உண்மை யொளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்ற பாரதியார் கூற்றும்,[1] 'உள்ளத்தின் குரலே ஒருவரின் உரைநடை' என்ற எமர்சனின் கூற்றும்[2] இந்த உண்மையை எடுத்துரைக்கின்றன. ஆகவே ஒருவருடைய எழுத்துநடை யென்பது அவரது ஆளுமையின் வெளிப்பாடேயாகும்.

நாவலர் உரைநடைநூல்கள் பலவற்றை எழுதித் தந்துள்ளார். சிறுவர்க்கும் பொதுமக்களுக்கும் கற்றோர்க்குமாக அவர் எழுதிய நூல்களையெல்லாம் ஓர் ஒழுங்கில் வைத்து ஆராய்ந்தால், அவரது ஆளுமையை அங்கையிற் கனிபோற் கண்டறியலாம். செயற்கரிய செய்த இப்பெரியாரின் ஆளுமை அளப்பரும் மாண்புடையது. அதன் சிற்சில கூறுகளைத் தொட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

வாழ்க்கையின் இலக்கு

நாவலர் வாழ்க்கையை எவ்வாறு நோக்கினார்? வாழ்க்கை பற்றிய அவரது விளக்கம் யாது? என்ற வினாக்களை எழுப்பி, விடை கண்டால் நாவலரது ஆளுமையின் அடிப்படையை அறிந்து கொள்ளலாம். இந்த வினாக்களுக்கு நாம் விடை தேடி அலையவேண்டா. நாவலரே தமது இரண்டாம் பாலபாடத்தின் முதல் வாக்கியத்தில் இவற்றுக்குரிய விடையைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தந்துள்ளார். அது வருமாறு:

1. பாரதி பாடல்கள், தேசிய கீதங்கள், தமிழ்

2. Emerson, Journals, 1864–76

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை
வணங்கி முத்தியின்பம் பெறும்
பொருட்டேயாம்.''

இந்த ஒரு வாக்கியத்திலே நாவலர் வாழ்க்கையைப் பற்றிக் கொண்ட முழுக் கருத்தும் அடங்கியுள்ளது. அவரது ஆளுமையை அளத்தற்குக் கருவாகவுள்ள மையக் கருத்து இங்கேயுளது. ''இந்த வசனம் வேதசாரம்; சாத்திரச் சத்து; புராண நியம்; பெறுபேறு,'' என்று இதன் அருமை பெருமைகளைப் பாராட்டுகிறார் பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை.[3] இந்து சமயத்தின்-சைவ சித்தாந்தத்தின் - உயிர்நிலை, இந்த வாக்கியத்திற் பொதிந்துள்ள கருத்தாகும். நாவலருக்கு இதுவே வாழக்கையின் நோக்கம்; இலக்கு; குறிக்கோள், குறிக்கோளை வைத்துக் கொண்டு முயலும் ஒருவனுடைய சிந்தனை, சொல், செயல் ஆகிய யாவும் அந்த ஒன்றனையே சுற்றி வரும். அவ்வாறே நாவலருடைய சிந்தனையும் சொல்லும் செயலுமெல்லாம் இந்தக் குறிக்கோள் ஒன்றனையே மையமாய்க் கொண்டமைந்தன.

''பயனில் சொற் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.'' (குறள், 196)

என்பது வள்ளுவர் கொள்கை. வள்ளுவரின் இந்தக் கட்டளைக் கல்லில் உரைத்தால், நாவலர் எழுதியவற்றின் மாற்று எத்தகையதெனக் கண்டு கொள்ளலாம். நாவலர் எழுதியவற்றில் பயனில்லாத சொற்களுமில்லை; பயனில்லாத கருத்துக்களுமில்லை; பயனில்லாத வருணனைகளுமில்லை. சொல்லின் அருமையையும் சொல்லும் பொருளின் பெருமையையும் அறிந்து எழுதியவர் நாவலர். வேண்டாச் சொற்களை அடுக்குவதிலும் வீண் வருணனைகளைப் பெருக்குவதிலும் அவர் நாட்டங்கொள்ளவில்லை. இதனால், இக்கால எழுத்தாளர் சிலர் காட்டும் பல்லலங்காரப் பண்புகள் நாவலர் எழுத்துக்களில் இல்லையெனலாம். அப்பண்புகள் நாவலரது குறிக்கோளுக்குப் புறம்பானவை; ஆதலாற் பயனில்லாதவை; நாவலர் பயனில் சொற் பாராட்டாதவர்.

ஒழுக்கவிதிக் கோவை

நாவலருடைய வாழ்க்கைக் குறிக்கோளுக்கு அரண்செய்வன அவர் உறுதியாய்க் கடைப்பிடித்த ஒழுக்க விதிகள். சொந்த வாழ்க்கையிலே அவர் தூய துறவும் மாசற்ற ஒழுக்கமும் பூண்டவர். துறவினால் உரனும் ஒழுக்கத்தால் விழுப்பமும் ஒருங்கெய்தியவர்.

''ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.'' (குறள், 131)

என்ற குறள்வழி ஒழுகிய நாவலர், பொதுவாழ்விலும் உயர்ந்த ஒழுக்கநெறிகளைக் கடைப்பிடித்தவர். தாம் மட்டுமன்றிச் சமூகத்திலுள்ள மற்றையோரும் ஒழுக்கத்தில் வழுவாதிருக்க வேண்டுமென விழைந்தவர். ஆதலால் அவ்வொழுக்க விதிகளை இளமை தொட்டே ஒவ்வொருவர் உளத்திலும் பதிக்குமுகமாகப் பாலபாடங்களிலே பல பாடங்களை எழுதியுள்ளார். முதற் பாலபாடத்தில் 'கடவுளை வணங்கு, குருவை வழிபடு, புண்ணியஞ் செய், பிதாமாதாவை வழிபடு, வீண்வார்த்தை ஒரு பொழுதும் பேசாதே' என்பன போன்ற சிறுச்சிறு வாக்கியங்களில் ஒழுக்கவிதிகளை எடுத்துரைத்த நாவலர், இரண்டாம் பாலபாடத்தின் தொடக்கத்திலே எண்பத்திரண்டு நீதிவாக்கியங்களில் நல்வாழ்வுக்கு வேண்டிய எல்லாக் கருத்துக்களையும் திரட்டித் தந்துள்ளார்.

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது.'' என்று தொடங்கும் மேற் காட்டிய வாக்கியமே இவ்வொழுக்கவிதிக் கோவையின் முதலில் உள்ளது. ''நாம் சிற்றறிவு சிறுதொழில் உடையேம் ஆதலால், முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவபுண்ணியங்களை உள்ளபடி அறிதலும், பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும், நம்மால் இயலாவாம்.'' என்பது இறுதி வாக்கியம். இது சைவசித்தாந்தத் தெளிவு. முடிந்த முடிவு. இவற்றுக்கிடையே திருக்குறள், மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் என்பன போன்ற நீதிநூல்களிற் கூறப்பட்ட ஒழுக்கவியற் கருத்துக்களையெல்லாம் பிழிந்து சாரமாகத் தந்துள்ளார் நாவலர். இந்த நீதி வாக்கியங்கள் ஒவ்வொன்றும் நாவலரது ஆளுமையின் கூறாக அமைந்த ஒழுக்கக் கோட்பாடாகும்.

நாவலர் கடைப்பிடித்த இவ்வொழுக்கம் அவருடைய வசனநடையில் அப்படியே நிழலாடக் காண்கின்றோம். நாவலரது வசனநடையிலே சொல்லலங்காரங்கள் இல்லாது போகலாம்; உரைநடை ஓவியங்கள் இல்லாது போகலாம்; உணர்ச்சிப்பெருக்கும் இல்லாது போகலாம்; ஆனால், சொற்களும் தொடர்களும் ஆற்றொழுக்காக ஓடும் அமைதியை அங்குக் காண்கின்றோம். ''உணர்ச்சியென்பதற்கே ஒரு சிறிதும் இடமில்லாமல் இவரது உரைநடை ஓடுகின்றது. முதலிலிருந்து முற்ற முடியும்வரை ஒரே நடைதான். ஒரு

3. சுதந்திரன் பத்தாண்டு நிறைவு மலர், 1957, பக். 66.



ஆறுமுக நாவலரைத் தமது சற்குருவாக வழிபட்டதுடன்
அன்னரின் பாதுகைகளைச் சிரமேல் வைத்து, அங்கப்
பிரதிட்டையாகவே மயானம் அடைந்து இறுதி
அஞ்சலி செய்த அம்பலவாண நாவலர்.
இவர் ஆறுமுக நாவலர் மீது
''சற்குரு மணிமாலை''
பாடியவர்.

—உபயம்: க. சதாசிவசேன்.

வேற்றுமையும் இல்லை. உலகம் அவ்வாறு உணர்ச்சியின்றி ஒரே நடையிலா நடக்கின்றது?.. 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்' என்பதன்றே பழமொழி? ஆதலால் ஒரே நடையில் முற்ற முடியச் செல்லும் இவர் நூல்கள் - உரை நடைநூல்கள் - அவ்வகையில் நம்மைக்களித்து வீழச் செய்கின்றன.'' என்று பேராசிரியர் ஒருவர் நாவலரின் உரைநடையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். 4 நாவலர் மாணாக்கர் பொருட்டு எழுதிய பாலபாடங்கள், பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் என்பன போன்ற உரைநடை நூல்களைக் கருத்திற் கொண்டே பேராசிரியர் இக்குறிப்பை எழுதியுள்ளாராகலாம்.

மாணாக்கருக்கென எழுதிய நூல்களில் நாவலர் உணர்ச்சியைத் தூண்டி விட விரும்பவில்லை. மாணாக்கர் இளமையிலே அடக்கமும் ஒழுக்கமுமுடையவர்களாய்ப் பெற்றோர், ஆசிரியர் போன்ற பெரியோரின் கட்டுப்பாட்டுக்கு அமைந்து நடப்பதையே நாவலர் விரும்பினர். ஆதலால், அவர்களுக்கென எழுதிய நூல்களிலே நாவலரின் வசனநடை உணர்ச்சிப் பெருக்கின்றி, அடங்கி, அமைதியாக ஒழுகிச் செல்வது இயல்பே. இந்த வசனநடையிலே பழகும் மாணாக்கர் தம்மையும் அறியாமலே ஒழுக்கநடையுடையவராவர். நாவலரின் பாலபாடங்கள் இளைஞர் நடை பயிலுவதற்கு ஏற்ற நடைவண்டிகள் என்பதை நாம் மனங்கொள்ளல்வேண்டும். மாணாக்கர் இளமையிலே இந்த ஒழுக்கப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டாற், பின்னர் வாழ்க்கை முழுவதும் ஆறவேண்டிய இடத்தில் ஆறியும் சீறவேண்டிய இடத்திற் சீறியும் தம் உணர்ச்சியைக் கட்டியாள வல்லவராவர். நாவலருடைய நடைவிகற்பத்தைக் காணவேண்டுமானால், நாம் அவருடைய பிரபந்தத்திரட்டைப் படித்தல் வேண்டும்; கண்டனங்களை வாசித்தல் வேண்டும். நாவலர் எழுதியவற்றிலெல்லாம் சீரிய ஒழுக்கநடை அமைந்திருப்பது, அவரது ஆளுமையின் வெளிப்பாடேயன்றி, வேறன்று.

கடமையுணர்ச்சி

''தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான்; அவ்வற்ப இன்பமுமோ மிக இழிந்தது.''

இது நாவலருடைய நீதிவாக்கியங்களுள் ஒன்று. சமூகமாக வாழும் மக்கள் ஒவ்வொருவருக்கும் தனிவாழ்வு, பொதுவாழ்வு என்னும் இருவகை வாழ்வு உண்டு. தனக்கென வாழ்வது தனிவாழ்வு; பிறர்க்கென வாழ்வது பொதுவாழ்வு. தனக்கென மட்டும் வாழ்வதாயின், அது தனிவிலங்கு வாழ்க்கையாய் இழிந்ததாகும்; தனக்கும் பிறர்க்குமாக வாழ்வதே பொதுவாக நல்ல வாழ்வு என்று போற்றப்படும். இனி, தன்னை மறுத்துப் பிறர்க்கெனமட்டுமே வாழ்வது எல்லார்க்கும் இயல்வதன்று. அது மக்களுட் சிறந்த சான்றோர் ஒருவரிருவர்க்கே இயல்வது. இத்தகையோரைத் ''தமக்கென முயலா நோன்றுட் பிறர்க்குரியாளர்'' என்றும், இவர்களாலே உலகம் நிலை பெற்றுள்ளது என்றும் புறநானூறு பேசுகின்றது. 5 ஆறுமுக நாவலர் இச்சான்றோர் வரிசையைச் சேர்ந்தவர். இதோ, நாவலர் தம்மைப் பற்றிச் சொல்லுவதைக் கேளுங்கள்:

''நான் இங்கிலிஷிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப்பின் இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சத்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃதில்லாமையால் வரும் அவமதிப்பைப் பார்த்தும் உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித் துணைமாத்திரங் கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும் அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்.'' 6

நாவலர் தமது காலச் சூழலால் உருவானவர்; சூழ்நிலை அவரைக் கடமை செய்யத் தூண்டிவிட்டது. அவர் சைவச் சூழலிற் பிறந்தவர்; கிறித்தவச் சூழலிற் பயின்றவர். நமது நாட்டு மக்கள், வழிவழிவந்த தமது சமயமாகிய சைவத்தை அறியாதவராயிருந்த போது, வேற்று நாட்டிலிருந்து வந்த கிறித்தவத் தொண்டர்' அவர்களைத் தமது சமயத்திற் சேர்க்கும் பொருட்டு முறையல்லா வழிகளில் முயன்றனர். இந்த முயற்சியிலே சைவத்தைப் பழிக்கவும் சைவ

5. புறநானூறு, 182.

மறைகளைப் பழிக்கவும் அவர்கள் தயங்கவில்லை நாவலர் 'மறைகணிந்தனை சைவநிந்தனை பொரு மனமுடையவர்; ஆதலால், இவ்வேற்றுமதத்தினர் செய்த சைவநிந்தனையால் அவர் உளம்புழுங் கினர்; சைவமக்களின் அறியாமைக்கு இரங்கினர். ஆதலால் சைவ மக்களுக்குத் தங்கள் சமயத்தின் உண்மையை விளக்கி, அதனை நிலைநாட்டுவதே தமது தலையாய கடனென அவர் உணர்ந்தார். கடமையை உணர்ந்து, தன்னலந் துறந்து, சைவத் தொண்டரானர்; சைவத் தொண்டுக்குத் தமிழ் கருவியாய் அமைந்தமையால் அவர் செய்த சைவத் தொண்டே தமிழ்த்தொண்டுமாயிற்று. நாவலரளவில் சைவமும் தமிழும் அத்துவிதமாய், இரண்டறக் கலந்து நின்றன. அவர் 'சைவநிந் தைகளையும் சைவநிந்தகர்களையும் புறச்சமயங் களையும் பிழைபட இயற்றும் நூலுரைகளையும் வழுநிலை காட்டிக் கண்டித்தார்.' அவ்வாறு செய்யவேண்டியது அக்காலத்து ஆவசியகமா யிற்று. அது மறமெனப்படாது அறமெனவே படும்.

கல்வி மேம்பாடு

கல்வி கடவுளை அடைவதற்குக் கருவி. நாவலருடைய வாழ்க்கைக் குறிக்கோளுக்குக் கல்வி இன்றியமையாதது. ஆதலால் அவர் தமிழ் மொழியிலுள்ள வீட்டு நூல்களையும் கருவிநூல் களையும் ஐயந்திரிபின்றிக் கற்றுத் தெளிந்தார்; ஆரியமொழியிலுள்ள அறிவுநூல்களையும் அவ் வாறே கற்றுத் தேறினர். இவற்றோடு ஆங்கில மொழியறிவும் அவருக்கிருந்தது. முன்னோர் நூல் களை முறையாகக் கற்றுத்தேறிய நாவலர், தலை முறை தலைமுறையாக அன்னர் ஈட்டித்தந்த அரியபெரிய உண்மைகளை யெல்லாம் உளங் கொண்டு, அவற்றுல் தாம் பயன்கொண்டவாறே சமூகத்திலுள்ள மற்றையோரும் பயனடைய வேண்டுமென விழைந்தார். இந்த நோக்கால், அவர் எழுதிய நூல்களிற் பெரும்பாலும் அவரு டைய சொந்தக் கருத்துக்கள் இடம்பெறவில்லை, புதிதாகத் தாமொன்று கூறவேண்டிய தேவை அவருக்கு உண்டாகவில்லை. வாழையடி வாழை யாக வந்த கல்விச் செல்வத்தை, எல்லார்க்கும் வழங்கவேண்டுமென்பதற்காகவே, அவர் உரை நடைநூல்களை இயற்றினர். இங்கும் பண்டை உரையாசிரியர் வளர்த்த தமிழ் உரைநடையி னையே நாவலர் பின்பற்றி, அதனைத் தமது காலத்தேவைக்கு ஏற்றவாறு எளிமையாக்கித் தந்துள்ளார். நாவலருடைய பாலபாடங்களையும் பெரியபுராண வசனத்தையும் படித்தபின், பெரிய புராண சூசனத்தைப் படிப்போர், இக்காலத் திலிருந்து இறையனர் களவியலுரைக் காலம் வரையும் சென்றுமீளுவர். பெரியபுராண சூசனம், நாவலருடைய ஆழ்ந்தகன்று நுணுகிய கல்விப் புலமைக்குச் சான்றுகத் திகழ்கினறது. இந்தக் கல்வியறிவு கடவுளுண்மையைக் கைத்தலத்தில் வைத்த கனிபோலத் தெளிவாக்கியமையால், இஃது அவருக்குப் பேராற்றலையுங் கொடுத்தது.

ஊறஞ்சா உரன்

''கடவுள் ஒருவரே நம்மோடு என்றுந் தொடர் புடையவராய், நமக்கு நம்மினும் இனியவ ராயுள்ளவர்; அவருக்கே நாமெல்லாம் உடை மைப்பொருள்.''

இது நாவலர் உள்ளத்தால் உணர்ந்து கூறிய உண்மை. இந்த மெய்யுணர்வு கைவந்தவர் ''உள்ளமுடைமை'' என்னும் வீறுடைய உர வோராவர். இந்த உள்ளத்து உரன் பெற்றிருந்த மையாலே, அப்பரடிகள், ''நாமார்க்கும் குடியல் லோம் நமனை யஞ்சோம் நரகத்தில் இடர்ப் படோம் நடலையில்லோம்'' என்று வீரம் பேச வல்லவரானர். நம்முடைய நாவலரும் அப்பருக் குச் சளைத்தவரல்லர். உண்மையை நிலைநாட்ட முயலுகையில் உடலுக்கு ஊறுவருமாயின் அத னையும் உவந்தேற்கும் உரன்பெற்று விளங்கியவர் நாவலர். அவர் கூற்றே இதற்குச் சான்று:

''இனி, இவ்வரசர்களால் நீர்க்குமிழிபோல நிலையில்லாததாகிய இந்தச் சரீரத்துக்கு ஓர் தீது வருமெனினும், வருக. நிலையுள்ளதாகிய ஆன்மலாபத்தின் பொருட்டு, பிராணத்தியா கம் பண்ணியும், சைவ ஸ்தாபனம் பண்ணு தலே அத்தியாவசியகம். நாம் காத்தல் வேண் டுமென அவாவும் இச்சரீரத்தை நாம் பெற்றது முத்திபெறும் பொருட்டன்றே? சிவதூஷணம் மு த லி ய அதிபாதகங்களைப் பரிகரித்தற் பொருட்டுச் சரீரத்தை விடுத்தவர் முத்தி பெ று த ல் சத்தியமென்பது சிவசாத்திரங் களாலே சாதிக்கப்பட்டதன்றே? அங்ஙனமா தலின் நாம் சிவதூஷணம் முதலியவற்றைப் பரிகரிக்குங்கால் ஒரோவழி வரற்பாலதாகிய சரீரநாசத்தை ஏற்றுக் கோடலினலே முத்தி பெறுவேமென்பது சத்தியமே. ஆமெனில், முத்தியாகிய சத்தியம் சித்தித்த வழி இச்சரீர மாகிய சாதனம் இருந்தென், ஒழிந்தென்.''[6]

நாவலரின் ஆளுமை மலையினும் மாணப் பெரிது. அது நம்மெல்லாரையும் ஆளவல்லது. நமக்கு வழிகாட்டவல்லது. இந்த ஆளுமையைக் கண்டு வியந்து நயப்பதற்கு நாவலருடைய நூல் கள் எல்லார் கையிலும் இருத்தல் வெண்டும்.

---

6. சைவ தூஷண பரிகாரம். பக்கம் 10.

கு. அம்பலவாணபிள்ளை

ஒப்புயர்வில்லா நாவலன்

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். — திருவள்ளுவர்

மலர்தலையுலகம் கலக்கமடையாது நன்கு நிலைபெறுவதற்கு என்றுந் தோன்றுத் துணையாக விருப்பவர்கள் கண்ணேட்டமுடைய பண்பாள ராம் சான்றோர்களே. அவர்களின்றேல் உலகந் தட்டுண்டு தடுமாறி மாய்ந்தொழியவேண்டியதே யென்றார் பெருநாவலராம் வள்ளுவர் பெருமான். மேலும் ''உலகம் உயர்ந்தோர் மாட்டு'' என் பதும் உலக வழக்கு. சிற்சில காலங்களில் உலகின் கண்ணே மக்களின் கல்வியறிவு, சீலத்தோடு கூடிய சமய வாழ்க்கை. நீதி, சீவகாருண்ணியம் முதலிய பண்பாடுகள் தழைத்துத் தலையோங்கிச் சிறப் படைதலும், வேறு சில காலங்களில் அக்கிரமங் கள் அதிகரித்துச் சீலங்கள் குன்றி அதர்மங்கள் தலைவிரித்துச் சன்னதமாடுவதும் இயல்பாகும். இப்படியுலகந் தலைதடுமாறும் போ தெல் லா ம் தெய்வ சங்கற்பத்தால் சான்றோர்கள், தீர்க்கதரி சிகள், அவதார புருடரென்போர் காலத்துக்குக் காலந் தோன்றித் தமது நல்லுபதேசங்களால், உதாரண வாழ்க்கையால், ஆன்மவீடேற்றத்துக்கு உறுதுணையாகும் சாஸ்தர தோத்திர நூல்களால், தொண்டுகளால் மயங்கி நிற்கும் உலகிற்கு உண் மைகள் யாவை யென்பதை எடுத்துக்காட்டி மக் கள் தளம்பாது நிதானமான வழியிற் சேறும்படி வைத்துச் செல்வதும் சகசமாகும். தமிழ் வழங்குந் தென்னாட்டில் எத்தனையோ மகான்கள் தவசீலர் கள் தோன்றித் திகைப்படைந்த மக்கட்கு நல்லறி வுச் சுடர் கொளுத்தி நல்வாழ்வு வாழ வழிகாட் டிச் சென்றதை நாம் நன்கறிவோம். அவர்களை என்றும் மக்கள் மறந்திருக்கவியலாது. இற்றைக் குப் பன்னிரண்டு நூற்றாண்டுகட்கு முன்னர்ச் சைவமும் சீலத்தோடு கூடிய வாழ்வும் பல வகை யிலும் தாழ்ந்த நிலையை யடைந்த போது அவ தார புருடர்களாம் சமயாசிரியர்கள் நால்வருந் தோன்றிப் பல்வகைத்தாம் தொண்டுகளால், அற்புதங்களால் சமயத்தையும் ஒழுக்க நெறியை யும் நிலைநாட்டிச் சென்றனர். அவர்கள் நமக்கு அளித்துச் சென்ற தெய்வீகத் தன்மை வாய்ந்த அருட்பாடல்களாந் தேவார தி ரு வா ச க ங் க ள் பெறற்கருஞ் செல்வங்களன்றே!

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் நம்நாடும், மொழியும், சமய மும் மேலைத்தேசத்தவர்களின் படையெடுப்புக் களாலும், அர்வகள் புகுத்திய நம்நாட்டிற்கு ஒவ்

வாத நாகரிக மோதல்களாலும் மிக்க வீழ்ச்சியும் தடுமாற்றமும் எய்துவதாயின. ஆபத்தோடு கூடிய இந்தச் சந்தர்ப்பத்திற்முன் நம்நாடும் சமய முஞ் செய்த தவப் பயனக ஆறுமுகநாவலர் பெருமான் 1822-ம் வருடந் தோன்றினர். பிரிட்டிஷ் அரசினரின் ஆட்சியாரம்பித்துச் சில வருடங்களுள், அமெரிக்கா, ஐரோப்பா முதலிய மேலைத் தேசங்களிலிருந்து பலதிறத்தினராம் கிறிஸ்தவ சங்கத்தினர், பாதிரிமார்களைத் தொகையாக அனுப்பித் தமது மதத்தையும் நாகரிகத்தையும் நம் நாட்டிற் பரப்பப் பெரிது முயன்று வந்தனர். இவர்கள், தங்கள் நோக்கங்களை நிறைவேற்றற் பொருட்டுக் கையாண்ட உபாயங்கள், மேற் கொண்ட வழிவகைகள் பலவாகும். காரியசித்தியை நாடினரே யன்றித் தாம் மேற்கொண்ட முறைகள் பழிப்புக்கிடமானவை யென்பதை இவர்கள் நோக்கினரில்லை. இவர்களுடைய முயற்சிகட்கெல்லாம் வேண்டியளவு உதவிகளும் ஒத்தாசையும் கிறிஸ்தவராகும் ஆங்கில அரசினரிடமிருந்து தாராளமாகக் கிடைத்து வந்தன. இவ்வாறுக அடாத முறைகளை மேற்கொண்டு தமது மதத்தைப் பரப்பி வந்த பாதிரிமார்களை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டவர் நாவலர் பெருமானவர். ''நாவலர் பெருமான் பிறந்திலரேல் சொல்லுதமிழெங்கே, சுருதியெங்கே, சிவாகமங்களெங்கே, ஏத்தும் புராணங்களெங்கே, பிரசங்கங்களெங்கே, ஆத்தனறிவெங்கே'' என்றார் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள். இன்று யாழ்ப்பாணம் சித்தாந்த சைவத்துக்கும், தூய செந்தமிழுக்கும் பேர்போன நாடாக மிளிர்வது நாவலர் பெருமான் அரிது செய்து முடித்த பெருந் தொண்டினலன்றே.

அக்காலத்திலிருந்து வாழ்ந்த மக்கள் பொதுவாகக் கல்வியறிவு சமயவறிவில்லாதவர்கள். எனவே, பிற சமயிகள் தமது மதத்தை நாட்டிற் புகுத்துவது இலகுவாக விருந்தது. எனவே நாவலர் பெருமான் நாட்டில் தமிழ்க் கல்வியை விருத்தி செய்ய முயன்று வித்தியாசாலைகள் தோற்றுவித்தனர். அவைகளையிடமாகக் கொண்டு சைவ சமயத்தை நன்கு விளக்கஞ் செய்து வந்தனர். சமயமென்றால் என்ன, அதன் தத்துவங்கள் யாவை என்பதை இலகுவாக மக்கள் அறியும்படி செய்தற்குப் புதுப்புது நூல்களை எழுதி வெளியிட்டனர். பதி, பசு, பாசங்கள் என்பனவற்றினை நன்கு விளக்கும் முறையில் சைவ வினாவிடை முதலாம் இரண்டாம் புத்தகங்கள் பெரிதும் மக்கட்கு உதவியாக விருந்தன. ஆகமங்களைப் பீடிகையாகக் கொண்டு எழுதப்பெற்ற இந்நூல்களை ஆக்குங்கால் இவருக்கு மிக்க உதவியாக விருந்தவர் நீர்வேலி சிவசங்கர பண்டிதரவர்களே. இவர் சமஸ்கிருதத்தில் மகா பாண்டித்தியமுடையவர். தமிழ் மொழியையும் நன்கு கற்றிருந்தவர். நாவலரைப் போல சீலத்தோடு கூடிய சமய வாழ்வும் கடவுட் பக்தியும் கைவரப்பெற்றவர். நாவலர் எழுதியது போல் கிறிஸ்து மதக் கொள்கைகளைக் கண்டித்துப் பல நூல்கள் வெளியிட்டனர். பல சமஸ்கிருத பாட புத்தகங்கள் இவரால் எழுதி வெளிப்படுத்தப்பட்டதுண்டு. இவர் அரிது முயன்று திறம்பட எழுதி வெளியிட்ட ''சைவப்பிரகாசனம்'' என்னும் நூல் சாமானியமாக ஒருவரால் எழுதி முடிக்கப்படக்கூடியதொன்றன்று. சைவ சமயத்தின் மகத்தான உன்னத நிலையை, தக்க ஆதாரத்தோடு தருக்க முறையில் விளக்கி எழுதியுள்ளார். இவரிடங் கல்வி கற்றுத் தேறிப் பெருமையடைந்தவர்களில் குறிப்பிடப்படக்கூடியவர்கள் இவர் புத்திரர் சிவப்பிரகாச பண்டிதர், வடகோவை சபாபதி நாவலர், சுன்னகம் முருகேச பண்டிதர் என்போர்களாவர். சங்கர பண்டிதர், நாவலர் பெருமானுக்கு ஏழாண்டுகள் வயதில் இளைஞர். மேலும் நாவலர் பெருமான் சிவபதமடைய ஏழாண்டுகட்கு முன்னரே அவர் தமது நாற்பத்திரண்டாம் வயதில் 1872-ம் வருடங் காலஞ்சென்றுள்ளார். இவரையும் நாவலர் பெருமானையும் யாழ்ப்பாணத்தின் ''இரண்டு காணுங் கண்கள்'' என்று முருகேச பண்டிதர் தாமியற்றிய கவியொன்றில் குறிப்பிட்டுள்ளார். உண்மைகளை உள்ளபடி கண்டறிந்து அவைகளை யாவரும் நன்கறியும்படி எடுத்துரைப்பதில் இவர்கள் இருவர்கட்கும் நிகரானவர்கள் அன்று யாழ்ப்பாணத்தில் இருந்ததில்லை.

நாவலர் பெருமானின் சமயத் தொண்டு நிகரற்றதாகவே, அவரின் தமிழ்த்தொண்டும்சாமான்யமானதன்று. ஏட்டுப் பிரதிகளாயிருந்த எழுபதுக்கு மேற்பட்ட அரிய தமிழ் நூல்களை நன்கு பரிசோதனை செய்து பிழையின்றி அச்சுவாகனமேற்றிய பெருமையும் இவர்க்குண்டு. இவர் புதிதாக எழுதிய வசன நூல்களும், உரை நூல்களும் பலவாகும். நூல்களை வெளியிடுவதோடு நில்லாமல் நாட்டின் கண்ணே பல வித்தியாசாலைகளைப் புதிதாக ஆரம்பித்துத் தமிழ்க் கல்வியை உரிய முறையில் விருத்தி செய்து வந்தனர்.

நாவலர் பெருமானின் பிரசங்க வன்மையை என்னென்று கூறுவாம்? கல்வியறிவுடன் பேச்சு வன்மையும் இவர் வரப்பிரசாதமாகப் பெற்ற தோர் கொடையாகும். இப்பேச்சு வன்மையே இவர் கையேற்ற தொண்டுகட்கெல்லாம் மிக்க உதவியாக விருந்தது. இவ்வன்மையுடன் தருக்க

சாத்திரவறிவு கைவரப்பெற்றிருந்த நாவலர் பெருமானை எவரும் இலகுவில் வெற்றிகொள்ளலியலாது. அக்காலத்தில் நாவலர் பெருமானின் பிரசங்கமென்னும் சைவம் வீறுகொண்டு காட்சியளிக்குமாம். சமுகமளிப்போர் யாவரும் விபூதியணிந்து திலகமிட்டு மிக்க ஆசாரமுடையராய்த் தோற்றுவர். உருத்திராக்கசாதனமுடையோரும் பலராவர். சட்டை தலைப்பாகையுடையோரை மருந்துக்குங் காண வியலாது. சைவ சமய உண்மைகளைத் தெளிவாக நன்கெடுத்துரைப்பதில் இவருக்கு எவரும் நிகராகார். பஞ்சமாபாதகங் கட்காளாவோர், சமய வொழுக்கங்களில் தவறினோர் இவர் கையில் அகப்பட்டுப் படும்பாடு இம்மட்டன்று. தாம் பேசுவதை நன்கு சிந்தித்து நிச்சயித்துத் தக்க ஆதாரத்துடன் பேசும் இயல்புடையவர். இவர் பேசும் விஷயங்களில் ஆட்சேபங்களை கிளப்ப எவரும் துணியமாட்டார். உயர்ந்த உத்தியோகத்தர், பிரபுக்கள் என்போரெல்லாம் மிக்க அமைதியாக விருந்து பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்வாராம். சிறந்த கல்வி மேதையாய், அதிகார புருடராய் அக்காலத்தில் வாழ்ந்த சி. வை. தாமோதரம்பிள்ளை போன்ற பேரறிஞர்கள் தானும் சட்டை யின்றிப் பட்டுடுத்து விபூதி உருத்திராக்க சாதனங்களுடன் அமைதியாகவிருந்து பிரசங்கத்தைக் கேட்டானந்தமடைவாராயின், மற்றவர்களைப் பற்றி என்ன கூறுவது? இவர் செய்த அற்புதமான பிரசங்கத்தைக்கேட்ட திருவாவடுதுறை யாதீனகர்த்தர் இவருடைய வாக்கு வல்லபத்தையும் ஆழ்ந்த கல்வியறிவையுங் கண்டு மிக்க ஆச்சரியமுஞ் சந்தோஷமுங் கொண்டனராய்ப் பல வித்துவான்களும் பண்டிதர்களும் நிறைந்த சபையில் இவருக்கு நாவலர் என்ற பட்டத்தைச் சூட்டினர். அன்று தொடக்கம் ஆறுமுக நாவலர் என்றே அழைக்கப்படலாயினர். இது நிகழ்ந்த காலத்தில் இவர்க்கு வயது இருபத்தேழாகும். இலங்கையிலும் இந்தியாவிலுமாக நாவலர் பெருமான் செய்த பிரசங்கங்கட்குக் கணக்குண்டோ? கேட்டுப் பயனடைந்தோர் தொகைக்கு எல்லையுண்டோ?

பல்வேறு பெருமைகள், குணமாண்புகள் குறைவின்றி நாவலர் பெருமான் மாட்டு நிறைவாக நிலைபெற்றிருந்தமையை யாவரும் நன்கறிவர். அவரைப் பெரியவோர் ஆசார திருத்தக்காரர் (Social Reformer) என்று கூறினும் பிழையாகாது. உண்மையறியாது தடுமாறி வியாகுலமடைந்திருந்த சைவ மக்களைப் பல வழியிலும் சீர்திருத்தி நல்வழியிற் செல்ல வைத்தவர் அவரல்லவா? இப்பெரிய தொண்டினை இனிது செய்து முடித்தற்கு இவருக்குப் பேருதவியாக விருந்தவை இரண்டு பெரிய சக்திகளாகும். ஒன்று இவரின் ஆரம்ப சக்தி (Originality). நல்லது, ஏற்றது, உண்மையானது என்று அறிந்துவிட்டால் எத் தொண்டினையும் பின் முன் பாராமல் துணிந்து செய்ய முற்படுவார். தொடங்கிவிட்டால் எதனையும் செய்து முடித்த பின்னரே ஓய்வடைவார்; மற்றையது இவரது ஆத்ம சக்தி (Soulforce). எத் தொண்டினைச் செய்யுங்காலும் சுயநலங் கருதாது அப்பழுக்கற்ற சிந்தையுடன் செய்து செல்வார். மேலும் மகத்தான தொண்டுகள் சிறப்படைந்து வெற்றிகரமாக முடிவெய்தி வந்தமைக்கும் மூன்று பெரும் பண்பாடுகளை எடுத்துரைக்கலாம். அவைகள் (a) அஞ்சாமை, (b) பளிங்கு போன்ற களங்கமற்ற அந்தரங்க வாழ்க்கை, (c) தொண்டுகளைச் செய்து முடிக்கக் கையாளும் உபாயங்கள், வழிவகைகள், தூய்மைவுடைத்தாதல் என்பனவாம். உண்மையென்று கண்டு நல்வழியிற் பணியாற்றுங்கால் எதற்கும் அஞ்சமாட்டார். தமது ஆருயிருக்குந்தான் ஆபத்து வரினும் என்ன தடைதாமதங்கள் எதிர்ப்படினும் அவைகளைச் சிறிதும் பொருட்படுத்தமாட்டார். கடவுட் பக்தியோடு பணியாற்றுவோர்க்கு அச்சம் எதற்கு? குற்றம் நிறைந்த ஆத்ம சக்தியில்லாத பேதை கட்கல்லவோ நடுக்கமும் அச்சமும். மேலும் நாவலர் பெருமானின் வாழ்க்கை அரங்கத்திலென்ன, அந்தரங்கத்திலென்ன பளிங்கு போன்ற தூய்மையுடையது. பெரிய தலைவர்களாக நடிக்கும் அநேகரின் வாழ்க்கை முறைகள் அரங்கத்தில் ஒருமாதிரியாயும் அந்தரங்கத்திலே வேறோர் விதமாகவுமிருக்கும். இவர்கள் உள்ளும் புறமும் ஒரே தன்மையானவரல்லர். இக்காரணத்தாற்றான் இவர் கையாளும் தொண்டுகள் கருதிய பயனைக் கொடுப்பதில்லை. இத்துடன் நாவலர் பெருமான் எத் தொண்டினைப் புரியுங்காலும் அடைய விரும்பிய பேறன்று இவர் பெரிதாகக் கொள்வது. தொண்டினை யாற்றுங்கால் கையாளும் வழிவகைகள், செயல் முறைகள் எவருக்கும் ஊறுவிளையாதனவாய், குற்றமற்றனவாய், பழிப்புக்கிடமில்லாதனவாய், தூய்மையுடையனவாயிருப்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். இப் பெரிய சிறந்த பண்பாட்டுடன் கூடிய குண நலங்களன்றோ நாவலர் பெருமானை யாவரும் அன்றும், இன்றும், என்றும் உச்சிமேல் வைத்துப் போற்றித் துதிப்பதற்குக் காரணமாயின. இற்றைக்கு இருபது வருடங்கட்கு முன் காலஞ்சென்றவரும், இந்திய சுதந்தர தாதாவுமாகிய மகாத்மா காந்தியடிகளை உலகம் புகழ்ந்து போற்றி வாழ்த்திக் கொண்டாடுவதற்கும் மேற் காட்டிய மூன்று பண்பாடுகளே அவர் வாழ்க்கையில் பிரகாசமடைந்தனவென்பாம். இத்தகைய பண்புடைச்

சான்றோரைப் பார்த்துத் திருவள்ளுவர் பெருமான் என்ன கூறுகின்றார்?

ஊழிபெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு ஆழியெனப்படுவார்.

நாவலர் பெருமான் சிவபதமடைந்து தொண்ணூறு வருடங்களாகின்றன. இன்றும் அவர் செய்த தொண்டினைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டாதவர்கள் கிடையாது. இவரின் பின்னுவது, முன்னுவது மொழி சமயமாகிய இரு துறைகளிலும் அளவில்லாத அரிய பெரிய தொண்டுகளை வெற்றிகரமாகச் செய்து முடித்தவர் இன்னொருவரைக் காண இயலாது. இனியாவது ஒருவர் அவரைப் போன்ற பேராற்றல்களோடு தோன்றுவாரா என்பதும் சந்தேகம்தான். இவர் காலத்தவராய் இவர் காட்டிய வழி நின்று பணியாற்றிய சுன்னாகம் முருகேச பண்டிதரவர்கள் நாவலர் பெருமான் சிவபதமடைந்த போது கூறிய செய்யுளொன்று எடுத்துக்காட்டுவது பொருத்தமாகும்.

கந்தவேள் செய்தவம்போற் காணுந்
தவமுமவன்
மைந்தனும் நாவலன்போல் மைந்தர்களும் —
செந்தமிழில்
வல்லவர்க ளன்னவன்போல் வந்திடுவ
தும்முலகில்
இல்லை இல்லை இல்லை இனி.

தமிழிலே குறியீட்டிலக்கணம் புகுத்தியவர்

'' ஆங்கிலம் முதலிய பிற பாஷைகளிலே மிகவும் பிரயோசனமுள்ளதாகக் காணப்படுகின்ற குறியீட்டிலக்கணம் தமிழின்கண் முழுவதுந் தழுவிக்கொள்ளப்படுதல் வேண்டும். அதனாற் பொருட்டெளிவும் விரைவுணர்ச்சியும் உண்டாகின்றன. இவை காரணமாகப் படித்தானுக்குப் படித்த நூலின்கண் ஆர்வமுண்டாகின்றது. இக் குறியீட்டிலக்கணமெல்லாம் தமிழ் வசன நடை கைவந்த வல்லாளராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களாலே முன்னே மேற்கொண்டு வழங்கப்பட்டுள.''

— வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

'' தமிழ் மொழியின் வரலாறு '' — பக்கம். 116.

வித்துவான், பண்டிதர்
வி. சீ. கந்தையா, B. O .L,



தமிழ், நிரந்தர வாழ்வு பெற்ற ஒரு தனி மொழி. அம்மொழியின் அழியாத தன்மைக்கான சிறந்த காரணங்கள் ஒரு சில உள்ளன. அவற்றுள் தமிழ் பேசும் மக்களது வாழ்வோடு ஒன்றியதாக அம்மொழி கலந்திருத்தலாகிய காரணமே முதன்மையான தென நாம் கொள்ளலாகும்.

தமிழ்மொழி தோன்றிய காலம் வரையறையிறந்து நிற்கிறது. ஆயினும், காலத்துக்குக் காலம் தமிழ்மொழி பெற்ற மாற்றம், வளர்ச்சி, சிறப்பு முதலானவை பற்றி நாம் தக்க எடுத்துக் காட்டுகளோடு கூறுதல் கூடும். எத்தகைய மாற்றங்கள் வந்தபோதிலும், தனது சொந்தத் தன்மையினை இழந்துவிடாது, அவற்றோடு இணைந்து செல்லவல்ல பெருஞ் சிறப்புடைய அகில உலக மொழிகள் சிலவற்றுள்ளே தமிழும் ஒன்றாக விளங்கியதை அனைவரும் அறிவர். சொந்தத்துவத்தை இழக்கும் எந்த ஒன்றும் விரைந்து அழிந்து படுவதற்குரியதாகும் என்பது உண்மை. தமிழணங்கின், புறக்குற்றங்கள் தீண்டாத இத்தகைய பெருஞ் சிறப்பு நிறைந்த காரணத்தினையே, பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களும்:

"ஆரியம் போல் உலக வழக்கு
அழிந்தொழிந்து கிதையா உன்
சீரிளமைத் திறம்" என்று புகழ்ந்து பாடி மெய்மறந்து நிற்பாராயினர்.

சங்கமிருந்து தமிழ் வளர்த்த சான்றோர் அளப்பரியவும், விலைமதிப்பரியவுமான செய்யுட் செல்வங்களை நமக்கு விட்டுச் சென்றார்கள். தொகுப்பாசிரியர்களாலும், உரை ஆசிரியர்களாலும் அவை போற்றிக் காக்கப்பெற்று வந்தன. சென்ற இரண்டு நூற்றாண்டுகளிலே, அவ்வாறான நமது பரம்பரைத் தமிழ்ச் சொத்து, மறைத்து ஒதுக்கப்படக்கூடிய சூழ்நிலை நம் அரசியலிலே புகுந்தது. தமிழ் மொழிக்கு ஒரு சோதனைக்காலம் என்று சொல்லத்தக்க சூழ்நிலை அது. வேற்று மொழி, வேற்று நாகரீகம், வேற்றுச் சமயம், வேற்றுக் கலை, கலாசாரம் என்பவற்றின் படையெடுப்புக்கு ஈடுகொடுத்து நிற்கவேண்டிய நிலை தமிழுக்கு ஏற்பட்டது. அப்படையெடுப்புக்குத் தமிழ் மக்களிற் பலர்கூட அடிப்படலாயினர். அவ்வாறு அடிப்பட்ட தமிழரும் தமிழ் மொழிக்கு எதிரிகள் போலானார்கள். இந்த நிலையின் தொடர்ச்சி இலகுவில் நீங்காது நீண்டு வளர்ந்து கொண்டே சென்றது.

பலர் இதனை உணர்ந்து, பல்வேறு துறைகளிலும் நுழைந்து, தமிழ் மொழிக்குத் தொண்டு செய்ய முனைந்தனர்.

அவருள், பண்டைய இலக்கிய இலக்கண நூல்களை, ஓலைச் சுவடிகளிலிருந்து பெற்று அச் சேற்றிப் புதுப்பித்தோர் சிலர். காலத்தை ஒட்டித் தமிழுக்கு இன்றியமையாத தேவையாக இருந்த உரைநடை நூல்களைத் தமிழில் ஆக்கினோர் சிலர். விஞ்ஞானம், புவியியல் முதலான சாத்திரங்க ளைத் தமிழில் ஆக்கி அளித்தோர் சிலர். பழைய கல் வெட்டுகளையும் செப்பேடுகளையும் தேடிப்படித்து அவற்றின் மூலம் நமது பண்டைய வரலாற்றினைத் தெளிவு செய்தோர் சிலர். நமது முன்னோர் எளித்த இலக்கிய இலக்கணங்களைப் படித்து, அவற் றிலிருந்து தமிழரது பூர்வீக நாகரீகம், கலாசா ரங்களைத் திரட்டி எழுதினோர் சிலர். இத்தகைய யாவரும், தமிழ்மொழி உள்ளவரை இறவாத பெரும் புகழ்படைத்த தமிழ்ச் செம்மல்கள் என்று போற்றப்படத் தக்கவரே.

மேலே நாம் காட்டியவற்றுள் பழைய நூல் களைப் பதிப்பித்தலும், வசனநூல்களைப் படைத் தலுமாகிய செயல்கள் மிக மிக முக்கியமான பணிகள். மற்றைய தமிழ்த் தொண்டுகள் சரி வர நடத்தற்கும் இன்றியமையாதனவான சிறந்த அடிப்படைச் சேவைகள் அவை என்று நாம் கூறலாகும்.

நாவலர் பெருமான் சிறந்த தமிழ்ப் பெரி யார்; தலைசிறந்த தமிழ்த் தொண்டர்; ஐந்தாங் குரவர் என்று சொல்லத்தக்க சைவசமயப் பெருந் தகை என்றெல்லாம் கூறுகிறார்கள்.

''நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமிழ் எங்கே சுருதி எங்கே—எல்லவரும்
ஏத்து புராணகமங்கள் எங்கேப்ரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை'' என்று உயர்திரு. **சி. வை. தாமோதரம்பிள்ளை** அவர்கள் ஆராமை தோன்றப் பாடியுள்ளார். நாவலர் வாழ்ந்த காலநிலையினையும், அவர் செய்து போந்த தமிழ்த் தொண்டின் பரப்பினையும் நாம் ஊன்றி உணரு வோமாயின், இந்தப் புகழுரைகள், இத்தகைய பாராட்டுச் செய்யுள்கள் எவையும்கூட அன் னார் தம் சிறப்பை முற்றிலும் அளவிட்டுக் கூறப் போதியனவாகா என்று கூறுதல் கூடும்.

தமிழ்ப் பேரறிஞர்களான ஆறுமுக நாவலர் பெருமான், சி. வை. தாமோதரம்பிள்ளை, இலக் கிய கலாநிதி உ. வே. சாமிநாதையர் ஆகிய மூவ ரும் பிற்காலத்தே தமிழ் வளர்த்த பெருமக்களுள் முதன்மை பெற்றவர். அம் மூவருள்ளும் ஈழம் தந்த தவச் செல்வராகிய ஆறுமுகநாவலர் தனிச் சிறப்புக் கொண்டு திகழ்கின்றார்.

தமிழில் உரைநடையினைத் தோற்றுவித்து, செய்யுள்மயமாகப் பொதுமக்கள் கைக்கு எட் டாது கிடந்த தமிழ் நூல்களை மக்கள் வாழ்வி னோடு பிணையும் நிலைக்கு நெகிழ்வித்து, தருக்கரீதி யிலான பொருள் பொதிந்த கண்டனங்களைத் தமிழ் உரைநடையில் ஆக்கி, தமிழ் அச்சகங்களை நிறுவி, மேடைப்பேச்சினை எவரும் நினைக்கவே முடியாதிருந்த சூழ்நிலையைத் தகர்த்தெறிந்த முதல்வராகி, தமிழ் மேடைகளிலும் சைவமேடை களிலும் செஞ்சொற் கொண்டலாய் முழங்கி, சமகாலத்து அறிஞர்களுக்கெல்லாம் உயர்ந்தோர் எல்லைக்கல்லாகவும், பிற்காலத் தமிழ் அறிஞர், தமிழ்த் தொண்டர் முதலான யாவரது சிறப்புக ளையும் அளவிடுற்றதோர் உரைகல்லாகவும் வாழ்ந்த நாவலர் பெருமான், தமிழ்மொழியைக் காலத்தோடொட்டிக் கவடுவைக்கத்தக்க புது மொழியாக்கிப் புதுவளமும், புதுப்பொலிவும் நல்கி அதனைக் காத்தவரென்றால், அது தமிழ் செய்த தவத்தின் பயனல் விளைந்த ஒன்று என்றே கொள்ளல் வேண்டும்.

தமிழ் செய்த தவம் ஆறுமுக நாவலர் பெரு மானைத் தக்க காலத்திலே தோற்றுவித்தது. ஈழம் செய்த தவம் யாழ்ப்பாணத்து நல்லைநகரை அன் னாரது பிறப்புக்கு நிலைக்களனாக்கிற்று.

இப்பெருமகனாரை நினையாத தமிழ் உள்ளம் இருக்க முடியாது. மறதியும் அசண்டைக் குண மும், புறக்கணிப்பு மனப்பான்மையும் தமிழ்க் குலத்தின் விரோதிகள். அவற்றால் எழக்கூடிய இழி நிலையினைத் தமிழரிடையிருந்து அகற்றி, நாவலர் பெருந்தகைக்கு நினைவு மலரும், நினைவுச் சின்னங்களும் எடுத்தற்குத் தக்க காலத்தை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்சபையார் தெரிந்தெடுத் துள்ளார்கள். அன்னாரது பணி இணையற்றது. அது நற்பயனை ஊட்டி, என்றும் நிலைத்து வளர் வதாக.



யாழ்ப்பாணத்து நல்லூரில் நாவலர் வளர்ந்த வீடு. நாவலர் வீதியிலுள்ள இந்த வீட்டிலே தான் நாவலர், 1846-ம் ஆண்டு முதல் பல மாணாக்கர்களை ஒன்று சேர்த்து இராத்திரியிலும், காலையிலும் வேதனம் பெறாது சைவ ஆசிரியர்களாகவும், சைவப் பிரசாரகர்களாகவும் பயிற்சி அளித்துவந்தார்.

— உபயம்: க. சதாசிவன்.

பண்டிதை த. வேதநாயகி

கந்த புராணங் காக்கும் கலாசாரம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்'' என்பது கந்தபுராணம் எடுக்கும் அலங்கார தீபம். சம்பந்தப் பிள்ளையார் மலர்வா யிலே 'ஞாலம் நின் புகழே மிக வேண்டும்' என்று பால் மணக்கிறது. அவர் 'நின்புகழ்' என்றது சைவ நீதியை,

'உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்'
'வேதப் பயனுஞ் சைவம்'
'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்க'

என்று வைதிக சைவ மழை பொழிகிறார் சேக்கிழார்.

'வேத நூல் சைவ நூலென் றிரண்டே நூல்கள்' என்று இரு செவிக்கமுது படைக்கிறது சித்தியார்.

'அந்தணர் நூல்' 'அறுதொழிலோர் நூல்' 'நிலத்து மறைமொழி' 'பனுவற்றுணிவு' என்றிவ்வாறு பலமுகமாக வேத நூல் சைவ நூல்களை அணிந்து நூல்மார்பராக்குகிறார் திருவள்ளுவ நாயனார்.

'ஞாலம் நாறும் நலங்கொழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்'

என்று வேதம், வேதம் வழங்குந் தேசம், வேத வழக்கத்தின் பெருஞ் சிறப்பு என்னுமிவற் றோடு முக்கட் செல்வருக்குத் திருவிழாச் செய் கின்றது அகத்தமிழ்.

'நற்பனுவல் நால்வேதம்' 'ஒரு முதுநூல்' 'நான்மறை' என்றிவ்வாறு வேதத்தை மேற் கொள்ளுகிறது புறத்தமிழாகிய செந்தமிழ்.

'வேதாகமம் வழங்கும் புண்ணிய தேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம்' என்று நாவலர் முடிந்தது முடிக்கின்றார்.

'----------நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண்ணியந்தானுங்கும்'

என்னும் சித்தியார் நாவலர் வாக்கில் ஒலிக்கிறது

'ஆரியமும் செந்தமிழும் ஆனன் கண்டாய்'

வேதவொழுக்கமும் சைவநெறியுமே கலா சாரம். கடவுளை அடையும் நெறி அதுவே.

'கடவுளையும் அவரை வழிபடும் நெறியையும் அதனால் எய்தும் பயனையும் உனக்குப் போதிக்கும் அருள்வடிவாகிய ஆசாரியார் ஒருவரே உன் உயிர்த் துணை; ஆதலால் அவரை ஒருகாலமும் மறவாதே' — நாவலர்.

கடவுளை வழிபடும் நெறி கலாசாரம். அந்த நெறிக்குப் பின்னே தொடர்ந்து செல்லுகிற உடுப்பது உண்பது முதலிய செயல்களும், மேற் கொள்ளுந் தொழில்களும் கலாசாரமாவன. சைவ வைதிக கலாசாரமே கந்தபுராணங் காக்குங் கலாசாரம். அறுதொழில்கள் சிறந்தன. உப தொழில்கள் தீதில்லன.

'புவிக்கெலாம் வேதமேயன ராமன்' என்பான் கம்பன். உத்தமன் ஒருவனுடைய ஒழுக்கத்தை நோக்குதலினாலே வேத ஒழுக்கத்தைத் தெளிவாகக் காணலாம். அது வேதக் கல்வி.

சிவத்துவப் பொலிவே கலாசாரம்

நாவலர் கந்தபுராணத்திலுள்ள பதியிலக்கணத் திருவிருத்தங்களே மிகச் சிறந்த கலாசாரத்துக்கு ஊற்றுயுள்ளவை என்கிறார். 'பிறப் பிறப்பில்லாதது யாது அது பதி, பிறந்திறப்பன பசுக்கள்' என்னும் இதுவொன்றே பதிக்கும் பசுக்களுக்கும் வேறுபாட்டை எளிதாக உணர்த்தி நிற்பது. இது நாவலர் உபதேசம். 'பிறப்பில் பெருமானைப் பின்றுழ் சடையானை' என்பது சம்பந்தன் திருவாக்கு. பிறப்பில் பெருமான் என்று சிவபெருமானை எல்லாருஞ் சொல்லுவது இளங்கோவின் வாயிலும் வருகிறதே. 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று பாடுகிறானே இளங்கோ.

ஆதிசங்கரர் சிவானந்தலகரியில் சிவபெருமானைப் பசுபதி என்னுஞ் சொல்லினாலே பல முறை துதிக்கின்றார். நூல் சிவனைத் தலைவனாகவுடையது. ஆதிசங்கரர் தம்மைப் பசுவென்று கூறுகிறார். பசு பாசத்தினாலே கட்டப்பட்ட உயிர். பசுபதி அநாதிமல முத்த பதி. சங்கரர் சித்தாந்தம் பேசுகிறார்!

சிவமென்பது சர்வ மங்களத்தையும் குறிப்பது. சிவபெருமானுடைய எல்லா ஆயுதங்களும் மங்களமானவையென்று வேதம் பாடுகிறது.

'உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவிற் றோன்றும்
கருமமும் அருள்அ ரன்றன் கரசர ணாதி சங்கம்
தருமருள் உபாங்க மெல்லாம் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அருந்த னன்றே'

என்னுஞ் சித்தியார்ப் பாட்டு உயிர் குளிர ஒளிர்கின்றது.

சிவம் தசோபநிடதத்தின் முடிமணி

ஈசன் சிவனே. அளவுட்பட்ட பொருள்களுக்கு யார்யாரும் ஈசனாகலாம். 'எல்லாருக்குந் தான் ஈசன்' என்பது திருமுறை. ஈசோபநிஷத்து சிவன் ஒருவனே உடையான். ஏனையவெல்லாம் அடிமையும் உடைமையுமான உடைப்பொருள்கள் என்னும் உண்மையை முதலில் எடுத்துரைக்கின்றது. ஈசன் உடையான். நாவலர் சிவபெருமானை உடையவர் என்னுஞ் சொல்லினாலே சொல்லிச் சொல்லி உருகுவார்.

எல்லோருக்கும் முத்தி கொடுக்கும் பெருமையுடையவன் திரியம்பகனே யென்று வேதங் கூறும். தமிழ் நூல்கள் திரியம்பகனாகிய முக்கட் செல்வன் பாதமலர் சூடி உச்சி குளிர்கின்றன.

'பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே'.—புறம்.

'மேலொருவனில்லாதானாகிய சிவனை வழிபடுகிறவர் சைவர். சைவ கலாசாரம் தனக்கு மேலொரு கலாசாரம் இல்லாதது. 'கடனென்ப நல்லவை யெல்லாம்' என்று திருவள்ளுவ நாயனார் சொன்னவாறே புண்ணிய முழுவதையுங் கொண்டது. புண்ணியமேயான வாழ்க்கையாகிய சைவ நெறி, வழிவழி வந்த சைவர்களுக்கு மகிழ்ச்சி நிறைந்தது; இயல்பானது. எவ்வுயிர்க்குந் தாய் போலத் தண்ணென்றவர்கள் அவர்கள். குற்றமின்மையால் வரும் சுதந்திரமே அவர்கள் சுதந்தரம்

'இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றேயாயினும் தீதேயாயினும் அதுவே பெரும்பான்மையும்மரணபரியந்தம்அவனைத் தொடரும்' என்னும் நாவலர் வசனம், சைவச் சிறுவன் தீதிலா நன்மைகளிலேயே பழகுதலினாலே மரண பரியந்தம் பிழைக்குப் பெரிது மஞ்சுவான், பிழையைப் பெரிதும் வெறுப்பான் என்று உணர்த்துகின்றது. அவன் செயலெல்லாம் நல்லனவே,

விநாயக சட்டி விரதம் கந்த சட்டி விரதம் முதலிய விரதங்களினாலே சற்புத்திரப் பேற்றை உண்மைச் சைவன் பெறுவான். 'இவன் தந்தை என் நொற்றான் கொல்' என்று வியக்கும்படி பிள்ளையின் நற்குண நற்செய்கைகள் விளங்கும். நோன்பு, தவ விரதம், கொல்லாமை, அன்பு, வாய்மை முதலிய ஞான புஷ்பங்களினாலே எப்

பொழுதும் சிவார்ச்சனை செய்வது அப்பிள்ளைக்கு இயல்பானது. நோன்பிலே பிறந்து, பெற்றோரு டைய சைவ உணர்ச்சியிலே தளிர்த்து, சைவ நூல்களைக் கற்று வளரும் பிள்ளை புண்ணிய ரூபி யன்றோ.

'பரமர் தாள் பரவு மன்பே திருமுலை சுரந் தமுது செய்தருளுவித்தார்' என்று ஞானசம்பந் தருடைய தாயாரைச் சேக்கிழார் பாடுகிறார். தினந்தோறும் பலமுறை திருநீறணிந்து அதனாலே உடையவரை நினைந்து மனங் குளிர்ந்து சிவ புண்ணியங்களை நினைந்து நினைந்து வளரும் பிள்ளை புண்ணிய ரூபியன்றோ. கர்ப்பாதான மென்றும் அன்னப்பிராசனம், வித்தியாரம்ப மென்றும் இவ் வாறு பலவகைப்படுங் கிரியைகளினாலே-சம்ஸ் காரங்களினாலே உய்யும் வைதீக சைவன் அந்தி யேட்டியினாலும் பாவம் நீங்கி உய்வான். அனுட் டானத்தில் வழுவிய பாவங்கள் அந்தியேட்டி யினாலே நீங்கும் என்று நாவலர் உணர்த்துகின் றார். பாவம் நுழையாமையே அவன் அந்தரங்க நோக்கமாகும்.

கல்வி கேள்வி யில்லாதவர்களுக்கும் நேசத் தின் ஆசாரமாகிய வைதிக சைவக் கருத்துக்கள் சுவாசம்போல இயல்பாய் அமையும். அவைக ளைத் தெளிவாக்கி உறுதி செய்தற்கே கல்வி வேண்டும்.

'குலம் சுரக்கும் ஒழுக்கங் குடிக்கெலாம்'
நிலம் சுரக்கும் ஒழுக்க நெறிகளை.

சைவத்தின் மேல் நிலையாகிய ஞான நிலையில் யாது செய்யினும் தவமாகும். 'செய்தனவே தவ மாக்கும் அத்தன்' திருவாசகம்.

'நம்முடைய செயல்கள் அனைத்தும் சுருதிக் கும் யுத்திக்கும் இசைந்திருக்க வேண்டும்' என்பது நாவலர் வசனம்.

கீதை ஒருவனுடைய செயல்கள் அனைத்தும் சுருதியிலே பிறக்கவேண்டுமென்று சொல்லுவது கூர்ந்து நோக்கவேண்டிய தொன்று, வேதநூலை விசாரித்துத் தங்கள் கடனை வேதத்திலே கண்டு, வேதத்தின் வழி நூல்களிலே கண்டு, கண்ட இடத் திலே தீண்டி, தீண்டிய இடத்திலே மனம் வாக் குக் காயங்களைப் பொருத்தி எந்தச் செயலையாயி னுஞ் செய்யவேண்டு மென்பது கீதையின் நுண் பொருள்.

'வேதஞ் சொன்ன அறத்திறனுல் விளைவது' சைவம் என்பது சித்தாந்தம். 'வேதத்தை விட்ட அறமில்லை' திருமந்திரம்.

'நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு'ம் ஒரு வனுக்குத் தருமம் அறிய முடியாத சந்தர்ப்பங்கள் உண்டாதல் கூடும். 'நாம் சிற்றறிவு சிறுதொழில் உடையேம் ஆதலால், முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவ ருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவ புண்ணியங் களை உள்ளபடி அறிதலும், பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலா வாம்' என்பது நாவலர் வசனம். 'பெரியோரை விசாரித்து, அவர்கள் அச் சந்தர்ப்பத்தில் எவ் வாறு நடந்தார்கள் எனக் கண்டு, நடப்பார்கள் எனக்கண்டு அவ்வாறு நீயும் நடந்துகொள்' என்கின்றது உபநிடதம்.

திருவருளைச் சிந்தித்துத் தெளிவுபெறுபவர் பெரியோர். பழியஞ்சின படலத்திலே பாண்டி டியன் பிராமணனொருவனுக்கும் வேறொருவனுக் குமிடையிலே நிகழ்ந்த வழக்கை அருளின் துணை கொண்டு தீர்த்தான்.

தேவாரத்திலே கயிறு சாத்தித் திருவருட் குறிப்பை உணர்ந்து மெய்கண்டாரை உலகமுய் யும்படி தந்தார் தந்தையார். அருட்குறிப்பறி தற்கும் கயிறு சாத்துதல் சைவ மரபுகளில் ஒன்று.

வைதிக சைவ நூல்கள் தாங் கூறுங் கருத்துக் களை முறைப்படி நிரூபித்திருக்கின்றன. அவை களை விளங்கிக்கொண்டு, சிவ விரதங்களை முறைப்படி அநுட்டிப்பவன் விரும்பிய பேற்றைப் பெறுவது நிச்சயம். இது சைவ சமயிகள் அநுப வத்திற் காணுவதொன்று. விதிப்படி கந்தபுரா ணம் படிப்பவர்களும் அருளைக் காண்கிறார்கள்.

சிவபெருமானுடைய திருவருளைச் சிறிது சிறி தாகக் கிரகித்துக் கொள்வதற்குக் கால நியம அளவுட்பட்டனவாய விரதங்கள் உதவுகின்றன. எப்பொழுதும் தவமுடையவர்களான ஞானிகள் திருவருளை வேண்டியபொழுது வேண்டியவாறு பெறுவார்கள்; வேண்டிய வேண்டியாங் கெய்து வார்கள். சம்பந்தர் முதலிய பெரியோர்கள் அவர்கள் திருவருளைப் 'பூவில் நாற்றம்' போல நேரில் உணர்தற்குத் தவவிரதங்கள் கண்ணாகின் றன. சாதனங்களாகின்றன.

'கடவுளும் புண்ணிய பாவமும் சுவர்க்க நரக மும் மறுபிறப்பும் முத்தியும் உண்டென்னும் உண் மையை ஒருபோதும் மறக்கலாகாது' என்னும் நாவலர் வசனம் கலாசாரத்தின் இருதயத்தில் விளங்கற்பாலது.

'எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும் முற்றறிவு உடைய கடவுள் அறிந்து பயன் அளிப்பார்; பிறர் அறிந்தென்! அறியாதிருந்தென்!' என்னும் நாவலர் வாக்கு எல்லா நன்மைக்கும் மூலவேர். எந்த இருளிலும் வெளிப்பட்டுச் சூழ்ந்து காக்கும் ஒளி. நாவலர் சீர் வாழ்க.

ஆதிசங்கரர் ஷண்மதங்களைத் தாபித்தவர் என்பர். இப்பொழுது ஷண்மதக் கடவுள்களோடு இராமர் கிருஷ்ணரையுங் கூட்டுகிறார்கள். இது சைவ சமயிகள் சிந்திக்கவேண்டியதொன்று.

சிவபெருமான், அவரைப் பிரியாத அருட்சத்தியார், கணபதி, குமாரக்கடவுள், விஷ்ணு, சூரியன் என இவர்களைத் தனித்தனி வணங்கும் முறையென்று சமம் பண்ணும்முறை ஷண்மத முறைபோலும். சிவ பூசையிலே கணபதி முதலியவர்கள் அடங்கும் முறையில் அடங்கிப் பூசிக்கப் படுவர். 'பூத்தேர்ந்தாயன கொண்டுநின் பொன்னடி ஏத்தாதாரிலே எண்ணுங்கால்' என்பது பது தேவாரம். திருச்சத்தி முற்றத்திலே உமா தேவியாரும் கணபதீச்சரத்திலே கணபதியும் சேய்ஞலூரிலே குமாரக் கடவுளும் திருமாற்பேற்றிலே திருமாலும் பரிதி நியமத்திலே சூரியனும் சிவபெருமானைப் பூசித்தார்கள். அத்தலங்கள் உள்ளன. தரிசிக்கத்தக்கன.

அர்த்தநாரீசுரர் சத்தியையும், கஜமுகாநுக்கிரகர் கணபதியையும், சோமாஸ்கந்தர் குமாரக் கடவுளையும் ஹரியர்த்தர் விஷ்ணுவையும் அடக்கியிருத்தலை அறிவோம். 'பாதி மாதொடு மேய பரமனே' 'கணபதி வர அருளினன்' நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' அரியலால் தேவியில்லை ஐயன் ஐயறனுர்க்கே' என்பன காண்க.

சத்தி-சிவசத்தி, சிவபத்தினி, கணபதி-பிள்ளையார், சிவகணத் தலைவர், குமாரக் கடவுள், சிவகுமாரர், அரி அரசனுக்குத் தேவி, சூரியன் சிவபெருமானுடைய முக்கண்களில் ஒன்று; அட்டமூர்த்தங்களுள் ஒன்று.

திருமால் சிவபெருமானுக்கு மெய்யடியாராத லைச் சங்கரர் பாடிய சிவானந்த லகரியிலே காண்க.

இராமேச்சரம் இராமர் அருள்பெற்ற தலம். இது இராமாயணத்தில் உள்ளது. கிருஷ்ணர் உபமன்னியு மகாமுனிவரிடத்தே சிவதீக்ஷை பெற்றவர். 'யாதவன் துவரைக்கிறையாகிய, மாதவன் முடி மேலடி வைத்தவன்' என்று சேக்கிழார் பாடுகிறார்.

சில மூலிகைகளைக் கொண்டு உத்தமோத்தமமான உயிர்மருந்துகளைச் செய்வர் மருத்துநூலோர். அம் மருந்துகளைச் சிலகாலஞ் செய்யாதொழிவாராயின் செய்யும் முறைகள் மறக்கப்படும். மூலிகைகளின் குணங்களும் மறக்கப்படும். 'மிருத்தியாதி' 'மிருத சஞ்சீவினி' முதலிய மருந்துகளெல்லாம் உலகில் இல்லையாய்விடும். மருந்து நூலோருடைய புத்திர பௌத்திரர்கள் மூலிகைகளைக் களையென்று முள்மரமென்று விஷ விருட்சமென்று அழித்துவிடுவார்கள், அழிவார்கள்.

சைவக் கருத்துக்களும் சைவாசாரமும் இம்மை மறுமை யின்பங்களையும் முத்தியின்பத்தையும் தருகின்ற அருள் மருந்தின் மூலிகைகளும் முறைகளுமாவன. அவைகளை வருக்கால மங்களுக்கு-தம்மக்களுக்கும் அவர் மக்களுக்கும்-இல்லையாகச் செய்யும் பேரறிவு போன்ற புல்லறிவாண்மைக் காலத்தாரிடத்துக் காணப்படுவது அறிவுடையார் நெஞ்சை இடையறாது வருத்துகிறது.

பசுக்காத்தல், சிராத்தம் என்ற பாடங்கள் நாவலர் பாலபாடத்திலுள்ளன. உபநிடதமும் திருக்குறளும் சங்கத்தமிழும் மிக வற்புறுத்துகின்ற நன்மைகள் இவை. உணர்ச்சியைச் சுத்தஞ் செய்து ஆன்ம சுகம் கூட்டும் ஒழுக்கங்கள் மறைகின்றனவே! புல்லறிவாண்மை என்னும் பேய்க் கோட்பாடு உயிர்கள் வருந்துகின்றனவே!

மிகமேலான நூல்களை அச்சிடாமலும் கல்லாமலும் அவற்றின் கருத்தைத் திரித்தும் நூல்வழியொழுகுதலை நிந்தித்தும் பிரமக்கொலையாகிய அறிவுக்கொலை செய்வது எவ்வாறு முடியுமோ! உய்யு நெறிகளை அறிந்து வைத்தும் சொல்லாடார் சோரவிடுவாரும் உண்டே! தனிப் பெருமையுடைய சைவத்துக்குத்தான் சமய சமரசமென்பது பெரும் பகை. சமய சமரசம் திக்குத் தெரியாத காடு.

அதிக இரகசியமாக ஏகாந்தத்திலே சிவபெருமானை நோக்கித் தவம் செய்யும் பெரியோர்கள் இனிது வாழ்க. அதனால் எல்லா உயிர்களும்இனிது வாழ்க.

'கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை
யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை
புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்பரம
தாம்
எந்தைநம என்றுமினை யோய்நம குமாரநம எ ன்று'
தொழுவோம்.

தொழவே,

வான்முகில் வழாது பெய்யும், மலிவளம் சுரக்கும்,
மன்னன்
கோன்முறை அரசு செய்யும், குறைவிலா
துயிர்கள் வாழும்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக
மெலாம்'

செ. தனபாலசிங்கன், B. A. (Lond).

கோபுரவாசல் ஏழுப்பும் முதல்வரை

ஏந்தத் தெரிந்த உண்மையின் மீதாவது சமயம் கட்டப்பட்டதா? கடவுள் என்று சொல்லப்படும் ஒருவர் இருக்கிறாரா? மக்கள் தேவர் நரகர் மற்றுயிர் உள்ளன இல்லன எல்லாவற்றையும் பெருங்கருணைக் கடவுள்தான் தோற்றுவித்தாரா? அவரே எல்லாவற்றையும் ஆண்டு வருகிறாரா? என்ற இன்னோரன்ன கேள்விகள் இன்று நம்முன்னே நிற்கின்றன.

ஆம்! தமிழினத்தின் வாழ்வு சமய நெறியிலேயே வளர்ந்து உரம் பெற்றது. வாழ்க்கை ஒரு பெருங்கடல். அங்கே துன்ப அலைகளும் வீசும், இன்ப அலைகளும் வீசும். அந்த வாழ்க்கைக் கடலிலே வீசுகின்ற துன்ப அலையை இன்ப அலையாக மாற்றிக் கொடுப்பது சமயம். அது தொன்மைசான்ற தமிழனின் வாழ்வியலிலே பூத்துச் செழித்த செந்நெறி சமுதாயத்தை மையமாகக் கொண்டு விளங்கும். சிவநெறி. கோயில் எழுந்தது, கோபுரங்கள் நீண்டு நிமிர்ந்து நின்றது, வழிபாட்டில் மனிதனின் தலையைக் குனிய வைத்தது, தன்னை ஆண்டவனிடத்திலே காலகளை மண்டியிட்டு ஒப்படைத்தது சமயம் காட்டிய அச்சத்தினால் அன்று; பின் தன்னைக் காட்டிலும் மாபெரும் சக்தி ஒன்று தொழிற் படுகின்றது என்ற பேருண்மையை உணர்ந்த போதுதான்! அன்புதழுவிய-அறம் பெருகிய-ஒழுக்கம் நிரம்பிய-நிறைந்த வாழ்வைக் கொடுக்கும் சக்தி சமயத்துக்கே உண்டு. பணிந்து நடத்தல், அடங்கி ஒடுங்கி இருத்தல், தன்னை அறிதல், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல், உண்மையைப் பேசுதல், நன்மையைப் பேசுதல், அன்பாகப் பேசுதல், ஏன் பேசாதிருக்கப் பழகுதல் கூட சமயச் சார்புள்ள ஒழுக்கத்தின்பாற் பட்டன என்பதை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். சமய வாழ்வு ஒன்றினாலேயே நீதியையும் நேர்மையையும் ஒழுக்கத்தையும். பேணிக்காக்க முடியும். ஒழுக்க உணர்வு, கடமை உணர்வு, மனச்சாட்சி என்பன இறக்குமதி செய்யப்படும் பண்புகள் அல்ல. நல்லது செய்யவேண்டும் என்ற பரிவு உணர்ச்சி-கடமை உணர்ச்சி இயல்பாகவே வானத்திலிருந்து விழுந்து மனிதனின் மூளைக்குள் செல்வன அல்ல; உண்மைச் சமய வாழ்வு அருகி வந்ததனாலேயே கோழைத்தன்மை வெற்றி பெற்றது. குற்றம் கோலோச்சியது. கொடுமை முடிசூடியது. குருதிக் கறைபடிந்த கைகளோடு கூடிய ஆணவக்காரர்களின் ஆட்டம் தலை காட்டியது.

மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த போது அவர்களிடத்திலே கடவுள் நினைவு இருந்திருக்க முடியாது. அந்த நினைவு எழும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. மக்கள் நல்லறிவும் உணர்வும் பெற்றுச் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலே கடவுட் கொள்கை எழுந்தது. காணப்படும் இந்த உலகினைக் கொண்டு காணப் படாத கடவுளைத் தெரிந்து தெளிகின்றோம். உண்மையை ஓர்ந்து கொள்வதற்கு மூன்று வித பிரமாணங்கள் இருக்கின்றன. காட்சி அளவை, கருதல் அளவை, உரை அளவை என்று இவற் றைச் சித்தியார் பேச 'பரத்யக்ஷானுமானாகமா: ப்ரமாணானி' என்று பதஞ்சலி யோக சூத்திர மும் பேசும். கடவுளை நாம் கண்ணால் காண முடியாது. காதால் கேட்கமுடியாது. வேறு எந்த இந்திரியத்தினாலும் அறிய முடியாது. கட வுள் பிரத்தியட்சப் பொருள் அன்று. கண்ணி னால் காணமுடியாத பொருளை ஊகித்தறியலாம். மலையினின்று கிளம்பி வருகின்ற புகையைக் கொண்டு மலையில் தீயுண்டென்று ஊகித்தறி கின்றோம். இவ்வாறு ஊகித்து அறிதலும் அன்றி இன்னொரு விதத்தினாலும் உண்மையை அறிய லாம். பொருள்களை நமக்கு அளந்து அறிவிப் பன நூல்கள். இவற்றுள் கடவுளை உணர்த்தும் நூல் ஆகமம் என்னும் பெயரால் வழங்கப்படு கின்றது. ஆகமங்கள் கூறுவதால் மாத்திரம் கடவுள் உண்டென்றும் அக்கடவுளின் தன்மை இன்னதென்றும் துணிவது அறிவுடைமை ஆகாது. ஆகம அளவையால் கிடைக்கும் அறிவு நூல் அறிவு. ''நூல் அறிவு பேசி நுழைவிலாதார் திரிக'' என்று கடுமையாகவே சாடுவார் காரைக் கால் அம்மையார். நூலறிவினால் நமக்கு அநுபவ அறிவு சிந்தனை செய்து ஆராய்ந்து தெளிவதனு லேயே கிடைக்கும். இதுவே நமக்குப் பயன் தரும் அறிவு. ஆகம அளவையால் நமக்குக் கிடைக்கும் அறிவு வேறு. அளவையினாலும் வலியுறுத்தப் படுதல் வேண்டும். ஆகம அளவையினால் கிடைக் கும் அறிவை வலியுறுத்தி நிலைநாட்டுவது கருதல் அளவை ஆகும். சுருங்கச் சொன்னால், கருதல் அளவையினாலேயே கடவுளைப்பற்றிய ஆராய்ச்சி அறிவும் உயிர் முதலிய வேறு பொருள்களைப் பற்றிய அநுபவ அறிவும் விரிந்து பெருகும்.

ஆகவே கடவுள் உண்டென்று, கருதல் அள வையால் நிர்ணயிக்கலாம். அதாவது கடவுள் உண்டென்பதை உணர்த்தும் ஏதுக்களை நமக்குப் பிரத்தியட்சமாகும் வேறு பொருள்களிற் காணு தல் ஆகும். உலகப் பொருள்கள் அறிவுடைப் பொருள்கள், அறிவில் பொருள்கள் என இரு திறத்தன. இவை முறையே சித்து, சடம் எனப் படும். சேதனம், அசேதனம் எனவும் இவை பெயர் பெறும். சித்துப் பொருள்களின் தொகுதி சித்து உலகம்; சடப் பொருள்களின் தொகுதி சடஉலகம். சித்து உலகம் நமக்குப் பிரத்தியட்ச மாகாது. அதில் கடவுள் உண்டென்பதை உணர்த் தும் ஏதுக்களை நாம் காணமுடியாது. உண்மையைச் சொல்லப் போனால், ஏதுக்களைக் காணுதற்கு உரிய உலகம் சடஉலகமேயாகும். ஆனால் உலகின் சடத்தன்மை ஒன்றே கடவுள் உண்டு என்பதை உணர்த்திவிடமாட்டாது என் பதை நாம் அறிய வேண்டும். சடப்பொருள் களுக்கு எல்லாம் சூர்த்தா வேண்டும் என்பதும் இல்லை.

உலகம் தோற்றம், நிலை, ஒழுக்கம் ஆகிய மூன்று தொழில்களையும் பொருந்தி நிற்கும், இம்மூன்று தொழில்களையும் உடைய இந்த உலகம் இல் பொருளாக மாட்டாது. உள் பொருளேயாதல் வேண்டும். ஒரு காலத்து உள்ளபொருள் பிறி தொரு காலத்தில் இல்பொருளாவது இல்லை. இல்பொருள் உள்பொருளாவதும் இல்லை. இதுசத் காரிய உண்மை உலகம் தோன்றிய போதும் நிற் கும் போதும் ஒருங்கிய போதும் உள்ள பொருள். ஒடுங்கிய போது காரண வடிவாய் இருக்கும் தோன்றி போது காரிய வடிவாய் வரும். நிற்கும் போது காரிய வடிவில் வளரும். இவ்வாறு வடி வம் மாறும் உலகம் சித்து அன்று; அது சடம். உலகம் தானே தன் வடிவத்தை மாற்றிக் கொள்ள மாட்டாது. மண் தானே தன் வடிவத்தைக் குடமாக மாற்றிக் கொள்ள முடியாதது போல! மண்ணைக் குடமாக மாற்றுவதற்குக் குயவன் வேண்டும். அவ்வாறே உலகின் காரணவடித்தைக் காரிய வடிவமாக மாற்றுவதற்கும் அவ்வடிவில் அதனை வளர்ப்பதற்கும், மீண்டும் உலகைக் காரணவடிவமாக ஒடுக்குதற்கும் சேதனனாகிய கர்த்தா ஒருவன் வேண்டும். இவ்வுலகம் ஒருசேர ஒடுங்குதல் சர்வசங்காரம் எனப் படும். இச்சர்வசங்கார காலத்தும் தான் (ஒடுங்காது சட உலகத்தை) ஒடுக்கியவனே மீண்டும் அதனைத் தோற்றுவித்தற்கு உரியவன். இவனே சங்கார காரணன்! இச்சங் கார காரணன் தனுகரண புவன போகங்களா கிய அசேதனப் பொருள்களையும் தோற்றுவித்து சேதனப் பொருள்களுடன் சேர்ப்பித்து அச்சேத னப் பொருள்களை விளக்கமுறும்படி செய்வான். ஒடுங்கின உலகம் வேண்டப்படும் வரை ஒடுங்கிய வாறே நில்லாது மாறி மாறித் தோன்றி நின்று ஒடுங்கிக் கொண்டே நிற்கும். இதுவே முத்தொ ழிலாற்கருதப்படும் பலன் ஆகும். இப்பயன் யார் பொருட்டு என்று ஒரு கேள்வி எழலாம். கர்த்தா

வின் பொருட்டு என்றுல் கர்த்தா தனக்கென்று ஒருகுறை உடையராய் விடுவர் அன்றே! அறிவு டைப் பொருள்களே பயன் கொள்ளுதற்கு உரி யன. அறிவுடைப் பொருள்கள் உயிர்கள். ஆகவே உயிர்கள் பயன் அடைதற் பொருட்டே உலகம் தொழிற்படுத்தப்படுகின்றது என்பது நமக்கு இப்போது நன்றுகத் தெரிகிறது தானே! உடல் உயிர்களுக்குத்தோற்றுவிக்கப்படும் காலத்துஉயிர் களின் அறிவுவிளங்கி நிற்கும். உடல் ஒடுக்கப்படும் காலத்து அறிவு மழுங்கி நிற்கும். அறிவு விளங்கி நிற்றல் தோற்றம். மழுங்கி நிற்றல் ஒடுக்கம். இத் தோற்ற ஒடுக்கங்களைத் தவிர உயிர்களுக்குத் தோற்ற ஒடுக்கங்கள் இல்லை என்பதும் உயிர் களின் அறிவு இறைவனுல் விளங்கியும் மழுங்கியும் வருவதால் உயிர்களுக்குச் சுதந்திரம் என்பது ஒன்று இல்லை என்பதும் மேலும் தெளிவாகிறது. இக்கருத்துக்களை எல்லாம் திரட்டி,

''அரக முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

என்று திருவள்ளுவர் அடியெடுத்துக் கொடுக்க

''அவன் அவள் அது எனும் மூவினமையின்
தோற்றியதிதிலே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனுர் புலவர்''

என்று சிவஞானபோதம் கண்ட மெய்கண்டார் விரித்துரைக்க,

''ஒருவனுெடொருத்தி ஒன்றென்று உரைத்திடும்
[உலகம் எல்லாம்
வருமுறைவந்து நின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன்வேண்டும் தான் புதல் ஈறுமாகி
மருவிடும் அநாதி முத்த சித்துருமன்னி நின்றே''

என்ற அருணந்திசிவாசாரியார் போத நூற் பொரு ளைச் சித்திதரும் சித்தியாராக்க, எல்லாவற்றை யும் உய்த்து உணர்ந்த நம்முடைய நாவலர் பெரு மான் தம்முடைய சைவ விஞவிடையிலே உலகத் துக்குக் கருத்தா யாவர்? என்று எடுத்த எடுப்பிலே முதலாவது விஞவை எழுப்பி, சிவபிரான் என்று தேனூறும் விடையையும் சொல்லி, நம்மை வாயூற வைக்கின்றுர்.


இது அற்புதம்! அற்புதம்!!

நாங்களும் மெச்சுகின்றோம்!

"இருநூறு ஆண்டுகளுக்குமேல் பராதீனப்பட்டுச் சுயமரியாதை இழந் திருந்ததான யாழ்ப்பாண நாட்டில் உதித்த நாவலர் பெருமான், அருகாறும் ஒளிமழுங்கிப் பெலங் குன்றியிருந்த தமிழ் மொழி புத்துயிர் பெற்று வளரும் படியாக உழைத்தோரின் முன்னணியில் நின்று செய்த பேருதவியை என்றும் நினைந்து போற்றுவது தமிழ் மக்கள் கடனுகும். அவர் சைவ சமயம் தனது ஆதித் தூய்மையை அடையச் செய்வதிற் பட்ட பிரயாசங்கள் சைவ சமயிகளால் நிரந்தரம் பாராட்டத்தக்கன. நாவலருடைய சமயதர்க்க பாணங்களுக்கு விசேஷ இலக்காய் நின்றது கிறீஸ்து சமயம். அவர் தமது சமயத்தை மனச்சான்றின்படியே போற்றியும் கிறீஸ்து சமயத்தைத் தாக்கியும் எழுதினர் என வைத்துக்கொள்வது நமக்குப் பரிசிநேகக் கடன் ஆகின்றது. அன்றியும், தர்க்கத்தில் கடின வசனங்களைப் பிரயோகிக்கும் முறையொன்று அக்காலம் வழக்கிலிருந்தது. சமய வாதத்தில் உட்பட்ட இரு பக்கத்தாரும் ஒருவருக்கொருவர் தோல்வி போகாத வகையில் ஏச்சுப் பேச்சுகளையும் எடுத் தாளுவார்கள். அதுவே காலத்துக்கேற்ற கோலமாயிற்று. ஆகவே, இக்காலம் நாம் அவ்வித தர்க்க முறையைத் தள்ளவேண்டியிருப்பினும், நாவலரது சமயாபிமானத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் தமக்குக் கிடைத்த அருளா வில் கொண்ட கடவுட் பத்தியையும் புகழாதிருக்க முடியாது. அவர் பரம யிகளென்று எதிர்த்து வாதாடக் காரண பூதராயிருந்த கிறீஸ்தவர்களான நாங்களும் அவரை மெச்சுகின்றோம்."

நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்

"சமதர்சினி" — 24-4-1938.



இன்று சிதம்பரத்திலே காணப்படும் ஆறுமுக நாவலரின் உயர் நிலைப் பள்ளியின் நுழைவாயில். 1864-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ம் திகதி, இந்த வித்தியாசாலையை நாவலர் நிறுவினார்.

— உபயம்: க. சதாசிவன்.

குல. சபாநாதன்

நாவலருக்கு என்ன குறையும்?

தமிழ் மறையாகிய திருக்குறள் உலக மறையாகப் போற்றப்படும் காலம் இக்காலம். நாவலர் பெருமானைப் பிற மதத்தவர்களும் அரசாங்கத் தமிழ் எழுது வினைஞர்களும், முற்போக்கு எழுத்தாளர்களும், ஏன் இடதுசாரி எழுத்தாளர்களும்கூட, விழாவெடுத்துப் போற்றிப் புகழும் காலம் இக்காலம்.

திருக்குறளிலே எல்லாவற்றையும் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது என்கின்றனர் தமிழ் மறைப் பக்தர்கள். அவ்வாறே நாவலர் பெருமானும் கையாளாத விஷயமேயில்லையென்கின்றனர் நாவலர் பக்தர்கள்,

நாவலர் பெருமானும் பலதுறைகளில் வல்லவர் என்று சுன்னகம் குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தாம் எழுதிய தமிழ்புலவர் சரித்திரம் என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார். புலவர் அவர்கள் தம்முடைய குரு எந்தத் துறைகளில் வல்லுநர் என்பதை வகுத்துக் காட்டுகின்றார்.

1. இலக்கியங்களிலும் வல்லவர்.
2. இலக்கணங்களிலும் வல்லவர்.
3. நீதிநூல்களிலும் வல்லவர்
4. நியாயநூல்களிலும் வல்லவர்.
5. சைவசித்தாந்த சாத்திரங்களிலும் வல்வலர்.
6. சைவாகமங்களிலும் வல்லவர்.
7. சைவாகமப் பெருமையைச் சாதித்துப் போதித்தலிலும் வல்லவர்.
8. கலை பயில்வோருளங் கொளக் கற்பிக்குஞ் செயலிலும் வல்லவர்.
9. உலகியல்களைப் பலதலையின்றி உணர்த்தலிலும் வல்லவர்.
10. செந்தமிழ் நூல்களைத் திருத்தியச்சிடுஞ் செயலிலும் வல்லவர்.
11. செந்தமிழ் வாக்கியங்களைச் சிறப்புறத் தொடுத்து வரையுஞ் செயலிலும் வல்லவர்.
12. சைவப் பிரசங்கத்திலும் வல்லவர்.
13. புராணப் பிரசங்கத்திலும் வல்லவர்.
14. கசட்டு நெறிகளை மறுத்தெழுதுங் கண்டனங்களிலும் வல்லவர்
15. செய்யுளியற்றுந் திறத்திலும் வல்லவர்.

இவ்வளவும் ஒரு பந்தியிற் கூறப்பட்ட துறைகள். இன்னும் பல துறைகளிலும் சிறந்தவர் என்று குமாரசுவாமிப்புலவர் அவர்கள் அட்டவணைப் படுத்திக்கொண்டே செல்கின்றார்கள்.

நாவலர் வாழ்க்கை வரலாற்றினைப் பிழிந்தெடுத்த ரசம் இது. இதிலே ஒரு சொட்டு எடுத்து ஒரு கிண்ணம் தண்ணீரிலே கலந்து குடிக்கத் தக்க சாரம் உண்டு. ஒவ்வொரு வாக்கியமும் தனித்தனி நூலாக வரைதற்கேற்ற பெற்றிவாய்ந்திருப்பது நன்கு புலனாகும். மேலும் இக்கால ஆசிரியர்கள் சொற்செட்டுடன் பாடக் குறிப்பு எழுதுவது எவ்வாறு என்பதை எடுத்துக் காட்டும் முறையிலும் ஆசிரியர்களுட் சிறந்த ஆசிரியரான குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தொகுத்து வகுத்தமைத்திருப்பதும் நோக்கற் பாலது.

நாவலர் பாடசாலைப் பழைய மாணவரும் நாவலர் பரம்பரைத் தலைமைப் பீடத்தை அணி செய்யும் உரிமையும் தகுதியும் பெற்றவரும் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங் கற்றவருமாகிய **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** அவர்களை நாவலர் பைத்தியம் விழுங்கிவிட்டதென்று கூறலாம். ஏனெனில் பண்டிதமணி அவர்கள் **''அவரைப்பற்றி ஒன்றுஞ் சொல்ல முடியாது''** என்று பத்திரிகைகளில் துணிந்து ஒரு கட்டுரையும் எழுதிவிட்டார்கள்.

கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த குருவும் சீடனுமாகிய இவ்வறிஞர் இருவரும் அன்பு காரணமாக நாவலர் பெருமானை வானுறப் புகழ்கின்றனர் என்ற கொள்கையை வச்சிரதண்டத்தால் பிளந்தெறிந்து, இவர்களின் ஆராய்ச்சி முடிபுகள் தக்க ஆதாரமற்ற போலி முடிபுகளென அம்பலப்படுத்த வேண்டுமென்ற பேராசையால் ''இரவும் பகலும் பெருங்கவலை கொண்டு பெருமூச்செறிதலிலுமே பலருக்குப் பிதற்றுதலிலுமே பெரும்பான்மையும் என் காலத்தைப் போக்குவேனுயினேன்.''

நாவலர் பெருமான் முதன் முதலில் சிறு பிள்ளைகளுக்காக பாலபாடப் புத்தகங்கள் எழுதினர் என்பதும், அவற்றைப் படித்தவர்களே சைவ சித்தாந்தப் புலிகளாகத் திகழ்ந்தனர் என்பதும் யாவரும் நன்கறிந்த விஷயம். இதனை விளங்க வைக்கின்றார் நாவலர் அவர்களுடைய தமையனார் ஒருவருடைய மகன் நல்லூர் **த. கைலாசபிள்ளை** அவர்கள் தாம் எழுதிய **''ஆறுமுகநாவலர் சரித்திரத்தில்''** தற்காலத்திலே சைவர்களாயுள்ளவர்கள் அவசியம் அறிய வேண்டிய தமிழ்க் கல்வியும் அநுட்டிக்கவேண்டிய ஆசாரங்களும் கிரியைகளும் இவர் இயற்றிய இரண்டு சைவ வினாவிடைகளிலும், சைவ தூஷண பரிகாரத்திலும் சிவாலய தரிசன விதியிலும் நான்காம் பாலபாடத்திலும் குருசிஷ்ய கிரமத்திலும் மந்திரக் கிரியைகளோடுகூடிய மூன்று நித்திய கரும விதிகளிலும் சிவசிராத்தவிதியிலும் காண்டிகையுரையிலும் அடங்கியிருக்கின்றன. இவ்வளவு தூல்களையும் ஒரு சைவன் கற்பானேயின் அது அவனுக்குப் போதும்.

''நாவலர் பாலபாடம் வேதசாரம்'' என்று பண்டிதமாளவியா அவர்களே பாராட்டியிருப்பதாக, காலஞ்சென்ற சைவ சித்தாந்த சரபம் பழனி சிவப்பெருந்திரு ஈசானசிவாச்சாரியர் அவர்கள் தம் கண்களில் நீர் மல்க நாத்தழுத்து கொழும்பிலே நடத்திய சைவ சித்தாந்த வகுப்பொன்றிற் கூறினார்கள். அதிகம் கூறுவானேன். நம் ஈழநாட்டு **விபுலானந்த அடிகள்** இளமையிற் கற்குமாறு அவர் தந்தையார் அன்பளிப்புச் செய்த நூல்கள் நாவலர் பாலபாடப்புத்தகங்களே என்பதை அடிகளார் தமது சுயசரிதையிற் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே, நாவலர் பெருமான் பிளாக்மார்க்கட் வியாபாரிகளை ஆதரித்தெழுதியிருக்கின்றாரா அன்றேல் மௌனஞ் சாதித்துவிட்டாரா என்பதை அளவு கோலாக எடுத்துச் சிறிது பார்ப்போம். ஆறுமுகநாவலர் செய்த இரண்டாம் பாலபாடத்திலே 29 ஆம் பக்கத்திலே, வியாபாரம் என்னும் பொருள் பற்றியபாடம் ஒன்று காணப்படுகிறது.

வியாபாரம்

''நிரவியத்தைச் சம்பாதித்தற்கு உரிய தொழில் முயற்சிகளுள்ளே வியாபாரம் சிறந்ததொழில். வியாபாரத்துக்கு உரிய முதல் தன்சொந்த முதலாக இருத்தல்வேண்டும். வட்டிக்கு வாங்கிச் செய்யும் வியாபாரம் தலையெடுக்காது.

வியாபாரத்திற்காக விட்டிருக்கும் முதலையும் வட்டியையும் பார்த்து, அவைகளுக்குத் தக்கபடி, நியாயமாக இலாபத்தைச் சம்பாதித்தல் வேண்டும். பிறரைக் கெடுத்துத் தான் இலாபஞ் சம்பாதிக்கும்படி எண்ணலாகாது. பிறர் பொருளையும் தன்பொருள் போல நினைத்தல்வேண்டும். தான் வியாபாரப் பொருள்களை வாங்குதற்கு ஒன்றும், பிறருக்கு அவைகளை விற்பதற்கு ஒன்றும் ஆக, வேறு வேறு அளவைகளையும் நிறைகளையும் வைத்திருத்தல் ஆகாது. நெல் முதலாகிய உணவுக்கு உரிய பொருள்களை அதிக இலாபத்தைக் கருதாமல், மலிந்த விலைக்கு விற்கவேண்டும்.

தன்னுடைய வியாபாரப் பொருள்கள் எந்த எந்த இடங்களில் மலிவாக அகப்படும் என்று அறிதலும், தேச சஞ்சாரம் செய்தலும், தேசகால வர்த்தமானங்களை அறிதலும் வியாபாரஞ் செய்பவனுக்குக் கடமையாம். வியாபாரிக்குக் கணக்கு நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டியது அவசியம்.

வியாபாரத்தை ஒருவர் தனித்துச் செய்வதிலும் பார்க்க, பலர்கூடிச் செய்வது உத்தமம். ஆங்கிலேயர் முதலிய பிற சாதியார்கள் பலர்சேர்ந்து வியாபாரஞ் செய்து, மிகுந்த திரவியத்தைச் சம்பாதிக்கிறார்கள். வேளாண்மை, வியாபாரம் கல்விகற்றல் என்னும் இவைகளுக்கு முயற்சியே சிறந்தகருவி.''

முற்போக்கு எழுத்தாளர் வரிசையில் முன்னணியில் நிற்பவரும் சிறுகதை மன்னன் எனப் போற்றப்படத்தக்க இடம் தம்மைத் தாமாக வந்தடையும் சிறப்பு வாய்ந்தவருமான நாவலர் பெருமான் இத்துடன் நின்று விடவில்லை. இருட்டுச் சந்தையால் மாத்திரமன்றி பொய் சொல்லி வியாபாரம் செய்வதும் தவிர்க்கப்படவேண்டும் என்பதை அழகிய கதை மூலம் விளக்குகின்றார் நம் நாவலர். இக்கதை ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை வரலாற்றை நமக்கு ஞாபகமூட்டுகின்றது. அந்தச் சிறுகதையையும் நீங்கள் அறியத்தானே வேண்டும். அந்தச் சிறுகதை வியாபாரம் என்ற விடயத்தையடுத்து இரண்டாம் பாலபாடத்தில் வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மெய்ம்மை

ஒருநாள் விடியற்காலையில் இரண்டு சிறுவர்கள் ஒரு சந்தைக்குப் போய் தங்களுடைய சிறிய கடைகளில் தாங்கள் கொண்டுபோன பொருள்களைப் பரப்பிவைத்து, விற்கிறதற்காக உட்கார்ந்தார்கள். ஒரு கடையில் பழங்களும் காய்கறிகளும், மற்றொன்றில் தேங்காயும் வைக்கப்பட்டிருந்தன. சந்தை கலைந்தது. இந்தச் சிறுவர்களிடத்தும் பலபேர் பொருள்கள் வாங்கிக் கொண்டு போயினர்கள்.

முருகனுடைய கடையில் எல்லாம் விற்றுக் கடைசியாய் ஒரு முலாம்பழம் மாத்திரம் இருந்தது. ஒரு பெரிய மனிதர் வந்து, கையை அந்த முலாம் பழத்தின் மேல் வைத்து, எவ்வளவு பெரிய முலாம்பழம். இதற்கு என்னவிலை சொல்லுகிறாய், ''அடா தம்பி?'' என்று கேட்டார்.

''இந்த முலாம்பழம் ஒன்றுதான் என்னிடத்தில் மிகுந்தது; இது நல்லபழம்போல் தோன்றினாலும் இதில்கொஞ்சம் பழுது இருக்கின்றது ஐயா'' என்று சொல்லி அந்தச் சிறுவன் அந்தப் பழத்தை மறுபுறம் திருப்பிக் காட்டினான்.

''ஆம் ஆம்! பழுது இருக்கின்றது! எனக்கு அது வேண்டாம்'' என்று சொல்லி, அந்தப் பெரியமனிதர் அந்தச் சிறுவனுடைய அழகிய வஞ்சகமில்லாத முகத்தைப் பார்த்து, ''உன்னுடைய பழத்திலுள்ள பழுதை வாங்க வருபவர்களுக்குக் காட்டுவது விற்கவந்த உனக்கு ஆகுமா?'' என்று கேட்டார்.

''பொய் சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது, ஐயா'' என்று அந்தச் சிறுவன் பணிவுடன் சொன்னான். ''நீ சொன்னது சரி, அடா தம்பீ, ஒருபோதும் அதை மறவாதே; நான் உன்னுடைய கடையை இனி மறவேன்.'' என்று சொல்லி, அந்தப் பெரியமனிதர் கிருஷ்ணன் கடை முகமாகத் திரும்பி, ''இது என்ன நல்ல பழத்தேங்காயா?'' என்று கேட்டார். ''ஆம், ஐயா, நல்லபழக்காய்; நேற்றுத்தான் பிடுங்கினது நான்தான் உரித்தேன்.'' என்று கிருஷ்ணன் மறுமொழி சொன்னான். அந்தப் பெரிய மனிதர் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போயினர்.

''முருகா, நீ என்ன பெரிய மூடன்! முலாம் பழத்திலுள்ள பழுதை அந்த மனிதனுக்குக் காட்டுகிறதா! நீ சொன்ன உண்மைக்காக அந்தப் பழத்தை இனி வீட்டுக்குக் கொண்டுபோ, அல்லது எங்கேயாவது எறிந்துவிடு. அந்த முட்டுக்காயை வாங்கிக்கொண்டு போகின்றாரே, அவர் அதைப் பற்றி என்ன அறிந்துவிட்டார்? நல்ல பழக்காய்கள் விற்ற விலைக்கே அதையும் விற்றேன். அந்த முலாம்பழத்தை ஒன்றும் பாராமல் வாங்கிக் கொண்டு போயிருப்பார்.''

''கிருஷ்ணா, எனக்கு இன்று காலமே கிடைத்த காசைப் போல இரண்டு பங்கு காசுதான் வந்தாலும் நான் ஒரு பொய் சொல்லவும் மாட்டேன், பொய்யாய் நடக்கவும் மாட்டேன். அல்லாமல், இது கடைசியிலே எனக்குத்தான் நயம்; எனக்கு ஒரு வழக்கக்காரர் அகப்பட்டார்; உனக்கொருவர் பொய்விட்டார்.''

அது அப்படியே நடந்தது; மறுநாள் அந்தப் பெரிய மனிதர் தனக்கு வேண்டிய பழங்களையும் காய்கறிகளையும் எல்லாம் முருகனிடத்திலேயே வாங்கினார்; கிருஷ்ணனுடைய கடையில் ஒரு

சல்லிக்குக் கூட ஒன்றும் வாங்கவில்லை. இந்த விதமாகவே அந்த வருஷம் கழிந்தது. முருகனிடத்தில் எப்போதும் நல்ல பொருள் வாங்கலாம் என்று கண்டுகொண்டு அவர் அவனுடைய கடைக்கே எப்போதும் போவார்; சில வேளை அவனிடத்தில் ''மறுவருஷம் நீ என்ன செய்யப் போகிறாய்'' என்று விசாரிப்பார்.

மறுவருஷம் அந்தப் பெரிய மனிதருடைய பண்டகசாலையில் ஒரு நம்பிக்கையான சிறுவன் வேண்டியிருந்தது; அவர் முருகனைப் பார்க்கிலும் வேறொருவன் அகப்படான் என்று நினைத்து, முருகனுக்கே அந்த வேலையைக் கொடுத்தார். அவன் தன் எசமானுக்குத் தன்னிடத்தில் மேலும் மேலும் நல்ல எண்ணம் வரும்படி நடந்து, ஒவ்வொரு உத்தியோகமாக உயர்ந்து, கடைசியில் எசமானனுடைய வர்த்தகத்தில் ஒரு பங்காளி ஆயினன்.

இவற்றை நோக்குமிடத்து சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரும், நம் பண்டிதமணியும் கூறியவற்றைப் பற்றி ஒன்றுஞ் சொல்ல முடியாது என்ற முடிபுக்கே வரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதை நன்குணர முடியும்.

வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்கள் எவையெனின் கடவுள் வழிபடுதல், தாய் தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்நன்றியறிதல் முதலானவைகளே என முதலாஞ் சைவ வினாவிடையிலே நாவலர் குறிப்பிட்டுள்ளார்.

சைவச் சிறுவர்கள் சைவ சமயச் சூழலிலே வளரவேண்டும், என்ற நோக்குடன் எழுதிய பாலபாடப் புத்தகங்களிலே பல மதத்தினருக்கும் பொதுவான உண்மைகளையும் எடுத்து விளக்கியுள்ளார்.

முதற்பாலபாடம் படிக்கிற ஒரு பிள்ளைக்கும் ஒரு குருவுக்கும் நடந்த சம்பாஷணையில்,

குரு: நீ என்ன படிக்கிறாய்

பிள்ளை: முதற் பாலபாடம் படிக்கிறேன் ஐயா!

குரு: தம்பி! நீ நன்றாகப் படித்து, நல்லொழுக்கமும் ஈசுர பத்தியும் உடையனாய் நடக்க வேண்டும், போய் வா.

என்ற பகுதி, அகில உலகிலுள்ள பல்வேறு சாதி, பல வேறு சமயப் பிள்ளைகளுக்கும் பொதுவான தலைசிறந்த அறிவுரையாகிய பொற்கம்பி ஊடுருவிப் பிணைத்து நிற்பதைக் காணலாம்.

முதலாவது பாலபாடத்திலே காணப்படும் பிரார்த்தனைகளும் இவ்வாறே. எம்மதத்துக்கும் சம்மதமான முறையில் அமைந்துள்ளன.

பிராதக் காலப் பிரார்த்தனம்

பெருங் கருணைக் கடவுளே! சென்ற இராத்திரியிலே தேவரீர் அடியேனைக் காத்தருளினதின் நிமித்தம், தேவரீரை அடியேன் துதிக்கிறேன். இந்தப் பகலிலும் அடியேனைக் காத்தருளும். அடியேன் பாவங்கள் செய்யாவண்ணம், அடியேனைத் தடுத்து ஆட்கொண்டருளும். அடியேன் முன் படித்த பாடங்களும், இனிப் படிக்கும் பாடங்களும், அடியேன் மனசிலே எந்தநாளும் தங்கும்படி அருள் செய்யும்.

சாயங் காலப் பிரார்த்தனம்

மகா தேவரே! அடியேன் செய்த பாவங்களை எல்லாம் பொறுத்தருளும். இந்த இராத்திரியிலே அடியேனைக் காத்தருளும். அடியேன் தேவரீரை அறிந்து, தேவரீருக்குப் பயந்து, தேவரீர்மேல் அன்பு வைத்துத் தேவரீரைத் துதித்து, வணங்கும்படி செய்தருளும். அடியேன், இறக்கும்பொழுது, தேவரீரை மறவாத தியானத்துடனே, தேவரீருடைய பதத்திலே சேரும்படி அருள் செய்யும்.

ஆகவே, நாவலர் பிறசமயத்தை வெறுக்கவில்லை. பிறசமயப் போதகர்கள் மதமாற்றக் கையாண்ட சூழ்ச்சிகளையே கண்டித்தார். சைவ சமயத்தில் பிறந்த ஒரு பிள்ளை பஞ்சாட்சரக் கிறிஸ்தவராதற்காக மதம் மாறுவதையே கண்டித்தார். எந்தக் கோணத்திலிருந்து நோக்கினும் நாவலரைப் பற்றி ''ஒன்றுஞ் சொல்ல முடியாதென்பதே'' புலப்படுகின்றது. ஆகவே பண்டித மணியவர்கள் எழுதிய ''அவரைப் பற்றி ஒன்றுஞ் சொல்ல முடியாது'' என்பதும் உண்மைதான் என்ற முடிபுக்கே கொண்டு வந்து விடுகின்றது.



நாவலர் ஐந்தாம் குரவராகு நித்தமும் பூசிக்கப்படுகிறார். இந்தத் திருவுருவம் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலுள்ள சமய குரவராலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

" சம்பந்தன் "

நாவலர் பெருமான்

திருவருளின் கருத்தை விசாரஞ் செய்து கொண்டு பணி பூண்டவர்கள் இந்த உலகில் சிலரினுஞ் சிலரே. அவருள் நாவலர் பெருமானும் ஒருவர்.

இன்றைய உலகம் அவரைக் கனம்பண்ணக் கருதியதே மிகப் பெரிய அதிசயமாகும். அவருக்கும் நமக்கும் இடைவெளி அவ்வளவாகிவிட்டது. ஆனல் காலத்தின் இடைத்தூரம் பெரிதல்ல. ஒரு வேளை தர்மத்தின் முடிவும் அதர்மத்தின் தொடக்கமும் இந்தக் குறுகிய காலத்தின் நடுவில் அமைந்து விட்டது போலும்.

நாமோ அஞ்ஞானத்தின் கருவூலமாகி மயக்கத்தில் மற்றவர்களையுஞ் சேர்த்து இழுத்துக் கொண்டு இச்சையாகிய பெருந்தீயிலே விழுந்து பொசுங்குபவர்கள். நோக்கங்கள் நமக்கில்லை.

நாவலர் பெருமான் ஒருமையே நோக்கிய உயர்வுடையவர். பற்றற்றான் பற்றினைப் பற்றி நிலைகண்டவர். அவர் ஐந்தவித்த யோகி.

புகழ் வெறுங்கனவு; பொய். அதையும் மிக இழிந்த பொய்யையே புகலாகக் கொண்டவர்களைப் பற்றுக் கோடாக்கி உருப்பெறச் செய்து தாமத குண சம்பந்தமான திருப்தியை மகிழ்ச்சியென மயங்கி மூலமலத்துட் சிக்கி உழல்பவர்கள் நாம்.

நாவலர் பெருமான் நெறிப்பட்டது என்ற புகழையும் பொருள் செய்யாதவர். அவர் மகான்.

உண்டிருந்து வாழ்வதற்கே உழைக்கின்றவர்கள் நாம். சாக்கடை ஈ வயிறு வளர்ப்பதைவிட நமது வயிற்று வளர்ப்பு வேறுனதல்ல. அந்த ஈ தனது வாழ்வை இழிவெனக் கருதுவதேயில்லை. பறந்து பறந்து அழுக்கினுள் மூழ்கி மூழ்கித் திருப்தியடைகிறது. நாமும் அதுவாகி அப்படியே வாழப் பழகி விட்டோம். பொருளற்றவைகளைப் பொருள் செய்யும் புன்மைக்கு வாழ்வு என்பது எமது கருத்து.

நாவலர் பெருமான் சீரிய வாழ்வையே பொருள் செய்யாதவர். திருவருட் கருத்து நிறைவெய்துமுன் கிடைத்த சரீரம் அழிந்து விடுமோ என்று அஞ்சியவர். அவர் முனி.

நம்மை நாமே பெருநெருப்பில் எறிவது போல நம்மிடம் நமக்குள்ள பற்று உதவுகிறது. மெய்வருத்தம் பாராது பசி நோக்காது கண்

துஞ்சாது நமக்கு நாமே பெருந்துன்பஞ் செய்து மடிகிறோம். நமக்கு நம்மைக் காதலிக்கத் தெரியாது; முற்றுகத் தெரியாது.

நாவலர் பெருமான் தன்னைத்தான் காதலிக்கத் தெரிந்தவர். வீழ்நாள் படாமை நன்றுற்றியவர்; செந்தண்மை பூண்டொழுகியவர். அவர் அந்தணர்.

நாம் எண்ணற்ற ஆசைக் கயிறுகளாற் கட்டுண்டு காமத்துக்கும் சினத்துக்கும் ஆட்பட்டு, இழிந்த போகங்களுக்காக அநியாயங்கள் செய்து பொருள் சேர்க்கிறோம். நெறியினீங்கீழ்மைக்கு அடிபணிந்து தொழில் செய்பவர்களாய் ஆத்ம நாசத்துக்கான காமமும் சினமும் அவாவும் உடையோராய்ச் சதா உழன்று நரகின் பில வாயை நோக்கி ஓடிக் கொண்டேயிருக்கிறோம்.

நாவலர் பெருமானை அஞ்சாமை, உளத் தூய்மை, உறுதி, அடக்கம், தவம், நேர்மை, வாய்மை, கொல்லாமை, சினவாமை, துறவு, வண்மை, தயை, அவாவின்மை, நாணுடைமை, சலியாமை, ஒளி, பொறை முதலாய தெய்வ சம்பத்துக்களின் உறைவிடமாய்ப் பிரகாசித்தவர்; பிரகாசிப்பவர். அந்தத் தெய்வீக ஒளி காலங் கடந்த பிரகாசமுடையது. அவர் யோகி; மகான்; முனி; அந்தணர்; 'சீவன்முத்தர்.

அவரை உணருந் தவம் நமக்கில்லை. உணர இனியாவது தவநெறிப்படுவோமாக.

வித்துவான் பொன். முத்துக்குமாரன், B. O. L.


நாவலர் வழிவந்த சமுதாயம்

இற்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன் பல்கலைக் கழகத்தில் என்னோடு ஒருங்கு கற்ற இந்திய நண்பர் ஒருவர்—நாவலர் பெருமானிடத்தில் அளவிறந்த பக்தியுடையவர்—நாவலர்பெருமான் அவதரித்த நாடாகிய யாழ்ப்பாணத்தைத் தரிசிக்கவேண்டும் என்னும் ஆவலுடன் வந்து சேர்ந்தார். அவர் சைவ நல்லொழுக்கங்களை உறுதியாகக் கடைப்பிடிப்பவர். ஒய்வு நாள்களில் ஊர்கள்தோறும் சுற்றுலாச்செய்து ஆங்காங்கு குள்ள பாடல்பெற்ற சிவத்தலங்களைத் தரிசித்து, அன்பினையும் அறிவினையும் வளர்ப்பதைப் பெரிதும் விரும்புபவர். ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய முதலாம் இரண்டாம் சைவ வினாவிடைகள்,பாலபாடங்கள், பெரியபுராண சூசனங்கள், முதலானவற்றை எழுத்தெண்ணிப் படித்தவர். அதன் பயனாக, நாவலர்பெருமான். அவதரித்த நாட்டினிடத்து ஒருவித அபிமானமும், அந் நாட்டினைக் காணவேண்டும் என்னும் ஆசையும் அவருள்ளத்தில் நாளுக்குநாள் வளர, ஒருநாள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் வந்த சமயம் எங்களூர்ச் சிவன் கோயிலிலே மகோற்சவம் நடைபெறும் சமயமாயிருந்தது. அதனால் அந் நண்பர் வந்து சேர்ந்ததும் ஆலயத்திற்கே செல்ல ஆசைப்பட்டார். நண்பரும் நானும் புனிதராய் ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

ஆண்டவனைத் தரிசிப்பதற்குமுன் அடியார்களைத் தரிசிக்கும் வாய்ப்பு என் நண்பர்க்கு வழி முழுவதும் கிடைத்தது. அடியார்கள் திரிபுண்டரமாக அணிந்த திருநீற்றின் ஒளி நண்பரின் கண்ணைக் கவர்ந்தது. **கோவிலுக்குச் செல்வோர் இவர் என்று குறித்தறியதக்கவகையில் ஆடவர்கள் எவருமே சட்டைதரிக்காது உத்தரியத்தை அழகாக அரையிற் கட்டியிருந்தனர்.** தூயவெண்ணீற்றுக் குறியும் தோய்த்துலர்ந்த ஆடையும் தரித்தவராய், ஆண்டியார்கள் ஒருபுறமும் பெண்ணடியார்கள் மற்றொரு புறமுமாக, அன்பினையும் அன்புக் காணிக்கைகளையுமே அகத்தும் புறத்தும் தாங்கி மெல்லென நடந்து சென்ற காட்சி நண்பரது கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. ''இங்குக்காணப்படும் அன்பர்கள் எல்லாரும் திருநீற்றினை உத்தூளனமாக அணியாமல் திரிபுண்டரமாகவே அணிந்திருக்கின்றனர்! என்ன காரணம்?'' என்று என்னை நண்பர் கேட்டார். ''இங்கே கோவிலுக்கு வருகின்றவர்கள் மட்டுமின்றி இவ்வூரில் வாழும் மக்களிற் பெரும் பாலானவர்கள் சமய தீக்ஷை பெற்றவர்கள். அவருள்ளும் சிலர் விசேட தீக்ஷைபெற்றவராயும்

உள்ளனர். இங்கே, தீக்ஷை பெறுதிருப்பது ஏதோ ஒருவித குறைபாடாகவே கருதப்படுகின்றது. தீக்ஷை பெற்ற ஒவ்வொருவரும் சிரத்தையோடு சந்தியாவந்தனம் செய்கின்றபடியால் வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்களிடத்திற் திரிபுண்டரம் சிறந்து காணப்படுகின்றது'' என்று நான் அவர்க்கு விளக்கம் கூறினேன். ''நாவலர் பிறந்த நாடு இது'' என்பதை இங்குக் காணப்படும். மக்களின் திருநீற்றுக்கோலமே எடுத்துக் காட்டுகின்றதே!'' என்றூர் நண்பர் கோயிலை நாம் அணுக அணுக ''அரோஹரா'' ''அரோஹரா'' என்னும் ஒலி மெல்ல மெல்லப் பெரிதாகிக் காதில் இசைத்தது. நான் நண்பரை உற்று நோக்கினேன். அவர் அந்த ஒலியைக் கூர்ந்து செவிமடுத்த வண்ணமிருந்தார். அவருடைய முகத்தில்'' அது யாதாயிருக்குமென்ற சிந்தனையின் நிழல் படர்ந்திருந்தது. ''அரஹர'' என்று சொல்லப்படுவதுதான் ''அரோஹரா'' என ஒலிக்கப்படுகின்றது. வழிபாட்டிற்குச் செல்லும் போதும் வழிபடும் போதும் அடியார்கள் 'அரோஹரா' எனப் பத்தியுணர்வோடு சொல்லுவது இங்குள்ள வழக்கம்'' என்று கூறி நான் அவரது ஐயத்தைப் போக்கினேன். அப்பால் நாமிருவரும் கோயிலை யணுகியதும் தீர்த்தக் குளத்தில் இறங்கிக் கால் கழுவிப் புரோட்சித்துக் கொண்டு புறத்தே வந்து, நூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, அன்பர்களது கூட்டம் முன்னே செல்ல நாமிருவரும் தொடர்ந்து பின்னே சென்றோம். நாவலர் வாழ்ந்த நாட்டுக்கு வந்த நண்பருக்கு அங்கே ஒரு புதுமை காட்சியளித்தது. நண்பர் யாழ்ப்பாணநாட்டிற்குப் புதியவராகையால் இங்குக் காணப்படும் ஒவ்வொரு செய்தியையும் கூர்ந்து அவதானித்த வண்ணமே இருந்தார். அத்தகைய நண்பரை உங்கே நிகழ்ந்ததொரு செயல் சற்றே நின்று ஆவலோடு நோக்க வைத்தது. கோயிற் சந்நிதியிலே அடியார் சிலர் கைகளிலுல் ஒரு தேங்காயைப் பிடித்தவண்ணம் அட்டாங்கமாக நிலத்தில் வணங்கியவாறே திருவீதியை வலம் வந்தனர். ''இதென்ன புதுமையாயிருக்கிறதே! சாதாரணமாக அடியார் எல்லாம் இறைவன் சந்நிதியில் நின்று கரங்களிரண்டினையும் சிரசின் மீது குவித்து வணங்குவதும், அட்டாங்கமாக நிலத்தில் விழுந்து வணங்குவதும் திருவீதியினை மும்முறை வணங்குவதும் செய்வர். இவையே எல்லாச் சைவாலயங்களிலும் காணப்படுவன. அங்ஙனமிருக்க, இங்கே அடியார்களுட் சிலர் புரண்டு வலம் வருகின்றனரே! என்று நண்பர் கேட்டார். நான் அருவக்கு அவ்வழிபாட்டு முறையினை விளக்கிக் கூறினேன்.'' இதனை 'புரண்டு வலம் வருதல்' என்று இங்கே சொல்லவில்லை. ''அங்கப்பிரதட்சிணம்'' என்றுதான் சொல்லப்பட வேண்டும். பேச்சு வழக்கிலே இதனை ''பிரதட்டைசெய்தல்'' என்று கூறுவர். இறைவனெழுந்தளியிருக்கும் கோயிலைச்சூழஉள்ள இடத்தையும், இறைவனடியார்கள்—உண்மை நாயன்மார்கள்— வாழ்ந்த இடத்தையும் காலால் மிதித்துச் செல்வதற்கே திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் முதலாய அருளாளர்கள் அஞ்சியதாகப் பெரியபுராணம் கூறுகின்றது. அதுபோல, இங்கே இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தைக் காலால் நடந்து வலம் வருதற்கு விரும்பாமல் அடியார்கள் உடலால் புரண்டு வலம் வருகின்றனர். அன்றியும் திருவீதியை வலம் வரும்போது தம்முடைய இரண்டுபாதங்கள் மாத்திரம்தீண்டப்பெறுவதோடமையாது உடம்பு முழுவதும் தீண்டப்பெற்று அதனால் தாம் உடம்பு பெற்ற பயனைப் பெற ஆசைப்பட்டுச் செய்தலும் உண்டு.'' இவ்வாறு நான் கூறியதும் நண்பரது உள்ளத்தில் ஒரு விளக்கம் - அடியார்களது பத்தித் திறத்தின் வியத்தகு பண்பு புலப்படலாயிற்று. ''நாவலர் ஊட்டிய சைவ உணர்வு யாழ்ப்பாணச் சமுதாயத்திலே எத்தகைய பத்திச் சிறப்பினை வேரூன்றச் செய்து பரம்பரை பரம்பரையாக நிலைக்கவும் செய்துள்ளது!'' நண்பர் வியந்து நின்றூர். அடியார்களின் அன்புச் செய்திகட்கு அளவில்லை, இன்னும் பல உள்ளன ,என்று கூறி என் நண்பரை அழைத்துக் கொண்டு திருவீதியை வலம்வந்தேன்.

நாங்கள் மும்முறை வலம் வந்து முடிந்த சில நாளிகையின் பின் சுவாமி எழுந்தருளி வீதியுலா வரும் சமயமுமாயிற்று. இடபவாகனத்திற் சுவாமி ஆரோகணித்ததும் அடியார்கள் சிலர், செல்வர் வறியர் கற்றவர் கல்லாதவர் எஜமானர் பணியாளர் என்னும் தம்வேற்றுமை பாராது ஆர்வமே உருவானவராய், நான் நீ என ஒருவரை ஒருவர் முந்திச்சென்று, சுவாமியைத் தாங்கிச் செல்ல விரைந்தனர். மற்றும் சிலர் குடை கொடி ஆலவட்டம் தீவர்த்தி என்னுமிவற்றுள் ஒவ்வொன்றைத்தாங்கினராய் முன் சென்றனர். வேறு சிலர் பண்ணிசையோடு அருட்பாக்களைப் பாடிய வண்ணம் சுவாமியைப பின் தொடர்ந்து நடந்தனர். இத்தகைய கோலாகலத்துடன் சுவாமி வீதியில் உலாவர, இக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு தம்மை மறந்த நிலையில் நண்பர் சற்றுப் பின்னே தள்ளி நின்றனர். மெய்ம்மறந்து நின்ற அவரது மனக்கண்ணையும் முகக்கண்ணையும் ஈர்க்க வல்லதொரு பத்திச்செயல் அங்கே நிகழ்ந்தது. அடியார்களின் இத்தகைய தொரு அன்பு வெளிப்பாட்டினை என் நண்பர் வேறு எந்நாட்டிலும் கண்டிலர் போலும்! அக்காட்சிக்கே தம்கண்



1879-ம் ஆண்டில் நாவலர் சிவபதம் அடைந்தார். அன்றைய தினம், நாவலருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக, சுச்சேரி மூடப்பட்டது. இதற்கு உத்தரவிட்ட அரசாங்க அதிபர் துவைனந்துரை. (Mr. Twynam)

— உபயம் : க. சதாமகேசன்.

னைப் பறிகொடுத்தவாறு நின்றார். நான் அவரது கையைப் பிடித்து ஏனையடியார்களோடு சுவாமியின் பின்னைச் செல்ல அழைத்தபோது, நண்பர் இடைமறித்து ''இது எவ்வளவு அற்புதமாயிருக்கின்றது! பெண்ணடியார்கள் தமது பத்திப் பெருக்கினால் சுவாமியைப் பின் தொடர்ந்தவாறே பஞ்சாங்க நமஸ்காரம் செய்து செல்கின்றனரே! ஆனால் அதில் ஒரு விந்தை! ஒவ்வொருமுறை நிலத்தில் விழுந்து வணங்கும் போதும் முடிவில் தமது கையில் நிலத்தைத் துடைத்து எழுகின்றனர்! இத்தகைய வழிபாட்டினை நான் வேறு எங்கும் பார்த்ததில்லை ''என்றார்''. இப்படிச் செய்வது அடியழித்தல் என்று கூறப்படும். யாழ்ப்பாணத்திலுள்ள எல்லாச் சைவாலயங்களிலும் சுவாமி வீதியுலா வரும்போது, பெண்ணடியார்கள் மிக்க பத்தியோடு அடியழித்தல் செய்து வழிபடுவர். பாருங்கள், பெண்கள் முதலில் பஞ்சாங்கமாக விழுந்து வணங்குகின்றார்கள். பின்னர்க் கையினால் நிலத்தைத் துடைப்பது போலக் காணப்படுகின்றது. அதனையடுத்து, பஞ்சாங்க நமஸ்காரம், பின்னர் எழுந்து சில அடி சென்று மீண்டும் அவ்வாறே வணங்கி அடியழித்து சுவாமி இருப்புக்கு வரும்வரையும் தொடர்ந்து சென்று வழிபட்டு வருகின்றனர். சுவாமி உலா வரும்போது அவரது திருவடிச் சுவடு நிலத்திற் படுவதாகப் பாவித்து, அத்திருச்சுவடு பிறரால் மிதிக்கத்தக்க நிலை ஏற்படக்கூடாதெனக் கருதி அத்திருச்சுவட்டினைத் தாம் வணங்கி அழிப்பதாக இச்செயல் கருதப்படுகின்றது.'' என நான் நண்பருக்கு விளக்கினேன். நான் இந்தியாவில் பல பாகங்களிலுமுள்ள சிவாலயங்களுக்கும் பிற நாட்டுக் கோயில்களுக்கும் யாத்திரையாகப் போயிருக்கிறேன். பத்திமேம்பாட்டினால் இத்தகைய அற்புதமான முறையில் இறைவனை வழிபடும் சிறப்பினை எங்குமே கண்டதில்லை; கேட்டதும் இல்லை. இது நாவலர் ஐயா வாழ்ந்த நாடல்லவா? ''என நண்பர் சொல்லிச் சொல்லி வியந்தார்.

விழா முடிந்தது. பொழுதும் நண்பகலை அணுகும் நேரம். வீட்டுக்குத் திரும்பலாம் என விரும்பியபோது என் அயல் வீட்டினர் அங்கும் இங்கும் அலைந்த வண்ணம் காணப்பட்டார். ''யாரையாவது கண்டீர்களா? ஒருவரையுமே காணேமே!'' என்று என்னைக் கவலைப்பட்டுக் கூறிவிட்டு, மறுபடியும் தேடத் தொடங்கினர். இவையொன்றும் என் நண்பருக்கு விளங்கவில்லை. என் அயல் வீட்டுக்காரர் யாரை இவ்வளவு ஆவலோடு தேடி அவலப்படுகின்றார் என்பதை அறிய என் நண்பர் ஆசைப்பட்டார். ''வேறென்றுமில்லை. இங்கே ஒரு வழக்கம் உண்டு. கோயில்களில் திருவிழா நடைபெறும்போது அக்கோயிலைச் சூழ உள்ள ஊர்களில் வாழும் சைவமக்கள் எல்லாரும் திருவிழாத் தொடங்கி முடியும் நாள்வரை ஒவ்வொருநாளும் ஒருவேளை மாத்திரம் உணவுட்கொண்டு பத்திசிரத்தையோடு, விரதமிருப்பர். அத்துடன் ஒவ்வொரு நாளும் முற்பகலில் திருவிழா முடிந்ததும் சிவனடியார் ஒருவரையோ துறவி ஒருவரையோ வீட்டுக்கழைத்துச் சென்று அவர்க்கு அன்னம் பாலித்து உபசரித்த பின்னரே தாம் உணவு கொள்வர். அந்த முறைப்படிதான் இன்று அயல் வீட்டுக்காரர் சிவனடியாரையோ துறவியையோ அன்னம் பாலித்து உபசரிப்பதற்காகத் தேடியலைகின்றார். இன்னும் ஒன்று குறிப்பிடத்தக்கது. தத்தம் ஊர்களிலுள்ள கோயில் விழாக்காலங்களில் மட்டுமன்றி, திருக்கேதீஸ்வரம், கதிர்காமம் முதலிய பிரசித்திபெற்ற ஆலயங்களில் விழா நடைபெறும்போதும் அவ்விழா நாள்களெல்லாம் விரதமனுட்டிப்பவரும் உள்ளனர். இதனால்,சிலர் ஒரு வருடத்தில் அரைப்பங்கு நாள்களையும் விரத நாளாகவே கழிப்பவராயும் உள்ளனர்.'' என யாழ்ப்பாண நாட்டு வழக்கத்தை நண்பர்க்கு அறிவுறுத்தினேன். அப்போழுது ஒரு சந்தேகம் உதயமாயிற்று. ''அதுசரி! நீர் அவ்வாறு அன்னம் பாலிப்பதில்லையோ? அடியார் ஒருவரையும் கொண்டு செல்லாது உம்முடைய வயிற்றை ஓம்பு நினைவாகவே வீடுநோக்கி விரைகின்றீரே?'' என்று ஒரு கேள்வியோடு நகையாடினர். நான் நண்பர்க்கு நல்ல பதில் கொடுத்தேன். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் அலைவார் உண்டோ? சீரிய சிவனடியாராகிய உம்மை விருந்தினராகப் பெற்ற நான் வேறு ஒருவரைத் தேடியலைய வேண்டிய வேலையில்லையே'' என்று கூறி நண்பரை என் இல்லத்திற்கழைத்துச் சென்று அவரது அகமும் முகமும் மலர அன்னம் பாலித்துபசரித்தேன். நண்பர் எல்லாவற்றுக்கும் முடிவில் கூறியது இன்னும் என்றும் என் நினைவில் நிலையாய் உள்ளது. அது பின்வருமாறு:

''அறநூல்கள் இது தக்கது இதுதகாதது என அறிவுறுத்துவன. அவற்றின் பயன் அவ்வளவே. காவியங்கள் அவ்வறநூல்களிற் கூறிய வற்றை அருமையான கதைவடிவில் அழகாக எடுத்துரைப்பன. எனவே அறநூல்களாற் பெற்ற அறிவுக்குக் காவியங்கள் முதலாம் இலக்கியங்கள் ஆர்வம் ஊட்டுகின்றன. அதனற் காவியங்கள் கற்போரை இலட்சிய வாழ்வில் ஈடுபடுத்தும் உபகாரத்தைச் செய்தலால் சிறந்தனவாக்குகின்றன அக்காவியங்கள் செய்யும் நன்மையை விட ஆறுமுகநாவலர் போன்ற மகாத்துமாக்களின் அவதாரம் அளவிறந்த ஆக்கத்தைச் செய்கிறது மழைபெய்யுமுன் மண் வரண்டு வலித்துக் கிடக்கிறது; மரஞ் செடி கொடிகள் வாடித்தளர்கின்றன. ஒரு பெருமழை வந்து பொழிந்து போனதும் வரண்டிருந்த மண் நனைந்து குளிர்ந்து வளமுள்ளதாகி விடுகின்றது. வாடிய மரஞ் செடிகொடிகள் தழைத்துச் செழித்துப் புதுவாழ்வெய்துகின்றன. அதுபோல, நாவலர் பெருமானின் அவதாரத்திற்கு முன் நாடெங்கும் சைவசெறி நலிவுற்று மெலிவுற்றிருந்தது. நாவலர் வரவினால். வாழ்ந்து வாழ்வித்த நன்மையினால், யாழ்ப்பாணத்துச் சைவநிலை நாடெங்கும் மெச்சத்தக்க உச்சநிலையை எய்திவிட்டது. நாவலர் வழிவந்த சமுதாயத்தை இன்றும் யாழ்ப்பாணத்தில் நம் கண்ணாரக் காணலாம்.''

மு. முகம்மது உவைஸ், B.A. Hons. ,M. A.
தமிழ்த் துறைத் தலைவர்
வித்தியோதயப் பல்கலைக் கழகம், கொழும்பு.



உலகத்திலே வளம் பெற்ற மொழிகள் பல இருக்கின்றன. அவற்றுள் இலக்கிய வளம் உடையவை இவை என சிலவற்றைச் சுட்டிக் காட்டலாம். அத்தகைய மொழிகளுள்ளும் உலகத்திலுள்ள பல்வேறு சமயத்தவருக்கும் பொதுவாக அமையக்கூடிய சிறப்பியல்புகளை உடைய மொழிகள் சிலவற்றுள் தமிழ் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதொன்றாகும். சைவ, வைணவ, சமண, பௌத்த, கிறித்தவ, இஸ்லாமியக் கோட்பாடுகளை அறியக்கூடிய ஒரு மொழியாகத் தமிழ் மொழி திகழ்கிறது. பல்வேறு சமய இலக்கியங்களைக் கொண்ட மொழியாகத் தமிழ் மொழி விளங்குகிறது. ஆங்கிலம் வணிக மொழியாகப் பாராட்டப்படுகிறது. இலத்தீன் மொழி சட்ட மொழியாகப் புகழப்படுகிறது, கிரேக்கம் இசையின் மொழியாக இசைக்கப்படுகிறது. ஜெர்மன் மொழி தத்துவஞானத்தின் மொழியாக எடுத்தோதப்படுகிறது. பிரெஞ்சு மொழி அரசியல் விவகார (சூழியல்) மொழியாகப் போற்றப்படுகிறது. இத்தாலிய மொழி காதலின் மொழி என விதந்தோதப்படுகிறது. ஆனால், தமிழ் மொழியோ அவை அனைத்தையும் விடச் சிறப்புடைய மொழியாக எடுத்துக் காட்டப்படுகிறது. பக்தியின் மொழியாகத் தமிழ் மொழி தலை சிறந்து விளங்குகிறது. இரக்கத்தின் மொழியாக வியக்கப்பட்டுவருகிறது.

பக்தி இலக்கியத்தைப் பொறுத்தவரையில் உச்ச நிலையை அடைந்துள்ள தமிழ் மொழியைத் தொன்று தொட்டு மக்கள் பேணிப் போற்றிப் புகழ்ந்து வந்துள்ளனர். அத்தகைய பக்தி இலக்கியங்களை, மக்கள் மிக்க பயபக்தியோடு படித்துப் பயன்பெறச் செய்தவர்கள் பலராவர். அவர்கள் தமிழ் மொழியில் ஊற்றெடுத்த பக்திப் பிரவாகத்தைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தனர் பண்டிதரும் பாமரரும் ஒருங்கே அவற்றைப் படித்துப் பயனடைய வழிவகுத்தனர். அத்தகைய பெரு மக்களுள்ளே சிறப்பாகக் குறிப்பிடற்குரியவர் யாழ்ப்பாணத்து, நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நவாவலர் அவர்கள் ஆவார். ''தமிழ் உரைநடையின் தந்தை'' என விதந்தோதப்படும் ஆறுமுக நாவலர் அவர்களை எமக்கு அறிமுகப்படுத்தியவர்களைப்பற்றி நினைக்கும் பொழுது கால் நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலவெல்லையைத் தாண்டிப் பின்நோக்க வேண்டி இருக்கிறது.

பாணந்துறையில் உள்ள ஓர் ஊர் ஹர்மனை. ஹேனமுல்லை என்றும் வழங்கப்படுகிறது. இலங்கையில் முஸ்லிம்கள் வாழும் ஏனைய பகுதிகளுள் இருப்பதுபோன்று ஹர்மனையிலும் ஒரு தமிழ்ப் பாடசாலை இருந்தது; இருக்கிறது. அங்கே நான் பாலர் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது யாழ்ப்பாணத்துக் கரவெட்டியைச் சேர்ந்த தலைசிறந்த ஆசிரியர்கள் அங்கு கடமை யாற்றிக்கொண்டிருந்தனர். திருவாளர் சி. கார்த் திகேசு அவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமை யாற்றினர். அவரது பாரியாரும் அங்கே பணி புரிந்துகொண்டிருந்தார். கரவெட்டியைச் சேர்ந்த திருவாளர் வே. செல்லையா அவர்களும், திருவாளர் சி. கந்தையா அவர்களும் ஆசிரியர் குழாத்திற் கடமை புரிந்த ஏனைய ஆசிரியர் களுள்ளே குறிப்பிடத்தக்கவர் ஆவர். வலிகமத் தைச் சேர்ந்த ஜனாப் அப்துல் ஹக் என்பவர் அப் பொழுது ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர் களுள் ஒருவராவார். அவரும் அந்தக் காலவெல் லையுள் ஊர்மனைத் தமிழ்ப் பாடசாலையிற் பணி புரிந்துகொண்டிருந்தார். கரவெட்டியைச் சேர்ந்த மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் 'ஓர் ஆசி ரியர் குழாத்தினர் எவ்வாறு ஒற்றுமையாய் இருக்க வேண்டும்' என்பதற்கு எடுத்துக்காட்டா கத் திகழ்ந்தார்கள். இன்றைய ஆசிரியர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கினர்கள். அவ்வாசிரி யர்கள் ஊர்மனைத் தமிழ்ப் பாடசாலையிற் கடமை புரிந்த காலத்திலே பாலர் வகுப்பிற் படித்துக் கொண்டிருந்த எமக்கு ஆறுமுக நாவலர் அவர் களின் வசனநடையை அறிமுகப்படுத்தி வைத் தனர். ஆறுமுக நாவலரால் இயற்றப்பட்ட பால பாட நூல்களை பாடப் புத்தகங்களாகப் படிக்க எமக்கு வாய்ப்பை அளித்தனர். அன்று, அந்தப் பாலபாட நூல்கள் மூலம் நாம் கற்றமையே இன் றும் எமக்கு ஓரளவுத் தமிழ்ப் புலமையை அளித் திருக்கிறது எனின், அது மிகைப்படக் கூறும் கூற் றாகாது. எமக்கு ஆறுமுக நாவலரின் தமிழ் மர பைப் புகட்டிய பெருமையும் அவ்வாசிரியர் களையே சாரும்.

ஆறுமுக நாவலரின் பாலபாட நூல்களைக் கண்ட பிற்காலத்து முஸ்லிம்கள் தமக்கெனப் பாடப் புத்தகங்களை ஆக்குவதன் அவசியத்தை ஒருவேளை உணர்ந்திருக்கலாம். முஸ்லிம் பாலர் வாசகம் என்ற தொடரில் பல்வேறு வகுப்புக் களுக்கும் ஏற்ற இஸ்லாமிய அடிப்படையிலான பாட நூல்களை இயற்றுவதற்கு முன்வந்திருக்க லாம். எனவே, முஸ்லிம் பாலர் வாசகத்துக்கு ஆறுமுக நாவலரின் பாலபாட நூல்கள் முன் னோடியாக அமைந்தன எனக் கூறின் அது மிகை யாகாது அல்லவா? முதற் பாலபாடம், இரண் டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம் என்ற பாலருக்கான பாட நூல்களை ஆறுமுக நாவலர் அவர்கள் இயற்றினர்கள். ஆனால், மூன்றும் பால பாடத்தை இயற்றியவர் அவர்தம் மருகரும் மாணவருமான வித்துவான் ச. பொன்னம்பலம் பிள்ளை அவர்களாவார். வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதும் நாவலர் பரம்பரையில் வந்த மற்றொரு நிகழ்ச்சியை ஈண்டு குறிப்பிடுவது பொருத்த முடைத்து எனலாம். முஸ்லிம் புலவர் ஒருவரின் ஆக்கப்பணியைப் போற்றுவதாக அமைந் திருந்தது அந்நிகழ்ச்சி.

அகமதுல் கபீறு றிபாய் ஆண்டகையைப்பற் றிக் காப்பிய இலக்கணங்கள் நிறைந்த ஒரு நூலை இயற்றினர் குலாம் காதிறு நாவலர் என்பவர். இவர் நாகூரைச் சேர்ந்தவர். அங்கு மகா வித்து வானுக விளங்கினர். அந்நூலின் பெயர் ஆரிபு நாயகம். அந்நூலுக்குப் புரவலராக இருந்து இல் லையெனது வழங்கியவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் பாக்கியப்பா என்ற புகழ்ப் பெய ரைப் பெற்ற முகம்மது லெப்பை மரைக்காயர் என்பவர். இவர் வியாபாரியாக விளங்கியவர். யாழ்ப்பாண அபூபக்கர் நயினார்ப்பிள்ளை மரைக் காயர் புதல்வர். பாக்கியப்பா என்னும் புரவல ரின் கொடைச்சிறப்பை ஆசிரியர் பெரிதும் புகழ்ந் துள்ளார். ஆரிபு நாயகம் என்னும் காப்பியம் யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றப்பட்டது. அரங் கேற்று விழா யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை யில் நடந்தேறியது. அவ்விழா, வித்துவசிரோ மணி ச. பொன்னம்பலப்பிள்ளையின் தலைமையில் நிகழ்ந்தது. அவ்வரங்கேற்ற விழாவினைப்பற்றிப் பொன்னம்பலப்பிள்ளை அவர்களே அக்காப்பியத் துக்குத் தாம் அளித்த சிறப்புப்பாயிரத்தில் குறிப் பிடுகிறார். இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள சிறப்புப்பாயிரங்களுள் முதலிடத்தைப் பெற்றுள் ளது பொன்னம்பலப்பிள்ளை அவர்களால் வழங் கப்பட்ட சிறப்புப்பாயிரமாகும். அது மேல்வரு மாறு அமைந்துள்ளது:—

"வாரி சூழ் மகிழ்த் திடையே
ஆரிபு நாயக மாஞ்சரித் திரத்தை
நாகூ ரென்னு நகர வாசன்
பாகூ குஞ்சொற் பயின்றிடு நேசன்
பற்பல வ்தமாப் பகர்பிர பந்தம்
பற்பல புராணம் படுதாச் செய்தோன்
ஆசு மதுரமு மருஞ்சித் திரமு
மாசு மதரமா வமைத்திட வல்லோன்
தோல்லாட பியபுதற் சூழ்லக் கணமுந்
தொல்காப் பியமுஞ் சூழ்ந்தினி தாய்ந்தோன்
பாவலர்க் கினிய பகர்குலாம் காதிறு
நாவல ரென்னு நற்பெயர் கொண்டோன்
திருத்தமோ டழகெலாஞ் செறிந்து நீற்ப
விருத்தப் பாவில் விளங்குற வமைத்துத்
தென்னியாப்ப் பாண தேசந் தன்னின்
மண்ணிய வண்ணை மாநக ரதனற்
பாக்கிய மெவையும் பரந்து நீற்றலிற்

பாக்கியப் பாவெனப் பலரும் பரவும்
முகம்மது லெவ்வை மரைக்கான் முதலாம்
முகம்மது சமய முதல்வர் கூடிய
அரங்கினி லேற்றி யரும்புக முடனே
யொருங்குப சாரமு முற்றன னென்பவே''

யாழ்ப்பாணம், மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்களால் அகவலிலும், யாழ்ப்பாணம் நல்லூர் மா. இராமலிங்க உபாத்தியாயர் அவர்களால் ஆசிரிய விருத்தத்திலும், யாழ்ப்பாண ஆயுள்வேத பண்டிதர் வைத்திலிங்கப்பிள்ளை அவர்களால் ஆசிரியப் பாவிலும் ஆரிபு நாயகம் என்னும் காப்பியத்துக்குச் சிறப்புப்பாயிரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் பலர் சிறப்புப் பாயிரங்கள் வழங்கி உள்ளனர்.

வினவிடை அடிப்படையில் எந்தச் சிக்கலான பொருளையும் விளக்குவது இலகுவாக இருக்கும். இதனை உணர்ந்தே ஆறுமுக நாவலர் அவர்கள் சைவ சமயத்தை விளக்கு முகமாக சைவ வினவிடை என்னும் நூலை இயற்றி உள்ளார். இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ள இச் சைவ வினவிடை சைவ சமயம் பற்றிய வினாக்களையும் அவற்றிற்குரிய சுருக்கமான விடைகளையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு சைவ வினவிடை நூலும் பல இயல்களைக் கொண்டுள்ளது. ஆறுமுக நாவலரின் இந்த மரபைப் பின்பற்றிப் போலும் இஸ்லாமிய அடிப்படையில் இத்தகைய வினவிடை ஒன்று தோன்றி உள்ளது. சன்மார்க்க இலகுபோத வினவிடை என்பது இந்நூல். இதனை இயற்றியவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரா வர். யாழ்ப்பாணத்துக்கே சிறப்பாக உரிய நடையில் இஸ்லாமிய வினவிடை அமைந்துள்ளது எனலாம். ''இஃது யாழ்ப்பாணம் ஸ்ரீ க. மீரான் முஹ்யித்தீனுல் ஜதறூஸிய்யில் காதிரிய்யி அவர்களால் கோர்வை செய்து மதராஸ் ஷாஹுல் ஹமீதிய்யா பிரசில் மிகவும் தெளிவாகவும் சுத்தமாகவும் பதிப்பிக்கப்பட்டுள்ளது'' என ஆசிரியரின் பெயரும் பதிப்பிக்கப்பட்ட அச்சகமும் சன்மார்க்க இலகு போத வினவிடை என்னும் நூலின் முதல் ஒற்றையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் செய்கு சு. முஹம்மது அசனலெப்பை அவர்களும், மு. சுலைமான் லெப்பை புலவர் அவர்களும், மன்னார் மதாறு சாகிபுப் புலவர் அவர்களும் யாழ்ப்பாணம் கி. மரியாம் பிள்ளைப் புலவர் அவர்களும் இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரங்கள் வழங்கி உள்ளனர். நிலை மண்டில ஆசிரியப்பாவில் வழங்கியுள்ள கி. மரியாம்பிள்ளைப் புலவர் அவர்களின் சிறப்புப் பாயிரத்தின் ஒரு பகுதி மேல்வருமாறு அமைந்துள்ளது:—

''தேனலர் வீசும் திருவிலங் காபுரிக்
கானதோர் திலத மாகவே விளங்கும்
வளந்திகழ் யாழெனு மாந கரத்தில்
விளங்கிய முஸ்லிம் மிக்கநற் சமைய

வித்துவ சிரோன்மணி மேலான நன்மைக்
குத்தம மாணவன் உலகமே வியக்க
அறபுபூனுனி ஆங்கிலேய தமிழில்
திரையுடுத் திடுமிச் செகமெலா மகிழ

பண்டித ராகிப் பலபிணி தீர்த்து
அண்டுவோர் தம்மை யாதரித் தன்பாய்த்
தந்தைதாய் போலே தாபரித் திடுவோன்
வந்திடு நோய்களை மாற்றிடு வல்லோன்

....
....

மீராமுஹிதீன் விளங்கு சன்மார்க்க
நேரான இலகு போதமாம் நூலை
இயற்றி னனெவரு மினிய பேரின்ப
நயத்தை யேகருத நானில மீதே.''

சன்மார்க்க இலகுபோத வினவிடை நூலில் அறபு மொழியில் எடுத்துக்காட்டுக்கள் ஆளப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் தொடக்கத்தில் அவ்வப்பாடங்களின் கருத்துக்களைச் சுருக்கமாக விளக்குதற் பொருட்டே அறபு மொழியில் அவ்வெடுத்துக்காட்டுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆறுமுக நாவலரின் சைவ வினவிடையின் இறுதியில் தோத்திரத்திரட்டு இடம்பெற்றுள்ளது போல் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய சன்மார்க்க இலகுபோத வினவிடையின் இறுதியில் இந்நூலாசிரியரினால் இயற்றப்பட்ட மெய்ஞ்ஞானக்கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. இவ் வினவிடை நூல்களிலே பல்வேறு ஒற்றுமைகளைக் காணலாம்.

கவிதை வடிவில் உள்ள நூல்களைப் பாமர மக்களும் பாண்டித்தியம் அற்றோரும் புரிந்து கொள்வது எளிதான காரியமன்று. சைவம் தழைத்தோங்கத் தமிழ் மொழி வளர்ச்சியுறச் சைவ சமய அடிப்படையிலான காப்பியங்களையும் ஏனைய நூல்களையும் சாதாரண மக்களும் புரிந்து கொள்ள வழிவகைகள் இன்றியமையாமையை உணர்ந்தார் ஆறுமுக நாவலர் அவர்கள். அதன் பயனாகச் சைவ சமயக்காப்பியங்கள் பலவற்றை மக்கள் பெறக் கூடிய வழிவகைகளை மேற்கொண்டார். பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் போன்ற தமிழ்க் காப்பியங்களை வசன நடையில் எழுதினார். பெரிய புராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், கந்த புராண வசனம் முதலிய நூல்கள் அதன் பயனாகத்

தோன்றின. நாகூர் குலாம் காதிறு நாவலர் யாழ்ப்பாணத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்தவர். யாழ்ப்பாணத்தவரோடு நெருங்கிப் பழகியவர். எனவே, யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் ஏற்படுத்திச் சென்ற முன்மாதிரியைக் குலாம் காதிறு நாவலரும் பின்பற்றத்தலைப்பட்டார். உமறுப் புலவர் சீறுப் புராணம், செய்கு அப்துல் காதிறு நயினார்ப புலவரின் திருமணி மாலை, குலாம் காதிறு நாவலரின் ஆரிபு நாயகம் முதலிய காப்பியங்கள் ஏற்கனவே வெளிவந்து விட்டன. ஆனால் அவை சாதாரண மக்களின் பெருவழக்கில் இடம் பெறத் தவறிவிட்டன. இந்த அவல நிலையை நீக்கவே குலாம் காதிறு நாவலர், ஆறுமுக நாவலரின் முன்மாதிரியைப் பின்பற்ற முன்வந்தார். சீறு வசன காவியம், திருமணி மாலை வசனம், ஆரிபு நாயக வசனம் முதலிய வசன நூல்களைக் குலாம் காதிறு நாவலர் இயற்றித் தந்துள்ளார்.

ஆறுமுக நாவலரின் முன்மாதிரியைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பல முஸ்லிம்கள் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளனர். அத்தகைய தமிழ்த் தொண்டாற்றியவர்களுள் புலவர்களும் புரவலர்களும் பதிப்பாசிரியர்களும் இருந்தனர். யாழ்ப்பாணம் பரிகாரி மரைக்காயர் என்று வழங்கும் உதுமான் லெப்பை அவர்கள் குமாரர் பக்கீர் முகியித்தீன் அத்தகைய பதிப்பாசிரியர்களுள் ஒருவராவார். உமறுப் புலவர் நபிகள் நாயகத்தின் வாழ்க்கையை முற்றுகத் தமது சீறுப் புராணத்தில் அமைத்துப் பாடவில்லை. அவர் விட்ட இடத்திலிருந்து அண்ணல் நபி அவர்களின் வாழ்க்கையைக் கவிதையாகப் பாடியவர் காயற் பட்டணம் பனி அகுமது மரைக்காயர் அவர்களாவார். அவரும் தமது காப்பியத்தைச் சீறு என்றே அழைக்கிறார். இக்காப்பியம் முஸ்லிம் பெருவழக்கில் ''சின்ன சீறு'' என்று வழங்கப்படுகிறது. இதனையே யாழ்ப்பாணத்துப் பக்கீர் முகியித்தீன் அவர்கள் பரிசோதித்துப் பதிப்பித்து வெளியிட்டார். இந்நூல் வெளியிடப்பட்ட காலம் நள ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரபவ வருடம் முதல் உள்ள அறுபது வருட வட்டத்தை வியாழசக்கரம் என்பர். இந்த முறை தமிழ் இலக்கியங்களிற் பின்பற்றப்பட்டிருப்பதைக் காணலாம். இக்கணக்கீட்டில் ஐம்பதாவது ஆண்டை நள ஆண்டு என்பர். ''இலக்கிய வழி'' என்னும் தமது நூலில் ''தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை''யைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், ''1868ஆம் ஆண்டு (விபவ வருடம் புரட்டாதி) தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனவரையர் உரைப் பதிப்பு, தாமோதரம்பிள்ளையால் அச்சிடப்பட்டு முதன்முதல் வெளிவந்தது. அதனைப் யரிசோதனை செய்து உதவியவர்கள் நாவலர் அவர்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார். அடுத்த பந்தியில் ''இதற்கு இருபது வருடங்களுக்கு முன் 1847ஆம் ஆண்டு பிலவங்க வருடம் ஆவணி முதன்முதல் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு அச்சிற் பதிப்பித்தவர் மழவை மகாலிங்கையர்'' எனவும் குறிப்பிட்டுள்ளார். வியாழ சக்கரத்தின் ஆண்டு அறுபதனுள் இரண்டாவது ஆண்டு விபவ ஆண்டாகும். வியாழ சக்கரத்தின் நாற்பத்தொன்றுவது ஆண்டு பிலவங்க ஆண்டாகும். அதே சக்கரத்தில் ஐம்பதாவது ஆண்டு நள ஆண்டாகும். எனவே நாறபத்தொன்றுவது ஆண்டான பிலவங்க ஆண்டு 1847ஆம் ஆண்டாகவும் இரண்டாவது ஆண்டான விபவ ஆண்டு 1868ஆம் ஆண்டாகவும் இருப்பின் வியாழ சக்கரத்தில் ஐம்பதாவது ஆண்டான நள ஆண்டு 1856ஆம் ஆண்டாகும். ஆகவே ''சின்ன சீறு'' என்னும் காப்பியத்தை யாழ்ப்பாணத்துப் பக்கீர் முகியித்தீன் அவர்கள் 1856ஆம் ஆண்டில் வெளியிட்டிருத்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஹிஜ்றி ஆண்டும் (1272) இக்கூற்றினையே வலியுறுத்துகிறது. இன்று நடைபெறும் ஹிஜ்றி ஆண்டு 1389 என்பதும் முஸ்லிம் ஆண்டு ஏறத்தாழ 355 நாட்களைக் கொண்டது என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இனி புலவர்களை எடுத்துக்கொள்வோம். யாழ்ப்பாணத்துப் புலவர்களுள் ஒருவர் சு. அசனலெப்பை அவர்கள். மார்க்க ஞானியாகச் சிறந்து விளங்கியவர். நபிகள் நாயகத்தின் பேரில் நவரத்தினத் திருப்புகழும் அகுமது கபீறுற்றிபாகி ஆண்டகை பேரில் பதாயிகுப் பதிற்றுத் திருக்கந்தாதியும் வேறு பாடல்களும் பாடியுள்ளார். இவை ''புகழ்ப்பாவணி'' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் நல்லூர் க. வைத்திலிங்கம் அவர்கள் புகழ்ப்பாவணிக்கு மேல்வருமாறு சாற்றுகவி பாடியுள்ளார்:—

''தண்பரவும் யாழ்ப்பாணந் தகைசுல்தான்
முகியித்தீன் றனயன் யார்க்கு
நண்பர்சிகா மணியசனு லெ பையெனுந்
தமிழ்ககவிஞன் ஞானமேத்தப்
பண்பரவு மெழிற்புகழ்ப்பா வணியெனவோர்
நூலியற்றிப் பரிந்துநல்க
வெண்பரவும் புகழ்ச்சுலைமான் லெப்பை
யெனும் வேளதையச் சிடுவித்தானுல்''

அசனலெப்பை அவர்கள் இயற்றிய திரு நாகை நிரோட்டக யமக வந்தாதியும் பதுதாதந்தாதி யும் சத்தரத்நத் திருப்புகழும் பதாயிருப் பதிக மும் இருபதிச் சிலேடையும் இன்னும் ஏட்டு வடி விலே இருக்கின்றன. இதழியைந்து பிறவா எழுத்துக்களால் ஆகிய செய்யுளே நிரோட்டகம் என்பர். கருத்தாழமும் சொற்செறிவும் உவமை நயமும் மிக்க இவற்றைப் பதிப்பித்து வெளியிடு தல் தமிழறிஞர் தம் கடனுகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆறுமுகநாவலர் தம் தமிழ் மரபு வழி வந்த முற்றெரு புலவர் ஒரு காப்பியத்தையே இயற்றியுள்ளார். அவர் தம் மைப் பதுறுத்தீன் புலவர் என்று அழைப்பதைத் தவிர்த்துத் தம்மைப்பற்றிய எவ்வித விவரங்களே யும் தமது காப்பியத்திற் குறிப்பிடவில்லே. அவர் இயற்றிய நூலின் பெயர் முகியித்தீன் புராணம். ஆருயிரத்துக்கு அதிகமான செய்யுட்களைக் கொண்டது அக் காப்பியம். 1901ஆம் ஆண்டில் முகியித்தீன் புராணம் என்னும் காப்பியம் பதிப் பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கே சிறப் பாக உரிய பல சொற்களேயும் சொற்ருடர்களே யும் கொண்டு விளங்குகிறது பத்துத்தீன் புலவ ரின் முகியித்தீதன் புராணம். திமிலர், பள்ளர் போன்ற சொற்கள் இந்நூலில் இடம்பெற்றுள் ளன. ''ஆடி விதை தேடி விதை'' என்று இன் றும் யாழ்ப்பாணத்தில் வழக்காறு உள்ளது. பது றுத்தீன் புலவரும் இக்கருத்தினே மேல்வருமாறு குறிப்பிடுகிருர்:—

''வாரமா யாடித் திங்கள் வளர்பிறை
சித்த யோகம்
ஓரையு முகூர்த்தத் தோடு மொண்புயங்
குலுங்க மள்ளர்
வேரிய மதுவைத் தேக்கி விழாவெனத்
திரண்டு கூடிச்
சேரியை விடுத்து நீங்கிச் செய்யிட
மகிழ்விற் புக்கார்''

இவ்வுலகம் என்ற கருத்தில் பதுறுத்தீன் புலவர் ''இவனி'' என்னும் சொல்லேத் தமது காப்பியத் தில் ஆண்டுள்ளார். ''இவனி'' என்னுஞ் சொல்லே அதே பொருளில் ஒட்டக்கூத்தரும் உப யோகித்திருப்பதை நாம் ஈண்டு நோக்கற்பாலது. முகியித்தீன் புராணம் என்னும் காப்பியத்தை இயற்றுவதற்கு யாழ்ப்பாணத்துப் புரவலர் ஒரு வரே பொருள் உதவி புரிந்துள்ளார். அந்தக் கொடைவள்ளலின் பெயரையும் கொடைத்திறத் தையும் அவர் தம் தந்தையர் பெயரையும் அவர் பிறந்த நாட்டையும் பாயிரத்தில் உள்ள இரண்டு செய்யுட்களில் மேல்வருமாறு பாடுகிருர் பதுறுத் தீன் புலவர்:—

''மருவிரி கமல வாவி வளந்தரு மிலங்கை நாட்டிற்
றிருமலி கமுகிற் முவிச் செழும்பழ முகுத்திக் கஞ்சத்
தருவியிற் படுக்கும் வாளே யரும்பொழி லியாழ்ப்பா ணத்தில்
ஒருமொழி தவரு வள்ள லுசைனயி னென்றன் பாலன்''

''அவனியிற் சிறப்புற் ரேங்கு மழகுமன் மதவி லாசன்
புவனவிண் ணுலகம் போற்று முகியித்தீன் புகழைப் பாட
நவநிதப் பொருளுமாடை நல்கினுன் புலவோர் போற்ற
இவனியில் வாழ்வு பெற்ற செய்குமீ ருனென் போனே.''

இங்கு கொடைவள்ளலாகப் புகழப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உசைன் நயினர் என் பவரின் புதல்வரான செய்கு மீருன் என்பவரா வார்.

இவ்வாறு, ஆறுமுக நாவலர் அவர்கள் தோற்றுவித்துச் சென்ற தமிழ் மரபு முஸ்லிம் களின் தமிழ்த் தொண்டிற்கு சிறந்ததொரு முன் மாதிரியாக அமைந்து இருந்தது எனக் கூறின் அது மிகையாகாது அல்லவா?

தமிழிலக்கண அறிவு பரவுவதற்கு உதவியவர் நாவலர் பெருமானே

"இலக்கண இலக்கியப் பிழைகளும் அச்சுப் பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையும் சைவ சமய நூல்களையும் பதிப்பித்து தவுவார் அரியரான எமது இளமைக் காலத்தில் ஆறுமுக நாவலரவர்களே அந்நூல்களைப் பிழையறப் பதிப்பித்து உதவினவர்கள். எழுத்துச் சொல்லாராய்ச்சிக்கு நாவலரவர்கள் தாம் நன்னூலுக்கு வரைந்த அரிய காண்டிகை யுரையும், தொல்காப்பியச் சொல்லுக்குச் சேனாவரையர் சொற்பொருட்டிட்பம் வாய்ந்தவுரையும் அவர்களாற் பதிப்பித்து வெளியிடப்டாவிடில் எம்போல்வார் அஞ்ஞான்று தமிழிலக்கண அறிவு பெறுதல் இயலாமலே போயிருக்கும்."

மறைமலை அடிகள்.



யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராயிருந்த டைக் (Dyke) துரை. நாவலருக்கு அச்சுக்கூடம் நிறுவ அனுமதியளித்தவர்.

— உபயம்: க. சதாசிவன்.

கலாநிதி சு. வித்தியானந்தன்

தமிழகத்தை ஈழ நாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர்

ஈழத்திலே தமிழும் சைவமும் வாழ அவதரித்தவர் ஆறுமுகநாவலர் என்றே பொதுவாகப் பேசப்படுகின்றது. தமிழகத்திற்கு ஆறுமுக நாவலர் ஆற்றிய தொண்டு அவ்வளவு சிறப்பாகக் கணிக்கப்படுவதில்லை. அவர் தமிழ்நாட்டுக்குச் செய்த பணியைப் பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் பின்வருமாறு திரட்டிக் கூறியுள்ளார்: ''யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் ஒரு அவதார புருஷர். இடையிருட் கடைக்காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளி போலத் தமிழகத்தில் தளருஞ் சைவமுந் தமிழுந் தழைய, அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவர். முன்னே பல காலங்களிலுந் தமிழகத்திலிருந்து தான் பெற்ற சில சிறு நன்மைகளே வட்டியுடன் பெருக்கி, ஒரு காலத்து ஒருமுகமாகப் பழங்கடனைத் தீர்த்து, என்றுந் தீர்க்கொணாவாறு தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர் என்றுரை அது மிகையாகாது''.

மொழிபெயர்ப்புக்கலையிலே ஈழத்தவர் தலை சிறந்தவர் என்பதனையும் யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்பதனையும் பைபிள் மொழி பெயர்ப்பு மூலம் நிலை நாட்டி ஈழத்திற்குப் பெரும் புகழ் தேடிக் கொடுத்தது இவர் செய்த முதற் றொண்டாகும். ஆறுமுகநாவலர் முதன் முதல் தமிழகத்திற்குச் சென்றது பைபிள் மொழிபெயர்ப்பை அரங்கேற்றுவதற்காகும். அப்போது பார்சிவற்பாதிரியார் அவரைத் தம் முடன் அழைத்துச் சென்றிருந்தார். இவர்கள் சென்ன பட்டணம் சேர்ந்த போது அங்குள்ள மிஷனரிமார், யாழ்ப்பாணத்திலே தமிழ்க்கல்வி குறைவானதென்றும், செந்தமிழ் பேசுவோர் அரியர் என்றும், யாழ்ப்பாணத் தமிழ்ப்பண்டிதராலே திருத்தப்பட்ட பைபிள் தமிழகத்துப் பண்டிதர் முன்னிலையில் வாசிக்கப்பட்டு அவர்கள் பிழையில்லையென்றும் வசனநடை நன்றுயிருக்கிறதென்றும் சொல்வார்களாயின் அச்சிற் பதிப்பிக்கலாமென்றும் நிபந்தனையிட்டனர். இதற்கு நாவலர் இணங்கவே, அக்காலத்திற் சென்னையிற் சிறந்த வித்துவானுயிருந்த மகாலிங்க ஐயரிடம் மொழிபெயர்ப்பு பார்வைக்கு ஒப்படைக்கப் பட்டது. அவர் பைபிள் முழுவதனையும் படித்து, அதிற் பிழையில்லை என்றும், வசன நடை தெளிவாகச் சிறப்புற அமைந்திருக்கின்றதென்றும், அச்சிடுவதற்கு மிகுந்த தகுதியுடையதென்றும், யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்றும் பாராட்டினர். இந்த அரங்கேற்றத்தின் மூலம் ஈழத்துத் தமிழருக்குத் தமிழகத்தில் மதிப்பு ஏற்பட்டது. யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்ற பெயரும் எங்கும் பரவியது.

அவரது இரண்டாவது தமிழகப் பிரயாணம் 1849 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அச்சுக் கூடம் வாங்கப் போனவரை ஆறுமுகநாவலராக்கியது அப்பிரயாணம். தமிழ் நாட்டிற் சைவப் பிரசங்கம் செய்து சைவப்பயிரை வளர்க்கவும், சைவ ஆதீனங்களைச் சைவப்பணியும் தமிழ்ப் பணியும் செய்யத் தூண்டவும் அப்பிரயாணம் வழிகோலிற்று. கல்வி கற்கும் பிள்ளைகளுக்குக் கருவி நூலுணர்ச்சியும் சமய நூலுணர்ச்சியும் ஊட்டத்தக்க நூல்களை அச்சிடுவதற்கு அச்சியந் திரத்தைக் கொண்டுவருவதற்கு 1849 ஆம் ஆண்டு ஆடி மாதம் சென்ன பட்டணம் சென்றார். சென்றவர் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்தார். அங்கேயிருக்கும் பொழுது பண்டார சந்நிதிகளும் தமிழ் வித்துவான்களும் தமிழ் இலக்கண இலக்கியத்திலும் சைவ சித்தாந்த சாத்திரத்திலும் தமக்கு இருந்த ஐயங்களுக்கு விளக்கங் கேட்டுத் தம்மறிவை விருத்தி செய்து கொண்டனர். அவரது ஆற்றலைக் கண்டு வியந்த இரண்டாவது சந்நிதானமாகிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் தலைமைச் சந்நிதானத்தின் தலைமையில் ஒரு வித்துவச் சபை கூட்டிச் சைவப் பிரசங்கம் செய்யும்படி பணித்தார். சைவ சித்தாந்தப் பொருள் பற்றி அவர் செய்த பிரசங்கத்தைக் கேட்ட திருவாவடுதுறை ஆதீனத்து உபய சந்நிதானங்களும் மற்றை வித்துவான்களும் அவரது வாக்கு வல்லபத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கினர். அச்சுக்கூடம் வாங்கச் சென்றவர் ஆறுமுக நாவலராய் அச்சுக்கூடத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினர். அத்துடன் தமிழகத்தைத் தமக்குக் கடமைப்படுத்தியும் வந்தார். பிரசங்கம் மூலம் தமிழகத்திற் சைவத்தை வளர்த்தார். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சைவப்பணியில் மேலும் ஊக்குவித்தார். தமிழகத்தாருக்கும் தமிழிலக்கண இலக்கிய அறிவும் சமய அறிவும் புகட்டினர்.

ஆறுமுகநாவலர் மூன்றாவது தடவை தமிழகத்திற்குப் பிரயாணமானது, சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொள்வதற்கு. இது 1854 ஆம் ஆண்டில் அவரது 32 ஆம் வயதில் நடைபெற்றது. அதன் பின் 1858 ஆம் ஆண்டில் ஆண்டில் தமது 36வது வயதில் பெரிய நூல்களைப் பதித்தற்குச் சென்னைக்குச் சென்றார். போகும் வழியிற் பல தலங்களை வணங்கி, திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்தார். அவ்வாதீனத்துப் பண்டார சந்நிதிகளால் உபசரிக்கப்பட்டு அம்மடத்திலே பண்டார சந்நிதிகளுக்கும் சாஸ்திரிகளுக்கும் வித்துவான்களுக்கும் தம்பிரான்களுக்கும் ஓதுவார்களுக்கும் பிரசங்கங்கள் செய்து கொண்டும் புராணப் பொருள் சொல்லிக் கொடுத்தும் பாராட்டுப் பெற்றார். பின்பு தருமபுர ஆதீனத்திலும் சிலநாள் சைவப் பிரசங்கங்கள் செய்தார்.

இவ்வாறு ஆதீனங்களிற் சைவப் பிரசாரம் செய்து சென்ன பட்டணம் அடைந்து 1859 ஆம் ஆண்டில் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு நூல்களையும் பரிசோதித்து அவர் மாணாக்கராகிய சதாசிவப்பிள்ளை பேராலே வெளியிட்டார். அவ்வாண்டில் வேறு பல நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டார். நாவலர் நூல்களை அழகுற எவ்விதப் பிழையுமின்றிப் பதிப்பிப்பதைக் கண்ட இராமநாதபுரச் சமஸ்தானத்துப் பொன்னுச்சாமித் தேவர் நாவலரைச் சந்தித்து, சில நூல்களைத் தம் செலவில் அச்சிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அவ்வேண்டுகோளுக்கிணங்கித் திருக்குறள் பரிமேலழகருரை 1860 ஐப்பசியிலும், திருக்கோவையாருரையும் தருக்கசங்கிரகம்,அன்னம் பட்டீயமும் 1861 வைகாசியிலும் வெளிவந்தன. அம் மூன்று நூல்களுக்கும் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும், அவர் மாணவர் தியாகராச செட்டியாரை உள்ளிட்டவர்களும் சிறப்புப்பாயிரம் செய்தனர். மீனாட்சிசுந்தரம் பிள்ளை தமது சிறப்புப் பாயிர இறுதியிற் ''கற்றுணர் புலவருட் களிக்கும் முற்றுணர் ஆறுமுக நாவலனே'' என்று பாராட்டுகிறார். தியாகராசச் செட்டியார் தாம் சொல்லிய சிறப்புப் பாயிரத்தில் ''என்னுள்ளங் குடிகொண்டு இருக்கு முன்னுசீராறுமுக நாவலனே'' என்று மதிப்பளிக்கின்றார்.

எனவே தாம் தமிழகத்திலே தங்கிய 3 ஆண்டு 10 மாத காலத்திலே தமிழ் நூல்களை வெளியிட்டுத் தமிழ் மொழியினையும் சமயத்தையும் வளர்த்துத் தமிழகத்தாரைத் தமக்குக் கடமைப்பாடு உடையவராக்கினர். நாவலர் பதிப்பு என்ற மகிமை ஏற்பட்டது. பிற்காலத்திலே உ. வே. சாமிநாதையருக்கு ஆறுமுகநாவலரின் பதிப்புக்கள் வழிகாட்டின.

நாவலர் சென்னையில் நூல்களை வெளியிட்டுக் கொண்டிருந்த அக்காலத்தில் அவரின் தொண்டினுக்கு மதிப்பு அளிக்குமுகமாக சைவ ஆதீனங்கள் யாவும் அவரை அழைத்துப் பெரிய உபசாரங்கள் செய்தன. திருமயிலாப்பூரிலுள்ள திருவண்ணுமலை ஆதீனத்துச் சின்னப்பட்டமாகிய ஆறுமுக தேசிகர் நாவலரைத் தம் மடத்திற்கு அழைத்து அவரது இலக்கண இலக்கியத் திறமை

யையும் சித்தாந்த நூலுணர்ச்சியையுங் கண்டு தாம் அணிந்திருந்த உருத்திர சஞ்சியத்தை ஞாபகப் பொருட்டாக அளித்துச் சிறப்புச் செய்தார். அதன் பின் திருவாவடுதுறை ஆதீனத்தில் சில காலம் தங்கி, அங்கும் உபசரிக்கப்பட்டார். அதன்பின் திருநாகைக் காரோணத்துக்கு வந்து அங்கு சைவப் பிரசங்கஞ் செய்து உபசரிக்கப்பட்டார்.

இவ்வாறு ஆதீனங்களால் உபசரிக்கப்பட்டு வருங்காலத்திற் பிரபுக்கள் தமிழ் நாட்டிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் நிறுவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். அதற்கிணங்க முதலிற் சிதம்பரத்தில் ஒரு வித்தியாசாலை நிறுவ எண்ணினர். அதன் பொருட்டுப் பலநாட் சிந்தனை செய்து 14 திட்டங்களை விளக்கி, நிறைவேற்ற வேண்டிய வழிகளையும் தெரிவித்து, அறிக்கை வெளியிட்டார். ஆனாற் சிதம்பரத்திற் கல்வி நிலையம் நிறுவத் தமிழகத்திற் பணம் சேரவில்லை. இந்நிலையில் ஈழநாடு தமிழகத்திற்குக் கைகொடுத்துதவியது. பணம் திரட்டுவதற்கு 1862 ஆம் ஆண்டு பங்குனி மாதம் யாழ்ப்பாணத்திற்கு வந்தார்.

யாழ்ப்பாணத்திலே தாம் நிறுவிய வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே சபை கூட்டிச் சிதம்பர வித்தியாசாலை நிறுவுவது பற்றி விரித்துக் கூறினர். அப்போது அங்கு வந்திருந்த பிரபுக்கள் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்தார்கள். தொடர்ந்து பருத்தித்துறைச் சித்திவிநாயகர் கோயிலிலே இதுபற்றிப் பிரசங்கம் செய்தார். அங்குள்ள பிரபுக்கள் தம்மால் இயன்ற பண உதவி செய்தனர். அத்துடன் பருத்தித்துறையிலும் புலோலியிலுமுள்ள வர்த்தகர் சிலர் தங்கள் வியாபாரத்திலே சிதம்பர வித்தியாசாலை நடத்துவதற்கு மகமை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

சிதம்பரத்தில் வித்தியாசாலை தொடங்கும் ஆயத்தங்களுடன் தமது 41 வது வயதில், 1864 ஆம் ஆண்டில், தமது ஐந்தாவது இந்தியப் பிரயாணத்தைத் தொடங்கினர். இதுவே அவரது இறுதித் தமிழகப் பிரயாணம். சேதுஸ்நானம் செய்து கொண்டு மதுரைக்குப் போகும் வழியில் இராமநாதபுரத்துக்குப் போய், அங்குள்ள திருவாவடுதுறை மடத்திலே தங்கினர். அங்கு பொன்னுச்சாமித் தேவரின் மரியாதைகளைப் பெற்று மதுரைக்குச் சென்றார். அங்கு மீனாட்சி அம்மை சன்னிதானத்திலே அத்தலத்தின் பெருமையையும் சொக்கலிங்க மூர்த்தியின் பெருமையையும் சைவ சித்தாந்தத்தின் உயர்வையும் விரித்துப் பிரசங்கித்தார். நாவலருக்கு வீபூதிப் பிரசாதத்தைக் கையிற் கொடுத்துப் பரிவட்டத்தைத் தலையிலே கட்டி ஒரு மாலையைத் தோளிலிட்டு வாழ்த்தினர். பின்பு அங்குள்ள மடத்திற் பிரசங்கஞ் சில நாட் செய்து வரிசை பெற்றுத் திருவண்ணாமலை ஆதீனத்திற்கு வந்தார். அங்கு நாவலரைப் பல்லக்கில் ஏற்றி வரிசைகளுடன் பட்டணப் பிரவேசம் செய்வித்தனர். அங்கிருந்து திருப்பெருந்துறைக்குச் சென்று சைவப் பிரசங்கஞ் செய்தனர். அங்கு மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணாக்கரான இராம சாமிப் பிள்ளை திருவிளையாடற் புராணத்திலும், வன்றொண்டர் செட்டியார் நன்னூல் விருத்தி உரையிலும் பாடங் கேட்டுக் கொண்டனர். அதன் பின்இராமசாமிப்பிள்ளை நாவலரைப் பின் தொடர்ந்தனர். வன்றொண்டர் யாழ்ப்பாணத்துக்கு வந்து பொன்னம்பல பிள்ளையிடமும் படித்தார்.

திருப்பெருந்துறையிலிருந்து புறப்பட்டுப் பல தலங்களுக்குஞ் சென்று கும்பகோணம் வந்த போது, திருவாவடுதுறைச் சுப்பிரமணியதேசிகர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையையும் ஒதுவார் சிலரையும் அவரிடம் அனுப்பி, மடத்துக்கு அழைத்து உபசரித்தனர். அங்கு பிரசங்கம் செய்துகொண்டிருக்குங் காலத்தே மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் பல தம்பிரான்மாரும் வித்துவான்களும் அவரிடம் சென்று சித்தாந்த நூல்களிலும் இலக்கண இலக்கியங்களிலும் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கினர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் நாவலரிடம் பாடம் கேட்டதுமன்றி, அவரைத் தெய்வம் போலப் போற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆறுமுக நாவலர் திருவாவடுதுறையிலிருந்து சிதம்பரத்துக்குச் சென்று சிதம்பர வித்தியாசாலையை நிறுவுவதிற் பெரிதும் முயன்றார். அவ்வித்தியாசாலைக் கட்டிடத்திற்குத் தேவையான மரங்கள் யாவும் தச்சுவேலை முற்ற முடிப்பித்து இணுவில் வேங்கடசாலையராலே கொடுக்கப்பட்டன. 1864 ஆம் ஆண்டு ஐப்பசியில் வித்தியாசாலை தொடங்கிற்று. தில்லைவாழந்தணர்கள், மற்றைப் பிராமணர்கள், ஈசானசாரியர்கள் முதலிய யாவரின் பிள்ளைகளும் அங்கு கற்றனர். கருவி நூல்களுடன் சமய நூல்களும் படிப்பிக்கப்பட்டன. திருவாவடுதுறையாதீனம், தருமபுரவாதீனம், திருவண்ணாமலையாதீனம், முதலிய ஆதீனத்துப் பண்டார சந்நிதிகளும் வேறிடத்துச் சைவப் பிரபுக்களும் பாடசாலைக்குப் பலதடவை சென்று


பாடசாலை நடைபெறும் முறையினைப் பாராட்டினர். ஆறுமுகநாவலர் சில ஆண்டுகள் சிதம்பரத்திலும் சென்னையிலும் தங்கினர். அப்பொழுது நமசிவாயத் தம்பிரான் உட்படப் பலர் அவரிடம் பாடங்கேட்டனர். சென்னையிலே தமது இருப்பிடத்திற் சுக்கிரவாரந்தோறும் சைவப்பிரசங்கம் செய்து வந்தார். பக்கத்திலுள்ள இடங்களிலும் பிரசங்கம் செய்தார். திருத்தொண்டை நாட்டுப் பதி புண்ணிய பரிபாலன சபைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுப் பிரபலம் பெற்ற இரு பிரசங்கங்கள் நிகழ்த்தினர்.

இவர் சென்னையில் வாழ்ந்த இந்த ஆறு வருட காலத்தில் நடைபெற்ற இரு நிகழ்ச்சிகள் குறிப்பிடவேண்டியவை. சிதம்பர ஆலயத் தீக்ஷிதர்கள் சிவதீக்ஷை பெறாது சிவாகம நிந்தர்களாயிருந்ததைக் கண்டு அதனைப் பிரசங்கம் மூலம் அம்பலப் படுத்தினர். தில்லைவாழ் தீக்ஷிதர்கள் கோபங்கொண்டு எழுந்தனர். அவர்கள் ஆடுவெட்டி வேத வேள்வி நடத்தத் திட்டமிட்டதையும் குழப்பி நிறுத்திவிட்டார். அக்காலத்திலே இராமலிங்க சுவாமியின் சீடரில் ஒருவராகிய தியாகேச முதலியார் நாவலரைச் சரணடைந்தார். அவரின் வேண்டுகோளுக்கிணங்கிப் ''போலியருட்பா மறுப்பு'' என்ற பிரபந்தத்தை வெளியிட்டனர். இராமலிங்க சுவாமிகளின் கூட்டத்தாரும் தீக்ஷிதர்களும் ஒன்று சேர்ந்து சிதம்பரத்திலே 1869 ஆம் ஆண்டிற் கலகம் விளைத்தனர். கோட்டில் நாவலர் இராமலிங்க சுவாமிகள் மீது மான நட்ட வழக்குத் தொடுத்தார். வழக்குக்குப் பின் இராமலிங்க சுவாமிகள் தம்மைச் சுற்றிய கூட்டத்தை விலக்கித் தனிமையை மேற் கொண்டார்.

நாவலர் சென்னையிலிருந்த இக்காலத்திற் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். மூன்றும் பாலபாடம் நல்ல முறையில் வெளிவந்தது. கந்த புராண வசனம், திருவிளையாடற் புராணம், பெரியபுராண வசனம் முதலியவற்றை அச்சிற் பதிப்பித்து வந்தார். இலக்கண விளக்கச் சூருவளி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக் கொத்து ஆகியவற்றை சுப்பிரமணிய தேசிகரது கட்டளைப்படி பரிசோதித்து வெளியிட்டார். சி. வை. தாமோதரம்பிள்ளை சேனவரையத்தை நாவலரைக் கொண்டு பரிசோதிப்பித்து 1868 இல் வெளியிட்டார்.

இவ்வாறு தமிழகத்திலே யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்று நிலைநாட்டியும், நாவலர் என்ற பட்டத்தைப் பெற்றும், சைவப் பிரசங்கமாரி பொழிந்து சைவப் பயிரை வளர்த்தும், சைவ ஆதீனங்களிற் பலருக்குச் சமய அறிவும் தமிழறிவும் ஊட்டியும், அவ்வாதீனங்களைச் சைவப்பணியிலும் தமிழ்த் தொண்டிலும் வழிநடத்தியும், சிவநிந்தனையையும் போலிக் கொள்கைகளையும் நீக்கியும், சிதம்பரச் சைவவித்தியாசாலை மூலம் தமிழ்க் கல்வியைச் சமய அடிப்படையில் வளர்த்தும், நாவலர் பதிப்பு என்று எவரும் மதிப்புக் கொடுக்கக் கூடிய முயில் நூல்களை பிரசுரித்தும் தமிழகத்தை ஈழநாட்டிற்குக் கடமைப் படுத்தியிருக்கின்றார் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர்.





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. இதன் முன்னேடிதான் நாவலர் இங்கிலிசு கற்ற வேம்படி இங்கிலிசுப் பாடசாலை.

தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை

நாவலரும் பதிப்புப் முனியும்

"இலக்கண இலக்கியப் பிழைகளும் அச்சுப் பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையுஞ் சைவசமய நூல்களையும் பதிப்பிட்டுதவுவார் அரியரான எமது இளமைக் காலத்தில் ஆறுமுக நாவலரவர்களே அந்த நூல் களைப் பிழையறப் பதிப்பித்து உதவினவர்கள். எழுத்துச் சொல்லாராய்ச்சிக்கு நாவலரவர்கள் தாம் நன்னூலுக்கு வரைந்த அரிய காண்டிகை யுரையும், தொல்காப்பியச் சொல்லுக்குச் சேனா வரையர் வரைந்த சொற்பொருட்டிட்பம் வாய்ந் தவுரையும் அவர்களாற் பதிப்பித்து வெளியிடப் படாவிடில் எம்போல்வார் அஞ்ஞான்று தமிழிலக் கணவறிவு பெறுதல் இயலாமலே போயிருக்கும். இலக்கியத்திலும் திருச்சிற்றம்பலக் கோவையா ருரையுந் திருக்குறள் பரிமேலழகியாருரையும் அவர்கள் திருத்தமாக அச்சிடுவித்து வெளியிட்ட மையினாலேதான், யாம் நம் பண்டைத் தமிழின் மாட்சியையுந் தமிழாசிரியரின் தன்னிகரில்லாத் தெய்வப் புலமையையும் ஒருங்குணர்ந்து மேலு மேலுந் தமிழ்நூல் கற்பதில் அடங்கா வேட்கை யுற்றேம்.

இனி, இவையெல்லாங் கற்றும் வீட்டு நூல் தனிப்படக் கல்லாக்காற் பயன் என்! அதற்கும் பேருதவியாகச் சிவஞானபோதச் சிவஞான முனி வரின் சிற்றுரையினையும் ஆறுமுக நாவல வர்களே அச்சிட்டுதவியிருந்தார்கள். இவ் வாறெல்லாம் நாவலரவர்கள் அக் காலத்தில் ஆற்றிய தமிழ்த் தொண்டு சிவத்தொண்டுகளின் மாட்சி அளவிடற் பாலதன்று." (1) என மறைமலையடிகள் நாவலர் பெருமானைப் போற்றிப் புகழ்கின்றார்கள்.

பரிதிமாற் கலைஞர் புகழ்கின்றார்!

பரிதிமாற் கலைஞரோ,

"ஆங்கிலம் முதலிய பிற பாஷைகளிலே மிக வும் பிரயோசனமுள்ளதாகக் காணப்படுகின்ற குறியீட்டிலக்கணம் தமிழின்கண் முழுவதுந் தழுவிக்கொள்ளப்படுதல் வேண்டும். அதனாற் பொருட்டெளிவும் விரைவுணர்ச்சியும உண்டா கின்றன. இவை காரணமாகப் படித்தானுக்குப் படித்த நூலின்கண் ஆர்வமுண்டாகின்றது. இக் குறியீட்டிலக்கணமெல்லாம் தமிழ் வசன நடை கைவந்த வல்லாளராகிய ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களானே முன்னே மேற்கொண்டு வழங்கப்பட்டுள." (2) என எடுத்தோதிப் புகழ் கின்றார்கள்.

பெறப்படும் உண்மைகள்!

இவற்றிலிருந்து, சில - மறக்கவோ மறைக்க வோ முடியாத - உண்மைகளை யாம் காண்கின் றோம்: 1. இலக்கண இலக்கியப் பிழைகளும் அச் சுப் பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையுஞ் சைவசமய நூல்களையும் பதிப்பிட்டுதவத் தக்க வன்மை வாய்ந்தோர் அரிய ராகவிருந்த காலத்திலே நாவலர் பெருமான் வாழ்ந்தார். 2. இலக்கண இலக்கியப் பிழைகளும்

அச்சுப் பிழைகளும் இல்லாமல் - உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையும் சைவசமய நூல்களையும் - நாவலரவர்கள் பிழையறப் பதிப்பித்து வெளியிட்டார்கள். 3. நாவலரவர்கள், நன்னூல் காண்டிகையுரை, திருக்குறள் பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனவரையருரை, சிவஞானபோதச் சிற்றுரை ஆகியவற்றைப் பரிசோதித்துப் பிழையறப் பதிப்பித்து வெளியிட்டமையினாலே அக் காலத்தையொட்டி வாழ்ந்தோர் படித்துப் பயனடைந்தார்கள். 4. அக் காலத்திலே நாவலர் பெருமான் ''வசன நடை கைவந்த வல்லாளர்'' என வாழ்ந்தார். 5. ஆங்கிலம் முதலாய மொழிகளில் வழங்கிவந்த குறியீட்டு முறைகளை நாவலர் பெருமானே முதன் முதலாகத் தமிழ் மொழி உரைநடை எழுதும்போது வழங்கத் தொடங்கினர். 6. அக் காலத்தையொட்டி வாழ்ந்தோர் நாவலர் பெருமான் பதிப்பித்த நூல்களையே பயின்றார்கள்.

பேராசிரியர் செல்வநாயகம் கூறுகிறார்!

இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியராக விளங்கும் திரு. வி. செல்வநாயகம் அவர்கள், ''பேச்சு வழக்கை ஒட்டியே எழுத்து வழக்கும் இருத்தல் வேண்டும் என்னும் உண்மையை உணர்ந்த எழுத்தாளர் பலர் இக்காலத்தின் போக்கிற்கு இணங்க, வேகமும் உயிர்ப் பண்பும் பொருந்தப்பெற்ற இலகுவான உரைநடையொன்றைக் கையாளத் தொடங்கினர். அவர்களுட் சாமிநாதையரும் கலியாணசுந்தர முதலியாரும் சிறந்தவர்கள்.'' எனக் கூறி, ''தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வர்களுள் ஒருவராகிய ஐயரவர்கள் தம் வாழ்க்கை முழுவதையும் தமிழ் மொழிக்கு அர்ப்பணம் செய்து, ஏட்டு வடிவிற் கிடந்த பல நூல்களைத் திருந்திய முறையில் அச்சிட்டு உலகிற்கு அளித்த பேருதவிக்குத் தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டுள்ளனர். அவர்கள் ஏட்டு வடிவிற் கிடந்த நூல்களை ஆராய்வதிலும் அச்சிடுவதிலும் ஊக்கம் செலுத்தி வந்தமையால், நாம் அவரை ஓர் ஆராய்ச்சியாளரெனக் கருதுகின்றோமன்றிச் சிறந்த உரைநடையாசிரியராக மதிப்பதில்லை.'' (3) எனக் குறிக்கின்றார்கள்.

சாமிநாதையர் கூறுகிறார்!

தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வர்களுள் ஒருவரும், ஏட்டு வடிவிற் கிடந்த பல நூல்களைத் திருந்திய முறையில் அச்சிட்டு உலகிற்கு அளித்த வருமான சாமிநாதையர் அவர்கள், நாவலரவர்களைப் பின்வருமாறு பாராட்டுகின்றார்கள்:

''தமிழ் வளர்ச்சியின் பொருட்டு அவர் செய்த அருஞ் செயல்களுக்கு அடையாளங்களாக அவர் பதிப்பித்த நூல்கள் விளங்குகின்றன. அவருடைய பதிப்பு முறை தமிழ் நாட்டாராற் பெரிதும் மதிக்கப்படுவது.

நூலாசிரிய முறையில், நாவலர் எழுதிய நூல்கள் இந்நாட்டில் உலவுகின்றன. பாலபாடங்கள் ஒழுக்கத்தையும் சைவசமய உணர்ச்சியையும் உண்டாக்குவன. நன்னூலுக்கு அவர் ஒரு காண்டிகையுரை எழுதியிருக்கின்றார். இலக்கணச் சுருக்கம் முதலிய சிற்றிலக்கண நூல்கள் சிலவற்றையும் இயற்றி வெளியிட்டிருக்கின்றார். இவை தமிழிலக்கணம் பயிலும் மாணாக்கர்களுக்கு மிகப் பயன்படுவனவாகும்.


சில இலக்கிய நூல்களுக்கும் அவர் உரை எழுதியிருக்கின்றனர். அவருடைய வசன நடை எளியது. வடசொற்களோடு கலந்து அழகு பெறுவது. பாலர் முதல் பண்டிதர் ஈறாகவுள்ள யாவருக்கும் பயன்தரத்தக்கது. அவர் காலத்தில் தமிழில் அழகிய வசனநடை எழுதுவோர் மிக அரியராக இருந்தனர்.'' (4)

பெறப்படும் உண்மைகள்!

இவற்றிலிருந்தும், வேறு சில - மறக்கவோ மறைக்கவோ முடியாத - உண்மைகள் வெளிப்படுகின்றன: 1. நாவலரவர்கள் தமிழ் வளர்ச்சியின் பொருட்டு அருஞ் செயல்கள் புரிந்தார். 2. அவற்றின் அடையாளங்களாக அவர் பதிப்பித்த நூல்கள் விளங்குகின்றன. 3. அவருடைய பதிப்பு முறை தமிழ் நாட்டாராற் பெரிதும் மதிக்கப்படுவது. 4. நாவலர் எழுதி வெளியிட்ட பாலபாடங்கள் ஒழுக்கத்தையும் சைவசமய உணர்ச்சியையும் உண்டாக்குவன. 5. பிற நூல்கள் சில, மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுவன. 6. இலக்கிய நூல்கள் சிலவற்றுக்கும் நாவலர் பெருமான் உரை எழுதியுள்ளார். 7. நாவலருடைய வசன நடை எளியது. 8. வடசொற்களோடு கலந்து அழகு பெறுவது. 9. நாவலரைப்போலப் பாலர் முதற் பண்டிதர் ஈறாகவுள்ள யாவருக்கும் பயன்தரத்தக்க நூல்களை அழகிய வசன நடையில் எழுதத்தக்க வன்மை படைத்தோர் அக் காலத்தில் அரியராக இருந்தனர். 10. பேச்சு வழக்கை ஒட்டி வேகமும் உயிர்ப் பண்பும் பொருந்தப்பெற்ற இலகுவான உரைநடையொன்றைக் கையாளத் தொடங்கிய



நமச்ச மூன்றாம் பாகம் துவிதீயம்.



சிவமயம்.

விக்நேசுவரன் திருவடிகளே.

கந்தபுராண வாசகம்.

மூலமும்

கச்சியப்பமுனிவர்பாடலிற்

செய்திருத்தமும்

கந்தபுராணச்சரித்திரத்

தலைமுதற்முதலிபாதிபொருட்டி

வாசகப்படுத்த

நல்லூரைராயேரிமயிலைசொக்கலிங்கபிள்ளையார்

மூன்றாம்

பண்டிதருக்கும்கேட்டுக்கொண்டதால்

தொண்டைமண்டலம்பூம்பொன்னகரியினித்த

வாட்டகாசி

கோவிந்தப்பமுதலியார்

குமாரர்

பரஞ்சோதிமுதலியாரால்

சுதேசமித்திரன் அச்சுக்கூடத்திற்

பதிக்கப்பட்டது.

சர்வஜித்தருடம் ஆனிமாதம்

சர்வமான்யஸ்ரீ முகவை. கந்தசாமி

பாண்டித்துரைத்

தேவரவர்களால்

முன்னுரை தரப்பெற்றது.

V. Jayaram Moodaliar.

வர்களுள்ளே சாமிநாதையரும் கலியாணசுந்தர முதலியாரும் சிறந்தவர்கள். 11. சாமிநாதையரை ஓர் ஆராய்ச்சியாளரெனக் கருதுகின்றேமன்றி, நாம் அவரைச் சிறந்த உரைநடையாசிரியராக மதிப்பதில்லை. 12. நாவலரைப் பதிப்பாசிரியராகவும், நூலாசிரியராகவும், போதனாசிரியராகவும், உரையாசிரியராகவும், வசன நடை கைவந்த வல்லாளராகவும் மதிக்கின்றேம்.

'அந்த'க் காலத்திலே!

நாவலர் பெருமான் வாழ்ந்த காலம், இலக்கண இலக்கியப் பிழைகளும் அச்சுப் பிழைகளும் இல்லாமல் நூல்களைப் பதிப்பிட்டு உதவத்தக்க வன்மை வாய்ந்தோர் அரியராயிருந்த காலம் என்பதனைத் தெளிவுபடுத்திக் காட்டுவதற்காக, அவர்கள் வாழ்ந்த காலத்திலே - 1846-ம் ஆண்டிலே - சென்னையிலே பதிப்பிக்கப்பட்டதொரு நூலினை எடுத்துக்கொள்ளுவோம்.

நூலின் பெயர்: கந்தர்புராண வாசகம் - 1846

(நூலின் முகப்புப் படிவமும், நூலின் பக்கப் படிவமொன்றும் எதிர்ப்பக்கத்தில் உள்ளன.)

> "கந்தர்புராண வாசகம், முன்னங் கச்சியப்ப குருக்கள்,.....வாசகப்படுத்த, பல பிறபுக்கள், பரசி ராமமுதலியார், கூடியமட்டும் உரைசெய்து, இங்கி லிசுக்காறர் ஆண்டு, பொஸ்தகம்....." என வரு வனவற்றைக் காணும்போது எமக்குச் சிரிப்பே வருகின்றது. சிரிப்பதற்கு இடம் அளியாதிருந்த காலம், அக் காலம். அக் காலத்திலே பெரும் பாலானோர் அப்படியே எழுதி வந்தார்கள்; பதிப்பித்தும் வந்தார்கள்!

அப் பக்கத்திலுள்ள வசனங்கள் மிக நீண்டன வாய் உள்ளன. வசனங்களைப் பிரித்துக் காட்டுவதற்காக - முழுத் தரிப்பு வரவேண்டிய இடங்களிலெல்லாம் - காற்புள்ளிகள் இடப்பட்டுள்ளன. இலக்கண இலக்கியப் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் மலிந்துள்ளன. இப்படியான பதிப்பு முறை வழக்கிலிருந்த காலத்திலேதான் நாவலர் பெருமான் பிறந்து வளர்ந்துகொண்டிருந்தார்.

அப்போது, நாவலர்!

1846-ம் ஆண்டு யூலாய் மாதத்திலேதான் பேர்சிவல் பாதிரியார் தமது முழு நேரத்தையும் பைபிள் மொழிபெயர்ப்பு வேலையிற் செலவிடத் தொடங்கினர் (5) எனக் கூறப்படுகின்றது. எனவே, பேர்சிவல் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதராயிருந்த நாவலர் பெருமான் அவ் வாண்டிலே பைபிள் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டிருந்தார் எனக் கொள்ளலாம். 1846-ம் ஆண்டிலேதான், "கருவி நூல்களையும் சமய நூல்களையும் சில பிள்ளைகளுக்குக் கற்பித்தால் அவர்களால் உலகத்திற்குப் பயன் பெரிது சித்திக்குமென்றெண்ணி, பிள்ளைகளைச் சேர்த்து" (6) காலை வேளைகளிலும் இரா வேளைகளிலும் வேதனம் பெருமற் கற்பிக்கத் தொடங்கினர், எனவும் தெரிய வருகின்றது. சைவ மென்னும் செஞ்சாலி வளரும்பொருட்டு நாவலர் பெருமான் வண்ணார்பண்ணை வைத்தீசுவரன் கோயில் மண்டபத்திலே பிரசங்க மழை பொழியத் தொடங்கியது 1847-ம் ஆண்டு திசம்பர் மாதம் 31-ம் தேதியன்றாகும். (7) சைவ சமயப் பிள்ளைகளுக்குக் கருவி நூல்களோடு சமய நூல்களும் படிப்பிக்கப்படுதல் வேண்டும் எனவும், அப் படிப் படிப்பித்தால் அவர்கள் "தம் மதத்தில் நிலைத்து நிற்றல் மாத்திரமன்றி, பரமதங்களையும் கண்டித்தற்குச் சத்தியுடையராயும் வருவார்கள்" (8) எனவும் கருதி, 1848-ம் ஆண்டிலே ஒரு வித்தியாசாலை வண்ணார்பண்ணையிலே தாபிக்கப்பட்டது. 1848-ம் ஆண்டிலே செத்தெம்பர் மாதத்தில், நாவலர் பெருமான் "சைவ சமயிகளுக்குப் பிரசங்கஞ் செய்தலிலும், சைவ சமயப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தலிலுமே தம் வாழ்நாள் முழுதையும் போக்கல் வேண்டும்" எனக் கருதி, (9) பேர்சிவல் பாதிரியாருக்குத் தமிழ்ப் பண்டிதராயிருக்கும் தமது வேலையையும் உதறித் தள்ளி விட்டார்.

1849-ம் ஆண்டிலே, நாவலர் பெருமான் 'தமது வித்தியாசாலையிலே கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு, கருவி நூலுணர்ச்சியும் சமய நூலுணர்ச்சியும் ஆகிய இரண்டையும் ஊட்டத்தக்கபுத்தகங்கள் இல்லாதிருந்தமையாலும், இங்கிருந்த புத்தகங்கள் தானும் எழுத்துப் பிழை, சொற் பிழை, வசனப் பிழைகளே பொதிந்தவைகளாதலானும், அச்சிலும் ஏட்டுப் பிரதிகளிலும் உள்ளவைகளைத் தாம் பரிசோதித்தலும், புதிதாகச் சில நூல்களைச் செய்தலுமாகிய இரண்டினாலும், அப் பிள்ளைகளுக்குப் பயன் பெரிது சித்திக்கப்பண்ணலாம் என்றும், அவைகளை அச்சிடுவித்தற்கு ஒரு அச்சியந்திரம் அவசியம் வேண்டுமென்றும் நினைந்து" (10) அச்சியந்திரம் வாங்கிக்கொண்டு வருவதற்காகச் சென்னைக்குச் சென்றார்கள். சென்னையிலே தங்கியிருந்தபோது, (11) சூடாமணி நிகண்டுரையினையும், சௌந்தரியலகரியுரையையும் அச்சிற் பதிப்பித்துக்கொண்டார்கள். நாவலரவர்கள் விலைக்கு வாங்கிக்கொண்டு வந்த அச்சுப்பொறி



திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை
நாவலரின் சமகாலத்தவர். ''சுற்றுணர் புலவர் உட்களிக்
கும் முற்றுணர் ஆறுமுக நாவலர்'' என்று
பாராட்டிய பாவலர்.

— உபயம்: க. சதாசிவன்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம்

என்றுவழங்குகின்ற

திருத்தொண்டர்புராணம்.

இஃது

சைவசமயிகளுள் சற்சூரும் மற்சூரும்
ஆகிய யாவருக்கும் சாதாரணமாய்
உபயோகம் ஆகும்பொருட்டு,

யாழ்ப்பாணத்திற்
சைவப்பிரகாசவித்தியாசாலைக்கதிபதியாகிய
நல்லூர்

ஆறுமுகநாவலரால்

கத்திய ரூபமாகச் செய்து,
சாலிவாகனசக-ஆம்-தனாயடி-ல் நிகழாநின்ற
பரிதாபி-ஆம்-சித்திரை-மீ
தமது வித்தியாநுபாலன யந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை-ரூபா-உ.

''வித்தியாநுபாலன யந்திரசாலை'' என யாழ்ப் பாணத்தில் நிறுவப்பட்டது.

நாவலர் பதிப்பு!

நாவலரவர்கள் தாம் நிறுவிய வித்தியாநு பாலன யந்திரசாலையில் 1852-ம் ஆண்டிலே (பரிதாபி ஹூ சித்திரை மீ) பதிப்பித்து வெளி யிட்டதொரு நூலினை - பதிப்பீட்டுச் செம்மை காண்பதற்காக-எடுத்துக்கொள்ளுவோம்.

நூலின் பெயர்: பெரிய புராணம் - 1852

(நூலின் முகப்புப் படிவம் எதிர்ப் பக்கத்தில் உள்ளது.)

''பெரிய புராணம் என்று வழங்குகின்ற திருத் தொண்டர் புராணம். இ.·.து சைவ சமயிகளுள் கற்றோரும் மற்றோரும் ஆகிய யாவருக்கும் சாதா ரணமாய் உபயோகம் ஆகும் பொருட்டு, யாழ்ப் பாணத்திற் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கதிபதி யாகிய நல்லூர் ஆறுமுகநாவலரால் கத்தியரூப மாகச் செய்து,.....பரிதாபி ஹூ சித்திரை மீ தமது வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.'' என வருவனவற்றைக் காணும்போது எமக்கு மனநிறைவு ஏற்படுகின் றது. ஆறு ஆண்டுக் காலத்தினுள் (1846-ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட நூலுக்கும் 1852-ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட நூலுக்குமிடையில்) பதிப்புச் செம்மையும் உரைநடைச் செவ்வியும் நாவலரவர்களால் எவ்வளவோ திருத்தப்பட் டிருப்பதைக் காண்கின்றோம்!

பிறர் கூறுவன:

இவற்றை நோக்கியே, தென்னிந்தியப் பேரறி ஞர்களுள் ஒருவராய்த் திகழ்ந்த திருமயிலை சே. வே. ஐம்புலிங்கம்பிள்ளையவர்கள், பின்வரு மாறு கூறுகின்றார்கள்:- (12)

''தமிழ் வசன நடையிற் குறியீடுகளாட்சியும் சந்தி பிரித்தலும் இவர்களாற்றான் முதன்முதல் கையாளப்பெற்றன. பழைய தமிழ் வசன நூல் களை (அக் காலத்தில் அச்சிடப்பட்ட கதாமஞ் சரி, பஞ்சதந்திரம் முதலியன)ப் படிக்க இய லாது. சந்தி பிரிக்காமல் அச்சிடப்பட்டிருப் பதால், நாவலரச்சிட்ட நூல்களைப் பார்த்த பின்னரே பலரும் சந்தி பிரித்துத் தமது நூல் களை அச்சிடலாயினர். திராவிடப் பிரகாசிகை முதற் பதிப்பையும் இரண்டாம் பதிப்பையும் நோக்குக.''

மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்த ராய் விளங்கும் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், நாவலரைப்பற்றிப் பின்வரு மாறு கூறுகின்றார்கள்:-

''பழைய நூல்களைப் பதிப்பிக்கும் துறையில் ஆறுமுக நாவலர் செய்த பணிக்கு ஈடு இணை கிடையாது. அச்சு வாகனம் ஏற்றப்பட்ட முதலாவது இந்திய மொழிப் புத்தகம் ஒரு தமிழ்ப் புத்தகமாக இருந்தபோதிலும் பத் தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இந்தியர்கள் புத்தகத்தைப் பதிப்பிப்பது தடை செய்யப்பட்டிருந்தது. அத் தடை நீக்கப்பட்ட தன் பின்பும் இந்திய அறிஞர்களின் துணையுடன் அரசாங்கம்தான் பழைய இலக்கியங்களைப் பதிப்பித்தது. அரசாங்க உதவியின்றித் தாமா கவே பழைய இலக்கிய இலக்கண நூல்களைப் பதிப்பிக்க வாரம்பித்த முதலாவது அறிஞர் ஆறுமுக நாவலரவர்களே.

வண. பேர்சிவலுடன் சேர்ந்து நாவலர் அவர்கள் விவிலிய நூலை மொழிபெயர்த்தார் கள். இதன்மூலம் மொழிபெயர்ப்பு வேலையில் தனக்குள்ள திறனை உலகுக்குக் காட்டினார்கள். தற்கால வசன நடையின் தந்தை என்றும் அவ ரைக் கூறலாம். அவர் எதையும் எளிமையாக வும் விளக்கமாகவும் எழுதினார். கிறித்தவ மிஷ னரிமார்களுடன் கொண்டிருந்த தொடர்பு களின் விளைவாக குழந்தை இலக்கியத்தின் முக்கியத்துவத்தை அவர் உணர்ந்தார். பால பாடங்களும் சைவ வினாவிடைகளும் தமிழ் மொழி, சைவ சமயக் கல்விகளில் புதிய சகாப் தத்தை உருவாக்கின. புராணக் கதைகளை எளிய தமிழில் எழுதியதன் மூலம் வியாசம் எழுதும் கலைக்கு அடிப்படையை அமைத்துக் கொடுத்தவர் அவர். தமிழ் நாட்டில் அவர் உருவாக்கியுள்ள பரிசுத் திட்டங்கள் தமிழ் நாட்டின் பாரம்பரியத்துடனும் அவர் தன்னை எவ்வளவு தூரம் உடன்படுத்திக்கொண்டார் என்பதைக் காட்டுகின்றன.'' (13)

கலைநிதி அ. சிதம்பரநாதன் செட்டியார் பின்வரு மாறு கூறுகின்றார்:-

''நன்னூல் விருத்தியுரை, திருக்குறள் பரிமே லழகருரை, திருக்கோவையாருரை, தொல்காப் பியச் சூத்திரவிருத்தி, இலக்கணக் கொத்து ஆகிய வற்றைப் பிழையறப் பதிப்பித்துத் தமிழுலகிற்கு அளித்த வள்ளலார் இவர். நன்னூற் காண்டிகை யுரை, கோயிற் புராணவுரை, சிவதருமோத்திர

வுரை, ஆகியவற்றை இயற்றிப் புகழைத் தமதாக்கிக் கொண்டவர் இவர். பாலபாடங்கள், சைவ வினவிடை, திருவிளையாடல் வசனம், பெரிய புராண வசனம் ஆகியவற்றை யெழுதித் தமிழ் மக்கள் வசன நடை யெழுதப் பயில்வதற்கு அடி கோலியவர் இவர். இவர் எழுதிய பாலபாடங்களை வசன நடை எழுத முற்படும் சிறுவர்கள் கைக் கொள்ளத்தக்க நடைவண்டியென்று சொல்லலா மென்றும், பெரியபுராண வசனத்தை வசனமுங் கதையுமெழுத முற்படும் பெரியார்களும் விரும்பி நோக்கத்தக்க வழிகாட்டியென்றியம்பலா மென்றும் திருமணம்-செல்வக்கேசவராய முதலியார் கூறுவர். தமிழ் வசன நடைச் சரித்திரத்தில் இவருக்கு என்றுமழியாப் பேரிடமுண்டு.'' (14)


இங்ஙனமாக, எல்லோரும் போற்றிப் புகழும் திருப்பெருந்திரு. ஆறுமுக நாவலர் பெருமான் 1822-ம் ஆண்டிலே தோன்றினர். அவருக்குப் பின்னதாகவே, சி. வை தாமோதரம் பிள்ளை-1832-ம் ஆண்டிலே தோன்றினர். கலாநிதி உ. வே. சாமிநாதையர் தோன்றிய ஆண்டு, 1855-ம் ஆண்டாகும். எனவே, சாமிநாதையர் தோன்றுவதற்கு முன்னதாக-அச்சியந்திர வசதிகள் அற்ற தொரு காலத்திலே - தனிப்பட்ட ஒருவராக நின்று, பதிப்புப் பணியில்வழிகாட்டியவர்நாவலர் என்பது துலக்கமாகின்றது. அவர்கள் துணையுடன் தாமோதரம்பிள்ளையவர்கள் பதிப்புப் பணியில் ஈடுபட்டார். அதற்குப் பின்னதாகவே கலாநிதி. சாமிநாதையர் நாவலர்அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி - பதிப்புத் துறையிலே புகுந்து பணியாற்றினர். எப்படிப் பார்த்தாலும், தமிழ் நூற்பதிப்புக்கு நாவலரே வழிகாட்டியாகத் திகழுகின்றார்.

---

1. நாவலர் நினைவு மலர்-1938, பக். 103,
2. தமிழ் மொழியின் வரலாறு-சூரிய நாராயண சாஸ்திரியார். பக். 116
3. தமிழ் இலக்கிய வரலாறு-வி. செல்வநாயகம். பக். 284
4. நாவலர் நினைவு மலர்-1938, பக். 8
5. கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு வண. குலேந்திரன். பக். 126
6. ஆறுமுக நாவலர் சரித்திரம்-வே. கனகரத்தின உபாத்தியாயர் பக். 10
7. ,, ,, ,, பக். 17
8. ,, ,, ,, பக். 25
9. ,, ,, ,, பக். 26
10. ,, ,, ,, பக். 28
11. ,, ,, ,, பக். 30
12. இந்து சாதனப் பொன்விழா மலர், 1939. பக். 16
13. தினகரன் - இலங்கையும் தமிழும். 1964, ஒகத்து தெ. பொ. மீ
14. நாவலர் நினைவு மலர். 1938. பக். 68

ந. இரத்தினசபாபதி
மெய்கண்டான் அதிபர்

அச்சாளர் ஆறுமுக நாவலர்



தமிழ்த்தில் உள்ள இந்து சமுதாயம் என்னும் தேரின் ஓட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே சற்றுத் தடங்கலுறலாயிற்று.

அந்நிய மதம், அந்நிய மொழி என்ற இரண்டு மிண்டிக்கட்டைகள் சக்கரங்களுக்குள்ளே புகுந்து கொண்டு தேரின் ஓட்டத்துக்குக் குந்தகம் விளைவித்தன.

அச்சு இற்றுவிடுமோ என்றதோர் அச்ச நிலை உருவாயிற்று.

அந்த வேளையிலேதான் 'அஞ்சேல்' என்று தோன்றினார் ஆறுமுக நாவலர் பெருமான். தேரின் இரு சக்கரங்களான சமயமும் தமிழும் இடையூறின்றி நன்கு சுழல்வதற்கு உறுதி வாய்ந்த தோர் அச்சாக விளங்கினார் அவர்.

சமயத்துக்கும் தமிழுக்கும் அச்சாக விளங்கிய ஆறுமுக நாவலர், பின்னர் அச்சாளராகவும் பரிணமித்தார்!

தாம் மேற்கொண்ட சமயப் பணிக்கும், தமிழ்ப் பணிக்கும் இரண்டு சாதனங்கள் இன்றியமையாதன எனக் கண்டார். ஒன்று கல்விக் கூடம்; மற்றொன்று அச்சுக்கூடம்.

கல்விப் பணிக்குப் புத்தகங்கள் தேவைப்பட்டன. அந்தக் காலத்தில் நல்ல புத்தகங்கள், சைவ சமயக் கொள்கைகளையும், வாழ்க்கை நெறி முறைகளையும் போதிக்கும் நல்ல நூல்கள், கிடைக்கவில்லை. கிடைத்த புத்தகங்கள் அச்சுப் பிழைகள் மலிந்தவையாகவும், நச்சுக் கருத்துக்கள் நிறைந்தனவாகவும் காணப்பட்டன.

நல்ல நூல்களைத் தாமே செய்யவேண்டிய தவிர்க்க முடியாத நிலை நாவலர் பெருமானுக்கு ஏற்பட்டது. அதனால், அவர் நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் மாறினார்.

மாறி என்ன செய்வது?

அந்த நேரத்தில் அச்சுக்கூடங்கள் எல்லாம் ஐரோப்பியரான மிஷனரியினர் கையிலேதான் இருந்தன. கல்விக் கூடங்களும் அவர்கள் கையிலேயே இருந்தன.

இந்த நிலையில், தமக்கே பாதகமான காரியத்தை மிஷனரிமார் செய்வார்களா? நாவலரின் நூல்களை அவர்கள் அச்சிட்டுக் கொடுப்பார்களா?

தாமே அச்சுக்கூடம் நிறுவவேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் உணர்ந்தார் ஆறுமுக நாவலர். முதலில் யாழ்ப்பாணத்தில் ஒரு அச்சுக்கூடத்தை அமைத்தார். அதைத் தொடர்ந்து சென்னை பட்டினத்தில் இரண்டாவது அச்சுக்கூடத்தை நிறுவினர். அச்சுக்கூடத்துக்கு வித்தியாநுபாலன யந்திரசாலை என்று அர்த்தத்தோடு பெயரிட்டார்.

யாழ்ப்பாணத்தில், ஏன், இலங்கையில் என்று கூடச் சொல்லலாம், முதன் முதலாக அச்சுக் கூடம் அமைத்த ஐரோப்பியர் அல்லாத ஒருவர் ஆறுமுக நாவலர்தான்!

இலங்கையிலும் சரி, இந்தியாவிலும் சரி ரிப்பன் பிரஸ் என்றும் காக்ஸ்டன் பிரஸ் என்றும் ஆங்கிலம் தழுவிய பெயர்களாகவே அச்சகங்களுக்குப் பெயர்கள் அமைந்திருந்தன.

ஆனால், ஆறுமுக நாவலர் தமது அச்சகத்துக்கு இலக்கு உடையதான ஒரு பெயரைச் சூட்டியதிலிருந்தே அவர் மேதைத்துவம் புலனுகிறது அல்லவா?

கல்வி வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட ஒரு நிறுவனத்துக்கு 'வித்தியாநுபாலன யந்திரசாலை' என்ற பெயர் எவ்வளவு பொருத்தமுடையது!

நாவலர் மேற்கொண்ட சமயப் பிரசாரத்துக்கும் அவருக்கு ஓர் அச்சகம் இன்றியமையாததாயிற்று. கிறிஸ்தவ மிஷனரிமார்கள் அச்சகம் வைத்துத் தமது சமய நூல்களைச் சிறு சிறு வெளியீடுகளாகப் பிரசுரித்து மக்களிடையே இலவசமாக விநியோகித்து வந்தார்கள்.

தேங்காய் எண்ணெய் விளக்கிலே பனை ஏட்டிலும் கையேட்டிலும் மங்கிய எழுத்துக்களைப் படிக்க மாட்டாது தயங்கியவர்களுக்கு அழகாக அச்சிடப்பட்ட கிறிஸ்தவப் புத்தகங்களும் சுவிசேஷங்களும் புதுக் கவர்ச்சியை அளித்தன.

அச்செழுத்தைப் படிக்கும் ஆர்வத்தாலேயே பலர் அந்நிய சமய நூல்களையும், சஞ்சிகைகளையும், விழுந்து விழுந்து படித்தார்கள்.

இந்தப் போக்கிற்கு ஈடு கொடுப்பதானால் தமிழ் இலக்கியங்களையும் சைவ சமய நூல்களையும் அழகாக அச்செழுத்தில் பொறித்துப் பரப்ப வேண்டியது அவசியமாயிற்று.

பிற சமயத்தவர் கையில் அச்சுக்கூட வசதி இருந்தமையினால், அவர்கள் சைவ சமயத்தைத் தாக்கியும் தம் சமயத்தைத் தூக்கியும் எழுத வாய்ப்புப் பெற்றவர்களானார்கள்.

இந்தத் தாக்கத்துக்கு மறுதாக்கம் அளிக்க, தூற்றலுக்குத் தூற்றலும், தூஷணைக்குத் தூஷணையும் வழங்க நாவலர் பெருமானுக்கும் அச்சுப் பொறியின் பக்கத்துணை மிக மிக அவசியமாயிற்று.

மேலே கூறப்பட்ட காரணங்களை முன்னிட்டு ஆறுமுக நாவலர் தாமும் ஒரு அச்சாளர் ஆனார்.

அச்சாளர் ஆறுமுக நாவலர் தமது தொழிலிற் காட்டிய சிரும், சிறப்பும், திறமையும் பொறுப்புணர்ச்சியும் அச்சகத்தார் அனைவரும் பின்பற்றுவதற்கு ஏற்றவையாம்.

நாவலர் காலத்துக்கு முன்பு தமிழ் நூல்கள் பெரும்பாலும் இந்தியாவிலே தான் பதிப்பிக்கப் பட்டன. அவை எல்லாம் தப்பும் தவறுமாக, அச்சுப் பிழைகள் மலிந்தனவாக, அச்சிடப் பட்டன.

தமிழ்ப் புத்தகங்களை அச்சிட்ட அச்சகங்களில் அச்சுப் பிசாசு என்பது கோர தாண்டவம் ஆடி வந்தது. இந்த அச்சுப் பேயை அகற்றிய முதலாவது மந்திரவாதி நமது நாவலர் பெருமான் அவர்களே!

நாவலர் வெளியிட்ட நூல்கள் அச்சுச் சுத்தமாகவும், பிழையின்றியும் பதிப்பிக்கப்பட்டன. ஆனால் "நாவலர் பதிப்பு" என்பது ஈழத்திலும், தமிழகத்திலும், பெயரும், புகழும், மதிப்பும், களிப்பும் பெறலாயிற்று.

சைவத்தையும் தமிழையும் வளர்த்தது போலவே அச்சுக் கலையையும் வளர்த்தவர் ஆறுமுக நாவலர். ஆனால், இலங்கையில், தமிழ் மக்களிடையே அச்சுத் தொழிலுக்கு வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் அவர் விளங்குகிறார்; அவரைப் பின்பற்றி அச்சகம் அமைத்தோர் பலர். அச்சுத்தொழிலில் ஈடுபட்டோர் மிகப் பலர்.

மெய்கண்டான் அச்சகத்தை 1920-ம் ஆண்டில் ஸ்தாபித்தவரான என்னுடைய மாமனார் காலஞ்சென்ற திரு. ஆ. கந்தையா அவர்கள்

நாவலர் பெருமானுடைய பரம பக்தர்களுள் ஒருவர்.

இன்று வழக்கில் உள்ள நாவலர் பெருமானுடைய எண்ணெய் வண்ண ஓவியத்தைத் தம் செலவிலே தயாரித்து, 'பிளாக்' வெட்டி பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே, விநியோகித்தவர் எனது மாமனார் என்றால் அவருடைய நாவலர் பக்திக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

அன்று, அவர், வண்ண ஓவியம் தீட்டுவித்த எண்ணத்தின் பிரதிபலிப்பே இலை நாட்டும் பணியில் என்னை ஈடுபடுத்தியது போலும்.

அச்சாளரான நாவலர் பெருமானை ஆதர்சமாகக் கொண்டே என் மாமனார் மெய்கண்டான் அச்சகத்தை நிறுவலானார். இந்த அச்சகத்திலே தான் நாவலர் மாநாட்டு மலர் உட்பட, நாவலர் சிலை நாட்டு விழாப் பிரசுரங்கள் அனைத்தும் அச்சாக வேண்டும் என்று விதிக்கப்பட்டது தற் செயலாக நேர்ந்த சம்பவம் என்று நான் கருதவில்லை. இது திருவருட் கடாட்சம் என்றே கருதுகிறேன்.

வாழ்க அச்சாளர் ஆறுமுக நாவலர்!



சென்னை, தங்கசாலைத் தெருவில் 300-ம் இல. கட்டடத்திலுள்ள வித்தியாநுபாலன அச்சியந்திரசாலை, நாவலரின் நூற் பதிப்பு வேலைகள் உட்பட அநேக பதிப்பு வேலை கள் இங்கேதான் நடைபெறுகின்றன. நாவலர் சென்னையில் வாசம் செய்த காலத்தில் இந்தக் கட்டடத்திலேயே தங்கியிருந்தார்.

—உபயம்: க. சதாசிவசேன்.

Dr. H. W. TAMBIAH Q. C.
Justice of the Court of Appeal, Sierra Leone,
Formerly Puisne Justice of Ceylon.

Arumuga Navalar

Sri Arumuga Navalar is one of the illustrious sons of Ceylon. His name should be written in golden letters in the annals of Sri Lanka. He was born in an orthodox Hindu family and in his early life imbibed the traditional Hindu culture of the Tamils of that period. He was a voracious reader. He was well versed in English as well as in Sanskrit and read widely in Tamil, his mother tongue. During his period many of the Tamil literary works were written in ola leaves and he started a printing press and brought out many printed works which were not easily accessible to readers in Tamil.

He became a Tamil scholar and his name and fame spread to South India. As a scholar, grammarian and an orator he was supreme. The scholars gave him the honorific title "Navalar", which literally means "one who has a powerful tongue" but connotes great scholarship and erudition. Navalar lived at a time when the British had taken over India and Ceylon and the missionaries were trying to destroy the culture of the indigenous people and plant their own. The missionary zeal for prosetelising was so intense that they condemned any culture foreign to theirs as "heathen". The Tamils have an ancient language and culture and any attempt to destroy them is futile. The Portuguese, Dutch and the English could not destroy Tamil culture. During Navalar's time many Christian converts lost their culture and slavishly imitated the West. The soul of the people is their culture and the attitude of the new converts grieved Navalar.

Navalar renounced the world in early life before worldly pleasures could spoil him and

became a Hindu evangelist, and he became the spear head of Hindu renaissance. He founded the Navalar school wrote religious tracts, published many works in Tamil and addressed meetings. The Missionaries in South India as well as in Ceylon found him a tough opponent. They employed renowned scholars to write polemical works condenming Hinduism. Carroll Visuvanathapillai, a great Tamil scholar, was persuaded o write a rejoinder to one of Navalar's works. Visuvanathapillai produced the "Sukra Theepam" in which there was a virulant attack in racy Tamil of the Agamic religion taught by Sri Arumuga Navalar. Later Visuvanatha Pillai repented and become a Hindu. Navalar brought about a great revival in the study of the Tamil language and the Hindu religion. Navalar extended his activities to South India. In South India he carried on a relentless campaign against Ramalinga Swamigal, whose teachings and writings were not only couched in exquisite language but conveyed the quintessence of Hindu ecclectric thought. Ramalinga Swamy spoke of the unity of all religions. He said that, just as several paths lead a person to the same goal, all religions led the soul to the feet of God. Navalar not only condenmed the teaching of Ramalinga Swamigal but even questioned the Swamy's scholarship.

The followers of Ramalinga Swamigal did not spare Navalar. This intellectual feud which brought unpopularity to Navalar among a section of the Tamil Scholars has been forgotten in modern times. Navalar deserves an honoured place among the Tamil scholars. When the Madras Government erected statutes to commemmorate the names of great Tamil scholars, the Ceylon Tamils were shocked to find that Navalar was forgotten. The late lamented Tamil scholar, Annathurai promised to rectify this significant ommission (This promise was made to the writer at the meeting of the I. A.T. R. held in Madras) but his untimely death has made it difficult to press for the erection of a statute of a great Tamil scholar grammarian revivalist and a savant.

The Tamils of Ceylon and South India owes a deep debt of gratitute for preserving their language and culture and erect fitting monuments to perpetuate his memory in India and Ceylon.

A. M. A. AZEEZ

Pioneering HERO

By cherishing the memory of Arumuga Navalar, we, of Ceylon, respect and revere one of the Founding Fathers of our Country's Freedom Movement. He was born in Ceylon, that had suffered three centuries of Western conquest, multi-faceted in its manifestations and consequences, political, economic, cultural and psychological. Of them, the former two were more prominent and striking, and the latter, while more insidious, were yet more damaging and deleterious. The people had become so mentally subdued that they began to adore what they had endured previously, to identify what was best with what was West.

Navalar, by defending the values and virtues of his faith and forebears, opened the eyes of the people to the glories of their heritage and the snares of their serfdom. He exhorted them to feel proud and become worthy of the precious heritage of their faith and language and the culture embodied in them. He thus restored their self respect, by constructing in their minds, and in the minds of those who followed, the defences of freedom. His name will therefore live in the annals of Ceylon as one who broke the spell of the West; The West had exercised this spell with the weird incantation of 'the White Man's Burden' and the strong incense of intellectual arrogance, creating in the minds of the people the many illusions by which their manhood became softened and their servility sugar-coated. Their eyes had been deceived. By this spell, the people had mistaken the iron collar of domination, intended to throttle, for the gold chain of civilisation, meant to adorn.

Navalar achieved this transformation in the hearts of his people by the *prasangams* he delivered, by the schools he established, by the press he founded, by the pamphlets he published, by the readers and catechisms he produced, by the Tamil classics he critically edited, by the new prose-style he created, by the dialectical skill he showed and by the courageous stand he readily made against the Establishment, whenever occasion so demanded.

Arumuga Navalar, while a student in the *swabasha* school, made such extraordinary progress and showed snch good promise, that his brothers decided to send him to an English school, in order that his talent could receive due recognition and adequate reward; for in those days a position of security and status could not be obtained except via English. Therefore he was admitted, when twelve years of age, to the Methodist School in Jaffna. The Principal, who then guided the affairs of this institution was Rev. Peter Percival, a Wesleyan Padre, keen on his work - the spread of the Gospel in his area and the improvement of the flock in his charge. He soon discerned in the new Saivite pupil the spirit of a devotee and the making of a scholar. His fondness for the Tamil

Classics and proficiency in the English Language could not fail to attract the attention of the Padre-Principal who was anxious to cultivate his capacity and increase his knowledge that would enable him establish as easy contact with the people. He therefore engaged Navalar as his Tamil Pundit; he had already been given work as a teacher of Tamil classes in the Upper School and of English in the Lower. It became known throughout the school that this new Pundit possessed a bilingual knowledge and skill, of an extraordinary character, unequalled among his contemporaries.

He was therefore specially employed, in his nineteenth year, as a translator of the Holy Bible. He made it a condition, before he accepted this position, that he would not be restricted or restrained in the practice of his own faith. This condition was readily conceded, because the Padre knew that there was no person more competent than the Pundit to assist him and his Committee in the important task of producing a revised Tamil version of the Bible, so essential for missionary work. There was no doubt thas Navalar would carry out the duties, once accepted, efficiently and conscientiously. This engagement naturally brought the Padre and the Pundit close. They grew to like and appreciate each other, despite the murmurings of those zealots who could not tolerate the Saivite ways of the Padre's Pundit. His courage and conviction had already evoked their jealousy and hatred. They felt that the Padre was too indulgent; but he knew that the Pundit was too valuable to lose. Meanwhile the translation work was proceeding according to plan, the Padre confident that he would justify his appointment and the Pundit happy that he was acquiring knowledge. The more he studied the Holy Bible, the deeper he appreciated the Saiva Agamas. Navalar relished the work; as was his wont, he made a thorough job of it, making a deep study of not only the Bible in its various editions, but also the different commentaries then available with theit supplementary volumes. We have here a glimpse of the quality of research and scholarship, of the skill and intellect which Navalar characteristically revealed in later years, when he edited or paraphrased the Tamil Saivite Classicrs fo the benefit of an ever growing. circle of readers. These qualites were further disclosed in the Tamil Readers and the Saivite Catechisms he produced for the teaching of religion in the elementary classes - rivalling successfully the contemporaneous efforts of the Missionaries.

When the Tamli translation of the Bible was completed, Rev. Peter Percival went to Madras, accompanied by his Pundit to obtain the necessary concurrence of the Madras Bible Society. There the Jaffna version was subjected to a close scrutiny. Navalar's superior scholarship and skill naturally stood the test. The Padre, with his choice vindicated, returned to Jaffna, proud of his protege. He could thereafter unapologetically call his Pundit 'Guru' - an appellation he had used for sometime.

No one could possibly have predicted then, that the Padre's 'Guru' would in later years become an ardent crusader against Christian Missionaries, a skilled orator and a polemical author, controverting his antagonists with the dialectical skill of a legal luminary, that he would play the role of 'the Champion Reformer of the Hindus' ushering in "the counter-reformation" at Jaffna. The Padre could never have anticipated that in the hands of his Pundit, the weapons, forged in the armoury of the Missionaries would bo used so effectively against them. Truly has it been said that men build more than they know and events have consequences beyond their intentions.

During the years he worked under Rev. Peter Percival, Navalar came to understand the Missionary Way of Life. He began to perceive the parlous state of Jaffna's ancestral faith, that was being aggravated by the ignorance and indifference of the majority of its priests and practitioners. The doubts that assailed his mind and the thoughts that oppressed him with regard to the nature of the spiritual disease that afflicted them and the kind of cure that should bo effected may be gleaned from his later writings, especially from *Yalpanasamayanilai* (the State of Religion in the Region of Jaffna) and *Saivathoosan pariharam* (Rejoinder to the Caluminiators of the Saivite Religion.)



தாவலரின் பணிகளில் முன்னின்று உழைத்தவரும், உத்தம மாணாக்கருமாகிய திரு. சதாசிவப்பிள்ளை.

— உபயம்: க. சதாசிவசேன்.

In these works there is implied a two-fold division of the Christian population, the first one of good and genuine Christians and the second of 'Rice' or '*Panchadchara*' Christians. The saivites were, apart from a few, ignorant like many of the *Kurukkals* and the majority of the people, or exploiters like some of the Temple Managers. There was a third group. Every one belonging to this group was a good Hindu among the Hindus and a believing Christian among the Christians. When it suited him, he did not fail to produce incidents of conversion for the delectation of his Missionary employer and for the gain of profit and benefit for himself. There was yet another group; they were the Saivites, pious but not courageous. They were strict in the observances of their rellgion in the privacy of their homes; but were afraid to displease any of the members of the Establishment which was Christian; they were not prepared to incur their ill-will or animosity. Nor were they willing to forgo the material advantages that would accrue to them.

A plan was slowly taking shape in Navalar's mind for the revival of Saivaism and the restoration of its status in Jaffna, the Saivite capital of Ceylon. The insidious ways in which its spiritual conquest had been accomplished, he felt, should be laid bare; he should take counter measures without any further loss of time. He hoped to achieve his end by the establishment of a printing press for the production of tracts and pamphlets, in a language inteliigible to the common man and by the inauguration of schools in every village, where education could be imparted, in a purely Saivite environment, with the aid of specially prepared books. He was perturbed by the growing popularty in some of the temples, of songs and dances which countenanced sensuality; he wanted them replaced by hymns and practices that promoted piety.

With this growing consciousness overpowering him, Navalar found his position under the Padre opprsssive; his relationship became irksome. He had, no doubt, already organized some private classes for the promotion of Tamil and Saivism, confined to his colleagues and friends. But those classes were not satisfying. He had a bigger and better plan to carryout, without let or hindrance, the self-imposed task of reviving the Tamil language and regenerating the Saivite society of his time. And yet the Padre hed been a kind employer, heedless of the vituperations of his enemies and always appreciative of his character and capacity. Therefore, he could not summon enough courage to tender his resignation. To his dilemma there was soon, however, an unexpected solution - a God-given opportunity for him to gain the freedom he was long yearning for. Navalar's influence, though unobtrusive, was infectious. His piety was widely known though he did not parade his faith. His personal discourses therefore produced a magic effect on those who came in contact with him. Two of them, encouraged by the Padre, were on the verge of baptism; but Navalar had dissuaded them in time, and they failed to turn up on the day appointed by the Church authorities. To this interference of the Pundit, Rev. Peter Percival, could not be blind, however accommodating he desired to be; he could no longer disregard the temper of his colleagues. Navalar was therefore summoned and gently questioned about the part he played in this little drama; yet he was not asked to leave, nor was he reprimanded. This incident however could not be forgotten. The Pundit reviewed his partnership with the Padre. It was now clear to Navalar that he had a mission in life - to defend his faith against its calumniators and vindicate it among its followers. He decided that he would not embarass in any way himself or his employer any longer; he therefore tendered his resignation.

He confronted his worldly - wise brothers with this fait accompli; he gave them a shock for they had been eagerly hoping that their brother would find some glamorous employment with high remuneration. They were gravely disappointed that their youthful brother had most foolishly scorned the delights of those alluring prospects. But Navalar had other plans to pursue and other ambitions to nurture. He was too fond of the Saiva Agamas, ever conscious of the inevitability of death and the futility, in the final analysis, of any quest for security. Therefore he was fearless of the future uncertainties and heedless of the fraternal admonitions. With

missionary zeal and with no loss of time, he commenced his lifework, unconcerned with the anxieties of his brothers and unmindful of the illwill of the Establishment; he had on visible support from any, but he had faith in his destiny. This was in 1848. Navalar was then in his twenty sixth year, wedded to the life of a *bramachari* and avid for action, on behalf of the faith of his forefathers.

To him education was the instrument, *par excellence*, of success for any religious revival. Hence his first achievement was the speedy inauguration, in 1848, of the Vannarponnal Saiva Pragasa Vidyasalai. The method of collection he adopted on this occaion was ingenious, simple and appealing - just a handful of rice, each time a meal was cooked in the house. This school was soon followed by the establishment of a printing press at Vannarponnai. In 1853 Saiva Pragasa Sabai was organisen. Thus within five years after he left the Padre, Navalar had laid, securely and well, the foundation of the work that would engage him throughout the remaining years of his lile, and would enable him "leave behind footprints on the sand of time."

In previous months, Navalar had delivered *prasangams,* Saivite Sermons in new style somewhat Christian form, in content purely Hindu. Once, with very little notice, he had to substitute for his unavoidably absent colleague. He began with the word - Unprepared; he took the audience by surprise and gave them the impression of astage fright. Soon those present were astounded to find him giving an eloquent discourse on the grand theme of "Unprepared - for Death."

Navalar could no longer be ignored, either by friend or foe. His *Saivatho sanaŋ-riharam* ("Rejoinder to the Calumniators of the Saivite Religion") was noticod in the Wesleyan Methodist Report for 1855. The writer commented specially on the new techniques, tactics and strategy adopted by Navalar, the Saivite Apologist. "He undertakes to prove that every one of the distinctive articles of Saivite belief and observance has its parallel and warrant in the credenda and ceremonial set forth in the Christian Scriptures. The amount of Soripture brought to the defence... is most surprising and the adroitness with which every possible objection is anticipated and repelled belongs only to a first rate mind. The book is doing much mischief." This bears ample testimony to the success of his efforts.

His Polemical writings were producing some effect; for in the year 1871 the school authorities of one of the Christian managed institutions refused permission to the Saivite students to attend classes, with the symbol of their religion visible on their foreheads; and they left in protest. They would not have been so bold in previous years. For them, Navalar established the Saivangila Vidya Salai, where English could be taught with the necessary religious background. But the school did not endure beyond four years, on account of the scanty support received from the parents concerned and the positive discouragement of the Government officials. Navalar was however undaunted; for the solution of these difficulties he was preparing a New Plan, which he did not live to complete or carry out. He envisaged the opening, under indigenous management and with Govemment aid, of English schools, where religious education, instead of being negatived or neglected would be promoted and pursued, where communal cultures, instead of being depreciated or enfeebled would be encouraged and developed.

During his last two years, he took a leading part in some of Jaffna's political activities. He agitated against the agents of administration for their abuse of power in connection with the cholera epidemic and the famine of 1877. When the nominated seat for the Tamils in the Legislative Council became vacant, he was strongly in favour of the nomination of (Sir) P. Ramanathan and addressed several meetings canvassing support. A few months later Navalar died, on 5 December 1879.

The printing press he founded and the publications he introduced were continued successfully after him, by men personally trained by him in his ways and methods. His Readers and Catechisms continue to inspire, even today, those desirous of promoting the growth of indigenous cultures in our land; the new Tamil prose style, which was his, has not lost its freshness or validity. Navalar had adopted some of the changes

introduced by the Christian Missionaries in their Tamil publications, without detriment to the individuality that is Tamil. His critical editions of the ancient Tamil Classics and his popular works meant to educate the common man in his religion provide an imperishable monument to his zeal, skill and scholarship; the school he founded in 1871 was phoenixlike, reborn twenty years later and is now known as the Jaffna Hindu College, Vannarponnai - the Premier Hindu Institution of Ceylon.

Thus is Arumuga Navalar the Father of the Tamil Renaissance and the Leader of the Saivite Reformation. Owing to his achievements in the realms of language and religion - Tamil and Saivaism - History will undoubtedly accept him as the pioneering hero in the transition from the Age of Submergence to the Age of Survival, and acclaim him as one of the Founding Fathers of the Freedom Movement in Ceylon.



C. S. NAVARATNAM

Prince of Tamil Scholars

Tamils in Ceylon in the nineteenth century had already drifted from their traditional moorings. The Portuguese after their conquest of Jaffna in the seventeenth century adopted brutal methods of conversion. The Dutch who followed them adopted subtle and indirect coercion to win people to their faith. The British Government while professing neutrality in religious matters entrusted the education of the country to Missionary Societies who tried to win converts by offering them food, clothing, cash, service and English education. No part of Ceylon was subject to missionary influence so much as Jaffna. A large number of Saivites were lured by these baits. Some of the new converts were more zealous than the white missionaries. The white and the native missionaries jointly attacked the Saivite Church in all fronts — the press, the platform and the school The Saivites who remained true to their faith took no action to counteract the activities of the missionaries. The people had lost all their own against western impact and conquest. The conquest was complete in body and spirit. It was at this hour, as if summoned by Destiny that Navalar was born for the cultural emancipation of his countrymen.

Srila Sri Arumuga Navalar was born on December 15, 1822 at Nallur in Jaffna. He was the youngest son of a Vellala gentleman Paramanathar Kanthapillai who was a reputed physician and government official. In his native village he was known as 'Arachchi Kanthar'. His mother was Sivakamy, the daughter fo Vethavanam. Arumugam was the sixth son in a family of six sons and three daughters. The first son, Thiagar was a Notary and Ayurvedic physician, The second son, Sinnathamby was an 'Udaiyar'. He was proficient in music. The third was Poothathamby who died early. The fourth was Paramananthar who was a Notary. He was Proficient in Tamil grammar and literature and spent his leisure hours in writing

dramas. The fifth was Thambu who was a Government official like his father. Thus, Arumugam grew in an environment of Tamil learning and culture.

At the age of five Arumugam attended a small school in charge of Subramaniampillai. When he was nine years old his father died. On his death he had left behind an unfinished drama 'Ratnavalli'. Young Arumugam completed the drama commenced by his father. His elder brothers were astonished at his wonderful performance. They, therefore, took keen interest in his education. At the age of twelve he was sent to Velautha Mudaliyar of Nallur to study Tamil grammar and literature. Later for his higher studies he was sent to Vidwasiromani Senathiraja Mudaliyar of Erupalai and Saravanamuttu Pulavar of Nallur. As he was very diligent his teachers taught him at a quicker rate. While he was continuing his higher studies in Tamil he attended the Methodist English school in Jaffna run by Rev. Peter Perceival. Arumugam soon gained proficiency in English and the Headmaster knowing his Tamil scholarship soon appointed him to teach English in the lower classes and Tamil in the upper forms.

In his nineteenth year he was asked by Rev. Perceival to translate the Bible into Tamil. He accepted the work on condition that he be left free to follow his religious observances. This work enabled him to study Christianity and its theology, and it served him best for his future religious activities. When the translation was completed Rev. Perceival took him to Madras where a body of Pundits had also been translating the Bible. The two ranslations were submitted to a great scholar, Vidwan Mahalinga Aiyar for his choice. He not only commended Arumugam's translation, but also praised the translator. He found the translation flawless and elegant. The Bible Society accepted the translation for publication and in consequence his fame spread far and wide.

Arumugam took to the study of Saiva religion and soon mastered the Siddhanta Classics. He studied the Vedas, Agamas in original Sanskrit. He knew the Puranas and gained a profound knowledge of Tamil grammar. During this period he found time to impart free instruction to a large number of students in the traditional style. Among those who became his pupils at that time were Sathasivampillai, Yogi Nadarasa Aiyer, Arumuga Thambiran, Swamynatha Aiyer and Visuvanatha Aiyer. Of these Sathasivampillai lived a bachelor, like Navalar and continued the work of Navalar in South India. Nadarasa Aiyer became famous on account of his Sanskrit work, 'Paushkaram'. Arumugam wrote an excellent commentary on 'Periyapuranam'.

Among those who formed the second batch of Navalar's students were his nephew S. Ponnambalapillai who became a great scholar like Navalar and continued his work in Jaffna. He was a great teacher of his age like Senathyrajah Mudaliyar and Kulangkai Thambiran. He was the teacher of Sabapathy Navalar and Acharya M. K. Vetppillai. Kasi Vasi Senthinatha Aiyer was another student of Navalar who specialized in the study of Saiva religion and wrote an admirable translation of 'Nilakanta Bhashyam'. Many students of Navalar became great scholars in their time.

In 1845 he left Central College in spite of the repeated requests of Rev. Perceival to continue in service. Navalar's great desire was to serve his religion and language. Like Swami Vivekananda he had a burning love for the religion of his ancestors, and therefore, the thought of marriage never entered his mind. His closest relatives tried in vain to get him married, but he chose the life of a bachelor so that he might serve Sivaperuman to the best of his capacity.

In 1848, he established a school at Vannarponnai for the growth of Tamil learning and Saivism. In 1849, he set up a printing press near his school for the dissemination of Tamil learning throughout Ceylon and Tamilnad.

From the time he left Central College, he devoted the rest of his life for the propagation of Saivism and Tamil by means of speeches and writings. He published leaflets criticizing the conversion work of Christian missionaries and extolling the greatness of Saivism. In 1847, he selected the Vasantha Mandapam of Vannar-

ponnai Sivan Temple to deliver lectures on Saivism on every Friday. Karthegaya Aiyer, a class-mate of Navalar and en erudite scholar, became his henchman in this noble task. The subjects of their discourses were: Worship of God, Love of God, Love of Religion, Siva Deeksha, Temple Festivals etc., He organised lectures on religion and ethics in different parts of Jaffna. Navalar viewed that political emanicipation or economic independence was secondary, but cultural autonomy was essential. To counteract the activities of foreign missionaries he used the self-same weapons the missionaries were using, the press, the platform and the school. He established Hindu schools at Kopay, Puloly, Inuvil, Colombagam, Kantarmadam and Mathagal.

Navalar became the spear-head of the new Saiva revivalism in Ceylon and Tamilnad. He kindled in the hearts of his generation the pristine glory of the most ancient religion. He made people realize the greatness of their temples and their priceless Agamas. He exhorted Tamil Pundits to go into the villages and expound the sacred 'Puranas'. He wrote the invaluable Saiva Catechisms I and II for the guidance of the young and the old. He also wrote four elementary graded 'Palapadam' for use in schools. These books contained the essence of our religious traditions and were sold at a nominal price. Great truths that ware embodied in the Vedas and Agamas were thus brought home to the masses.

Navalar was the most fluent speaker of his time. He was a good logician and possessed a powerful memory. He could quote chapter and verse at will in any learned assembly, and it was this scholarship and brilliant eloquence that impressed the 'Mutt' of Tiruvavaduthurai Athenam to confer on him the title of 'Navalar'. His speeches and writings carried conviction. Those who listened to him tried to practise what they had heard, in daily life. Many received the Saiva initiation. Many gave up meat-eating. The attendance of worshippers in temples Increased by leaps and bounds. His writings and lectures were admired by Mahavidwan Meenakshisundarampillai, Vedanayagampillai of Mayuram and C. W. Thamotherampillai the literary luminaries of the nineteenth century. The fact that Navalar was held in high esteem by patrons of the type of Ponnuswamy Devar of Ramanad Samasthanam and Subramaniya Desikar of Tiruvavaduthurai Athenam goes to establish that Navalar was a supreme genius of his age.

While he was building the Saivite Church that had gone to decay since the arrival of the Portuguse, he took special care also to fortify it against the attacks of Christian missionaries. He also wrote books such as 'Subra Bodam' and 'Saiva Doosha Parikaram' in defence of Saivism. It indicates the tremendous stir he created among Christian missionaries. Carrol Visuvanathapillai an erudite scholar was one of those who attacked Saivism, but in his late years he repented and became a Hindu.

Navalar made vigorous attempts to renovate two historic temples - Naguleswaram and Tirukketiswaram. By his writings he aroused in the minds of the people an interest in the renovation of these temples. He applied to the Government for the sale of the Tirukketiswaram temple site, but the Government Agent did not recommend the sale. Though the site was not bought during Navalar's time, it was procured fourteen years after his death.

Later he turned his attention to rectify the abuses of the Saivite Church. He criticized nautch dances and the slaughtering of animals in Hindu temples. He reproached those managers of temples who did not carry out their duties. He stressed that Brahmans should be highly educated in order that they may fulfil their duties as priests, efficiently. He also pointed out the anomaly of Saiva priests officiating in Kannakai temples. He denounced those Hindus who attended Catholic Churches for worship. He regarded the Devaram the Tiruvachakam and other works of the Saiva Saints as the nearest approach to the Vedas in Tamil. He called them 'Arudpas'. When the disciples of the poet Joti Ramalinga Swami published his poems with the title of 'Tiruarudpa', Arumuga Navalar promptly challenged their claim as profane. He said that only the divinely inspired songs of the four Saiva Saints could be called

Arulpas'. He had no animosity with Ramalinga Swami, but he had to fight an ideological battle. Arumuga Navalar started an attack against Ramalinga Swami and the controversy grew bitter. The matter was then taken up in the courts and Navalar came out unimpaired.

Though Navalar's services to his religion were praiseworthy, his contribution to Tamil learning will always be best remembered by posterity. Before the time of Navalar writing in Tamil prose was not in vogue. Most of the prose works before his time were commentaries and Tamil scholars did not realize that there could be good literature in prose. He rejuvenated Tamil prose and lifted it to a position which it had not occupied at any time. For this great task Navalar had one great advantage. His close acquaintance with the splendid book of English prose, the authorized version of the bible had helped him to write elegant Tamil prose. He wrote the prose renderings of the 'Periyapuranam' the 'Thiruvilaiyadalpuranam' and the 'Kandapuranam'. The last of these were more or less a paraphrase of 'Kandapuranam'. His prose was chaste, sweet and simple. It was characterized by lucidity of expression and clarity of thought. There was no pedantry, no archaism. His prose was not influenced by the linguistic purism which was a great characteristic of some writers of later times. He considered that a knowledge of Sanskrit was necessary for the study of religion and culture. He was the first writer in Tamil who introduced punctuation marks into Tamil composition. Navalar's editions became popular because of the accuracy of their texts. He was undoubtedly the greatest prose writer of the nineteenth century and was really the Father of modern Tamil literary prose.

In the days of Navalar those who desired to study Tamil literature were obliged to copy out their books in palmyra leaves before they could study them. In the course of copying several mistakes crept into these manuscripts. Navalar collected the manuscripts of each book, compared them and selected the best readings. He himself copied these on paper and gave them to the press for publication. In like manner 'Kandapuranam', 'Maha Bharatam' and 'Periyapuranam' with a 'Soochanam weer' published. He published the 'Nighantu' (a lexicon in verse) with a prose version. He published the 'Nanool' with an exhaustive commentary.

He wrote commentaries for several religious works such as 'Koilpuranam', 'Shivadharmotheram' 'Tirumurukattupadai' and 'Saiva Samaya Neri'. He published the 'Tirukkural' with Paremelalagar's commentary, the 'Tirukkovaiyar' with Parasiriyar's commentary. He also published the 'Tiruvasagam' the classic work that speaks of the Grace of God. Navalar had in all edited and written over sixty books.

Navalar's fame and name had gone beyond his native country. He contributed much towards the religious awakening of South India in those times. His school in Chidambaram which was founded in 1864 was a nucleus of Tamil learning and Saivite culture. Distinguished scholars like Sabapathy Navalar and Acharya M. K. Vetppillai presided over the destinies of this illustrious institution. Navalar also planned to found a Saiva Gurukula Ashramam at Chidambaram, but his appeal for funds was rather poor and he had to give up that idea. His press in Madras printed his books with accuracy of texts and thoroughness in method. Students of Tamil always preferred to buy Navalar's editions of Tamil works. He was often invited by the Heads of the various 'Mutts' of the Tamilnad to deliver religious discourses and wherever he went his discourses drew great crowds. His inspiring lectures kindled the flame of spirituality in the masses. He was invited by the Rajah of Ramanad to his palace. The Minister who was himself a great scholar requested him to revise the manuscript of several Tamil works. He strove to reform the priests of the sacred temple of Chidambaram and tried to persuade them to follow the Agamas. His lectures instead of reforming the priests roused their anger. A band of hirelings attempted to assault Navalar, but were soon dispersed. He was elected President of the Shiruthondainadu Pathipunya Paripalana Sabai of Madras. Under its auspices he delivered series of lectures. He transformed Madras into a 'Saiva Citadel'.

Navalar in his discourses impressed the people about the greatness of Saivism. He wished that Hindus should not allow themselves to be divided by jealousy and hatred, but work for the cause of Hindu Dharma. He wanted the ruined temples to be renovated and the daily 'Pujas' performed in accordance with the Shastras. He emphasized that everybody should seek Eternal Bliss 'Shiva Gnanam.' He exhorted the Hindus to read the Saiva Siddhanta treatises, to establish Hindu schools and to spread the glories of Saivism.

When Navalar returned from India in 1870, the Methodist School in Jaffna made on order that pupils should not wear the 'Sacred Ashes'. Most of the Hindu students disobeyed the order and were therefore sent out of the school. They went and complained to Navalar. He immediately started a school and maintained it with the fees collected from the pupils. The public of Jaffna failed to give Navalar monetary help. Government refused to register the school for grant. The missionaries relaxed their order relating to the wearing of the Sacred Ashes. Pupils also saw the disadvantage of studying in a non-registered school. Hence Navalar had to close the school after years.

Tributes were paid to Arumuga Navalar by various scholars for the invaluable services he rendered to Tamil Literature in general and Saivism in particular. The greatest characteristic of Navalar was that he practised what he preached. He led a life of ascetism in order to serve Sivaperuman in the best possible way. He had a great moral sense that his worst enemies dare not speak ill of him. He was a devotee of Siva and believed in the daily rituals. Navalar had great faith in Siva Puja. He believed that rites and ceremonies give us a training. They are preliminaries to moral qualities. For instance an offering to the Gods is a rite and it is intended to lead to self-sacrifice which is a virtue. Alms-giving is laid down as a rite and is intended to lead to generosity. Fasting is a rite and is intended to lead self-control which is a virtue. A virtuous life purifies and strenghtens the soul. If the end of man's life is to realize 'Siva Gnanam', eternal perfection, then all our religious activities should be directed with reference that end. Navalar wanted all men to surrender themselves to Lord Siva.

He was a kind-hearted man who never failed to help those in distress. He loved his pupils. Like all reformers he was fearless. He served his religion not because he was a Hindu, but because he loved Sivaperuman. He had a great regard for religious men. Navalar loved his native land and whenever people in South India spoke disparagingly of Jaffna, Navalar would instantly make a counter-attack. One Veerasamy Mudaliyar of Narasinga Puram had somewhere written disparagingly of Jaffna. When Navalar came to know of this, he collected materials not only of the writer but of his superior and wrote a counter-attack. The booklet that he wrote was full of the glories of Jaffna and the stupidities of the Mudaliyar.

The end of Navalar came in December 1879. He passed away when he was at the height of his oratorical and editorial prowess and if he had lived longer the Tamils would have been benefitted greater. Many scholars who came after Navalar tried to live like Navalar dedicating their lives to the service of Tamil and Saivism. Long before Lokamaniya Tilak and Mahatma Gandhi were born Srila Sri Arumuga Navalar raised the cultural revolt against the invades of Western Culture and idealism. If Kamban had shown the greatness of Tamil poetry, then Navalar had shown the sublimity of Tamil prose. If Swami Vivekananda unified India by his soul-elevating religious discourses, then Navalar unified Tamil Nad by his inspiring religious discourses. He was the greatest religious reformer of our times.

II

பல துறை

புலவர் பாண்டியனார்



நம்பியாரூரர் தமது திருத்தொண்டத் தொகைச் செய்யுளிலே ''திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன்'' என அப்பரடிகளைச்சிறப்பித்துப்பாடுகின்றார்.இவ் விதப்புச் சொல்லினுள், அப்பர் தமது வாழ்க்கை நிறைவெய்தற் பொருட்டுத் தாம் வேண்டியிருந்த பேறும், அது கிடைத்தற்பொருட்டுத் தேடித் திரிந்து தாம் பட்ட அல்லற்பாடும், அப்பேறு தமக்குக் கிடைத்தவாறும், அது பெற்றபின்னர் அவரெய்திய ஆராவமைதியுமாகிய அவர் தம் வாழ்க்கைத் திறமெல்லாவற்றையும் அறிஞர் கேட்டறிந்து கொள்ளும் வேணவாவைக் கிளர் விக்குங் குறிப்பமைந்துள்ளது.

திருவென்பது, கண்டார் யாவர்க்குந் தாங் கண்ட காட்சியை வாங்க வொட்டாத காதற் களிப்பு நல்கும் வீறுடைய கழிபெருங் கவின்.

ஈண்டு, நின்றவென்பது முதலுமுடிவுமின்றி இயல்பாக நிலைபெற்ற வெனப் பொருள்படும் பெயரெச்சவினைச்சொல்.

ஈண்டுச் செம்மையாவது எஞ்ஞான்றுந் திரி பின்றி இருந்தவாறிருந் தெவ்வுயிர்க்கும் பொது வாதலாகிய முதன்மை.

செம்மைக்கு மறுதலைச் சொல்லாகிய கொடுமை என்பது திரிபுடைமையென்னும் பொருளுடையதாகலிற் செம்மை திரிபின்மை யெனப் பொருள்படுவதாம். செந்தமிழ், செங் கோல், செந்தண்மை யென்பவற்றிற் செம்மை யென்னும் அடைச்சொல் அப் பொருள்படுதல் காணப்படும். திரிபின்மை, தூய்மை, பொதுமை, முதன்மை இந் நான்மையுந் தம்முள் வேறு வேறு நில்லாவாகலின் இவற்றுள் ஒன்றுடையது ஏனை மூன்றும் ஒருங்குடையதாம்.

செம்மை யென்பது பண்புப் பெயர்ச் சொல் லாயினும் பண்பொடு பண்புவேறல்லாத ஒற்றுமை பற்றிச் செம்மையாகிய பொருளை யுணர்த்தி நிற்றலு மரபெனக் கொள்ளப்படும். படவே, ஈண்டுச் செம்மையென்பது செம்பொரு ளெனப்படும். செம்பொருள்: எஞ்ஞான்றுந் திரி பின்றி முதலுமுடிவுமின்றி எங்ஙனும் இடையற வின்றி நிறைந்து நின்று நிலவு மொரு நுண் பொருள். உலகமெல்லாம் ஓவாது நிலையின்றித் திரிந்து மாறிக் கொண்டிருத்தலைக் கண்ட மூதறிஞர் இவ்வுலகெல்லாந் திரியுஞ் சுழற்சிக் கின்றிமையா திடங்கொடுக்கும் வெளியொன்று எஞ்ஞான்றுந் திரிபின்றி இயற்கையின் இருத்தல் வேண்டுமென நுனித்துணர்ந்து முன்னிலைக்

காட்சியும் படர்க்கைக் காட்சியு மொழித்துத் தன்மைக் காட்சியளவிற் கண்டு துணிந்த பொருளே அவ்வியல்பு தோன்றச் செம்பொருளெனக் குறியீடு செய்து வழங்கினர். அச்செம் பொருளைத் தெருண்டு தெளிந்தமைதியுறுமுணர் வுஞ் செம்பொருளின் வேருகாது திரிபின்றி நின்றருங்கு நிற்கு மமைதிபற்றி அம்மெய்யுணர்வு செம்புலமென வழங்கப்பட்டது. செம்புலந் தலைப்பட்ட செவ்வியுடைய திருவாளரைச் செம் புலச்செல்வரென வழங்கினர்.

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு''

எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனுரும் அம் முழுமுதற்பொருளைச் செம்பொருளென வழங்கித் தெருட்டினர்.

எனவே, திருநின்ற செம்மையே செம்மை யென்னுஞ் சொற்றொடர்க்குத் திருநின்ற செம் பொருளே செம்பொருளென்பது பொருளா யிற்று. அச்செம்பொருளின்கணல்லது எவ்வுயிர்க் கும் எஞ்ஞான்றும் அமைதியும் இன்பமும் உண் மையும் வேறெங்குமின்மையின் அதனைத் திரு நின்ற செம்மையென விதப்புரை கொடுத்து விளக்கிக் கூறுவாராயினர். செம்பொருளென்பது அப்பாலுக்கப்பாலைப் பாழாகலின் அது வினைவ யிற் கட்டுண்டு பிறந்திறந்துழலுமுயிர்க் கெல்லாந் திருநின்றதன்று; உலகியற் செல்வ வாழ்வு திரு திருநின்றதெனப்படும். உலகவாழ்வு காத்தற் றொழிலிற் பற்றுடைய கடவுளைத் திருமால் என்பர். உலக வழியிற் பற்றுடைய கடவுளை அழுகையும் அருவருப்பும் இடையருத சுடுகாட் டிற் பேயோடாடியாகக் கொள்வார்க்கு அக்கட வுள்மாட்டுத் திருவென்பதில்லையாகும். பொய்ந் நெறியிகழ்ந்து மெய்ந்நெறி பற்றிக் காணும் பேரறிவாளர்க்குத் துன்பத்தொகுதியாகிய உலக வாழ்வு முழுதுந் திருநின்றதன்றி அருவருக் கத் தக்கதாகும். உலக வழியிற் பற்றுடைய கட வுட்கே துன்பமொருசிறிதுமின்றி நிலை பெற்ற பேரின்பமுளதாம். அவனை வணங்கி வழுத்தலே பிறவாப் பெருவாழ்வுக்குத் துணையாகுமாதலின் அவனே நிலைபெற்ற திருவுக்கு நிலைக்களமா மெனத் தெளிந்த வடமொழிமுனிவர் அவ்வுருத் திரனைச் சிவமென்னுந் திருப்பெயரால் இனிது விளக்கி வழிபடுவித்தனர். அச் சிவமென்னும் வடசொற்பொருள் இனிது தோன்றக் கூறுதல் வேண்டுமென்னுங் கருத்தால் அப் பொருளைத் ''திருநின்ற செம்மை'' எனக் குறியீடு செய்து கூறுதல் போற்றத்தக்கது.

மனைவாழ்வு துன்பமாதல் கண்டஞ்சிய மருணீக்கியார் திருநின்ற செம்மையைத் தேடித் தடுமாறு நெஞ்சினுலே அன்று பல்லவராட்சிப் பாதிரியூரில் அமண் பள்ளி புக்கார். புக்கவர் அமண் கொள்கையோடு பவுத்தமுதலாய பிற கொள்கை முடிவுகளையும் ஐயந்திரிபற ஆராய்ந்து நோக்கினர். அமண் பள்ளி யடிகண்மார்க்குத் தலைவருமாகித் திகழ்ந்தார். ஆயினும், அமணர் முதலாயினர் கொண்ட செம்பொருளெல்லாம் போலியாய்த் திருநின்ற செம்மையல்லாமை யைக் கண்ட அவரதுள்ளம் அமைதியின்றி ஆராய்ச்சி வழியில் அலையலாயிற்று. இறுதியிலே, திருவருள் கைகூடப்பெற்றுத் தெருண்டு மற்றச் செம்மை முற்றப் பொய்ம்மையாமாறு திருநின்ற செம்மையைத் தம்முள்ளத்தே தேடிக் கண்டு கொண்டு திருநாவுக்கரச ராயினராகலிற் செம் மையே என்னும் ஏகாரம் பிரிநிலையேகாரமாம். இது செப்புவார் செப்புஞ் செம்மை பலவற் றுள்ளுந் திருநின்ற செம்மையைப் பிரித்து அதன் சிறப்புணரநின்றது. எனவே, ஏனையோர் செம்மை யெல்லாந் திருச்சென்ற செம்மையல்லது திரு நின்ற செம்மையல்லவாயின. செம்மையென விதவாது வாளா கூறியது செம்மையெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவதென்னுங் கருத்துப் பற்றி.

திருநின்ற செம்மைப் பொருளே செம்பொரு ளெனச் சிறப்பித்துச் சொல்லப்படுமெனவே மற்றையோர் கொண்ட செம்மையும் அவரவர் தஞ் செவ்விக்கும் அறிவாற்றலுக்குந் தக வேண் டப்பட்டு முறையானே திருநின்ற செம்மை கொள்ளுதற்குத் துணையாமாகலின் அவையும் பொதுவிற் செம்மையென அவரவர் பொருட் டுத் திருநின்ற செம்மை கொண்ட சீரியோராலே தழுவப்படுத்தலும் பெறப்படும்.

இங்ஙனஞ் செம்மை யென்னும் பெரும் பெயர்ச்சொற்குத் திருநின்ற என அடை கொடுத்து நுனித்துணரக்கிளந்து கூறிய நாவலர் நாவலரென்பது நினைக்கப்படும்.

திருநின்ற செம்மை யென்பது ஒன்றே யொன்றுயினும் அத் தனிமுதற் பெரும் பொரு ளைப் பல்லாயிரம் யாண்டுகட்கு முந்துற்ற தமிழந் தணர் வள்ளியெனவும் கந்தழி யெனவும் இரு பொருளாக வைத்து வழங்கினர். வடமொழியந் தணர் வள்ளியென்னுஞ் சொற்கு நேராகப் பிர மம் எனவும், பின்பு கந்தழியென்னுஞ் சொற்கு நேராகச் சக்தி யெனவும் வழங்கினர். நம்பியா ரூரர் அவ்விரு பொருண்மையும் ஒருங்குடன் றேன்றத் திருநின்றசெம்மை யென்பதனைச்

சாறறினர். சக்தி, ஆற்றல். வடமொழிமுனிவர் அவ்வொரு தனியுண்மைப் பொருளே ஆண்பாலெனவும் பெண்பாலெனவுங் கொண்டு அவ்விரு வேறு குறியீடு செய்து வழங்கல் வேண்டினர். செந்தமிழ்க் குறியீடுகளிரண்டும் உயர்திணைச் சொற்களாயினும் ஆண்பால் பிரிந்திசையாவென்பர். வடமொழி முனிவருள் வெவ்வேறு சாரார் பிரமம் என்பது பற்றிய தத்தந் துணிபு வேறுபாடு தோன்ற அதனைச் சிவம் என்பது முதலிய வெவ்வேறு குறியீடுகளானுந் தத்தமக்கு வேண்டியவாறு வழங்கிக் கொண்டனர்.

•

வள்ளி பிரமம், என்னும் தமிழ்ச் சொல் வடசொல் இரண்டும் ஒரே பொருள்படுந் தனித்தனி முதனிலையினின்று தோன்றிய பெயர்ச்சொற்கள்.

பிரமம் என்னும் வடசொற்குப் பெருக்க முடையதென்பது பொருள். பெருக்கமெனினும் வளமெனினும் வண்மையெனினும் ஒன்று. வள்ளியென்னுந் தமிழ்ச் சொற்கும் அதுவே பொருள். வண்மையுடையது வள்ளியெனவே மையென்னும் பெயர்ப் பொருண்மை யுறுதிநிலையுடைச்சொற் பெறுத வள்ளென்னும் உரிச்சொல் முதனிலை யுறுப்பாய் நின்றது. இகர விறுதிநிலையுறுப்பு வெண்மையுடையது வெள்ளியென நின்றுற் போல வண்மையுடையது வள்ளியென உடைப் பொருளுண்மைக் குறிப்பின்மேல் வந்தது. எனவே, வள்ளி யென்னும் பெரும் பெயர்ச்சொல் ஈருறுப்புக்களான் முடிந்த ஒரு விட்டிசைத் தனிமொழி யெனக் கொள்ளப்படும்.

எண்ணில்லாத பல்வேறுலகெங்கணும் எண்ணில்லாத காலமெல்லாம் இடையறாது மேன்மேல் உண்டாகி வரும் உயிர்களாகப் பெருகுதல் பற்றி அச் செம் பொருளாகிய திருநின்ற செம்மையை வள்ளியெனத் தமிழரும் பிரமமென வடமொழியாளரும் சொற் குறியீடு செய்து கொண்டு வழங்கினரென்பது தோன்றுகின்றது.

இவ்விரு மொழிச் சொல்லும் ஒரு பொருள் மேல் ஒத்த கருத்துப்பற்றி எழுந்துள்ளனவாய்ப் பல்லாயிரம் யாண்டுகட்கு முன்னர் ஒருகாலத்தே ஒருங்கு வழங்கினவாயினும் இவற்றுள் எது எதன் மொழிபெயர்ப் பென்பதனைத் துணிதற்குச் சான்று கிடைத்தல் அரிதாகும்.

ஆயினும், வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே தமிழ்ச் சான்றோர் உயிரையு மெய்யையும் பிரித்துணரும் உண்மையுணர்வும் அவ்வுணர்விற்கு அடிப்படையாய்ச் சிறந்த பல்வேறு வாழ்க்கை நிலையாமைக் குறிப்புகளும் உடையராய் வீற்றிருந்தாரென்னும் செய்திக்கு அவர்தந் தமிழெழுத்துக்கட்கு ஒப்புமைபற்றி உயிரெழுத்தெனவும் மெய்யெழுத்தெனவும் இட்டு வழங்கிய குறியீடுகளும் அக்குறியீடுகட்கேற்ப அவற்றுக்கு அவர்கூறிய இயல்களும் அவர் ஆராய்ந்த செய்யுட் பொருளாராய்ச்சித் திறத்தில் எண்ணித் தொகுத்த புறத்திணையேழனுள்ளும் நிலையாமைக் குறிப்பாகிய காஞ்சித்திணையென்பதொன்றுதலும் மறுக்கவும் மறைக்கவுமுடியாது நிலைபெற்ற பண்டைச் சான்றுகளாகும். இவ்வியல்பு நோக்குவார்க்கு வடமொழி வேதங் கூறும் பிரமம் என்னுஞ் சொல் வள்ளி என்னுஞ் செந்தமிழ்ச் சொல்லின் மொழிபெயர்ப்பாயிருக்கலாமோ என்னும் ஐயமெழுதல் கூடும்.

பிரமப் பொருளது தன்மை யுடையவரென்பது பற்றிப் பிராமணரென வடசொல் உண்டாயினுற் போல வள்ளியதுதன்மை யுடையவரென்பது பற்றி வள்ளுவரெனத் தமிழருள் ஒருசார் மரபினர்க்குப் பெயர் உண்டாயிருந்ததோ வென்பதூஉம் அம்மரபினருட் சிறந்தாரென்பதுபற்றி முப்பாலாசிரியர்க்குத் திருவள்ளுவ ரென்னும் பெயர் உண்டாயிற்றோ வென்பதூஉம் ஆராய்தற்குரியன.

வள்ளி யென்னும் இப் பழந்தமிழ்ச் சொற் பொருள்வழக்குத் தமிழ்ப் பனுவலெல்லாவற்றினு மிகப்பழைய தொல்காப்பியனென்னு மொழி நூலொன்றிலன்றி எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு முதலாய எந் நூலுள்ளுங் காணப்படல் இல்லை. அதனால் இவ் வள்ளி யென்பது இற்றைக்கு ஈராயிரம் யாண்டுகட்கு முற்றொட்டே வழக்கு வீழ்ந்த சொல்லாகக் கொள்ளப்பட்டது போலும். வள்ளிக்கொடியும் வள்ளிக்கூத்தும் மடவரல் வள்ளியுமென இம் மூன்று பொருள் மேலுமே வள்ளியென்னுஞ் சொல் வழங்கப்பட்டுவருகிறது. அதனாலே தொல்காப்பியனுட் காணப்படும் செம்பொருள் வள்ளியை வரலாற்றுமுறையின் விளங்கிக் கொள்ளுதல் இயலாமையின் உரையாளர்களாகிய இளம்பூரணரும் நச்சினார்க்கினியருந் தத்தமக்குத் தோன்றியவாறு பொருள் கொள்கின்றனர். ஆயினும் வள்ளியோடு உடன்வைத் தெண்ணித் தொகை குறிக்கப்பட்டவற்றும் கந்தழி யென்பதன் உண்மைப்பொருளே நச்சினார்க்கினியர் தமது நுண்ணுணர்வினால் ஒருவாறு குறித் துணர்ந்து விளக்கியுரைத்தல் போற்றத்தக்கது. அவர் கந்தழியாவது ''ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்'' என்பது நச்சினார்க்கினியரது விளக்கம். அவர், இவ்வாறே திருமுருகாற்றுப்படை

யுரைமுடிவிலும் விளக்கந் தருகின்றார். ஆயினும் அவர் அம் முடிவுரையில் எடுத்துக்காட்டுகின்ற செய்யுளிற் கந்தழி என்னுஞ் சொல்லாட்சி வாராமை நினைத்தற்குரியது. இவ்வாறு கந்தழியை உலகியல் கடந்த உண்மைப் பொருளாகக் கண்ட நச்சினார்க்கினியர் ஏனை வள்ளி கொடிநிலையென்னும் இரண்டற்கும் மரபுவழி வராத பொருள் படைத்துச்சொல்லி இடர்ப்படுகின்றார். ஆயினும் இளம்பூரணரையும் புறப்பொருள்வெண்பாமாலை யுடையாரையும் போலக் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் முப்பொருளையும் வழக்கியற் பொருளாகக் கருதி உரை கூறுமை வியந்து பாராட்டற் பாலதேயாம்.

கொடிநிலையாவது பாட்டுடைத் தலைவனுடைய கிழிக்கொடி யடையாளத்தை முதற் கடவுளர் மூவருடைய கொடியோடுவமித்துப் புகழ்தலென்றும், கந்தழியாவது திருமால் அவுணர் மதிலைப் போர்செய்தழித்த வெற்றிச்சிறப்பை மிகுத்துக் கூறுதலென்றும், வள்ளியாவது பெண்டிர் பலர் குழுமி வள்ளியின் கோலம்பூண்டு வேன்முருகற் காடும் வெறிக்கூத் தென்றும், இளம்பூரணரும் ஐயஞரிதனுருங் கருதுகின்றனர். நச்சினார்க்கினியர் கொடிநிலையாவது வெஞ்சுடர் மண்டில மாகிய கடவுளென்றும் வள்ளியாவது தண்கதிர் மண்டிலமாகிய கடவுளென்றுங் கொண்டார்.

இப்பொழுது வள்ளி, கந்தழி, கொடிநிலை யென்னும் மும்முதற் சொற்பொருள் வழக்கில்லை யாயினும், அவை இன்னவை யென்பது தோன்றத் தொல்காப்பியனாரே தொகுத்துச் சுட்டியுள்ளார். அன்றியும்பிராமணருந் தமிழரும்பண்டுதொட்டுப் பொதுவாகிய கொள்கையுடன்பாடுடையராய் வருதலின் அவருடைய பழைய வட நூல்வழக்குச் சொற்களோடு பொருளொப்புமை யுடைமையும் அவற்றிற் பொருளைத் துணிந்து கொள்ளுதற்குத் துணையாகும். அத்துணை கொண்டே வள்ளியென்பது பொருள் காணப்பட்டது.

> **"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற**
> **வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்**
> **கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"**

எனத் தொல்காப்பியனுட் பாடாண்டிணைத் துறைவகை யொன்று கூறிய நூற்பாவினுள் அம் மூன்று பொருளும் வடுநீங்கு சிறப்புடையன வெனவும், முதன்மையுடைய முதற் பொருளெனவும், அவை மூன்றல்ல தில்லையாய் மெய்யுணர் வாளர் யாவராதனும் இணைத்தென வறியப்பட்டன வெனவும், கடவுளென்பது வடுநீங்கு சிறப்புடைய முதற்பொருள் மூன்றற்கும் வேறுய பொருளெனவும் பெறப்படுகின்றன. எனவே, அம்மூன்று பொருளுங் கடவுட்கு மேற்பட்ட பொருளாதல் விளங்கும். அம்மூன்று பொருட்டுங் கொடுத்த அடைமொழிப் பொருள் கடவுட்குக் கொடுக்கப்படாமை கருதற்பாலது. அங்ஙனமாகவும் வள்ளியைத் தண்கதிர் மண்டில மெனவுங் கொடிநிலையை வெண்கதிர் மண்டில மெனவும் நச்சினார்க்கினியர் கூறுதற் கியைபொன்றுமில்லை.

இம் முழுமுதற் பொருட்குங் கூறப்படாத வடுவாவன தோற்றமும் ஒடுக்கமுமாம். இவை மூன்றும் வடுநீங்குசிறப்புடையனவெனின், ஏனை நுண்பொருளும் பருப்பொருளு மெல்லாம் அச் சிறப்பில்லாதவை யென்பதாயிற்று. அவையெல்லாம் கடவுளும் உயிரும் உலகமுமென மூன்றுயடங்கும்.

இவற்றுட் கடவுளும் உயிர் பலவும் வள்ளி யென்னு முதற் பொருளிலே தோன்றி நின்றொடுங்கும். உலகம் கொடிநிலையென்னு முதற் பொருளிலே தோன்றி நின்றொடுங்கும். எனவே, கொடிநிலை முதலாய முப்பொருளும் வடுநீங்கு சிறப்புடைய முதற் பொருளாதலும் ஏனையெல்லாம் அத்துணைச் சிறப்பில்லாத பொருளாதலும் பெறப்படும்.

கொடிநிலை யென்பது திரிபுடையதாய்க் கேடின்றி நிற்றலுடைய தெனப் பொருள் படும். படவே உலகமெல்லாமாகித் திரிபடைந்து பெருகிப் பரந்து மீண்டு நிற்றலுடைய முதற்பொருள் கொடிநிலை யெனப்படு மென்பதாயிற்று. இது உலகிற்கு வித்தாகலின் முதற் பொருளாம். உலகந் தோன்றி நின்றொடுங்கு மிடமாகிய கொடிநிலையை வடமொழியாளர் மாயையெனவும் பிரகிருதியெனவும் வழங்கிடுவர். கொடுமை, திரிபு. கொடுமைக்கு மறுதலை செம்மை. செம்மை, திரிபின்மை கொடுமை யுடையது. கொடியெனப் பெயர் பெற்றது. இது திரிபுடையதெனவே ஏனைக் கந்தழியும் வள்ளியுந் திரிபின்றி நிற்குஞ் செம்பொருளென்பது தானே பெறப்படும்.

கந்தழி யென்பது வள்ளியின் ஆற்றலாதலிற் கொடிநிலைக்கும் வள்ளிக்கும் இடைநிற்பதென வள்ளிதானே வேறுவைத்தெண்ணப்பட்டுள்ளது. அது வள்ளியின் வேறன்றி வள்ளி தானேயாய் நிற்றலிற் கந்தழியும் வள்ளியோடொப்ப வடுநீங்கு சிறப்புடைய முதற் பொருளெனப்பட்டது.

திரிபில்லாத செம்பொருளாகிய வள்ளியுங் கந்தழியும் அறிவியற் பொருளெனப்படும். கொடி



வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில், கோபுரத்தோடு கூடிய இந்தக் கோயிலில் தான், 1847-ம் ஆண்டு மார்கழி மாதம் 18-ம் திகதி சைவம் என்னும் செஞ்சாலி வளரும் பொருட்டு, பிரசங்கம் என்னும் மழையை முதன் முதலில் பொழிந்தார்.

— உபயம்: கு. சதாசிவசர்மா.

நிலை வெறும் பொருள். கடவுளும் உயிர்களும் வள்ளியின் வேறல்லவாயினும் உள்ளச் சார்பு களின் அளவாயிருக்கு மொற்றுமை மயக்கத் தால் வேறு வேருயும் அம்மயக்கமற்ற பொழுது வள்ளியினின்றும் வேறன்றி அதுவேயாய் ஒன்று யுந் தோன்றுதல் பற்றிக் கடவுளும் உயிர்களுந் தோற்ற வொடுக்க முடையன வெனப்படும். அத் தோற்ற வொடுக்கங்கள் உண்மையல்ல. அவ் விருசார்ப் பொருளும் அறவியற் பொருள். கந் தழியுங் கடவுளும் உயிர்களும் வள்ளியின் பாற் படும். வள்ளிதானே கந்தழியாகியுங் கடவுளா கியும் உயிர்கள் பலவுமாகியும் அமைந்து தோன் றும்.

வடமொழிச் சிவாகமங்களுட் சிறந்த சருவ ஞானேத்தரம் என்னுஞ் சிவாகமமும் பழந்தமிழ்ப் பனுவல் போலவே வள்ளியைச் சிவமெனவுங் கடவுளைப் பதியெனவும் வேறு வைத்தெண்ணி விளக்கிக் கூறும். வடமொழிச் சிவாகமங்கள் கொடிநிலையைப் பாசமெனவும் மலமெனவுங் கூறும். பிற்றை ஞான்றைத் தமிழறிவர் கொடி நிலையை இருளெனவுங் கண்டனர். ''இருள்சேரிரு வினை''யென முப்பால் கூறுமாகலின் வினையென் பது கொடிநிலையிலடங்கும்.

கடவுள் வாழ்த்தென்பது கைக்கிளைத் திணைப் புறமாகிய பாடாண்டிணைத் துறையெனக் கூற லுற்ற முனிவர் தொல்காப்பியனுர். அக்கடவு ளின் பாற்பட்டு நின்றல்லது நன்குணரவாராத வடுநீங்கு சிறப்பின் முதற் பொருள்கட்குமேல் எடுத்தோதக் கிடந்த பொருளொன்று மில்லை யென்பது தோன்றத் தமிழ் நூலோருடைய பொருளாராய்ச்சி முற்றுப் பேறுடையதாதலைக் காட்டுதற் பொருட்டு அம் முடி பொருள் மூன்றுங் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமென்றூர். கண்ணிய வரும், கருதுதற்கு வரும். கருதப்படு வனவாய் வருமெனப் பொருள் கொள்ளுதலும் அமையும்.

இதுகாறுங் கூறிப் போந்தவாற்றுல் ஆரியர் வருகைக்கு முந்துறச் செந்தமிழ் மக்கள் படைப் புக் காலமாகிய முதலூழித் தொடக்கத்தி லிருந்தே வீடுபேறு நல்கும் விழுமிய மெய்யு ணர்வு வாய்த்து வருதல் காணப்படும்.

செந்தமிழ்ச் சான்றோர் ஆராய்ந்த அகப் பொருள் புறப்பொருள்களில் அடங்காத நூற் பொருளொன்று மில்லையாகவும் அவர் உலகியல் பற்றிய அறம் பொருளின்பங்களையே யாராய்ந் தார் எனக் கூறும் கூற்றுப் பொருந்தாது. தொல் காப்பியனென்னும் பழந்தமிழ்ப் பனுவல் அப் பொருளெல்லாவற்றையுந் தொகுத்துச் சுட்டு தற் பொருட் டெழுந்ததன்றி விரித்து விளக்கு தற் கெழுந்ததன்று. அவற்றை யெல்லாம் விரித்து விளக்கிய பாட்டும் உரையும் நூலுமெல்லாம் பண்டே யிழக்கப்பட்டன. அவற்றைத் தமிழர் இழத்தற்குக் கடல்கோளேயன்றிப் பிழைப்பின் பொருட்டுப் பெயர்ந்த பிறமொழியாளரும் ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப் பொருள் மெய்ப்பொருள் காணு மறிவு'' தூர்ந்த தமிழர்தம் மடமையும் மடிமையும் வாயில்க ளாகும். இந்நிலையிலே தொல்காப்பியனுந் திரு வள்ளுவர் செய்தருளிய முப்பாலுந் தமிழர்க்குக் கிடைத்தது தமது பெருந்தவத்தின் பேறெனல் வேண்டும்.

அப்பனுவல்களின் பொருள் முடிபாகிய வள் ளியுங் கந்தழியுமாய் ஒன்றியிணைந்த திருநின்ற செம்மையே செம்மையாதக் கொண்ட கொள் கைக்கும் அக் கொள்கையை உணர்ந் துணர்த் தற்கு இன்றியமையாத தீந்தமிழ்ச் செம்மைக் கும் அவ்வப்பொழுது ஊறுகள் உண்டாகுந் தோறும் அத்தகு தொல் வைப்புக்களைப் பாது காத்துப் போற்றித் தந் தமர்க்கு நல்கிய தண் ணளி சான்ற திருவருட் செல்வச் செம்மல்கள் அவ்வப் பொழுது தோன்றி வாழ்ந்து திருநின்ற செம்மைநெறி காவலராய்த் திகழ்ந்தனர்.

திருநின்ற செம்மையுந் தீந்தமிழ்ச் செம் மையுமே உண்மையும் உயர்வற வுயர்ந்தனவும் ஒப்பற்ற தூய்மையுமாம். இவை புலாலுண் ணுமை, கொல்லாமை, தவம், துறவு, மெய் யுணர்வு, அவாவின்மை என்னும் செவ்விய சீரிய அருள்வழியியக்கம் வாயிலாக அறிவா ளரை ஆராத அமைதியின்ப வெள்ளத்திலே திளைப்பிக்கு மென்பது ஆன்றோர் பலருந் துய்த் துக் கண்டு சொற்ற உண்மை. இத்துணைச் சிறந்த அருள்வழியியக்கத்திற்கு அமைந்த நன்மக்களைக் கண்டு மகிழ்வெய்தித் தாமும் அவ்வியக்க முடை யராய் இனிதுய்தியெய்தலா மென்னும் அறிவு தோன்றுதற்குச் செவ்வி தலைப்படாத அமணர் முதலிய பல் குழுவினராலும் அருள்வழியியக்க ருள் உண்டாகிய மக்கட் பதர்களாலும் அவ் வியக்கத்திற்குரிய மக்கள் எளிதில் ஏமாற்றத் துள் அகப்பட்டு அருள்வழியல்லா வியக்கம் புகவே அருள்வழியியக்கம் நலிவெய்தி நிரிந்து மெலித லுடையதாயிற்று. அந்நேரங்களிலே பொருவறு கடவுளருள் வழிப்பட்ட பொய்ய டிமை யில்லாப்புலவர் சிலர் (நாயன்மாரும் ஆழ் வாரும்) வெளிப்பட்டுத் தம் இன்னிசைப் பாட் டுக்களாலும் செயற்கருஞ் செயல்களாலும்

குறும்பு கடிந்து செந்நெறியையுஞ் செம் மொழி யையும் புரந்த பொற்புடை வரலாற்றினை யுலக முணரும்.

அங்ஙனம் அன்று அரிதிற் றப்பிய அவ்விரு செம்மைக்கும் பின்பு சென்ற சில நூற்றாண்டு களிலே முற்கூற்றிலே மிண்டிய முகமதியமும் பிற் கூற்றிலே மண்டிய கிரைத்தமும் மாறுபட்டு நின் றாறு செய்யலுற்றன. அருள் வழியியக்கமும் அருமருந்தன்னதமிழும் இழந்து தமிழர் தாழ் வெய்துங் காலம் பெயர்த்தும் அணுகி நெருக்கிக் கொண்டிருந்தது. அதனாலே பழம்பெரும் பண் பாடு சிறந்த தமிழினம் ஏழைகளும் எளியவர்களு மாகிய உழைப்பாளிகளை மேன்மேலும் இழந்து கொண்டிருந்தது. முகமதிய மதத்தினது மீதூர்தலைத் தென்னகத்தில் ஆந் திரரு மராட்டியரும் ஓரளவிலே தடுத்து நிறுத்தினராயினும் ஆங்கிலவராட்சியே அதற்கு முற்றுப்புள்ளியிட்டதெனல் வேண்டும். அது தற் செயலாக நேர்ந்த வாய்ப்பேயாயினும் ஐரோப் பியராட்சியும் ஆங்கிலவராட்சியுமே அவர்க ளுடைய கிரைத்தமதம் இந்தியாவிலும் ஈழத்தி லும் புகுந்து பெருகி வேரூன்றி நின்று நெருக்கு தற்கு வலிய துணையாயிருந்தன. ஆயினும் அதன் வரவையும் பெருக்கத்தையுந் தாக்குதலை யுந் தமிழரினந் தடுத்து நிறுத்தியிருக்கலாம். அது முடியாமற் போயிற்று.

இவ்வாறு பழம்பண்பாடு மிக்க தமிழின மென்னும் பெரிய ஆலமரம் சிதலை தின்று பொந்து விழும் பொழுது அதன் கிளையினின்றும் ஒரு விழுது ஈழத் தமிழகத்தில் யாழ்ப்பாணத்து நல்லூரில் இறங்கி நின்று பல் புள்ளும் பயன் றுய்ப்பப் பழுமரந் தாங்கிற்று. அவ்விழுதாயினர் நல்லை ஆறுமுகநாவலர்.

இந்தியாவில் இந்துக்களினமென்னும் பரந்து யர்ந்து தொல் பெரும் பூம்பொழில் புக்கெரித்த புறமத மெனும் புகையிலா நெருப்பு மண்டி அப் பொழிலில் வெயிலிற்காய்ந்த வெம்பிய கூறுகளைக் கொளுத்தியதாயினும் ஏனைப் பெருங் கூறுகளை எரிக்கலாற்றாது நுதுப்பாரின்றியுந் தானே நுதுந்து போயிற்று. அவ்வாறின்றி ஈழத் தமிழகத்திலே சிறிதாயிருந்த அப்பூம்பொழிலிற் பற்றிச் சூழ்ந்து படர்தலுற்ற அந்நெருப்பு நுதுப்பாரின்றி நொக்கிக்கொண்டு வந்தது. பூம்பொழின் முழு தும் பொன்றும் போலு மென்றிருந்த பொல் லாத நேரத்திலே எழுந்து கறுத்திடித்து மின்னிப் பெருஞ்சொன்மாரி பெய்து பெய்து நெருப்பினை யவித்து நெடும் பொழில் செழுமையுற்று நிலவச் செய்து கைமாறு வேண்டாக் கடப்பாடுடைய வான் முகிலாயினர் மேன்முது நாவலர்.

உயர் குடிப்பிறப்பும் ஒழுக்கச் சிறப்பும் கல் விப் புலமையும் நற்பண்புந் திருவருட் பொலிவும் அஞ்சா வாண்மையும் வாய்மையும் நேர்மையுந் தூய்மையு மானமுஞ் சால்பும் ஈகையும் புகழு மென இவ்வுயரிய நலம்பலவுங் கருவிலே திருவு டையராய்த் தலைமைசான்ற நல்லை நாவலரை நண்ணுதலான் வீறு பெற்று மிளிர்ந்தன வெனல் வேண்டும்.

பிறமொழியாளர் தமது மதத்தினைத் தமிழர் பாற் பரப்பித் தமிழரை மாற்றுதற்குக் கை யாண்ட முறைகளையுந் திட்டங்களையுங் கண்டு விழிப்புற்று அவ்வாறே நாவலர்தாமுந் திட்ட மிட்டுச் செய்வன வெல்லாஞ் செய்து தமிழரை யுய்வித்தல் வேண்டுமென மேற்கொண்ட ஊக் கமும் உழைப்புந் தமிழ் மக்களெல்லாந் தம்முள் வேற்றுமையின்றிச் செந்தமிழ்க் கல்வியுந் திரு நின்ற செந்நெறிக் கொள்கையுமுடையவரா யொ ழுகியுய்யச் செய்தல் வேண்டுமென்னு மவரது உள்ளத் தூய்மையும் இரக்கமுடைமையும் அதனாலே உலகிலெய்துந் தந்நலம் யாவற்றையுந் துறந்த பெருந்தகைமையும் அவர் திருவருளாணை யால் ஈழத்துத் தமிழ்ப் பண்பாடு காக்க வந்த தெய்வப்பிறப்பாமெனற்குத் தக்க சான்றுகளாம்.

நல்லை நாவலரது நல்வரவுக்கு முன்னெல் லாம் சைவசமய மக்களுள்ளும் ஒருசார் மரபினரே யன்றிச் சைவ சமயவொழுக்கங்களை அறிந்தொ ழுகுதற்கு அவாவிய ஏனைமக்கள் அவற்றை விளங் கிக் கொள்ள முடியாத பெருங் குறையை நீக்கு தல் வேண்டுமெனவும் அதனை நீக்குமுறையையுஞ் சைவ சமயப் பெரியாரென்போர் ஒருவரும் உணர்ந்திலர். அக்குறையை நீக்குதல் சைவசம யத்தைப் பாதுகாத்து வளர்க்கு முறைகளுட் சிறந்தது. சிறந்த சைவசமய வொழுக்கங்களையும் வரலாறுகளையும் மெய்ப் பொருண் முடிபுக்களின் விளக்கங்களையும் சிரூர் சிறுமியர் முதற் சைவ சமயிகள் யாவரும் நன்கு விளங்கிப் பற்றுச் செய் தற்கேற்றவாறு பல வகை உரைநடையேட்டுப் பதிப்புக்கள் வெளியிட்டுப் பரப்பிய முதன்மை யும் பெருமையுந் தமக்கேயுரியனவாக்கிக் கொண்ட நல்லிசையுடையவர் நாவலர்.

தமிழகத்திலே அங்கொருவரும் இங்கொரு வருமாகச் சிறுபான்மையராயிருந்த செந்தமிழ்ப் புலவர் நல்லை நாவலராலே நிகண்டு, சூடாமணி, திருக்குறள், நன்னூல் விருத்தியுரை முதலாகப்

புலமைக்குச் சிறந்த கருவிநூல் பல கற்று வல்லு நராய்ப் பெரும்பான்மையராயினர்.

அந்நாளையிலே ஈழத்து நல்லூர் நாவலரை நன்கு மதித்து வணங்கி வழுத்தாத செந்தமிழ றிஞர் இந்தியாவிலும் ஈழத்திலும் இலர். அவ ராற் பாராட்டப்பெறுதலைத் தம் புலமைக்குச் சான்றுகச்கொண்டு மகிழ்வெய்திய புலவர் பலர்.

நாவலருடைய மாணவர்க்கு மாணவரெனக் கூறிக்கொள்ளுதலே மிக்க பெருமை நல்குமா யின் நாவலர்க்கு மாணவரெனக் கூறிக்கொள் ளுதல் எத்துணைப் பெருமை நல்கு மென்பது சொல்லல் வேண்டா.

அறந் திறம்பா தொழுகி அதனைப் பிறர்க்கு விளக்கிக் கூறுதலிலே திருவள்ளுவர்க்குப் பின்பும், உண்மையெனக் கண்ட தங்கொள்கையை நிலை பெறுத்திப் பிறருடைய மறுதலைக் கொள்கைகளை மறுத்துரைத்தலிலே நக்கீரனுர்க்குப் பின்பும், சைவசமய நூற்பொருள் விளக்கத்திலே சிவ ஞானயோகிகளுக்குப் பின்பும், சைவசமய நூல் வெளியீட்டிலே நம்பியாண்டார் நம்பிகளுக்குப் பின்பும், நம்பனடியினை நயக்குமன்பிலே நாயன் மார்கட்குப் பின்பும், மன்னரையும் வணங்கா மானமுடைமையிலே மருணீக்கியார்க்குப்பின்பும், தமிழர் வரலாற்றிற் குறிப்பிடத்தக்கார் நல்லை நாவலராவர்.

பிறரது கல்விப் புலமை கண்டு களிப்புறுதலன்றி அழுக்காறுகொள்ளுதலறியாது தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராத் திகழ்ந்த நாவலர் தந் நாட்டுக்கும் இனத்துக்கும் விளக்காயினர்.

''மெய்ம்மையா முழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையைப் போக்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மமயும் நோக்கிக் கொண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையு ளிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே''

எனச் செப்பியருளிய திருநாவுக்கரசர் வழிப் போந்து திருநின்ற செம்மையே செம்மை யாக் கொண்டு சிவகதி விளைவு செய்து அவ்விளை வைத் தாமும் உண்டு தம் வழிவழிமரபும் உண்ண வைத்த செம்புல வேளாண் செல்வராகிய நல்லை நாவலரடிகளைத் தமிழ்ச் சைவவுலகம் பிறப்பிறப் பில்லாப் பெருமானடிகளாகவே கொண்டு வைய முள்ள வரையும் அவர்க்கு வழிபாடாற்றுங் கடப் பாடுடையது.

'திருநின்றசெம்மையே செம்மை''
நல்லை நாவலர் நல்லிசை வாழ்க
வள்ளி வாழ்க
கந்தழி வாழ்க
கடவுள் வாழ்க

திருச்சிற்றம்பலம்

ஓம்.

தமிழர் தவப்பயன்

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி *அவர்கள்*

1. தமிழர் புரிந்ததவப் பயனெனவே — செழுந்
தமிழில் விரிந்தசுவைத் திறனெனவே
அமிழ்த மியைந்தசிவக் கவினெனவே — ஒளி
அமைய மலர்ந்ததிருப் புலவரென்போம் — (தமிழர்)

2. நல்லிவளர் வேளினரு ளொன்றுதிரண்டே — பண்டை
ஞானநிலை சோர்வடைதல் சீர்பெறநன்றே
நல்லிநக ராறுமுக நாவலரென்றே — பெயர்
நல்கிவரு கல்விமலி ஞானியரென்போம் — (தமிழர்)

3. பாட்டினிற் கிடந்ததமிழ் பாசிபடர்ந்தே — மக்கள்
பார்த்திட முடிந்திடாத பான்மை தெரிந்தே
ஏட்டினிற் கிடந்தவற்றை யெடுத்தெடுத்தே — தூய்மை
எய்தவெளி எய்தவைத்த ஏந்தலென்போம் — (தமிழர்)

4. கொச்சைமொழி யாலுரை குலவுதல்கண்டே — உளங்
கொதித்துச் சிறந்தவுரை கூறுதல்கொண்டே
பச்சைமொழிப் பாலரொடு பண்டிதர்மென்றே — பயன்
பருகிட நல்லுரை படைத்தவரென்போம் — (தமிழர்)

5. அரசர் மதிக்கவளர் அரசரென்போம் — உயர்
அணிகொள் கவிஞர்புகழ் தலைவரென்போம்
விரவு பரசமய கோளரியென்போம் — தமிழ்
வீர முழக்கஞ்செய்த விளக்கமென்போம் — (தமிழர்)

6. நாவல ரென்போம் சைவக் காவலரென்போம் — நெறி
நல்லவ ரென்போம் நேர்மை வல்லவரென்போம்
பூவி லறம்வளர்த்த புண்ணியரென்போம் — மிக்க
புனித ரென்போம் தெய்வ மனிதரென்போம் — (தமிழர்)

திருமுருக கிருபானந்தவாரியார்



இறைவன் என்ற சொல் 'இறு' என்ற பகுதியடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து நிற்கின்றான். இனி, எல்லாம் அவனிடத்திலே இருக்க அவன் அவைகட்கு உறைவிடமாக இருக்கின்றான். இது இறைவனுடைய விசுவரூபம்.

எல்லாப் பொருள்களிலும் தங்க வேண்டுமானால் சிறிய — மிகச் சிறிய பொருளாக இருக்கின்றான். மேரு கிரி முதலிய பொருள்கள்யாவும் அவனிடத்திலே தங்கும்படி அப்பெருமான் மிகப் பெரிய பொருளாக விளங்குகின்றான். இதனை உபநிடதம் ''அணோரணியாந் மஹதோ மஹியா நாத்மா'' என்று கூறுகின்றது.

அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும் விளங்குபவன் இறைவன். ஒரு பழங்கதை—''பழம் கதை''

திருக்கயிலாய மலையில் உமாதேவியாருடன் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். விநாயகப் பெருமானும், முருகப் பெருமானும் தாய், தந்தையரை வணங்கி வழிபடும் பொருட்டுச் சென்றார்கள்.

தினந்தோறும் பழங்காலத்தில் மைந்தர்கள் தந்தை தாயரை வழிபடுகின்ற வழக்கம் இருந்தது.

''வைகறை யாமம் துயில் ஒழிந்து தான்
செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து
வாய்வதின்
தந்தையுந் தாயும் தொழுது எழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை''

என்று ஆசாரக்கோவை கூறுகின்றது.

ஆனை முகனும் ஆறுமுகனும் அம்மையப்பரை வலம் வந்து வணங்கினார்கள். சிவ மூர்த்தியின் திருக்கரத்தில் ஒரு தெய்வ மாதுளங்கனியிருந்தது. அதனை இருவரும் கேட்டார்கள்.

அரனார் ''அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வருபவருக்கு இக் கனி தரப்படும்'' என்று அருளிச் செய்தார்.

முருகப் பெருமான் மயிலின் மீது ஏறி அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வந்தார்.

''ஆகமம் விளைத்தகில லோகமும்
நொடிப்பொழுதில்
ஆசையொடு சுற்று மதிவேகக்காரனும்''

''இலகுகனி கடலைபயறெடியல் பொரி
அமுது செயும்
இலகு வெகு கடவிகட தடபார மேருவுடன்

இகலி முது திகிரி கிரி நெரிய வளை கடல் கதற
எழுபுவியை ஒரு நொடியில் வலமாக
ஓடுவதும்''

திருவகுப்பு

''எல்லாம் சிவத்துக்குள் ஒடுக்கம்'' என்று கூரிய சீரிய மதியால் சிந்தித்து ஆனைமுக அண்ணல் அம்மையப்பரை வலமாக வந்து கனி பெற்றார்.

இந்தப் பழங்கதை ஒரு பெரிய தத்துவத்தை உணர்த்துகின்றது.

1. தந்தைக்கு உபதேசித்த தயாபரனுக்குச் சிவத்துக்குள் எல்லாம் ஒடுக்கம் என்பது தெரியாதா? தெரியும்.

2. எல்லா உலகங்களையும் சர்வ வல்லமையுடைய வல்லமை விநாயகரால் வலம் வர இயலாதா? இயலும்.

3. சிவபெருமான் இரு மைந்தர்களும் கனி கேட்டபோது உள்ள கனியை உடைத்துப் பகிர்ந்து தரக் கூடாதா?

4. அல்லது, ஒரு புதிய கனியை உண்டாக்கித்தரக் கூடாதா? வீதியில் விளையாடுகின்றவன் கூட ஏதேதோ பொருள்களைத் தருவிக்கின்றானே!

5. ''தம்பிக்கே தந்துவிடுங்கள். எனக்கு வேண்டாம்'' என்று விட்டுக்கொடுக்கின்ற குணம் விநாயகரிடம் இல்லையா?

6. ''அப்பா! அண்ணாவுக்கே கொடுங்கள். நான் பிறகு வாங்கிக்கொள்ளுவேன்''என்று ஒதுங்கிப் போகின்ற தியாக புத்தி வேலவன்பால் இல்லையா?

7. ஒரு சிறிய கனி காரணமாக உலகத்தை வலம் வந்தால் கூலி கட்டுமா?

8. பழம் காரணமாக திருக்கயிலாய மலையில் முருகனும் விநாயகரும் போட்டியிடலாமா?

9. பழத்தின்மீது ஞானமே வடிவாய விநாயகருக்கும், ஞானபண்டிதனுக்கும் அத்தனை ஆசையா?

என்ற வினாக்கள் அடுக்கடுக்காக எழுகின்றன.

இத்தனை வினாக்களும் தவிடுபொடியாகுமாறு விடை பகர்கின்றேன்.

இறைவனைப்பற்றி நாம் முன் என்ன சிந்தித்தோம்? ''எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கி இருக்கின்றான்'' ''அவனிடம் எல்லாம் தங்கியிருக்கின்றன'' என்ற இருவிதமாக நினைத்தோம் அல்லவா?

சிவத்துக்குள்ளே எல்லாவற்றையும் பார்த்தார் கணபதி.

எல்லாவற்றுக்குள் சிவத்தைப் பார்த்தார் முருகர்.

இந்த அரிய பெரிய உண்மையை உணர்த்துகின்றது அப் பழங்கதை.

இதனைத் தாயுமானவர் கூறுகின்றார்:

''அங்கிங்கெ னாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள்
வெளிக்குளே அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது?''

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றானே? உலக மாயை அவனைப் பற்றுதோ? என்ற வினா எழும்.

உப்பு விளைகின்ற இடம் கடல். கடல் உவர் நீரில் பிறந்து, உவர் நீரைப் பருகி, உவர்நீரில் வாழ்கின்ற மீனுக்கு உவர் ஏறுவதில்லை. மீன் உண்போர் கடல் மீனுக்கும் உப்பிட்டுத்தான் சமைத்து உண்பார்கள். அதுபோல இறைவன் யாண்டும் உறைகினும் உலக மாயை அவனைப் பற்றுதென உணர்க.

எங்கும் நிறைந்த பொருள் இறைவன் என்றால், ஏன் அது நமது கண்ணுக்குத் தெரியவில்லை என்பாரும் உளர். விறகிலே நெருப்பு இருக்கின்றது. பாலில் நெய் இருக்கின்றது. ஆனால் கண்ணுக்குத் தெரிகின்றனவா? இல்லை. விறகிலே தீயும், பாலில் நெய்யும், கண்ணுக்குத் தெரியாமையால் இல்லையென்றால் நமக்கு அறிவு இல்லை என்று உலகம் சிரிக்காதா?

விறகைக் கடைந்தால் தீ வெளிப்படும். பாலைக் கடைந்தால் நெய் வெளிப்படும். அது போல, தியானம் புரிந்தால் இறைவன் வெளிப் பட்டுக் காட்சி தருவான். சாதனைகள் செய்தால் தேவரும் மூவரும் காணமாட்டாத சிவம் தானே வந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

''விட்டேன் உலகம் விரும்பேன் இருவினை
வீணருடன்
கிட்டேன் அவருரை கேட்டுமிரேன்
மெய்கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்கம் அற்றுவிட்டேன்
தொல்லை நான் மறைக்கும்
எட்டேன் எனும்பரம் என்னிடத்தே வந்து
இங்கெய்தியதே''

என்கின்றார் பட்டினத்தடிகளார்.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியும், மற்றவர் அறியா மாணிக்க மலையும் ஆகிய இறை வன் சொரூப நிலையில் ''சிவம்'' என்றும், உலகை நோக்கிய தடத்த நிலையில் ''பதி'' யென்றும் பேர் பெறுகின்றான்.

இறைவனைப் பற்றியும், உயிர்களின் தன்மை களைப் பற்றியும் உயிரின் இயற்கைக் குற்றமாகிய ஆணவத்தைப் பற்றியும், நமது சைவ சித்தாந்த நூல்கள்தாம் தெளிவாகக் கூறுகின்றன. ஏனைய நூல்களில் ஆணவத்தின் பேர் தானும் கூறுமாறில்லை.

அத்வைதம்:— அத்வைதம் என்ற சொல்லுக் குப் பலர் பலவாறு பொருள் கண்டார்கள். திரு வருள் துணை செய்யாமையால் மற்ற மதாசிரியர் கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிக் குழப்பஞ் செய்தார்கள்.

''ஏகம் ஏவா அத்விதீயம் ப்ரமம்'' என்பது வேதவாக்கு, இதன் பொருள் ''ஒன்றே தான் பொருள், இரண்டாவதில்லை'' என்பது. இதை வைத்துக்கொண்டு சங்கரர் முதலியோர், பிரம் மத்தை யன்றி வேறு பொருள் இல்லையென்று முடிவு கட்டி விட்டார்கள்.

பிரம்மத்தைத் தவிர வேறு பொருளே இல்லை யானால் இதனை யார் யாருக்குக் கூறுவது, இந்த வார்த்தையினால், சொல்பவன் ஒருவன், கேட்ப வன் ஒருவன் இருக்க வேண்டும் அன்றோ? பிரம்மமே மயங்குகின்றதா? பிரம்மத்தைத் தவிர வேறு பொருள் இருந்தால் தானே இந்த வசனம் உண்டாகும்.

பிரம்மத்தைத் தவிரத் தனிமைப் பொருள் வேறு இல்லையென்பதே இந்த வேத வசனத்தின் உட்பொருள் என உணர்க. இங்ஙனம் அறி யாது மயங்கி மருண்டார்கள் பலர்.

ந-த்வைதம் என்ற சொற்கள் சேர்ந்து அத்வைதம் என்றாயிற்று, ந என்ற சொல்லுக்கு ''சப்த கல்பதருமம்'' என்ற நூலில் ஆறு பொருள்கள் கூறியுள்ளது, அவற்றுள் மூன்று. அன்மை, இன்மை, மறுதலை, என்பனவாம், இன்மையென்ற பொருளில் அப்பிரகாசம் எனக் கொண்டு ஒன்றேதான் என்றார் சங்கரர். மறு தலைப் பொருளில் அநீதி அதர்மம் எனக்கொண்டு இருபொருள்கள் என்றார் மத்வர். மெய் கண்டார் அப்பிராமணன், பிராம்மண தருமம் கெட்டவன் என்று அன்மைப் பொருளிற் கூறிய ருளினர். பொன்னும் பணியும் போல் உலசமும் இறைவனும் ஒன்றே என அபேதவாதங் கூறினர் சங்கரர். இதில் ஆபரணத்திற்கு வரும் குறை பாடுகள் யாவும் பொன்னுக்கும் வரும் ஆதலால் இவை பொருந்தாதென உணர்க.

இறைவனும் உலகமும் ஒளியும் இருளும் போல் வேறுவேற என்றனர் மத்வர். இது பேத வாதம். இருளும் ஒளியும் பகைப்பொருள். ஆதலால் உலகமும் இறைவனும் தொடர் பில்லாமற் போவதால் இது பொருந் தாமையறிக.

பஞ்ச ராத்திரிகள் சொல்லும் பொருளும் போல் பேதாபேதம் என்பர். சொல்லும் பொருளும் வேறு பொருளேயாதலால் இவர் கூற்றும் பொருந்து மாறில்லை.

சிவாத்துவித சைவர்களும் மரமும் கிளையும் போல என பேதாபேதமே கூறி மயங்குவர், அபேதவாதம், பேதவாதம், பேதாபேதவாதம் என்ற மூன்றுமே பொருந்தாது என்றால், உலகத் துக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு தான் எவ்வகைப்பட்டது?

மேலே கூறிய மூன்றனுள் ஒன்றையே கூறுது. மூன்று தன்மைகளும் தன்னுள் காணப் படும் அத்வைதத்தொடர்பே உலகிற்கும் இறை வனுக்கும் உள்ள தொடர்பு என்கிறார் மெய் கண்ட சிவம்.

எண்ணுப் பொருளில் அகரம் அன்மைப் பொருளிலேயே வரும்.

அ ஏகம் அநேகம் என்பது போல
அ த்வைதம்
அத்வைதம் என வந்தது.

அத்வைதம் என்பது இரண்டல்லாமை பிரிவின்மை என உணர்க. பிரிவின்மை என்றதனால் பொருள் இரண்டு தான், இரண்டாயினும் வேறு வேறாய் நில்லாது ஒன்றியே நிற்கும்.

இறைவனும் உலகமும் ஒன்றி நிற்குங் கலப்பினால் ஒன்றுகியும் பொருள் தன்மையால் வேறுகியும் உலத்துக்கு உதவும் பொருட்டு உடனுகியும் இறைவன், ஒன்றுகி, வேறுகி, உடனுகி நிற்கின்றான்.

உடலும் உயிரும் போல் ஒன்றுகியும்
கண்ணொளியும் கதிரொளியும் போல்
வேறுகியும்
கண்ணொளியும் உயிரறிவும் போல் உடனுகியும்
ஒன்றுபட்டு அருள் புரிவன்.

இந்த விரிந்த கருத்துக்களை மெய்கண்டார் சுருங்கிய சொற்களால் ''அவையே தானேயாய்'' என்று கூறியுணர்த்துகின்றார்.

அவையேயாய்:- உயிரும் உடலும்போல்
ஒன்றுகியும்
தானேயாய்:- பொருள் தன்மையால்
கண்ணொளியும் கதிரொளியும் போல்
வேறுகியும்
அவையேதானேயாய்:- கண்ணொளியும் ஆன்ம
அறிவும் போல் உடனுகியும்

நின்று இறைவன் அருள் புரிகின்றான்,

''ஈறாய் முதல் ஒன்றாயிரு பெண் ஆண்குணம்
மூன்றாய்
மாறாமறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொடு எட்டுத்திசை
தானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே''

என்று திருஞான சம்பந்தர் இதனை விளக்குகின்றார்.

எனவே உயிர்களை உய்விக்கும் பொருட்டு இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்கின்றான்.

இறைவனுடைய அருட்பெருங்கருணையை நினைந்து நினைந்து நாம் உருகி வழிபாடு செய்தல் வேண்டும், இல்லையேல் நன்றி மறந்த பாவத்துக்கு ஆளாவோம்,

இறைவனுடைய திரு ஐந்தெழுத்தை இடையறாது ஓதினால் பிறவிப் பெருங்கடலை எளிதில் கடந்து விடலாம்.

சித்தத்தில் தித்திக்கும் மந்திரம் பஞ்சாட்சரம். சித்திக்கும் முத்திக்கும் அதுவே காரணம்.

''ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம்
ஒன்று கண்டீர் உலகுக் குயிராவது
நன்று கண்டீர் நமச்சிவாயப் பழம்
தின்று கண்டேற்கிது தித்தித்த வாறே''

— திருமந்திரம்,

சிவபஞ்சாட்சரத்தை அன்புடன் ஓதும் உத்தமர்க்குத் தரித்திரம் உண்டாகாது, இம்மை மறுமை வீடு என்ற மும்மை நலங்களும் உண்டாகும்,


விச்வேச்வராய நரகார்ணவ தாரணய
கர்ணம்ருதாய சசி சேகர தாரணய
கர்ப்பூர காந்தி தவளாய ஜடாதராய
தாரித்ரய துக்க தஹனய நமச்சிவாய.

''நரகமாகிய கடலைத் தாண்டச் செய்கின்றவன் சிவன், தரித்ரமாகிய துக்கத்தைத் தகனஞ் செய்கின்றவன்'' என்று வசிட்ட முனிவர் சிவபெருமானைத் துதிசெய்கின்றார்.

ஆயிரம் எழுத்தல்ல, நூறு எழுத்தல்ல, பத்தெழுத்தல்ல. ஐந்து எழுத்துத்தானே. இதைக் கூட உச்சரிக்கக் கூடாதா? என்கிறார் இராமலிங்க அடிகளார்.

''ஆயிரமன் றேநூறு மன்றே ஈரைந்தன்றே
ஆயிரம்பேர் எந்தைஎழுத் தைந்தேகாண்—
நீயிரவும்
எல்லும் நினைந்தியென ஏத்துகினும்
ஏய்த்தாய்வீண்
செல்லுமன் என் செய்கேன் செப்பு''

நமக்கு இறைவன் தந்த வாழ்நாள் சிறிது, ஒவ்வொரு நாள்களாகக் கழிந்துகொண்டே போகின்றது. நாம் அன்றுடதேதித்தாள் கிழிக்கின்றோமே? தாளா அது? இல்லை. நம் வாழ்நாள். பொழுது விடிந்து பொழுதுபோனால் வாழ்நாளில் ஒருநாள் வீணாகிவிட்டது. ஒரு நாளைக்கு தேதித் தாளை நாம் கிழிக்கமாட்டோம். மனைவி ''தினம் காலண்டரைக் கிழித்துப் பற்பொடி மடிப்பீரே இன்று கிழிக்கவில்லையே?'' என்று கூறியழுவாள்.



நாவலரின் பேராதரவினைப் பெற்று, 1879-ம் ஆண்டு
இலங்கை சட்ட நிரூபண சபைக்குத் தமிழர்
பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட அத்துவக்
காத்து (பிற்காலத்தில் சேர்.)
பொன். இராமநாதன் துரை.

— உபயம்: கு. சதாசிவசர்மா.

ஆறு நாளில் கண்ணப்பர் முத்திபெற்றார் என்று அறிகின்றோம். நாமும் அதிதீவிரமாக இறைவனிடத்தில் அன்புசெலுத்தினால் கண்ணப்பர் பெற்ற பேற்றை நாமும் பெறலாம்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் ஆனை பூசித்த தலம் திருவானைக்காவும் எறும்பு பூசித்த தலம் திரு எறும்பூரும் காட்சி தருகின்றன. பெரிய பிராணி யானை. சிறிய பிராணி எறும்பு. எறும்பு முதல் யானை ஈறாக என்பார்கள். யானையும் இறைவனை வழிபட்டது. மனிதராகப் பிறந்த நாம் இறைவனை வழிபடவேண்டாமா?

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஆதலால் ஒவ்வொருவரும் சிவபூசை செய்தல் வேண்டும். திருமுறைகளை ஓதுதல் வேண்டும். திருவெண்ணீறணிந்து கண்டிகை புனைந்து ஆலய வழிபாடு செய்தல் வேண்டும். இறைவனிடத்தில் இடையறாத அன்பு செய்யவேண்டும். மால் என்றால் அன்பு. மால் ஆனார்க்கு அவன் எளியவன். அன்பு செய்வார் நெஞ்சில் நீங்காது நிற்பன்.

''அன்று மா னானர்க் கரிதாகி நீயுலகில்
இன்று மா னானர்க் கெளிதன்றே —
கொன்றை சேர்
பொன்னார் சடா மகுடம் புனையா பொற்
சபையின்
மன்னு சிதம்பர தேவா.''

''தான வரு மாலும்சதுர்முகனும் மற்று முள்ள
வானவருந் தேடி மயங்கவே — ஞானமுடன்
நேயம் பெறுமடியார் நெஞ்சினுள்ளே
நிற்பதென்ன
மாயம் சிதம்பர தேவா.''

என்றார் குருநமசிவாயர்.

எனவே, என்பும் உருக அன்பு செய்து எல்லோரும் பாசநீக்கம் பெற்றுச் சிவமாம் பெற்றி பெறல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால், இறைவன் எங்கும் உளன் என்பதும், முருகனும் கணபதியும் சிவனது அத்வைத நிலையைக் காட்டினார்கள் என்பதும், இறைவன் உலகமெங்கும் உறையினும் கடல் மீன் போல் உலக மாயை ஒட்டாதவன் என்பதும், தியானத்தால் அவனைக் காணலாம் என்பதும், அத்வைதம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் இது என்பதும், இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று தண்ணருள் புரிகின்றான் என்பதும், அப் பரமனை வழிபட்டு ஒவ்வொருவரும் உய்தல் வேண்டும் என்றும் சிந்தித்தோமாக.

இத்தகைய சிவநெறியை உலகுக்கு உணர்த்திய உத்தமர் சிவஞானபானு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள். அவர்களுடைய புகழ் எங்கும் ஓங்குக.



உடையவர் உபயம்

நாவலரவர்கள் ஒரு வர்த்தகசாலையைத் தமது வித்தியாசாலைக்காக வாங்க விரும்பியும் போதிய பணம் கையிலில்லாமையால் மனம் வருந்திக் கொண்டிருக்குங் காலத்தில் ஒரு நாள் பூசையிலே தமது உடையவரை நோக்கி மனமுருகி ஒரு செய்யுள் பாடினர், பாடிய அன்றே கொழும் பிலிருந்து நன்னித்தம்பி முதலியார் அனுப்பிய 400 ரூபா வந்து சேர்ந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது.

அவர் பாடிய செய்யுள் :

" மணிகொண்ட கடல்புடைகொ ளிந்நாட்டி லுன்சமய
வர்த்தன மிலாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் விளக்குவான் கருதியிம்
மைப்பொருட் பேரெ ழித்தே
கணிகொண்ட வித்தியாசாலைதா பித்திவ்வூர்க்
கயவர்செயு மிடர்கள் கண்டுங்
கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக்
கருதுவோ ரின்மை கண்டும்
அணிகொண்ட சாலைய தொழிப்பின.'. துனையிகழு
மந்நிய மதத்தர் சாலை
யாமென நினைந்தெனெஞ் சற்பகற் றுயருற
லறிந்துமொரு சிறிது மருளாத்
திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யா னுயிர்விடுத
றிண்ணநீ யறியா ததோ
சிறியேன தன்பிலர்ச் சனைகொளழ கியதிருச்
சிற்றம் பலத் தெந்தையே. "

முருகவேள்

அகப்பொருளில் அருட்பொருள்

முன்னுரை:

இந்நில வுலகின்கண் உள்ள பற்பல நாடு களிலும், எத்தனையோ பல நூற்றுக்கணக்கான மொழிகள் வழங்கிவருகின்றன. சிறு சிறு கிளை மொழிகளைத் தவிர்த்து, உலகில் இது போழ்து வழங்கி வரும் மொழிகள் ஏழத்தாழ 2796 என்று மொழிநூற் றுறை யறிஞர்கள் கணக் கெடுத்திருக்கின்றனர்.[1]

அவைகளுள்ளே, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியானது பல்லாயிரம் ஆண்டுகளாக, நூல் வழக்கு உலகவழக்கு என்றும் இரு திற வழக்குகளிலும் பயின்று, தொன்று தொட்டு இன்று காறும் நின்று நிலவி, இளமை யாற்றலோடு வளங்குன்றாது செழித்தோங்கி வழங்கப் பெற்று வரும் ஓர் அரிய இனிய ''உயர் தனிச் செம்மொழி'' (Classical Language) யாகும்.

1. "Gray's Foundation of Language tentatively places the total number of present-day spoken languages, exclusive of minor dialects at 2796....."

—Mario A. Pei,
The World's Chief Languages

தமிழில் இலக்கணம்:

இத்தகைய தமிழ்மொழிக்குத் தனிப்பெருஞ் சிறப்பாக உரிய பலவகைப் பெருமைகள் உண்டு. அவையிற்றுள், அதன் சீரிய இலக்கண அமைப் பும் ஒன்றாகும். இது பற்றியே,

''கண்ணுதற் பெருங் கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்
பசுந்தமிழ், ஏனை
மண்ணிடைச் சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப் படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ?''

— திருவிளையாடற் புராணம்

என ஆசிரியர் பரஞ்சோதி முனிவர், தமிழ் மொழியின் சிறந்த இலக்கண அமைப்புத் திறம் குறித்துப் பாராட்டி யுரைத்து மகிழ்வாராயினர்!

பொருளிலக்கணம்:

ஏனைய மொழிக ளெல்லாம் பெரும் பாலும், எழுத்து (Orthography), சொல் (Morphology), சொற்றொடர் (Syntax), செய்யுள் (Prosody) அணி

(Rhetoric) என்பன போன்றவற்றிக்கு மட்டுமே, ஓரளவு இலக்கணம் உடையனவாக, அவற்றினும் குறிக்கப்படும் பொருளுக்கும் கூட, நம் அருமைத் தமிழ் மொழியில் இலக்கணம் வகுக்கப் பெற்றிருக்கின்றது.

பொருளிலக்கணம், தமிழ் மொழிக்கே தனிச் சிறப்பாக உரியதாதல் பற்றியே, பரிபாடல் என்னும் சங்க நூலில் (9:25) ''தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழ்'' எனக் குறிப்பிட்டுக் குன்றம் பூதனார் என்னும் சங்ககாலப் புலவர் அதனைச் சிறப்பித்துப் புகழ்ந்து பாடியிருத்தல் காணலாம்.

மக்கட் பிறப்பு வாய்க்கப் பெறரோர் அனைவரும், தம் வாழ்க்கையில் இன்றியமையாது எய்தற்பாலனவாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றையும், அவற்றோடு தொடர்புடைய 'காதல்' 'வீரம்' முதலிய பற்பல செய்திகளையும் புலநெறி வழக்கம் பற்றி மிகவும் தெளிவும் விரிவும் அமைய, விளக்கிக்கூறும் நிலையில் மக்கள் வாழ்க்கையினைத் தமிழ் மொழியின்கண் உள்ள பொருளிலக்கணமானது அகப்பொருள் புறப் பொருள் என இரண்டு கூறுகளாகப் பகுத்துணர்த்துகின்றது.

அகப்பொருள்:

அவ்விரண்டனுள் அகப்பொருள் எனப்படுவது, ''ஒத்த அன்பினால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க் கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்த தெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாம்'' என்பர், உச்சிமேற் புலவர் கொள் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

இவ்வகப் பொருளினையே, பண்டைக் காலத்துத் தமிழிலக்கியங்கள் செவ்விதின் எடுத்துச் சிறப்புற விரித்துரைத்து விளக்கியுள்ளன. சங்க காலத்தைச் சார்ந்த எட்டுத்தொகை நூல்களுள், நற்றிணை-நல்ல குறுந்தொகை - ஐங்குறுநூறு-அக நானூறு, கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை என்பனவும், பத்துப்பாடல் நூல்களுள் முல்லைப் பாட்டு—நெடுநல்வாடை — குறிஞ்சிப் பாட்டு — பட்டினப்பாலை ஆகியனவும் பிறவுமெல்லாம், அகப்பொருட் செய்திகளையே அழகுற விளக்குவனவாகும்.

புலநெறி வழக்கம்:

சங்க காலத்திற்குப் பிறகு காலப் போக்கினாலும், நாட்டின் பல்வேறு சூழ்நிலை மாறுபாடுகளாலும் அகப்பொருட் பாடல்களின் அருமைபெருமைகள் குன்றித் தரங்குறைய நேர்ந்தன. அதனால் சங்க காலத் தமிழிலக்கியங்களில் உயர்வற உயர்ந்த 'புலநெறி வழக்கம்' மங்கி மாய்ந்து மறையலுறும் இழிதகவு ஏற்படுவதாயிற்று. அந்நிலையில், நம் முன்னோர் சான்றோர்களின் பழந்தமிழ் சங்க காலப் பண்பாடும், புலநெறி வழக்கமும் மங்கி மறைந்து போய் விடாமல், மீண்டும் மறுமலர்ச்சியுற்று வளர்ந்தோங்கும் வண்ணம், மாணிக்க வாசகப் பெருமான் அகப்பொருளில் அருட்பொருளையும் அழகுற இணைத்தியைத்துக் கலை நலஞ் சான்ற கடவுட் பெருங் கவிதை நூல் எனப் போற்றத் தக்க நிலையில் ஒரு நூலைப் பாடியளித்தருளினார். அதுவே செந்தமிழ்த் தெய்வீக நலம் அமைந்தோங்கித் திகழும் ''திருச்சிற்றம்பலக் கோவையார்'' என்னும் சிறந்துயர்ந்த திருநூல் ஆகும்.

திருவாசகம்:

''திருவாசகமானது அழகிய இனிய பாடல்களினால், அறியாமை பேரவா முதலிய அடிமைத் தளைகளினின்று விடுபட்டு, அன்பு அறிவு என்பனவற்றின் உரிமை பெற்று, முறை முறையே வளர்ந்து செல்லும் உயிரின் முன்னேற்றப் படிநிலைகளை நன்கினிது விளங்கக் காட்டுகின்றது. உயிரின்கண் முதன் முதலாக உணர்வுக் கண்கள் திறக்கப் பெறுதல், அதனாற் பிறக்கும் உவகை, பெருமிதம், பலவகை மனநிலை அலைவுகள், கையறவு, உலகியலில் நின்று தடுமாறும் போராட்டம், அமைதியின்மை, இறுதியாக இறைவனை அடைந்தெய்தும் இன்பம், அவனோடு இரண்டறக்கலந்து நிற்கும் பெருமகிழ்ச்சி யுணர்வு, என்னும் பலதிற உணர்ச்சிகளும் அதன்கண் பளிங்கென விளங்குகின்றன''[2] எனப் பேரறிஞர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களும் திரு. ஜி. யூ. போப் அவர்களும் குறிப்பிட்டி

---

2. ''Thiruvasagam depicts in beautiful hymns the progress of the soul from the bondage of ignorance and passion into the liberty of light and love. its first awakening, its joy and exaltation waywardness and despondency, struggle and unrest, the peace and joy of union''

–Dr. S. Radhakrishnan
Indian Philoscphy. Vol. II P. 729

ருத்தல்3 திருவாசகத்தின் சிறப்பினையும் இயல் பினையும் புலப்படுத்தும்.

திருக்கோவையார்:

''தேவேந்திரனின் அமராவதி நகரத்தையும், குபேரனின் அளகாபுரி நகரத்தையும் முதற்கண் படைத்துப் பயின்றுகொண்டு, அதனுற் கைவந்த அனுபவத் திறமும் ஆற்றலும் வளர்ந்தோங்கிய பின்னரே, பிரமதேவன் தசரத வேந்தனின் அயோத்திமா நகரத்தைப் படைத்தான்'' என்றும் கருத்தமைய,

''அயில்முகக் குலிசத்து அமரர்கோன் நகரும்
அளகையும் என்றிவை அயனூர்
பயிலுறவு உற்ற படிபெரும் பான்மை
இப் பெருந் திருநகர் படைத்தான்''

எனக் கம்பர் பாடுவது போல மாணிக்க வாசகர் திருவாசகம் பாடித் தேர்ந்து கைவரப் பெற்ற சிறந்த சிவஞானத்தெளிவின் முதிர்ச்சியிற் பாடியருளியதே திருச்சிற்றம்பலக் கோவையார் எனின், அதன் அருமை பெருமைகளை யாம் என் னென்பேம்! இறைவன் தானே ''பாவைபாடிய வாயால் கோவை பாடுக'' என மாணிக்க வாசகர்பால் வேண்டிப் பெற்ற மாண்புடையது திருச்சிற்றம்பலக் கோவையார்! ''யாவையும் பாடிக் கோவை பாடுக'' என வழங்கும் உலகியற் பழமொழியும் ஈண்டு எண்ணி உணர்தற்குரியது.

ஞானப் பனுவல்:

திருச்சிற்றம்பலக் கோவையாருக்குப் பல வகைச் சிறப்புகள் உண்டு. அவைகளுள் தலையா யது, சங்ககாலப் புலவர்கள் பாடிய அகப்பொருள் ஆகிய உடலில், இறையியல் இன்பக் கருத்துக்கள் ஆகிய உயிரியல் அருட்பொருளும் பிரிவற விரவி, அழியா இன்ப அருங்கலைக் கவிதைப் படைப் பாகக் கவின்மிக்குத் திகழ்தலேயாகும். இங்ஙனம் திருக்கோவையார் அகப்பொருளில் அருட்பொரு ளையும் இயைத்திணைத்து விளக்கும் சிறப்பினையே ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை மிக்க அருட் பெருங் கவிஞர் ஆகிய குமரகுருபர அடிகளார்,

''கடங்கலுழ் கலுழிக் களிநல் யானை
மடங்கலத் துப்பின் மானவேல் வழுதிக்கு
இருநிலம் அகழ்ந்தும் எண்ணில்பல் காலம்
ஒருவன் காணது ஒளித்திருந் தோயை
வனசப் புத்தேள் மணிநாப் பந்திக்
கவனவாம் புரவியிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருள்எனச் சூட்டிய ஒருபெருஞ் செல்வ''

—சிதம்பர மும்மணிக் கோவை

என வியந்து மொழிந்து புகழ்ந்திருத்தல் காணலாம். தம்முள் ஒன்றிஞென்று சாலவும் முரண்பட்ட அகப்பொருளும்—அருட்பொருளும் (காமச் சுவையும்—ஞானச் செய்தியும்) ஆகிய இரண்டையும் இணைத்தியைத்து, முதல் முதலாக வியத்தகு முறையில் பாடிக்காட்டிய சிறப் புடைமை குறித்தே, இதனைக் ''காமஞ் சான்ற ஞானப்பனு பல்'' எனக் குமர குருபர சுவாமிகள் போற்றிப் புகழ்வாராயினர்.

டாக்டர் ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் என்னும் அமெரிக்க நாட்டுப் பேரறிஞர் ''பரிணமக் கொள்கையின் படி உலகியற்கைப் பொருள்களின் முதற் கண் தோன்றிய பொருள்களை விட நாளடைவிற் படிப் படியே தோன்றும் பொருள்களே மேன்மேல் உயர்ந்து சிறந்து திகழக் காண்கின்றேம். ஆனல் இப்பரிணமக் கொள்கை, இலக்கியங்களைப் பொறுத்த வரையிற் பொருந்துவதாகத் தோன்ற வில்லை. மிகச் சிறந்த இலக்கியங்களெல்லாம், துடுமெனத் தாமே முதலிலே தோன்றுகின்றன; ஒப்புயர்வற்று விளங்குகின்றன. ஒரே ஒரு முறை மட்டுமே தோன்றும் அச் சிறப்பிலக்கியங்களுக்கு அருகே நிற்கத் தக்க நிலையிற்கூட, அவற்றிற்குப் பின்னர்த் தோன்றும் இலக்கியங்கள் தகுதி பெறு வதில்லை'' 4 என்று குறிப்பிடுவர்.

---

3. ''Here is very odd thing. In literature the best in each kind comes first, comes suddenly and never again. This is a disturbing, uncomfortable, unaccptable idea to people who take their doctrine of evolution over-simply. But I think it must be admitted to be true. Of the very greatest things in each sort of literature the masterpiece in unprecedented, unique never challenged or approched henceforth''

–Dr. I. A. Richards

4. ''Throughout the literatures of the world, the love of man for his Ishta Devata is likened to the love of a woman towards herlover and the bliss of communion is likened to the joy of physical union.

The Biblical 'Song of Songs' the saying of Jesus Christ likening God to bridgegroom and the soul to virgins waiting for their spouse, the recorded experinces of medieval Christian saints like St. Theresa and St. Gertnude who recounted the caresses bestowed upon them by Christ, the assertion of St. Catherine that she was betrothed to Christ and was given a ring by him, are all aualogous .....''

–Dr. C. P. Ramaswami Alyar
Phases of Religion and Culture, P. 39

அருட்பொருள்:

அதற்கு ஏற்ப இன்று தமிழில் எத்தனையோ பலப்பல கோவை நூல்கள் பாடப் பெற்றுள்ளன எனினும், அவைகள் எல்லாவற்றுள்ளும் முதன்மையும் பெருமையும் மிக்குத் திகழ்வது, மாணிக்க வாசகர் அருளிச்செய்த திருக்கோவையார் ஒன்றேயாகும். இதன்கண்,

குறிஞ்சி	—	சாக்கிரம்
பாலை	—	சொப்பனம்
முல்லை	—	சுழுத்தி
மருதம்	—	துரியம்
நெய்தல்	—	துரியாதீதம்
தலைவன்	—	கடவுள்
தலைவி	—	ஆன்மா
தோழி	—	திருவருள்
தோழன்	—	ஆன்மபோதம்
செவிலி	—	திரோதானசக்தி
நற்றாய்	—	பராசக்தி

என்னும் நிலையில் அகப்பொருட் செய்திகள் அருட்பொருட் குறிப்புகள் அமையும் வகையில் பாடப் பெற்றிருத்தலை, ஊன்றிக் கற்பவர் யாவரும் உணரலாம்.

உலக இலக்கியங்கள் எல்லாவற்றிலும், இங்ஙனமே கவிஞர்கள் தாம் விரும்பும் கடவுளை, ஒரு பெண் தன் காதலன்பாற் கொள்ளும் பேரன்பு நிலைக்கு ஒப்புமைதோன்றக் காதலுற்றுப் பாடியிருத்தலைக் காணலாம். விவிலிய நூலிற் பாடல்களுட் பாடல் என்பது, இதற்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டாகும். கடவுளை மணமகனுகவும், உயிர்களையெல்லாம் அவனை மணந்து கொள்ளக் காத்திருக்கும் கன்னிப் பெண்களாகவும் ஒப்பிட்டு, இயேசுநாதர் இயம்புகின்றார். இடைக்காலத்தில் விளங்கிய கிறித்தவ சமய அருட்செல்வியார்கள் ஆகிய அர்ச். தெரிசா அம்மையார், அர்ச். கெர்ட்ரூட் அம்மையார் ஆகியோர், தம்மை இயேசுநாதர் தழுவிப் புல்லி மகிழ்வித்த அருளனுபவச் செய்திகளைக் குறித்துவைத்துள்ளனர். இவ்வாறே அர்ச். கேதரீன் அம்மையார் தாம் இயேசுநாதர்க்குப் பரிசம் இடப் பெற்றதாகவும், அவர் தமக்கு மணமோதிரம் ஒன்றைப் பரிசளித்ததாகவும் மொழிந்துள்ளார். இன்னோரன்ன செய்திகள் ஈண்டு நாம் ஒப்புமையாகக் கருதியுணர்தற்குரியன.''

அறிவன்நூற் பொருளும் உலகநூல் வழக்கும்:

கோவை நூல்களி லெல்லாவற்றினும் மிகவும் பழமையும் முதன்மையும் வாய்ந்து சிறந்தொளிர்வதும், பிற்காலத்தில் தோன்றிய கோவை நூல்களுக் கெல்லாம் மேல்வரிச்சட்டமாக அமைந்து வழிவகுத்துக் கொடுத்ததும் ஆவது திருக்கோவையார். ''பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசு'' தோன்றுமாறு, தம் முள் ஒன்றிஞென்று சாலவும் முரண்பட்ட காமச் சுவையும் ஞானப் பொருளும் ஆகிய இரண்டையும் இணைத்தியைத்து,

திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கையிகந்து அறிவாய் அறியாச்
செம்புலச் செல்வர் ஆயினர். ஆதலின்
அறிவன்நூற் பொருளும் உலகநூல் வழக்கும்என
இருவகைப் பொருளும் நுதலிப் போந்தனர்.

என அறிஞர்கள் பாராட்டும் வகையில், அகப்பொருளில் அருட்பொருளும் அமையும் வண்ணம் மாணிக்கவாசகரால், அமைத்து அருளிச் செய்யப்பெற்றிருக்கும் அருமைப் பாட்டினைத் 'தாலிபுலாக நியாயம்' பற்றி ஈண்டு ஒரு சிறிது உணரமுயல்வோமாக:

உயிர் என வியத்தல்:

அகப்பொருள் நூல்களில் ''உயிர் என வியத்தல்'' என்பது ஒரு துறை. தலைவன் ஒரு பொழிலின்கண் தலைவியைக் கண்டு கூடி, இன்பச் சிறப்பும் பிரியலாகாமையும் கருதி, அவளைத் தன் உயிர் எனப் பாராட்டி மகிழ்வதாகப் பாடப் பெறுவது அவ் வகத்துறைக் குரிய பொருள் ஆகும்.

'அன்புடன் நேற்று என்னைக் கூடி, பின்னர் என்மனம் வருந்தும்படி பிரிந்து சென்று, தோழியர் கூட்டத்தைச் சேர்ந்து, எனக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கே விளைவித்து, என் நெஞ்சில் நிலைபெற்று விட்ட என் உயிர் இதோ வந்து விட்டது'. எனத் தலைவியின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த தலைவன், அவளைத் தன் உயிரிலும் மேலானவளாகப் புகழ்ந்து மகிழ்ந்து சொல்லுகின்றான்.

நேயத்த தாய், நென்னல் என்னைப்
புணர்ந்து, நெஞ்சம் நேகப்போய்
ஆயத்த தாய், அமிழ்தாய் அணங்காய்
அரன் அம்பலம்போல்

தேயத்ததாய், என்றன் சிந்தையதாய்த்,
தெரியிற் பெரிதும்
மாயத்த தாகி, இதோவந்து
நின்றது, என் மன்னுயிரே:

எனத் தலைவன் கூற்றுகவரும் இச் செய்யுளில் மாணிக்கவாசகர் தமக்கு உயிர்க்குயிராக விளங்கும் சிவபெருமானின் திருவருட் செயல்களைப் பற்றிய குறிப்பும் அமையப் பாடியருள்கின்றார்.

''என்பால் அருள்மிகுந்து முன்னர் என்னைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்டு, பின்னர் என்நெஞ்சம் கலங்கி வருந்தும்படி 'நீ தில்லைக்கு வருக' எனக் கூறி அடியவர்கள் திரளுடன் பிரிந்து சென்று, நினைக்குந் தோறும் அமிழ்தம் போல இன்பம் செய்து கட்புலனைகாது மறைந்து நிற்றலின் துன்பம் செய்து, பொன்னம்பலம் போல ஒளிமிருந்து, என் சிந்தையிற் பிரிவற நிலை பெற்று இங்ஙன மெல்லாம் திருவிளையாடல் கள் நிகழ்த்துதலால் மாயத்தன்மை வாய்ந்து, என்னை இயக்கி ஆட்டி வைக்கும் என் உயிர்க் குயிர் (சிவம்) வந்து தோன்றி நிற்கின்றது''

என வேறெரு சிறந்த பொருளும், இச்செய் யுட்கண் அமைந்து விளங்குதல் காணலாம்.

புனல்தரு புணர்ச்சி:

அகப்பொருட்குரிய துறைகளில் 'புனல்தரு புணர்ச்சி' என்பது ஒன்று. தலைவி மலைநிலத் துள்ள சுனைப் புனலில் நீராடச் செல்கின்றாள். அங்கு அதன்கண் தவறி வீழ்ந்து, ஆழத்தில் அகப்பட்டுக்கொண்டு துயருற்றுத் தத்தளிக்கின் றாள். அந்நிலையில் அப்பொழுது அங்கு எதிர் பாராவகையிற் போந்த தலைவன், அச்சுனையின் ஆழத்தினின்று அவளை மீட்டுக் காப்பாற்றி உதவி புரிகின்றான். அந்நன்றியை நினைந்து தோழியின் பால் தலைவனின் வேண்டுகோட்கு இசைந்து, அவனையே மணப்பதற்குத் தன் உடன் பாட் டினைத் தலைவி குறிப்பினுற் புலப்படுத்துகின்றாள்.

ஓங்கும் ஒருவிடம் உண்டு, அம்பலத்
தும்பர் உய்ய அன்று
தாங்கும் ஒருவன் தடவரைவாய்த்,
தழக்கும் அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்து அன்று
அழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்கு, அறியேன்
சிறியேன் சொல்லும் வாசகமே.

என வரும் அரிய இனிய இவ்வகப் பொருட் பாடலில், மேற் குறித்த 'புனல்தகு புணர்ச்சி' என்னும் அகத்துறைக் குரிய பொருள் மட்டுமே யன்றி, மற்றும் ஒரு பொருளும் மாண்புற அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற் குரியது.

'பிறவியாகிய பெரிய கடலில் விழுந்து, துன் பம் ஆகிய அலைகள் மோதவும், பெண்ணுசை என் னும்புயற்காற்றுவீசவும், காமம் என்னும் கொடிய சுறுமீன் வாயிலும் அகப்பட்டுக் கொண்டு வருந்தி, ஐந்தெழுத்தாகிய புணையையே நம்பிப் பற்றிக் கொண்டு கிடக்கும் தன்னந் தனியனை என்னை, வீடுபேறு ஆகிய நல்ல கரையிலே சேர்த்துக் காத் தருளினாய்' எனத் தாம் திருவாசகம் திருச் சதகத்தில் (27) பாடிப் போற்றும் சிறந்த கருத் தினையே, மாணிக்கவாசகர் தம் நன்றியுணர்வு தோன்ற ஈண்டும் அமைத்தருளியிருக்கின்றார்.

''பிறவியாகிய கடலில் விழுந்து யான் தத்தளிக்குங்கால், என்னைத் தாமே எளிவந்து வலிந்தாண்டு கொண்டு, பிடித்தெடுத்துக் காப்பாற்றிப் பேருதவி புரிந்தருளிய தலைவர் ஆகிய இனிய சிவபிரானுக்கு யான் சொல்லத் தகுந்த நன்றியுரை யாது? என்று சிறியேன் அறிகின்றிலேன்''

ஊடல் நீட வாடியுரைத்தல்:

இவ்வாறு ''ஊடல்நீட வாடியுரைத்தல்'' என்பதும் ஓர் அகப்பொருட்டுறை, ''உணவினும் உண்டது அறல் இனிது: காமம் புணர்தலின் ஊடல் இனிது'' ஆதலின், தலைவி தலைவனிடம் ஊடல் கொள்கின்றாள். தலைவியின் ஊடலைத் தணிக்கத் தலைவன் முயல்கின்றான். 'உப்பு அமைந் தற்றுற் புலவி' எனத் திருவள்ளுவர் கூறிய நுட்பம் தெளியாத தலைவி, தனது ஊடலிற் சிறிது நடிக்கின்றாள். அதனால் வாடிய தலைவன் மிகவும் வருந்தி இவள் முன்பொரு காலத்தில் என்னைக் குறிஞ்சி நிலத்தே ஓர் அழகிய சோலை யிற் கண்டு இனிய காதற்பார்வைக் குறிப்பைப் புலப்படுத்தி, இன்பம் பெரிதும் பயந்து, நெஞ்சம் நெக்கு உருகும்படி செய்து, அதனைக் கவர்ந்து, கொண்டு மகிழ்வித்த பெண் அமிழ்தம் ஆகிய என் காதலியாகத் தோன்றவில்லை' எனக்கூறி, உள்ளம் நொந்து கொள்ளுகின்றான்.

திருந்தேன் உயர்நின்ற சிற்றம்
பலவர், தென் அம்பொதியில்
இருந்தேன் உயவந்து. இணைமலர்க்
கண்ணின் இன்நோக்கு அருளிப்

பெருந்தேன் எனநெஞ்சு உகப்பிடித்து
ஆண்டநம் பெண் ணமிழ்தம்
வருந்தேல்! அதுவன்று, இதுவோ
வருவதோர் வஞ்சனையோ''

இப்பாடலில், மாணிக்கவாசகர் தம்மை ஆட் கொண்டருளிய பெண்ணோடு கூடிய அமிழ்தம் போல்பவர் ஆகிய அர்த்தநாரீசுவரர் (சிவ பெருமான்) முன்பு தமக்குச் செய்தருளிய தலையளிகளை நினைவு கூர்ந்து, இனிய முறையில் குறிப்பிட்டு மகிழ்விக்கின்றார்.

''ஒருவாற்றலும் திருந்தா தவஞ்சித் தன்னை அடைதல் குறித்து ஒரு முயற்சியும் செய்யாமல் வீணேயுழன்று கொண்டு கிடந்த யான், பிறவித் துன்பத்தினின்றும் தப்பிப் பிழைக்கும் பொருட்டுத் தானே தனது பேரருட் பெருக்கினால் எளிவந்து தோன்றி, தனது இணைமலர்க் கண்களின் இனிய கடைக்கண் நோக்கத்தினை என்பாற் செலுத்தி (நயனதீட்சை செய்து) பெருந்தேனைப் போன்று இனிமை மிக்கு, என் கருங்கல் மனமும் கரைந்துருகும்படி ''வா வா'' என்று என்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்''

தூதுகண்டு அழுங்கல்:

அகப்பொருட்குரிய துறைகள் பலவற்றுள் ''தூது கண்டு அழுங்கல்'' என்பதும் ஒன்றாகும். தலைவன் பெருவீரன் ஆதலின், அரசனின் விருப்பத்திற்கு இணங்கி, அயல்நாட்டுப் பகைவர்களை அடக்கி வெல்லுதற் பொருட்டுப் போர் புரியச் செல்கின்றான். சில காலமாகியும் அவனிடமிருந்து கடிதமோ செய்தியோ தலைவிக்குக் கிடைத்திலது. ஆனால் போருக்குச் சென்ற வீரர்கள் பிறரெல்லாம், தத்தம் மனைவியருக்குத் தாம் நலமே இருந்து போர்புரிந்து வரும் செய்தியினைத் தூதுவர்கள் மூலம் அவ்வப்போது அறிவித்து வருகின்றனர். இந் நிலையில் தனக்குத் தலைவன் ஏதும் செய்தி கூறித் தூது அனுப்பிவைத்திலனே என்று, தலைவி மிகவும் கவலையுற்று வருந்துகின்றாள்.

''வருவன செல்வன தூதுகள்
ஏதில; வான்புலியூர்
ஒருவனது அன்பரின் இன்பக்
கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்து எனது ஆவிகொண்டு
ஏகி, என் நெஞ்சில் தம்மை
இருவின காதலர். ஏதுசெய்வான்
இன்று இருக்கின்றதே!''


இப் பாடலில், மாணிக்கவாசகர் தம்மைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்டருளிய சிவ பெருமான், தம்பால் 'நீ தில்லைக்கு வருக' எனக் கூறி மறைந்து பிரிந்து சென்றதன் பின்னர்ச் சிலகாலம் வரையில் தமக்குக் காட்சி தந்தருளாமலே இருந்துவிட்டதனால் அடைந்த சோகச் சூழ் நிலையினைப் பற்றிக் குறிப்பிட்டருள்கின்றார்.

''தனது மெய்யன்பர்களைப் போல் யாதும் இன்பம் எய்தும்படி உள்ளம் உருக்கும் கலவிகளை (அருட்செயல்களை) எனக்குச் செய்து பின்பு என் உயிர் பிரிந்தாற் போலத் தாம் பிரிந்து சென்று, மீட்டும் ஒரு ஞான்றும் கட்புலனாகாமல் மறைந்து நின்று, யான் தன்னை நினைந்து நினைந்து வருந்தும்படி செய்த என் காதலர் (சிவபெருமான்) என்பதால் இன்று யாது செய்யக் கருதியிருக்கின்றனரோ? அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும் கொண்ட அவர், எனக்கு நன்றே செய்யினும் செய்க: அன்றித் துன்பமே செய்யினும் செய்க! எல்லாவற்றையும் அவர் திருவருள் எனவே கருதி யான் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு அமைவேன்''

இத்தகைய பல அரியபெரிய நுண்ணிய முறைகளிலும், அகப்பொருளில் அருட்பொருளையும் அமைத்து ஒரு சேரக் குழைத்தளித்து உவப்பினை விளைவிக்கும் உயர்ச்சி மிக்கொளிர்வது திருச்சிற்றம்பலக் கோவையார். திருவாசகத்தின் மற்றும் ஓர் அரிய இனிய சிறந்த மக்கட் பதிப்பு அமைப்பே (A popular but profound and mystic version) திருச்சிற்றம்பலக் கோவையார் எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். அத்தகைய இவ்வித்தகப்பாடலை, நாம் அனைவரும் மிக்க பக்தியுணர்வோடு ஓதி, இம்மை மறுமை நலன்களையெல்லாம் எய்தி மகிழ்வோமாக:

''அகப்பொருளில் தூய அருட்பொருளும் தோற்றி
மிகப்பொலிந்து நன்றே விளங்கித்—தகப்பெரிதும்
செந்தமிழ்ச்சீர் சான்ற திருக்கோவையார் சிறப்பை
ஏந்தவகையிற் புகழ்கேம் யாம்?''

காதல் உணர்வைக் கடவுள் உணர்ச்சியொடு
நீதறச்சேர்த் துக்கோவை செய்தளித்து—ஓதுலக
மக்களெல்லாம் உய்யவைத்த மாணிக்க வாசகர்தாள்
எக்காலும், போற்றியுய்வோம் யாம்!



சென்ற நூற்றாண்டில் ஈழத்தின் தேசிய மகாகவியாக விளங்கிய
அ. குமாரசுவாமிப் புலவர். நாவலரிடம் இடையிடையே
வந்து இலக்கண, இலக்கிய விடயமாகச் சந்தேகங்கள்
கேட்டுத் தெளிந்தவர். சைவ தூஷணங்களுக்குப்
பரிகாரமான பாடல்கள் இயற்றி நாவலரின்
சுயமதத்தாபன ஆர்வத்தைத்
தூண்டியவர்.

— உபயம்: தெல்லிழைவெளியூர் மு. கணபதிப்பிள்ளை.

செந்தமிழ்ச் சீரோமணி, பண்டித வித்துவான்
க. கி. ஈடராஜன் அவர்கள் B. O. L., Dip. Ed.

நாவலர் காலத்து புலவர்கள்

கடைச்சங்கத் தலைமைத் தமிழ்ப் புலவராக விளங்கிய நக்கீரருடைய தந்தையாரின் இயற் பெயர் இன்னது என்று எவரும் அறியார். அவர் அக்காலத்து எல்லாராலும் அறியப்பட்ட புகழ் பெற்ற ஓர் ஆசிரியராக-கணக்காயனாராக விளங் கினர் என்பது தேற்றம். கணக்காயனர் மகனர் நக்கீரனர் என்றே நக்கீரர் குறிக்கப்படுதல் காண்க. அதுபோலவே தமது இயற்பெயர் ஆகிய ஆறுமுகம் என்பதுதானும் தேவைப்படாது ''நாவலர்'' என்னுஞ் சிறப்புப் பெயரால் தமிழ் கூறும் நல்லுல கம் முழுவதிலும் அறியப்பெற்ற பெரியார் நமது நல்லூநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஒருவரே என்னும் உண்மையே நாவலர் பெருமானின் நல்ல புகழை நானிலத்துக்கு அறைகூவி நிற்கின்ற தெனலாம்.

பண்டுதொட்டே ஈழத்துக்கும் இந்தியாவுக் கும் கலைப்பாலம்-அறிவுப்பாலம்-அமைத்த பெரி யோர் வேறு சிலர் இருந்தாலும், இந்திய-ஈழப் பாலத்தை அமைத்து அதனை உறுதியாக நிலை பெறச் செய்தவர் நாவலர் பெருமானேயாவர் என்று கூறின் அது மிகையாகாது. இவர்கள் யாழ்ப் பாணத்திற் பிறந்தமை யாழ்ப்பாணஞ் செய்த தவப்பயனும். தமிழ் நாட்டில் ஏட்டுச் சுவடிகளாக இருந்த நூல்களை ஆராய்ந்து, நன்கு பரிசோதித்து, பிழையறப் பலர்க்கும் பயன்படும்படி அச்சுவாகன மேற்றுந் தொண்டில் முன்னின்று முதன்முதலாக உழைத்த பெரியார் இவரேயாவர். இந்திய மக் களை இத்துறையிற் கண்விழிக்கச் செய்த பெரி யார்கள் இவரும், ''நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல், சொல்லுதமிழெங்கே சுருதியெங்கே எல்லவரும், ஏத்துபுராணக மங்களெங்கேப்ர சங்க மெங்கே'' என்று உணர்ந்து நாவலரவர்களைப் போற்றிப்பாடிய இராவ்பகதூர் சி. வை. தாமோ தரம் பிள்ளையவர்களும் ஆவர். இவர்களைப் பின் பற்றியே டாக்டர். உ. வே. சாமிநாதையரோ பிறரோ அத்துறையில் ஈடுபட்டுழைக்கத் தலைப் பட்டாரெனின், அது புனைந்துரையாகாது. தமி ழுள்ள அளவும் சைவம் உள்ள அளவும் நாவலர் திருநாமத்தைத் தமிழ் நாடு மறக்கமுடியாது.

ஏறக்குறைய முந்நூற்று நாற்பது ஆண்டு களுக்கு முன் யாழ்ப்பாணத்தைப் பறங்கியர் அரசாண்டனர். இவர்கள் கிறீத்துவர்கள். இவர் கள் சைவ மக்களுக்கு இழைத்த கொடுமைகள் பல. கோயில்களை இடித்தனர். குறும்புகள் பல செய்தனர். அதுமட்டுமா? பசுவதை செய்யும் அவர்கள், குடிகள் ஒவ்வொருவரும் முறைமுறை யாக ஒவ்வொரு பசுவை அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்

தனர். நல்லூரில் நாவலரவர்களின் முன்னோரா யிருந்த ஞானப்பிரகாசரால் இதைப்பொறுக்க முடியவில்லை. பசுக்கொலைக்கு உடந்தையாக இருக்க விரும்பாத அவர் தம்முடைய முறை வருவதற்கு முன்னேயே இந்தியாவுக்குப் புறப்பட்டு விட்டார். முதலில், சிதம்பரஞ் சென்றார். அங்கிருந்து கௌடதேசஞ் சென்று ஒரு பிராமண சந்நியாசியிடம் தருக்கம், வியாகரணம் முதலிய வற்றையெல்லாம் நன்கு கற்றார். கற்றபின் திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்து, அங்கு சந்நியாசம் பெற்று ஆகமங்களையும் சைவசித்தாந்த நூல்களையும் நன்கு ஆராய்ந்தார். பின், இவர் நடராச தரிசனஞ் செய்ய விரும்பித் திருவண்ணாமலையை விட்டுச் சிதம்பரஞ் சென்று, அங்கு நீடித்த காலம் வசித்திருந்தார். இவர், சிதம்பரத்தில் அமைத்துள்ள ''ஞானப்பிரகாசம்'' என்னுந் திருக்குளம் இந்திய-ஈழத்தொடர்புக்குச் சான்று பகர்ந்த வண்ணம் இன்றும் நின்று நிலவுகின்றது. இவர் வடமொழியில், சித்தாந்த-சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை, சிவயோகசாரம் என்னும் நூல்களுக்கு வியாக்கியானம் எழுதியிருக்கின்றார். தமிழில், சிவஞானசித்தி சுபக்கத்துக்கு ஓர் உரை எழுதியுள்ளார். சித்தியாருக்குள்ள அறுவருரையில் இதுவும் ஒன்றாகத் திகழ்கின்றது. வடமொழியிலுள்ள பௌட்கராகமத்துக்கும் இவர் ஒரு விரிவுரை எழுதியுள்ளார் என்பர். ஞானப்பிரகாச முனிவர் என்று போற்றப்படும் இப்பெரியாரின் வழித்தோன்றலாக உள்ளவரே நமது நாவலர் பெருமானவர். இது நாவலர் பெருமானின் முன்னோரின் பெற்றி தெரிக்கின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே, பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆங்கிலச் சார்புக்காலம் என்று சொல்லப்படத்தக்கது. இக்காலத்தில் இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் புலவர்களும் புரவலர்களும் பலர் திகழ்ந்தார்கள். நாவலரவர்களின் தந்தையாரே ஒரு புலவராவர். கந்தப்பிள்ளை என்னும் பெயரையுடைய அவர் இராம விலாசம் சந்திரகாசம் முதலிய நாடக இலக்கியங்களை இயற்றியவராவர்.

நாவலர் காலத்துப் புலவர்கள் இந்தியாவிலிருந்தோரும் யாழ்ப்பாணத்திலிருந்தோரும் என இருவகைப்படுவர். இந்த இருவகையினருள்ளும் சிறப்பாகவுள்ள சிலரைப்பற்றி இங்குக் குறிப்பிடுவேனுயின், யான் என் கடமையை நிறைவேற்றிய வனுவேன். அதுவும் சுருக்கமாகவே இங்குக் குறிப்பிடுதல் சாலும்.

நாவலர் பெருமான் காலத்தில் இந்தியாவிலிருந்த புலவர்களில், சுப்பிரமணிய தேசிகர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, பொன்னுச்சாமித்தேவர், இராமலிங்க அடிகள், மு. ரா. அருணாசலக் கவிராயர், பாண்டித்துரைத்தேவர், புலிக்குட்டி இராமலிங்கத்தம்பிரான், வேதநாயகம்பிள்ளை, சுந்தரம்பிள்ளை M. A., தொழுவூர் வேலாயுத முதலியார், சோமசுந்தர நாயகர், தாண்டவராய முதலியார், விசாகப் பெருமாளையர், சரவணப்பெருமாளையர், திருநெல்வேலி கிருட்டினபிள்ளை என்னும் கத்தோலிக்கப் புலவர், மழவை மகாலிங்கையர், கோபாலகிருஷ்ண பாரதியார் என்னும் இவர்கள் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களிற் பலர் நாவலர் பெருமானோடு ஏதோ ஒருவகையிலே தொடர்புடையவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுப்பிரமணிய தேசிகர்

நாவலர் காலத்தில் திருவாவடுதுறை யாதீனத்திற் றலைமை பூண்டிருந்த சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் இவர்களேயாவர். சிவஞான சித்தியார்க்கு எழுதிய அறுவருரையில் இவர்கள் உரையும் ஒன்றாகும். இவர்கள் உரை பதவுரையாக அமைந்துள்ளது. இவர்கள் கலாவிநோதர்; ஒழுக்கசீலர். இவர்கள் தமிழ்ப் புலவர்களை மிகவும் போற்றி வந்தனர். நாவலர் தலயாத்திரை செய்து கொண்டு கும்பகோணஞ் சென்றஞான்று, அதை அறிந்த தேசிகரவர்கள் மீனாட்சிசுந்தரம்பிள்ளையையும் ஒதுவார் சிலரையும் அவரிடம் அனுப்பி, திருவாவடுதுறை மடத்துக்கு அழைத்து அவரை உபசரித்தனர். தலைமைச் சந்நிதானத்தின் தலைமையில் ஒரு வித்துவசபை கூட்டி நாவலர் அவர்களைப் பிரசங்கஞ் செய்யும்படி பணித்தனர். நாவலர் அவர்கள் நிகழ்த்திய சித்தாந்தப்பொருள் பொதிந்த செந்தமிழ்ப் பிரசங்கத்தைக் கேட்ட உபய சந்நிதானங்களும் பேராச்சரியமுற்று ''நாவலர்'' என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினர். இந்தத் தொடர்பில் அவர்கள் புகழ் என்றும் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

இவர் நாவலரவர்களுக்கு ஏழு வயசுக்கு மூத்தவர். இவர் பிறந்த ஆண்டு 1815. 1849ஆம் ஆண்டில் நாவலரவர்களுக்குப் பட்டம் வழங்கிய திருவாவடுதுறை யாதீனத்தோடு இவர் தொடர்பு கொண்டு 1858ஆம் ஆண்டளவில் ஆதீனத்தாரால் ''மகாவித்துவான்'' என்னும் பட்டம் வழங்கப்பெற்றவர். நால்வகைக் கவி பாடுவதிலும் திறமை வாய்ந்தவர். பதினாறு தல புராணங்கள் பாடியவர். சூசேலோபாக்கியானம் இவராற்



''நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே
சுருதி எங்கே?...'' என்று பாடிய இராவ் பகதூர்
சி. வை. தாமோதரம்பிள்ளை. தொல்காப்பியம்,
பொருளதிகாரம், கலித்தொகை முதலான
நூல்களை நாவலரின் துணையுடன்
பரிசோதித்து, முதன் முதலாக
அச்சுவாகனம் ஏற்றிப்
புகழ்பெற்றவர்.

— உபயம்: தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை.

பாடப்பெற்ற தென்பர். பத்துப்பிள்ளைத்தமிழ் நூல்கள் பாடியுள்ளார். அவற்றுள், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பெரிதும் பாராட்டப்படுவதாகும். அன்றியும், பல அந்தாதி நூல்களும் உலா முதலிய பிரபந்தங்களும் பாடியுள்ளார். குமரகுருபர அடிகள் வரலாறு சிவஞான முனிவர் வரலாறு என்பவையும் இவராற் செய்யுள் வடிவிற் செய்யப்பெற்றுள்ளன. இவர் நாளொன்றுக்கு முந்நூறு பாட்டுப்பாடும் ஆற்றல் பெற்றிருந்தார் என்பர். இவர்கள் நாவலர் பெருமான் பதிப்பித்த திருக்குறள் முதலிய பல நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார். இவர்தம் மாணாக்கராகிய தியாகராசச் செட்டியார் முதலியவர்களும் நாவலரவர்கள் பதிப்பித்த நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் இவர்கள் மாணாக்கர்களில் ஒருவர். ஐயரவர்கள் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம் ஒன்று எழுதியுள்ளார்.

பொன்னுச்சாமித்தேவர்

இவர், இராமநாதபுரம் சிற்றரசில் தலைமை அதிகாரியாயிருந்தவர். இவர் தமிழ்ப்புலமையும் உடையவர். யமகம் பாடுவதில் வல்லவர். இவர் பல வித்துவான்களாற் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளார். இவர்களுக்கும் நாவலரவர்களுக்கும் சிறிது மனத்தாபம் ஏற்பட்டிருந்ததுண்டு. நாவலர் பெருமான் ஒருமுறை இராமநாதபுரத்துக்குப் போயிருந்தபோது, அங்குள்ள திருவாவடுதுறை மடத்திலே தங்கியிருந்தார்கள். அஃதறிந்த பொன்னுச்சாமித்தேவர் தமது சமஸ்தான வித்துவானவர்களை அனுப்பி நாவலரவர்கள் தம்மைக் காணுமாறு செய்ய முயன்றும், நாவலரவர்கள் அதற்கியைந்திலர். ஈற்றில் தேவரவர்களே ஒரு பாடல் மூலம் தம் குற்றங்களைப் பொறுத்து எழுந்தருளவேண்டும் என்று வேண்டச் சில கட்டுப்பாடுகளோடு நாவலரவர்கள் சென்று இனிய பிரசங்கஞ் செய்தார். தேவரவர்களும் அவர்களுக்குத் தக்க மரியாதை செய்து நண்பராயினர். பொன்னுச்சாமித்தேவரின் மைந்தரே மதுரையில் நான்காவது சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவராவர்.

இராமலிங்க அடிகள்

இவர் ஒரு சிறந்த பாவலர் ஆவர். இவர் தம் பாடல்களின் இனிமையும் உருக்கமும் எவராலும் போற்றத்தக்கவை. இவர் தென்னார்க்காடு சில்லாவில் மருதூரிற் பிறந்தவர். சென்னையில் ஐந்து முதல் இருபத்து நான்கு ஆண்டு வரை வாழ்ந்தவர். பின்னர், தில்லை முதலிய தலங்களில் எட்டாண்டுகள் வரை தங்கிக் கருங்குழியில் பதினொரு ஆண்டுகள் வதிந்தவர். ஈற்றில், வடலூரை அடைந்து நான்காண்டுகள் கழித்துத் தமது ஐம்பத்து மூன்றும் ஆண்டில் சிவபதமெய்தியவர். இவர்களுடைய வரலாற்றினைப் பலர் பலவாறு எழுதியுள்ளனர். இவருடைய பாடல்கள் '' திருவருட்பா '' என்று வழங்கப்பெறுகின்றன. இவர்களுக்கும் நம் நாவலர் பெருமானுக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளும் பூசல்களும் உலகறிந்தவை. துறவியாகிய இவர்தம் கொள்கைகள் பல, திருமுறைகளைப் பொறுத்தவரையில் ஆட்சேபத்துக்குரியனவாயிருந்தமையும், செத்தவரை எழுப்புதல் போன்ற அற்புதங்களை இவர் செய்வதாக வெளியிட்டமையும், கிறித்தவப் பாதிரிமார்கள் நால்வர் குரவர்கள் செய்த அற்புதங்களும் இராமலிங்கரின் செத்தோரை எழுப்புதல் போன்ற அற்புதங்களே என்று துண்டுப்பத்திரங்கள் மூலம் பரிகாசஞ் செய்ய நேர்ந்தமையும் இவைபோன்ற பிறவுமே உண்மையை எடுத்துச் சொல்லுதற்கு எஞ்ஞான்றும் அஞ்சாதவராகிய நாவலர் பெருமானை இராமலிங்க அடிகளின் போக்கைக் கண்டிக்கத் தூண்டியவைகளாம். '' மறைமலையடிகள் வரலாறு '' என்ற நூலில், மறைமலையடிகள் எழுதிய நாட்குறிப்பு ஒன்று பின்வருமாறு கூறுகின்றமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அஃது இது:—

'' நாங்கள் இராமலிங்க சுவாமிகள் தம் பொருள்கள் அனைத்தையும் விட்டுச்சென்ற மேட்டுக்குப்பஞ் சென்றிருந்தோம். சுவாமிகள் உண்மையில் இறந்துவிட்டார். அவர் எலும்பு ஒரு மட்பாண்டத்தில் இட்டு ஞானசபையின் அடியில் ஒரு சிறு அறையில் வைக்கப்பட்டது. அவர் அற்புதங்கள் எதுவுஞ் செய்யவில்லை. அற்புதங்கள் செய்ய முயன்று தோற்றுவிட்டார், என்னும் மறைவான (இரகசிய) செய்திகளை அறிந்தேன். ஒருவர் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் யாரும் தம் விருப்பப்படி அற்புதங்கள் செய்ய முயலலாகாது; அவர் ஆண்டவன் அருளையும் திருவுள்ளத்தையுஞ் சார்ந்தே இருக்கவேண்டும்''

அருணாசலக் கவிராயர்

சேற்றூர்ச் சமீனில் இராமசாமிக் கவிராயர் திகழ்ந்தார். இவருக்கு மூவர் மக்கள் மு. ரா. அருணாசலக் கவிராயர், அவருடைய தம்பி திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர் காலத்து ஆதீனப் புலவராய் விளங்கியவரும், ''ஞானமிருத'' த்தை அச்சிற் பதிப்பித்தவரும், '' செப்பறைப்பிள்ளைத்தமிழ் '' பாடியவருமாகிய சுப்பிரமணிய கவிராயர், அவருடைய உடன் பிறந்தார் மதுரைத்

தமிழ்ச் சங்கத்தில் தமிழ்நூற் பரிசோதகராயிருந்து ''தனிச்செய்யுட் சிந்தாமணி'' இயற்றிய கந்த சாமிக் கவிராயர் ஆகிய மூவருமே அவர்களாவர். அவர்களுள், மு. ரா. அருணாசலக் கவிராயர் சிவ காசித் திருப்பதிப் பெருமான் மீது பல சிறு காப் பியங்கள் செய்துள்ளார். பல அந்தாதிகளும் பிள் ளைத்தமிழ் நூல்களும் பதிகங்களும் இயற்றியுள் ளார். திருச்செந்தூர்ப் புராணம், திருப்பரங்கிரிப் புராணம், திருக்குற்றாலப் புராணம் ஆகியவற் றுக்கு உரைநடை நூல்கள் வகுத்துள்ளார். 'சிவ ரகசியம்', ''கம்பராமாயண ஆரணிய காண்ட உரை'' முதலியவற்றை அச்சிற் பதிப்பித்துள்ளார். எனினும், இவர் இயற்றிய ''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம்'' இந்திய-ஈழப் பாலத்தை வலுப்பெறச் செய்து குன்றின் மேலிட்ட விளக்குப் போல விளங்குகின்றது. ஆற்றொழுக்குப் போன்று இனிய எளிய செய்யுள் நடையில் அமைந்த இந்த நூலை 1898ஆம் ஆண்டில் இவர் வெளியிட்டிருக் கிறார். இவர் சுப்பிரமணிய தேசிகருக்குக் கீழே சின்னப்பட்டமா யிருந்தவரான நமசிவாயத் தம்பிரானின் மாணாக்கர் ஆவர்.

பாண்டித்துரைத் தேவர்

பொன்னுச்சாமித் தேவரின் புதல்வராகிய பாண்டித்துரைத் தேவர் இப்போதுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர் என்றேரும். இவர் தமிழ் இலக்கண இலக்கிய ஆராய்ச்சியுடையவர். சைவ நூலறிவு நன்குடையவர். சைவ மஞ்சரி, துதி மஞ்சரி, பன்னூற்றிரட்டு என்னுந் தொகை நூல்களை இயற்றியவர். சிவஞான சுவாமிகள் மீது ஓர் இனிய இரட்டை மணிமாலை பாடியுள்ளார். இராச இராசேசுவரி பதிகம் என ஒன்றும் பாடி யுள்ளார் என்பர். இவர், சிதம்பர வித்தியாசாலை யிலும் பிற இடங்களிலும், நாவலரவர்கள் நூல் களை அச்சிடுந்திறமையையும் பரிசோதிக்குந் திறமையையும் மிகவும் பாராட்டிப் பேசியுள்ளார்.

புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான்

துறைசைச் சுப்பிரமணிய தேசிகர் காலத்திலே தம்பிரான்கள் பலர் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங் களிற் சிறந்து விளங்கினர். பாவியற்றுந் திறமை வாய்க்கப் பெற்றவராயும் விளங்கினர். அவர் களுள், புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான் செவ்விய ஆசுகவி பாடுவதில் தலைசிறந்து விளங் கினர். இவர் துறைசையாதீனத்தைச் சேர்ந்த ஒரு கிளைமடத்தில் அமர்ந்திருந்தார். பல செய்யுள்களை இயற்றியுள்ளார்.

வேதநாயகம்பிள்ளை

துறைசை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகரிடம் மிக நெருங்கிய நட்புக்கொண்டிருந்த மற்றொரு புலவர் வேதநாயகம்பிள்ளை என்பார். இவர் கத்தோலிக்க கிறித்தவ மதத்தைச் சேர்ந்த வர். எனினும், சர்வ சமயப பொது நோக்குடைய வர். மாயூரம், சீகாழி முதலிய இடங்களில் ''டிஸ் திரிக் முனீசீப்'' ஆகக் கடமையாற்றியவர். இவர் இயற்றிய செய்யுள் நூல்கள் ''சர்வசமய சமரசக் கீர்த்தனை'', நீதிநூல், பெண்மதிமாலை என்பன. பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி வர லாறு முதலிய நவீனங்களையும் எழுதியுள்ளார். நகைச்சுவை பொருந்த எழுதுவதில் வல்லுநர். சுப்பிரமணிய தேசிகர் மீதும் இவர் பல பாக்களை இயற்றியுள்ளார்.

சுந்தரம்பிள்ளை

இவர் திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகக் கடமையாற்றியவர். ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். இப் பொழுதுள்ள தமிழ் நாடகக் காப்பியங்களுள்ளே தலையாய ''மனோன்மணீயம்'' என்னும் இனிய நாடகக் காப்பியத்தை இயற்றியவர். இவருடைய தத்துவக் கொள்கையை இந்நூலுக்கு உள்ளீடாக அமைத்துள்ளார். இவர் பாடிய தமிழ்த் தெய்வ வணக்கம் யாவராலும் போற்றப்படுவது. ஆங்கி லத்திலும் தமிழிலுமுள்ள நுண்ணிய நூல்களைத் தொகுத்தும் வகுத்தும் காட்டும் ''நூற்றொகை விளக்கம்'' என்னும் அரிய நூலை எழுதியவரும் இவரே. இக்காலத்துத் தமிழ் ஆராய்ச்சிக்கு அடிப் படை கோலியவர் இவரெனலாம். ''திருஞான சம்பந்தர் கால நிச்சயம்'' என்னும் ஆங்கிலக் கட்டுரையை எழுதியவரும் இவரே. 1897ஆம் ஆண்டில் இவர் இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

தொழுவூர் வேலாயுத முதலியார்

இவர் இராசதானிக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தவர். திருவெண்காட்டடி கள் வரலாறு, வேளாண் மரபியல், சங்கர விஷயம் என்னும் உரைநடை நூல்களை இயற்றியுள்ளார். இவர் இராமலிங்க அடிகளின் பிரதம சீடர்களுள் ஒருவர். அருட்பாச் சம்பவக் கண்டனங்களிலும் ஈடுபட்டவர்.

சோமசுந்தர நாயகர்

1846ஆம் ஆண்டுக்கும் 1901ஆம் ஆண்டுக்கு மிடையில் வாழ்ந்த இவர் சென்னையில் வதிந்தவர்.

சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் மகா சமர்த்தர். பாற்கர சேதுபதியின் அவையில் இவருக்கு ''வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்'' என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. திருஞான சம்பந்தப் பெருமானைக் குலதெய்வமாகக் கொண்டொழுகியவர். நல்ல செந்தமிழ் நடையில் பல உரைநடை நூல்களை இவர் இயற்றியுள்ளார். ஆசாரியப் பிரபாவம், சிவபாரம்மியப் பரதெரிசினி, திவாதிக்ய ரத்நாவளி, மெய்கண்ட சிவ தூடண நிரோதம், சித்தாந்த சேகரம், ஆபாச ஞான நிரோதம், வேதசிவாகமப் பிரமாணியம், பிரமாநுபூதி, சிவநாமப் பூஷிருடை வெண்பா ஆகிய நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

விசாகப்பெருமானையர்; சரவணப்பெருமானையர்

விசாகப் பெருமானையரும் சரவணப் பெருமானையரும் திருத்தணிகையில் வீர சைவப் புலவராகத் திகழ்ந்த கந்தப்பையரின் மக்களாவர். இவர்களிருவரும் பல உரைநடை நூல்களை எழுதியுள்ளனர். விசாகப்பெருமானையர் சென்னை மாகாண அரசியலார் கல்லூரியில் தமிழாசிரியராகக் கடமையாற்றியவர். நன்னூலுக்கு ஒரு காண்டிகையுரையும் யாப்பிலக்கண அணியிலக்கண விளக்கங்களும் இவரால் இயற்றப்பெற்றுள்ளன. டாக்டர் வின்சிலோவின் தமிழகராதிக்கும் இவர் உதவி புரிந்தார் என்ப.

சரவணப்பெருமானையர் இராமானுசக் கவிராயருடைய மாணாக்கர். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நறுந்தொகை, நன்னெறி, மூதுரை, திருவெங்கைக்கோவை, பிரபுலிங்கலீலை, திருவள்ளுவமாலை, நைடதத்தின் ஒரு பகுதி ஆகிய இவற்றிற்கு இவர் உரை எழுதியுள்ளார். பலபோத இலக்கண விளக்கங்களை இயற்றமிழ்ச் சுருக்கம், அணியியல் விளக்கம் என்பவையும் இவரால் எழுதப் பெற்றன. களத்தூர்ப்புராணம் ஒன்றும் இவர் இயற்றினர். திருக்குறள் பரிமேலழகருரையையும், திருவாசகம், திருவிளையாடல், நாலடியார் முதலிய நூல்களையும் இவர் பதிப்பித்தார். இவர்களிருவரும் நாவலரவர்களிடம் மிகுந்த ஈடுபாடுடையவர்கள்.

கிருட்டினபிள்ளை

திருநெல்வேலியிலே கிருட்டினபிள்ளை என்னும் ஒரு கிறித்தவப் புலவர் இருந்தார். இவர் கிறித்து சமயச் சார்பான ''இரட்சணிய யாத்திரிகம்'' முதலிய பல நூல்களை இயற்றியவராவர். இவர் திருநெல்வேலி சி. எம். கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்தார். இவரும் நாவலரவர்கள் காலத்தவரேயாவர். இவர் பாடிய ''இரட்சணிய யாத்திரிகம்'' 4000 பாக்களையுடையது.

மழவை மகாலிங்கையர்

பெரிய புராணத்துக்கு உரை எழுதிய மழவை மகாலிங்கையர் நாவலர் காலத்துப் புலவராவர். நாவலர் பெருமான் மொழிபெயர்த்த ''பைபிள்'' நூலே மற்றவர்கள் மொழிபெயர்த்த ''பைபிள்'' நூல்களினுஞ் சாலச் சிறந்தது என்று சென்னையிற் காரணிகளையிருந்து தெரிந்தெடுத்துப் பாராட்டியவர் இவரே. பார்சிவலும் இதனைற் பெருமையடைந்தார்.

கோபால கிருஷ்ண பாரதியார்

நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் பாடிய கோபால கிருஷ்ண பாரதியாரும் நாவலர் காலத்தவரே யாவர். நாவலரவர்கள் சிதம்பரத்தில் வசித்தபோது நடராஜர் தரிசனத்தைத் தவறுது செய்து வந்தனர். ஒருமுறை கோபால கிருஷ்ண பாரதியார் நடராஜர் சந்நிதியில் நின்று பாடியருருவதைக் கண்ட நாவலரவர்கள் சற்றே தங்கி நின்று, பாரதியாரின் கைந்நிறையப் பணம் கொடுத்து மீண்டார். பாரதியாரின் பாடல்கள் மிக உருக்கமானவை. இசைத் தமிழுக்கு வளஞ் செய்பவை. 1824 இல் மகாராட்டிரத்திலிருந்து பஞ்சதந்திரத்தை மொழி பெயர்த்த தாண்டவராய முதலியாரும் நாவலர் காலத்தவரே. இவ்வாறே இன்னும் பலர் இருந்தனர். இனி, அக்காலத்தில் வாழ்ந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலவர்களிடம் வருவோம்.

சேஞ்திராய முதலியார்

இவர் யாழ்ப்பாணத்துள்ள இருபாலையைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் நெல்லைநாத முதலியார். இவர் கூழங்கைத் தம்பிரானுக்கும் மாதகற் சிற்றம்பலப் புலவர்க்கும் தந்தையார்க்கும் மாணவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரவணமுத்துப் புலவர் அம்பலவாண பண்டிதர் முதலியோருக்கு ஆசிரியர். இலக்கண இலக்கியவுணர்ச்சியிலும் கவி பாடும் பயிற்சியிலுஞ் சிறந்தவர். அவதானத்திலும் நினைவிலும் மிக்கவர். அதிகாரம், செல்வம் முதலியவற்றிலுந் தக்கவர். நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி முதலிய நூல்களை இயற்றியவர். இவர் முருக பக்தர்.

விசுவநாத சாத்திரியார்

இவர் யாழ்ப்பாணத்துள்ள அராலியைச் சேர்ந்தவர். இலக்கண இலக்கியங்களும் சோதிட சாத்திரமுங் கற்றவர். அப்பொழுதையரசினரால் ''இராசாவின் கணிதர்'' என்னும் பட்டமும் பெற்றவர் என்பர். கவிபாடுந் திறமும் உடையவர். வண்ணைக் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி முதலிய நூல்களையும் பல தனிநிலைக் கவிகளையும் பாடியுள்ளார்.

தாமோதரம்பிள்ளை

1832ஆம் ஆண்டு தொடக்கம் 1901ஆம் ஆண்டு வரை வாழ்ந்த இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் தமிழ் நூல்களைப் பதிப்பித்தலிற் செய்த அரும்பணி, தமிழ் மக்களால் என்றும் நன்றியறிதலோடு நினைவு கூரத் தக்கது. இவர் ஆங்கிலம் நன்கு கற்றுப் புதுக் கோட்டையில் நீதிமன்றத் தலைவராகக் கடமையாற்றியவர். நீதிமன்ற வேலைகளின் நடுவே இவர் தமிழ் நூல்களைப் பதிப்பித்தலில் எடுத்துக் கொண்ட ஊக்கமும் உழைப்பும் தமிழன்பர்கள் அனைவர்க்கும் உணர்ச்சி பயப்பனவாம். இவர், பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டனரேனும் தொல் காப்பியம், கலித்தொகை, சூளாமணி என்னும் இம்மூன்றும் இவர் அச்சுவாகனமேற்றிய நூல்களுள்ளே தலைசிறந்தவை. இவற்றை முதன்முதலாக அச்சிட்டுத் தமிழுலகத்துக்குதவிய பெருமை இவருக்கே உரியது. வீரசோழியம், இறையனாரகப் பொருள், இலக்கண விளக்கம் என்னும் நூல்களும் ஆராய்ச்சிக்கு மிகுந்த பதிப்புரைகளோடு இவரால் வெளியிடப்பட்டன. இவர்களுக்கு நாவலர் பெருமானிடத்திருந்த மதிப்பும் ஈடுபாடும் உலகறிந்தவை. இவர் ஈழ-இந்தியத்தொடர்பை மிக்க உரம் பெறச் செய்துள்ளார். இவர் யாழ்ப்பாணத்திற் சிறுப்பிட்டி என்னும் ஊரில் வைரவநாதரின் புதல்வராகப் பிறந்தவர்.

சிவசம்புப் புலவர்

நாவலர் பெருமான் காலத்திலேயே வசித்த சிவசம்புப் புலவர் இந்திய-ஈழத்தொடர்பைப் பெருகச் செய்தவர்களில் மற்றொருவர். இவர் யாழ்ப்பாணத்துள்ள உடுப்பிட்டியைச் சேர்ந்தவர். இளம்பிராயத்திலேயே கவிபாடும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர். இராமநாதபுரம் இரவிகுல விஜய ரகுநாத பாஸ்கர சேதுபதி மீது கல்லாடக் கலித்துறையும், நான்மணிமாலையும், இரட்டைமணி மாலையும் வேறு தனிக்கவிகளும் பாடிச்சென்று, அவர் முன்னிலையிலேயே வித்துவான்கள் பலர் கூடிய சபையிலே அரங்கேற்றி, அவர் மதிப்பும் பரிசிலும் பெற்றவர். இவர் பாடிய பிரபந்தங்கள் ஏறக்குறைய அறுபது வரையிலுள்ளன. இவர் நாவலர் பெருமானிடத்துப பெருமதிப்பும் ஈடுபாடும் உடையவர். இவர் நாவலர் பெருமான் மீது பாடிய இரங்கற்பாக்கள் மிக உருக்கமானவை.

சங்கர பண்டிதர்


யாழ்ப்பாணத்து நீர்வேலியைச் சேர்ந்த சங்கர பண்டிதரவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்த சமஸ்கிருத பண்டிதர்களுள்ளே தலைசிறந்தவர். ஆகமங்களிலும் வல்லுநர். சித்தாந்த நூல்களினும் வல்லுநர். இவர் இயற்றிய நூல்கள் சைவப்பிரகாசனம், சத்தசங்கிரகம், அகநிர்ணயத் தமிழுரை, சிவபூசையந்தாதியுரை, கிறீஸ்துமத கண்டனம், அநுட்டானவிதி முதலியனவாகும். இவர் நாவலர் பெருமான் காலத்தவர் என்பது பெரிய புராண வசனத்திற்கு இவரளித்த சிறப்புப் பாயிரத்தானறியப்படும்.

காசிவாசி செந்திநாதையர்

இவர் யாழ்ப்பாணத்துள்ள ஏழாலையூரிலே பிறந்தவர். 1872ஆம் ஆண்டிலே வண்ணையில் நாவலரவர்களால் நிறுவப்பெற்ற சைவ வித்தியாசாலையிலே ஆறுவருடமும், அவருடைய ஆங்கில வித்தியாசாலையில் ஒரு வருடமும் ஆசிரியராக இருந்து கற்பித்தவர். பின், இந்தியா சென்று பல தலங்களையுந் தரிசித்தவர். 1888ஆம் ஆண்டு தொடங்கி 1898ஆம் ஆண்டு வரையும் காசியிலே வசித்து வந்தார். அதனால் இவர் ''காசிவாசி செந்திநாதையர்'' என அழைக்கப்படலாயினர். சிவஞானபோத வசனாலங்கார தீபம், தேவாரம், வேதசாரம் தத்துவ விளக்க மூலமும் உரையும், சைவ வேதாந்தம் என்னும் அரிய நூல்களையும் கண்டன நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். சைவத்தொண்டு பெரிதும் புரிந்தவர்.

சபாபதி நாவலர்

யாழ்ப்பாணத்துள்ள வடகோவையில் சுயம்புநாத பிள்ளையின் புதல்வராகப் பிறந்த இவர் நீர்வேலிச் சங்கர பண்டிதரிடம் தமிழும் வடமொழியுங் கற்றவர். நாவலர் பெருமானிடமும் வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை யவர்களிடமுஞ் சில நூல்களைக் கற்றனர் என்ப. இவர் சிலகாலம் நாவலரவர்களாற் சிதம்பரத்தில் நிறுவப்பெற்ற சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர். பின்,



நாவலர் சிவபதம் அடைந்த பிறகு, அன்னரின் அச்சகம்
இருந்த கட்டிடத்தை விலைக்கு வாங்கி, தமிழ்த் தொண்டு
புரிந்தவரும், நாவலரின் அபிமானியும், நாவலரைப்
போல ஓர் உருவப்படம் தயாரிப்பதில் முன்னின்று
உழைத்தவரும் "யாழ்ப்பாணச் சரித்திரம்"
எழுதியவருமான முத்துத்தம்பிப்பிள்ளை.

— உபயம் தென்புலோலியூர் : மு. கணபதிப்பிள்ளை.

திருவாவடுதுறை யாதீனப் புலவராயுந் திகழ்ந்தவர். உயர் தமிழ் நடையிற் சொற்பொழிவாற்றும் ஆற்றலுடையவர். இவர் சிவஞான பாடியத்தைத் தெளிவுறக் கற்றுச் சித்தாந்த முடிபுணர்ந்து சிவஞான முனிவரைக் குல தெய்வமாகக் கொண்டவர். சிதம்பர சபாநாதர் புராணம், சிவ கருணாமிர்த மொழிபெயர்ப்பு, பாரததாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம் என்னுஞ் செய்யுள் நூல்களையும் இயற்றினர். எனினும், இவர் எழுதிய திராவிடப் பிரகாசிகையென்னும் நூலே இவருக்குத் தனிப்பெருமையளித்தது. இதுவே முதன்முதலாகத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கூற எழுந்த நூலாகும். இந்திய-ஈழத் தொடர்பை வளர்த்தவர்களுள் இவரும் ஒருவராவர்.

வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை

யாழ்ப்பாணத்து நல்லூரிற் பிறந்த வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை நாவலர் பெருமானுக்கு மருகரும் மாணாக்கருமாவர். இளம் பூரணம், நச்சினார்க்கினியம் முதலிய உரைகளோடு தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கந்தபுராணம், இராமாயணம் முதலிய இலக்கியங்களையும் பலமுறை ஆராய்ந்து கற்றவர். பல மாணவர்க்குங் கற்பித்தவர். பரிமேலழகருரையை ஒருபோதும் மறவாதவர். பாரதத்தில் ஆதிபருவத்துக்கும், மயூரகிரிப் புராணத்துக்கும் உரை செய்தவர். கந்தபுராணம் முதலிய புராணங்களுக்கும் இராமாயணத்துக்கும் அறிஞர் பேரவைகளில் அரிய விரிவுரை நிகழ்த்தியவர். இராகத்தோடமைந்த இனியமிடற்றோசையும் வாய்க்கப்பெற்றவர். இராமாயணப் பொருளுணர்ச்சியில் இணையில்லாதவர். வித்துவ சிரோமணி என யாவராலும் புகழப்பட்டவர். அடியேனுடைய ஆசிரியராகிய மகாவித்துவான் மறைத்திரு. சி. கணேசையர் அவர்கள் இவரது அபிமான மாணவர்களிலொருவர். இவரது உரை கூறுந் திறனையும் நுட்பத்தையும் மகாவித்துவானவர்கள் கூறயாம் கேட்டுத் தெளிப்பதுண்டு.

ஆறுமுகத் தம்பிரான்

இவர் யாழ்ப்பாணத்தவர். இளமைக் காலத்திலே இவர் நாவலர் பெருமானுல் நடாத்தப் பெற்ற பாடசாலையில் மாணவனாகிக் கற்று நைட்டிகப் பிரமசாரியாய் வாழ்ந்தவர். சிலகாலம் வண்ணை நாவலர் கலாசாலையில் ஆசிரியராகவுங் கடமையாற்றியவர். சிலகாலங்கழிய, திருவண்ணாமலைக்குச் சென்று அங்குள்ள ஆதீனத்திற் சேர்ந்து மகாசந்நிதானமவர்களிடம் தீட்சை பெற்றுக் காஷாயம் தரித்துக் கொண்டவர். அவ்வாதீனத் தம்பிரானாகவும் விளங்கியவர். மெய்கண்ட சாத்திரங்களை நன்கு கற்றவர். இவர்கள் பெரிய புராணத்துக்கு எழுதிய திட்ப நுட்பம் வாய்ந்த உரையே பெரிய புராணத்துக்கு முதன்முதலாக எழுதப்பெற்ற உரை என்ப . அன்றியும் திருமுறை கண்டபுராணம், சேக்கிழார் புராணம், அற்புதத் திருவந்தாதி, மூத்த நாயனார் இரட்டைமணிமாலை முதலியவற்றுக்கும் இவர் உரை எழுதியுள்ளார்.

கார்த்திகேய ஐயர்

யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்த வேங்கடாசல ஐயருக்குப் புதல்வராகப் பிறந்த இவர் இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் இலக்கண இலக்கியங்கள் நன்கு கற்றவர். தமிழிலும் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் சிறந்த அறிவு படைத்தவர். வேதாந்த சித்தாந்த நூல்களுந் தேர்ந்தவர். இவர் வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்திலும் பிறவிடங்களிலும் நாவலர் பெருமானேடு பல பிரசங்கங்களை நிகழ்த்தியவர்.

நா. கதிரைவேற்பிள்ளை

யாழ்ப்பாணத்துப் புலோலியைச் சேர்ந்த இவர் இளமைப் பருவத்தில் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்னை சென்று ஆங்கு தமிழ், சமஸ்கிருதம் என்னும் இரு மொழிகளையுங் கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர். அக்காலத்தில் சென்னையில் இருந்த திரு. கனகசுந்தரம்பிள்ளையிடம் தொல்காப்பியமும் வேறு நூல்களும் கற்றவர். சொற்பொழிவாற்றுவதில் மகாசமர்த்தர். மாயாவாதிகளைக் கண்டிப்பதில் இவருக்குள்ள ஆர்வம் நோக்கி மாயாவாத தும்சகோளரி என்று இவர் அழைக்கப்பெற்றவர். காசிவாசி செந்திநாதையரே இவருக்கு இப்பட்டத்தை வழங்கியவரென்பர். திரு. வி. உலகநாத முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இருவரும் இவர்தம் மாணாக்கர். இவர் சிலகாலம் ஆரணி சமஸ்தான வித்துவானாகவும் விளங்கினவர். இவர் இயற்றிய நூல்கள் கூர்ம புராணவுரை, சைவசந்திரிகை, பழநித்தல புராணவுரை, சைவசித்தாந்தச் சுருக்கம், யாழ்ப்பாண தமிழகராதி முதலியன. இவர் இராமலிங்க அடிகளின் அருட்பாவை மருட்பாவென்று கண்டனஞ் செய்தவர். அதுபற்றி எழுந்த வழக்கிலும் வெற்றிபெற்றனர். இவர் கவிகளும் பாடியுள்ளார்.

குமாரசுவாமிப் புலவர்

1850ஆம் ஆண்டு தொடக்கம் 1922ஆம் ஆண்டுவரை வாழ்ந்த சுன்னாகம் குமாரசுவாமிப்

புலவரவர்கள் கல்வித்துறையில் ஈழ நாட்டுக்குப் பெரும்புகழ் ஈட்டித்தந்தவராவர். இவர் ''செந் தமிழ்'' ப் பத்திரிகைக்கு எழுதிவந்த அரிய கட்டுரைகளைத் தமிழகம் முழுவதும் படித்துப் பாராட்டின. இவர் தமிழ்ப் புலவர் சரிதம், சிசுபாலவதம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். இராமாவதாரத்துப் பாலகாண்டத்தைத் திருத்தப் பதிப்பாக வெளியிட்டு அதற்கு ஓர் அரும்பத வுரையும் எழுதியுள்ளார். கலிசைச் சிலேடை வெண்பாவுக்கு இவர் எழுதிய உரையே முதன் முதலாக அந்நூலுக்கு எழுதப்பட்ட உரையாகும். இவர் எழுதிய விளைப்பகுபத விளக்கம் என்னும் நூல் இவர்தம் நுண்மாணுழை புலத்துக்குச் சான்று பகரும். இன்னும் இவர் செய்தவற்றை யெல்லாம் கூறப் புகின் பெருகும்.

நாவலர் மாணவர்கள்

இவ்வாறே நாவலர் பெருமான் காலத்திருந்த புலவர்கள் பலராவர். அவர்கள் ஒவ்வொருவர் வரலாற்றையும் விரிவாகச் சொல்ல இக்கட்டுரை இடந்தராது. இனி, நாவலரவர்களுடைய மாணாக்கராய் விளங்கிய அறிஞர் பலராவர். சதாசிவப் பிள்ளை, உரையாசிரியர் மட்டுவில் திரு. ம. க. வேற்பிள்ளையவர்கள், நாவலரவர்களுக்கும் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளையவர்களுக்கும் மாணவராயிருந்தவரும் ''தர்க்கசூடாமணி'' என எவராலும் மழைக்கப்பட்டவருமாகிய நல்லூர் திரு. வை. திருஞானசம்பந்தப்பிள்ளை, திரு. வை. விசுவநாதபிள்ளை, திரு. ச. பொன்னம்பலபிள்ளை, திரு. கயிலாயபிள்ளை போன்ற பலர் இங்குக் குறிப்பிடத்தக்கவராவர். அவர்கள் ''நாவலர் மாணாக்கர்'' என்ற தலைப்பிற் பேசப்படத்தக்கவர்களாதலின் இதனோடு என் கட்டுரையை நிறைவுசெய்து கொள்கின்றேன். நாவலரவர்கள் காலம் தமிழ்ப் பணியும் சைவப்பணியும் சமூகப்பணியுஞ் செய்த பல பெரியார்கள் வாழ்ந்த காலம்; அவர்களுள்ளே நாவலர் பெருமான் முன்னின்று வழிகாட்டி வாழ்வாங்கு வாழ்வதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர். நாவலர் வாழ்க. அவர் திருநாமம் என்றும் வாழ்க. அவர் காலத்துப் புலவர்கள் பெயர் சிறக்க நாவலர் நற்பணி ஞாலமெல்லாம் ஓங்குக.

''ஓங்கனுபூதி
சித்தியுற் றமைந்த சிவசிந்தாமணி
கற்றுணர் புலவருட் களிக்கு
முற்றுணர் ஆறு முகநாவலனே''

—மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

வசனநடை கைவந்த வல்லாளர்

''சிறந்த பதிப்பாசிரியர், ஆழ்ந்த சமயாசிரியர், தேர்ந்த உரைநடை ஆசிரியர் ஆவார் நம் ஆறுமுக நாவலர். இலக்கண வழு இல்லாத தூய்மையான எளிய நடையை முதன்முதல் கையாண்டவர் நாவலரேயாவர். நாவலர் இறந்ததைச் செவியுற்ற ஒரு புலவர், 'வைதாலும் வழுவின்றி வைவாரே' எனப் புலம்பிக் கூறுகிறார். குழந்தைக்கென்று வயது வாரியாகப் பல பாட நூல்களை இயற்றியுள்ளார். இவ்வாறு தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றிய ஆறுமுக நாவலரை 'வசன நடை கைவந்த வல்லாளர்' எனப் பரிதிமாற் கலைஞர் பாராட்டுகிறார்.''

— எம். ஆர். அடைக்கலசாமி, எம். ஏ.

''தமிழ் இலக்கிய வரலாறு'' — பக்கம். 273 — 274



நாவலரின் மருமகனும், புராண உரைவேந்தருமான வித்வ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை. ''பொன்னம்பல புட்கலாவர்த்தம்'' எனப் புகழ் பூத்தவர்.

— உபயம்: தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை.

கு. பூரணச்சந்தர் B. A. Hons.
Advocate, Asst. Legal Draftsman

நாவலருக்குப் பின் தமிழ் உரையாசிரியர்கள்

பல்லாயிரவாண்டு பயின்று வந்தும் பழமை எய்தாப் பைந்தமிழ் மொழியினைப் பேரறிஞர் பற் பலர் காலந்தோறும் இடந்தோறும் வளம்படுத்தி வந்துள்ளனர். சங்ககாலத்தை நோக்கின் அதன் விழுமிய செய்யுளும் அகத்துறைக் காதலும் புறத்துறை வீரமும் தமிழ் நெஞ்சிற் பதியாது போகா. அதே போல தேவாரகாலத்தின் பக்திப் பெருக்கும் இன்சுவைத் தெய்வப்பாக்களும் உள்ளம் கொள்ளைகொள்ளும் தன்மையன. இவ்வாறு காலந்தோறும் இடந்தோறும் புதுப் புதுச் சிறப் பெய்திப் பொலிவுற்று வந்த தமிழ்மொழி சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் ஒருவகையிற் புதுமையெய்திற்று. தமிழ் மொழியின் உரை நடைக்கு வீறுகொடுத்து ஆற்றல் மிக்கதாகச் செய்வதில் ஈழத்திருமணிநாடு தனிப்பெருமை பெற்றது. நம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானே உரைநடையின் தந்தை யெனத் தமிழுலகம் போற்றிப் பணிகின்றது.

இப்படிக் கொள்வதனால் அவருக்கு முன்னர் உரைநடை தமிழில் இருக்கவில்லை என்பதல்லப் பொருள். தமிழ்மொழி தோன்றியபோதே உரை நடையும் தோன்றியதாதல் வேண்டும். எனினும் நம் நாவலர் அவ்வுரைநடைக்குப் புத்துயிரூட்டிப் பலவழிகளிலும் பயன்பட வழிகாட்டி வைத்தமையே அவர் ஆற்றிய சிறந்த தொண்டாகும்.

அன்று நாவலர் தோற்றி வைத்த உரைநடை பல திக்குகளிலும் வேர்விட்டுச் செறிந்து பல்கிப் பெருகிப் பலதுறைகளிலும் கிளைவிட்டுப் பரந்து சென்றுள்ளதை இன்று நாம் காண்கிறோம்.

(i) பாவானியன்றவற்றை எவரும் படித்து ணர்தற்கு இனிமையும் தெளிவுமுற விரித்துரைப் பதற்கு உதவுவது உரைநடை. இதுவே முக்காலத்தும் உரைநடையின் பயனாகவிருந்தது. தாம் எடுத்துக்கொண்ட பாடலை, பகுத்து விளக்கி இலக்கண அமைதி முதலியன கூறி விரித்துரைத்துப் போவாராயினர் பண்டைய உரையாசிரியர்கள்.

(ii) அடுத்து, செய்யுளான் இயன்ற நூல்களின் பெருமையையும் அளவையும் கருதிச் செய்யுள் அறியாதாரும் அந்நூல்களின் உள்ளீட்டை யறிதற்கென அவற்றை முழுநீள உரைநடையாகவோ உரைநடைச் சுருக்கங்களாகவோ படைத்தனர் பலர். இவ்வரிசையில் பெரியபுராண வசனம், சீவகன்சரிதை முதலிய எடுத்துக்காட்டாம்.

(iii) பிறமொழியிலிருந்து தமிழாக்கம் செய்யும் பன்மொழியாற்றல் படைத்தோர் தொண்டும் மெச்சற்குரியது. வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்தோரும், ஆட்சிமொழி ஆனதனால்

ஆங்கில மொழியிலிருந்து தமிழாக்கம் செய்தோரும் பலர். அவர் பிறமொழி நுட்பங்களைக் கையாண்டு தமிழ்மொழி வளனுறச் செய்துள்ளனர்.

(iv) வேறொரு சாரார் தாமே புதுக்கவிபுனைந்தோ, வேற்றுமொழிக் கவிகளைத் தமிழாக்கஞ் செய்தோ அவற்றுக்குத் தாமே உரை எழுதி விளக்கஞ் செய்து போந்தனர்.

(v) மொழிவரலாறு, இலக்கியம் என்பன தொடர்பிலான பொருள் விளக்கக் கட்டுரைகள் பல இக்காலத்து எழுந்துள்ளன. நூல்களை முழுமையாகப் படித்து இன்புற முடியாதார்க்கு இவை இரசனையூட்டுபவை. இத்தொடரில் பணிபுரிந்து வருவோர் மிகப் பலர்.

இவை ஒருபுறமிருப்ப பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் உரைநடை வேறும் பல வழிகளில் முன்னேறியுள்ளது. அன்று நாவலர் இட்ட வித்து இன்று பலன்தருகின்றது எனலாம்.

நாவல், புனைகதை, புதினம் எனப் பலவிதமாக வழங்கும் சிறுகதை எழுதுதல் எத்துணையோ முன்னேறியுள்ளது. நாடகம் எழுதும் பொழுதும் உரைநடை வளம்படுகின்றது.

அறிவியல் மனிதனை மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகுக்கு எடுத்துச் செல்லும் இக்காலத்தில் அத்தகைய அறிவியல்நூல்கள் எமக்குக் கிடைக்க வகைசெய்ததும் உரைநடைதான்.

ஆட்சிமொழி மாற்றத்தால் நம் தமிழ்மொழி அரியணை ஏறும் இக்காலத்துச் சட்டத்துறைத் தமிழாக்கத்துக்கு உறுதுணையாயமைந்தது இவ்வுரைநடை.

மேலும் வசன கவிதைகள் இசைவிளக்கம், கண்டனங்கள், இதழ் வெளியீடுகள் என்பனவும் உரைநடையில் செழுமையால் முன்னேறியுள்ளன. நாவலரின் தொண்டைப் பின்பற்றி அவர் மரபுவழிவந்து இவ்வகைகளில் தமிழ் உரைநடையைக் கையாண்டார். ஈழத்தும் வேறிடத்தும் பலர் உளர். எனினும் ஈண்டு ஈழத்திற்றோன்றிஞரை மட்டுமே எடுத்துக் கூறுதும்.

நாவலர் அவர்கள் உரைநடையைப் பல துறைகளில் பயன்படுத்தியுள்ளார்கள். எனினும் அவர் உரைநடையினைப் பயன்படுத்திய துறைகளுள் ஒன்றான உரையெழுதுதல் மரபினைப் பின்பற்றி எழுந்த உரையாசிரியரை மட்டுமே நாம் இங்கு குறிப்பிடுவோம். நம் கண்ணோடும் காலம் ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகள் எனலாம். இக்காலத்துள் எழுந்த உரையாசிரியர் அத்தனை பேரையும் இங்கு தருதல் முடியாது. எம்மாற் சேகரிக்கக் கூடியனவாயிருந்த தரவுகளின் அடிப்படையில் நாம் அறிந்த உரையாசிரியர்களை மட்டுமே குறிப்பிடுகிறோம். எனவே எவரேனும் ஆசிரியரின் பெயர் இங்கு குறிப்பிடப்படாவிடின் அவரை நாம் புறக்கணித்து விட்டோம் என்றோ அவரைப் பொருட்படுத்தாது விட்டோம் என்றோ கருதுதல் தகாது. உரை என்பது என்ன என்றுஆராய்வதற்கு இங்கு இடமில்லை. உரையாசிரியர் எனப்படுவார் யார்? எவர் எவ்வரை உரையாசிரியர் எனக் கருதலாம் என்பதனைத் துணிவதும் கடினமானது. எனினும் அதனைப்பற்றிச் சிறிது சிந்தித்தலவசியம்.

நாவலர் வாழ்ந்த காலத்திலேயே புராண படனம் என்பன வாயிலாக நூல்களுக்குப் பயன் உரைக்கும் பழக்கமும் நன்கு வேரூன்றியிருந்தது. அறிஞர்கள் பலர் சிறந்த முதனூல்களைத் தெளிவுறக் கற்று அவற்றின் நுண்பொருள் வெளிப்பட அவ்வப்போது வாயால் எடுத்துக் கூறிப்போயினர். இத்தகைய உரையாசிரியர்கள் ஒரு புறமாக, முதநூல்களுக்குச் சிறந்த உரையை எழுதி அச்சுவாகனமேற்றி அழியா உருவு தந்துளார் ஒரு சாரார். உரை எழுதினர் என்று கூறும் பொழுதும் குறிப்புரை, பதவுரை மட்டும் எழுதினர் பலர். பொருள் விரித்து அகலங் கூறினர் பலர். ஆராய்ச்சியுரையாகவும் தெளிபொருள் விளக்க வுரையாகவும் எழுதினர் சிலர். தொல்காப்பியத்துக்கு உரை வகுத்தலையும் நளவெண்பா போன்ற வற்றுக்கு உரை வகுத்தலையும் ஒரு பெற்றியது என்னலாகாது. முதனூலின் தன்மை அதன் அளவு என்பவற்றிற்கேற்ப உரை எழுதுவதற்கு வேண்டும் ஆற்றலும் புலமையும் ஆக்கமும் முயற்சியும் வேறுபடும். இத்தகைய வேறுபாடுடையனவான உரைகளைத் தாமும் எத்தனை நூற்கெழுதினர் என அந்நூற்களின் தொகைகொண்டும் அவ்வாசிரியன்மார்களின் தன்மை வேறுபடும். இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து எடை போட்டுத் துணிதல் எவர்க்கும் இயலாது. பொதுவாகத் தமிழுலகம் உரையாசிரியர்களென உவந்து ஏற்றுள்ளவர்களையே நாமும் இங்கு எடுத்து ஓதுவோம்.

நாம் ஆராயப்புகும் உரையாசிரியர்களையும் அவர் வாழ்ந்த ஆண்டுமுறைப்படி இயன்ற வரையில் நெறிப்படுத்தியே இங்கு கவனிப்போம். அடுத்து உரையாசிரியர்க்குப் பொதுவாக ஏற்புடைய சில குறிப்புகளைக் கூறி அவர்களை ஒவ்வொருவராக அறிய முயல்வோம்.

உரை எழுதுபவர்க்கு முதனூலின்கண் திற மையான அறிவு வேண்டும். முதநூலாசிரியன் உள்ளத்தை, உள்ளப்பாங்கை அறியக்கூடுமாயின் உரைவளம் அத்துணையளவுக்குச் சிறக்கும். உரை யாசிரியரின் ஆற்றலுக்கேற்பவே முதனூலின் நுண்பொருள் பிறர்க்குத் தெளிவுறும். இது தொடர்பில் பண்டைய உரையாசிரியர்களான இளம் பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், மணக்குடவர் என்போரின் இலக்கிய, இலக்கண அறிவாழமும் நுண்மாண்நுழைபுலச் செம்மையும் வியக்கத்தக்கன. நம்மிடையிற் ரேன்றினருள்ளும் அத்துணைச் சிறந்தோருமுளர் என்பது சொல் லாதே போதரும்.

ஆறுமுகத்தம்பிரான்

இவரை யாழ்ப்பாணத்தவர் என்பர் சிலர். இந்தியாவிலுள்ள கருவூரைச் சேர்ந்தவர் என்பர் வேறு சிலர். ஸ்ரீ ஆறுமுகநாவலரிடம் பாடங் கேட் டார் என்பர். பின் திருவண்ணுமலை ஆதீனத்தை அடைந்து அங்கு சைவசித்தாந்த நூல்கள் பல வற்றைக் கற்று, பெரியபுராணத்துக்குச் சிறந்த தோர் உரை செய்தார். இவரது பெரியபுராண உரை இவரின் சொல்வன்மையையும் மதிநுட்பத் தையும் புலப்படுத்தும் தகையது. அது 1885 முதல் 1889 வரை பகுதி பகுதியாக வெளியிடப் பட்டுள்ளது.

இத்துணைத்தாகச் சைவசமயத் தத்துவங் களையறிந்திருந்தும், 1836 ஆம் ஆண்டில் கிறீத் தவ சமயத்தைச் சேர்ந்து வெஸ்லி ஆபிரகாம் என்னும் பெயர் பூண்டு அம்மதம் சார்பான நூல் களைத் தமிழில் எழுதுவாராயினர். அவற்றுட் சில அஞ்ஞானக்கும்மி, அஞ்ஞானம், இரட்சகர் அவ தாரம், நரகம் மோக்ஷம் என்பன. இவை 1878 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

சங்கரபண்டிதர் (1821 - 1891)

இவர் சுன்னாகத்தில் சிவகுருநாதர் என்பவர்க் குப் புதல்வராகப் பிறந்தார்கள். நீர்வேலியில் வாழ்ந்து வந்த இவர் சிறுவயதிலேயே தமிழிலக் கண விலக்கியங்களைச் செவ்வனே கற்றார். வேதா ரணியத்திலே சுவாமிநாததேசிகரிடம் வடமொழி வியாகரணம், தருக்கம், காவியம் என்பவற்றைக் கற்றார்கள். வடமொழிப் பண்டிதர்களுள் இவர் தலைசிறந்தவர். சுன்னாகம் முருகேச பண்டிதர், கீரிமலைச் சபாபதிக்குருக்கள் என்போர் இவரிடம் பாடங்கேட்டவர்கள். சிவப்பிரகாசப் பண்டிதர் இவர் மைந்தனுவர்.

இவர் இயற்றிய உரை நூல்கள் சிவபூசையந் தாதி உரை, அகநிர்ணயத் தமிழுரை என்பன வாம். இவரது ஏனைய நூல்களுட் சில சைவப்பிர காசனம், சப்தசங்கிரகம், சிவதூஷண கண்டனம், அனுட்டான விதி என்பன.

ச. வயித்திலிங்கம்பிள்ளை - வல்வை (1852—1901)

வல்லுவெட்டித் துறையைச்சேர்ந்த சங்க ரக்குரிசில் என்பவர் மைந்தன் இவர். சிறு வயது முதல் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடம் தமி ழிலக்கண விலக்கியங்களை முறைப்படி கற்றார். பின்னர் இந்தியா சென்று வடமொழியினையும் நன்கு கற்றுக்கொண்டார்கள். இந்தியாவிலும் தம்புகழ் நிறுவிய தமிழ்வாணர் இவர். இவர் தாமே பல நூல்களையாக்கியுள்ளார். பல நூல் களுக்கு உரையும் எழுதியுள்ளார்கள். அது மட்டு மின்றிப் பல நூல்களைப் பதிப்பிக்கவும் உதவி செய்துள்ளனர். இவற்றுக்கென ஓர் அச்சகத் தையே நிறுவியிருந்தார்கள்.

இவரது உரைகள் — கந்தபுராணம் அண்ட கோசப் படலவுரை,

தெய்வயானையம்மை திருமணப் படலவுரை, வள்ளியம்மை திருமணப் படலவுரை,

நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் இயற்றிய கல் வளையந்தாதிக்கான உரை, கந்தரலங்கார உரை என்பனவாம்.

இவர் இயற்றியன — சிந்தாமணி நிகண்டு, செல்வச்சந்நிதி முறை, வல்வை வயித்தேசர் பதிகம் என்பன.

இவர் பதிப்பித்தன — நாற்கவிராச நம்பி, அகப்பொருள் உரை, சிவராத்திரி புராணம், சூடாமணி நிகண்டு முதலியன.

ந. ச. பொன்னம்பலம்பிள்ளை (1836 - 1902)

நல்லூரிலே சரவணமுத்துப்பிள்ளைக்குப் புதல் வராக இவர் பிறந்தார். இவர் தாயார் ஆறுமுக நாவலரின் சகோதரியாவர். சிறுவயதிலே கார்த்தி கேய உபாத்தியாயரிடமும் பின்னர் ஆறுமுகநாவ லர் அவர்களிடமும் இலக்கியம், இலக்கணம் பல வும் கற்றனர். நூல்களைக் துருவித் துருவி ஆரா யும் இயல்பு படைத்தவர். இதனால் சொல்வன் மையும் பொருள் காணும் ஆற்றலுமிக்கவர். பெரியபுராணம், கந்தபுராணம், இராமாயணம் முதலியவற்றுக்கு நுட்பமாகப் பொருள் கூறும் ஆற்றலில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்.

இலங்கையில் மட்டுமன்றி இவரிடம் பாடங்கேட்டோர் இந்தியாவிலும் பலராவர். உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, வித்துவான் கணேசையர் இவர் மாணவராவர். நற்றிணை நாராயணசாமி ஐயரும் இவரும் நெருங்கிய நண்பினர்.

இவர் பல நூல்களுக்கு உரை எழுதினர்எனத் தெரிகிறது. பாரதத்தில் ஆதிபருவத்துக்கும் மயூரகிரிப்புராணத்துக்கும் விரிவான உரை எழுதி வெளியிட்டுள்ளார்கள். அரசகேசரியின் இரகுவமிசம் இவராலே அச்சேற்றப்பட்டது.

அம்பிகைபாகப் புலவர் (1854 - 1904)

அம்பிகைபாகப் புலவர் யாழ்ப்பாணத்து இணுவிலில் பிறந்தவர். இவர் ஆறுமுகநாவலரிடம் சில நூல்களுக்குப் பாடங்கேட்கும் வாய்ப்புப் பெற்றவர். சிவஞான சித்தியார் முதலிய சித்தாந்த நூல்களையும் நன்கு பயின்றவர். இவர் காலத்தவரான சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் இவரும் நண்பர்கள். தமிழ்ப் பணியில் இருவரும் சேர்ந்து உழைத்தவர்கள். மகாவித்துவான் சி. கணேசையர் இவரிடம் சில நூல்கள் பாடங்கேட்டார் என்பர்.

இவர் தணிகைப் புராணத்துக்கு நகரப் படலம்வரை சிறந்தவோர் உரை எழுதியுள்ளார்கள். செய்யுள் யாப்பதிலும் வசனநடையைக் கையாள்வதிலும் வல்லுநர் என்பது அவரது நூல்களிலிருந்து தெளிவாகும். இணுவையந்தாதி, சூளாமணி வசனம் என்பன இவர் ஆக்கியவை.

நா. கதிரைவேற்பிள்ளை (1844 - 1907)

கதிரைவேற்பிள்ளை அவர்கள் புலோலியைச் சேர்ந்தவர்கள். சிறுவயதிலேயே சென்னைக்குச் சென்று அங்கு த. கனகசுந்தரம்பிள்ளை அவர்களிடம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைப் பாடங்கேட்டறிந்தது மன்றிப் பல இலக்கிய நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் பிறரிடத்தும் பாடங்கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். மிக்க வசக்குவன்மை படைத்தவராதலின் சொற்பெருக்காற்றுவதிலும் புகழீட்டிக் கொண்டனர். சைவசித்தாந்தசரபம், மாயாவாததூமகேதனம் என்பன அவர் பெற்ற பட்டங்கள். திரு. வி. கலியாணசுந்தரனார் இவரிடம் பாடங்கேட்டவர் என்பர்.

இவர் ஆக்கிய நூல்கள் பல. சைவசந்திரிகை, சைவசித்தாந்தச் சுருக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம், சிவாலய மகோற்சவ விளக்கம் என்பன சில. தமிழ் அகரவரிசை ஒன்றையும் ஆக்கியுள்ளார்கள். கூர்மபுராணம், பழநித் தல புராணம் என்பவற்றுக்கு இவர் எழுதியுள்ளவுரை அவரின் சொல்வன்மைக்கும், உரை நயத்துக்கும் சான்றாகும்.

சிவசம்புப் புலவர் (1830 - 1910)

சிவசம்புப் புலவர் அவர்கள் உடுப்பிட்டி எனும் ஊரில் வாழ்ந்த அருளம்பல முதலியாருக்கு மகனாகத் தோன்றியவர்கள். சிறுவயதிலிருந்தே தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், இராமாயணம், பாரதம் முதலிய நூல்களையும் பிற நூல்களையும் தக்கார் வாய்ப் பாடங் கேட்டவர். இளம் பராயத்திலேயே கவி பாடும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர். ஈழத்திலன்றி இந்தியாவிலும் புகழ் விளங்கச் செய்தவர். பாஸ்கரச் சேதுபதி மன்னர் சமஸ்தானத்தில் அவரால் பல புலவர்கள் முன்னிலையில் கௌரவிக்கப்பட்டவர். இவர் நாவலர் காலத்தில் வாழ்ந்தவர். அம்மகானாலேயே புலவர் எனும் பட்டமும் வழங்கப்பட்டவர்.

இவர் ஆக்கிய நூல்கள் பல்வகையன. பாஸ்கரசேதுபதி கல்லாடக்கலித்துறை, பாஸ்கரசேதுபதி நான்மணிமாலை, இரட்டைமணிமாலை, கந்தவன நாதர் பதிகம், வல்லிபுரநாதர் பதிகம், செந்தில்யமகவந்தாதி, திருவேரகவந்தாதி, புலோலி நான்மணிமாலை, திருச்செந்திற்றிருவந்தாதி என்பன அவரின் செய்யுள் நூல்களுட் சில. அவர் இயற்றிய உரைகள் மறைசையந்தாதி உரை, யாப்பருங்கலக்காரிகையுரை, கந்தபுராணம், வள்ளியம்மை திருமணப்படல உரை என்பனவாம்.

சிவப்பிரகாச பண்டிதர் (1864 - 1916)

நீர்வேலிச் சங்கர பண்டிதரின் புதல்வர் இவர். தந்தையாரைப் போன்றே வடமொழி தமிழ் ஆகிய இரண்டிலும் பாண்டித்தியம் பெற்றவர். தந்தையாரிடத்திலேயே தொல்காப்பியம் முதலிய தமிழ் இலக்கண நூல்களையும், மாகம், இரகுவமிசம் முதலிய வடமொழி நூல்களையும் நன்குபாடங் கேட்டவர். வடமொழி வியாகரணத்தினை நன்குகக் கற்றவர். இருமொழிகளிலும் கவிபுனையும் ஆற்றல் வாய்ந்தவர்.

பாலாமிர்தம், பாலபாடம் என்பன அவர் இயற்றிய நூல்களாகும். தமிழில் உரைகாணும் திறமை நன்கு பெற்றவர். திருச்செந்தூர்ப் புராணத்துக்கு இவர் தந்த உரை இதற்குப் போதிய சான்றாகும். வடமொழியில் சங்கராசார்ய சுவாமிகள் செய்த சிவானந்தலகரிக்கும், புத்தூர் சு. சிற்

றம்பல முதலியார் வேண்டுகோளின்படி, தமி முரை ஒன்று வகுத்துள்ளார்கள் (1889).

மு. திருவிளங்கம்

மானிப்பாயிற் பிறந்த திருவிளங்கம் அவர் கள் தமது தொழில் முயற்சி காரணமாகக் கொழும்பிலே வாழ்ந்துவந்தனர். வழக்கறிஞராக வும் நொத்தாரிசு ஆகவும் ஈடுபட்டிருந்தார். தமது பல தொழில்களிடையேயும் தமிழ் நூல் களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் கற்றுவந்தார்கள். அதன் பயனகச் சிவஞான சித் தியார் போன்ற நூல்களின் பொருளாழம் காணும் திறமை பெற்றார்கள்.

உமாபதி சிவாசாரியார் இயற்றிய சிவப்பிர காசத்துக்கு அரியதோர் உரையினை இவர் ஆக்கி யுள்ளார்கள். சிவஞானசித்தியார்க்கும், அருண கிரிநாதர் கந்தரலங்காரம், திருப்புகழ் என்பவற் றுக்கும், மதிநுட்பம்வாய்ந்த சிறந்த உரை எழுதி யுள்ளார்கள்.

சுன்னகம் அ. குமாரசாமிப் புலவர் (1854 - 1922)

உடுவிலைச் சேர்ந்த முத்துக்குமார கவிராயர் மரபிலே அம்பலவாணர் என்பார்க்கு இவர் புதல் வராக அவதரித்தார்கள். இளவயதிலிருந்தே தமிழ்மொழி, வடமொழி இரண்டையும் கற்றுத் தேறினர். ஆங்கிலத்திலும் புலமை எய்தினர்.

ஏழாலைத் தமிழ்ப்பாடசாலை, வண்ணார் பண் ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை முதலியவற் றில் ஆசானுக அமர்ந்து பணிபுரிந்தவர்கள். 1910 ஆம் ஆண்டு மதுரையில் பெருஞ்சிறப்புச் செய்யப்பட்டவர். அதனையடுத்து திருவாவடு துறை அம்பலவாண தேசிகரால் கௌரவிக்கப் பட்டுப் பரிசிலும் வழங்கப்பட்டனர்.

இவர் ஆழ்ந்த புலமையும் சிறந்த சொல்வன் மையும் நுண்பொருள் நுவலும் திறனும் வாய்க் கப் பெற்றவர். இதோபதேசம், கண்ணகிகதை, தமிழ்ப் புலவர் சரித்திரம், சிசுபால சரித்திரம் என்பன வசன நூல்களுட் சில. இராமோதந்தம் பாவானியன்ற மொழிபெயர்ப்பு, யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், கலிசைச் சிலேடை வெண்பா, மறைசையந்தாதி, நீதிநெறி விளக்கம் என்பனவற்றுக்குச் சிறந்த உரைகளும் வகுத்துள் ளார்கள். இவைமட்டுமன்றி, அகராதி ஆக்குதலி லும் கைதேர்ந்தவர். வினைப்பகுபத விளக்கம் என் னும் இலக்கண நூலும் இவர் ஆக்கியதேயாகும்.

தி. த. கனகசுந்தரம்பிள்ளை (1863 - 1922)

திருகோணமலையைச் சேர்ந்த திரு. கனகசுந்த ரம்பிள்ளை கணேச பண்டிதர் முதலியோரிடம் இலக்கணம், இலக்கியம் முதலியவற்றை முறைப் படி கற்றவர். ஆங்கிலம் நன்கு பயின்றவர். பின் னர் சென்னை சென்று அங்கு பயின்று, கலை இளை ஞன் பட்டம் பெற்றார். சிறிதுகாலம் சென்னைக் கிறித்த கல்லூரியிலும் பின்னர் பச்சையப்பன் கல் லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினர். அவர் தமிழாராய்ச்சியிலும் நூல்களைப் பதிப்பித் தலிலும் ஆர்வம் கொண்டவராய்ப் பலர்க்கும் உதவி புரிந்தார். இவரிடம் பாடங் கேட்டோர் பலர். கந்தசாமி முதலியார், மணி திருநாவுக்கரசு முதலியார், நா. கதிரவேற்பிள்ளை என்போர் அவர்களுட் சிலர்.

தொல் எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை, தொல்-சொல் சேனாவரையர் உரை, என் பன இவராற் பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட் டவை. நாராயணசாமி ஐயரவர்களின் நற்றிணை யுரையும் வெளிவர உதவிபுரிந்தவர் இவரே. இல் லாண்மை என்பது இவரியற்றிய உரை நடை நூலாகும். சுன்னகம் குமாரசாமிப் புலவ ருடன் சேர்ந்து நம்பியகப் பொருளுக்கும் கம்ப ராமாயணம் பாலகாண்டத்துக்கும் உரை எழுதி யுள்ளார்கள்.

ச. பூபாலபிள்ளை (1856 - 1921)

மட்டுநகரிலே சதாசிவம்பிள்ளைக்கு மகனகப் பிறந்தார். ஆங்கிலம், தமிழ், கணிதம் என்பவற் றைச் சிறப்புடன் கற்றார். இலிகிதர் சேவையிற் சேர்ந்த பொழுதும் தமிழ் கற்பதில் ஊக்கம் கொண்டிருந்தார். தருக்கம், நிகண்டு, தொல் காப்பியம் முதலிய நூல்களைக் கற்றார். சுன்னைக் குமாரசாமிப் புலவர், திருகோணமலை கனகசுந் தரம் பிள்ளை, பூவை கலியாணசுந்தர முதலியார் என்போர் நட்பும் எட்டியது.

செந்தமிழ் முதலிய ஏடுகளில் வெளிவந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் வியக்கத்தக்கன. சில காலம் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சகராகப் பணிபுரிந்தனர். இவர் இயற்றிய நூல்கள் பல. திருமுகர் பதிகம், சீமந்தனி புராணம் - (இது வல்வை வைத்தியலிங்கத்தினால் வெளியிடப்பட் டது). விநாயகர் மான்மியம், புளியநகர் ஆனைப் பந்தி விக்கினேசுவரர் பதிகம், சிவ தோத்திரம், யாழ் அரசடி விநாயகர் அகவல், கணேசர் கலி வெண்பா, என்பன சில. தமிழ் வரலாறு என்னும் ஆராய்ச்சிநூல் இவரின் திறனைப் புலப்புடுத்துகின்

றது. சிறந்த சொற்பொழிவாளராயும் ஆழ்ந்த ஆராய்ச்சியாளராயும் விளங்கிய வித்துவான் ஓர் உரையாசிரியரும் ஆவர். பண்டிதமணி நவநீத கிருட்டினபாரதியாரின் உலகியல் விளக்கம் என்னும் செய்யுள் நூலுக்குச் சிறந்ததோருரை எழுதியுள்ளனர். அஃது சுவாமி மயில்வாகனனாரால் வெளியிடப்பட்டது.

வ. குமாரசுவாமிப்புலவர் (- 1925)

வ. குமாரசுவாமிப் புலவர் புலோலியைச் சேர்ந்தவர்கள். உடுப்பிடிச் சிவசம்புப்புலவரிடம் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். பின்னர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளையவர்களிடத்திலும்பாடங் கேட்டு மிகுந்த புலமையெய்தினர். வண்ணார் பண்ணை இந்துக்கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகப் பணிபுரிந்தார்கள்.

இவரது தமிழ் இலக்கண அறிவின் ஆழமும் பொருள் காண்பதிலுள்ள நுண் அறிவும் இவர் எழுதிய நன்னூற் காண்டிகையுரை விளக்கத்தாலும், பாரதம் சபாபருவ உரையாலும் நன்கு அறியப்படும். உளநூல் ஆராய்ச்சியில் புலமை படைத்த டக்டர் சிவப்பிரகாசம் என்பார் இவரது புதல்வராவர்.

வேற்பிள்ளை ம. க. (1847 - 1930)

மட்டுவிலைச் சேர்ந்த க. வேற்பிள்ளையவர்கள் மட்டுவில் கணபதிப்பிள்ளை உடையாரின் புதல்வராவர். முதலில் மட்டுவில் சண்முகம்பிள்ளையாசிரியரிடம் கற்றுப் பின் நல்லூர் கார்த்திகேயப் புலவரிடமும் பிறரிடத்தும் பாடங் கேட்டார்கள். இவர் ஆறுமுகநாவலரிடமும் பாடங்கேட்கும் வாய்ப்புப் பெற்றவர். பலகாலம் சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயின்று வந்தவர். இவர் செய்யுள் யாத்தலில் வல்லவர்.அதனால்''பிள்ளைக்கவி'' எனும் பெயர் பெற்றார்.

ஈழமண்டல சதகம், புலோலி வயிரவக் கடவுள் தோத்திரம் என்பன அவர் இயற்றியவை. இவர் உரை எழுதுவதில் சிறப்புப் பெற்றவர். இவர் திருவாதவூரர் புராணத்துக்கு எழுதிய உரை சிறப்புவாய்ந்தது. அதனால் உரையாசிரியரெனும் சிறப்புப்பெயரும் தேடிக்கொண்டார். புலியூரந்தாதி, அபிராமி அந்தாதி என்பவற்றுக்கும் உரை எழுதியுள்ளார். இவர் வேதாரணிய புராணம், சிவகாமியம்மை சதகம் எனும் நூல்களைப் பதிப்பித்துள்ளார். குருமணி மகாலிங்க சிவமும், இந்துசாதனம் திருஞானசம்பந்தரும் வேற்பிள்ளையின் புதல்வர்களாவர்.

சேர். பொன். இராமநாதன் (1851 - 1930)

மானிப்பாயைச் சேர்ந்த முதலியார் பொன்னம்பலம் அவர்களின் புதல்வர். பொன். அருணாசலம் இவரின் முன்னோன் ஆவர். கொழும்பில் வாழ்ந்து வந்தனராக தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டிலும் மெச்சத்தகு நாவன்மை பெற்றனர். அரசியல் வாழ்வில் ஈடுபட்டவராய் 1879 இல் சட்டசபை உறுப்பினராகிப் பின் 1892 இலிருந்து சட்டத்துறையில் சொலிசிற்றர் ஜெனரலாகப் பணிபுரிந்தார். ஓய்வு பெற்றபின் அமெரிக்கா சென்று பல சொற்பெருக்குகள் ஆற்றிப் புகழ்கொண்டவர். இங்கிலாந்து சென்று ஆட்சி அலுவலரின் செயல்களைக் கண்டித்தார்.

இத்தகைய ஓய்வுறக்கமற்ற வாழ்க்கையின் நடுவேயும் தமிழ் இலக்கியம், இலக்கணம், தருக்கம், சித்தாந்தம் முதலியவற்றை நன்முகக் கற்றவர். 1913 இல் இராமநாதன் பெண்கள் கல்லூரியையும் 1919 இல் பரமேசுவர ஆண்கள் கல்லூரியையும் தாபித்தார்கள். இவர் பகவத் கீதையைத் தமிழில் மொழிபெயர்த்து அதற்குச் சைவசித்தாந்தக் கருத்தை விளக்கி ஒரு விரிவுரையும் எழுதியுள்ளனர். செந்தமிழிலக்கணம், இராமநாதீயம் என்பவற்றையும் ஆக்கித் தமிழ்த் தொண்டும் புரிந்தார்கள்.

ச. பொன்னம்பலபிள்ளை (1870 - 1946)

இவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர். தமிழ்ப் பண்டிதராக இராமநாதன் கல்லூரியில் பல ஆண்டுகள் பணியாற்றியவர். சேர். பொன். அருணாசலம், சேர். பொன். இராமநாதன் ஆகிய இருவரதும் பெருமையை அவர் பெயர்கொண்டமான் மியமாக எடுத்துக் கூறியவர். வேறும் இலங்கை மான்மியம், பனறிக்கிரி அரசன்கோவை என்பனவும் அவர் ஆக்கியனவாம்.

இவர் கந்தபுராணம் மார்க்கண்டேய படலத்துக்குச் சிறந்ததொரு விருத்தியுரை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் (1875 - 1950)

புலோலியைச் சேர்ந்த தும்பளை எனுமிடத்திலே சபாபதி ஐயர் அவர்களுக்குப் புதல்வனுகத் தோன்றினார்., தமிழ், வடமொழி ஆகிய இரண்டினையும் செவ்வனே கற்றவர். இருமொழி வல்லுநரான முத்துக்குமாரசுவாமிக் குருக்களிடம் தமிழிலக்கண விலக்கியங்களையும் வடமொழி, தருக்கம், வியாகரணம், சோதிடம் முதலியவற்றையும் பாடங்கேட்டார்கள். சிறிது காலம் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர் சிறந்த முறையிலானதொரு பஞ் சாங்கம் ஒன்றினைத் தோற்றுவிக்கக் கருதி அதற் கென முயன்று வாக்கிய பஞ்சாங்கத்தினை வெளி யிட்டனர். இதற்கென அச்சகம் ஒன்றும் நிறு வினர். அறிஞர் பலர்க்கு அவர்களின் நூல்களை வெளியிடுவதில் பெரும் உதவி புரிந்தார்கள். சிறந்த சொல்வன்மையும் உரைகாணும் மதிநுட் பமும் இயற்கையாகவே வாய்க்கப் பெற்றவர். சொற்பொருள் எனும் அகராதி ஒன் றினையும் வெளியிட்டுள்ளார்கள். இவர் கந்தபுரா ணத்துக்கு ஆக்கிய உரை மிகச் சிறந்த பொருள் நயம் கொண்டதாகும். இவரது உரைகள்: கந்த புராணம் உரை, நீதிவெண்பா விரிவுரை, கந்த ரனுபூதி உரை என்பனவாம்.

முகாந்திரம். தி. சதாசிவ ஐயர் (-1950)

சதாசிவ ஐயர் அவர்கள் சுன்னாகத்திலே பிறந்தார்கள். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆற்றல் பெற்ற வர். சிறிது காலம் ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் 1910 ஆம் ஆண்டு தொடங்கிக் கல்வித் திணைக்களத்தில் பாடசாலைப் பரிசோதகராக அமர்ந்தார்கள். 1927 ஆம் ஆண்டில் பகுதி வித் தியாதரிசியாகப் பதவியுயர்வு பெற்றார்கள். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகப் பணிபுரிந்தார்கள். சுன்னாகம் பிராசீன பாடசாலை இவரின் முயற்சியி னாலேயே தோன்றுவதாயிற்று.

வடமொழியிலிருந்த ஆற்றல் காரணமாகக் காளிதாச மகாகவியின் இருது சங்காரம் என் னும் நூலை யாப்பாக யாத்து அதற்குத் தாமே விளக்கவுரையும் தந்துள்ளார்கள். தேவி தோத் திரமஞ்சரி என்னும் பாநூலும் சிறந்த மொழி பெயர்ப்பேயாகும். இவரது ஏனைய நூல்கள் தேவிமானச பூசை யந்தாதி, பெருமாக்கடவைப் பிள்ளையார், இரட்டை மணிமாலை என்பனவாம்.

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள நாட்டுப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து வசந்தன் கவித்திரட்டு எனும் பெயருடன் வெளியிட்டார் கள். கரவை வேலன் கோவை, ஐங்குறுநூறு என் பனவும் இவரால் வெளியிடப்பட்டனவாம்.

சு. சிவபாதசுந்தரம் (1878 - 1953)

புலோலியூரிலே சுப்பிரமணிய பிள்ளை என் பாருக்குப் புதல்வராகப் பிறந்தார். கல்வியறி வொழுக்கங்களில் மேம்பட்டவரா யமைந்தன ராதலின் தந்தையாரே பாடஞ்சொல்லி வைப்பா ராயினர். அக்காலத்துப் புலமை பழுத்தவரான வ. குமாரசாமிப் புலவரிடத்தும் பாடங்கேட்கும் வாய்ப்புப் பெற்றார். இந்தியா சென்று கலை இளை ஞன் (B. A.) பட்டம் பெற்று மீண்டு வந்து 1924 ஆம் ஆண்டில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் அதிபராகப் பணிமேற்கொண்டார். அமைதியான வாழ்வையே விரும்பிய இவர்கள் கந்தவனம் முருகன் ஆலயத்துக்கு அருகில் வாழ்த்து வந்தனர். சித்தாந்த சாத்திரங்களையும் புராணங்கள் பற்றிய அறிவுரைகளையும் மாணவர் கட்கு ஊட்டிச் சமயப்பணி புரிந்தார்கள்.

இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்க ளியற்றிச் சைவ சமய விளக்கம் செய்தனர். இவர் திருவருட்பயனுக்குத் தந்த விளக்கவுரை மிகத் தெளிவானதாகும். இவரது ஏனைய நூல் கள், சைவபோதம் I, II, கந்தபுராண விளக் கம், சைவக்கிரியை விளக்கம், அளவை நூல், அக நூல், திருப்பெருவடிவம், Saiva School of Hinduism, Essential of Logic, Glories of Saivaism என் பனவாம்.

நவநீத கிருட்டின பாரதியார் (1889 - 1954)

சோழவளநாட்டின் கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த கரவட்டங்குடியிலே சுப்பிரமணிய பாரதி யார்க்குப் புதல்வராகப் பிறந்தார்கள். இளவய திலே பண்டித அ. கோபாலையர், பின்னத்தூர் நாராயண ஐயர், சோழவந்தான் அரசன் சண் முகனார் என்போரிடம் முறைப்படி இலக்கணம், இலக்கியம், தருக்கம் முதலியவற்றைப் பாடங் கேட்டார்கள். திருவாவடுதுறை ஆதீனத்தில் திருமுறை ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் துணைவ ராய்ப் பணியாற்றினர். 1917 ஆம் ஆண்டில் டாக்டர் சுவாமிநாதஐயர் அவர்களின் வேண்டு கோட்படி இராமநாதன் அவர்களின் ஆஸ்தான கவியாகவும் இராமநாதன் பெண்கள் கல்லூ ரியில் தமிழ்ப் பேராசானாகவும் பணிமேற்கொண் டார்கள். தேசநேசன் ஏட்டின் ஆசிரியராகவும் சிலகாலம் கடமையாற்றினர்.

இவரின் பாக்கள் சங்கச் சான்றோர் பாவோடு ஒத்த பொருளாழம், சுவைநயம் முதலிய அமை யப்பெற்றவை. 1922 ஆம் ஆண்டு வெளிவந்த இவரது உலகியல் விளக்கம் இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

இவருக்குப் பண்டிதமணி, புலவர்மணி என் னும் பட்டங்களோடு பொற்கிழி ஒன்றும் அளித் துத் தமிழ்மக்கள் போற்றினர். புத்தெளிஞ் செழுங் கதிர்ச் செல்வம் என்பன சில பாநூல்கள். இவ

ரின் 'பாலை' எனும் பாவுக்குப் பண்டிதர் இள முருகனர் சிறந்ததோருரை தந்துள்ளார். பறம்பு மலைப் பாரி இவர் எழுதிய நாடகநூலாகும். பாரதியம் இவரது இலக்கண நூலாகும். பல்லாண்டு கால உழைப்பின் பயனகத் தோன்றியதே திருவாசகப் பேருரை.

சி. கணேசய்யர் (1878 - 1958)

இலக்கண முனிவன் எனப்புகழ்பெற்ற மகாவித்துவான் சி. கணேசய்யர் அவர்கள் புன்னலைக் கட்டுவன் செய்த தவப்பயனுய் சின்னையர் என் பார்க்குப் புதல்வராகப் பிறந்தார்கள். தொடக்கத்திலேயே நன்னூல், நிகண்டு, திருக்குறள் முதலியவற்றைச் செவ்வனே பயின்றூர்கள். வடமொழியும் கற்றனர். பின்னர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளை, சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர், ம. ச. வேற்பிள்ளை என்போரிடம் கற்று ஆழ்ந்த புலமையும் இலக்கண விலக்கிய ஆற்றலும் பெற்றனர்.

நயினுதீவு சைவவித்தியசாலை, மல்லாகம் சைவத்தமிழ் வித்தியாசாலை, பிராசீன பாடசாலை முதலியவற்றில் அமர்ந்திருந்து தமிழ்ப்பணி புரிந்தார்கள். இவரது ஆற்றலையும் சேவையையும் மெச்சி அன்னூர்க்கு அறுபதாண்டு நிறைவு விழா நடாத்தியும், பொற்கிழி அளித்தும், 'வித்துவசிரோன்மணி' 'மகாவித்துவான்' எனப் பட்டங்கள் வழங்கியும் தமிழுலகம் போற்றியது.

N. P. குமாரசாமிப் புலவர் சரித்திரம், குசேலர் சரித்திரம், ஈழநாட்டுப் புலவர் சரித்திரம்என்பன இவரின் வசன நூல்களாம். மருதடி விநாயகர் இருபாவிருபஃது முதலியன செய்யுள் நூல்களாம். இரகுவமிசம் உரை, மேகதூதக் காரிகை உரை, அகநானூறு உரை என்பன அவரியற்றிய உரைகள் ஆகும்.

ஐயரவர்களின் உன்னத பணி தொல்காப்பியப் பதிப்பாகும். தொல் - எழுத்து நச்சி, தொல்சொல் சேனுவரையம் தொல்-பொருள் நச்சினர்க்கினியம் என்பவற்றை உரைவிளக்கக் குறிப்புக்களுடன் அளித்துள்ளார்கள்.

திக்கம் சி செல்லையாபிள்ளை


ஈசான சிவன் எனத் தீஷாநாமம் கொண்ட செல்லையாபிள்ளைஅவர்கள் அச்சுவேலியில் பிறந்தவராவர். கந்தவன ஆலயத்தின் ஆதீனகர்த்தராக விருந்து பக்திசிரத்தையோடு பணியாற்றி வந்தவர். சைவ சித்தாந்த நூல்களை நன்முகக் கற்றுத் தேறியவர். பெரிய புராணத்தில் மிகுந்த புலமை படைத்தவர். கந்தபுராண, பெரிய புராண படனத்தின் போது பயன்விளக்கிக் கூறியும் விரிவுரையாற்றியும் மக்களின் பாராட்டினைப் பெற்றவர். பெரிய புராணச் சில செய்யுள்களுக்கு உரை விளக்கங்கள் எழுதியுள்ளார்.

சீர்காழிச் சிற்றம்பலநாடிகன் திருவாய் மலர்ந்த துசனதுபோதம் எனும் நூலுக்கு இவர் எழுதிய உரை 1950 ஆம் ஆண்டு வெளிவந்தது.

பண்டிதர் அருளம்பலவனர் (- 1966)

இவர் இளமையிலிருந்தே சங்க இலக்கியங்களில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தவர். இலக்கிய இலக்கணங்களை முறைப்படி கற்றுத் தேறியவர். கடினமான செய்யுள்களுக்குக்கூட உரை காணல் இவர்க்கு இயல்பாகவே எளிய தொன்முக அமைந்திருந்தது.

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணுற்றுப் படை உரைகள் 1936 ஆம் ஆண்டிலேயே வெளிவந்தன. பதிற்றுப்பத்துரை 1956 ஆம் ஆண்டு வெளியாயிற்று. இவரது உரைநயத்தினை மெச்சிச் சாகித்தியமண்டலம் பரிசில் ஈந்து சிறப்புச் செய்தது. இவற்றையடுத்துத் திருவாசக உரை அச்சேறிக் கொண்டிருக்கும் பொழுது இவர்கள் உயிர் துறந்தார்கள். தேவாரத் திருநெறிக் கொள்கைகளோடு இணைந்து போமாறு உரையமைத்துள்ளமை இவ்வுரைக்குச் சிறப்பினைத் தருகின்றது.



நாவலர் ஆரம்பித்த வித்தியா தருமம் ஒழிந்து போகாது காப்பாற்றுமுகமாக, உரிய சமயத்தில் 400 ரூபா அனுப்பிய இ. நன்னித்தம்பி முதலியாரின் கொழும்பு வீடு. கொழும்பு கறுவாக்காட்டிலுள்ள வாட் பிளேஸ் வீதியில் இந்த வீடு இருக்கிறது.

—உபயம்: க. சதாசிவம்.

சாலை இளந்திரையன், எம். ஏ., எம். லிட்,
தில்லிப் பல்கலைக் கழகம்

மனிதாபிமான மாண்பாளர்கள்

சங்ககாலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் தமிழ்ச் சமுதாயத்தில் கவிஞர்களுக்குத் தனிமதிப்பு இருந்து வந்தது. பொதுமக்களோ மட்டுமல்லாமல் தவறுசெய்யும் அரசர்களையே கண்டிக்கும் அளவுக்கு அவர்களுக்குச் செல்வாக்கு இருந்தது. கோவூர்கிழார் என்னும் புலவர், போர்முரசு கொட்டிநின்ற இரண்டு அரசர்களை அணுகி, அவர்களுக்கு உண்மையை விளக்கி, அந்தப் போரைத் தடுத்த வரலாறு புறநானூற்றில் (45) கூறப்படுகிறது. இதுபோன்ற பல நெருக்கடியான கட்டங்களில், அவர், அரசர்களை இடித்துரைத்து வழிப்படுத்திய பெருஞ் செய்திகளும் அந்த நூலில் (44,46,47ம் பாடல்களில்) வருகின்றன. தம்மை மதியாத அரசர்களை எள்ளி நகையாடிய புலவர்களும்(புறம்.162) அக்காலத்தில் இருந்தார்கள்.

நன்னன் என்னும் சிற்றரசன், தகுந்த காரணமின்றி ஒரு பெண்ணைக் கொலைசெய்து விட்டான். அதற்காகப் புலவர் உலகமே அவனைப் பழித்தூற்றியது; ''அவன் கொடு நரகுக்கே போவான்'' என்று கழறியது. காதலனைச் சந்திக்க விடாமல் தன்னை வீட்டில் அடைத்து வைத்த (இற்செறித்து வைத்த) தாயை,

''பெண்கொலை புரிந்த
நன்னன் போல
வரையா நிரையத்துச்
செலீஇயரோ, அன்னை.''

என்று ஒரு பெண் சபிப்பதாகப் பரணரின் பாடல் (குறுந்தொகை: 292) ஒன்றில் ஒரு பகுதி வருகிறது.

பல புலவர்கள் தன்னைக் கண்டித்ததைத் தொடர்ந்து, நன்னன் புலவர்களை வரவேற்பதையே நிறுத்திவிட்டான். அதனால் புலவர் அனைவரும் ஒன்று திரண்டு ''நன்னனையோ அவனது குடியினரையோ பாடுவதில்லை''. என்று முடிவு செய்து, அதை உறுதியாகக் கடைப்பிடித்து வந்தார்கள். புறநானூறு 151ம் பாடல் மூலம் இச்செய்திகளை அறிய முடிகிறது. அதாவது, அறிஞர்களின் இடித்துரைக்குச் செவி சாய்க்காதவன் மன்னனேயானாலும், அவனை அடியோடு ஒதுக்கி வைக்கும் துணிவு அக்காலப் புலவர்களுக்கு இருந்தது.

மந்திரவாதிகளா?

இவைகளைப் படிக்கின்ற தற்கால அறிஞர் சிலர், (சமுதாய நோக்கில் இலக்கியத்தை

ஆராய்வதாகச் சொல்லிக்கொண்டு), கவிஞர்க ளின் இந்தச் செல்வாக்குக்கு என்னென்னவோ காரணங்களைக் கற்பிக்கிறார்கள்: பிற்காலத்தில் ஏற்பட்ட ''அறம் பாடுதல்'' பற்றிய நம்பிக் கையையும், எங்கோ, கிரேக்க நாட்டிலும் எகிப் திலும் கவிஞர்கள் மந்திரவாதிகளாக இருந்ததால் மன்னரும் மக்களும் அவர்களைக் கண்டு அஞ்சி னார்கள் என்பதையும் இதனோடு முடிச்சுப் போட் டுக் காட்டுகிறார்கள். ஆனால், உண்மை வேறுவித மாக இருக்கிறது.

முற்காலத் தமிழ்ப் புலவர்கள், பெரும்பா லும், மக்கள் கலைஞர்களாக மக்களிடையே திரிந்து வாழ்ந்தவர்கள்; மக்களின் இன்பதுன்பங் களில் பங்கு கொண்டவர்கள். மன்னர்களுக்கும் அவர்கள் பெருந்துணையாக இருந்தார்கள். நேர் மையான காரணங்களுக்காக மன்னர்கள் போரிட்டால், அவர்களை உற்சாகப்படுத்தி, அவர் கள் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். நல்லவ னை ஓர் அரசனோடு போரிட்டு வெற்றி பெற்ற வனைக் கண்டிக்கவும் (புறம்: 66) அவர்கள் தயங் கியதில்லை!

புறநானூற்றில் காணும் புலவர்களின் வறுமை நிறைந்த வாழ்வையும், அவர்கள் அர சர்களையும் வீரர்களையும் அணுகிப் பாராட்டிப் பரிசில் கேட்பதையும் படிக்கின்ற சிலர், ''எல் லாப் புலவர்களுமே தங்களுக்குச் சோறு போட் டவனை (அவன் எப்படிப் பட்டவனாயினும்) 'ஓகோ!' என்று பாராட்டிப் பாடிவிட்டதாகக் கருதுகிறார்கள். இது முழுமையான உண்மை யல்ல: பல புலவர்கள் வறுமை வாழ்வு நடத்தி யிருக்கிறார்கள்; அதைக் களைவதற்காக, மன்னர்க ளிடமும் வீரர்களிடமும் பொருள் கேட்டிருக்கிறார் கள். அந்தச் சமயத்தில் அவர்களைப்பற்றி ''நாலு நல்ல வார்த்தை'' சொல்லியும் இருக்கிறார்கள். ஆனால் நெருக்கடியான கட்டத்தில் புலவர்கள் எப்படிச் செயற்பட்டார்கள் என்பதைக் கொண்டே அவர்களைக் கணிக்க வேண்டும்; நல்ல நண்பனைத் துன்பத்தில் அறிய வேண்டும்; நல்ல புலவனை, அறத்துக்கும் மறத்துக்கும் இடையி லான போராட்டத்தின் போது அறிய வேண்டும். இந்தத் தேர்வில், முற்காலப் புலவர் யாவருமே ''அறத்தின் பக்கம் நின்றவர்கள்'' என்னும் விருதைப் பெறுகிறார்கள். கோவூர்கிழாரை முன்பே எடுத்துக் காட்டினோம். கபிலர், பர ணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார், வெள்ளைக்குடி நாகனார், பிசிராந்தையார் முத லான பலரும் இந்த வரிசையிலே வருகிறார்கள்.

மந்திரவாதிகளாக இருந்திருந்தால், இவர்கள் மன்னர்களையும் மற்றவர்களையும் பயமுறுத்தியே பொருள் பெற்றிருக்கலாம். இவர்கள் அப்படிச் செய்யவில்லை; தங்கள் வறுமையை உருக்கமாக விவரித்தே அதை நீக்கப் பொருள் கேட்டிருக்கி றார்கள். வயிற்றுப் பாட்டுக்காக மட்டுமே (பாராட்டுப்) பாடியவர்களானால், மன்னர்கள் தங்கள் அகவாழ்விலோ புறவாழ்விலோ தவறு இழைக்கும்போது அவர்களை இடித்துரைக்கும் (மேலே காட்டிய) தெம்பு இவர்களுக்கு இருந் திருக்க முடியாது. எனவே, அக்காலப் புலவர்கள் மந்திரவாதிகளோ வெறும் கஞ்சிப் பட்டாளமோ அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது.

அவர்கள் விரும்பியது

'அப்படியானால், வறுமையை அணைத்துக் கிடந்த அவர்களால், நீதிக்காக எப்படிக் குரல் எழுப்ப முடிந்தது?' இக் கேள்விக்கு அவர்களின் பாடல்கள் பதில் தருகின்றன; அக்கால அரசியல் நிலையும் பதில் தருகிறது.

ஒரு சமயம் அதியமானைக் காணச் சென்றார் ஔவையார். வாயிலிலே காத்திருந்த அவரை, நெடு நேரமாகியும் அவன் உள்ளே அழைக்க வில்லை; வந்து பார்க்கவும் இல்லை. ஒருவனுடைய வாசலில் இப்படிக் காத்திருப்பது தமக்கு இழுக்கு என்று கருதிய ஔவை, தம்மைக் காக்கவைத்த அதியமான்மீது கோபங் கொண்டு பேசிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார். அவ் வாறு போகும் போதே, ''எத்திசைச் செலினும் அத்தி சைச் சோறே!'' என்று மொழிந்தார். அதாவது ''சோற்றுக்காக இவன் வாசலில் நான் காத்தி ருப்பதாக எண்ணிவிட்டான் போலிருக்கிறது; எங்களுக்குச் சோறு எங்கும் கிடைக்கும்'' என்பது இதன் பொருள். அதற்குக் காரணமும் கூறுகிறார்:

> ''வள்ளியோர் செவிமுதல்
> வயங்குமொழி வித்தி, தாம்
> உள்ளியது முடிக்கும்
> உரனுடை உள்ளத்து
> வரிசைக்கு வருந்தும்
> இப்பரிசில் வாழ்க்கை.''

'எங்கள் வாழ்க்கை பரிசில் வாழ்க்கைதான். ஆனால், அதற்காக, எங்கள் பெருமையை நாங் கள் விட்டுக் கொடுக்க மாட்டோம். காரணம், வள்ளல்கள் சுவைத்து மகிழும்படியான இன் சொற் கவிதைகள் யாத்து அவர்களைக் கவர்ந்து, நாங்கள் நினைத்ததை அவர்களிடம் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் எங்களுக்கு உண்டு!' இந்தச் செய்தி, புறம். 206 வது பாடலில் வருகிறது.

இதே போன்ற ஒரு செய்தி, புறம். 121ம் பாடலிலும் வருகிறது. இங்கே பாடியவர் கபிலர்; பாடப்பட்டவன் மலையமான் திருமுடிக்காரி:

''ஒருதிசை ஒருவனை
உள்ளி, நாற்றிசைப்
பலரும் வருவர்
பரிசில் மாக்கள்;
வரிசை அறிதலோ
அரிதே : பெரிதும்
ஈதல் எளிதே,
மாவண் தோன்றல்!
அதுநற்கு அறிந்தனை
ஆயின்,
பொதுநோக்கு ஒழிமதி
புலவர் மாட்டே!''

'ஒருவனிடம் பொருள் பெற்றுத் தங்கள் வறுமையைக் களையும் நோக்குடன் வருபவர்கள் எல்லோரும் புலவர்களாக இருக்கமாட்டார்கள்; எல்லோரும் கலைஞர்களாகவும் இருக்கமாட்டார்கள். எந்தக் கலையும் தெரியாதவர்களும், வறுமையே காரணமாகப் பொருள் பெற வருவார்கள். பொருள் உடையவன் அவர்களுக்கெல்லாம் வாரி வழங்குவது பெரிதல்ல; தரம் அறிந்து அவர்களையே வரவேற்று, அவர்களுக்கு ஏற்ற முறையில் அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, புலவர்களையும் மற்றவர்களையும் ஒரே விதமாக நடத்தக் கூடாது!'

இதை மேலோட்டமாகப் பார்க்கையில், 'தமக்கு நிரம்பப் பொருள் தரவில்லை என்பதால் புலவர் இப்படிக் கோபப்பட்டுத் தற்பெருமை பேசியுள்ளார்' என்று நினைக்கத் தோன்றும். ஆனால், முன்னே எடுத்துக்காட்டிய ஔவையின் பாடலையும் புறநானூற்றின் வேறு சில பாடல்களையும் சேர்த்துப் பார்க்கும்போது, புலவர் அவ்வாறு கூறியதற்குக் காரணம் வேறு என்பது புலப்படுகிறது.

புலவர்களுக்கும் வாழ்வுக்குத் தேவையான பொருள் வேண்டும். ஆனால், அதைத் தேடுவதே அவர்களின் லட்சியம் அல்ல. 'மற்றவர்கள், பொருள் எப்படிக் கிடைத்தாலும் போதும் என்று எண்ணுகிறவர்கள்; புலவர்கள், (''வள்ளியோர் செவிமுதல் வயங்கு மொழி வித்தி உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்''துக் கலைஞர்களாகையால்), தமது கலையை அனுபவிக்கத் தெரிந்தவர்களும் - தாங்கள் அரசர்கள் அல்லது பொருள் உடையவர்கள் என்ற ஆணவத்தை மறந்து - இவர்களோடு சமநிலை மனிதர்களாகப் பழகுகிறவர்களும் கொடுக்கும் பொருளையே இவர்கள் விரும்புகிறார்கள். இவர்கள் பொருளையே பெரிதாக மதிக்கும் சாதாரண மனிதர்களல்லர்; இவர்கள் பண்பையே மதிக்கிறார்கள்:

'நால்வகைப் பெரும்படையும், அதன் வெற்றியும், அதன் விளைவாக விரிந்து பரந்த நாடும் உடையவர் என்பதற்காக நாங்கள் யாரையும் மதித்து விடுவதில்லை; கீரையும் வெறுஞ்சோறுமே உண்ணக்கூடிய எளிய நிலையில் உள்ளவர்களாயினும், அவர்கள் எங்களிடம் பண்போடு பழகி எங்களை அன்போடு உபசரிப்பார்களானால், அவர்களையே நாங்கள் மகிழ்ந்து போற்றுவோம்!' இவ்வாறு கூறிவந்த புலவர் அதற்குக் காரணமும் (புறம்: 197) கூறுகிறார்:

''மிகப்பேர் எவ்வம்
உறினும், எனைத்தும்
உணர்ச்சி இல்லோர்
உடைமை உள்ளேம்;
நல்லறிவு உடையோர்
நல்குரவு
உள்ளுதும், பெரும, யாம்
உவந்து நனிபெரிதே!

'நாங்கள் பட்டினி கிடந்தாலும், பண்பில்லாதவர்களை நாடி அவர்களின் பொருளைப் பெற மாட்டோம்; பண்பு உடையவர்கள் வறியவர்களாகவே இருந்தாலும், அவர்களை, அணுகியிருந்து அவர்களின் வறுமைத் துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதையே மகிழ்ச்சியாகக் கொள்வோம்!'

இதையே மற்றொரு புலவரும் (புறம்: 199) கூறுகிறார்: கவிஞர்களைப் பொறுத்தவரை, அவர்களை,

''புரவு எதிர்கொள்ளும்
பெருஞ்செய் ஆடவர்
உடைமை ஆகும்,
அவர்உடைமை;
அவர்இன்மை ஆகும்,
அவர் இன்மையே!''

அக்காலப் புலவர்கள் வயிற்றுப் பசியை விடப் பண்புப்பசியையே பெரிதாகக் கருதிஏங்கினர்கள். அதனாலேதான், மற்றொரு புலவர் (புறம்:154ல்), ''அரசர் உழையர் ஆகவும், புரைதபு வள்ளியோர்ப் படர்குவர் புலவர்'' என்கிறார். பேரரசன் ஒருவன் தன் ஊரின் அருகிலேயே இருந்தாலும், அவன் புலமையை மதிக்கும் பண்பு இல்லா

தவறுக இருந்தால், வெகு தொலைவிலுள்ள (புரை தபு) பண்பாளர்களையே தேடிச் சென்றான் அக்காலக் கவிஞன்.

ஒரு துணை

புலவர்கள் பண்புக்காலத்தவர்களாகவும் அற்பத் தேவைகளைப் பெரிதுபடுத்தாதவர்களாகவும் இருந்ததனாலேயே அவர்கள் துணிவும் நேர்மையும் உடையவர்களாக இருக்க முடிந்தது. அக்கால அரசியல் நிலையும் இதற்கு ஓரளவு துணை செய்தது: அக்காலத் தமிழகம் எந்த ஒரு அரசனின் தனி ஆளுகைக்குள்ளும் இல்லை. எனவே, தனி ஒருவனை நம்பியே வாழவேண்டும் என்ற நிலை கவிஞர்களுக்கு ஏற்படவில்லை. அவர்கள் தங்கள் நேர்மைத் திண்மையைக் காத்துக் கொள்வதற்கு, ''இவன் இல்லாவிட்டால் இன்னொருவன்!'' என்று தெம்புகொள்ளத் துணையாக இருந்த இன்பச் சூழ்நிலையும் ஒரு காரணம்என்றே சொல்ல வேண்டும். இதை நன்கு உணர்ந்திருந்ததனாலேயே, அக்கால மன்னர்களும் புலவர்களுக்குச் செவிசாய்த்தார்கள்.

பண்பு நெறி

ஆனால், சங்கப் புலவர்களுக்கு இருந்து வந்த பெருமதிப்புக்கு வேறு காரணமும் இருக்கிறது: வாழ்வுக்கு வசதி கிடைப்பதாலேயே எல்லோரும் பண்போடு வாழ்ந்து விடுவதில்லை; பண்பின் நெறியில் நிற்பதற்கு ஒரு மனப் பக்குவமும் வேண்டும். அந்தப் பக்குவம் பெரும்பாலான தமிழ்க் கவிஞர்களிடம் அமைந்திருந்ததே அவர்கள் உயர்மதிப்புப் பெற்றதற்குக் காரணம். தனக்காக வாழ்பவன் சாதாரண மனிதன்; தன்னைச் சுற்றியுள்ள மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு உருகி அவர்களுக்கு உதவ முன்னிற்பவன் தரமான மனிதன்; அவ்வாறு துன்பம் துடைக்கச் செல்லும்போது தனக்கே துன்பம் ஏற்படக் கூடிய நிலை இருந்தால், அதையும் பொருட்படுத்தாமல் முன் செல்பவனே உயர்ந்த மனிதன்.

சோழன் (குளமுற்றத்துத் துஞ்சிய) கிள்ளிவளவன், தன் அமைச்சர்களின் தவறான ஆலோசனைப்படி (போர்ச் செலவுகளுக்காக) உழவர்களுக்கு அதிகமான வரியை விதித்துவிட்டான். உழவர்கள் வரிச்சுமை தாழாது துன்புற்றார்கள். ஆனாலும், ''மன்னன் சொல்லுக்கு மறுசொல் இல்லை''என்ற கொள்கையில் ஊறியிருந்த அவர்கள், தங்கள் வரிச்சுமைக் கொடுமையைச் சுமக்க முடியாமற் சுமந்து அழுந்தினார்கள்; அரசனுக்கு எதிராகக் குரல் எழுப்ப அவர்களுக்குத் தெம்பு இல்லை.

நிலைமையை உணர்ந்த வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் நேரே அரசனிடம் சென்றார். அவனுடைய கொடுமையை எடுத்துரைத்தார்:

''கண்பொர விளங்கும் நின் வெண் பொருவியன் குடை வெயில் மறைக் கொண்டன்றே?-அன்றே! வருந்திய குடி மறைப்பதுவே''-(வானுற ஓங்கிய உனது வெண்கொற்றக் குடை வெயிலுக்குப் பிடித்த குடை அல்லவே; குடிகளின் நன்மையைப் பேணுவதல்லவோ, அக்குடையின் கடமை!) என்று கடிந்து கொண்டார். ''வரு படை தாங்கிப், பெயர்புறத்து ஆர்த்துப் பொருபடை தருஉம் கொற்றமும் உழுபடை ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே!'' (எதிரியை எதிர்த்து, அவன் ஓடுவது கண்டு உன் வீரர்கள் வெற்றி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இது எதன் விளைவு? உன் நாட்டு உழவர்கள் விளைத்த உணவின் பயன் அல்லவா, இது!) என்று உழவின் உயர்வை அவனுக்கு உணர்த்தினார். போர் வெற்றியில் மயங்கி நிலைகுலைந்திருந்த மன்னன் புலவரின் தெளிவுரை கேட்டு விழித்தான்; தன்னைத் திருத்திக் கொண்டான். அதாவது, உழவர்களுக்கு விதித்திருந்த மிகு வரியை நீக்கினான். இது போன்ற மற்றொரு வரி வசூல் கொடுமையை எதிர்த்துப் பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் தெளிவு உண்டாக்கிய நிகழ்ச்சி, புறம் 184ம் பாடலில் வருகிறது. பிறருடைய துன்பத்தைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு, அதற்காக ஆட்சித் தலைவனிடமே வாதாடும் துணிவும் தூய நெஞ்சமும் உடையவர்களை மக்களேயன்றி மன்னர்களும் மதித்ததில் வியப்பு ஏது?

அக்காலத்தில் எல்லாப் புலவர்களும் எல்லாரிடமும் இரந்து நிற்கவில்லை; இவர்கள் சென்ற போதெல்லாம் எல்லாரும் வாரிக் கொடுத்து உதவி விடவுமில்லை. அவ்வாறு கொடாத மன்னர்களை யாரும் அறம் பாடியதாகவோ, திட்டி இகழ்ந்ததாகவோ தெரியவில்லை. ''தருகிறேன் தருகிறேன்'' என்று சொல்லி நாட்கடத்திக் காக்க வைத்தவர்களைக்கூட அவர்கள் தீயெழுத் திட்டவில்லை; ''இவ்வாறு இழுத்தடிப்பதால் இரவலர் துன்பப்படுகிறார்கள்; ஈவோரின் பெயரும் கெடுகிறது. எனவே, அப்படிச் செய்யாதே'' என்று அப்போதும் பொறுப்போடு அறிவுரையே (புறம்.196 முதலியன) கூறினார்கள்.

குணக் குன்று

இவ்வளவு பொறுமை உடையவர்களுக்கும் சிலபோது கோபம் வந்துவிடுகிறது; அது ''குணம் என்னும் குன்றேறி நின்ஞர் வெகுளி.'' தம் வயிற்றுக்கு உணவு தராதபோது கொந்தளிக் காத அவர்களின் உள்ளம், தமது உயர்வை ஒரு வன் குறைத்து மதிப்பிடும்போது (அவர்களைக் கலைஞராகக் கருதி மதிக்காமல், பிச்சைக்காரர் போலக் கருதி ஏதோ கொடுக்கும் போது) கொதித்துப் பொங்கி விடுகிறது. அத்தகைய ஒரு சூழ்நிலையில், பெருஞ்சித்திரனர் கூறிய சின உரையே, புறம்.162ம் பாட்டாக உள்ளது:

''இரவலர் புரவலை
நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு
இல்லையும் அல்லர்!
இரவலர் உண்மையும்
காண், இனி; இரவலர்க்கு
ஈவோர் உண்மையும்
காண்,இனி: நின்ஊர்க்
கடிமரம் வருந்தத்
தந்து யாம் பிணித்த
நெடுநல்யானை
எம்பரிசில்;
கடுமான் தோன்றல்,
செல்வல் யானே..''

'இந்தப் பரந்த உலகில் இரவலர்களுக்கு நான் ஒருவனே புரவலன்!' என்னும் ஆணவத்தால் நீ என்னை அவமதித்தாய். இதோ, ஓர் யானையையே மற்றொருவனிடம் பரிசிலாகப் பெற்று வந்திருக் கிறேன். இனிமேலாவது, உலகில் வேறு பிறரும் உண்டு என்பதைத் தெரிந்து கொள்.' மானம் பாதிக்கப்படும்போது ஊமையாக உட்கார்ந் திருப்பவன் கோழையும் அறிவிலியுமாவான். பழந் தமிழ்ப் புலவர் எவரும், என்றுமே அப்படி இருந்ததில்லை.

பண்பின் சிகரம்

''பெண்கொலை புரிந்த நன்னனையோ அவன் உறவினர்களையோ யாரும் பாடக்கூடாது'' என்று புலவர்கள் கட்டுப்பாடு விதித்துக் கொண்டதை முன்பே பார்த்தோம். இச்செய்தியைக் கூறும் பாடல், அக்காலப் புலவர்களின் மனிதாபிமான உயர் பண்புக்குத் தனிப்பெரும் சான்றாகத் திகழ் கிறது அரசகுமாரர்களாகிய இளங்கண்டீரக் கோவும் இளவிச்சிக்கோவும் நண்பர்கள். இவர் கள் இருவரும் ஒன்றாக உட்கார்ந்திருந்தனர். அங்குவந்த பெருந்தலைச் சாத்தனர் என்னும் புலவர், (சந்திக்கும் போது ஒருவருக் கொருவர் அன்பைப் புலப்படுத்தும் அக்கால முறைப்படி) இளங்கண்டீரக்கோவைத் தழுவிக்கொண்டார்; நன்னன் மரபில் வந்த இளவிச்சிக்கோவைத் தழுவவில்லை. அவ் விளைஞன் ''அவனைத் தழுவிக் கொண்ட நீங்கள் என்னை ஏன் தழுவவில்லை?'' என்று கேட்டான். அதற்குப் புலவர், ''நீயும் முயங்கற்கு ஒத்தனை மன்னே; வயங்குமொழிப் பாடுநர்க்கு அடைத்த கதவின் ஆடுமழை அணங்குசால் அடுக்கம் பொழியும் நும் மணங் கமழ் மால் வரை வரைந்தனர் எமரே'' என்ஞர். ஒரு காலத்தில் இவன் முன்னோன் ஒருவன் கொடியவனாக இருந்தான்; அத னால் புலவர்கள் அவனைப் பாடக்கூடாது என்ற கட்டுப்பாடு செய்தனர். ஆனால், அதற்கெல்லாம் இந்த இளம்பிள்ளை என்ன செய்வான், பாவம்!' என்னும் கழிவிரக்கக் குரலே இதில் கேட்கிறது. அந்த இளைஞனை அள்ளித் தழுவிக் கொள்ள முடி யாதபடி, தமது (கவிஞர்) குலத்தோர் தடுத்து வைத்திருக்கிறார்களே என்று புலவரின் ஏக்கம் இந்த அடிகளில் தேங்கிநிற்கிறது. 'நீ அள்ளித் தழுவிக் கொள்ளுதற்கு எல்லாத் தகுதியும் உடையவனே (''நீயும் முயங்கற்கு ஒத்தனை''). ஆனால் நான் என்ன செய்வேன்? என் கைகள், உன் முன்னோன் ஒருவனின் செயலால் கட்டப் பட்டுள்ளனவே!'' என்று பதைக்கிறார் இக்கவி ஞர் கோமகன். 'இனையான இருவரில் ஒருவனை, (அவன் செய்யாத குற்றத்திற்காக), புண்படுத்த நேர்ந்ததே' என்று பதைக்கும் உயர்ந்த பண்புள் ளத்தின் வேதனைக் குரல் இது. பிறரை அச்சுறுத் திப் பொருள் பறிக்கும் மந்திரவாதியிடமும், 'வயிற்றுக்கு ஏதாவது கிடைத்தால் போதும்' என்று எண்ணும் குலாமரிடமும் இத்தகைய உயர்பண்பை எதிர்பார்க்க முடியுமா?

பலர் புகழ் சிறப்பு

தனி ஒருவனையே எதிர்பார்த்து வாழ வேண்டிய முட்டுப்பாடு பழந் தமிழ்ப் புலவர்களுக்கு இருக்கவில்லை; பிறர் மனங்கொண்டு தினைத்து மகிழத்தக்க வகையிற் கவி பாடும் ஆற்றல் அவர்களுக்கு அமைந்திருந்தது. இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்கள் தங்கள் பாட்டைப் பார்த்துக்கொண்டு போயிருக்கலாம். ஆனால், அப்பெருமக்கள் அப்படிச் செய்யவில்லை; இடைந்தவர்க்குதவவும், ஒடுக்கப்பட்டவர்களுக்காக வலியவர்களையும் எதிரிட்டுக் கொள்ளவும், நாகரிகப் பொது நலனைக் கருதி மன்னர்களையே இடித்துரைத்து நெறிப்படுத்தவும் அவர்கள் முன் நின்றார்கள். 'இந்த நல்லோரின் வாழ்த்தும் துணையும் ஒருவனுக்குக் கிடைக்க வேண்டுமென்றால் அவன் எவ்வளவு பேறு பெற்றவனாக இருக்க வேண்டும்!' அக்கால மன்னரும் மக்களும் இப்படித்தான் எண்ணினார்கள். இவர்களை, ''உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின் புலவர்'' என்று (புறம். 72) அக்காலப் பேரரசன் (சேலாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்) பாராட்டியதிலும், அப் புலவர்களையே முதன்மைப்படுத்தி, ''நான் என் பகைவர்களை வெல்லாவிட்டால் மாங்குடிமருதன் முதலாகிய புலவர்களெல்லாம் என் நாட்டைப் பாடக் கூடாது என்று முடிவு செய்வாராக!'' என்று அவன் வஞ்சினம் கூறியதிலும் வியப்பு ஒன்றுமே இல்லை. ''நற்றமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல், கற்றுரைக் கற்றூரே காமுறுவர்'' என்பது கற்றூர் ஒருவரின் கருத்துரை அல்லவா?

மகேஸ்வரி மகாதேவா, B. A., Hons.

மாதோட்டம்



ஈழவள நாட்டின் வரலாற்றிலே, அனுராதபுரம், புலத்தி நகரம், கண்டி, கோணமாமலை முதலிய நகரங்கள் சிறப்பிடம்பெற்று விளங்கின. ஆயினும், பண்டைக்காலத்திலே ஈழத்தின் முக்கிய துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்த மாதோட்டம் என்னும் நகரமே இந்த நகரங்கள் யாவற்றிலும் பழமை வாய்ந்ததெனக் கருதப்படுகிறது.

ஈழ நாட்டின் வடமேற்குப் பகுதியாகிய மன்னர் வட்டாரத்தில், பல கிராமங்கள் அடங்கிய ஒரு குறிச்சி இன்றும் 'மாந்தை' என்னும் அழகான தமிழ்ப் பெயராலேயே அழைக்கப் படுகிறது. 'மாந்தை' என்னும் பெயர் சங்க இலக்கியங்களிற் காணப்படுவதால் அது மிகப் பழமை வாய்ந்த பெயராக வேண்டும்.

நற்றிணையில்,

> "கொள்ளா நரம்பி னிமிரும் பூசல்
> இரைதேர் நாரை யெய்திய விடுக்கும்
> துறை கெழு மாந்தை யன்ன"
>
> என்றும்,

அகநானூற்றில்,

> "நன்னகர் மாந்தை முற்றத் தொன்னுர்
> பணிதிரை கொணர்ந்த பாடுசேர் நன்கலம்"

என்றும், மாந்தை பாடப்பட்டுள்ளது.

எனினும், ஈழநாட்டின் சரித்திரத்தைக் கூறும் நூலாகிய மகாவம்சமும், அதன் வழியில் தோன்றிய சூளவம்சமும் இவ்விடத்தை 'மகாதித்த' என்றே அழைக்கின்றன. 'தித்த' என்பது பாளி மொழியில் இறங்குமிடத்தைக் குறிக்கும்; 'மகாதித்த' என்பது பெரிய துறைமுகமாகும் என மகாவம்சம் கூறுகிறது. ஆயினும், பழங்காலத்திலே, இவ்விடம் 'மாதொட்ட,' 'மான்தொட்ட' என்றே சிங்கள மொழியில் அழைக்கப்பட்டது. 'தொட்ட' என்பது இம் மொழியில் துறைமுகத்தைக் குறிக்கும். பழைய சிங்களக் கல்வெட்டுக்களில் இவ்விடம் 'மகாபுத்து', 'மகாவுத்து', 'மகாவொற்றி' என்ற பெயர்களாற் குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்க்கல்வெட்டுக்களில் 'மாதோட்டம்' என்னும் பெயர் காணப்படுகிறது. பிற்காலத்தில் தோன்றிய சிங்கள இலக்கியங்கள் இதனை 'மாவத்து தோட்ட' எனக் குறிப்பிடுகின்றன. தமிழ் இலக்கியங்களில் 'மாதோட்டம்' என்னும் பெயரினாலேயே இதனைப் பெரும்பாலும் அழைத்துள்ளார்கள். ஆயினும், கந்தபுராணத்தில் தக்ஷிண கைலாய மான்மியத்தில் இது மாதுவட்டபுரம் எனக் கூறப்படுகிறது. துவட்டா என்பவன் பாலாவியிலே நீராடிக் கேதீச்சுரரைப் பூசித்துத் தவமியற்றினனென்றும் சிவபிரான் தோன்றி 'இன்று தொட்டு இத் தலத்துக்குத் துவட்டா

புரம் எனப் பெயருண்டாம் எனக் கூறினரென்றும் அந்நூல் கூறுகிறது.

இவ்வாறு பல பெயர்களால் அழைக்கப்பட்ட மாதோட்டத்தின் தோற்றத்தைப்பற்றிக் கூறும் சான்றுகள் ஒன்றும் இப்பொழுது காணப்படவில்லை. ஆதியில் இப்பகுதியில் நாகர்கள் வாழ்ந்தார்களென்பதும், மாந்தையிற் கோட்டை கட்டி அங்கிருந்து சென்று மரக்கலங்களைக் கொள்ளையிட்டார்களென்பதும் ஐதிகம். இந்த நாகர்களின் செருக்கை அடக்கிக் கோட்டையைத் தகர்த்த பெருமை சேரன் செங்குட்டுவனைச் சேருமென்பதும் சிலர் கொள்கை. இதனைற் போலும்,


"முனைஅதி யானைஉண் குருகின் கானலம்
பெருந்தோட்ட மன்ன ராற்பிசை வருஉங்
குட்டுவன் மாந்தை யன்ன"

என்று குறுந்தொகையிற் பாடப்பட்டுள்ளது. இப்பகுதியில் ஐவகைக் கம்மாளர் வாழ்ந்தார்கள் என்றும் மாந்தை அரசன் கம்மாளர் வமிசத்தவன் என்றும், சிலர் கருதுகிறார்கள். பிற்காலத்தில் எழுந்த மாந்தைப் பள்ளு, விஜயதர்ம நாடகம் ஆகிய நூல்கள் இக்கொள்கையை ஆதாரமாகக் கொண்டே எழுதப்பட்டன.

மாதோட்டத்தைப் பற்றிய மிகப் பழைமையான குறிப்பு மகாவம்சத்திலேதான் காணப்படுகிறது. விஜயமன்னன் இலங்கைக்கு வந்து சில காலம் அரசாண்டபின், பாண்டிய மன்னனிடம் பெண் கேட்டுத் தூதனுப்பினனென்றும் பாண்டியன் தன்மகளோடு பதினெட்டுக் கம்மாளர் இனத்தைச் சேர்ந்த பல குடும்பங்களையும் விஜயனிடம் அனுப்பினனென்றும், இவ்வளவு பெரிய திரளான பரிவாரங்கள் வந்திறங்கிய இடத்துக்கு மகாதித்த என்று பெயருண்டாயிற்றென்றும் மகாவம்சம் கூறுகிறது. இச்சம்பவம் கி. மு. 6-ம் நூற்றாண்டில் நடைபெற்றது. இதற்குப் பின் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மாதோட்டத்தின் வரலாற்றைப்பற்றிய செய்தியொன்றும் எந்தச் சரித்திர நூலிலும் காணப்படவில்லை. கி.மு. 161-ம் ஆண்டில் ஏலேல மன்னனுக்கும் துட்டகைமுனுவுக்குமிடையே நடந்த போரில் தன் மாமனாகிய ஏலேலனுக்கு உதவி செய்வதற்குப் பல்லுக்கன் என்ற இளவரசன் பெரும்படையோடு மாதோட்டத்தில் வந்திறங்கினனென்றும், அவன் வந்திறங்கிய தினம் ஏலேலன் இறந்த ஏழாம் நாளென்றும் மகாவம்சம் கூறுகிறது. அதன்பின் கி. பி. 103ம் ஆண்டில் பஞ்ச திராவிடர் என மகாவம்சம் கூறும் புலகத்தன், பாகியன், பழைய மாறன், பிழைய மாறன், தாதிகன் என்ற சிற்றரசர்கள் மாதோட்டத்தில் வந்திறங்கி, அனுராதபுரியின் மீது படையெடுத்தனரெனக் கூறப்படுகிறது. கி. பி. 33-ம் ஆண்டிலே ஈழநாகன் என்ற மன்னனைச் சிற்றரசர் சிலர் துன்புறுத்த அவனது பட்டத்து யானை அவனைச் சுமந்துசென்று மாதோட்டத்திற் கப்பலேற்றி அக்கரைக்கனுப்பிற்றென மகாவம்சம் கூறுகிறது.

அடுத்து ஐந்நூறு ஆண்டுகளில் மாதோட்டத்தில் என்ன நடந்ததென்ற குறிப்புக்கள் எதுவும் மகாவம்சத்திலோ சூளவம்சத்திலோ காணப்படவில்லை. ஆயினும், அது சீரும் சிறப்பும் வாய்ந்த ஒரு வர்த்தகத் தளமாக உருவெடுத்துக் கொண்டிருந்ததென்பதனைப் பிறநாட்டறிஞரின் நூல்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாகும். ஈழத்திலிருந்து தந்தமும் ஆமையோடும் பிற பொருள்களும் உரோமாபுரிக்கு வந்தனவென்று கி. பி. 1-ம் நூற்றாண்டில் உரோம சாம்ராச்சியத்தில் வாழ்ந்த ஸ்ரூபோ (Strabo) என்னும் அறிஞர் கூறுகிறார். இதே காலத்தில் வாழ்ந்த பிளினி என்பவர் ஈழத்தின் பிரதான நகரமான பலேசிமுண்டஸ் ஒரு துறைமுகத்தை அடுத்திருந்ததெனக் கூறுகிறார். இந்தப் பலேசி முண்டஸ் பாலாவி முண்டாலென்றும் இதற்குச் சமீபத்திலிருந்த மகாகூப என்னும் பெயரிய ஏரி இப்பொழுது கட்டுக்கரைக் குளமென்று வழங்கும் குளமென்றும் சிலர் கருதுகிறார்கள். மாதோட்டத்திலிருந்து வந்த முத்துக்களையும் பட்டாடைகளையும் அணிந்தும் மிளகு முதலாம் வாசனைப் பொருள்களை உண்டும் உரோமாபுரி மக்கள் ஆடம்பர வாழ்வு நடத்தினரென அவர் கூறுகிறார். இதே காலத்தில் எழுந்த (Periplus) பெரிபுளூஸ் நூலும் இவ் விவரங்களையே கூறுகிறது.

1800 ஆண்டுகளுக்கு முன்னரேயே மேலைத் தேயங்களோடு வர்த்தகம் நடாத்திய துறைமுகப் பட்டினமாக விளங்கியது மாதோட்டம் என்பது கி. பி. 2-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க பூகோள விஞ்ஞானியாகிய தோலெமி (Ptolemy) வாயிலாக அறியக்கிடக்கிறது. இவர் வரைந்த பூகோளப் படமொன்றில் ஈழத்து நகரங்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. மாதோட்டத்தை மாதொவுட்டு எனக் குறிப்பிட்டு அதை அண்டிய பிராந்தியத்தை (மாந்தையை) மாந்தொட்டு எனக் குறித்ததுமன்றி மாதோட்டத்தின் பெயருக்கெதிரே பெரிய வர்த்தகத் தளமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சீன தேசத்திலிருந்தும் மாதோட்டத்துக்குப் பல மரக்கலங்கள் வந்தனவென்றும் சீன மன்னரும் சிங்கள மன்னரும் ஒருவர்க்கொருவர் அன்புத் தூது கோஷ்டியை அனுப்பினரென்றும் சரித்திர வாயி



நாவலரின் நண்பனுயிருந்தவரும், 1879-ல் சட்ட நிரூபண சபைக்
குத் தமிழர் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படுவதற்குச்
சேர். பொன் இராமநாதனை எதிர்த்துப் போட்டியிட்டு,
"நட்பு வேறு யோக்கியதை வேறு" என்ற கொள்
கைப்படி நாவலரால் ஆதரிக்கப்படாது
தோல்வி கண்டவருமான கிறிஸ்தோபர்
பிரிட்டோ (C. Brito).

—உபயம்: க. சதாசிவசேன்.

லாக அறியக்கிடக்கிறது. மாதோட்ட வாபி லாகவே இத் தூதர்கள் வந்து சென்றார்கள். கி. பி. 5-ம் நூற்றாண்டுவரை மாதோட்டம் பிரசித்திபெற்ற வர்த்தகத் தளமாக விளங்கியதெனப் பலதேச நூல்கள் வாயிலாகவும் அறிகிறோம். கிரேக்கர், அரேபியர், தமிழர், வட இந்தியர், சீனர் முதலானோர் இங்கு வந்து கூடிப் பண்ட மாற்றம் செய்தார்கள். இங்கிருந்து முத்து, நவரத்தினங்கள் ஆமையோடு, யானைத்தந்தம், சங்கு, யானைகள், குரங்குகள், மயில்கள் முதலாம் பொருள்களும், மிளகு முதலிய வாசனைப் பொருள்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. பளிங்குப்பாத்திரங்கள், கண்ணாடிப்பாத்திரங்கள், மட்பாத்திரங்கள், அகில்,சந்தனம், பட்டு,குதிரை முதலிய பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. கி. பி. 4-ம் நூற்றாண்டிலே மாதோட்ட வாயிலாகவே புத்தபிரானின் தந்தச் சின்னம் ஈழநாட்டுக்கு வந்து சேர்ந்தது. இப்புனிதச் சின்னத்தைக் கொண்டுவந்த கலிங்கநாட்டு இளவரசியும் இளவரசனும் மாறுவேடம் பூண்டு சாதாரண பிரயாணிகளோடு கலந்து மறைமுகமாகவே அங்கு வந்து இறங்கினார்களென்றும் இராப்பொழுதை ஒரு சைவ ஆலயத்திற் கழித்தார்களென்றும் பாளி நூலாகிய தாதவம்சம் கூறுகிறது. இவ்வாலயம் மாதோட்டத்திலுள்ள கேதீஸ்வரமென்றே கருதக்கிடக்கிறது.

கி. பி. 6-ம், 7-ம் நூற்றாண்டுகளில் மாதோட்டம் பெரும் சிறப்புற்று விளங்கியது. பற்பல நாடுகளிலிருந்தும் வர்த்தகர்கள் அங்கு வந்து கூடினார்கள். இவர்களுள் இந்தியோப்பியரும் பேசியரும் முக்கியமானவர்கள். உலகிற் பல பாகங்களிலுமிருந்து பண்டங்கள் மாதோட்டத்தில் வந்து குவிந்தனவென்று கிரேக்க அறிஞர் கொஸ்மன் இண்டிக்கோ பிளேஸ்தேஸ் (Cosman Indico Pleistes) தமது நூலிற் கூறியுள்ளார். வர்த்தகப் பெருக்கினால் மாதோட்டத்தில் செல்வம் மல்கியது. மக்கள் வளமான வாழ்வு நடத்தினார்கள். நகரைச் சுற்றிப் பெரிய மதிலும், நான்கு வாயில்களும், இரண்டு அகழிகளும் இருந்தன. விசாலமான தெருக்களும், ஆலயங்களும், மாட மாளிகைகளும், வியாபாரத் தலங்களும் நகரை அலங்கரித்தன. 7-ம் நூற்றாண்டிலே மாதோட்டத்தில் இருந்த கேதீஸ்வரர் ஆலயம் பாடல் பெற்ற தலம் என்னும் மகிமையையும் அடைந்தது. தமிழ் நாட்டில் வசித்த ஞானசம்பந்தர் மாதோட்டத்திற் கோயில் கொண்டிருந்த கேதீஸ்வரர் மீது பதிகம் பாடினார். ''வண்டு பண் செய்யும் மாமலர்ப் பொழில் மஞ்ஞை நடமிடு மாதோட்டம் தொண்டர் நாடொறுந் துதி செய்ய அருள் செய் கேதீசரத்தைப் பாடும் சம்பந்தர் ''வாழையம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்ட'' மென்றும், ''பொன்னி லங்கிய முத்தும் மாமணிகளும் பொருந்திய மாதோட்டம்'' என்றும், ''மானம் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்'' என்றும் மாதோட்டத்தின் இயற்கை அழகினையும் செல்வச் சிறப்பினையும் பாடுகிறார்.

இக்காலத்தில் ஈழத்தின் மீது படையெடுத்த பகைவர்கள் வந்திறங்கிய துறைமுகமாகவும் மாதோட்டம் விளங்கியது. கி. பி. 7-ம் நூற்றாண்டில் இளவரசன் மானவன்மன் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னனின் உதவியோடு இருமுறை மாதோட்டத்தில் வந்திறங்கினான். இரண்டாம் முறை வெற்றியும் கண்டான். 8-ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிற் சில பகுதிகளிற் பாண்டியராட்சி ஓங்கியிருந்தது. ஈழத்தின் மீதும் பாண்டியர் படையெடுப்பரென எதிர்பார்த்த இலங்கை மன்னன், இளவரசனைப் பெரிய படையோடு மாதோட்டத்தில் நிறுத்திவைத்ததெனச் சூளவம்சம் கூறுகிறது. ஆனால் 9-ம் நூற்றாண்டில் இரண்டாவது சேன மன்னன் காலத்திலேதான் படையெடுப்பு நிகழ்ந்தது. மாதோட்டத்தில் இறங்கிய சமுத்திரம் போன்ற படைகள் தலைநகரைச் சூறையாடினவென்றும் அங்கு வாழ்ந்த மக்கள் பகைவர்க்கு உதவிபுரிந்தனரென்றும் சூளவம்சம் கூறுகிறது.

கி. பி. 826-ம் ஆண்டில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் ஒன்று மாதோட்டத்தில் நிகழ்ந்தது. இவ்வாண்டில் ஈழநாட்டுப் படைகள் முதன் முதலாகத் தென் இந்தியாவின்மேற் படையெடுத்தன. வரகுண பாண்டியனென்னும் அரசன் தன் தந்தையை எதிர்ப்பதற்காகச் சேன மன்னனின் உதவியை நாடினான். சேனமன்னன் மாதோட்டத்தில் ஒரு பெரிய படையினைக் கப்பலேற்றித் தன் சேனாதிபதியோடு பாண்டிய மன்னனிடம் அனுப்பினான். அப் படை வெற்றிபெற்றுத் திரும்பிவரும்வரை மன்னன் மாதோட்டத்தில் தங்கி நகரின் அலுவல்களைச் சீர்திருத்தி அமைத்ததோடு அருகிலுள்ள கிராமங்களையும் திருத்தினானென்று மன்னர்க் கச்சேரிக் கல்வெட்டினால் அறியக்கிடக்கிறது. இதே நூற்றாண்டில் 5-ம் காசியப்ப மன்னன் மாதோட்டத்துக்கருகில் சமதாட்டிய என்ற பௌத்த ஆலயத்தை அமைத்தானென்று அவன் கல்வெட்டுக் கூறுகிறது. இந்நூற்றாண்டிலே கேதீச்சர ஆலயத்தின்மீது சுந்தரமூர்த்திநாயனார் பதிகம் பாடினார். ''பாலாவியின் கரை மேல் திடமா வுறைகின்றான் திருக்கேதீச்சரத்தானே'' எனப் பாடிய சுந்தரர் ''வரிய சிறை வண்டு யாழ்

செயு மாதோட்ட நன்னகர்'' என்றும், ''தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சர'' மென்றும், ''மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகர்'' என்றும், மாதோட்டத்தின் இயற்கை யழகினையும் பாடுகிறார் ஒன்பதாம் நூற்றாண்டிலே வர்த்தகர் மட்டுமல்ல, பல யாத்திரிகர்களும் கேதீச்சரத்தைத் தரிசிக்க மாதோட்டத்துக்கு வந்தார்களென அறியக் கிடக்கிறது. இக்காலத் தில் மாதோட்டம் ஒரு புண்ணியதலமாக விளங் கியதென்பதற்கு இக் காலக் கல்வெட்டுகளும் சான்று பகர்கின்றன. கதிர்காமக் கல்வெட்டு அங்கிருந்த பௌத்த ஆலயத்தின் பரிபாலனத்துக் குரிய சில விதிகளைக் குறித்துவிட்டு அவற்றை மீறுவோர் மாதோட்டத்திற் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவாராக எனக் கூறுகிறது. கி. பி. 9-ம் நூற்றாண்டில் மீண்டுமொருமுறை ஈழப்படைகள் மாதோட்டத்திலிருந்து தென் ஞட்டின்மேற் படையெடுத்தன. பாண்டியனின் உதவிக்காகச் சென்ற படைகள் சோழர் சேனையி னால் வேலூரில் முறியடிக்கப்பட்டுக் கொள்ளை நோயினால் பீடிக்கப்பட்டு மாதோட்டத்தில் வந் திறங்கின.

கி. பி. 935-ம் ஆண்டில் ராஜசிம்மபாண்டி யன் சோழர்களுக்குப் பயந்து ஈழமன்னனின் உத வியை நாடி மாதோட்டத்தில் வந்து தங்கினா னென்றும், உதவி கிடையாமையால் கேரள நாட்டுக்குச் சென்றனனென்றும் சூளவம்சம் கூறுகிறது. கி. பி. 947ம் ஆண்டில் பராந்தக சோழனின் படை ராஜசிம்ம பாண்டியன் விட்டுச் சென்ற மகுடத்தை கொள்ள மாதோட்டத்துக்கு வந்து வெற்றிகண்டது. ஆனால் சோழர்கள் விரைவிலேயே தாயகம் திரும்பினர். கி. பி. 993ம் ஆண்டில் ராஜராஜ சோழனின் படைகள் மாதோட்டத்தில் வந்திறங்கின. சோழர் மாதோட்டத்தையும் உத்தரரட்டை என்ற வட மாகாணத்தையுங் கைப்பற்றினர். ராஜராஜசோழ னுக்குப்பின் அரசாண்ட ராஜேந்திர சோழன் ஈழநாடுமுழுவதையும் கைப்பற்றினான். 77 ஆண்டு களாக ஈழம் சோழநாட்டின் ஒரு பகுதியாக மும் முடிச்சோழமண்டலம் என்னும் பெயரோடு விளங்கியது. புலத்தி நகரத்தின் பெயரை ஜனநா தமங்கலம் என மாற்றிய சோழர் மாதோட்டத் தின் பெயரை ராஜராஜபுரம் என மாற்றினர்கள். இக்காலத்தில் மாதோட்டம் பெரும் சிறப்பு வாய்ந்த நகரமாக விளங்கியிருக்க வேண்டும். ஈழம் முழுவதிலும் பல ஆலயங்களை எடுத்த சோழ மன்னன் மாதோட்டத்திலும் இரு கோயில் களை எடுத்தார்கள். மாதோட்ட அதிபனை தாழிகுமரன் ராஜராஜேஸ்வரமென்னும் ஆல யத்தை எழுப்பினனெனத் திருக்கேதீஸ்வரக் கல்வெட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டு மாதோட் டத்தைப் பற்றிய அரிய விவரங்கள் சிலவற்றைத் தருகிறது. மாதோட்டத்தில் ஒரு பெருந் தெரு வும் ஒரு பெரிய கம்மாளர் சேரியும் இருந்தன வெனக் கூறுகிறது. அக்காலத்தில் அங்கு அற விடப்பட்ட சில வரிகளின் விவரமும் இக் கல்வெட் டினால் அறியக் கிடக்கிறது. மாதோட்டத்தில் ஸ்ரீ ராமேஸ்வரமுடைய மகாதேவர் எனப் பிறி தொரு சைவாலயம் சோழர் காலத்தில் எழுந்த தென்பதற்கு வேறொரு திருக்கேதீஸ்வரக் கல் வெட்டுச் சான்று பகர்கிறது.

ஈழத்திற் சோழராட்சி கி. பி. 1070-ம் ஆண் டில் முடிவடைந்தது. மாதோட்டமே சோழர் ஆதிக்கத்திற்கு ஜீவ நாடியாக விளங்கியதென் பதனை உணர்ந்த இலங்கைமன்னன் விஜயபாகு முதலில் மாதோட்டத்தைக் கைப்பற்றினான். சோழநாட்டோடு ஈழத்துக்கு இருந்த தொடர்பு அற்றுப்போகச் சோழர் ஆதிக்கமும் முடிவடைந் தது. 15 ஆண்டுகளுக்குப்பின்னர், சோழ நாட்டின் மீது படையெடுக்க எண்ணிய விஜயபாகு மாதோட்டத்துக்கு ஒரு பெரும்படையை அனுப் பினான், ஆனால் அங்கு வேளைக்காரர் படை புரட்சி செய்தமையினால் படையெடுப்பு நின்று விட்டது. 12-ம் நூற்றாண்டிலே சோழர் இலங்கை மீது படையெடுபரென எதிர்பார்த்து விஜய பாகு மாதோட்டத்தில் வந்து தங்கினான். ஆனால் சோழர் படையெடுக்கவில்லை. இதே நூற்றாண்டில் வீரதேவன் என்னும் வடநாட்டுச் சிற்றரசன் ஒருவன் ஒருபடையோடு மாதோட்டத்தில் வந் திறங்கி ஈழ மன்னனைத் தோற்கடித்துத் தானும் மாண்டானெனச் சூளவம்சம் கூறுகிறது. கி. பி. 1169-ம் ஆண்டில் முதலாம் பராக்கிரம பாகுவின் காலத்தில் மாதோட்ட மக்கள் புரட்சி செய்தனரென்றும் தன்படையின் பலத்தினால் மன்னன் அவர்களை அடக்கினனென்றும் சூள வம்சம் கூறுகிறது. இதன்பின் சேனாதிபதி லங்கா புரி தண்டநாயக்கனின் தலைமையில் பாண்டி நாட்டின்மீது படையெடுக்கப் பராக்கிரமபாகு ஒருபெரும் படையை மாதோட்டத்திலிருந்து அனுப்பினான். தண்டநாயக்கன் பல அரிய செயல் களை ஆற்றி இறுதியில் மரணமடைந்தான். மாதோட்டத்தில் மீண்டும் படையெடுப்பதற் கான ஆயத்தங்கள் நடப்பதை அறிந்த சோழ மன்னன் வல்லபன் தலைமையில் ஒருபடையை அனுப்பி மாதோட்டத்தையும் வேறு பல நகரங் களையும் அழிப்பித்தான். சோழமன்னன் 2வது இராஜாதிராஜனுடைய திருவாலங்காட்டுக் கல் வெட்டு இதனைக் கூறுகிறது. மாதோட்டம் பகை வரினால் அழிவுற்றதென்பதற்கு இக் கல்வெட்டு ஒன்றே சான்றாகவுள்ளது.

கி. பி. 13-ம் நூற்றாண்டில் கடாரதேச இள வரசனான சண்டபானு என்பவன் ஒருயாவுகப் படையோடு மாதோட்டத்தில் வந்திறங்கினனென னச் சூளவம்சம் கூறுகிறது. கி.பி.1283-ம் ஆண் டில் ஈழநாடு பாண்டியராதிக்கத்திற்குள்ளாகியது. பாண்டியப்படைகள் மாதோட்டக் கரையிலிறங்கி ஈழநாட்டைக் கைப்பற்றின. அடுத்து இருபது ஆண்டுகளுக்கு ஈழத்திற் பாண்டியராதிக்கம் நிலவிற்று. இக்காலத்தில் மாதோட்டம் மீண்டும் முக்கியத்துவம் பெற்றிருக்கவேண்டும். இதன்பின் மாதோட்டத்தைப்பற்றிய செய்திகள் எந்த வர லாற்று நூலிலும் காணப்படவில்லை.

மாதோட்டத்தின் வரலாறு அங்கு கோயில் கொண்டிருக்கும் கேதீச்சரர் ஆலயத்தின் வரலாற் றோடு ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. இவ்வாலயம் எக்காலத்தெழுந்த தென்றும் யாராலெடுக்கப்பட்டதென்றும் அறியக்கூடிய சான்றுகள் ஒன்றும் இப்பொழுது காணப்படவில்லை. விஜயன் இலங்கைக்குவந்ததும் கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் முதலிய ஆல யங்களை எழுப்பித் திருக்கேதீஸ்வரத்தையும் புதுப் பித்தானென யாழ்ப்பாண வைபவ மாலையின் ஆசிரியர் கூறுகிறார். இதனை நிரூபிப்பதற்கு வேறு சான்றுகள் காணப்படவில்லை. ஆதிகாலத் தில் இப்பகுதியில் நாகர்கள் வசித்தன ரென்றும் அவர்கள் பூசித்துவந்த லிங்க மாகையால், இங்கே கோயில்கொண்டருளியிருக் கும் இறைவனுக்குக் கேதீஸ்வரன் என்று சர்ப்பத் தின் பெயர் உண்டாயிற்றென்றும் சிலர் கருது கிறார்கள். கி. பி. 1-ம் நூற்றாண்டிலிருந்து 13-ம் நூற்றாண்டுவரை இவ்வாலயத்தின் புகழ் பலவிடங்களிலும் பரவியிருந்ததென ஊகிக் கலாம். சைவர்கள் இதனை முக்கியதலமாகக் கருதினார்களெனச் சம்பந்தர் சுந்தரர் முதலியோ ருடைய பதிகங்கள் நமக்கறிவிக்கின்றன. ''மாதோட்டத்து அத்தர் மன்னுபாலாவியின் கரையிற் கேதீச்சர மடைமின்னே'' என்ற ஞான சம்பந்தரின் ஏவலைக்கேட்டுப் பல யாத்திரீகர்கள் இங்குவந்தார்கள்என்று கொள்ளவும் இடமுண்டு.

கி. பி. 14-ம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஏறக் குறைய 6 நூற்றாண்டுகளுக்கு மக்கள் கவனத்தி லிருந்தும் சரித்திரத்திலிருந்தும் விடை பெற்றுக் கொள்கிறது மாதோட்டம். இதன் ஆதியைப் போலவே இதன்அந்தமும் எவ்வாறு எக்காலத்தில் யாரால் ஏற்பட்டதெனத் தெரியவில்லை. கி. பி. 6-ம் நூற்றாண்டு தொடக்கம் இதன் வர்த்தகப் பெருக்கம் குறைந்துகொண்டே வந்தது.மாதோட் டத்தை யண்டிய கடலில் மணல்மேடுகள் தோன் றினமையும் காலப்போக்கில் மரக்கலங்களின் அளவுகள் பெருத்தமையுமே இதற்குக் காரண மாகும். 15-ம் நூற்றாண்டில் ஈழத்துக்கு வந்த இபன் பட்டுட்டாவும் அவனுக்குப் பின் வந்த மார்க்கோ போலோவும் மாதோட்டத்தைப் பற்றிக் கூறாது விட்டமை கவனிக்கத்தக்கது.


மாதோட்டத்தைக் கடல் கொண்ட தென் பதற்கு ஒருகுறிப்பு மட்டும் உள்ளது. வாக்கிய பஞ்சாங்கத்தை முதலில் கணித்தவர்களின் வழி வந்த விஸ்வநாத சாஸ்திரியார் எழுதிய சம்பவக் குறிப்பில் 1545ம் ஆண்டில் திடீரென்று இப்பகு தியிற் கடல் பரவிற்றென்றும் குறிப்பிட்டிள்ளார். இதன் குறிப்பில் கேதீஸ்வரர் ஆலயத்தில் 1595-ம் ஆண்டுவரை பூசைகள் நடந்தனவென்றும் கூறப் பட்டுள்ளது. மாதோட்டம் இருந்த இடத்தில் இன்று பொலிந்துகிடக்கும் சிப்பிகள், சங்குகள், ஊரிகள் முதலிய பொருட்கள் அந்நகரின் ஒரு பகுதியைக் கடல்கொண்டதென்னும் கூற்றை உறுதிப் படுத்துகின்றன.


போத்துக்கேயர் ஈழநாட்டுக்கு வந்த காலத் தில் மாதோட்டம் அழிந்து கேதீஸ்வரர் ஆலயமும் பாழடைந்திருந்த தென்பதைப் போர்த்துக் கேய வரலாற்றுசிரியரான டீககட்டோ (Decanto) என்பவரின் நூலிலிருந்து அறிகிறோம். மாதோட் டத்திலிருந்த கற்களை அவர்கள் தங்கள் தேவை களுக்கு எடுத்துக்கொண்டார்கள்.

மாதோட்டம் அழிந்தபோதிலும் அதன் புக ழும் பழம்பெருஞ் சிறப்பும் பல நூல்கள் எழு வதற்குக் காரணமாக இருந்தன. மாந்தைப் பள்ளு விஜயதர்ம நாடகம் முதலியன மாந்தையின் புகழ்பாட எழுந்த நூல்களாகும்.

சைவநெறி தழைத்தோங்கவும்,தமிழ்மொழி வளஞ் சிறக்கவும் தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் 1872-ம் ஆண்டில் பாழடைந்து தரைமட்டமாகக் கிடந்த கேதீஸ்வரர் ஆல யத்தைத் திருப்பியமைக்க முயற்சிகள் பல செய் தார். அவர் வாழ்ந்த காலத்தில் அவர் எண்ணம் நிறைவேறவில்லை. சென்ற நூற்றாண்டின் இறுதி யில் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் முயற் சியாலும், சைவாபிமானிகளின் முயற்சியாலும் பழைய கோயிலின் லிங்கமும், விநாயக விக்கிர கமும் பூசைப் பாத்திரங்கள் சிலவும் கிடைத்தன. ''கேழல் வெண்மருப்பணிந்த நீண்மார்பர் கேதீச்சரம் பிரியாரே'' என்ற சம்பந்தர் வாக்குப் பொய்யாவண்ணம், சென்ற நூற்றாண் டின் இறுதியில் சைவ மக்களின் முயற்சியால் ஒரு புதிய ஆலயம் எடுக்கப்பட்டது. அன்று எடுக்கப்பட்ட சிறிய ஆலயம் இன்று விஸ்தார மான பெரிய ஆலயமாக உருவெடுத்து விட்டது.

ஏறக்குறைய ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளாக ஈழநாட்டு நாட்டு நாகரிகத்தின் தீபமாகத் திகழ்ந்து, ஈழத்தின் பெயரையும், புகழையும் கலாச்சாரத்தையும் திசையெங்கணும் பரப்பி நின்ற மாதோட்டம் இன்று புதை பொருளாராய்ச்சியாளரின் ஆராய்ச்சித் தளமாக மாறி விட்டது. 1926-ம் ஆண்டிலும் 1949-ம் ஆண்டிலும் நடந்த ஆராய்ச்சியின் பயனகப் பழைய நாணயங்கள், மண், பளிங்குப் பாத்திர ஓடுகள், வளையல்கள், சிறுவர் விளையாடிய தேர், மனித எலும்புக் கூடுகள் முதலாய பொருள்கள் கிடைத்தன.இன்னும் அங்கு புதைந்து கிடக்கும் கற்களும் ஓடுகளும் வளையல் துண்டுகளும் சரித்திரங்களிற் குறிப்பிடாத எத்தனை கோடி சாதாரண மக்களின் இன்ப துன்பங்களைக் கூற வல்லவை! 1800 ஆண்டுகளுக்கு மேலாக ஈழ நாட்டு மக்களின் வாழ்க்கையிலும், சரித்திரத்திலும், கலாச்சாரத்திலும் நாகரிகத்திலும் முக்கியமான ஓரிடத்தை வத்து வகிந்த மாதோட்ட நன்னகரத்தின் சிறப்பினை மேலும் ஆராய்ந்தறிதல் ஆராய்ச்சியாளரின் கடனுகும்.





நல்லூர்க் கைலாசபிள்ளையார் கோயில். கிலமாய்க் கிடந்த இந்தக் கோயிலைப் புனருத்தாரணம் செய்வதற்கு நாவலர் பெருமான் பெருமுயற்சி யெடுத்தவர். இவர் இந்தக் கோயிலின் வரலாற்றை விரித்துப் பிரசங்கஞ் செய்திருக்கிறார்.

அருள். தியாகராசா
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்



''ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தியாகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை
காணத்
தேங்கமழும் மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேரவைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றிமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினு முறவணங்கிப் போற்றல் செய்வாம்''

சைவமக்களாகிய எமக்கெல்லாம் சிவராச தானியாய் விளங்குவது தில்லைச் சிதம்தரம். தில்லைத் திருக்கோயில் சொல்லுதற்கரிய சிறப்புக்களையுடையது. எங்கள் முழுமுதற் கடவுளும், உலகத்திற்குக் கருத்தாவுமாகிய சிவபெருமானுக்கு ஆயிரக் கணக்கிலே திருக்கோயில்கள்; இருப்பினும் ''கோயில்'' என்ற அளவிலே சுட்டப்படும் சிவத்தலம் சிதம்பரம் ஒன்றே. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றது. இதனைக் குமரகுருபர சுவாமிகள்:

''தீர்த்த மென்பது சிவகங்கையே
ஏத்தருந் தலம் எழிற்புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனதுருவே''

என்று தாமருளிச்செய்த சிதம்பரச் செய்யுட் கோவையில் அருளியிருக்கின்றார். சைவத்திருமுறைகளைப் பாதுகாத்து வைத்திருந்து உலகுக்களித்த பெருமை தில்லைப்பதியைச் சாரும். சிலம்பொலியாகிய பரநாதம் இத்தலத்திலேதான் பிறந்தது. திருமுறைகளைப் பாதுகாத்து வைத்த பெருமையினால், திருமுறை ஓதுபவர்கள் ''திருச்சிற்றம்பலம்'' என்று தொடங்கிப் பின் ''திருச்சிற்றம்பலம்'' என்று கூறிமுடித்தலைத் தமிழ்நாட்டிலும், ஈழநாட்டிலும் நாம் இன்றும், எப்பொழுதும் காணலாம். ''திருச்சிற்றம்பலம்'' என்பது சிவனடியார்க்கு ஒரு சிறந்த மந்திரம். அறுபத்து நான்கு கலைகளையும் நன்கு கற்ற நூலோர் உலகத்தை விராட்புருடன் வடிவாகக் கருதிச் சிவத்தலங்களைக்கொண்டு அதனை விளக்குவார்கள். திருவாரூர் அதன் மூலாதாரம்; திருவானைக்கா கொப்பூழ்; திருவண்ணாமலை மணிபூரகம்; சிதம்பரம் இருதயம்; திருக்காளத்தி கண்டம்; காசி புருவமத்தியம். இதனைப் பரஞ்சோதி முனிவர்:

''திருவளராரூர் மூலந் திருவானைக்காவே குய்யம்
மருவளர் பொழில் சூழண்ணாமலை மணிபூர
நீவிர்
இருவரும் கண்ட மன்ற மியதமாந்
திருக்காளத்தி
பொருவரும் கண்ட மாகும் புருவமத்திய
மாங்காசி''

என்ற திருவிளையாடற் புராணச் செய்யுளால் அறிவுறுத்துகின்றார். பஞ்சபூதத் தலங்களுள், பிருதுவி திருவாரூர்; (சிலர் காஞ்சிபுரத்தையும் கொள்வர்) அப்பு திருவானைக்கா; தேயுதிருவண்ணாமலை; வாயு திருக்காளத்தி; ஆகாயம் சிதம்பரம்; மேலும் திருவாரூரில் பிறக்க முக்தி; காசியில் இறக்க முக்தி; சிதம்பரம் தரிசிக்க முக்தி; என்று சைவ நூல்கள் கூறுகின்றன. இத்தலம், சிதம்பரம், தில்லைச்சிற்றம்பலம், பொன்னம்பலம், தில்லைவனம், பெரும்பற்றப்புலியூர், புண்டரீகபுரம், பூலோக கைலாசம், ஞானாகாசம், தில்லையம்பலம், மணிமன்று முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது.

சைவ மக்களாகிய எமக்கெல்லாம் நிலைக்களமாக விளங்குவது பன்னிரு திருமுறைகள். அவற்றுள்ளே காலத்தாற் பழையது திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் என்னும் தமிழாகம நூல், இது தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் விளங்குகின்றது. மூவாயிரம் திருப்பாடல்களையுடையது. அவற்றுள் ஏறக்குறைய எண்ணூறு பாடல்கள் சிதம்பரத்தின் பெருமையையும், ஸ்ரீமந் நடராசப் பெருமானின் ஐந்தொழிலின்பக் கூத்தினையும் விதந்தோதுகின்றன. திருமூலர் கண்ட திருக்கூத்து மிக அற்புதமானது. அக்கூத்தினை, **சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்று ஐந்து வகைப் படுத்திக் கூறுப.**

''சிற்பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பரமாம் அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறிவாரே''

என்கின்றது திருமந்திரம். திருமூலர் கண்ட திருக்கூத்தில், அண்ட சராசரங்களெல்லாம் சிவபெருமானின் திருமேனி; எங்குஞ் சிவசக்தி; எல்லாம் அவன் ஆடல் புரிகின்ற அம்பலமாகிய சிதம்பரம்; எங்கும் அவன் திருநடனம்; எங்கும் அவன் சிவனாய் விளங்கினான்: இதனைத் திருமூலர்

''எங்குந் திருமேனி எங்குஞ் சிவசக்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமாயிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்னினையாட்டே''

என்று அருளியிருக்கின்றார். எம்மிறையாகிய சிவபெருமான், நடராசப் பெருமான் ஆடும்போது, ''வேதங்கள் ஆடுகின்றன; ஆகமங்கள் ஆடுகின்றன; கீதங்களாகிய ஒலிவடிவுலகு இயங்குகின்றது; நுண் பூதங்களும், அவற்றாலாகிய பருப் பூதங்களும், அவற்றாலாகிய புவனங்களும் அவற்றின் கூட்டமாகிய அண்டங்களும் ஆடுகின்றன. பூதங்களைந்திலும், பொறிகளிலும், புலன்களிலும், வேதங்களிலும், ஆகமங்களிலும், காலம், கலை முதலியவற்றிலும், ஊழியாகிய சங்காரத்திலும் கலந்து ஒன்றிநின்று ஆடுகிறார் எம் இறைவன். அவன் ஆட, தேவர், அசுரர், நரர், சித்தர், வித்தியாதரர், பிரம விஷ்ணு ருத்திரர்கள் முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள், தவசிகள், சப்த சாத்திரம் படித்தோர், முதலியோரெல்லாம் ஆடுகின்றனர்''

சைவசித்தாந்த நூலறிவும், ஆகமஞானமும், அனுபவமும் சிவனருளும் ஒருங்கு கைவரப் பெற்றவர்களே நடராச தத்துவத்தை அறிய முடியும் என்று ஆன்றோர் கூறுவர். ஐந்தொழில் உண்மையை உணர்த்துவதே, ஐந்தெழுத்து வடிவினனான நடராசப் பெருமானின் பெருங்கருணைத் திருநடனமாகும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவே இறைவனின் ஐந்தொழிலாகும். மயிலம் சிவஞானபாலய சுவாமிகள் பின்வருமாறு அதனை விளக்குகிறார்:-

''ஆன்மாக்கள் மலத்தால் மறைப்புண்டு அனுதி காலந்தொட்டுத் துன்புறுவதைக் கண்டு, கருணை மேனியனாகிய இறைவன் துன்பத்தினின்றும் ஆன்மாக்கள் நீங்கி இன்பம் எய்த எண்ணுகின்றான். அதற்காக ஆன்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களைத் தருகின்றான். இந்நிலையைப் **படைத்தல்** என்பர் அறிஞர். ஆன்மாக்கள் தனுகரணங்களோடுங் கூடிப் புவனங்களிலே போகத்தை நுகரும்வரை உடம்போடு உயிரை இருக்க வைக்கிறான். இந்நிலையைக் **காத்தல்** என்பர். ஆன்மாக்கள் தனுகரணங்களோடு கூடிப் புவனபோகங்களை நுகருமிடத்து இடைப்புத் தோன்றுவது இயற்கையன்றோ? அவ்விடைப்பை நீக்கி, அந்நிலையினின்றும் மாற்றுகின்றான். இந்நிலையை **அழித்தல்** என்பர். இறைவன் எல்லா உயிர்களையும் ஒரே காலத்து வீடுபேறு அடைவிக்கும் ஆற்றல் உடையவனாயிருந்தும் ஆன்மாக்களுக்குச் சிறப்புணர்வோடு கூடிய மெய்யுணர்வு தோன்றுகின்ற வரையில் தனது பேரருள் உயிர்களிடம் ஒரே சமயம் தோன்றுதபடி மறைத்தலையும் செய்கின்றான். இந்நிலையை **மறைத்தல்** என்பர். இருவினையொப்பு மலபரிபாகம் பெற்ற ஆன்மாவுக்கு வீடுபேறளித்து அருள்புரிகின்றான். இந்நிலையை **அருளல்** என்பர்.''

பஞ்சாட்சரம் என்னும் ஐந்தெழுத்தையே தமக்குத் திருமேனியாகவுடைய ஸ்ரீ நடராசப் பெருமானுக்குத் திருவாசியும் அவசியம். திருவாசி

பிரணவம். பிரணவமில்லாத ஸ்ரீ பஞ்சாக்கரத் தைச் செபிக்கக் கூடாது. திருவாசியில்லாமல் நடராச மூர்த்தம் அமைக்கக் கூடாது. ''ஓங்கா ரமே நற்றிருவாசி'' திருவாசியில்லாத நடராச உருவத்தை வணங்கக் கூடாது. திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட ''ஆடவல்லான்'' என்ற நூலின்கண் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் நடராஜ வடிவத்திற்கும் ஐந் தொழிலுக்கும் உள்ள தொடர்பைப் பின்வரு மாறு விளக்குகின்றார்.

''அம்பலக் கூத்தனுடைய திருவடி நகரம்! வயிறு மகரம்! தோள் சிகரம்! முகம் வகரம்; முடி யகரம்! இது ஊனநடனம். ஞானநடனமாவது கூத்தப் பெருமான் ஏந்திய உடுக்கையில் சிகரமும், டோலகரமாகிய வீசிய கரத்தில் வகரமும், அபய கரத்தில் யகரமும், அகலில் நகரமும், ஊன்றிய திருவடியின் கீழ் மகரம் ஆகக்கொண்டு ஓங்காரத் திருவாசியின் நடுவில் நிறை சுடராகப் பெருமான் நடனம் செய்கின்றார். ஆன்மாக்களுடைய பரிபாக நிலைக்கு ஏற்ப ஆடுகின்ற பெருமான் ஐந்தொழில் களையும் தனித்தனியே நின்றும் இயற்றுகின்றார். ஒருசேர நின்றும் ஆடுகின்றார். ஆக்கல் தொழிலைக் குறிக்கும் தாண்டவம் காளிதாண்டவம் எனப் படும். இறைவனுடைய இரண்டாவது தொழிலைக் குறிப்பது கௌரி தாண்டவம். மூன்றுவது செய லாகிய சங்காரத்தைக் குறிப்பது சங்கார தாண்ட வம். நான்காவது மறைத்தல் செயலைக் குறிப்பது திரிபுர தாண்டவம். ஐந்தாவது செயலாகிய அருளலைக் குறிப்பது ஊர்த்துவ தாண்டவம். இந்த ஐந்து தாண்டவங்களும் தனித்தனியே ஒவ்வொரு தொழிலைக் குறிப்பன, ஐந்து தொழிலையும் ஒருங்கே செய்கின்ற தாண்டவமே ஆனந்தத் தாண்டவம். அதில் துடியில் தோற்றமும். அமைப்பில் திதியும் அங்கியில் சங்காரமும் ஊன்றிய காலில் திரோ தானமும் தூக்கிய காலில் அருளலும் அமைந் திருப்பதை,

''தோற்றம் துடியதனில் தோயும்திதி அமைப் பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
ஊன்ற மலர்ப்பதத்தில் உற்றதிரோதம்முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு''

என்ற உண்மை விளக்கப் பாடலால் அறியலாம். எல்லா உயிர்களுக்கும் அவரவர்கள் பரிபாக நிலைக்கு ஏற்ப ஆணவமல இருளைப் போக்கி, வினை களை நுகர்வித்துப் பேரின்ப நிலையை எய்துவிக் கின்ற பெருங்களிப்பால் இறைவன் ஆடுகின்ற தாண்டவம் ஆனந்த தாண்டவம். இது ஐந்தொழி லையும் ஒருசேர இயற்றுவதால் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம், எனவும் வழங்கப் பெறும். கல்வெட்டுக்கள் ஆடல்வல்லான், ஆடல் வல்லநாயனார் என்று வழங்குகின்றன. இத்தாண் டவமே உலகம் படைக்கவும், வினைப்போகம் உள் ளளவும் காக்கவும், பின்னர் ஒடுக்கவும், வினைகளை மறைத்தல் தொழிலால் நுகர்விக்கவும், பின் அருளவும் பயன்படுகிறது என்பதைத் திருமூலர் பல மந்திரங்களால் உணர்த்தியுள்ளார்! அவற்றுள் ஒன்று:

''அரன் துடி தோற்றம் அமைப்பில் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரனூற் றமைப்பில் அமருந் திரோதாயி
அரனடி என்றும் அணுக்கிர கந்தானே''

நடராசரை விட்டு நீங்காத திருவாசியில் உள்ள சுடர்கள் 51 அக்கரங்களைக் குறிப்பன. ஆனால் தென்னாட்டிலுள்ள சிற்ப வேலைப்பாட மைந்த நடராசர் திருவுருவங்கள் உடைய திரு வாசிகள், பலவிதமான சுடர்களையுடையனவா யிருக்கின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயில் லுள்ள நடராச திருவாசிக்கு 19 சுடர்கள் உள் ளன. கும்பகோணத்திலிருக்கும் சோமேஸ்வரர் கோயிலிலுள்ள திருவாசிக்கு 37 சுடர்களும் திருவலம் ஸ்ரீ வலம்புரிநாத கோயிலில் உள்ள திரு வாசிக்கு 33 சுடர்களும் உள்ளன.

சைவ உலகிற்குத் தனி நாயகமாய் விளங்கும் தில்லைத் திருப்பதியிலுள்ள அம்பலக் கூத்தனை வழிபட்டுப் பேறுபெற்றோர் தொகை எண்ணி லடங்கா. வியாக்கிரபாத முனிவர் காசிவாசி யாகிய மத்தியந்தன முனிவரின் புதல்வர். வட நாட்டிலுள்ள காசியிலிருந்து தென்னாட்டிற்கு வந்து இறைவனை வழிபட்டு மகிழ்ந்தவர். பதஞ்சலி முனிவரும் தில்லையில் வதிந்து இறைவன் தாண்ட வம் கண்டு ஆனந்த வெள்ளத்திலமிழ்ந்தினவர். சிம்ம வர்மன் என்னும் அரசன் இத்தலத்தை அடைந்து சிவகங்கையில் நீராடி, தன் உடல் நோய் நீங்கப்பெற்று, இரணியவர்மனென்ற பெய ருடன் தில்லையம்பலவாணனை வழிபட்டு மகிழ்ந் தான் எனவும், தில்லைப் பெருங்கோயில் திருப்பணி கள் பல செய்து நித்திய பூசைக்கும் திருவிழாக்கட் கும் வேண்டிய நிபந்தங்கள் அளித்தானென்றும் கோயிற் புராணம் கூறுகின்றது. நாம் போற்றும் நால்வர் பெருமக்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்க வாசக சுவாமிகள் ஆகியோர் அந்த மீளா ஆனந் தத்தை அணிகொள் தில்லையில் கண்டவர்கள் ''தில்லைபாதி திருவாசகம்பாதி'' என்று ஓர் பழ

மொழி உண்டு. எல்லாம் வல்ல நடராசப் பெருமானே தமது அருமைத் திருக்கரத்தால், திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் எழுதிப் பஞ்சாட்சரப் படியில் வைத்தாரென்றால் அவற்றின் பெருமையை எம்மனோரால் அளவிட்டுக் கூறமுடியுமா? பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார் பெருமானுக்குப் பெரியபுராணம் பாட நடராசப் பெருமானே ''உலகெலாம்'' என்று அடி எடுத்துக் கொடுத்தார். சேரமான் பெருமான் நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தோழராகப் பெறும்பொருட்டு வழக்கமாகப் பூசைச்சிலம்பொலியைச் சற்றுத் தாழ்த்திப் பின் அவற்குக் கேட்கச் செய்தார். திருநாளைப் போவாரின் பக்தியை வியந்து அவரை எதிர் கொண்டழைத்து வருமாறு தில்லை வாழந்தணர்கள் கனவில் தோன்றி ஆணை தந்தார். முத்துத் தாண்டவரின் பக்திக் கீர்த்தனைக்கு உளம்முருகி பஞ்சாட்சரப் படியில் பொற்காசுகள் வைத்து அருள்புரிந்தார். பட்டினத்தடிகள், குமரகுருபரர், தாயுமானசுவாமிகள் முதலியோர் அம்பலக் கூத்தனை வழிபட்டுப் பெரும்பேறடைந்தவர்கள். பல்லவ அரசர்களும் சோழ மன்னர்களும் தில்லையில் பல திருப்பணிகளைச் செய்திருக்கின்றனர். நடராசப் பெருமானைச் சோழமன்னர்கள் தமது குலதெய்வமாகப் போற்றி வழிபட்டார்கள். அவர்கள் கூத்தப்பிரானின் திருவடியைத் தமது முடியாகச் சூடிய பெருமையுடையவர்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த தில்லையிலும், மன்றில் ஆனந்த நடனம் புரியும் அம்பலவாணரிடத்திலும், ஈழ நாட்டவர்கள் பெரிதும் பேரன்புடையவர்களாய் வாழ்ந்து வருகின்றார்கள். தமது நிலபுலங்களையும் உடைமைகளையும் பலர் சிதம்பரக் கோயிலுக்கே எழுதிக் கொடுத்தார்கள். மார்கழித் திருவாதிரையன்றும் ஆனி உத்தரத்தன்றும் சிதம்பரம் சென்று தில்லையம்பலவனைப் பாடிப்பணிந்து பரவினார்கள். அங்கே பல மடங்களைக் கட்டி வைத்தார்கள்.


யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமான் சிதம்பர சபாநாயகரிடத்தில் எல்லையில்லாத பேரன்பு பூண்டவர். சிதம்பரத்தின் பெருமையைக் கூறும் கோயிற் புராணத்திற்கு உரையெழுதி வெளியிட்டார். மாணிக்கவாசகசுவாமிகள் பாடிய திருக்கோவையாரைப் பேராசிரியர் உரையுடன் அச்சுவாகனமேற்றி வெளிவரச் செய்தார். சிதம்பரத்திலே ஒரு பெரிய சைவவித்தியாசாலை கட்டுவதற்குக் கருதி ஒரு விக்கியாபனம் விடுத்தார். இது நாவலர் பெருமானின் உள்ளக் கிடக்கையை ஒருவாறு புலப்படுத்துகின்றது. அவற்றின் ஓர் பகுதியை இங்கு தருதும்:-

1. ''சிதம்பரத்திலே திருவீதியில் விசாலமாகிய ஒருநிலம் வாங்க வேண்டும். இந்த நிலத்திலே ஒரு பாடசாலையும் பூசைக்கட்டு, சாத்திரக் கட்டு, சமையற்கட்டு, என மூன்று கட்டுள்ள ஒரு திருமடம் கட்டுவிக்கவும், சிவ பூசைக்கு உபயோகமாகும் பொருட்டு ஒரு சிறு நந்தவனம் வைக்கவும் வேண்டும்''.

2. ''இந்தப் பாடசாலையில் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த உபாத்தியாயர்களை நியோகித்து, பிள்ளைகளுக்குப் பாலபாடங்கள், நிகண்டு, திருவள்ளுவர் முதலிய நீதி நூல்கள், சிவபுராணங்கள், இலக்கணம், கணிதம், தருக்கம், வெளிப்படையாகிய வசன நடையிற் செய்யப்பட்ட சைவசமய நூல்கள், பூகோள நூல், கோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மை நூல், வாணிக நூல், அரசநீதி, சிற்ப நூல் முதலானவைகளைப் படிப்பிக்க வேண்டும்''.

3. ''இங்கே படிக்கும் மாணாக்கர்கள் கற்ற கல்வியை, வருஷந்தோறும் மடாதிபதிகளும், வித்துவான்களும், பிரபுக்களும் பரீட்சை பண்ண வேண்டும்''.

நாவலர் பெருமானின் கருத்தைப் பொன்னம் பலத்தெம் முழுமுதலாய் விளங்கிய கூத்தப்பெருமான் முற்றுவித்திருக்கின்றார். சிதம்பரத்திலே ஓர் சைவப்பிரகாச வித்தியாசாலையை நாவலர் பெருமான் தாபித்து, அதிலே தமது மாணவர்களாகிய சதாசிவப்பிள்ளையையும், ம.க.வேற்பிள்ளையையும் நியமித்து அதனைச் செவ்வனே நடத்த ஏற்பாடுகள் செய்தார். நாவலர் சிதம்பரத்தில் நடராசரை வழிபட்டு வருங்காலத்தில், அங்கே நடக்கும் பூசைக் கிரமங்களையும் தீக்ஷிதரின் ஆசார அனுட்டானங்களையும் கவனிக்க நேர்ந்தது. சிதம்பராலய பூசாவிதி பதஞ்சலி பத்ததியிற் சொல்லப்பட்டது. தீக்ஷிதர்கள் சிவதீக்ஷை பெறுது பத்ததியைப் புறக்கணித்துச் சிவாகம நிந்தகர்களாயிருந்தார்கள். அவர்கள் செய்யும் பூசை முறையை அஞ்சாது கண்டித்தார். அங்கே நடக்கும் குற்றங்களைச் சைவ உலகிற்கு எடுத்துக் காட்டுவது தமது கடன் என்று துணிந்து, அந்த ஆண்டு மார்கழி இரதோற்சவ தினத்திற்கு முதனாளிரவு, தமது சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒரு பெரிய சபை கூட்டி, சிதம்பராலய பூசைக் கிரமம் பற்றி ஓர் நீண்ட பிரசங்கம் செய்தார். அன்று தொடக்கம் ''இனிச் சிவதீக்ஷை பெறுத அதீக்ஷிதர்கள் கையால் ஒ பூதி வாங்குவதில்லை'' என்ற நியமத்தையும் மேற்கொண்டார். தில்லைவாழ் தீக்ஷிதர்கள் கொதித்



சதாவதானம் மேலைப்புலோலி நா. கதிரை
வேற்பிள்ளை. நாவலர் வருத்த வழியில்
சென்றவிடமெல்லாம் சைவப்
பிரசங்கம் செய்து பெயர்
பெற்றவர்.

— உபயம்: க. சதாசிவம்.

தெழுந்தார்கள். நாவலருக்குத் தீங்கு செய்யவும் எத்தனித்தார்கள். நாவலர் ஒன்றுக்கும் அஞ்சாது இறைவன் ஒருவரையே துணையாகக்கொண்டு தங்கருமத்தை நடத்தி வந்தார்.

நாவலருக்குப் பின் சைவத்தையும், தமிழையும் இந்நாட்டில் வளர்த்த சேர். பொன்னம்பலம் இராமநாதனவர்கள் சிதம்பரத்திலும், நடராச மூர்த்தியிலும் பெரும் பற்றுடையவர். ஸ்ரீமந் நடராசப் பெருமானைப் பலமுறை சென்று சேவித்த பெருந்தவமுடையவர். 1905-ம் ஆண்டு சிதம்பரத்தில் நடந்த சைவசித்தாந்த சமாஜத்தின் முதலாவது ஆண்டு விழாவிற்குத் திறம்படத் தலைமைதாங்கி, அதனைச் செவ்வனே நடத்தினவர். சுன்னாகத்திலே தாம் தாபித்த இராமநாதன் கல்லூரியிலே, ஓர் நடராசர் கோயிலையும் அமைத்திருக்கிறார். அங்கே பயிலும் மாணவிகள் காலையிலும் மாலையிலும் சென்று பண்ணுடன் திருமுறைகளை ஓதுவதைக் கேட்பது பெருமகிழ்ச்சி அளிப்பதாகும்.

திருப்பெருந்துறைப் புராணம், அபிராமி அந்தாதி முதலிய நூல்களின் உரையாசிரியரும், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தன், பண்டிதர் மகாலிங்கசிவம் ஆகியோரின் தந்தையாருமாகிய உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் நாவலர் பெருமான் தாபித்த சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையிலே தலைமையாசிரியராயிருந்து பலகாலம் தொண்டாற்றினர்.

சேர். முத்துக்குமாரசாமியின் புதல்வரும், சேர். பொன். அருணாசலம் ஆகியோரின் மைத்துனருமாகிய கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்கள் சிதம்பர நடராச மூர்த்தத்தில் பெரிதும் ஈடுபட்டவர். அவர் ஆங்கிலத்தில் எழுதிய சிவ நடனம் (Dance of Siva) ஆங்கிலம் படித்தோருக்கெல்லாம் ஓர் நல் விருந்தாய் அமைந்துள்ளது. அந்நூல் அவருடைய புகழை என்றும் நிலை நிறுத்த வல்லது.

''யாழ் நூல்'' என்னும் இசை நூலைத் தந்த விபுலானந்த அடிகள், சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதற்றமிழ்ப் பேராசிரியராகக் கடமை புரிந்தவர். சிதம்பரம் நடராசப் பெருமானைப் பலகாலம் சென்று வணங்கியவர். நடராச தத்துவம் பற்றி ஓர் நூலையும் அவர் யாத்துள்ளார்.

வண்ணைச் சுவாமிநாத பண்டிதர் வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளையின் மாணவர். புராண படனம் நன்கு கைவரப் பெற்றவர். சிதம்பரத்தில் இவர் தங்கியிருந்தபோது சிவஞான பாடியத்திற் சில பாகங்களைப் பெற்று அச்சிட்டு வெளியிட்டார். மூவர் தேவாரத்தினைப் பல பிரதிகளுடன் ஒப்பு நோக்கி 'அடங்கன் முறை' யென்ற பெயருடன் வெளியிட்ட பெருமை இவரைச் சாரும். தசாவதானம் நா. கதிரைவேற்பிள்ளையவர்களுடன் மிகுந்த நண்புடையராய் விளங்கினர். அருட்பா, மருட்பா வழக்கு நடைபெற்ற காலத்தில் அவருக்கு உறுதுணையாய் விளங்கினர் என்று கூறுப.

வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர், நாவலர் பெருமானின் மாணவர். செந்தமிழிலும், வட மொழியிலும் வல்லுநர். நாவன்மை மிக்கவர். சிதம்பரத்திலே 'ஆறுமுக நாவலர் சந்தான ஞானசம்பந்த சுவாமி ஆதீனம்' என ஒரு மடத்தையும் இவர் அமைத்தார். தமது அந்திய நாட்களை அங்கேயே கழித்து நடராசப் பெருமானின் திருவடியை அடைந்தவர். பல நூல்களைத் தமிழிலும், வட மொழியிலும் எழுதி வெளியிட்டவர். இவர் இயற்றிய ''நாவலர் சற்குருமணிமாலை'' நாவலர்பால் இவருக்கிருந்த பேரன்பைப் புலப்படுத்தவல்லது. சேர். பொன்னம்பலம் இராமநாதனவர்களும், சேர். பொன். அருணாசலம் அவர்களும் இவரைத் தமது குருவாகப் போற்றி வழிபட்டார்கள்.

கோப்பாய் சபாபதி நாவலர், சிதம்பரம் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிலே சிலகாலம் கடமையாற்றியவர். திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு ''நாவலர்'' என்ற பட்டத்தை வழங்கியது. சிதம்பர சபாநாத புராணம், திருச்சிற்றம்பல யமக வந்தாதி முதலிய நூல்களை இயற்றியுள்ளார். அவர் எழுதிய திராவிடப் பிரகாசிகை என்ற உரை நடை இலக்கியம் இன்றும் எல்லோராலும் போற்றிப் பயிலப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்நாடு சென்று அங்குள்ள சென்னைப் பல்கலைக் கழகத்திலே சேர்ந்து படித்து ''பி. ஏ'' பரீட்சையில் முதன்முதற் சித்தி பெற்ற இருவரில் கரல் விசுவநாதபிள்ளையும் ஒருவர். மற்றவர் சி. வை. தாமோதரம் பிள்ளையாவர். நாவலரவர்கள் வெளியிட்ட ''சைவதூஷண பரிகாரம்'' என்னும் நூலுக்குக் கண்டனமாக இவர் ''சுப்பிரபோதம்'' என்ற நூலை எழுதி வெளியிட்டார். உபகாரச் சம்பளம் பெற்றுப் படிப்பதற்காக அறிவு குறைந்த காலத்திலே கிறித்தவராக மாறிய இவர், சிதம்பரத்திலே நாவலரவர்களுடன் சமயவாதஞ் செய்தார்.

வாதத்திலே தோற்றதும், தமது பிழைகளுக் கிரங்கிக் கழுவாயாக, சிதம்பரத்திலே நடராசப் பெருமான் திருச்சந்நிதியிலே, பொன்னூசி காய்ச்சி, கண்டனஞ் செய்த தமது நாவினைச் சுட்டுச் சைவ சமயத்தைத் தழுவிக் கொண்டார்.

செப்பறைச் சிதம்பர சுவாமிகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தில்லையிலும், திருநெல்வேலியிலும், செப்பறையிலும் வாழ்ந்தவர். தில்லையில் இன்றும் நின்று நிலவும் சிவஞானத் திருத்தணியை இவரே நிறுவியவர். தொல்காப்பியச் சண்முகவிருத்தி மறுப்பு என்னும் கண்டன நூல் இவரால் எழுதப்பட்டதென்ப.

இலக்கணச் சாமியார் என்றழைக்கப்படும் முத்துக்குமாரசாமித் தம்பிரான், யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர். இவர் தமது இளம் வயதில் உற்றார் உறவினர் அறியாது தென்னாடு சென்று தீர்த்த யாத்திரை செய்தவர். சிதம்பரம் செல்லப்ப சுவாமிகள், ஈசானிய மடத்து இராமலிங்க சுவாமிகள் ஆகியோரிடத்தில் இலக்கிய இலக்கணங்களை வரன்முறை கற்றவர். சூரியனார் கோயில் மகா சந்நிதானத்திடம் தீட்சை பெற்று, வடமொழி, தென் மொழிகளிலுள்ள ஞான நூல்களையெல்லாம் ஓதியுணர்ந்தவர். சிதம்பரத்திலேயே பலகாலம் வதிந்து தம்மை நாடி வந்த பலருக்குச் சைவசித்தாந்த நூல்களையும் இலக்கண நூல்களையும் முறையாகக் கற்பித்தவர். சிவஞான பாடியத்தை முதன்முதலாக ஆராய்ந்து வெளியிட்டவர் இவரே. சிவக் கவிமணி, சி. கே. சுப்பிரமணிய முதலியார் வெளியிட்ட திருத்தொண்டர் புராணப் பேருரைக்கு இவர் பெருந்துணையாக விருந்தவரென்று கவிமணியவர்கள் ஆராமையுடன் கூறுவதுண்டு. தம்பிரான் சுவாமிகளின் சமாதி சிதம்பரத்திலுள்ள கனகசபை நகரிலிருக்கின்றது.

வித்துவான் சிவானந்தையர் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். புலியூர்ப்புராணம், புலியூரந்தாதி முதலிய நூல்களை இயற்றியவர். சிதம்பரத்திலே சிலகாலம் ஆசிரியராகத் தொண்டு செய்தவர்.

சிதம்பரத்திலுள்ள 'ஞானப்பிரகாசம்' என்ற குளத்தை வெட்டிக் கட்டிய ஞானப் பிரகாச சுவாமிகள் யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலியைச் சேர்ந்தவர். நாவலர் பெருமானின் முன்னோர்களில் ஒருவர். இலங்கையைச் சிலகாலம் அரசாண்ட போர்த்துக்கேயரின் கொடுங்கோன்மைக்கு அஞ்சித் தமிழகம் சென்றவர். சிவஞான சித்தியாருக்கு ஓருரையும் எழுதியுள்ளார். இவர் சிதம்பரத்திலே பலகாலம் வதிந்தவர்.

ஈழநாட்டில், சிறப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள பல சைவ மக்கள் சேர்ந்து சிதம்பரத்தில், மாணமுதலிமடம், சிவபுரிமடம், புண்ணியநாச்சி மடம் என்னும் மடங்களை யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டுப் பல்லாண்டுகளுக்கு முன் கட்டி வைத்தார்கள். புண்ணிய நாச்சி மடத்தையும் அதற்குறிய சொத்துக்களையும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை பரிபாலித்து வருகின்றது. சில மடங்களின் நிர்வாகம் சீராக நடைபெறுவதில்லை.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காரைநகரில் நல்ல சிவாலயம் ஒன்று இருக்கின்றது. இதன் பூசை, கிரியா முறைகள் எல்லாம் சிதம்பரத்தைப் பின்பற்றி நடப்பதால் இதற்கு 'ஈழத்துச் சிதம்பரம்' என்ற வேறு பெயரும் உண்டு. இதன் தர்மகர்த்தாக்கள் இதனைச் செவ்வனே பரிபாலித்து வருவது மகிழ்ச்சிக்குரியது. யாழ்ப்பாணத்திலுள்ள, கைதடி, வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம், காரைநகர் முதலிய கிராமங்களிலே பெருந்தொகையான நிலபுலங்கள் சிதம்பரத்துக்கு உண்டு. இவைகள் சிவகாமி அம்பாள் சபேத ஸ்ரீ சிதம்பர நடராசப் பெருமானிடத்திலே தளராத பேரன்பு பூண்ட சைவப் பெருமக்கள் தருமசாதனமாக வழங்கியவை. பலர் தங்கள் ஆண் குழந்தைகளுக்கு நடராசர், தில்லை நடராசர், ஆனந்த நடராசர், சிதம்பர நடராசா முதலிய பெயர்களை இட்டழைத்து மகிழ்கிறார்கள்.

அண்மையிலே திருவுருக்கரந்த யாழ்ப்பாணம் கொழும்புத்துறை யோக சுவாமிகள் தில்லையில் ஆடலே புரியும் அம்பலக் கூத்தனிடத்தில் அயராத அன்புடையவர்கள். தில்லை அம்பலவனைத் தினைத்தனைப் பொழுதும் மறவாதிருத்தல் வேண்டுமென்று சுவாமிகள், தம்மை யண்டினோர்க்கு அறிவுரை கூறுவதுண்டு. 'நம்பினவர்க்கு நடராசா' 'நடராசனை நம்பு' 'முழு மனதுடன் நம்பு' என்று ஆன்றோர்கள் கூறியிருப்பதை நாம் நன்கு சிந்திப்பதாற் பெரும்பேறடையலாம்.

''தென்றில்லை மன்றினுளாடி போற்றி
இன்றெனக் காரமுதானாய் போற்றி''.

முருகையன்

மூன்றியும் இருந்த சிந்துகள்

"சிந்துக்குத் தந்தை" என்று சுப்பிரணிய பாரதியைப்பற்றிப் பாவேந்தன் பாரதிதாசன் ஓர் இடத்திலே குறிப்பிடுகிறான். இசைப்பாட்டு வடிவங்களிலே இயற்றமிழ்த்தரம் சிறந்த கவிதைகளை எழுதிக் காட்டியவர்களுள் மிகவும் அண்மைக் காலத்தவன் பாரதி. அவனுடைய சாதனைகளுள் ஒன்று சிந்து போன்ற இசைப்பாட்டு யாப்புகளுக்கும் இலக்கியத் தரம் தந்து வாழவைத்தது தான். இச்சாதனை மிகவும் பசுமையாகவும் ஆணித்தரமாகவும் நம் நெஞ்சங்களிலே பதிந்து போய் விட்டது. அதனால் நாம் ஓர் உண்மையை மறந்து போய் விடுகிறோம். சிந்து போன்ற இசைப்பா வடிவங்கள் மிகவும் பழமையானவை என்ற உண்மையே அது.

மிகவும் பழமையானவை என்று மொட்டையாகச் சொன்னால், எவ்வளவு பழமையானவை என்ற கேள்வி எழும். அண்ணாமலை ரெட்டியார், கோபால கிருஷ்ண பாரதி, குறவஞ்சி-பள்ளுப் புலவர்-இவ்வாறான பலர் சிந்துகளைப் பாடியிருக்கிறார்கள். இது பற்றி, கலாநிதி பொ. பூலோகசிங்கம் பின்வருமாறு எழுதுகிறார்:-

> முத்தாலங் குறிச்சிகந்தசாமிப் புலவர் பாடிய திருச்செந்தூர் நொண்டி நாடகம் முதலியன, திருடன் நொண்டியாகிப் பின்பு நன்னிலையடைவதைப் பெரும்பாலும் சிந்துப் பாக்களால் கூறுவன. நொண்டி நாடகம் மூலம் பிரபலமாகிய நொண்டிச் சிந்து சுப்பிரமணிய பாரதியார் போன்ற கவிஞர்களாலும் பிற் காலத்திற் பயன்படுத்தப்பட்டது.

இங்ஙனம், நொண்டி நாடகம் போன்ற படைப்புகள் மூலம் பிரபலமான சிந்து முதலான பாவகைகள், தொடக்க காலத்திலே எழுதா இலக்கியமாக இருந்து பின்னரே ஏட்டில் இடம் பெற்றன என்று கொள்வதற்குச் சான்றுகள் உண்டு. இப்போது நாடோடி யாப்புகள் என்று கொள்ளப்படும் இந்த இசைப்பா வடிவங்கள் மட்டும்தான் இப்படி என்றில்லை. மிகப் பழந் தமிழ் நூல்களாகிய சான்றோர் செய்யுள்களிற் பயிலும் அகவலும், வஞ்சியும், கலியும் கூட, ஏட்டில் ஏறுதற்கு முன்பு வாய்மொழி இலக்கியமாகவே பிறப்பெடுத்தன. இந்த உண்மையைக் கலாநிதி க. கைலாசபதி ஒப்பியற் சான்றுகளோடு மிகவும் ஆணித்தரமாக நிறுவியுள்ளார், Tamil Heroic Poetry என்ற தமது நூலிலே. இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. படைப்பிலக்கியத் துறை முன்னோடிகள் பெரும்பாலும் பொதுமக்கள் விரும்பும் பாவடிவங்களையும்

உருவங்களையுமே தமது கலைக்கருவியாகக் கொள் கிறார்கள். இலக்கிய படிப்பாளிகளும், இலக் கணகாரரும் இந்த முன்னேடிகளை உடனுக்குடன் விளங்கிக் கொண்டு அங்கீகரிப்பதில்லை. சிறிது காலம் சென்ற பின்னரே அவர்களுக்கு இப்புத் திலக்கியங்களின் முழுத் தாற்பரியமும் சிறி து சிறிதாக விளங்க ஆரம்பிக்கிறது. இ த ற் கு ப் பின்னரே அவற்றுக்கு இலக்கணங்கள் வகுத்து வி தி க ளை ச் சமைக்கிறார்கள். அவ்விலக்கணங் களுக்கும் விதிகளுக்கும் ஏற்ப, தாமாகவும் சில படைப்புகளை உற்பத்தி செய்ய முயலுகிறார்கள். இரண்டாந் தரமான இப்படைப்புகள் உயிர்த் துடிப்புள்ள முன்னேடி இலக்கியங்களைப் பின்பற்றி அவை போல நடக்க முயன்றாலும், இவைகளின் 'வான்கோழித் தன்மை' இவற்றைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. மூச்சில்லாத முனகல் களான இவை சப்பென்று தரங்குன்றி மந்தித்துப் போகின்றன. நம்மிடையே இன்று வாழும் சில புலவர்களின் கையிலே, பாரதி கையாண்ட சிந்து யாப்புக்கு இவ்வாறான கதி நேர்ந்துள்ளது. இதற்கு உதாரணம் தேடி அதிக தூரம் போக வேண்டிய தில்லை. கைக்கெட்டிய தூரத்தில் உள்ள எந்தப் புலவரின் புதிய கவிதையை எடுத்தாலும் சரி தான். இதோ, பாருங்கள் ஒரு பாட்டு :-

''வீசும் புயலிடையே - கை
வீசி நடந்து வந்தாள்
மாசு மறுவுமில்லா - அவள்
ஏனை அங்கு வந்தாள்.
ஓசைப்படாது நின்றேன் - கன்னி
ஒட்டி விட்டாள் இருளில் !
பேசின கண்கள் தம்முள் - மின்னல்
வீசிய நல்லொளியில். ! ''

இதைவிடக் கலை மெருகு குன்றிய வரிகளைக் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. இதுவே நாம் குறித்துக் கூறிய மந்த நிலையின் உச்சம்!

இலக்கணகாரர்களின் அங்கீகாரம் பெற்று, படிப்பாளிகளாலும், புலவர்களாலும் மந்த நிலைக் குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னர், சிந்து யாப்பு நெடியதொரு வரலாற்றை உடையதாய் இருந்தது என்பதை நாம் கவனித்தல் வேண்டும். 'நாடோடி நிலையினின்றும்' மெல்ல மெல்ல 'ஏடேறும் நிலைக்கு' வருவதற்கு இடையிலே பல வளர்ச்சிப் படிகளைத் தாண்டிய கதையே இந்த வரலாறாகும். இந்த வரலாற்றை நாம் இப்போது பின்னேக்கிக் காணும்போது சித்தர் பாடல் வழி யாகத் தேவாரத் திருமுறைகள் யாக்கப்பட்ட காலம் வரைக்கும் செல்லக்கூடியதாக உள்ளது. நேற்றைய பாரதி ''சிந்துக்குத் தந்தை'' என்று பெயர் பெறுவதற்குக் காலாக உள்ள அதே சிந்துயாப்பினைத் தழுவி, தேவாரம் பாடிய மூவர் களுள்ளும் மூத்தவராகிய அப்பரே தம் பாடலை யாத்துள்ளார், என்ற செய்தி வியப்பைத் தருவ தாகும். ஆகவே, சிந்தின் வரலாற்றை நாம் சற்று நுணுக்கமாக இனிப் பின்னேக்கிப் பார்ப்போம்.

— 2 —

சிந்துகள் பல வகைப்படும். கண்ணன் பாட் டிலே பாரதி கையாண்ட இரண்டு மூன்று சிந்து வகைகளில் மட்டுமே இப்போது நமது கவ னத்தைச் செலுத்துவோம்.

''கொண்டை முடிப்பதற்கே - மணம்
கூடு தயிலங்களும்
வண்டு விழியினுக்கே - கண்ணன்
மையும் கொண்டு தரும்
தண்டைப் பதங்களுக்கே - செம்மை
சார்த்து செம்பஞ்சு தரும்
பெண்டிர் தமக்கெல்லாம் - கண்ணன்
பேசருந் தெய்வமடீ!''

இது ஒரு வகைச் சிந்து. இதன் யாப்பமைதி யாது? அலகிட்டுப் பார்ப்போமானால், இதிலுள்ள அசைகள் பின் வருமாறு அமைந்துள்ளமை விளங்கும்.

நேர் நேர் / நிரை நிரை நேர் — நிரை
நேர் நேர் / நிரை நேர் நிரை
நேர் நேர் / நிரை நிரை நேர் — நேர் நேர்
நேர் நேர் / நேர் நிரை நேர்
நேர் நேர் / நிரை நிரை நேர் — நேர் நேர்
நேர் நிரை/நேர் நிரை நேர்
நேர் நேர் / நிரை நேர் நேர் — நேர் நேர்
நேர் நிரை/நேர் நிரை நேர்

இங்கு எல்லாமாக நான்கு அடிகள் உள்ளன. ஒவ்வோர் அடியிலும் முதலாஞ் சீரில் இரண்டு அசைகள் உண்டு. இரண்டாஞ் சீரில் மூன்று அகைகள் உண்டு. பின்னர் ஒரு தனிச் சீர் அல்லது கூன் வருகிறது. அடுத்ததாக வருவதும் ஈரசைச் சீரே. இது அடியினது முதற்சீருக்கு மோனையாக வருகிறது. இறுதிச் சீர் மூவசை கொண்டது.

ஆக, ''கொண்டை முடிப்பதற்கே''
என்ற பாட்டு.

ஈரசை / மூவசைச் சீர் — தசீ
ஈரசை / மூவசைச் சீர்.

என்ற வாய்பாட்டை உடையது. மற்றும் ஓர் உண்மையை நாம் கவனிக்கலாம். ''தயிலங்களும்'' என்ற சீரை ''நிரை நேர் நிரை'' என்று அலகிடுவதே யாப்பிலக்கணப்படி முறையானதாகும். ஆயினும், இங்கு நாம் எடுத்துக் கொண்ட பாட்டினது ஓசை ஒழுங்கினைக் கவனிக்கும்போது, அதில் வரும் ங்கர ஒற்றினைப் புறக்கணித்து அலகிடுவதே விரும்பத்தக்கது. அவ்வாறு செய்ய, ''தயிலங்களும்'' என்பது ''நிரை நிரை நேர்'' என்று ஆகும். அவ்வாறு ஆக, இப்பாட்டுக்குரிய மூவசை சீர்களெல்லாம் காய்ச்சீர்களே என்பது தெளிவு. எனவே, நமது பாட்டின் வாய்பாடு

ஈரசை / ஈரசை காய் — தசி
ஈரசை / ஈரசை காய் (i)

இங்கு நாம் ''தசி'' என்று கூறியிருப்பது தனிச் சீர், அல்லது கூன் என்பதையாகும். மேலுள்ள பாட்டின் தனிச்சீர்கள் (ஒன்று நீக்கிக் கணிக்கும்போது) இரண்டெழுத்துகளை உடையனவாய் உள்ளன. மண(ம்), க(ண்)ண(ன்), செ(ம்)மை என்பவற்றை நோக்குக.

(i) என நாம் மேலே குறிப்பிட்ட யாப்பினும் சற்று வித்தியாசமானது,

''தூண்டிற் புழுவினைப் போல் - வெளியே
கூடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சம் துடித்ததடி
கூண்டுக் கிளியினைப் போல் - தனிமை
கொண்டு மிகவும் நொந்தேன்.
வேண்டும் பொருளெயெல்லாம் - மனது
வெறுத்து விட்டதடி.''

என்ற பாட்டின் யாப்பு.

இங்கும்,

ஈரசை / ஈரசை காய் — தனிச் சீர்
ஈரசை / ஈரசை காய் (ii)

என்ற வாய்பாடே உள்ளது. ஆனால், இதில் வரும் தனிச் சீர்களை ஒற்று நீக்கி எண்ணும்போது மூன்று எழுத்து உடையனவாக அவை உள்ளமையைக் காண்கிறோம். எனவே தான், முதலாவது யாப்புருவில் உள்ள தனிச் சீரை ''தசி'' என இரண்டு எழுத்துகள் கொண்டே குறித்த நாம், (ii) என்ற யாப்புருவில் உள்ள தனிச் சீரை ''தனி (ச்) சீ (ர்)'' என மூன்று எழுத்துக்கள் கொண்டு குறித்துக் காட்டியுள்ளோம்.

பாரதியிற் காணப்படும் சிந்து யாப்புருக்களுள் மற்றும் ஒரேயொரு யாப்பினை மாத்திரம் நாம் இங்கு எடுத்து நோக்குவோம்.

''கடுமை உடையதடி - எந்த நேரமும்
காவலுன் மாளிகையில்
அடிமை புகுந்த பின்னும் -
எண்ணும் போது நான்
அங்கு வருதற்கில்லை
கொடுமை பொறுக்கவில்லை - கட்டும் காவலும்
கூடிக் கிடக்குதங்கே
நடுமை அரசியவள் - எதற்காகவோ
நாணிக் குலைந்திடுவாள்.''

இந்த யாப்புருவும் முன்போன்றதே. தனிச் சீர்களில் மட்டுமே வித்தியாசம் காணப்படுகிறது. இங்கு வரும் தனிச் சீர் ஐந்து எழுத்துக்களை உடையது. ஆகவே, இந்த மூன்றுவது யாப்புருவை,

ஈரசை / ஈரசை காய் - **ஐந்தெழுத்துகள்**
ஈரசை / ஈரசைகாய் (iii)

என்று குறிக்கலாம்.

இது வரை நாம் காட்டியுள்ள யாப்புருக்களில், தனிச் சீரில் வரும் எழுத்தெண்ணிக்கை மட்டும் வேறுபடுவதைக் கண்டோம். முதலாவதில் ஈரெழுத்துக்கொண்ட தனிச் சீர்களும், இரண்டாவதில் மூன்று எழுத்துக்கொண்ட தனிச் சீர்களும், மூன்றுவதில் ஐந்து எழுத்துக் கொண்ட தனிச் சீர்களும் வருகின்றன. தனிச் சீர் எழுத்துத் தொகையில் உள்ள வித்தியாசம் ஒன்று மாத்திரமே, இந்த யாப்புருக்களை மிக மிக வித்தியாசம் உடையன போலக் காட்டுகின்றன. (இதை உணராத சில திரை இசை அமைப்பாளர்கள், பாரதி பாட்டின் சொற்களைச் சிதைத்து, அவற்றின் பொருளையும், ஓசையையும் திரிப்பதற்குக்கூடத் தயங்கவில்லை. இந்த மூவகச் சிந்துகளும், சித்தர் பாடல்களிலும், மூவர் தேவாரங்களிலும் பயின்று வரும் முறையை அடுத்துக் காண்போம்.

— 3 —

முதலாவதாக நாம் நோக்கிய ''கொண்டை முடிப்பதற்கே'' என்ற சிந்து யாப்பு சித்தர் பாடல்களில் அதே வகையில் அமைந்து கிடப்பதாகத் தெரியவில்லை. ஆயினும், கீழ்க் காணும் பாடலைக் கவனியுங்கள்.

''மோன நிலையினில் முத்தியுண்டாமென்றே
கானமாய் ஊதுகுழல் - கோனே
கானமாய் ஊது குழல்''

இதில்,

''கானமாய் ஊதுகுழல் - கோனே
கானமாய் ஊதுகுழல்''

என்ற பகுதி ''கொண்டை முடிப்பதற்தே'' என்ற அடியினது யாப்பமைதியை உடையதாக இருக்கிறது. பாரதி பாட்டின் உருவ அமைதி அப்படியே காணப்படாவிடினும், அதன் கூறுகளிற் சில இதிலும் உள்ளன.

இனி நாம் தேவாரம் பாடிய மூவர்களிடமும் செல்வோம். முதலிலே, சுந்தரமூர்த்தி நாயனாரிடம் போவோம். அவர் பாடுகிறார் :

''நீள நினைந்தடியேன் - உமை
நித்தலும் கை தொழுவேன்
வாளன கண்மடவாள் - அவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம் பெருமான் - குண்டை
ஊர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் - அவை
அட்டித் தரப் பணியே''

இதே போன்ற ஒரு பாடலை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோமே! ஆமாம், பாரதியின் ''கொண்டை முடிப்பதற்கே'' என்ற மெட்டில் அப்படியே அமைந்தது தான், இந்தத் தேவாரம். இதன் ஒவ்வோர் அடியும்,

''ஈரசை / ஈரசைகாய் - தனி
ஈரசை / ஈரசைகாய்''

என்ற வாய்பாட்டின்படி தான் உள்ளது. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா ?

சுந்தரருக்குச் சிறிது முந்திய அப்பரிடம் சென்றால், அந்த முதியவர் கூட, நேற்றைய பாரதியின் சிந்து யாப்பாகிய (i) என்ற வாய்பாட்டுக்கு அமையும் பாடலடிகளைப் பாடியிருக்கிறார்.

''தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து.....

இந்த அடியும் (i) என்னும் வாய்பாட்டுக்கு அமைந்ததுதான். ஆனால் ஒரு வித்தியாசம். ''மாலை'' என்ற சீர் ''தலையே'' என்ற முதற் சீருடன் மோனையாக அமையவில்லை. அல்லாமலும், அடுத்துவரும் அடிகளையும் அப்பர் பெருமான் வேறொரு கோலத்தில் ஆக்கியுள்ளார்.

''தலையா லேபலி
தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்''

என்று அவர் தொடர்ந்து செல்லுகிறார். ஆகவே அப்பரின் திருவங்கமாலைக்குரிய வாய்பாடு பின்வருவது :

ஈரசை / ஈரசைகாய் - தனி
ஈரசை / ஈரசை காய்
ஈரசை / ஈரசை
ஈரசை / ஈரசை
ஈரசை / ஈரசை காய்.

அப்பரின் யாப்புருவை விட எளிமையான தொரு வடிவமே சுந்தரரின் ''நீள நினைந்தடியேன்''. இதனையே ''பொன்னார் மேனியனே'' என்ற பாடலிலும், ''கானமாய் ஊது குழல்'' என்ற சித்தர் பாடற்பகுதியிலும் காணுகிறோம், பாரதியின் ''கொண்டை முடிப்பதற்கு'' என்ற பாட்டின் யாப்புரு பழம்பாடல்களில் எவ்வாறெல்லாம் பயின்று வந்துள்ளது என்று கண்டோம்.

அடுத்ததாக, ''தூண்டிற் புழுவினைப் போல்'' என்ற இரண்டாவது யாப்புருவை நோக்குவோம். அகப்பேய்ச் சித்தரின் பாட்டு இதற்கு நல்ல தோர் உதாரணமாகும்.

''ஆறு தத்துவமும் - அகப்பேய்
ஆகமஞ் சொன்னதடி
மாறுத மண்டலமும் - அகப்பேய்
வந்தது மூன்றடியே
.....
தேயு செம்மையடி - அகப்பேய்
திடனது கண்டாயே
வாயு நீலமடி - அகப்பேய்
வான்பொருள் சொல்வேனே.

இப்பாடல்கள் ''தூண்டிற் புழுவினைப் போல்'' என்ற பாட்டின் உருவ அமைதியையே கொண்டுள்ளன. ஆனால், ஒரேயொரு வித்தியாசம் பாரதி பாட்டு நான்கு அடிகளால் நடக்கிறது. ஆனால் அகப்பேய்ச் சித்தரின் பாடல்களோ இரண்டு அடிகளால் நடக்கின்றன. அகப்பேய்ச் சித்தரது பாடல் யாப்பின் இரட்டிப்புத் தான் பாரதியின் ''தூண்டிற்புழு'' மெட்டு.

தேவார ஆசிரியர்களிடம் ''தூண்டிற்புழு'' மெட்டில் அமைந்த பாடல்களைக் காணக்கூட வில்லை. தனிச் சீரை ஈரெழுத்தாக வைத்துப் பாடிய வடிவங்கள் பல அவர்களின் பாடல்களில் உள்ளன. ஆயினும், தனிச் சீரை மூன்றெழுத் துடையதாக அமைக்கும் யாப்புருவில் அவர்கள் நாட்டம் செல்லவில்லை என்றே தோன்றுகிறது. நாம் தேடிப்பார்த்த அளவில் அது கிடைக்க வில்லை. இன்னும் நுணுக்கமாகத் தேடிப் பார்த் தால் ஒரு வேளை கிடைக்கக்கூடும்.

(தேவாரங்களின் யாப்புருவங்களை இனங் காண்பதில் உள்ள ஒரு சிரமத்தை இங்கு சுட்டிக் காட்டலாம். இப்பாடல்களெல்லாம் (அனேக மாக) நாலு எதுகைகளுடன் தொடங்கும் நாலு அடிகளை உடையவை. இவைகளைப் பதிப்பித்த வர்கள் இந்த நாலு அடிகளையும் நான்கு வரிகளில் அச்சிடுவிப்பர். அல்லது ஒவ்வோர் அடியின் முடி விலும் 'கமா' வைப் போட்டுத் தொடர்ந்து அச்சிடுவித்திருப்பர். இக்காலப் பாக்களுக்குப் போல, இசைக் கோலத்தைத் தழுவி வரி பிரித்தும், இடைக் கோடிட்டும் அச்சிடப்பட்ட பழம் பாடல்களின் தொகை மிகவும் குறைவு.)

இனி, பாரதியின் (iii) என்ற யாப்புருவை நோக்குவோம். இது போன்றதொரு யாப்புரு வைச் சித்தர் பாவிற்கூடக் காண முடியவில்லை. எனவே இது பாரதியே புதிதாகப் படைத்துக் கொண்ட ஒரு புத்தம் புதிய யாப்புருப் போலும் என நாம் ஐயுறுவோம். அவ்வாறில்லாவிடினும் கூட, இது மிகவும் அண்மைக் காலத்துக்கே உரி யது என்று நினைப்போம். ஆனால், உண்மை அவ் வாறு இல்லை. மூவர்களுள் ஒருவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரே இது போன்ற யாப் புருவைக் கையாண்டுள்ளார். இதோ, மாதி ரிக்கு ஒரு தேவாரம்.

''தோடுடைய செவியன் - விடையேறியோர்
தூ வெண் மதிசூடி
காடுடை யசுடலைப் - பொடிபூசியென்
உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் - முனைநாட்பணிந்
தேத்த அருள் செய்த
பீடுடை யபிரமா - புரமேவிய
பெம்மா னிவனன்றே''

இப்பாடல், நாம் முன்பு கண்ட இலக் கணப்படி (''கடுமை உடையதடீ'' என்ற பாட் டின் யாப்பில்) அமைந்திருக்கிறது. அஃதாவது,

ஈரசை / ஈரசை காய் - ஐந்தெழுத்துகள்
ஈரசை / ஈரசை காய்

(இவ்வாறு நான்கு அடிகள்)

என்ற வாய்பாட்டிற்கு இசைய உள்ளது. ஆகவே, ''தோடுடைய செவியன்'' என்ற சம்பந்தர் தேவாரப் பதிகமும், ''தீர்த்தக் கரையினிலே'' என்ற பாரதி பாட்டும் மிகவும் நெருங்கிய தொடர்பை உடையன. நம்மிற் பலர் நினைத்தும் பார்த்திருக்க முடியாத தொடர்பு இது.

ஆயினும் ஓர் உண்மையை எடுத்துக்காட்ட வேண்டும். சம்பந்தர் தேவாரத்திலே, மேற் சொன்ன இலக்கணத்தோடு கூட மற்றுமோர் அதிகப் படியான இலக்கணமும் உண்டு. தேவார அடியின் இறுதிச் சீர்களெல்லாம் **புளிமாங்காயாக** உள்ளன. பாரதி பாட்டில் அப்படியான நியதி எதுவும் இல்லை. மேலும் நுட்பமாகப் பார்க்கும் போது, ''தீர்த்தக் கரையினிலே'' என்று தொடங்கும் மேற்படி பாட்டின் அடிகள் தோறும் வரும் ஈற்றுச்சீர் ஒன்று கூட, புளிமாங்காயாக இல்லை. அவற்றுட் பல **விளங்காய்ச் சீர்களாவே** உள்ளன. இந்த வித்தியாசம் ஒன்றே போதும், சம்பந்தரின் யாப்புரு பாரதியினதைவிட வேறு பட்டது என்று கொள்வதற்கு. ஆயினும், பொதுப் படையாகக் காணக்கிடக்கும் நெருக்க மான ஒற்றுமையையும் நாம் புறக்கணித்து விட இயலாது.


— 4 —

இங்கு பாட்டுகளின் யாப்புருக்களை அல கிடும் போது, அசை, சீர், தளை முதலாம் பாகு பாடுகளைப் பொறுந்தவரையிலே, தமிழிலக்கண யாப்பு நூலாரின் முறைநெறிகளைக் கையாண்டுள் ளோம். எழுத்தெண்ணும் முறையும் அசைகளை நேர், நிரை என்று பாகுபடுத்துவதும் தமிழ் மரபாகும்.

அவ்வாறன்றி, வடமொழி இலக்கண நெறிப் படிலகு, குரு என்ற பாகுபாட்டைக் கருவியாகக் கொண்டு இசைப் பாக்களின் அமைப்பை அல கிடும் வழக்கமும் ஒன்று உண்டு. இந்த நெறியே தேவார யாப்புருக்களை ஆராய்வதற்கு விபுலா னந்த அடிகளாராற் பெரிதும் கையாளப்பட்டது. அவ்வாறு ஆராய்ந்த அவர், இங்கு நாம் சீர்களைப் பிரித்தவாறன்றி வேறு வகையாகப் பிரித்துக் காட்டுவார். ஆயினும் இங்கு அலகி டப்பட்டவாறு காண்பதற்கும் இப்பாடல்கள் இடந்தருவனவே என்பதை மறுப்பதற்கில்லை. அத்துடன் தமிழ் மரபுடன் உடன்படு நெறியும் இதுவே ஆகும்.

இதுகாறும் கூறியவாற்றுல், சிந்துக்குத் தந்தை எனப்படும் பாரதி கையாண்ட யாப்புருக்களுட் சிலவற்றின் கூறுகள், சித்தர் பாடல்களில் மட்டு மன்றி, பல்லவர் காலத்துப் பக்திப்பாடல்களிலும் பயின்று வருவதனை ஒரு சில உதாரணங்கள் வாயிலாக எடுத்துக் காட்டினேம். முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம் பொருளாய் உள்ளவைகளே, பின்னைப் புதுமைக்கும் பிந்திப் புதியன ஆகும் விந்தை இங்கே தெளிவாகிறது. பழமையான மரபுகளில் அசையாத பற்றுக் கொண்ட நாவலர் பெருமானுக்கு விழாவெடுக்கும் இந்த வேளையிலே, பழமைக்கும் புதுமைக்கும் உள்ள உறவுகளையும் பேதங்களையும் சிந்தித்துப் பார்த்தல் பொருத்தமாகும். பழமையிலிருந்து பிறப்பெடுத்து உருமாறிவரும் புதுமையினது இயக்க நெறிகளையும், நிகழ் முறைகளையும் விளங்கித் தெளிந்து கொள்வதற்கு, சிந்தின் வரலாறு போன்ற சிந்தனைகளும் ஒரு விதத்தில் நல்ல துணைகளே எனலாம்.

இவ்வாறு நாம் கூறுவதற்கும் காரணம் உண்டு. காலம், சூழல் என்பவற்றின் தேவையை உணராமல் வான்கோழித் தனத்துடன் குருட்டுத் தனமாகப் பிரதி செய்யப்படும் பழமை, உயிரற்ற வெறுங்கூடாக, நபுஞ்சகத்தன்மையுடன் தேங்கிக் கிடக்கிறது. அதே வேளையில், உரிய மாற்றங்களுடன் புதுமை மூச்சோடு திரும்பி வரும் பழமைக் கூறுகள் உயிராற்றல் மிக்க வேகம் பெற்றுப் பயனும், நலனும் உடைய முன்னேற்றங்களாக உருவெடுக்கின்றன. சிந்தின் வரலாற்றிலிருந்தே இதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் அணிந்த பட்டு வேட்டி, பட்டுச் சால்லை, கௌரிசங்கம், உருத்திராக்கம், உபயோகித்த பூக்கூடை ஆகியவை.

கலையரசு. க. சொர்ணலிங்கம்

தமிழ் நாடகங்கள்

இப்பொழுது எத்தேசத்தில் கலைகள் உற்பத்தியாயின என்பது எவராலுஞ் சொல்ல முடியாத விஷயம். ஆனால் இலக்கியம், சங்கீதம், நாடகம், நடனம், சித்திரம், சிற்பம் போன்ற நுண்கலைகள் அந்தந்தத் தேசத்தினரின் உள்ளங்களிலுதிக்கும் உணர்ச்சிகளுக் கேற்றவாறே வளர்ந்து வந்தனவென்று சொல்லலாம். கலையானது ஒரு தேசத்தவரின் உள்ளுணர்ச்சியின் வெளித்தோற்றமெனவும் சொல்லலாம். ஒரு தேசத்திலுள்ளவர்கள் யுத்தம்புரிவதில் இயற்கையான இயல்புடையவராயின் அவர்களது கலைகளும் யுத்தம்புரிவதைய தூண்டக்கூடியனவாக வளர்ந்து வந்திருக்கும். பெண்களின் அழகில் மோகங் கொள்பவர்களாகவோ அல்லது காதல் விஷயங்களில் இச்சை கொள்பவர்களாகவோ விருந்தால் அத்தேசத்தின் கலைகளும் அந்த வழியிலேயே விருத்தியடைந்திருக்கும். தமிழர்களாகிய நாங்கள் சாந்தமும், ஈஸ்வர பக்தியும் உடைய வராகையால் எங்கள் கலைகள் தெய்வங்கள் மீது பக்தியை உண்டுபண்ணக்கூடியனவாகவே ஆக்கப் பட்டிருக்கின்றன. எங்களின் உயர்ந்த கலைகள் யாவும் தெய்வங்களுக்கே அர்ப்பணஞ் செய்யப் பட்டவையாகும். நமது ஆலயங்களிற்றூன் இன்றைக்கும் சிறந்த கலைகளைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. ஆதிகாலங்களில் இதிகாசம், புராணங்கள் முதலியவற்றை யொட்டிய சரித்திரங்களை நாடகங்களாக இயற்றிக் கோயிற்றிரு விழாக் காலங்களில் நடித்துக்காட்டி வந்தார்கள். ஏனெனில் எழுத்து மூலமாகவோ அல்லது பிரசங்கம் வாயிலாகவோ பொதுஜனங்களுக்கு ஒரு விஷயத்தைப் புரியும்படி செய்வதைப் பார்க்கிலும் நாடகமூலமாகச் செய்வது மிகச் சுலபமென்பதை அந்நாட்களிலேயே நமது பெரியார்கள் அறிந்து கொண்டார்கள். காலஞ் செல்லச் செல்ல சரித்திரங்களிற்றூன்றும் இலட்சிய புருஷர்கள், பெண்மணிகள், ஆகியவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் நாடகமாகச் சித்திரித்து நடித்து வந்தார்கள். அநேக நூற்றாண்டுகளாக நாடகங்கள் நாட்டுக் கூத்துக்களாகவே நடிக்கப்பட்டு வந்தன.

உலகத்தில் பெரும் மாற்றங்கள் சென்ற நூறு, நூற்றைம்பது வருடங்களாகத்தான் நடைபெற்று வருகின்றன. அதிலும் இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் அதிவிரைவாக முன்னேறி வருகின்றது. அதன் பயனாக நம்பமுடியாத எத்தனையோ புதிய புதிய கருவிகளை உற்பத்தி செய்து வருகிறார்களென்பதையும் அறிகிறோம். எங்கள் வாழ்க்கையும் எத்தனையோ மாற்றங்களை அடைந்துவருகின்றது. அதுபோலவே,

நமது கலைகளும் பல மாற்றங்களை அடைந்து வருகின்றன. முக்கியமாக நமது நாடகக்கலை சென்ற எழுபத்தைந்து, எண்பது வருடங்களில் அநேக மாற்றங்களை அடைந்துவிட்டது. பல நூற்றாண்டுகளாக எங்கள் நாடகங்கள் நாட்டுக்கூத்துப் பாணியிலேயே இருந்து வந்தன. எங்கள் நாட்டுக் கூத்திலும் பலவகைப்பட்ட பாணிகள் உண்டு. அவைகளில் நாடகம், விலாசம் என்பன முக்கியமானவை. சாஸ்திரமுறைப்படி இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று மாறுபாடானவை. பாடல்கள், நடனங்கள், உடையலங்காரங்கள், மேடையமைப்புத்தானும் மிகவித்தியாசமானவை. நாடகத்தில் நடனங்கள் பரதநாட்டியத்தை ஒட்டியதாகவிருக்கும். ஆதலால், பாடல்கள், உடைகள், முதலியன அதற்கேற்றவாறே இருக்கும். மேடை சதுரமாக அமைக்கப்பட்டிருக்கும். அண்ணாவி முதலியவர்கள் பின்புறமாக வீற்றிருப்பார்கள். விலாசத்தில் நடனங்கள் கதாக் பாணியை ஒட்டியதாக இருக்கும். அதற்கேற்றவாறு பாடல்களும் உடைகளும் அமைக்கப்பட்டிருக்கும். அரங்கு வட்டவடிவமாக அமைக்கப்பட்டிருக்கும். அண்ணாவி முதலானோர் நடுமத்தியில் நிற்பார்கள். நடிகர்கள் மேடையைச்சுற்றி ஆடுவார்கள். சில சமயங்களில் நடிகர்கள் யாவரும் ஒன்று சேர்ந்தும்ஆடுவார்கள். அந்தக்காலத்தில்மின்சார வெளிச்சமோ ''காஸ்லாம்பு''களோ கிடையா. அவைகளைப்பற்றி யாரும் கேள்விப்பட்டு மிருக்க மாட்டார்கள். மண்ணெய் விளக்குகளும் அரிது. அப்படியானால் அரங்கிற்கு எப்படி வெளிச்சம் கொடுத்தார்க ளென்பதைச் சொல்லுகிறேன். மேடையைச் சுற்றி இடையிடையே வாழைக் குற்றிகளை நாட்டிவைப்பார்கள். அவைகள் மீது தேங்காய்ப் பாதிகளை வைத்துத் துணியைச் செதுக்கித் தேங்காய் நெய்யிட்டுக் கொளுத்தி விடுவார்கள். சிலசமயங்களில் ஒருவன் பிரதானமாக ஆடுபவர்முன் ஒரு கைத்தீவட்டியைப் பிடித்துச் செல்லுவான். இந்த அற்பவெளிச்சத்தில் ஆயிரக்கணக்கானோர் உட்கார்ந்திருந்து நன்றாகப் பார்த்து இரசிப்பார்கள். முகபாவங்கள் தானும் அவர்கள் கண்களுக்கு நன்றாகப் புலப்படும். ஒலி பெருக்கியும் அந்நாட்களில் யாரும் கேட்டுமிராத இன்னொன்று. ஒலி பெருக்கி இல்லாமலே அத்தனைபேரும் கேட்கும்படி பாடிப் பேசுவார்கள். ஜனங்களின் காதுகளும் கூர்மையாகத்தான் இருந்திருக்க வேண்டும். இந்தக் காலத்தில் இருபத்தைந்து அல்லது முப்பது பெயர்கள் கொண்ட ஒரு சிறு கூட்டத்திலேதானும் ஒலிபெருக்கி இல்லாமல் யாரும் பேசுவதில்லை. ஒரு மண்டபத்துள் நடக்கும் நாடகந்தானும் ஒலிபெருக்கி இல்லாமல் நடப்பதில்லை.

இப்போதுள்ளவர்களிடத்தில் மற்றவர்கள் கேட்கக்கூடியதாகப் பேசும் சக்தி குன்றிவிட்டதா அல்லது மக்களின் கேட்கும் சக்தி குறைந்து விட்டதா என்பது கேள்வி. அதுபோலத்தான் மின்சார வெளிச்சமில்லாமல் பார்க்கவும் கஷ்டமாயிருக்கிறது. நவீன நாகரீகங்களில் நாம் பழகி வருவது இதற்குக் காரணம் என்றுஞ் சொல்லலாம். இது ஒருபுறமிருக்க இந்த ஒலி பெருக்கி, மின்சார வெளிச்சம் அமைப்பவர்களினால் அனேக நாடகங்கள் கெட்டுப் போவதைப் பற்றிப் பல முறையும் எழுதியிருக்கிறேன்.

மட்டக்களப்பில் இந்நாட்டுக் கூத்துக்களை வடமோடி, தென்மோடி என அழைத்துவருகிறார்கள். அவர்களது வடமோடி எமது விலாசங்கள் போலவே இருக்கிறது. ஆனால், தென்மோடி எமது நாடகங்கள் போலல்ல, நாடகந்தான் எமது நாட்டிற்குச் சொந்தமான கூத்தென்பதும், விலாசம் வடமோடி தமிழ்நாட்டிற்கு வடக்கே இருந்து அதாவது ஆந்திரதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பாணி என்பதுவும் என் அபிப்பிராயம். இவ் விதமான நாடகங்கள் இப்பொழுதும் ஆந்திரதேசத்தில் நடைபெற்று வருவதாகச் சொல்லுகிறார்கள். அதுவுமின்றி விலாசங்கள் யுத்த சம்பந்தமான விஷயங்கள் அமைந்தனவாகவிருக்கும். ஆனால், நமது நாடகங்கள் சமய சாரமுள்ளவைகளாக இருக்கும். எமது உள்ளத்தில் உதிக்கும்உணர்ச்சிகளுக்கேற்றவாறே நமது நாடகங்களும் அமைக்கப் பெற்றவை யெனலாம். இதனாற்றான் நாடகமும் எமது சொந்தக் கூத்தென்று அபிப்பிராயப் படுகிறேன். அது தவறானால் மன்னிக்கவும்.

இலங்கைத் தமிழர்களாகிய நாம் எமது கலைகளை எமது தாய் நாடாகிய தமிழ்நாட்டிலிருந்தே பெரும்பாலும் பயின்று வருகிறோம். முற்காலத்தில் நடனக்காரர், நாடகக்காரர், சங்கீதக் காரர் முதலியோரும் மற்றும் கலைஞரும் யாழ்ப்பாணம் வந்து தமது கலைகளைக் காட்டிச் செல்வதுண்டு. அவர்கள் வருகையினால் நமது கலைஞர்களும் அவர்களைப் பார்த்து முன்னேறி வந்தார்கள். இது விஷயமாக யாவருமறிய வேண்டிய தொன்றைச் சொல்ல வேண்டும். அந்த நாட்களில் இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையில் பிரயாணம் செய்வோருக்கு ''பாஸ் போட்''', 'விசா'' போன்ற தடைகள் எதுவுமிருக்கவில்லை. இருநாடுகளுக்கு மிடையில் பிரயாணச் செலவு ஆக இருபத்தைந்து சதந்தான். அதுவும் சிலசமயங்களில் இரண்டுமணி நேரத்துள் போய்விடலாம். நம்மூரவர் ஒருவர் நீந்திச் செல்லக்கூடிய ஒரு சிறு கடல்தானே. நான் சிறு


பிள்ளையாய் இருந்தகாலத்தில் இப்படிப் போக்கு வரவு செய்வோரைக் காங்கேசன்துறையில் பலமுறையும் பார்த்திருக்கிறேன். இவ்விதம் வசதிகள் இருக்கும்போது கலைஞர்கள் அடிக்கடி இங்கே வந்துபோவது சுலபம். நாடகக் கோஷ்டியினர் வழக்கமாகக் கோடைகாலங்களிற்றான் வருவார்கள். அவர்கள் வந்து அநேகமாகக் காலியாயிருந்த எமக்குச் சொந்தமான வீடொன்றிற்றான் தங்கி இருப்பார்கள். எங்கள் கிராமத்தில் ஐந்து, ஆறு இடங்களில் ஆடிவிட்டு மறுகிராமங்களுக்கும் போய் ஆடுவார்கள். ஒருநாள் ஆட்டத்திற்கு அவர்களுக்கு ஐந்து ரூபாவும் ஓர் ஆட்டுக்கடாவும் நாடகம் ஏற்படுத்துபவர் கொடுக்க வேண்டும். ஆனால் நாடகமத்தியில் நாடக சம்பந்தமான ஏதாவது ஒரு சாட்டுச் சொல்லிக் கொண்டு ஒரு நடிகர் ஜனங்களுக்குட் சென்று அவரவர் இஷ்டப்படி கொடுப்பதைப் பெற்றுக் கொள்ளுவார். சில அபிமானிகள் தங்கள் அங்க வஸ்திரங்களைக்கூடக் கொடுத்துவிடுவார்கள். அப்படியான சந்தர்ப்பம் ஒன்று தேவதாசனின் உடலைத் தகனம் செய்வதற்குக் கூலியாகிய முழத் துண்டு, காற்பணம் சேகரித்து வரும்படி அரிச்சந்திரன் சந்திரமதியை அனுப்பும் வேளையில் ஏற்படும். இவர்களின் கூத்துக்களைப் பார்த்ததும் உள்ளூர் நாடகக்காரர்களும் உற்சாகமாய் நாடகங்களை நடிக்க ஆரம்பித்து விடுவார்கள். நாட்டுக் கூத்துக்கள் நமது நாட்டிலே நல்ல செல்வாக்குடன் நடைபெற்று வந்தன. அனேக கிராமங்களில் பெயர்பெற்ற அண்ணாவிமார்களும், நடிகரும் இருந்தார்கள். இவைகளில் முக்கியமான கிராமங்களாக நெல்லியடி, இணுவில், ஆனைக்கோட்டை, மானிப்பாய், வட்டுக்கோட்டை, அளவெட்டி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்நாட்டுக் கூத்துக்களின் இலட்சணங்களைப் பற்றி இங்கே விபரமாகக் கூறமுடியாது. ஆனால் இவைகள் கண்டிப்பான சாஸ்திரங்கள், இலக்கணங்களுக்கிணங்கவே அமைக்கப்பட்டவை என்று மாத்திரம் சொல்லுகிறேன். இந்நாட்டுக் கூத்து ஒரு பெரும்கலை. நமக்குள் சிலர் எண்ணிக் கொள்வது போல நாட்டுக்கூத்து ஒரு விளையாட்டு வேடிக்கை அல்ல. பகிரங்கமாக மேடையிலேறுமுன் நடிகர்கள் பல மாதங்கள் பயின்றவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நடிகனும் பாடுவதிலும் ஆடுவதிலும் பேசி நடிப்பதிலும் பூரண அனுபவம் பெறவேண்டும். அதுவுமின்றிப் பன்னிரண்டு மணிநேரமும் களைக்காமல் பாடி ஆடக்கூடிய திடமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

இற்றைக்கு ஏறக்குறைய எண்பது வருடங்களுக்கு முன்னர்தான் கொழும்பில் சுந்தரராவ் என்பவரின் கோஷ்டியினர் முதல் முதலாக 'டிரூமா' முறையில் திரைகளுடன் கூடிய அரங்கில் நடித்தனராம். சுந்தரராவ் என்பவர் சென்னையில் அரசாங்க உத்தியோகத்தராக இருந்தவராம். ஆங்கிலம், தமிழ், சங்கீதம் ஆகியவற்றில் சிறந்த அறிவும் அனுபவமும் உடையவராம். பம்பாயிலிருந்து ஒரு பார்சிக் கம்பனி சென்னைக்கு வந்து நடித்ததைப் பார்த்ததும் தனக்கேற்ற சில நடிகரைச் சேர்த்து ஒரு கோஷ்டியை ஏற்படுத்திச் சென்னையில் சிலகாலம் நடித்துவிட்டுத்தான் கொழும்புக்கு வந்தவராம். ஆயினும் T.T.நாராயணசாமிப்பிள்ளைதான் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் 'டிரூமா' நாடகங்களுக்குச் செல்வாக்கு உண்டுபண்ணியவரென்று சொல்லலாம். இவர்களைக்கண்டு தென்னிந்தியாவில் அநேகர் நாடகத்தொழிலில் இறங்கினர்கள். குறிப்பிட்ட சிலரைவிட மற்றெல்லோரும் பாடுவதையே சிந்தனையில் கொண்டிருந்தார்களன்றி குணச்சித்திர நடிப்பிலோ உடை ஒப்பனைகளிலோ கவனம் செலுத்தவில்லை. அன்றியும் அவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படி பேசி நடிப்பார்கள். சிலசமயங்களில் அவர்களின் பாடல்கள், பேச்சுக்கள் முதலியன விரும்பத்தகாத முறையில் இறங்கிவிடும். ஆயினும் அவைகளை இரசிப்பதற்காகப் பொதுஜனங்கள் ஏராளமாகப் போவார்கள். மரியாதையுடையவர்களுக்கு இவை பிடிப்பதில்லை. இவைகளைப்பார்ப்பதற்கு நமது பெண்மணிகள் ஒரு போதும் போகமாட்டார்கள்.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினொராம் (1911) ஆண்டு ஜூன் மாதம் பத்தாம் திகதியன்று இலங்கை தமிழ்நாடக உலகில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்றென்று சொல்லலாம். அன்றுதான் தமிழ் நாடகத் தந்தை பத்மபூஷணம் பம்மல் சம்பந்த முதலியார் சென்னை சுகுண விலாச சபாவுடன் கொழும்பில் முதன் முதலாக நாடகம் நடத்தினர். அன்றுதான் நாடகம் எவ்வாறு நடிக்கப்பட வேண்டுமென்பதும் நாடகத்தின் நோக்கம் இன்னதென்பதும் இலங்கை வாசிகள் புரியும்படி நேர்ந்தது. அவர்களது ஒழுக்கமான நடிப்பினால் ஆண் பெண் பாலான யாவருக்கும் கூச்சமின்றி நாடகம் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. மறுமுறை ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதின்மூன்றில் அவர்கள் கொழும்புக்கு வந்த சமயம் எமது குரு நாதரின் உதவியாலும் ஊக்கத்தாலும் இலங்கா சுபோத விலாசசபா ஸ்தாபிக்கப்பட்டது. அதையடுத்து யாழ்ப்பாணத்திலும் சரசுவதி விலாச சபாவும் ஏற்படுத்தப்பட்டது. இந்த இரண்டு சபாக்களும் தத்தம் பாணிகளில் நாடகக்கலையை

வளர்த்து வந்தன. இலங்கா சுபோத விலாச சபா ஒரு நாடகக் கலாசாலை போலச் சொந்த வாத்தி யக்காரர், உடைகள், திரைகளுடன் நடத்தப் பட்டு வந்தது. தக்க பிரயாசத்தாலும் உழைப் பாலும் இந்தச் சபாவின் நடிகர்கள் நாடகக் கலையில் மிகுந்த உயர் நிலையை அடைந்திருந்தார் கள். இவர்களின் நாடகங்களை இலங்கைத் தமிழர்கள் மாத்திரமின்றி, இந்தியர்கள் சிங்கள வர், பறங்கியர், இஸ்லாமியர், வெள்ளைக்காரர் என்பவர்களும் மிக ஆவலுடன் பார்த்து இர சித்து வந்தார்கள். இவர்களைக்கண்டு தொழில் நடிகரும் குணசித்திர நடிப்பில் கவனஞ் செலுத்த வாரம்பித்தார்கள். ஆயிரத்துத் தொளாயிரத் துப் பதினைரும் ஆண்டு தொடக்கம் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தோராம் ஆண்டு வரை யுமுள்ள கால எல்லை நாடகங்களுக்கு ஒரு பொற் காலமாக விளங்கிற்று. இந்தக் காலத்திற்றான் மிகச் சிறந்த அமெற்சூர் (Amateur) நடிகர்களும் இந்திய தொழில் நடிகர்களும் இலங்கையில் நடித்திருக்கிறார்கள். ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்துநாலாம் ஆண்டில் சினிமா வரத் தொடங்கியதிலிருந்து நாடகத்தின் செல்வாக் குக் குறைந்து கொண்டே வந்தது. முதலில் அசையும் படங்களின் நூதனத்தைப் பார்க்க ஜனங்கள் சென்றார்கள். பின்பு முப்பத்தைந்து சதத்துடன் ஓர் இரவுப் பொழுது போக்கைக் கழிக்கலாமென்பதும் ஒரு தூண்டுகோலாக விருந் தது. சினிமாப் படங்களைத் தயாரிப்பவர்கள் வியாபாரமுறையில் பணம் சம்பாதிப்பதிலேயே கண்ணும் கருத்துமுடையவர்கள். அதனால் நமது பாஷை, கலை, கலாசாரம், பண்பாடு முதலிய வற்றிற்கு மாறான பல ஆபாசமான கட்டங்க ளைப் படங்களில் புகுத்தி வந்தார்கள். அவைகளை நானே விபரமாகச் சொல்ல வேண்டியதில்லை. நேயர்களே உணரக்கூடும். இந்த ஆபாசங்கள் தானே பொதுமக்களின் மனத்தைக் கவரக்கூடி யவை. இதனால் தினந்தோறும் ஏராளமான பேர் இந்தப் படங்களைப் பார்க்கப்போய் வருகிறார் கள். ஆனால், எங்கள் நாட்டின் பாஷை, சங்கீ தம், ஒழுக்கங்கள் அந்தப் படங்களினால் பய னடைந்தனவா என்பதை அறிவுடையோர் ஆழ்ந்து யோசிக்க வேண்டும். இப்போது என்ன வென்றால், நமது இளைஞர்கள் மேடையிலேறிக் கால்களை அகட்டி வைத்துக்கொண்டு தோள் மூட்டுக்களையும் இடையிடை ஆட்டிக்கொண்டும் உரத்து உளறிப்பேசி அடிக்கடி ''ஹக்கக்ஹா'' என்று சிரித்து விட்டால் அது நடிப்பென்று எண் ணிக் கொள்ளுகிறார்கள் போலத் தெரிகிறது. நடிப்பென்றால் என்னவென்பதைப் படித்தறிதல் வேண்டும். நடிப்பைப்பற்றி எழுதுவதானால் அது ஒரு நீண்ட தனிக்கட்டுரையாகவே முடியும். இந்த் பழக்கங்கள் கண்மூடித்தனமாகச் சினிமாப் படங்களைப் பின்பற்றியதன் பயன். ஆனாலும் சினி மாவினால் நாடகம் அநேக நன்மைகளை அடையா மல் இருக்கவில்லை. நமக்கு உதவக்கூடியவைகளை ஆராய்ந்து அறிந்து நாடகத்தில் சேர்த்துக் கொண்டால் நலந்தான்.

இக்காலத்தில் எமது நாடகங்களில் காணப் படும் குறைகளுக்கு அளவேயில்லை. நாடகத்தின் இயக்குநர் அறிவாளியாகவும் அனுபவசாலியாக வும் இருந்தாற்றான் இக்குறைகள் குறையும். இயக்குநர், உரையாடல், நடிப்பு, பாடல், உடை, ஒப்பனை, மேடை அலங்காரம், ஒளி அமைப்பு, ஒலி அமைப்பு முதலியவற்றிலெல் லாம் சிறந்த அறிவும் அனுபவமும் பெற்றவராக இருக்க வேண்டியதவசியம். இவையில்லாதவர் கள் பெயருக்கு இயக்குநராயிருந்து அவரவர் இஷ் டப்படி செய்வதற்கு அனுமதி கொடுத்து நாடகக் கலையைக் கெடுத்து விடாதிருத்தல் நலம். இப் பொழுது இலங்கையில் இருநூறு நாடக மன்றங் களுக்கு மேல் இருக்கின்றனவாம். இவைகளில் எத்தனை தகுந்த கட்டுப்பாடுகளுடன் அமைக்கப் பட்டவை. எத்தனை கலையை வளர்ப்பதற்கென இயங்கி வருகின்றன. எத்தனை மேடையேறிவிட வேண்டுமென்ற ஆசையைப் பூர்த்தி செய்வதற் கென ஒரே நாடகத்தை ஆடிவிட்டு மறைந்து விடுகின்றன. இவை போன்றவைகளை யெல்லாம் நாடக அபிமானிகள் சிந்தனையில் கொள்ள வேண்டும்.



நாவலர் கோப்பாயில் நிறுவுவித்த சைவப்பிரகாச வித்தியாசாலை. பிள்ளைகள் படிக்கும் காட்சி.

பெ. நா. அப்புஸ்வாமி

தமிழில் விஞ்ஞானமும் இலங்கை நாட்டின் பணியும்

முன்னுரை :

விஞ்ஞானம் நல்லதா, கெட்டதா? அது தேவையா, தேவை இல்லையா? அதைப் பயில வேண்டுமா, வேண்டாமா?—இவைபோன்ற கேள்விகள் சில காலத்துக்கு முன்வரை பலவாறுக எழுப்பப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வந்தன. இப்பொழுது, அறிவுடைய பெரும்பான்மை மக்களிடையே அத்தகைய விவாதங்கள் எழுவதில்லை. பெரும்பான்மை மக்களும் விஞ்ஞானத்தின் முக்கியத்தன்மையை இப்போது ஒப்புக்கொள்ளுகிறார்கள். விஞ்ஞானத்தில் முன்னேறியுள்ள நாடுகள் அனைத்தும் செல்வத்திலும், செல்வாக்கிலும், முன்னணியில் இருப்பதைப் பலரும் காண்கிறார்கள். அத்தகைய முன்னேற்றம் பெற்ற நாடுகளில் நோயும், வறுமையும், பஞ்சமும், குறைந்திருப்பதையும், மக்கள் நெடுங் காலம் இனிதாக வாழ்வதையும், எப்படிக் காணுமல் இருக்க முடியும்? மனத்துக்குத் திருப்தி அளிக்கும் இலக்கியத்தையும், வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் பிறவற்றையும் அறவே ஒதுக்காமல், அவற்றைப் பயில்வதோடுகூட விஞ்ஞானத்தையும் பயின்று வருவதே அறிவுடைமை என்பது இக்காலத்தில் பலராலும் உணரப்பட்டுவிட்டது. அறியாமை என்பது பல தீங்குகளை விளைவிக்கவல்லது—நேர்முகமாக மட்டும் அன்றி, மறைமுகமாகவும்கூட. ஆதலால் இப்பொழுது நம்முடைய இரு நாடுகளிலும் விஞ்ஞானத்தைத் தமிழில் பயிலவும், அதன்பொருட்டுத் தமிழை வளர்க்கவும், முன்னைவிட அதிக ஊக்கம் காணப்படுகிறது. ஆயினும், பொதுமக்கள், இன்னும் போதிய அளவு விஞ்ஞானத்தில் அதைப் பயில்வதில் கருத்துக்கொள்ளவில்லை. இது ஒரு வருந்தத்தக்க நிலை; மாற வேண்டிய நிலை.

பொதுமக்களிடையே எழுத்தறிவின்மை மிகுதியாக இருப்பதே இதற்கு முக்கிய காரணம் என்று சொல்லலாம். படிக்கத் தெரிந்தால்தானே பலவற்றையும் கற்றுத் தெரிந்துகொள்ள முடியும்? சொல்வதைக் கவனத்தோடு கேட்டாலும் விஷயங்கள் விளங்கும்; உண்மைதான். ஆனல் எத்துணை விரைவாக விளங்குகின்றனவோ அதற்கு ஈடான விரைவோடே அவை மறந்துபோகும். ஓரளவு படிக்கக் கற்றுக்கொண்டவர்களாலும்கூட விஞ்ஞானச் செய்திகளை விரைவாகத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. ஒரு முறைக்கு இரு முறை கவனத்தோடு கற்க வேண்டியிருக்கிறது. பெரும்பான்மை விஞ்ஞானச் செய்திகளும் ஆங்கில மொழியிலேயே வெளிவருகின்றன. தாய்மொழியாகிய தமிழை மட்டுமே கற்ற மக்களால் அச் செய்திகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்புக்கள் குறைவு. அமெரிக்கச் செய்தியகம் இத்துறையில்

செய்த முயற்சி பெரிது. ஆயினும் இந்நாளிலும் கூட, விஞ்ஞான நூல்கள் போதிய அளவு தமிழில் வரவில்லை. விஞ்ஞான விஷயங்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் — பெரும்பான்மையும் — இடம் பெறுவதில்லை. இதற்கு விலக்காக இரண்டொரு பத்திரிகைகள் முயன்று வருவது பாராட்டத்தக்கது. விஞ்ஞான விஷயங்களை வெளியிடுவதையே தமது முக்கிய இலட்சியமாகக் கொண்ட கலைக்கதிர் புரிந்துவரும் பணியும், அவ்வப்போது — அநேகமாக வாரம்தோறும் — விஞ்ஞான விஷயங்களை வெளியிட்டு வரும் தினமணி (சுடர்) செய்துவரும் பணியும் தலைசிறந்த தொண்டுகள். இவை மேன் மேலும் விஞ்ஞானக் கட்டுரைகளை வெளியிட்டுத் தொண்டு புரிந்துவரும் என்றும், அதன் விளைவாக அவற்றைப் படிக்கும் தமிழ் மக்கள் விஞ்ஞானத்தைக் கற்பதில் ஊக்கம் பெறுவார்கள் என்றும், எதிர்பார்க்கலாம்.

உண்மையில், இத்தகைய முயற்சி ஒரு நூற்றாண்டுக்காலத்துக்கு முன்னமேயே, தமிழ்நாட்டிலும், இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பகுதியிலும், தொடங்கப்பட்டது. இம்முயற்சியின் விவரங்கள் பலருக்குத் தெரியாது. ஆனால், அவ்விவரங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இம் முயற்சியைத் தொடங்கிய முன்னோடிகளை நாம் பாராட்ட வேண்டும். அவர்கள் சுட்டிக்காட்டிய இலட்சியத்தைக் கடைப்பிடிக்க நாமும் முயல வேண்டும். அப்படி முயன்றால்தான் தமிழ்மொழி பேசும் நாடுகள் சிறக்கும், தமிழ் மக்கள் முன்னேற்றம் அடைவார்கள். வறுமையும், பஞ்சமும், பிறர் கையை எதிர்பார்க்கும் அவல நிலையும் நீங்கும்.

பண்டைக்காலத்தில், நமது நாட்டில், வழங்கிய மொழிகள் எல்லாமே இலக்கியத்துறையிலும் தத்துவத்துறையிலும், சமயத்துறையிலும் மிக்க முன்னேற்றம் அடைந்திருந்தன. அப்போது எழுதப்பட்ட நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவத்திலேயே ஆக்கப்பட்டு வந்தன. அந்நாளில் கலைகள் என்று கருதப்பட்ட சோதிடம், மருத்துவம் முதலிய துறைகளிலும் எழுதப்பட்ட நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவிலேயே இருந்தன..

உரைநடையின் தோற்றம்:

மிக நெடுங்காலம்வரை உரைநடையில் நூல்களை எழுதும் வழக்கம் தமிழில் இல்லாமலே இருந்தது. பழைய நூல்களை விளக்குவதற்கு எழுதப்பட்ட உரைகளே 'உரைநடையில்' எழுதப்பட்ட நூல்கள். ஆதலால், இவை எல்லாம், பெரும்பான்மையும், அறிவிற் சிறந்தவர்களால், தங்களோடு ஒத்த அறிவிற் சிறந்த மக்களுக்காகவே எழுதப்பட்டு வந்தன. பின்னர், அயல்நாட்டு மக்கள் இங்கே வந்து நம் நாட்டினரோடு நெருங்கிய தொடர்பு கொண்டார்கள். அவர்கள் பேசிவந்த மொழி வேறு; அவர்கள் பின்பற்றி வந்த சமயம் வேறு. அத்தகைய மக்களில் சிலர் அரசியல் துறையில் பொறுப்புக்களை ஏற்று வந்தார்கள்; வேறு சிலர் வாணிகத் துறையில் இறங்கினர்கள்; வேறு சிலர் சமயத்துறையைச் சார்ந்தார்கள். இவர்கள் எல்லாருக்குமே நம் நாட்டு மக்களோடு பழகி உறவாட வேண்டியிருந்தது. இரு மொழிகளையும் கற்ற — அதாவது, நாட்டு மொழியையும் அயல் நாட்டு மொழியையும் கற்ற — சிலரை அவர்கள் தங்களுக்குத் துணையாகக் கொண்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு 'துபாஷ்கள்' — இரு மொழியும் பேச வல்லவர்கள் — என்பது பெயர். தமிழ் நாட்டில் புகழ்பெற்ற ஆனந்தரங்கப்பிள்ளை அத்தகைய துபாஷ்களில் ஒருவர். இதன் பின்பு, அயல்நாட்டினர், தாங்கள் எங்கெல்லாம் தங்கினார்களோ அங்கெல்லாம் வழங்கிவந்த மொழிகளைத் தாங்களே கற்றார்கள். தங்களுடைய பல வகையான செயல்களின் பொருட்டும் அவைகளைப் பேணி வளர்த்தார்கள். அவர்களுக்குச் சாமானிய மக்களோடு தொடர்பு அதிகம் தேவையாக இருந்தபடியால், அவர்களோடு பேசிப் பழகக்கூடிய வகையில் அம் மொழிகளை அவர்கள் கற்கவும் வழங்கவும் தேவையாக இருந்தது. இவ்வாறுதான் நமது நாட்டின் பல பகுதிகளிலும் உரைநடை வளர்ந்து வரத் தொடங்கிற்று. இம் மூன்று துறைகளிலும், நாளடைவில், சமயமே மொழியை வளர்க்கும் முக்கியமான துறையாக ஆகிவிட்டது. ஆதலால், பெரும்பான்மை உரைநடை வளர்ச்சியும் சமய குருக்களாலேயே பேணி வரப்பட்டது. அரசியல் தேவையும் இதற்கு அடுத்தபடியாக இருந்தது. தாம் தங்கிய நாட்டில் வாழும் மக்களின் நலம் பெருக வேண்டும் என்னும் உணர்ச்சியும் இங்கே வந்து குடியேறியவர்களும், ஈர மனம் படைத்தவர்களுமான மக்களிடையே தழைத்து வந்தது. அவர்களில் சிலர் தமிழின் சிறப்பியல்புகளை உணர்ந்தார்கள். அவற்றைக் கற்றார்கள். தங்களிடமிருந்த சிறப்பியல்களை அவற்றுக்கு ஓரளவேனும் ஈடாகக் கொடுக்க வேண்டும் என்னும் நல்லெண்ணமும் அவர்களுடைய மனத்தில் இடம்பெற்று அவர்களை ஊக்கி வந்தது.

சென்னையில்:

தமிழ் நாட்டில், சென்னையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது 1812 இல் ஒரு நிறுவனம் செயற்படத் தொடங்

கிற்று. அதில் அயல்நாட்டிலிருந்து வந்த அறிஞர்கள் பலரும், கிறிஸ்தவப் பாதிரிமார் சிலரும், பங்குகொண்டார்கள். தமிழ்நாட்டுப் புலவர்களையும் தங்களோடு சேர்த்துக்கொண்டார்கள். அதன் விளைவாகச் சில நூல்கள் எழுதப்பட்டன, சில பத்திரிகைகளும்—உதாரணம், தினவர்த்தமானி, ஜனவிநோதினி தொடங்கப்பட்டன. தினவர்த்தமானி என்பது பெர்சிவல் துரை நடத்திய வாரப் பத்திரிகை. அது 1855இல் தொடங்கப்பட்டது.

இலங்கையில்:

இவற்றை ஒத்த முயற்சிகள், ஏறத்தாழ இதே வகையில், இலங்கை நாட்டிலும் தொடங்கப்பட்டன. இதற்கு ஒரு முக்கிய உதாரணம் பாலகணிதம் என்னும் கணித நூல். இதில் ஆங்கில கணிதத்தின் தனி இயல்புகள் சிலவும் தமிழ்க் கணித முறையின்சிறப்பியல்புகள் சிலவும் ஒன்றுக இணைக்கப்பட்டன என்று அதன் முன்னுரை கூறுகிறது. இது 1849ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணத்தில், வட்டுக்கோட்டையில் இருந்த அமெரிக்க மிஷன் அச்சகத்தாரால் இது அச்சிடப்பட்டது. இதில் 179 பக்கங்கள் உள்ளன.* அந்த நாளில், ஐரோப்பிய (மேலைநாட்டு) கணிதக் கருத்துக்களை வெளியிடுவதற்கான சொற்கள் தமிழில் இல்லை. இவற்றைப்பற்றிய ஆங்கில முகவுரை, ஒன்றும் அந்நூலில் உள்ளது. அந்த நூலை எழுதியவர்கள் கையாண்ட சொற்களைப் பார்த்தால், நமக்கு அவை விசித்திரமாகத் தோன்றும். இந்நாளில் தமிழ் நாட்டிலும், தமிழ் மொழி பேசும் வேறு சில இடங்களிலும், வழங்கும் கணித நூல்களிற் காணப்படும் கலைச் சொற்களுக்கும் அந்நூலில் வழங்கப்பட்ட சொற்களுக்கும் பல வேற்றுமைகள் இருப்பது பார்த்த உடனேயே தெரியும். உதாரணமாகச் சில சொற்களைக் காட்டலாம். ஆரகம்—Denominator; குணகம்—Multiplier; குணநீயம்—Multiplicand; குணிதம்—Product, Power; சங்கலிதம்-Progression; சினை எண்—Composite Number; சுன்—Cypher; தாட்டாந்தரம்—Proposition; போகம்—Numerator.

பாதிரிகள் செய்த துணை:

இதற்கு ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்குப் பின்பு, மிகத் தீவிரமான முயற்சிகள் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுக்கும் பெரும்பான்மையும் கிறிஸ்தவப் பாதிரிகளே பொறுப்பாளர்கள். 1870ம் ஆண்டில் இரசாயனம், வேதி நூல் என்றெல்லாம் இந்நாளில் வழங்கும் நூல் ஒன்று வெளியிடப்பட்டது. இந்த நூலுக்குக் 'கெமிஸ்தம்' (Principles of Chemistry) என்று பெயர். அதன் முகவுரை மிகவும் சுவையானது. அது ஆங்கிலத்திலும், தமிழிலும், கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் முகவுரை பின்வருமாறு உள்ளது:—

"இல்லாத சாஸ்திரமென்ற மப்பில் பதுங்கி, தமிழருக்கு நாசமோசத்தை வருவிக்கும் சகுனம், சூனியம் முதலிய பொய்கள் தடையின்றி நித்தமும் உலாவுகின்றன.

ரசவாதத்துக்குப் பதிலாகப் பொருள்களின் கூறுகளைக் குறிக்கும் கெமிஸ்தமென்ற வித்தையையும்; சோதிட சாஸ்திரத்துக்குப் பதிலாக நட்சத்திரங்களின் தன்மைகளைச் சரியாய்ச் சொல்லும் வானசாஸ்திரத்தையும்; இல்லாத ராட்சதர் தேவதைகளைப்பற்றிய கதைகளுக்குப் பதிலாக உள்ள சரித்திரங்களையும், சுருக்கிச் சொல்லுகில், பொய்யான கல்விக்குப் பதிலாக மெய்யான அறிவை தேசத்தில் நிறுத்துவது, ஊரிலும் ஆளிலும் உள்ள துரெண்ணம் பழக்கங்களை அகற்றுமென்று நம்பி விரும்புகிறபடியால், இப் புஸ்தகம் பிரசுரமாகிறது.

நீதியின் சூரியனுகிய யேசு இதை ஏற்றுக் கொண்டு அனேகர் மனசுகள் தமது வாக்கின் கிரணங்கள் இரட்சணியமாகச் செல்லத்தக்க தாய் இருளை அகற்றுவதற்கு இதைத் துணையாக்குவாராக.

இப்புஸ்தகத்தை உண்டாக்குகிறதற்கு இதன் ஆக்கியோன் தமது நூலைத் தாராளமாகக் கொடுத்ததற்காகவும், இதிலுள்ள படங்களைப் பிரசித்தப்படுத்தினவர் மலிவாய்த் தந்ததற்காகவும், இதை வாசிக்கிறவர்கள் எல்லோரும் நன்றி சொல்வது கடன். அவர்களும், தமிழுக்கு இது வெகுமதியாகக் கிடைக்கிறதற்கு உதவின மற்றவர்களும், மகிழும்படிக்கான நன்மை இதாலுண்டாகத் தேவன் அருளுவாராக,"

இதன் ஆங்கில முன்னுரை பின்வருமாறு உள்ளது. இதன் மொழிபெயர்ப்பே மேலே உள்ள தமிழ் முன்னுரை:

PREFACE

In the fog of false science, auguration, sorcery and kindred lies prowl among the Tamils, ceaseless and unrestrained.

* Elementary Book—combining many of the reculiarities of the European and the Tamil systems—Jaffna, American Mission Press, Batticotta, 1849.

Believing that the substitution of Chemistry for Alchemy, of Astronomy for Astrology, of history for Mythology in short of true science for the false will clear the social and the moral air, this volume is sent forth.

May Jesus the son of righteousness own it causing it to scatter the darkness so that the rays of his word may enter and give saving light to multitudes.

Readers as well as translators are much indebted to the author for most courteously and freely allowing his book to be used and to the publishers for their liberality in furnishing the cuts on favourable conditions.

May such acceptance and success be vouchsafed as shall gladden them, and all who have joined in this gift to the Tamil people.

S. E. G.

The reader is referred to the commencement of the glossary at the close of the volume for remarks on terminology.

இது நாகர்கோவில் லண்டன் மிஷன் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இது ஒரு வியத்தகு முயற்சி. இந்த முன்னோடியான மொழிபெயர்ப்பு இயற்றப்பட்ட காலத்தில், அன்புகனிந்த மனத்தோடும், நல்லெண்ணத்தோடும், கடவுளிடத்துள்ள பணிவோடும், இவ் ஆசிரியர்கள் மேற்கொண்ட அரும்பணி மிகவும் சிரமமானது. அது மிகவும் பாராட்டத்தக்க ஒரு நன்முயற்சி. அவர்கள் செல்ல வேண்டிய பாதையைக் காட்டும் எச்சரிக்கைப் பலகைகள் ஒன்றும் அந்நாளில் இல்லை; திண்ணிய உறுதியான பாதைகளும் இல்லை; முன்னே பிறர் சென்ற கால் தடம் கூட இல்லை. திக்குத் திசை தெரியாப் பெருங் காட்டில் செல்லத் துணிந்த இவர்கள் எத்துணை அரிய செயலைச் செய்து, நமக்கெல்லாம் ஒரு வகையில் வழிகாட்டிகளாக இருந்தார்கள் என்பதை நினைக்கும்போது, நமது உள்ளம் பூரிக்கிறது. நாம் அவர்களுக்கு மிக மிக நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்பதில் ஐயம் இல்லை.

இலங்கை அமெரிக்கப் பாதிரியார் சங்கம்:

கிரே எழுதிய உடற்கூற்று நூல் (Gray's Anatomy) மனுஷவங்காதி பாதம் என்னும் பெயரில் வெளிவந்தது. மூல நூலில் உள்ள படங்கள் அனைத்தும் அந்நூலில் இருந்தன. அந்த நூல் வெளிவந்ததை அடுத்துப் பௌதிகம், இரசாயனம், மருத்துவ நூல், இளம்பிள்ளை நோய் நூல் முதலியவையும் வெளியிடப்பட்டன. ஆனால், ஆதரிப்பார் இன்றியும், தொடர்ந்து அவற்றைத் திருத்தி வெளியிடுவார் இன்றியும் அவை யாவும் மறைந்து போயின.


அந் நூல்களில் சில இப்போது சென்னைப் பல்கலைக்கழகப் புத்தகாலயத்திலும், சென்னை லிட்டெரரி சொஸைட்டியின் (Madras Literary Society) புத்தகாலயத்திலும், திருநெல்வேலி M. D. T. இந்துக் கல்லூரியிலும் (இங்குள்ளவை காலஞ்சென்ற வெ. ப. சுப்பிரமணிய முதலியாரிடமிருந்தவை) தென்னிந்தியச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி லிமிடெட் என்னும் நிறுவனத்தின் நூல் நிலையத்திலும் (இங்குள்ளவை காலஞ்சென்ற மறைமலை அடிகளாரிடமிருந்தவை) உள்ளன.

அந்த நூல்கள் எல்லாம் அரும்பாடுபட்டு, மொழிபெயர்த்துப் பதிப்பிக்கப்பட்டவை. ஆயினும், அவற்றை இப்போது வழங்க முடியாது. வளர்ந்து வரும் தமிழ் மொழி நாளுக்குநாள் மாறி வருகிறது. இதைப் பலர் நன்முக உணர்வதில்லை. சங்ககாலத் தமிழுக்கும், இடைக்காலத் தமிழுக்கும், பத்தொன்பதாம் நூற்முண்டுத் தமிழுக்கும், இன்றைய தமிழுக்கும் உள்ள வேற்றுமைகள் பல. இனி வருங்காலத்திலும் தமிழ் மாறித்தான் வளர்ந்து வரும். பிற்காலத்தில் வர இருப்பவர்களுக்கு நம்முடைய தமிழ் விசித்திரமாகத் தோன்றும். அதைப்போலவே, பிரதேசத்துக்குப் பிரதேசமும் தமிழ் மொழியின் வழக்காறுகள் சிலவோ, பலவோ மாறிக் காண்கின்றன. மலையாளத் தமிழ், இலங்கைத் தமிழ், சென்னைத் தமிழ், பாண்டி நாட்டுத் தமிழ் ஆகியவை எல்லாம் சிறிது சிறிது வேறுபடுகின்றன. சொல்வழக்கும், அவற்றின் பொருளும்கூட, சிறிது வேறுபடுகின்றன.

ஆதலால், இலங்கையிலிருந்து வெளிவந்த அந்த நூல்களிலும், திருநெல்வேலியிலும் நாகர்கோயிலிலுமாக வெளிவந்த நூல்களிலும், வழங்கும் சொற்கள் இந்நாளில் நமக்கு அவ்வளவு பிடிக்காமல் இருக்கலாம். இதில் வியப்பு ஒன்றும் இல்லை.

விதிகள்:

ஆயினும், அந்த விஞ்ஞான நூல்களை அப்போது மொழிபெயர்த்தவர்கள் தம்முடைய



நாவலர் தமது 12-வது வயதில் ஆங்கிலம் கற்ற யாழ்ப்பாணம் மத்திய ஆங்கில பாடசாலை. 1834-ல் பார்ஷெல் பாதிரியாரால் ஆரம்பிக்கப்பட்ட போது, அங்கு நாவலர் சேர்ந்து ஆங்கிலம் படித்தார். இன்று இது, வேம்படி மகளிர் பாடசாலை என விளங்குகிறது.

— உபயம்: க. சதாசிவம்.

மனம்போலவோ, அரசியல், மொழி முதலியவற்றில் உள்ள விருப்பு வெறுப்புக்கள் காரணமாகவோ, சங்கேதச் சொற்களை அமைக்கவில்லை. அவர்கள் அவற்றை ஆர அமர ஆலோசித்தே அமைத்தார்கள். அவ்வாறு அமைப்பதற்குச் சில குழுக்களை நியமித்துக்கொண்டார்கள். சில விதிகளையும் கருத்தோடு சிந்தித்து, வகுத்துக்கொண்டார்கள். அவற்றை எல்லாம் இங்கே விரிவாகக் கூற இடம் இல்லை. சென்னையில், தமிழர் கல்விச் சங்கத்தின் வெளியீடாக வந்துகொண்டிருந்த தமிழர் நேசன் என்னும் பத்திரிகையில் (நான் அதன் கௌரவ ஆசிரியனாக இருந்தபோது நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் (அதாவது 1923—24ம் ஆண்டுகளில்) மீண்டும் பதிப்பிக்கப்பட்டன. பின்னர், சென்னையில் தமிழ் வெளியீட்டுக் கழகமும் (Bureau of Tamil Publications) சென்னைத் தென் மொழிகள் புத்தக டிரஸ்ட்டுமாகச் (Madras Southern Languages Book Trust) சேர்ந்து நடத்திய கருத்தரங்கு ஒன்றில் நான் எழுதிப் படித்த கட்டுரையில், அவற்றை ஓர் அனுபந்தமாகச் சேர்த்திருந்தேன். அந்தக் கட்டுரை அவ்விரு நிறுவனங்களுமாக வெளியிட்ட கருத்தரங்கின் அறிக்கையில் (Report of Seminar on Translations, under the joint auspices of the Bureau of Tamil Publications and the Southern Languages Book Trust Madras, August 10 to 13, 1963) வெளியிடப்பட்டுள்ளது.

அவ்விதிகளுக்கு இணங்க அந்நூல்களிலும், மேற்கூறிய நாகர்கோயில் வெளியீட்டிலும் காணப்படும் கலைச் சொற்கள் சிலவற்றை இங்கே எடுத்துக்காட்டலாம் என்று நினைக்கிறேன்:

Adhesion—அடைசம், ஒட்டு; Air—பரமாணு, நபம், அனிலம்; Alcohol—அலக்கால்; Adchyde—அல்திகைரு; Antiseptic—பூயக்கின; Bicarbonate of Soda—சோடதுவி கபனசு; Bomb—பொம்பு என்னும் குழாய்க் குண்டு; Bread—அப்பம்; Bronze—புரோஞ்சு; Cabbage—கபேச்சு; Oxygen—அச்சிதம்; Potato—புடேதுக் கிழங்கு; Porosity—பொறுமை; Telescope—தூராட்சி; Tension—தென்சம், விம்மல் Abdomen—வயிறு, அகடு, உதரம்; Acinus—அசினு; Alveolus—காவடம்; Ankle—பரடு; Aneurism—சுபாதி, அனுரிசம்; Aorta—கண்டரை; Artery—நாடி; Ascending-colon—ஏறுபுரீதம், ஏறுமலாந்திரம், Axis (as centre) மேரு; Bladder—சலப்பை, கிலோமம்; Bone—எலும்பு, என்பு, அஸ்தி, ஏணம்; Canal—குழல், கனல், காதம், பாதை; Cartilage—முருந்து, சிதகம், காட்டிலாகு. Cornea—சிருங்கை, கணிர்; Duodenum—பசதம், துவிதீனம்; Face—முகம், வதனம், ஆனனம், Tissue—நெசவு, உதி, திசு, Tympanum—ஆனகம், திம்பனம்.

இந்த நிறுவனம் செய்த வேலையை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். தமிழ் மொழி வளர்ச்சிக்காக அந்நிறுவனத்தைச் சேர்ந்த அவர்கள் பட்ட பாடும், செய்துள்ள பணச் செலவும், கொஞ்சநஞ் சமல்ல. ஆனால், பொதுமக்கள் இவ்வேலையைக் கவனிக்காமல் மறந்துவிட்டதைப் போலவே, அந்த நிறுவனமும் மறந்துவிட்டது. மேற்கூறிய கலைச் சொற்களைத் தமிழர் நேசனில் வெளியிட அனுமதி வேண்டும் என்று அந்த அமெரிக்க நிறுவனத்துக்கு நான் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் எழுதியபோது, 'நாங்கள் அப்படி ஒரு காரியத்தைச் செய்திருக்கிறோமா?' என்று அவர்கள் என்னை வினவினார்கள். பின்னர் நான் சொல்லியதை ஒப்பி அனுமதி அளித்தார்கள்.

தமிழ் நாட்டிலும் 1871ம் ஆண்டுவாக்கில் விஞ்ஞானத்தைத் தமிழில் வெளியிடும் முயற்சிகள் நடந்து வந்தன. அவற்றின் விளைவு ஒன்று தத்துவ சாஸ்திரம் என்பது. இதன் முகப்புப் பக்கத்தில், தத்துவ சாஸ்திரம் (Elements of Natural Philosophy) அல்லது ஜகத்தில் விளங்கிய பலவகைத் தோற்றங்களுடைய பிரகிருதிப் பிரமாணங்களை விளக்கிய நூல். இது பாளையங்கோட்டையிலிருக்கும் இ. சார்ஜென்றையராலே செய்யப்பட்டது. (By the Reverend R. Sargent, Tinnevelly. Palamcottah. The Christian Vernacular Education Society. Printed at the Church Mission Press; by L. Devanayakam Pillai. 1871). இதற்கு ஒரு பொருள் அட்டவணை இருந்தது. இதன் இறுதியில் தற்பரீட்சை விஞ்சுக்கள்—183 விஞ்சுக்கள்—கொடுக்கப்பட்டிருந்தன, இதில் படங்கள் உண்டு, மொத்தப் பக்கங்கள் 392. தலைப்பில் கடவுளுக்கு வந்தனம் என்னும் வணக்கம் காண்கிறது.

தமிழ் நாட்டிலிருந்து சற்றே பின்னால், அதாவது 1885ம் ஆண்டில், வெளிவந்த மற்றொரு விஞ்ஞான நூலும் குறிப்பிடத்தக்கது. அது வெ. ப. சுப்பிரமணிய முதலியார் மொழிபெயர்த்த கால் நடை இயலைப் (Veterinary Science) பற்றிய நூல். அதன் முகப்புப் பக்கத்தில் உள்ள வாசகம் இவ்வாறு இருந்தது. (விவரியாகக் கொடுக்காமல் தொடர்ச்சியாகச் சேர்த்து எழுதுகிறேன்).

இந்து தேசத்துக் கால்நடைக்கான புஸ்தகம் என்ற இந்தியாவின் கால்நடைகளின் வியாதிகளைப்பற்றிய தெளிவான குறிப்புகள் முன்பு எடின்பரோ நகரத்து நவீன வெற்றெரிநெரி

வித்தியாசாலைப் பதார்த்த குண போதகாசிரியரும், இப்போது சென்னைப் பிரதானக் கால்நடை வியாதி இன்ஸ்பெக்டரும், சைதாப்பேட்டை விவசாய வித்தியாசாலையில் பிராணி விவரண சாஸ்திரம், வெற்றெரிநெரி வாகடம், ரண வைத்தியம், இவைகளுக்குப் போதகாசிரியரும், ஆகிய ஜேம்ஸ் மில்ஸ், எம். ஆர். ஸீ. வீ. எஸ்., வி. எஸ்., முதல் கிளாஸ் எ. வீ. ம. என்பவரால் இயற்றப்பட்டது.

கால்நடை இன்ஸ்பெக்ஷன் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த வெ. ப. சுப்பிரமணிய முதலியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. சென்னை நாஷனல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1885 All Rights Reserved. விலை ரூபாய் 2.

இந்நூலில் பத்து அதிகாரங்களும், ஓர் அனுபந்தமும் உள்ளன. பல படங்களும் உள்ளன. அனுபந்தத்தில் பிராணிகள் சம்பந்தமான சட்டங்கள் (ஆகிட்டு) இரண்டு கொடுக்கப்பட்டுள்ளன. அதன்பின், தமிழ் அட்டவணையும், அருஞ்சொல் விளக்கமும், (பக்கம் 209-231) அதன்பின் இங்கிலீஷ் அட்டவணை (பக்கம் 233-238) ஒன்றும், கொடுக்கப்பட்டுள்ளன.

இதில் வழங்கிய கலைச் சொற்கள் சிலவற்றைப் பார்த்தால், மொழி வளர்ச்சியில் மாறுதல் ஏற்பட்டு வருவது தெரிகிறது. Anthrax அடைப்பான்— அதைப்பு—Dropsy நீர்க்கோவை; இபிகாக்கு—Ipecacuanha; ரோக நிதானம்—Diagnosis ஒரு வியாதியை மற்றொரு வியாதியினின்றும் பகுத்தறிதல். வந்தை—Parasite சீவசீவி. தாவர வருக்கத்தையாவது பிராணி வருக்கத்தையாவது சேர்ந்த மற்றச் சீவன்களின் உள்ளேயாவது மேலேயாவது வசித்து அவைகளின் ரசத்தைக் கிரகித்து, ஆகாரமாக உபயோகித்து வளருகின்ற சீவன்கள் பற்றையும் (அதாவது படர் தேமலையும்) அடைப்பான் வியாதியையும் உண்டாக்கும் சீவன்கள்.

இதன் பின்பு, வேறு சில நூல்களும் வெளிவந்தன. அவற்றுள் ஒன்று, 1908ம் ஆண்டில் வெளிவந்தது. அதன் முகப்புப் பக்கம் பின்வருமாறு உள்ளது. முதலில் பிள்ளையார் சுழி. அதற்குக் கீழே கடவுளுக்கு வணக்கம் என்று போடப்பட்டுள்ளது. அதன்பின், விவசாய நூல், கிருஷி சாஸ்திர சாரசங்கிரகம். நரசிம்மலு நாயுடு, 1908. அது 184 பக்கங்கள் கொண்ட நூல்

பத்திரிகைகள்:

தமிழ் நாட்டில் **விவேகசிந்தாமணி, விவேக போதினி, வாணீவிலாசினி,** செந்தமிழ் முதலிய பத்திரிகைகளும் 1891 முதல் விஞ்ஞான விஷயங்களைப்பற்றிய கட்டுரைகளை வெளியிட்டு வந்தன. பின்பு 1917ம் ஆண்டில் தொடங்கிப் பத்துப் பன்னிரண்டு ஆண்டு நடந்து வந்த **தமிழர் நேசன்** விஞ்ஞான அறிவைப் பரப்பும் நோக்கையே முக்கியமாகக் கொண்டிருந்தது. அதை நடத்தும் பொறுப்பு தமிழர் கல்விச் சங்கத்தால் என்மீது சுமத்தப்பட்டிருந்தது. பொதுமக்களின் ஆதரவின்றி அதுவும் நின்றுபோயிற்று. அதன் பின்பு **கலைமகள்** பத்திரிகையில் மாதம்தோறும் தவறாமல் இரண்டு மூன்று விஞ்ஞானக் கட்டுரைகள் வெளிவந்தன. **ஆனந்தவிகடனும்** என்னுடைய விஞ்ஞானக் கதைகள் சிலவற்றை வெளியிட்டு வந்தது. இப்போது **கலைக்கதிரே** அந்தப் பணியை நன்முகச் செய்து வருகிறது. **தினமணியும்** வாரம் தோறும் விஞ்ஞானக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. அதுபோலவே **தியாகபூமியும்** வாரந்தோறும் விஞ்ஞானக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. இளைஞர்களுக்காக நடத்தப்படும் **இளம் விஞ்ஞானியும்** ஒரு விஞ்ஞானப் பத்திரிகை.

இலங்கைப் பத்திரிகைகள் சிலவும் விஞ்ஞானக் கட்டுரைகளை அவ்வப்போது வெளியிட்டு வந்தன. **ஈழகேசரி ஆண்டு மலர்** முதலியவற்றிலும் நான் எழுதிய விஞ்ஞானக் கட்டுரைகள் ஒரு சில வெளிவந்திருக்கின்றன. பிறகு 1946, 1947, 1948ம் ஆண்டுகளில் **வீரகேசரியில்,** வாரந்தோறும் தவறாமல், என்னுடைய விஞ்ஞானக் கட்டுரைகள் வெளிவந்தன. அவை எல்லாம் இவ்வாறு செய்தது எனக்கு மிகவும் ஊக்கம் அளித்தது. மேன்மேலும் விஞ்ஞானத்தைப்பற்றி எழுத வேண்டும் என்னும் ஆசையை வளர்த்தது. பின்னர், நான் தொடர்ந்து சென்னையிலிருந்து வெளிவரும் **தினமணியில்** ' விஞ்ஞானப் பேரவை ', ' விஞ்ஞான மேடை * என்னும் கட்டுரைகளையும் பிற கட்டுரைகளையும் எழுதுவதற்கு நல்ல பயிற்சி அளித்தது.

பின்பு என்னுடைய நண்பர் சுப்பிரமணியம் தொடங்கிய ' **விஞ்ஞானி** ' என்னும் பத்திரிகையும் இலங்கையில் ஓர் ஆண்டுக்காலமே வளர்ந்து மறைந்த அறிவியல் குழந்தை. அப்பத்திரிகை செய்த பணியும் தமிழில் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தது.

ஆறுமுக நாவலரின் நாடு

தமிழுக்கு அளப்பரிய பணிபுரிந்த ஆறுமுக நாவலரின் சொந்த நாடாகிய இலங்கை, அவர்

மூலமாக, இலக்கியத்துக்கும் முக்கியமாக உரை நடையின் வளர்ச்சிக்கும், சமயத்துக்கும், செய்த பணி மிகப் பெரிது. ஆறுமுக நாவலரின் தெள்ளத் தெளிந்த தமிழ் நடையானது தமிழை நன்கு கையாள முயலுவோர் அனைவருக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக இருந்தது.

மேற்கூறியவாறு பல காலம், பலவகைகளில், யாழ்ப்பாணமும், கொழும்பும், தமிழுக்கு விஞ்ஞானத் துறையில் செய்த பணியும் மிகப் பெரிது. தமிழ் நாட்டிற் செய்யப்பட்ட பணியைவிட அது அதிகமானது. இப்போது அப்பணி பலவகையில் பயன் அளித்து வருகிறது.

வருங்காலம்

இலங்கை நாடு, இன்னும், முன்போல் தமிழ் விஞ்ஞானத்துக்குத் தொண்டு புரிந்து, அதை மேன்மேலும் வளர்க்கும் என்பதற்கு ஐயமில்லை. அது செய்த தொண்டுகளுக்காக அதைப் பாராட்டுகிறேன். அது செய்ய இருக்கும் தொண்டுகளை எண்ணி மகிழ்கிறேன்.

தமிழில் விஞ்ஞானம் வளரவும், இலங்கை அதன் வளர்ப்புத் தாயாக இருந்து மேன்மேலும் அதைப் பேணி வளர்க்கவும், கடவுள் அருள்புரிவாராக.

by S. Sivanayagam.
Critic, Columnist and Senior Sub-Editor
Ceylon Daily Mirror.



Bharata Natyam and Ceylon

Introductory

When one talks of any aspect of Tamil culture in Ceylon, it would be necessary to remind ourselves at the very outset that we do not possess any Tamil heritage that is exclusively Ceylonese. Whether it is Literature, Music, Drama, Dance or the Cinema, we are part and parcel of the South Indian monolith. The only area in which we differ slightly and differ to our credit is in the spoken language of Tamil.

Whether such a state of affairs is good for a community that after all is part of a different polity, owing allegiance to a separate nation state, and whose future is intertwined with the rest of Ceylon, and whether it is necessary, or possible at all to evolve a distinctive Ceylonese idiom and thinking in Tamil arts, are questions beyond the scope of this essay.

If we draw attention to this ambivalence- our physical roots in one country and our emotional roots in another - it is merely to set the perspective of this article clear. The history of Bharata Natyam in this country can be only a chronological account of the advent and progress of the art as is practised in South India. There is no independent Ceylonese tradition in Bharata Natyam.

But there is also a special significance in reminding ourselves of our emotional dependence on South India in a souvenir dedicated to the great Arumuga Navalar. Indeed there is a moral in it. The only time in the long association between Tamil India and Tamil Ceylon that cultural traffic ceased to be a "Uniflow" and became a two-way traffic was during the brief period Arumuga Navalar dominated the scene. For once during that time, Eelam showed the way.

The Origin of Bharata Natyam

The Hindu concept of the Universe through Dance is perfectly in accord with even the Western belief of Dance as the primary and supreme manifestation of physical life. But whereas the West has made it a grossly materialistic art form, Hindus believe that Lord Siva, as Nataraja the lord of Dance, "infused life into inert matter through the rhythm of His Cosmic dance".

"The Supreme Intelligence dances in the soul . . . for the purpose of removing our sins. By these means, our Father scatters the darkness of illusion (Maya), burns the thread of causality (Karma), stamps down evil (Mala, Anava) showers Grace and lovingly plunges the Soul in the Ocean of Bliss (Ananda). They never see rebirths, who behold this mystic dance" (Unmai Vilakkam)

Dance therefore has remained as the supreme expression of Religion. It has as its dominating motifs - Bhakthi and Yoga.

In the Hindu belief, Dance is the outcome of five actions of God:- Creation (Srshti), Preservation or Protection (Sthiti), Destruction (Samhara), Embodiment or given rest (Tirobhava) and Release or Salvation (Anugraha). The divine manifestations of each of these kriyas (actions) are Brahma, Vishnu, Rudra, Maheswara, and Sadasiva.

In the Cosmic Dance as represented in the Nataraja bronzes, the drum is the symbol of creation, the Hand of Hope represents Protection, the Fire denotes destruction, and the Foot held aloft signifies Release.

Although other Indian classical dances too conform basically to the ancient canonic laws laid down by Bharata's "Natya Shastra" and Nandikeswara's "Abhinaya Darpana" which are said to be the culled essence of the four Vedas, Bharata Natyam has come to be the exclusive nomenclature for the dance form of South India, in that it is believed to be the oldest of the Indian classical dances and the one that is closest to the ancient canonic laws. While Manipuri is distinguished for its grace, the Kathak for its mathematical precision, the Kathakali for its dramatic content, it is Bharata Natyam that has the most soulfulness.

The Art of Bharata Natyam

Bharata Natyam in common with the other classical dances of India has two facets - the movement proper or pure dance called **Nritta** in which rhythm dominates, and the dance of gesture and interpretation called **Nrit ya.** In a Solo dance performance the customary opening items Alarippu and Jathiswaram along with the Thillana are examples of **Nritta.**

In Nrittya the communication of a theme to an audience is cone through **Abhinaya.** Abhinaya consists of four kinds, the most important of which is Satvika Abhinaya, the art of expressing Mood (Bhava) and Emotion (Rasa). The other three are Angika Abhinaya (Gestures and movements of body) Vacika Abhinaya (e. g. Music) and Aharya Abhinaya (external aids like costumes and make-up).

If the difference between the four classical styles of Indian dance is a varying difference in emphasis, here is a case in point. In Bharata Nayam Satvika Abhinaya is most important while the kathakali is richer in Angika Abhinaya.

Satviha Abhinaya in its outward manifestation of the psychic state of mind is deeply evocative of the human emotions or **Rasa.** Rasa itself is of nine kinds collectively known as the Nava Rasa:- Sringara (Love); Veera (Valour); Karuna (Pathos); Adbhuta (Wonder); Hasya (laughter); Bhayanaka (Fear); Bibhatsa (Disgust);Rudra (Anger) and Santa (Tranquility).

A Solo Bharata Natya performance has a well-regulated pattern in the arrangment of the items. While the invocatory Alarippu and the Jathiswaram being items of pure dance, demand a technical virtuosity, the shabdam introduces for the first time Abhinaya and time. The Varnam which follows - is to Dance what a crescendo is to Music. It is a blend of both Nritta and Abhinaya and remains the crowing achievement in the repertoire.

With the introduction of Padams in the second part of the programme the recital takes on a relaxed, private tone. Invariably the creative ability of a danseuse is proved only in the Padams.

Balasaraswathi's rendering of the Padam " Krishna Ni begane " (Lord Krishna come to me ') is believed to be so moving that she even dissolved several'rasikas' in a New York audience to tears !

The threads of a solo recital is gathered together in the 'Thillana', 'on item of swift pure dance movements and rounded up with a 'slokam' on a Virutham'.

It must be remembered that Bharata Natyam also includes, apart from the solo recital the Kuchipudi Bharata Natyam of Andhra Pradesh and the Kuravanji ballet where several perfor mers take part. The Kalakshetra in chiefly dist-inguished for its Kuravanji dance dramas.

The Awakening in Ceylon

Twenty five years ago as a little boy, I used o sneak out in the night to a neighbouring temple in my village in Jaffna – during festival time – to watch Sathir Kutcheri. My eyes used to be dull with sleep but yet I sat open-eyed, fascinated with an adolescent flutter in my heart, at the grace of movement, the rhythmic feet, and (this was the reason for the parental taboo) the char-ming coquettishness of those Devadasi women most of whom were periodically imported from South India.

The savour was somewhat lost of course later, and my consciousness of sin rose to the surface when I came to man's knowledge. Although the logic of my child - mind told me that nothing that happened in a temple could be wrong or immoral, I knew that everything was not all right with those dancers. A temple art which had enjoyed a legendary divine sanction for centuries (the Brihadeshwara temple at Tanjore had nearly 400 devadasis attached to it at one time!) was being vulgarised. Like the Hindu caste system it had stultified its original validity and became a caricature of its own self.

It is necessary however, while recording the degradation to which the devadasi tradition had fallen, not to throw the baby with the bath water; The devadasi cult was a time-honoured one, and the 1500 year old Hindu Puranas make clear references to it. Dancing was part of the daily temple ritual, and if the art of Bharata Natyam as is known today survived through Moghul and British invasions, and left us with a thread that runs back to the Natya Shastra, we have to be duly grateful to the devadasis. Balasaraswathi herself is the last of the great devadasi " paramparai ", to whom Music, Dance and Religion were so interlocked that it was not possible to separate the one from the others. The Bharata Natyam of today is therefore in essence, the Sathir Attam of yesterday!

It was only as recent as twenty years ago that the community conscience in Jaffna rebelled against the depravity of Sathir Attam or nautch dancing. In India it was already banned by law, and the world " nautch " which originated in North India had even passed to the English language. That was also the time when Bharata Natyam in Ceylon, in its present nomen-clature and stage form, was gaining its first shimmer of respectability. We in this country were feeling for the first time the impact of the courageous pioneering work done by Shrimathi Rukmani Arundale in India, in giving the art of Bharata Natyam its new dignity and status in in society. That reformist and revivalist process started in India around 1930. Rukmani Devi was the daughter of the reputed scholar Nilakhanta Sastri. Born into Brahmin orthodoxy, she came under Theosophist infiuence, married a foreign Theosophist and herself underwent intensive training in Bharata Natyam under several gurus, and appeared in public. In 1936 she founded the Kalakshetra at Adyar in Madras, and girls from orthodox families in India took to Bharata Natyam like ducks to water.

Jaffna with its close geographical proximity and its even closer cultural ties became sensitive to the new trend across the Palk Strait. There

were even a few leading Indian dance artistes who visited Ceylon, but their visits were infrequent and surprisingly we were not ready for them, Balasaraswathi, known as the "Queen of Abhinaya" and who was later to get wide recognition in America and other places abroad, gave a stage performance at the Jaffna Town Hall in 1943. She recieved a poor reception according to an eye-witness account. A Jaffna audience whose taste was already debased by the mediocre sathir kutcheris in temple with the accent on eroticism failed to sense the elevating moods of Abhinaya. Her mother Jayammaal, one of the greatest singers India produced herself accompanied Balasaraswathi. The listless audience showed lukewarm response only when Jayammal sang a sequence from a Ramayana theme depicting the Nava Rasas and to which Balasaraswathi did Abhinaya.

The same year or the year following, I watched a dance performance by the Travancore pair, Gopinath and Thankamani also at the Jaffna Town Hall. Although I was too young and uninitiated to understand the intricacies of the different styles of dance forms, I now realize why the audience responded warmly to them. It was largely because there was an admixture of Kathakali and popular dance forms making the performance "spectacular" in its presentations.


Years later in the early fifties Mrinalini Sarabhai, one of the greatest expounders of the Indian dance (whose husband Dr. Vikram Sarabhai now holds the key job of Chairman of the Indian Atomic Energy Commission) visited Colombo with her troupe and gave a few lecture-demonstrations, one of which this writer witnessed at the King George's Hall, Colombo. In 1954, Kamala Laxman gave a Bharata Natya performance at the Saraswathy Hall under the "Nattuvangam" of her guru Shri Vazluvoor Ramiah Pillai. There was another well-kwon ad nseuse Tara Chaudhri who for some time took ersidence in Colombo and taught several girls from rich Tamil homes.

But the visits by these distingished artistes did not produce any appreciable impact towards the resurgence of Bharata Nayam in this country. Bharata Natyam became a living force only with the establishment of the Kalalaya school of Music and Dance by the Ceylon Tamil Women's Union in 1948. In performing this signal service to the popularisation of dance, Kalalaya was helped considerably by Mrs. Kamala Johnpillai, who remains today as the most durable and useful pioneer of the art. She entered Kalakshetra in 1945 and returned to Ceylon four years later. It is worth recording the fact that she was first Ceylonese girl in her time (she was Kamala Brodie then) to qualify in India.

But despite the founding of Kalalaya the trek to Kalakshetra in Madras continud with regularity, and we have today dozens of Kalakshetra trained perfomers, (including four from the Sinhalese community) many of whom are no longer active on the stage.

There are others who have had training outside Kalakshetra in India, under individual gurus, the most prominent of whom is Shri Vazluvoor Ramiah Pillai.

The trend today is for girls to learn the art in this country itself, although a few of them go across to India. This self-reliance in the learning of the art, though a welcome trend, is a recent phenomenon. With two shining exceptions, the danseuses who have won critical acclaim in this country are all either holders of Indian diplomas or those who had their Arangetam after a period of training under Indian gurus.



ஆறுமுக நாவலர் தமது 57-ம் வயதில் சிவபதமடைந்த போது,
அவருடைய திருமேனி யாழ்ப்பாணத்தில் ''கோம்பையன்
மணல் மயானம்'' என்று வழங்கும் இடத்தில்
தகனம் செய்யப்பட்டது.

— உபயம்: க. சதாசிவம்.

III

கவிதாஞ்சலி

நல்லூர் ஆறுமுக நாவலனர்

— விபுலாநந்த அடிகள் —

தமிழ்மொழி வாழ்த்து

''ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும் — ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்''

''பைங்க ணிளம்பகட்டின் மேலானைப் பான்மதிபோல்
திங்கள் நெடுங்குடையின் கீழானை — அங்கிரந்து
நாம்வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம்வேண்டுங் கூடற் றமிழ்''

''சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால் — மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்''

எனை அ

நாவலந் தீவின் ஆர்வல ரேத்திய
தண்டமிழ்ப் பாவையை அண்டரும் விழையும்
அமிழ்துகு தீஞ்சொல் அணங்கினை இமிழ்திரை
ஆர்கலி சூழ்ந்த மாயிரு ஞாலத்து
மனவிரு ளிரிய வாழ்த்துதும் பணிந்தே.

நூல்

தொல்லியல் வழுவாச் சைவநூற் புலவர்
தூநெறித் தமிழுரையாளர்
நல்லியற் புலவர் இசைதரும் புலவர்
நாடக நவிற்றிய புலவர்
சொல்லியற் றொகைநூல் வானநூல் தருக்கம்
தோமறு கணிதநூல் முதலாம்
பல்கலைப் புலவர்க்(கு) உறைவிட மாகிப்
பரந்திசை யெய்தும்யாழ்ப் பாணம்.

ஆரியர் ஆழி வேந்தரென் றவனி
புகழ்ந்துரை அளிக்கநல் லூரிற்
சீரிய செங்கோல் செலுத்திய வேந்தர்
சென்றபின் சைவநிந் தனைசெய்
பூரியர் ஆட்சி புக்கது கண்டு
பொருதுபுண் ணியத்திசை நடந்த
நேரியல் ஞான விளக்கெனு முனிவன்
நிறைபுகழ் மரபுமேம் படவே.

தில்லைவாழ் கூத்தன் திருவரு ளுருவாம்
சீர்ச்சிவ காமசுந் தரியார்
எல்லையில் கருணைக் கொள்கல மாய
எழிற்சிவ காமியார் வயிற்றில்
நல்லைவாழ் கந்தன் அருளினுல் நல்லைக்
கந்தர்தம் தவப்பய னுக
வில்லைநேர் நுதலார் கண்வலைப் படாத
மெய்த்தவன் மகவென உதித்தான்.

குலந்தரு செல்வன் அறுமுகப் பெயரும்
கோதில்சீர் ஒழுக்கமும் மருவி
நலந்தரு கல்வி கேள்வியால் நிறைந்து
நற்றமிழ் வடமொழி குடபால்
நிலந்தரு மன்னர் மொழியிவை யுணர்ந்து
நீடுசீர் முருகனே யென்ன
அலந்தவர்க் குதவி நினைந்தது முடிக்கும்
ஆற்றலும் பெற்றுயர் வடைந்தான்

தன்னியல் புணரத் தலைவன தியல்பு
சாற்றிய சைவநூல் பலவும்
மின்னியல் சடையார் அருளினுல் அச்சில்
மேவுதல் நலமெனத் துணிந்து
பன்னல மிகுத்த சென்னைமா நகர்க்குப்
படர்தர வெண்ணிநான் மறைகள்
துன்னிநின் றேத்துந் தொல்பதி தொழுது
தொலைவில்சீர் ஆவடு துறையில்

பாவலர் போற்றும் ஞானதே சிகரைப்
பணிந்தவ ராணையின் வண்ணம்
பூவலர் கொன்றை புனைந்தவர் புகழைப்
புலமிகு மறிவர்கூட் டுண்ணக்
காவலர் வியப்ப உரைத்திடல் கேட்டுக்
கருணைகூர் தேசிகர் இவர்க்கு
நாவல ரெனும்பேர் தகுமென அளித்தார்
ஞாலத்தார் தகுந்ததும் என்ன

சொல்லுதல் வல்லான் சோர்விலன் அஞ்சான்
துணிவுகொள் சிந்தையான் அவனே
வெல்லுதல் யார்க்கும் அரிதென உரைத்த
மெய்ம்மறைப் பொருட்கிலக் காகி
நல்லியை லுதித்த நாவலர் பெருமான்
நலந்திகழ் சென்னைமா நகரின்
எல்லையை நண்ணி இயற்கலை பரப்பும்
இயந்திரம் வாங்கிய பின்னர்

கருணையே யுருவாங் கண்ணுதற் பெருமான்
கழலிணை பதிந்தவுள் ளத்தர்
அருணைமால் வரையின் சாரலிற் சின்னாள்
அமர்ந்தனர் திருமடத் ததிபர்
பொருணிறை தமிழன் புலத்துறை முற்றும்
புண்ணியர் தகவினை யெண்ணித்
தெருணிறை யுரவோய் ஈண்டுநீ வைகச்
சிந்தைசெய் திடல்நலம் என்றார்.

தம்மையீன் றெடுத்த யாழியல் நாட்டிற்
சைவமாஞ் சமயமும் புலவர்
செம்மைசே ருளத்திற் பொலிந்தமுத் தமிழும்
சீருறப் பணிபல புரிதல்
இம்மையிப் பிறவிக் கியைந்தமா தவமென்
றெண்ணியே விடைபெற்று மீண்டார்
எம்மையும் பயந்த ஈழமா நாட்டின்
இணையிலாப் பெருநிதி யனையார்

கடிகமழ் கொன்றைத் தாரினர் அழகிற்
காதலுற் றுருகுமெய் யன்பர்
வடியிலை வேற்க ணரம்பையர் வரினும்
மதித்திடா ராதலின் விதித்த
படியினிற் றூய நெறிபுக நினைந்து
படிகலிங் கத்தினிற் றலைவன்
துடிமழுக் கரஞ்சேர் சுந்தர வடிவைத்
தொழுதிட எண்ணிய தூயோர்

நண்ணினர் வினைகள் நலிவுற அருளும்
நாவலந் தீவினை யடைந்து
புண்ணியந் திரண்ட உருவியல் ஞான
போதகா சிரியனைத் தொழுது
மண்ணினிற் பிறந்தோர் மனமய லகல
வளரொளிப் பிழம்பென நின்ற
விண்ணவர் முதலைப் பூசனை புரியும்
விதியினை மதியினிற் றெளிந்தார்.

மன்னுமீ முத்தை யடைந்துதொண் டாற்றி
மாமறைக் காட்டினை மேவித்
தொன்னலத் துறைசை தருமையம் பதியிற்
றொகைவிரி யுரைபல நவிற்றி
முன்னமே ழிசையாற் செழுந்தமிழ் வளர்த்த
முதல்வரைப் பயந்தசீ காழி
என்னுமா நகரில் இறைவர்தாள் தொழுதார்
இன்றமிழ் வளர்த்தநா வலனர்.

உரையுணர் விறந்த தனிமுதல் கருணை
உருவுகொண் டுலகெலாம் பயந்த
வரைமகள் உவகை விழியிறற் பருக
மாதவர் வாழ்த்தொலி யெடுப்பப்
பரையுரு வாய மாமணி மன்றுட்
பதஞ்சலி யாதுநின்றாடும்
விரைகமழ் கொன்றைத் தாரினு ராடல்
விரும்பிவந் தமரரும் பணிவார்.

அத்திற மாய தில்லையம் பதியில்
ஆகம அளவையாற் சமைந்த
வித்தகக் கோயிற் கோபுரங் கண்டார்
விழிகணீர் பெருகமெய்ம் மறந்தார்
பத்தர்சீர் பரவும் நல்லநா வலனர்
பாரினிற் பன்முறை விழுந்தார்
அத்தரே யென்னூர் அம்மையே யென்னூர்
ஆடினர் பாடினர் அன்பால்.

மாமணி மன்றுட் டிருநடங் கண்டார்
மனநெகிழ்ந் துடையவர் பாதம்
பாமணி மாலைப் பனுவலாற் பரவிப்
பல்பகல் பிரிந்தகா தலனர்
தாமணி மையிலே வருதல்கண் டுவகை
தழைத்தமெல் லியலெனத் தளர்ந்தார்
பூமணிச் சிலம்பி னொலிசெவிப் படலும்
புதுமைசேர் மருட்கையுற் றெழுந்தார்.



ஆறுமுகவருக்கு ''நாவலர்'' பட்டம் சூட்டிய
திருவாவடுதுறை ஆதீன உபய சந்நிதானம்
மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்.

— உபயம்: கு. சதாசிவன்.

நாவலன் சிறப்பு வாழி

— நவாலியூர் திரு. க. சோமசுந்தரப்புலவர் —

தெண்ணிலவு மலர்ந்தசடைச் சிவபெருமா னருள்சைவச் சேவல்கூவ
எண்ணிலவு பரசமய விருள்விடிய நீற்றினெளி யெங்கும் மேவப்
பண்ணிலவு முத்தமிழ்ப்பங் கயமலர வைந்தெழுத்துப் பணில மார்ப்ப
மண்ணிலவு நல்லிலவ ருாவலனுஞ் செழுஞ்சுடரை வணக்கஞ் செய்வாம்.

சீர்செய்த வாகமநூற் சிவநெறிசெய் தவப்பயனும் திருவார் நல்லி
ஊர்செய்த தவப்பயனு மொண்டமிழ்செய் தவப்பயனு மோத வேலிப்
பார்செய்த தவப்பயனு மொன்றுகி நல்லறிஞர் பரவி யேத்தும்
பேர்செய்த நாவலனு யவதரித்த தெனும்பெருமை பேணி வாழ்வாம்.

அன்னநடை பிடியினடை யழகுநடை யல்லவென வகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுணடை பயின்றதமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை யெனப்பயிற்றி வைத்த வாசான்
மன்னுமருள் நாவலன்றன் னழியாநல் லொழுக்கநடை வாழி வாழி.

சீர்தட்டும் புறச்சமயஞ் சேர்ந்தார்க ளழுக்காறு செற்ற முள்ளோர்
ஆர்தட்டிப் பேசிடினு மொருசிறிறு மஞ்சாது முகில்போ லார்த்து
நேர்தட்டி விடையிறுத்துச் சுபைநடுவே யரியேறு நிகர்ப்ப நின்று
மார்தட்டிப் பிரசங்க மழைபொழியு நாவலன்ருள் வாழி வாழி.

மண்ணினுற் பெண்ணினுற் பொன்னினுல் வருகின்ற மாசு மூன்றுட்
பெண்ணினுல் வரும்மாசு பெருகவருள் புரிவேனிற் பெருமான் றன்னை
வெண்ணிலா மலர்ந்தகொன்றை வேணியான் முன்னுளில் வென்ற வாறு
கண்ணினு ளன்றியுள்ளக் கருத்தினுல் வென்றவன்ருட் கமலம் வாழி.

பார்மதித்த செந்தமிணூ லேடுகளே யாராய்ந்து பதிப்பித் தோர்கள்
ஆர்பதிப்பித் தாலுமங்கே பிழைநுழைத லுண்டாகும் அவைக ளின்றிச்
சீர்பதித்த நற்பதிப்பு நாவலர்தம் பதிப்பென்று செப்பு மேன்மைப்
பேர்பதித்த பெருங்கல்விச் செல்வனிரு சேவடிகள் பெரிதும் வாழி.

தன்னவரும் பிறருமென்று சாராமே நடுவுநிலை சார்ந்து நின்றே
அன்னவர்கள் வழுவியவை யஞ்சாது வெளிப்படுத்தி யறிவை யூட்டும்
முன்னவனே தமிழ்மக்கள் முதுநிதியே சுற்பகமே முடியாக் கல்வி
மன்னவனே யெனவாழ்த்த வந்துதித்த நாவலன்ருள் வாழி வாழி.

அக்காலம் யாழ்ப்பாணச் சமயநிலை தணையஞ்சா தெழுதி வைத்தாய்
இக்காலம் நீவந்தால் இகழுவையோ புகழுவையோ யாவர் கண்டார்
தக்கோனே மெய்ஞ்ஞான சற்குருவே சைவசிகா மணியே யார்க்கும்
மிக்கோனே யெனப்போற்றும் நாவலன்றன் சேவடிகள் மிகுந்து வாழி.

வாயிரவான் கையிரவான் ஆயிரவர்க் கருஞ்சிறப்பு வழங்கும் வள்ளல்
பாயிரங்கேட் டிரந்தானென் றேதுவதை யாராய்ந்து பார்க்கில் மெய்யே
மாயிருஞா லத்தினிலே வெண்ணெய்வைத்து நெய்க்கிரந்த வாரு மென்றே
தூயவர்கள் சொலித்துதிக்கு மாறுமுக நாவலன்றன் றுணைத்தாள் வாழி.

எல்லாரும் புகழிலங்கை மாநகரைத் தமிழகத்தோ டிணைக்க முன்னுட்
கல்லாலும் மண்ணுலும் கவியாலும் ரகுராமன் கரைசெய் வித்தான்
சொல்லாலு முரையாலும் கவியாலும் தொடர்பாலும் தொடர்பு செய்ய
வல்லானு மாறுமுக நாவலன்றன் னடியிணைகள் வாழி வாழி.





— பண்டிதர், கா. பொ. இரத்தினம் —

பூமணக்கும் பொழில்மணக்கும் புனிதநல்லூர் தான்மணக்கப்
பாமணக்க உரைமணக்கப் பகர்சைவ நெறிமணக்கத்
தேமணக்குந் தமிழணங்கு செய்தபெருந் தவப்பயனுல்
நாமணக்க அவதரித்த நாவலன்தாள் இறைஞ்சுதுமே

தொல்லறங்கள் சிறந்தோங்கத் தூயதொண்டு செய்யவெண்ணி
இல்லறத்தை விரும்பாமல் இடர்மிக்க துறவென்னும்
வல்லறத்தை மேற்கொண்டு வாழ்வினையே உவந்தளித்துப்
பல்லறங்கள் பொலிவித்த பண்பினனைப் போற்றுதுமே

பன்நெறிகள் வளர்கின்ற பாருலகில் தமிழர்தம்
தொன்நெறியாய் மிளிர்சைவம் தோற்றமிழந்து இங்குவந்த
பின்நெறிகள் சிலவற்றுற் பீடழிய மீண்டுமதை
முன்னெறியாய் நிலைநிறுத்த முயன்றோனை வாழ்த்துதுமே !

தமிழ்க்கடலில் நிலைகண்டு தன்னெப்பா ரின்றியுயர்ந்து
அமிழ்தனைய உரைநடையை அருமையுற வளப்படுத்தி
இமிழ்கடலும் கறையானும் ஏக்கமுறத் தமிழ்நூல்பொற்
சிமிழ்நிகர்க்கப் பதிப்பித்த திறலோனைப் பரவுதுமே !

பூச்சிந்தும் நறுந்தேன்போற் பொருளோடு சொல்லணிசேர்
பாச்சிந்தும் புலவர்கள் பாடுஞ்சீர் படைத்தோங்கிக்
காச்சிந்தும் மலர்போலக் கற்றோரும் மற்றோரும்
நாச்சிந்தும் இசைகொண்ட நாயகனை வணங்குதுமே !



— தான்தோன்றிக் கவிராயர் —

காப்பு

மூவள வேந்தர் காப்பில் முகிழ்த் தொளிப் பிரபை வீசிப்
பாவளம் மிகுத்துப் பின்னர் பன்னெடும் காலம் தேங்கி
நாவலன் வரவும் அன்னேர் நாவிலே ஓங்கி, இன்றிப்
பாவலன் நெஞ்சிற் கூத்துப் பயின்றிடும் தமிழே! செல்வீ!

உன்னை யான் வணங்கிக் கேட்கும் ஒரு வரம்; நல்லூர் தந்த
பொன்னை - எம் மொழியைக் கல்விப் பொருளினைத் தேச மாண்பை,
மின்னையே நிகர்த்த செஞ்சொல் மிளிர்த்தியே வளர்த்துக் காத்தான்
தன்னை - நாவலனைப் போற்றத் தகுமொழி தாராய் அம்மா!

நூல்

1. நாவலன் பிறந்த காலம் நாடிழிந் திருந்த காலம்
நாவலந் தீவு வெள்ளை நரர்களுக் கடிமைப் பட்டுக்
கேவலம் மிகுந்த காலம்; கிலிசைகெட் டெங்கள் முன்னோர்
ஏவல் செய் தாங்கி லேயர்க் கெடுபிடி ஆனகாலம்!

2. கற்றவர் இருந்து மென்ன? கட்சிகள் கட்டித் தம்முட்
குற்றமே போற்றி, வேற்றோர் கும்பிடும் மதங்கள், பண்பு,
மற்றவர் பாஷை, கல்வி, மடமை சார் நாக ரீகம்
முற்றுமே சிறப்பென் றேற்று மூடராய் வாழ்ந்த காலம்!

3. படிப்பினைத் தருவோம் என்றும், பதவியைத் தருவோம் என்றும்
குடிப்பதற் குண்பதற் காம் குவை நிதி தருவோம் என்றும்,
நடிப்புகள் செய்து வெள்ளை நாட்டினர் தங்கள் ஆட்சிக்
கடிப்படை கோல, நம்மோர் அலமலைந் திருந்த காலம் !

4. தமிழ்வலார், தாங்கள் பெற்ற தனையருக் கேனும் கற்ற
அமிழ்தனை கல்வி ஞானம் அளித்திடா தொளித்த காலம்!
சிமிழிலே முத்தை வைத்துச் சேற்றிலே புதைத்த வாருய்த்
தமிழ் அமிழ்ந் திவர் பாற் சிக்கித் தட்டழிந் திழிந்த காலம்!

5. ஏடுகள் இரவல் வாங்கி எழுதிய பின்னர், மூலம்
பாடுறப் பழுது செய்து பழம் நிதி அழித்தும், மாண்டு
காடுறு முன்னர் தங்கள் கைவசச் சுவடி தீயிற்
போடுதல் செய் தெரித்தும் பொருமையால் எரிந்தோர் காலம் !

6. கல்வியைத் தமிழை, நாட்டின் கனிகளைப் பண்பை, தங்கள்
பல்வித நாகரீகப் பழக்கமாம் சில, மார்க்க
நல்வினை அறங்கள் தம்மை, நாலு பேர் அறியக் கூட
நல்குதல் - பொதுமை செய்தல் - நயந்திடார் வாழ்ந்த காலம் !

7. தனத்தினை, நாட்டை வேற்றுத் தறுகணர் கவர்ந்த தன்றி -
சனத்தரை அடிமை செய்த சாதனை மட்டு மன்றி -
மனத்தினை, ஈழநாட்டு மக்களின் ஆன்மா தன்னைத்
தினந்தொறும் அடிமை கொள்ளத் தேசமே தேய்ந்த காலம் !

8. தமிழ் மொழி, தமிழர் பண்பு, தமிழரின் சமயம், கல்வி
தமிழரின் செல்வம், நாடும் தமிழினத் தான்மா தானும்
அமிழ்வுறும் இப் போர் துன்பம் அறுகெனத் தழைக்கும் காலத்
தமிழ்துறு விடத்தை நீக்க அறுமுகன் சிவனுய் வந்தான் !

9. ஆங்கிலம், தமிழ் இரண்டும் அட்சரம் அறவே கற்றேன்;
ஈங்கவன் திறமை பெற்றோர் இருநிதி, பதவி, வாழ்க்கை
ஒங்குதற்கான வாய்ப்பென் றுறுநலம் அனைத்தும் எய்தப்
போங்கதி இருந்தும், எல்லாம் புறத்தெறிந் தெழுந்தான் மன்னன் !

10. வாலிப வயதிற் சின்னுள் வந்த வேற்றுரின் மாட்டுக் -
கூலியைக் கருதா தன்னோர் கோரிய முறையாற் - கல்வி
பாலியர்க் கூட்டும் ஆசான் பதவியை வகித்தும், பைபிள்
நூலினைத் தமிழில் நன்றுய் நூற்றுமே இருந்தான்; உண்மை;

11. ஆயினும் பின்னர் இங்கே அந்நியர் தங்கள் மார்க்கம்
தியினும் விரைவு கொள்ளச் செய்வதற் காய்க் கைக் கொள்ளும்
ஆயிரம் வழிகள் கண்டான்; ஆகுலம் கொண்டான்; ஆவி
ஓயினும் ஓயேன் நாட்டுக் குழைப்பதில் என்றுன் செம்மல் !

12. வேலையை உதறி வீசி வெளிக் கிளர்ந்து தெழுந்தான்; கல்விச்
சாலைகள் அமைத்தான்; சைவ சமய நூல் நூறு செய்தான்;
ஆலயந் தோறும் சென்றே ஆற்றினுன் பேச் கிங் காண்ட
மேலையர் மிரண்டார்; ஆன மிடியெல்லாம் செய்தே பார்த்தார்

13. நாவலன் கவன்ருனில்லை; நனி தமிழ்த் தேன் மொழிக்குக்
காவலன் ஆனுன்; கல்விக் காவலன், சைவ மார்க்கக்
காவலன், சமூக சேமக் காவலன், தமிழாசாரக்
காவலன் என்றே மாற்ருர் கலங்கு மாறிலங் கினனே !

14. செல்லரித் தழிவுருது செந்தமிழ்ச் சுவடி யாவும்
ஒல்லுமா றச்சுக் கந்தோர் உண்டுசெய் தச்சிலேற்றி,
நல்லிலக்கண நூல், பண்டை ஞான நூற் குரைகள் செய்தே
தொல் புகழ்த் தமிழ் யாம் இன்று தொடர்வதற் கூற்றேயானுன்!

15. கல்வி இங்குளதேல் ஊற்றுக் கண் அதற்கவனே ! கற்ருேர்
பல்கி இங்குளரேல் அன்னுர் பவிசெலாம் அவனுலே ! சைவம்
மல்கி இன் ருேங்குமாயின் மற்றவன் பணியால் ! ஈழம்
வல்வினை நீங்கி மீண்டும் வாழ்வது அவனுற்ருனே !

16. இன்று யாம் சுகிக்கும் பாஷை, இரு விழி பெற்றுக் கெம்பி
நின்று யாம் தருக்கச் செய்யும் நேர்படு கல்வி ஞானம்
மன்றிலே பெருமையோ டெம் மண்ணிலே உதித்த சான்ருேர்
என்று யாம் நிறுத்தும் மேலோர் - எவையுமே அவனுற்ருனே !

17. என்னரும் தாய் நாடான ஈழ நாட்டிடையே தோன்றிப்
பன்னரும் பணிகள் செய்தார் பலர்; இனும் செய்வோர் பல்லோர்;
இன்னவர் சிறியரல்லர்; எனை நிகர் புலவோர் வாயின்
சொன்னயக் கவிகள் நூருற் சோடனை செய்யத் தக்கார் !

18. தேசியப் பெருமை பேசித் திரு வினையாற்றிச் சென்றே
ஆசிய நாட்டின் மேன்மை அகில நாடனைத்தும் செப்பி
தேசிக ரான எங்கள் தேசமா மணிகட் கெல்லாம்.
மாசிலா முதல்வனுனன் மாதவன் நல்லூர் மைந்தன் !

19. மேலை நாடேகி ஆண்டோர் மேட்டிமை மன்றத்தேறி
ஈழ நாடடைந்த தொல்லை எடுத்துரைத் தறத்தைக் கோரி
மாளவே யிருந்த நாட்டு மக்களின் உரிமை காத்த
வேழமாம் இராம நாதன் வேறெவர் விளைத்த முத்து ?

20. மாகலா யோகி என்றே மகிதலம் போற்றும் செம்மல்
சேகரம் செய்தே, ஓங்கும் சிங்களக் கலையின் பெற்றிக்
கேகனுய்ப் பணிகள் செய்த ஏந்தலாம் குமாரசாமிக்
காகவே பாதை வெட்டி அமைத்தவன் வேரு ராவான் ?

21. முத்தமிழ் காத்த சீர் தா மோதரன், பின்னர் வந்த
வித்தகர் விபுலானந்தர், வியன்கவி நவாலித் தாத்தா
வித்துவ மணி கணேசர், விறல் முருகேசனுர் என்
றத்தனை பேர்க்கும் ஆசான் அறுமுகனன்றி வேருர் ?

22. இருந் தமிழ் இருந் தோம்பும் பண் டிதமணிச் சான்ருேனை
திருவமர் திருநெல்வேலிக் கணபதிப் பிள்ளையோடு,
பெருமை சார் பெரியதம்பிப் பிள்ளை மற்றவர் மாணக்கர்க்
குரியதாம் புகழுக் கான்ற ஊற்று வாய் வேறே யாரோ ?

23. எங்களின் தாய் நாடதென் றிடித்துரைத் தெழுந்தே ஈங்கு
சிங்க கர்ச்சனைகள் செய்தே சிரம் நிமிர்ந்திருந்து வீரம்
பொங்க வாழ் தமிழச் சாதி புத்துணர் வடையு மாறுய்
அங்கு வேர் ஊன்றிச் சென்றேன் அறுமுக ஏந்தலன்றே ?

24. இவ்விதம் இலங்கை நாட்டில் இன்றுயர்ந் திருக்கும் மாண்புச்
செல்வியின் தந்தையாகத் திகழ்ந்த நாவலனைப் போற்றிப்
பவ்வியமாகப் பாடற், பனுவல்கள் தமிழில் யாக்க
எவ்விதம் நான் இங்குற்றேன் ? இதுவும் நாவலனல் அன்றே ?

25. ஆதலின் ஈழத் தெங்கள் அனைவர்க்கும் அனைத்துமான
தாதையை, தீழிழைச் சார்ந்த சகலமும் தழைக்க, நம்போல்
மாதரை, மண்ணைப், பொன்னை மதித்திடா தனைத்தும் விட்ட
மேதகை தனைக் - கும்பிட்டேன்; வேறெதைச் செய்ய வல்லேன் ?

26. வேறெதும் செய்ய வல்லார் மிகப் பலர் இருப்பீர் நாட்டில்
ஏறென நிமிர்ந்த வாழ்வால் எமக் கொளி காட்டியாகி
வீறினை ஊட்டும் நல்லை வித்தகன் புகழை ஓம்பக்
கோரினென் உம்மைக் கைகள் கூப்பியே ! செய்வீர் வாழ்வீர் !



''வட இலங்கையில் இந்துக்களுள் இந்து மகான்'' என்று 1876-ல் கொழும்பு சட்ட நிரூபண சபையில் நாவலரைப் பாராட்டிய சேர். முத்துக்குமாரசுவாமி.

—உபயம்: க. சதாசிவம்.

IV

நாவலர் களஞ்சியம்



1822, மார்கழி 18	சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 5-ம் திகதி புதன்கிழமை இரவு அவிட்ட நட்சத்திரத்தில் ஆறுமுக நாவலர் பிறந்தார்; தந்தையார்: ப. கந்தப்பிள்ளை; தாயார்: சிவகாமியார்.
1827	வித்தியாரம்பம்; நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர்; நல்லூர் வேலாயுத முதலியார்.
1834 ஆவணி	யாழ். வெஸ்லியன் மிசன் கல்லூரி (பின்பு யாழ். மத்திய கல்லூரி) யில் ஆங்கிலம் கற்கச் செல்லல்.
	இருபாலை நெ. சேஞ்திராய முதலியார், நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் தமிழ் கற்றல்.
1841	யாழ். வெஸ்லியன் மிசன் கல்லூரியில் தமிழ், ஆங்கில ஆசிரியர்; பேர்சிவலின் வேதாகமத் திருப்புதலுக்குத் (பைபிளை மொழிபெயர்த்தல்) தமிழ்ப் பண்டிதராக இருத்தல்.
1842	தந்தை மரணம்
1846 தை	சைவ சமயப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லல்.
1847, மார்கழி 31	பிலவங்க—மார்கழி, 18: வண்ணை வைத்தீசுவரன் கோயில் வசந்த மண்ட பத்திலே சைவப்பிரசங்கம் தொடங்குதல்.
1848	முதல் இந்திய பிரயாணம்; வேதாகம (பைபிள்) மொழிபெயர்ப்பை ஒப் புவித் துஅச்சிடுவிக்கப் பேர்சிவலுடன் செல்லல்.

1848 ஆவணி — கீலக—ஆவணி 5: வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்தல்.

1848 புரட்டாதி — பேர்சிவலிடம் பார்த்த தமிழ்ப் பண்டிதர் வேலையைத் துறத்தல்.

1849 ஆடி — சௌமிய—ஆடி; இரண்டாம் இந்திய பிரயாணம்; அச்சியந்திரம் வேண்டச் செல்லல்; வேதாரணியத்தில் மேளதாளத்துடன் வரவேற்பு.

நாவலர் பட்டம் திருவாவடுதுறை ஆதீனம் அளித்தல்.

சூடாமணி நிகண்டுரை, சௌந்தரியலகரியுரை, பதிப்பு

வித்தியானுபாலனயந்திரசாலை நிறுவுதல்.

1850 — 1, 2, 4-ம் பாலபாடங்கள் இயற்றியது

1851 சித்திரை — கொலை மறுத்தல்.

1851 ஐப்பசி — நன்னூல் விருத்தியுரை.

1851 — திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை, சிவாலய தரிசன விதி இயற்றியது.

1852 — பெரியபுராண வசனம்.

1853 — வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச சபை தாபிதம்.
சுப்பிரபோதம்

1854 — சைவதூஷண பரிகாரம்.

1854 ஐப்பசி — மூன்றுவது இந்திய பிரயாணம்; இல்லறத்தை மேற்கொள்ள விரும்பாது சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொள்ளும்படி செல்லல்.

1855 — வெஸ்லியன் மெதடிஸ்த ஆண்டறிக்கையில் சைவதூஷண பரிகாரத்துக்கு பாராட்டு.

1856 — வால்டன் பாதிரியுடன் கடிதங்கள் மூலம் வாதம்.

1857 மார்கழி — தாய் மரணம்.

1858 ஆனி — நான்காவது இந்திய பிரயாணம்; சென்னையில் வித்தியானுபாலன அச்சியந்திரசாலை தாபித்தல்; பொன்னுச்சாமித் தேவர் நட்பு.

1859 வைகாசி — திருவாசக மூலமும் திருக்கோவையார் மூலமும் பரிசோதித்து க. சதாசிவப் பிள்ளை பேரால் வெளியிடல்.

1860 வைகாசி — சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவும் பொருட்டு விடுத்த விக்கியாபனம்.

1860 — திருக்கோவையார் பழையவுரை.

1861 — திருக்குறள் பரிமேலழகர் உரை; தருக்கசங்கிரகம். (அன்னம்பட்டீயம்)

1862 பங்குனி — யாழ்ப்பாணம் வருதல்

1862 வைகாசி	சிதம்பரம் சைவ வித்தியசாலை பொருட்டு வண்ணை சைவ வித்தியாசாலையில் பிரசங்கம்.
1862 ஆடி	சிதம்பரம் சைவ வித்தியாசாலை பொருட்டு பருத்தித்துறை சித்தி விநாயகர் கோயில் பிரசங்கம்.
1864 தை	ஐந்தாவது இந்தியப் பிரயாணம்; தல யாத்திரை.
1864 ஐப்பசி	சிதம்பரம் சைவ வித்தியாசாலை தாபித்தல்.
1866	சேதுபுராணம், இலக்கண விளக்கச் சூருவளி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக்கொத்து, கந்தபுராணம் பதிப்பு.
1867	ஈ. ஜே. ரெபின்சன் பாதிரியார் பதிப்பித்த Hindu Pastors எனும் நூலில் நாவலருடைய சமயப் பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
1867	திருத்தொண்டை நாட்டுப்பதிபுண்ணிய பரிபாலன சபைத் தலைவர், சிறந்த சொற்பொழிவு.
1868	மேற்படி சபைத் தலைவர்; பிரசங்கங்கள்.
1868	கோயிற்புராணவுரை (தை), சைவசமயநெறியுரை (புரட்டாதி) தொல்-சேனுவரையம், பரிசோதனை.
1868	சிதம்பர விக்கியாபனம்.
1869 மாசி	வீராசாமி முதலியாரின் ''விஞ்ஞாபனப் பத்திரிகை'' - நாவலர் மீதும் சி வை தாமோதரம்பிள்ளை மீதும் கண்டனம்.
1869 மாசி	''நல்லறிவுச் சுடர் கொளுத்தல்'' முதலியாருக்கு நாவலரின் மறுப்பு.
1869	போலியருட்பா மறுப்பு.
1869	அருட்பா வழக்கு.
1870	சிதம்பர விக்கியாபனம்.
1870 மாசி	ஆறு வருட இந்தியா வாழ்க்கைக்குப் பின்பு யாழ்ப்பாணம் திரும்புதல் பெரிய வரவேற்பு ஊர்வலம்.
1872	வண்ணை சைவ ஆங்கில வித்தியாசாலை தாபித்தல்.
1872 ஐப்பசி	''யாழ்ப்பாணச் சமயநிலை''
1872—73	கோப்பாய், புலோலி, சைவப்பிரகாச, வித்தியாசாலை தாபித்தல்.
1875 ஆடி	''நல்லூர் கந்தசுவாமி கோயில்''. (முதலாம் பத்திரிகை)
1875 ஆவணி	''நல்லூர் கந்தசுவாமி கோயில்''. (இரண்டாம் பத்திரிகை)
1876 தை	''மித்தியாவாத நிரசனம்''.

1876 கார்த்திகை	யாழ்ப்பாணம் கரையூரில் பேதி நோய். நாவலர் மக்கள் சார்பில் வன்மை யான முறையீடு.
1877	யாழ்ப்பாணத்திற் பஞ்சம்; நாவலர் ஏசண்டு துவைனன் அவர்களைக் கண்டித்தல்.
1878 தை	தேசாதிபதி லோங்டனுக்கு அரசாங்க ஊழல்களைப் பற்றி விண்ணப்பம் அளித்தல்.
1878 வைகாசி	கீரிமலைச் சிவாலயப் பணி பற்றி விடுத்த வேண்டுகோள்.
1879 வைகாசி	இலங்கைச் சட்ட நிரூபண சபைத் தேர்தலில் பொன். இராமனுதன் அவர் களை ஆதரித்துப் பிரசங்கங்கள் செய்தல்.
1879 ஆடி	இறுதிப் பிரசங்கம்; சுந்தரமூர்த்திநாயனுருக்குக் குருபூசை.
1879, மார்கழி 2	(பிரமாதி, கார்த்திகை 18) சுகவீனமேற்படடல்.
1879, மார்கழி 5	(கார்த்திகை, 21-ம் நாள்) மக நட்சத்திரத்தில் இறையடி சேர்தல்.



நாவலரின் சிவபூசைக்குச் சம்பா அரிசியும் தேனும் கொடுக்கும்
நியமம் பூண்டவர். நாவலர் சாயலில் உள்ள உருவப்
படத்தை நாவலராகவே பாவித்துச் சிவபூசையில்
வைத்து வணங்கி வந்த பொன்னுவெளி
உடையார் சின்னத்தம்பி.

—உபயம்: க. சதாசிவன்.

ஆறுமுக நாவலரின் வரலாற்றுடன் தொடர்புடையோர்*

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் (- 1869)

வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர் 1844 இல் இறையடி நீழல் சேர்ந்த பின்பு திருவாவடுதுறை ஆதீனத்தின் பதினேந்தாம் பட்டத்தில் பண்டார சந்நிதியாக வீற்றிருந்தவர். ஆறுமுகனார் 1849 இல் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு எழுந்தரு ளியபோது அவர் திறமைமையப் போற்றி நாவ லர் பட்டம் அளித்தவர். இவருடைய ஆளுகை யின் போது 1858 க்குப் பின்பு திரிசிரபுரம் சி. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் ஆதீன வித்து வானுகினார்.

இராசகோபாலபிள்ளை, (கோமளபுரம்)

சென்னையிலுள்ள கோமளீசுவரன் பேட்டை யில் வாழ்ந்தவர். திருமயிலை மகாவித்துவான் சண் முகம்பிள்ளைக்குக் கம்பராமாயணம் பாடஞ் சொன்னவர். சென்னை, 'பிரெசிடென்சி' கல்லூரி யிலே தமிழ்ப்புலமை நடாத்தியவர். 1868 புரட் டாசியிலே சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தைச் சேனா வரையர் உரையுடன் பதிப்பித்த பின்பு இவர் 1868 கார்த்திகையிலே தம் பெயரால் ஒரு சேனா வரையப் பதிப்பு வெளியிட்டார். இப்பதிப்பு பிரச்சினைக்குரியது. நாலடியார், நளவெண்பா, திருவாய் மொழி முதலியவற்றிற்கு உரையெழுதி யவர். பாகவதம் பதிப்பித்தவர் என்பர். கூட லூர்க் குமரகுருசுவாமிகள் இயற்றி அச்சிற் பதிப் பித்த பாத்மோத்தர ரசாபாச திருப்பணத்தில் இவருடைய பாரதப் பதிப்பைக் கண்டித்து நாவ லரின் பாரதப் பதிப்பைப் புகழ்ந்திருப்பதை 'மித்தியாவாத நிரசனம்' சுட்டுகின்றது.

இராமசாமிப்பிள்ளை, (இராமநாதபுரம்)

இவர் பிறந்தவூர் இராமநாதபுரம்; பின்பு மது ரையில் வசித்தவர். திரிசிரபுரம் மகாவித்துவான் சி. மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணாக்கர். கம் பரந்தாதி, முல்லையந்தாதி, திருவிளையாடற் புரா ணம் முதற்காண்டம் என்பவற்றிற்கு உரைகண் டவர். மதுரை மான்மியங் கூறும் அட்டமிப் பிர தக்கினம், பேரூர்ப்புராணம் முதலியவைகளைப் பதிப்பித்தவர். பிற்காலத்தில் இராமநாதபுர சமஸ்தான வித்துவானுக விவங்கியவர். நாவலர் தமது ஐந்தாவதும் கடைசியானதுமான இந்தி யப் பிரயாணத்தை 1864 இல் மேற்கொண் டார். இப்பயணத்தின்போது திருவாவடுதுறை ஆதீனத்திற்குரிய திருப்பெருந் துறையிலுள்ள மடத்திலே தங்கியபொழுது நாவலரிடம் பிள்ளை யவர்கள் திருவிளையாடற் புராணத்திலுள்ள ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தார். இதுவே நாவ லரை இராமசாமிப்பிள்ளை கண்ட முதற் சந்திப் பாகும். நாவலர் பின்பு சிதம்பரத்திலே தங்கி யிருந்த காலை இராமசாமிப்பிள்ளை அவரை அங்கு சென்று அடிக்கடி சந்தித்தனர். நாவலர் சிதம் பரத்தில் வாசஞ் செய்யத் தொடங்கியது 1864 ஆம் ஆண்டிலாகும். நாவலரிடம் காஞ்சிப் புரா ணம் பார்த்தவர். தமது கம்பரந்தாதியுரையை நாவலரைக் கொண்டு திருத்தியவர். இவருக்கும் தொழுவூர் வேலாயுத முதலியாருக்கு மிடையே நடந்த 'அருட்பா' பற்றிய வாதத்தை 'போலி யருட்பா மறுப்பு' எனும் பிரசுரத்திலே காண லாம். 'மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம்' முதற் பாகத்திலேயே (1933) ''ஆறுமுகநாவலர் நூற் பதிப்புகளுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது'' எனும் தலைப்பின் கீழ் (பக்கம் 227-229) உ. வே. சாமிநாதையர் அவர்கள் 1864 இல் நாவலரை முதன் முதலாகச் சந்தித்த இராமசாமிப்பிள் ளையை 1860க்கு உரிய நிகழ்ச்சிகளோடு தொடர்பு படுத்தி எழுதியுள்ளார். சிவகாசி அருணாசலக் கவி ராயரின் ஆறுமுக நாவலர் சரித்திரத்தின் இரண் டாம் பதிப்புக்கு நல்லூர் த. கைலாசபிள்ளையவர் கள் மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை பெயரால் எழுதிய முகவுரையிலே இதனைத் தெளிவுபடுத்தி யுள்ளார்.

---

* நாவலர் வரலாற்றுடன் தொடர்புடைய வெளிநாட்டவரும் 'ஆசிரியர் மாணாக்கர் பரம்பரை' அட்டவணையில் இடம்பெறுத ஈழத்தவரும் இங்கு குறிக்கப்படுகின்றனர்.

இராமநாதன், பொன்னம்பலம் (1851 - 1930)

இலங்கை சட்டநிரூபண சபைக்கு 1879 இல் நடந்த தேர்தலில் பிறிட்டோவுக்கு எதிராகப் போட்டியிட்டவர். நாவலர் இராமநாதனை ஆதரித்து ஊர்கள்தோறும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தியவர். இலங்கை நேசன் பத்திரிகையிலே (28-5-1879) வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலே 1879 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22 ஆம் திகதி நடந்த பிரசாரக் கூட்டம் பற்றிய செய்தி இடம்பெறுகின்றது. கரேல் விசுவநாத பிள்ளை தலைமையில் நாவலரும் அவரையடுத்து திருவாங்கூர் நீதிபதி தா. பொன்னம்பலபிள்ளையும் பேசினர்கள். நாவலரின் எதிரிகள் பிறிட்டோவை ஆதரித்தனர். இராமநாதனே வெற்றியடைந்தார். பின்பு சட்டசபையிலே 11-2-1884 இல் நாவலரை 'Champion Reformer of the Hindus' என்று இராமநாதன் போற்றினர்.

இராமலிங்கபிள்ளை, கருங்குழி,இ.(1823-1874)

திருமருதூரிற் பிறந்தவர். சென்னை,வடலூர், கருங்குழி முதலிய இடங்களில் வசித்தவர். காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரின் மாணாக்கர். திருவருட்பிரகாச வள்ளலார் எனவும் இராமலிங்க சுவாமிகள் எனவும் அழைக்கப்பட்டவர். இவர் பாடல்களையும் வசனங்களையும் நான்கு 'திருமுறை' களாக வகுத்துத் தொழுவூர் வேலாயுத முதலியார் 1867 இல் வெளியிட்டார். 1869 இல் 'போலியருட்பா மறுப்பு' வெளிவந்தது. 1869 ஆனியில் 'பேரம்பலப் பிரசங்கம்' நடந்தது. இந்நிகழ்ச்சியின் பின்பு 'அருட்பா வழக்கு' தொடங்கியது. இவ்வழக்கு இதே ஆண்டு மார்கழியில் நிறுத்தப்பட்டது. நாவலர் 1870 மாசியில் ஈழம் திரும்பியபோது வீரஞகப் புகழ்மாலை சூட்டப்பட்டார். தொழுவூர் வேலாயுத முதலியார் 'ஐந்தாம் திருமுறையை' 1880 இல் வெளியிட்டார். 'ஆருவது திருமுறை' 1885 இல் வெளியிடப்பட்டது.

இராமநுச கவிராயர், (முகவை) இயற்றமிழாசிரியர்(- 1852)

இராமநாதபுரத்து முகவை என்னும் ஊரினர். சிவஞானமுனிவரின் மாணாக்கராம் சோமசுந்தரம்பிள்ளையிடம் தமிழ் பயின்றவர். களத்தூர் வேதகிரி முதலியார், அட்டாவதானம் வீராசாமி செட்டியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், திருத்தணிகை சரவணப்பெருமாளையர், துரு ஐயர் (Rev. W. H. Drew), போப்பையர் (Rev.G. U. Pope), இரேனியஸ் ஐயர் (Rev. Rhenius) முதலியோரின் ஆசிரியர். சென்னையில் அச்சியந்திரசாலை வைத்து நடத்தியவர். திருக்குறள் பரிமேலழகர் உரையுடன் இவருடைய தெளிபொருள் விளக்கத்துடன் துரு ஐயர் அவர்களுடைய ஆங்கில மொழிபெயர்ப்புடன் 1840 ஆம் 1852 ஆம் ஆண்டுகளில் இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டது. இவர் நன்னூலுக்கு விருத்தியுரை கண்டவர் 1845) இலக்கணச் சுருக்கம் (1848) செய்தவர். சூடாமணி நிகண்டின் பதினேராவது தொகுதியை (1848) வெளியிட்டவர். வேறு சில நூல்களுக்கு உரை எழுதியதோடமையாது சுயமாகவும் சில நூல்களை இயற்றியவர். 'நல்லறிவுச் சுடர் கொள்ளுதல்' எனும் பிரசுரத்தில் இடம் பெறுபவர். நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் இவரைத் தமதாசிரியர் என்று கூறியமையால் நாவலரவர்கள் இவருடைய கூற்றுகளை எடுத்து அவை வீராசாமி முதலியாரின் கூற்றுகளோடு மாறுபடுவதைச் சுட்டியுள்ளார்.

குமரகுருசுவாமிகள், (கடலூர்)

இவர் இயற்றி அச்சிற் பதிப்பித்த பாத்மோத்தர ரசாபாச தருப்பணத்திலே இராச கோபாலபிள்ளையின் பாரதப் பதிப்பினைக் கண்டித்து நாவலரின் பதிப்பினைப் புகழ்ந்திருப்பதை 'மித்தியாவாத நிரசனம்' குறிக்கின்றது.

கோபால கிருஷ்ண பாரதி

நாகைபட்டினத்திற்கு அடுத்த நரிமணம் என்னும் ஊரினர். நந்தனர், திருநீலகண்ட நாயனர் சரித்திரங்களைக் கீர்த்தனைகளாகப் பாடியவர். சிதம்பரத்திலே நடராசர் சந்நிதியிலே இறைவனைப் பாடியருகி நின்ற பாரதியாரின் பக்தியையும் சிறப்பையும் கண்ட நாவலர் தக்க சன்மானம் செய்தார் என்று த. கைலாசபிள்ளையவர்கள் கூறுவர்.

சதாசிவம்பிள்ளை, (மானிப்பாய்) அ. (1820 - 1896)

யாழ்ப்பாணத்து மானிப்பாய் என்னும் ஊரினர். ஆசிரியராகக் கடமை புரிந்தவர். 'உதயதாரகை'யின் ஆசிரியராகப் பல ஆண்டுகள் விளங்கியவர். ஜே. ஆர். ஆஜேல்டு எனப்படுபவரும் இவரே. போர்சிவலும் நாவலரும் பங்குபற்றச் சென்ற வேதாகம சங்கக் கூட்டத்திற்கு ஸ்போல்டிங் பாதிரியாருடன் உடுவில் அ. சந்திரசேகர பண்டிதருடனும் 1848 இல் சென்றவர் சதாசிவம்பிள்ளை. பாவலர் சரித்திர தீபகத்தின்

(1886) ஆசிரியர். உரிச் சொல் நிகண்டு (1889) பதிப்பித்தவர். வேறு பல நூல்களைக் கத்தியரூப மாகவும் பத்தியரூபமாகவும் எழுதி வெளியிட்டவர்.

சந்திரசேகர பண்டிதர் (உடுவில்), அ. (- 1879)

வேதாகம சங்கக் கூட்டத்திற்கு ஸ்போல்டிங் பாதிரியாருடனும் அ. சதாசிவம் பிள்ளையுடனும் 1848 இல் இந்தியா சென்றவர். நதானியேல் எனப்படுபவரும் இவரே. தமிழ் அகராதி செய்தவர். நைட் பாதிரியார் தமிழ் ஆங்கில அகராதி செய்ய முயன்றபோது உதவியவர். ஸ்போல்டிங் பாதிரியாரின் தமிழாசிரியர்.

சபாநடேச தீட்சதர்

நாவலருக்கு எதிராக வழக்குத் தொடுத்த தீட்சதருக்குத் தலைவர். இவருக்கு நீதிபதி ஐம்பது ரூபா அபராதம் விதித்தார் என்று 'விறிமன்' பத்திரிகை கூறியதாக 'உதயதாரகை' (3, மாசி, 1870) கூறுகின்றது.

ஸ்ரீ சரவண சுவாமிகள்

நாவலர் காலத்தவர். யாழ்ப்பாணத்தவர். திருவண்ணாமலை ஆதீனத்தர்களாய் சென்னையில் வசித்தவர். 'நல்லறிவுச் சுடர் கொளுத்தல்' எனும் பிரசுரத்தில் சிவசாத்திர பண்டிதர் எனவும் சபாப்பிரசங்க சிங்கம் எனவும் போற்றப்பட்டவர்.

சரவணப் பெருமாளையர் (திருத்தணிகை), (- 1842)

திருத்தணிகை கந்தப்பையரின் புத்திரர். விசாகப்பெருமாளையரின் சகோதரர். முகவை இராமானுச கவிராயரின் மாணாக்கர். தில்லையம்பூர் சந்திரசேகரக் கவிராயர், மழவை மகாலிங்கையரின் ஆசிரியர். குணங்குடி மஸ்தான் சாகிபு மீது நான்மணிமாலை, குளத்தூர்ப் புராணம், கோள தீபிகை, அணியியல் விளக்கம், இயற்றமிழ்ச் சுருக்கம் முதலியன செய்தவர். பழமலையந்தாதி (1832), திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி (1832), திருவிளையாடற்புராணம், தாயுமான சுவாமி பாடல் (1835) முதலியன பதிப்பித்தவர். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகருடன் சேர்ந்து திருவாசகத்தை (? 1837)பதிப்பித்தவர். வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, திருவெங்கைக் கோவை, நாலடியார், திருவள்ளுவமாலை முதலியனவற்றிற்கு உரை கண்டவர். இவர் நைடதத்திற்கும் பிரபுலிங்க லீலைக்கும் எழுதத் தொடங்கிய உரைகளை இவர் புத்திரர் கந்தசாமி ஐயர் முற்றுவித்தார். நாவலரால் 'குமாரநாயக ரலங்காரம்' என்னும் கடிதத்தில் மெய்ப்புலவர் என்று போற்றப்பட்டவர். திருக்குறள் பரிமேலழகர் உரையைத் தழுவி உரை (1838) எழுதியவர்.

ஸ்ரீ சுந்தரசிவாசாரிய சுவாமிகள்(காட்டாவூர்)

இவர் இயற்றி வெளியிட்டசிவாதிக்யரத்நாவளியிலே நாவலருடைய பாரதப் பதிப்பையும் ஏனைய நூல்களையும் உசாத்துணையாகக் கொள்ளும்படி கூறப்பட்டுள்ளதாக 'மித்தியா வாதநிரசனம்' உரைக்கின்றது.

சுப்பராயச்செட்டியார் (சோடசாவதானம்),வீ. (- 1894)

பாலக்கரை வீரராவகச் செட்டியாரின் புத்திரர். திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணாக்கர். நாவலரின் திருக்கோவையார் (1860) பதிப்பிற்கு சிறப்புப்பாயிரம் அளித்தவர். விரிஞ்சேகர் சதகம், எயினனூர் ஆதிபுரதலபுராணம் முதலியன செய்தவர். பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடற்புராணம், கம்பராமாயணம்,அயோத்தியா காண்டம், காஞ்சிபுராணம், புலியூர் வெண்பா முதலியனவற்றிற்கு உரை எழுதியவர். தொல்காப்பியம்,எழுத்ததிகாரம்,இளம்பூரணம்(1868), பதினேராந்திருமுறை, களவழி நாற்பது, பழமொழி நானூறு, நளவெண்பா, சிலப்பதிகாரம் (பகுதி), திருப்போரூர் சந்நிதிமுறை, மாயூரப் புராணம், நாகைக்காரோணப்புராணம், உரிச் சொல் நிகண்டு முதலியனவற்றைப் பதிப்பித்தவர்.

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் (மேலகரம்) (1888)

தென்காசியிலிருந்து குற்றாலம் செல்லும் வழியில் உள்ளது மேலகரம். தாண்டவராயத் தம்பிரானிடம் பல தமிழ் நூல்களைக் கற்றவர். சேற்றூர் கந்தசாமிக் கவிராயர் முதலியோரின் ஆசிரியர். ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகருக்குப் பின்பு 1869 இல் திருவாவடுதுறை ஆதீனத்துப்பதினேராவது பட்டத்தில் பண்டார சந்நிதிகளாக விளங்கினவர். திருசிரபுரம் சி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை 1858-க்குப் பின்பு ஆதீன வித்துவானாக நியமிக்கப்படக் காரணமாய் இருந்தவர். சிவஞானசித்தியாருக்கு உரை கண்ட அறுவருள்

ஒருவர். நாவலர் 1849-ல் அச்சியந்திரம் வாங்க இந்தியா சென்றபோது திருவாவடுதுறை ஆதீனத்தில் சின்னப்பட்டமாக இருந்தவர். திருவாவடுதுறைக்கு எழுந்தருளிய நாவலருக்கு 'நாவலர்' பட்டம் அளிக்கப்படுவதற்குக் காரணகர்த்தா இவர் எனலாம். சுப்பிரமணியதேசிகரின் விருப்பப்படி நாவலர் திருவாவடுதுறை சிவஞான சுவாமிகள் எழுதிய இலக்கண விளக்கச்சூறாவளி, தொல்காப்பியச்சூத்திர விருத்தி என்னும் இரண்டையும் திருவாவடுதுறை சுவாமிநாததேசிகர் எழுதிய இலக்கணக்கொத்தையும் பரிசோதித்து அச்சிட்டு வெளிப்படுத்தினர். கோப்பாய் சு. சபாபதி நாவலருக்கும் தர்க்ககுடாரதாலுதாரி வை. திருஞானசம்பந்தபிள்ளைக்கும் இடையிலுண்டான விரோதத்தால் தர்க்ககுடாரதாலுதாரி சபாபதிப்பிள்ளைக்கு மாறுக எழுதிய பத்திரிகையையும் அதனோடு சபாபதிப்பிள்ளை தமக்கு எழுதிய கடிதத்தையும் சுப்பிரமணிய தேசிகர் நாவலருக்கு அனுப்பினர். 'சமவாத சைவப்பிசாசாகிய ஞானப்பிரகாசர்' என்றதைத் தாமும் அறியவேண்டும் என்று எண்ணித்தான் தேசிகர் சபாபதிப்பிள்ளையின் கடிதத்தையும் தமக்கு அனுப்பினர் என்ற எண்ணமுண்டாகிய நாவலர் கோபமுற்று 'பிசாசு யார்' என்ற மிக நீண்ட கடிதம் ஒன்று எழுதியனுப்பினர். அக்கடிதத்தின் சுருக்கமான சாரமே நாவலர் பிரபந்தத் திரட்டில் ''அகோர சிவாசாரிய பத்ததி தூஷண கண்டனம் (1878),'' ''சபாபதிக்குருக்கள் வினு'' (1878) என்பனவற்றில் இருக்கின்றன. தேசிகர் ஒருவகையான சமாதானக் கடிதம் நாவலருக்கு எழுதினர்.

செல்லப்பாபிள்ளை, தா.

திருவனந்தபுரத்தில் நீதிபதியாக இருந்த ஈழத்தவர். துவைனன் துரையின் ஊழல்களை அம்பலமாக்கிய நாவலருடன் நின்று ஒத்துழைத்தவர். இங்கிலாந்தில் உள்ள 'கொலோனியல்' காரியதரிசிக்கு மகஜர் அனுப்பியவர்களுள் ஒருவர்.

சௌந்தரநாயகம்பிள்ளை, தி.

வட்டுக்கோட்டைக்கல்லூரியிலே ஆசிரியராக விருந்த காபிரியேல் திசிராவின் புத்திரர். திசிரா கொழும்பில் பிறந்தவர். தாயார் யாழ்ப்பாணத்தில் இருந்த ஒந்தாச்சியாரின் புத்திரி. பிள்ளையவர்கள் வட்டுக்கோட்டையில் கல்வி கற்றுப் பின்பு சென்னை சென்று படித்துப் பட்டம் பெற்றவர். நன்னூற்சுருக்கம் எழுதியவர். மெய்ஞ்ஞானகீர்த்தனை பாடியவர். நாவலரின் அருட்பா வழக்குகளில் நாவலர் கட்சி பேசியவர்.

தம்பையாப்பிள்ளை, (திரிகோணமலை) சு.

திரிகோணமலையைச் சேர்ந்தவர். 'திருக்கோணமலை குமாரநாயகரலங்காரம்' யாழ்ப்பாணம் இலங்கைநேச முத்திராக்ஷரசாலையில் 1877-ல் பதிப்பிக்கப்பட்டது. இவருடைய குமாரநாயகரலங்காரப் பதிப்பைப் பற்றி நாவலர் இலங்கை நேசனில் எழுதிய கடிதம் ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டில் இடம்பெறுகின்றது. இவர் குமாரநாயகர் தோத்திரமாலை (1886), சித்திரவெண்பா (1894) என்பனவற்றையும் இயற்றியுள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய சுவாமிகள்

காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரின் மாணாக்கர். சென்னையில் இருந்த திருவாவடுதுறை மடத்திலே இருந்தவர். திருவாவடுதுறை ஆதீனத்து வித்துவான். திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளையை ஆதீன வித்துவானுக்க மேலகரம் சுப்பிரமணிய தேசிகருக்கு யோசனை கூறியவர். திருக்கோவையாருக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியவர்.

தாண்டவராய முதலியார், (வில்லிவாக்கம்) (-1850)

சென்னைக்கடுத்த வில்லிவாக்கத்திற் பிறந்தவர். உழலூர் வேலப்ப தேசிகர், தொல்காப்பியம் வரதப்ப முதலியார், சீகாழி வடுகநாதத்தம்பிரான் ஆகியோரிடம் தமிழ் பயின்றவர். சென்னைக் கல்விச்சங்கத்தில் தலைமைத்தமிழாசிரியராக இருந்தவர். புரசை அட்டாவதானம் சபாபதி முதலியாரின் ஆசிரியர். திருத்தணிகைமாலை, திருப்போரூர்ப்பதிகம் பாடியவர். இலக்கணவிளக்கவிடை (1828), பஞ்சதந்திரக்கதை (1826), கதாமஞ்சரி (1826), எழுதியவர். வீரமாமுனிவரின் சதுரகராதியின் முதல் மூன்று பகுதிகளை 1824-ல் இராமச்சந்திரகவிராயருடன் சேர்ந்து பதிப்பித்தவர். சூடாமணி நிகண்டு (முதல் பத்துத்தொகுதிகள்), சேந்தன் திவாகரம் (முதல் எட்டுப் பகுதிகள்), இலக்கணபஞ்சகம் (நன்னூல் மூலம், அகப்பொருள் மூலம், புறப்பொருள் வெண்பாமாலை மூலம்) முதலியவற்றைப் பதிப்பித்தவர். ,குமாரநாயகரலங்காரம்' எனுங் கடிதத்திலே நாவலரால் மெய்ப்புலவர் என்று போற்றப்பட்டவர்.

தாமோதரம்பிள்ளை, (சிறுப்பிட்டி) வை. (1832-1901)

யாழ்ப்பாணத்துச் சிறுப்பிட்டி வைரவநாதரின் புத்திரர். சுன்னாகம் அ. முத்துக்குமாரகவிராசரின் மாணாக்கர். 'தினவர்த்தமானி' ஆசிரியர். ஆசிரியராகவும் நீதிபதியாகவும் இந்தியாவில் கடமை புரிந்தவர். சென்னைப்பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட முதல் வருடத்திலேயே (1857) பி. ஏ. பரீட்சை எடுத்தூச் சித்தியெய்திய முதலிருவருள் ஒருவர். நீதிநெறிவிளக்கம், வீரசோழியம் (1881), இறையனார் அகப்பொருள் (1883), தணிகைப்புராணம் (1883), தொல்காப்பியப் பொருளதிகாரம் (1885), கலித்தொகை (1887), சூளாமணி (1889), இலக்கணவிளக்கம் (1889) முதலியவற்றைப் பதிப்பித்தவர். நாவலரைக்கொண்டு தொல்காப்பியம் சேனாவரையத்தைப் பரிசோதித்து 1868-ம் ஆண்டு புரட்டாதி மாதம் வெளியிட்டார். இவர் தினவர்த்தமானியிற் சேனாவரையப் பதிப்புப் பற்றி வெளியிட்ட விளம்பரத்தில் இலக்கணப் பிழை கண்டுபிடித்து நரசிங்கபுரம் வீராசாமி செட்டியார் ''பிள்ளையை நிந்தித்தும் நாவலரைத் தூற்றியும் ''விஞ்ஞாபனப் பத்திரிகை'' என்று பெயரிட்டு 1869 மாசியில் ஒரு கண்டனத்தை வெளியிட்டார். இக்கண்டனத்தை மறந்து அதே மாதத்தில் வெளியிடப்பட்டதே''நல்லறிவுச்சுடர் கொளுத்தல்'' என்னும் கண்டனப் பிரசுரமாகும். தாமோதரம்பிள்ளை சைவ மகத்துவம், வசன சூளாமணி, கட்டளைக் கலித்துறை என்பனவற்றையும் எழுதினர்,

தியாகராயச் செட்டியார் சி. (பூவாளூர்) (-1888)

சிதம்பரச் செட்டியாரின் புத்திரர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணாக்கர். மீனாட்சிசுந்தரம்பிள்ளையுடன் சேர்ந்து வியாசைக் கோவை பாடியவர். கும்பகோணம் அரசினர் கல்லூரியிலே உ. வே. சாமிநாதையருக்கு முன்பு தமிழ்ப்பண்டிதராக இருந்தவர். திருக்கோவையார், தருக்க சங்கிரகம் என்னும் நாவலர் பதிப்புகளுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியவர்.

துவைனந்துரை

யாழ்ப்பாணத்தில் 1877-ல் பஞ்சமும் பேதியும் ஏற்பட்டபோது 'ஏசண்டு துரை'யாக இருந்தவர். துவைனந்துரையின் ஊழல்களை நாவலர் கண்டித்தார். 'சமயம் சமயம்' (1877), 'இது நல்ல சமயம்' (1877), 'வெகுசனத்துரோகம்' முதலியனதுவைனந்துரையை ஒட்டியெழுந்தவை. ஆயினும், நாவலர் சிவபதமடைந்தபோது துவைனந்துரை கச்சேரி ஊழியருக்கு லீவு கொடுத்தார் இறுதி மரியாதைகளிற் பங்கு பெறுவதற்காக.

நமசிவாயந்தம்பிரான் -1883)

திருநெல்வேலிப்பேட்டையைச் சேர்ந்தவர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணாக்கர். நாவலரிடம் சென்னையில் சித்தாந்த நூல்களுக்குப் பாடங் கேட்டவர். நாவலர் 1864-ம் ஆண்டு திருப்பெருந்துறையிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் தலயாத்திரையின்போது தங்கியிருந்தகாலை அவரிடம் ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தவர். 1869-ம் ஆண்டு திருவாவடுதுறையாதீனத்தில் சின்னப்பட்டத்தில் நமசிவாயதேசிகராக நியமிக்கப்பட்டவர். இவருடைய மாணாக்கரே 'யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்' பாடிய சிவகாசி இ. அருணாசலக்கவிராயர்.

பீற்றர் பேர்சிவல் பாதிரியார்

ஐரோப்பியர். வெஸ்லியன் மிசனைச் சேர்ந்தவர். 1833-ம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் வந்தவர். இவருடைய வெஸ்லியன் மிசன் பாடசாலையில் நாவலர் 1834-ம் ஆண்டு முதல் ஆங்கிலம் கற்றவர்; பின்பு, நாவலர் இப்பாடசாலையில் ஆசிரியராகவும் பேர்சிவலின் தமிழ்ப் பண்டிதராகவும் கடமை புரிந்தவர். பேர்சிவல் யாழ்ப்பாணத்திற் பதினேழு வருடங்கள் சேவை செய்த பின்பு சென்னை சென்றார். அங்கு கல்லூரி ஆசிரியராகப் பல ஆண்டுகள் தொழில் புரிந்தவர். சென்னையிலே 'தினவர்த்தமானி' எனும் வாரப் பத்திரிகையை 1855-ம் ஆண்டு முதல் நடாத்தியவர். இவருக்குப் பின்பு சி. வை. தாமோதரம் பிள்ளையும் விசுவநாதபிள்ளையும் இதன் ஆசிரியராக விளங்கினர். பேர்சிவல் தமிழிலுள்ள பதமொழிகளைத் தொகுத்து ஆங்கில மொழி பெயர்ப்புடன் 1842-ம் ஆண்டு வெளியிட்டவர். தமிழ் ஆங்கில அகராதி, ஆங்கில தமிழ் அகராதி முதலியன செய்தவர். இருபாலை சேனாதிராய முதலியாரிடம் தமிழ் இலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் கற்ற கோப்பாய் அ. அம்பலவாண பண்டிதரிடம் தமிழ் பயின்றவர்.

பொன்னம்பலபிள்ளை, தா.

தமிழ்நாட்டிற் சேவை புரிந்த யாழ்ப்பாணத் தவர். நீதிபதி தா. செல்லப்பாபிள்ளையின் சகோ தரர். வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை யில் பொ. இராமநாதன் அவர்களை ஆதரித்து 1879-ம் ஆண்டு வைகாசி மாதம் 22-ம் திகதி நடந்த பிரசாரக் கூட்டத்தில் நாவலரையடுத்து அவர் கூற்றுகளை ஆதரித்துப் பேசியவர்.' மலபார் குவாட்டர்லி', 'தமிலியன் அன்ரிகுவேரி' எனும் ஆங்கில சஞ்சிகைகளிலே பல ஆராய்ச்சிக் கட்டு ரைகள் வரைந்தவர். காஞ்சிபுரத்தில் 1912-ம் ஆண்டு நடந்த சைவசித்தாந்த சமாஜ விழா விற்குத் தலைமை தாங்கியவர்.

பொன்னுச்சாமித்தேவர்

முத்துராமலிங்க சேதுபதியின் சகோதரர். மதுரைத்தமிழ்ச்சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவரின் தந்தை. மாம்பழக்கவிச்சிங்க நாவல ருக்கு 'கவிச்சிங்கம்' என்ற பட்டம் அளித்தவர். தில்லையம்பூர் சந்திரசேகரக் கவிராயர் தனிப் பாடல்களைத் தொகுத்து வெளியிட உதவியவர் காலயுத்தி வருடம் ஆனி மாதம் நான்காவது முறை இந்தியா சென்ற நாவலரைப் பொன்னு சாமித்தேவர் சென்னையில் சந்தித்துச் சில நூல் களைத் தம் செலவில் அச்சிடவேண்டினர். தேவ ரின் வேண்டுகோளின்படி திருக்கோவையாருரை, திருக்குறள் பாமேலழகர் உரை, தருக்கசங்கிரகம், அன்னம்பட்டீயம் ஆகியனவற்றை நாவலர் வெளி யிட்டார். நாவலருக்கும் தேவருக்கும் இடையே இருந்த தொடர்பு பின்பு வேறுபட்டது. 1864-ம் ஆண்டு தமது ஐந்தாவது பிரயாணத்தின்போது நாவலர் இராமநாதபுரத்தில் திருவாவடுதுறை மடத்தில் விசுவலிங்கத் தம்பிரானுடைய வேண்டு கோளின்படி தங்கியவர்,தேவரைச் சந்திக்கவிரும் பவில்லை. ஆயினும் தேவர் பலமுறை வேண்டிய பின்பு அவர் சமஸ்தானத்துக்கு எழுந்தருளினார். அட்சய வருடம் (1866) தேவரின் வேண்டு கோளின்படி நாவலர் சேதுபுராணத்தைப் பரி சோதித்து அச்சிடுவித்தார்.

மகாலிங்கையர் (மழவை)

மதுரைக்குக் கிழக்கிலுள்ள மழவராய னேந்தல் என்னும் ஊரிற் பிறந்தவர். வீரசைவ மரபினர். திருத்தணிகை விசாகப்பெருமாளையர், திருத்தணிகை சரவணப்பெருமாளையர் என்பவர் களிடம் பயின்றவர். 1847-ம் ஆண்டு தொல் காப்பியர் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினிய ருரையுடன் பதிப்பித்தவர். அருணாசலபுராணத் திற்கு உரை கண்டவர். இலக்கணச் சுருக்கம் எழுதிப் பதிப்பித்தவர் (1879). ஆறுமுகநாவலர் திருத்திய வேதாகம (பைபிள்) மொழிபெயர்ப் பினை 1848-ல் பார்வையிட்டுப் பதிப்பிக்கச் சிபார்சு செய்தவர்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை, (திரிசிரபுரம்) மகாவித்துவான் சி. (1815-1876)

திரிசிரபுரம் வேலாயுத முதலியார், காஞ் சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், திருவம்பலத்தின்னமுதம்பிள்ளை, எழும்பூர் திரு வேங்கடாசல முதலியார் முதலியோரிடம் தமிழ் பயின்றவர். 1858-க்குப் பின் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கியவர். நாவலருடைய திருக்கோவையாருரை, திருக்குறளுரை, தருக்க சங்கிரகவுரை ஆகிய பதிப்புகளுக்குச் சிறப்புப் பாயிரம் எழுதினவர். நாவலர் 1864-ம் ஆண்டு தல யாத்திரையின் போது கும்பகோணத்திலே தங்கியிருந்தகாலை மேலகரம் சுப்பிரமணிய தேசி கரின் கட்டளைப்படி, அவரைத் திருவாவடுதுறை ஆதீன மடத்திற்கு அழைத்துச் சென்றவர். இராமநாதபுரம் இராமசாமிப்பிள்ளை, சோட சாவதானம் வீ.சுப்பராயச்செட்டியார், பூவாளூர் சி. தியாகராயச்செட்டியார், நமசிவாயத்தம்பி ரான், வன்றொண்டச்செட்டியார், உ. வே. சாமி நாதையர் முதலியோரின் ஆசிரியர். தலபுரா ணங்களையும் தல சம்பந்தமான பிரபந்தங்க ளையும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அதிக மாய் இயற்றியவர்.

முத்துக்குமாரசுவாமி, சேர்.

கலாநிதி ஆனந்த குமாரசாமியின் தந்தை. சட்டநிரூபணசபையில் இருந்தவர். நாவலரை நன்கு மதித்தவர். 1876-ம் ஆண்டு சட்டநிரூபண சபையிற் பேசும்போது நாவலரை 'Hindu of Hindus எனப் போற்றியவர்.

முருகையப்பிள்ளை (திரிசிரபுரம்) முத்துச்சாமிப்பிள்ளை

நாவலருடைய திருக்கோவையாருரைப் பதிப்பிற்குச் சிறப்புப்பாயிரம் எழுதியவர்.

வன்றொண்டச்செட்டியார் (தேவகோட்டை)

தேவகோட்டையைச் சேர்ந்தவர். நாராயண செட்டியார் என்ற இயற்பெயர் உடையவர்.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணாக்கர். புறக்கண் அற்றவராக விளங்கியபோதும் அகக்கண் உற்றவராகத் திகழ்ந்தவர். நாவலர் சென்னையில் இருந்தபோதும் பின் சிதம்பரத்திலே தங்கியிருந்த காலத்தும் அவரிடம் சென்று தமிழ் நூல்களைக் கற்றவர். திருப்பெருந்துறையிலுள்ள திருவாவடுதுறை மடத்திலே நாவலர் தங்கியிருந்தபோது நன்னூல் விருத்தியுரையை அவரிடம் கேட்டுத்தெளிந்தவர். இவர் ஈழம் வந்து யாழ்ப்பாணத்திலே நாவலரிடமும் பின்னர் வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையிடமும் ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தவர்.

வால்ரன், ஜோன்

சைவதூஷணபரிகாரம் எழுதினவர் யார் என்பதைத் தமக்கு அறிவிக்கும்படி நாவலருக்கு 1856-ம் ஆண்டு கடிதம் எழுதியவர். நாவலர் தாமே அதனை எழுதியவர் என்று பதில் அளித்தார். இதனைத் தொடர்ந்து இருவருக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடந்தது. கைலாசபிள்ளையவர்கள் எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரத்திலே இருவரும் பரிமாறிக்கொண்ட கடிதங்களைக் காணலாம்.

விசாகப்பெருமாளையர் (திருத்தணிகை)

திருத்தணிகை கந்தப்பையரின் புத்திரர். சரவணப் பெருமாளையரின் சகோதரர்.முகவை இராமாநுச கவிராயரின் மாணாக்கர். புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், தில்லையம்பூர் சந்திரசேகர கவிராயர், மழவை மகாலிங்கையர் முதலியோரின் ஆசிரியர். நன்னூல் காண்டிகையுரை (1875), இலக்கணச்சுருக்க விளக்கம் (1828), பாலதோத இலக்கணம் (1852), திருக்கோவையாருரை (1897) செய்தவர். சென்னைக் 'கலிசு' ஒன்றில் இவருக்கும் நாவலருக்கும் 'செல்லிடத்துக்காப்பான்' என்னுங் குறளைப் பற்றி வாதம் நடந்ததைக் கைலாசபிள்ளையவர்கள் தாம் சிவகாசி இ. அருணாசலக்கவிராயரின் ஆறுமுக நாவலர் சரித்திரத்தின் இரண்டாம் பதிப்பிற்கு எழுதிய முகவுரையிற் குறிப்பிட்டுள்ளார்கள்.

விசுவநாதபிள்ளை (சுதுமலை) கதிரேல்.

வட்டுக்கோட்டையிலிருந்த கிறித்தவ கல்லூரியிலே பயின்றவர். அக்கல்லூரியிலே ஆசிரியராகவும் சில ஆண்டுகள் கடமை புரிந்தவர். 'உதயதாரகை'யின் ஆசிரியராகவும் திகழ்ந்தவர். நாவலருடைய 'சைவதூஷணபரிகாரம்' என்னும் நூலுக்கு எதிராகச் 'சுப்பிரதீபம்' எழுதியவர். சென்னைப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட முதல் வருடத்திலே (1857) பி. ஏ. சோதனை எடுத்து சித்தியெய்திய முதலிருவருள் ஒருவர். பின்னர் சைவரானவர். வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலே 1879-ம் ஆண்டு வைகாசி மாதம் 22-ம் திகதி பொ. இராமநாதன் அவர்களை ஆதரித்து நடந்த கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர். இவர் தலைமையில் நாவலர் இராமநாதனை ஆதரித்துப் பேசினர்.

விசுவலிங்கத்தம்பிரான்

நாவலர் 1864-ம் ஆண்டு தமது ஐந்தாவது பிரயாணத்தின்போது இராமநாதபுரத்திலே இவருடைய வேண்டுகோளின்படி திருவாவடுதுறை ஆதீனத்திற்குரிய மடத்திலே தங்கினர். இங்கு கட்டளைத்தம்பிரானாக இருந்த விசுவலிங்கத்தம்பிரான் நாவலரிடம் தமது ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தார்.

வீராசாமி முதலியார் (நரசிங்கபுரம்)

சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களின் சேனாவரையப் பதிப்புப் பற்றித் தினவர்த்தமானியில் வெளியிட்ட விளம்பரத்தில் இலக்கணப் பிழை கண்டுபிடித்து அவரை நிந்தித்தும் நாவலரைத் தூற்றியும் 'விஞ்ஞாபனப் பத்திரிகை' என்று பெயரிட்ட கண்டனத்தை 1869-ம் ஆண்டு மாசியில் வெளியிட்டார். அதற்குப் பதில் அதே மாசத்தில் வெளிவந்தது, 'நல்லறிவுச் சுடர்கொளுத்தல்' என்ற பெயர் தாங்கி. 'போலியருட்பா மறுப்பு' 1869 இல் வெளிவந்தது. இதனை மறுத்துப் பன்னிரண்டு கண்டன நூல்கள் 'அருட்பா' கட்சியினரால் வெளியிடப்பட்டன. வீராசாமி முதலியார் 'தீவாந்தர சைவ விநோதம்' என்ற கண்டன நூலைச் செய்யுளாய் இயற்றினர். நாவலரையும் ஈழத்தையும் குறைவுபடுத்தும் இந்நூலிலிருந்து ஏழு பாடல்களை எடுத்துக்காட்டியுள்ளார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. நாவலர் என்ற பெயர் தாங்கும் அவருடைய நூல் காண்க.

வேதகிரி முதலியார் (களத்தூர்), சு. (1795-1852)

தொண்டை நாட்டுக் களத்தூரினர். முகவை இராமானுசகவிராயரின் மாணாக்கர். சென்னையிலும் மதுரையிலும் புதுச்சேரியிலும் தமிழ்த்


தொண்டாற்றியவர். மநுநீதிசதகம், மநுவியாக்கியான சதகம், நீதி சிந்தாமணி, சன்மார்க்க சாரம் என்னும் செய்யுள் நூல்களை இயற்றியவர். மானிப்பாய் அச்சியந்திரசாலையில் 1842-ல் பதிப்பிக்கப்பட்ட தமிழ் அகராதியில் உள்ள அனுபந்தத்திற்கு ஆக்கியோர். இதே அச்சியந்திரசாலையில் 1843-ல் பதிப்பிக்கப்பட்ட சூடாமணி நிகண்டின் பதினேராவது தொகுதிக்குப் பல செய்யுள்களை இயற்றிச் சேர்த்தவர். திருக்குறளைப் பரிமேலழகர் உரையையும் பிறநூல்களையும் துணை கொண்டு தாம் எழுதிய உரையுடனும் திருவள்ளுவமாலைக்குச் சரவணப்பெருமாளையர் எழுதிய உரையையும் சேர்த்து 1849-ல் பதிப்பித்தவர். யாப்பெருங்கலக்காரிகையைக் குணசாகர உரையுடன் பதிப்பித்தவர் (1851). நாலடியாரை உரையுடன் வெளியிட்டவர் (1855). நைடதம் என்னும் ஔடதத்திற்கு உரைகண்டவர். இலக்கியக்களஞ்சியம், இலக்கணக்களஞ்சியம் தொகுத்தவர். நைடதப் பாட்டொன்றினையிட்டுக் களத்தூர் வேதகிரி முதலியாருக்கும் நல்லூர் சரவணமுத்துப் புலவருக்குமிடையே 'உதயதாரகை'யில் 1841-1843 ஆண்டுகளில் ஏற்பட்ட தருக்கத்தில் நாவலரும் பங்குகொண்டார்.

வேலாயுதமுதலியார் (தொழுவூர்) (1832-1889)

தொண்டை நாட்டுத் தொழுவூரினர் பிற்காலத்தில் சென்னையில் வசித்தவர். இராமலிங்க சுவாமிகளின் சீடராக இருந்தவர். அவர் மறைந்த பின்பு சென்னை இராசதானிக் கல்லூரியில் தமிழ்ச்சிரியராக இருந்தவர். 'போலியருட்பா மறுப்பு' என்னும் கண்டனத்திற்கு எதிராக 'போலியருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க்காரணிய நாச மஹாபரசு' என்னும் கண்டனத்தை எழுதியவர். 'திருவருட்பா' வெளியிட்டவர். சியமாக வசனத்திலும் செய்யுளிலும் பல நூல்களை இயற்றியவர்.

வேலுப்பிள்ளை

நாவலர் காலத்தவர். யாழ்ப்பாணத்தவர். சென்னை 'நார்மல் ஸ்கூலில்' தலைமைத்தமிழ் வித்தியா போதகராய் இருந்தவர். 'நல்லறிவுச்சுடர் கொளுத்தல்' என்னும் பிரசுரத்தில் இடம் பெறுபவர்.



நாவலரைக் கொண்டு பைபிளைத் தமிழில் மொழிபெயர்ப்பித்த வரும், நாவலரையே தமது தமிழ் ஆசானாகக் கொண்ட வருமான பார்சிவல் பாதிரியார்.
(Rev. Peter Percival)

—உபயம்: கு. சதாசிவன்.

நாவலர் காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள்

(நாவலர் காலத்து இயல்புகளை அறிவதற்கு ஏதுவாயிருக்கக்கூடிய பெரியோர் சிலரை மட்டும் இங்கு குறிப்பிட்டுள்ளோம்)

1. அகிலேசபிள்ளை, திருக்கோணமலை, வே. (1853 - 1910)

திருக்கோணமலை வேலுப்பிள்ளையவர்களின் புத்திரர். குமாரவேலுப்பிள்ளை, தையல்பாகம் பிள்ளை ஆகியோரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றவர். ஆசிரியராகக் கடமை புரிந்தவர். திருக்கரசைப்புராணம், வெருகலம்பதி சித்திர வேலாயுத சுவாமி பேரில் காதல், கோணேசர் கல்வெட்டு முதலிய நூல்களைப் பதிப்பித்தவர். திருக்கோணநாயகர் பதிகம், நெஞ்சறி மாலை முதலிய நூல்களை இயற்றியவர்.

2. அச்சுதானந்த சுவாமி, போளூர் (1850 - 1902)

இந்தியாவிலுள்ள வட ஆற்காடு என்னும் மாவட்டத்திலுள்ள போளூர் எனும் ஊரிற் பிறந்தவர். அப்பாய் நாயுடு எனவும் அச்சுததாசர் எனவும் அழைக்கப்பட்டவர். சூலை சோமசுந்தரநாயகரின் ஆசிரியர். மாயாவாதியாக விளங்கிய இவர் பின்பு சைவ சித்தாதியாகத் திகழ்ந்தார். நிசாநந்தர் பதிகம், சக்குபாய் சரித்திரம், சன்மார்க்க தர்ப்பணம், அத்வைத கீர்த்தனை நந்தலகரி முதலியனவற்றை இயற்றியவர்.

3. அண்ணாமலை ரெட்டியார், சென்னிகுளம் (1861 - 1890)

இந்தியாவிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளது சென்னிகுளம். சேற்றூர் சமீன்தார், ஊற்றுமலை சமீன்தார், ராஜவல்லிபுரம் முத்துசாமிபிள்ளை முதலியவர்களால் ஆதரிக்கப்பட்டவர் காவடிச் சிந்து பாடிப் புகழ்பெற்றவர்.

4. அநகாரிக தர்மபாலா (1864 - 1933)

பௌத்த மத கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். சுவாமி விவேகானந்தா புகழீட்டிய சிகாகோ சர்வமத மாநாட்டிலே பங்குபற்றிய பெருமையுடையர். நாவலர் வியோகமடைந்த ஆண்டு இவர் பதினைந்து வயது இளைஞராயிருந்தார்.

5. அநந்த பாரதி ஐயங்கார், உமையம்மாள்புரம் (1786 - 1846)

இந்தியாவிலுள்ள தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த உமையம்மாள் புரத்திலே பிறந்தவர். உத்தர ராமாயணக் கீர்த்தனை, திருவிடை மருதூர் நொண்டி நாடகம், மருதூர் வெண்பா முதலிய நூல்களை இயற்றியவர்.

6. அப்துல் றகுமான், நாவலப்பிட்டி, கு. (1846 - 1920)

நாவலப்பிட்டி குப்பத்தம்பியின் புதல்வர். அரசாங்கத்திற் பணிபுரிந்தவர். சரந்தீவுமாலை, ஞான அகீதாக் கும்மி, நாச்சியார் மாலை முதலிய நூல்களை இயற்றியவர்.

7. அப்புக்குட்டி ஐயர், நல்லூர், சி. (1787 - 1863)

நல்லூர் சிவாகன ஐயரின் புதல்வர். சூதுபுராணம், நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ் முதலியனவற்றை இயற்றியவர்.

8. அமிர்தம்பிள்ளை, ஏ. கே. (1845 - 1899)

முத்துவீரியம் இயற்றிய உறையூர் முத்துவீரிய உபாத்தியாயரின் மாணாக்கர். சேலம், திருச்சி முதலிய இடங்களிலே தமிழாசிரியராகக் கடமை புரிந்தவர். 'தமிழ்ச் செல்வம்' என்னும் பத்திரிகையை நடத்தியவர். தமிழ்விடுதூது பாடியவர். உறையூரிற் பிறந்தவர்.

9. **அரங்கநாத முதலியார், பூண்டி (1837 - 1893)**

கணிதப் பேராசிரியராகவும் அரசாங்க மொழிபெயர்ப்பாளராகவும் சென்னை நகர ஷெரிபாகவும் கடமை புரிந்தவர். கச்சிக்கலம்பகம் பாடியவர். தொண்டை நாட்டில் திருவள்ளூரை யடுத்த பூண்டியிற் பிறந்தவர்.

10. **அருணாசலக் கவிராயர், முகவூர், (1852 - 1939)**

பாண்டிநாட்டு முகவூரிலே பிறந்தவர். சேற்றூர் சமஸ்தானப் புலவராக விளங்கிய ராம சாமிக் கவிராயரின் புத்திரர். மு. ரா. கந்தசாமிக் கவிராயர், மு. ரா. சுப்பிரமணிய கவிராயர் ஆகியோரின் சகோதரர். திருவாவடுதுறை ஆதீனத்து நமசிவாய தேசிகரிடம் பயின்றவர். சிவகாசி புராணம், சிவகாசி வெண்பா வந்தாதி, யாழ்ப்பணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம் முதலியனவற்றைப் பாடியவர். சில புராணங்களை வசனமாகவும் எழுதியவர்.

11. **அருணாசலம், பொன். சேர். (1853 - 1924)**

மானிப்பாயைச் சேர்ந்த முதலியார் பொன்னம்பலத்தின் புத்திரர். சேர். பொன். இராம நாதனின் சகோதரர். அரசாங்கத்தில் உயர் பதவிகள் வகித்தவர். தமிழபிமானியாக விளங்கிய தோடு ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்தவர்.

12. **அழகிய சொக்கநாதபிள்ளை, தச்சநல்லூர்**

திருநெல்வேலி மாவட்டத்து தச்சநல்லூரிலே பிறந்தவர். தாது வருடப் பஞ்சத்தைக் காந்தி மதியம்மை கலித்துறை யந்தாதியிலே பாடியவர்.

13. **இராமலிங்கபிள்ளை, சுதுமலை, வ. (1885)**

சுதுமலை வயிரமுத்து உடையாரின் புதல்வர்; சங்கரையந்தாதி, மாணிக்கவாசகர் விலாசம் நளச்சக்கரவர்த்தி விலாசம் என்பனவற்றைப் பாடியவர்.

14. **இரேனியஸ் பாதிரியார், (1790 - 1838)**

ஜேர்மனி என்னும் தேசத்தவர். சர்ச்சு மிசன் போதகராய் *1814*-ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தவர். ஞானபோசன விளக்கம் *(1825)*, வேதப்பொருள் *(1832)*, பூமிசாஸ்திரம் *(1832)*, இலக்கண நூற் சுருக்கம் *(1832)*, மோட்ச மார்க்கம் *(1834)*, வேதவுதாரணத்திரட்டு *(1825)*, வேத சாஸ்திரச் சுருக்கம் *(1838)*, A Grammar of the Tamil Language *(1836)*, முதலிய நூல்களை எழுதியவர். பெப்ரேஷியஸ் பாதிரியாரின் புதிய ஏற்பாட்டைப் பதிப்பித்தவர். துண்டுப் பிரசுரங்கள் பலவற்றை எழுதி வெளியிட்டவர்.

15. **உவின்ஸ்லோ பாதிரியார்**

ஐரோப்பியர். யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் சமயப்பணி புரிந்தவர். வேதநாயக சாஸ்திரியாரோடு சேர்ந்து குருட்டுவழி என்னும் நூலை *1838*-இல் எழுதியவர். தமிழ் ஆங்கில அகராதி எழுதியவர்.

16. **கணேச பண்டிதர்**

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருவண்ணாமலை ஆதீன வித்துவானாகத் திகழ்ந்தவர். இளசைப்புராணம் பாடியவர்.

17. **கதிரைவேற்பிள்ளை, உடுப்பிட்டி, கு. (1829 - 1904)**

குமாரசுவாமி முதலியாரின் புத்திரர். நீதிபதியாகக் கடமை புரிந்தவர். தமிழ் அகராதி செய்தவர். தருக்க பரிபாடை வெளியிட்டவர்.

18. **கந்தசாமி முதலியார், கருவூர், உ. (1838 - 1890)**

கொங்கு நாட்டு கருவூர் இவர் பிறந்தவூர். *1866*-ல் 'சைவப் பிரசங்கசாலை' தோற்றுவித்து சைவசமயப் பிரசாரம் செய்தவர். திருப்பேரூர் முருகன் கிள்ளைவிடுதூது பாடியவர். இந்நூலிலமைந்த கிறித்தவ கண்டனத்தை மடுத்துக் கிறித்தவர் பிள்ளை விடுதூது பாடினர். பிள்ளைவிடுதூதுக்கெதிராக பிள்ளைவிடுதூது ஆபாசவிளக்கம் முதலியன வெளிவந்தன.

19. **கனகசபைப்பிள்ளை, வி. (1855 - 1906)**

மல்லாகம் விசுவநாதபிள்ளையவர்களின் புத்திரர். சென்னையில் அஞ்சற்றுறையிலே பெரும்பதவி வகித்தவர். 1904-ம் ஆண்டு, இவர் முன்பு ஆங்கிலத்தில் கட்டுரைகளாக எழுதியவை நூலுருவம் பெற்று 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்' என்ற பெயருடன் ஆங்கிலத்தில் வெளிவந்தது. இந்நூல் ஆங்கிலம் கற்ற தமிழரிடையே விழிப்பினை ஏற்படுத்தியது.

20. **கனகசபைப் புவலர், அளவெட்டி, வே. (1873)**

அளவெட்டி வேலுப்பிள்ளையவர்களின் புத்திரர். கிறித்தவர். திருவாக்குப் புராணம், அழகர் சாமி மடல் பாடியவர்.

21. **காசிச் செட்டி, சைமன், (1807 - 1861)**

கல்பிட்டி என்னுமூரினர். மொழிபெயர்ப்பு முதலியாராகவும் மாவட்ட முதலியாராகவும் மாவட்ட நீதிபதியாகவும் வெவ்வேறு காலங்களிற் கடமை புரிந்தவர். தமிழாராய்சியில் ஈடுபட்டவர் 'தமிழ் புளூராக்' என்னும் தமிழ்ப்புலவர் சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதி 1859-ம் ஆண்டு வெளியிட்டவர்.

22. **காசி விசுவநாத முதலியார், சைதாபுரம்**

சென்னையில் இருந்தவர். டம்பாச்சாரி விலாசம், தாசில்தார் நாடகம், கூலிக்கு மாரடிக்கும் கூத்தாடிச்சிகள் நடிப்பு, பிரம்ஹ சமாஜ நாடகம் முதலியனவற்றை எழுதியவர்.

23. **காந்தி, மோ. க. (1869 - 1948)**

மகாத்மா காந்தி பிறந்து பத்து வருடங்களிலே நாவலரவர்கள் வியோக மடைந்தார்.

24. **கால்டுவெல் பாதிரியார், (1814 - 1891)**

அயர்லந்து தேசத்தவர். 1848-ம் ஆண்டு தமிழகம் வந்தவர். 'திராவிட மொழிகளின் ஒப்பியலிலக்கணம்' என்னும் சிறந்த நூலை எழுதி 1856 ம் ஆண்டு வெளியிட்டவர்.

25. **கிருஷ்ணபிள்ளை, எச். ஏ. (1827 - 1900)**

பாளையங்கோட்டைக்கு அடுத்த இரட்டியாபட்டியிலே பிறந்தவர் இரட்சணிய யாத்திரிகம் பாடியவர்.

26. **கிறீன், டாக்டர் எஸ். எப். (1822 -)**

அமெரிக்கர். 1847-ம் ஆண்டு ஈழம் வந்தவர். அறிவியல் துறையிலே, தமிழ்மொழியில் நூல் களைத் தாமாகவே மொழி பெயர்த்தும் தமது மாணவரைக் கொண்டு மொழி பெயர்த்தும் பதிப் பித்து வெளியிட்டவர்.

27. **குணங்குடி மஸ்தான் சாகிபு (1788 - 1835)**

இராமநாத புரத்தையடுத்த குணங்குடியில் பிறந்தவர் சுல்தான் அப்துல் காதிறு. துறவியாகிய பின்பு குணங்குடி மஸ்தான் சாகிபு என அழைக்கப்பட்டார். இவருடைய பாடல்கள் தொடுத்து வெளியிடப்பட்டுள்ன.

28. **குமாரசுவாமி முதலியார், வல்லுவெட்டி, க. (1791 - 1874)**

கு. கதிரவேற்பிள்ளையின் தந்தை. அருளம்பலக்கோவை, நல்லைக்கலித்துறை, இந்திரகுமார நாடகம் முதலியன செய்தவர்.

29. **சந்திரசேகர கவிராயர், தில்லையம்பூர்**

சோழ நாட்டிலேயுள்ள தில்லையம்பூரில் பிறந்தவர். தனிப்பாடற்றிரட்டு என்னும் தொகை நூலைத் தொகுத்து பொன்னுசாமி தேவரின் உதவியுடன் பதிப்பித்தவர்.

30. சபாபதி முதலியார், காஞ்சிபுரம் மகாவித்துவான்

காஞ்சிபுரத்திலே பச்சையப்ப முதலியாரது பள்ளிக்கூடத்திலே தமிழ்த் தலைமை உபாத்தியாய ராய் இருந்தவர். திருமுறையை முதன் முதல் அச்சிடுவித்தவர் சைவசமய விளக்க விஞ விடை எழுதியவர்.

31. சபாபதி முதலியார், புரசை அட்டாவதானம்

சென்னை புரசவாக்கத்திற் பிறந்தவர். பிரபந்தங்கள் பல இயற்றியவர். உரையாசிரிய ராகவும் திகழ்ந்தவர்.

32. சாமிநாதையர், உத்தமதானபுரம், வே. (1855 - 1942)

தஞ்சை மாவட்டத்திலுள்ள பாவநாசத்தையடுத்த உத்தமதானபுரம் என்னும் ஊரினர். 1871-ம் ஆண்டளவில் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தம்பிள்ளையின் மாணாக்கராகினர். இவர் திருவாவடுதுறை ஆதீனத்து ஆறுமுக சுவாமிகளுடன் சேர்ந்து பதிப்பித்த முதல் நூல் 1878-ம் ஆண்டு வெளிவந்தது. சிவகசிந்தாமணி (1887) முதலாக பழைய நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தியவர்.

33. சிதம்பரப்பிள்ளை, சங்குவேலி, மு. (- 1889)

வில்லியம் நெவின்ஸ் எனப்படுபவர். இலக்கிய சங்கிரகம், பயாய இலக்கணம், தமிழ் வியா கரணம் எழுதியவர்.

34. சின்னத்தம்பி உபாத்தியாயர், உடுப்பிட்டி, தா. (1830 - 1878)

தமது ஊரிலே ஒரு தமிழ்ப் பாடசாலையினை நிறுவி நடத்தியவர். பிரமசாரியாக வாழ்ந்தவர். நில அளவைச் சூத்திரம், வீரபத்திரர் சதகம் முதலியனவற்றை எழுதியவர்.

35. சுந்தரம்பிள்ளை, ஆலப்புழை பெ. (1855 - 1897(

மலையாள நாட்டிலுள்ள ஆலப்புழை என்னுமூரினர். தத்துவப் பேராசிரியராகக் கடமை புரிந்தவர். தமிழாராய்ச்சியில் ஈடுபட்ட முன்னோர்களிலொருவர். மனோன்மணீயம் என்னும் நாடகத்தை இயற்றியவர்.

36. சுப்பையனர், வண்ணர்பண்ணை

வண்ணர்பண்ணையிலே பிறந்து ஏழாலையை இருப்பிடமாகக் கொண்டவர். கனகி புராணம் பாடியவர்.

37. சோமசுந்தர நாயகர், சூலை (1846 -)

சென்னையிலுள்ள சூலையெனுமிடத்தில் வசித்தவர். சைவசித்தாந்தி. மறைமலையடிகள் எனப் படும் சுவாமி வேதாசலத்தின் ஆசிரியர். சமய சம்பந்தமான பல நூல்களை இயற்றியவர்.

38. தம்பிமுத்துப்பிள்ளை புலவர், அச்சுவேலி, ச. (1857 - 1937)

அச்சுவேலியிலே சன்மார்க்க விருத்திச்சங்கம் நிறுவியவர். அதன் வெளியீடாக 'சன்மார்க்க போதினி' எனும் பத்திரிகையைப் பிரசுரித்தவர். நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தவர்.

39. தயானந்த சரஸ்வதி (1824 - 1883)

கிறித்து மதத்தின் தாக்கம் இந்தியாவில் உணரப்பட்ட வேளையில் 1875-ல் ஆரிய சமாசத்தை நிறுவியவர். விக்கிரகவணக்கம், பலதார மணம், சாதி என்பனவற்றைக் கண்டித்த அதே வேளையில் வேதங்களின் மாண்பினை எடுத்துரைத்து அவற்றின் வழி இந்துக்கள் வாழவேண்டும் என்று வற்புறுத்தியவர்.

40. தாகூர், ரவீந்திரநாத் (1861 - 1941)

நாவலரவர்கள் வியோகமடைந்தகாலை தாகூரவர்கள் பதினெட்டு வயது நிரம்பாத காளைப் பருவத்தினர்.

41. தெய்லர் பாதிரியார் (1796 - 1878)

ஐரோப்பியர். 1815-ல் சென்னைக்கு மதபோதியராக வந்தவர். கீழ்நாட்டுக் கையெழுத்துப் புத்தகசாலையில் இருந்த ஏட்டுச் சுவடிகளுக்கு விரிவான பட்டியலை எழுதி 1857-ல் வெளியிட்டார்.

42. நரசிம்முலு செட்டியார், காஜுலு லட்சுமி (1806 - 1868)

சென்னைச் சுதேசிகள் சங்கத்தை 1852-ல் அமைத்தவர். சென்னை மக்களின் பேரில் காலத்துக்குக் காலம் இவர் அனுப்பிய முறையீடுகளும் விண்ணப்பங்களும் பிரித்தானிய பாராளுமன்றத்திலே வாத பிரதிவாதங்களைத் தோற்றுவிக்கக் காரணமாய் இருந்தன. செல்வந்தராகிய இவர் ஆங்கிலேயர் ஒருவரை ஆசிரியராக நியமித்து 'கிறசன்ட்' என்ற இந்துப் பத்திரிகையைப் பல ஆண்டுகளாக நடத்தியவர்.

43. நாகநாத பண்டிதர், சுன்னாகம், அ. (- 1884)

சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் சங்கத மொழி ஆசிரியர். சங்கத மொழியிலுள்ள பல நூல்களை மொழி பெயர்த்து. சங்கரபண்டிதருக்கும் குமாரசுவாமிப் புலவருக்கும் படிக்கக் கொடுத்தவர். இவருடைய இதோபதேசம் மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

44. பங்கிம் சந்திரர் (1838 - 1894)

1864-ம் ஆண்டு தொடக்கம் பல நவீனங்களை எழுதி வங்காள உரைநடைக்கு வளமூட்டியவர். 1882-ம் ஆண்டில் 'வந்தே மாதரம்' என்ற தேசிய கீதத்தை இந்தியாவுக்கு அளித்தவர்.

45. பவர் பாதிரியார்

இந்து மதத்துக்கும் பாம்பு மதத்துக்கும் இருக்கிற சம்பந்த விளக்கம் (1851), சாதி வித்தியாச விளக்கம் (1857) முதலியனவற்றை எழுதியவர். திருநெல்வேலியில் இருந்தவர்.

46. மார்ட்டின், என்றி

உதயதாரகை 1841-ல் தொடங்கப்பட்டபோது அதன் ஆசிரியர்களுள் ஒருவராக இருந்தவர் 'யாழ்ப்பாணக்குறிப்புகள்' என்ற ஆங்கில நூலை எழுதியவர்.

47. முத்துக்குமார கவிராசர், சுன்னாகம், அ. (1780 - 1851)

சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களின் தமிழாசிரியர். யேசுமத பரிகாரம், ஞானக்கும்மி முதலியன எழுதியவர்.

48. மோகன் ராய், ராஜாராம் (1774 - 1833)

1828-ம் ஆண்டு பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தவர். உபநிடதங்கள் வழிநின்று இந்து சமயத்திற்கு மறுமலர்ச்சி ஊட்டியவர்.

49. சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்சர் (1834 - 1886)

கல்கத்தாவுக்கு அண்மையிலுள்ள காளிகோயில் ஒன்றிலே தேவி உபாசகராக வாழ்ந்த அநுபூதிமான். இவரது பெயராலே தோன்றியதே இராமகிருஷ்ண மடாலயம். பண்டைய இந்து சமய உண்மைகளை எளிய நடையிலே சிறிய கதைகள், போதனைகள் மூலம் எடுத்து விளக்கியவர். சமரச சன்மார்க்கத்தை வற்புறுத்தியவர்.

50. வித்தியாசாகர், ஈஸ்வர சந்திர (1820 - 1891)

வங்காள வசன நடையின் தந்தை எனப்படுவர். கல்வி நூல்களும் மொழிபெயர்ப்பு நூல் களும் பெருமளவில் எழுதியவர். 'தத்துவபோதினி பத்திரிகை' என்ற புகழ் பெற்ற பத் திரிகையை 1839-ம் ஆண்டு முதல் நடத்தியவர்.

51. விநாயகமூர்த்தி செட்டியார், வண்ணர்பண்ணை, சி. (- 1876)

கதிரை யாத்திரை விளக்கம் இயற்றியவர்.

52. சுவாமி விவேகானந்தர் (1862 - 1902)

இந்து சமயத்தினைப் பிற்காலத்திலே மேலைட்டிற் பரப்பிய சுவாமியவர்கள் இம்மண்ணுலகிலே தோன்றி 17 வருடங்களாகும்போது நாவலரவர்கள் வியோக மடைந்தார்.

53. வேதநாயகம்பிள்ளை, மாயூரம், (1826 - 1889)

திருச்சி மாவட்டத்தினர். கிறித்தவர். பிரதாப முதலியார் சரித்திரம் (1876), சர்வ சமய சமரசக் கீர்த்தனை (1878) முதலியனவற்றை இயற்றியவர்

நாவலர் காலத்தில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க சம்பவங்கள் சில

1. இலங்கை

பெப்ரவரி, 1823 19	யாழ்ப்பாணத்திலே துண்டுப் பிரசுர சங்கம் (Jaffna Tract Society) நிறுவப்பட்டது. கிறித்துவ மதக் கொள்கைகளைப் பரப்புவதற்காக ஏராளமான பிரசுரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.
1831—32	கோல்புறூக் ஆணைக்குழுவின் எடுத்துரைகள்: இலங்கையின் சமூக - அரசியல் பொருளாதாரத் துறைகளிற் பல சீர்திருத்தங்களை இக்குழு தகவுரை செய்தது.
1832	இராசகாரியம் எனப்பட்ட அரசாங்க சேவை (மானிய முறை) சட்டப்படி நீக்கப்பட்டது. காலத்துக் கோவ்வா இம்முறையை நீக்குமாறு கொல்புறூக் குழு எடுத்துரைத்திருந்தது.
1832	கொழும்புக்கும் கண்டிக்குமிடையில் தபாற்சேவை தொடங்கப்பட்டது. ஆசியாவிலேயே தபால் கோச்சு முறை இலங்கையிலேயே முதன்முதலாக அமைக்கப்பெற்றது.
1832	இலங்கையின் முதலாவது கோப்பித் தோட்டம் கம்பளைக் கண்மையிலுள்ள சிங்கப்பிட்டியில் ஏற்படுத்தப் பட்டது. ஜோர்ஜ் பேர்ட் என்ற வெள்ளைக் காரர் இத்தோட்டத்தின் உரிமையாளர்.
1833	கோல்புறூக் செய்த எடுத்துரைக்கு இணங்க முதலாவது சட்ட நிருபணசபை ஏற்படுத்தப்பட்டது.
1834	கோல்புறூக் குழுவின் எடுத்துரை ஒன்றுக்கு இணங்க கவர்னர் வில்மட் ஹோட்டன் (1831 - 1837) கல்விச் சபை ஒன்றை நிறுவினர். கல்வித் திட்டங்கள் வகுப்பதும், பள்ளிக்கூடங்களைக் கண்காணிப்பதும் சபையின் முக்கிய பொறுப்புக்களாயிருந்தன.
1834, பெப்ரவரி 4	கொழும்பிலிருந்த வெள்ளைக்கார வர்த்தகத்தின் முயற்சியால் 'த ஒப்சேவர் அன்ட் கொம்மேர்ஷியல் அட்வெட்டைசர்' (The Observer & Commercial Advertiser) என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. இதனையே சுமார் 90 வருடங்களுக்குப் பின் விஜயவர்த்தனா விலைக்கு வாங்கினர்.
1837	வித்தியோதயப் பிரிவேரு நிறுவப்பட்டது.
1839	அஸாமிலிருந்து வருவிக்கப்பட்ட தேயிலை விதைகள், பேராதனையில் அரசினர் தாவிரவியற் பூந்தோட்டத்திலே பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பெற்று, வெற்றிகிட்டியது. 1828-ம் ஆண்டுக்கு முன்பே தேயிலை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதாயினும் அம் முதன் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.
1839	பெருவாரியாகத் திறக்கப்பட்ட தோட்டங்களில் வேலைசெய்வதற்குத் தொழிலாளர் பற்றுக்குறையைத் தீர்க்குமுகமாக இவ்வாண்டிலிருந்து இந்தியத் தொழிலாளர் வருவிக்கப்பட்டனர்.

1839, மே 22	கொழும்பில் வணிக மன்றம் நிறுவப்பட்டது. தனியார் வர்த்தகத்தின் துரித வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இம்மன்றம் அமைந்தது.
1841	உதயதாரகை பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. மானிப்பாயிலிருந்து ஹென்றி மாட்டின் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இப் பத்திரிகை மாதமிருமுறை பிரசுரமானது. நாவலர் இப்பத்திரிகையில் விவாதங் கள் நடத்தியிருப்பது மட்டுமின்றி, இதனைப் பல விடங்களிற் கண்டித்து எழுதியுமிருக்கிறார்.
1841	கல்வி ஆய்வுக்குழு நிறுவப்பட்டது. இக்குழுவின் முக்கிய தகவுரை, கிறித்தவ சமயத்தைப் போதனை செய்யும் பள்ளிக்கூடங்களுக்கு மட்டுமே அரசாங்க நிதியுதவி செய்யவேண்டும் என்பதாகும். இதனால் கிறித்தவர்கள் கல்வித் துறையில் பெரிதும் முன்னேற்றமடைந்தனர்.
1844	அடிமை முறை (Slavery) சட்டப்படி ஒழிக்கப்பட்டது.
1845 ஏப்ரல் 26	அதி. வண. டாக்டர் ஜேம்ஸ் சப்மன் இலங்கையின் முதலாவது அத்தியட்சக ராக நியமனம் பெற்றார். திருச்சபையின் ஆணைப்படி இலங்கை மேற்றிராணி யார் இருக்கையாயிற்று.
1846, ஜூலை 2	சிலோன் டைம்ஸ் (Ceylon Times) வெளிவந்தது.
1847	பிரித்தானிய அரசாங்கம் தேவாலயங்களின் பாலனப் பொறுப்பை, அஸ்கி ரிய, மல்வத்தை பிரதம குருமாரிடமிருந்து பறித்து நிலப்பிரபுக்களிடம் கொடுத்து அத்துடன், தலதா மாளிகைக்கு வருடந்தோறும் வழங்கப்பட்டு வந்த முந்நூறு பவுண் அரச மானியமும் நிறுத்தப்பட்டது. அரசாங்கத்திலி ருந்து பௌத்த சமயத்தைப் பிரிப்பதே இத்தகைய நடவடிக்கையின் நோக் கமாயிருந்தது.
1847	அரசாங்கத்தின் நிதி நெருக்கடி; பல புதிய வரிகள் விதிக்கப்பட்டன. முத் திரை வரி உயர்வு; கப்பல், தோணி, வண்டி, நாய், துவக்கு முதலியவற் றுக்கு வரி; தலைவரி. இவற்றால் சுதேசிகள் மாத்திரமன்றி பறங்கியரும், சில வெள்ளைக்காரரும் அதிருப்தியடைந்தனர்.
1848	இலங்கையின் சில பகுதிகளிற் கலகங்கள் வெடித்தெழுந்தன; கண்டி, மாத் தளை, குருநாகல், கொழும்பு ஆகியவிடங்களிலே ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங் களும் நடந்தன. சில பகுதிகளில் கலகக்காரர் அரசாங்கக் கட்டிடங்களையும் வெள்ளைக்கார முதலாளிகளின் இல்லங்களையும் தாக்கிச் சேதப்படுத்தினர். அக்காலத்தில் கவர்னராயிருந்த ரொறிங்ரன் பிரபு (Lord Torrington, 1847-1850), படையியற் சட்டத்தை அமுலாக்கித் தேவைக்கதிகமான வன்முறை களினாற் கலகத்தையடக்கினர். அவ்வாண்டின் பிற்பகுதியிலே பல ஆங்கிலேய மனிதாபிமானிகளது முறையீட்டுக்கிணங்க கலகத்தைப் பற்றி ஆய்வுக்குழு வொன்று விசாரணை நடத்தியது; பதவிநீக்கப்படும் தறுவாயில் ரொறிங்ரன் பதவியிலிருந்து விலகி இங்கிலாந்து சென்றுவிட்டான்.
1858, ஜனவரி 1	முதன் முதலாக இலங்கையிலே தொலைபேசி (Telephone) சேவை தொடங் கப்பட்டது. முதலில் கொழும்புக்கும் காலிக்குமிடையே இச்சேவை நடந்தது.
1858	குடியியற் சுகாதாரத் திணைக்களம் ஒன்று அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டு டாக்டர் கிறிஸ்தோபர் எலியற் என்பவர் முதலாவது தலைமை வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பெற்றார்.

1859	சைமன் காசிச் செட்டி எழுதிய தமிழ் புளூர்ட்டார்க் (Tamil Plutarc) என்ற நூல் வெளிவந்தது. இலக்கிய வரலாற்றுய்வுக்கு இது வழிகாட்டியது.
1866	பௌத்த சமய மறுமலர்ச்சியாளர் சிலரது பெருமுயற்சியின் விளைவாகக் கொழும்பில் ஆனந்தாக் கல்லூரி நிறுவப்பட்டது.
1867	கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் புகையிரதப்பாதை அமைத்து முடிக்கப்பட்டது. இதுவே முதலாவது இரும்புப்பாதை.
1869	கல்வித் திணைக்களம் (Department of Public Instructions) நிறுவப்பட்டது.
1870	பள்ளிக்கூடங்களுக்கு உதவி நன்கொடைத் திட்டம் ஒன்றை (grants-in-aid) அரசாங்கம் தொடங்கியது. இவ்வாய்ப்பைப்பயன்படுத்தி, கிறித்துவ மிசனரிமார் சின்னஞ்சிறு பட்டினங்களிலெல்லாம் கல்விக் கூடங்கள் நிறுவினர்.
1873	முதன் முறையாக இலங்கையிலிருந்து வர்த்தக அடிப்படையில் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.
1876	கழனியில் வித்தியாலங்கார பிரிவேனு தாபிக்கப்பட்டது.
1876	யாழ்ப்பாணத்திலிருந்து கத்தோலிக்க பாதுகாவலன் (Catholic Guardian) வெளிவரத் தொடங்கியது.
1876—77	இலங்கையின் சில பகுதிகளிலும் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் மழைக் குறைவின் காரணத்தால் கடும் வரட்சியும் கொடிய பஞ்சமும் ஏற்பட்டன. ''தாதுவருடப் பஞ்சம்'' எனப் பிற்காலத்தில் இது வழங்கலாயிற்று. வடமாகாணத்தைப் போலவே வடமத்திய மாகாணமும் பஞ்சத்தாற் பாதிக்கப்பட்டது.அம்மாகாண ஏஜன்டராயிருந்த டிக்ஸன் தனது ஆண்டறிக்கையில் (1878) ''புராதன குளங்களையும் நீர்த்தேக்கங்களையும் அரசாங்கம் பெருமளவிலே திருத்தியமைத்தாலன்றி எதிர்காலம் சுபிட்சமாக அமையாது'' என்று எழுதினர். 1878—79ஆம் ஆண்டு கிழக்குப் பிரதேசத்தில் வரட்சியும் துன்பமும் ஏற்பட்டது.

2. இந்தியா

1829 — பெந்திங் பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் பெண்கள் கணவருடன் உடன் கட்டையேறும் (சதி) வழக்கம் சட்டப்படி தடுக்கப்பட்டது.

1829 — பிரித்தானியரது நேரடியான ஆட்சியிலிருந்த பிரதேசங்களிலே அடிமைத்தனம் சட்டபூர்வமாக அகற்றப்பட்டது. ஆனால் சுதேச அரசுகளில் அது நிலைபெற்று வந்தது. உதாரணமாக 1834-இல் திருவாங்கூரில் ஓர் அடிமைச் சந்தை இருந்தது.

1830 — சென்னை மாகாணத்தில் ''சதி'' நீக்கச் சட்டம் அமுலுக்கு வந்தது.

1831 — **தமிழ்ப் பத்திரிகை** (Tamil Magazine) என்ற திங்கள் இதழ் வெளிவந்தது. இதுவே தமிழில் முதன் முதல் தோன்றிய பத்திரிகை என்பர்.

1835 பெப். — மெற்காவ் தற்காலிக கவர்னர் ஜெனரலாக இருந்த சமயத்தில் கல்விக்குழுத் தலைவராயிருந்த மெக்காலே பிரபு ஆங்கிலக் கல்வி பற்றி ஓர் அறிக்கை எழுதினர்; பிரசித்திபெற்ற அவரது எடுத்துரைப்பிற் கிணங்க நாட்டில் ஆங்கிலக் கல்வி முதன்மை பெற்றது.

1835 — அச்சியந்திரசாலைகள் நடத்துவதற்குப், பத்திரிகைகள் வெளியிடுவதற்கும் அது காலவரை விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை மெற்காவ் சட்டப்படி நீக்கினர்; சுதேசிகள் இத்துறையில் முன்னேறுவதற்குச் சட்டம் பெரிதும் உதவியது.

1845—46 — டல்ஹௌசி பிரபுவின் ஆட்சிக்காலம்: இக்காலப் பகுதியிற் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. புகையிரத, தந்திப்போக்கு வரத்து, பொதுவேலைத் திணைக்களம் முதலியன குறிப்பிடத்தக்கவை.

1845 ஏப். 9 — அக்காலத்தில் (1844 தொடக்கம்) 'கிரெஸண்ட்' (Crescent) என்ற செய்தித்தாளை நடாத்தி வந்த வணிகப் பெருமகனர் லட்சுமி நரசிம்முலு தலைமையில் சென்னைக் குடிமக்கள் கூட்டத்தில் அரசாட்சியின் மதக்கொள்கைக்கு எதிரான மனு பிரேரிக்கடபட்டு, அதனை இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தனர். 'கிரெஸண்ட்' பத்திரிகை Record என்ற பெயரில் வெளிவந்த கிறித்தவ பத்திரிகைக்குப் போட்டியாக எழுந்தச் நோக்கம் ஹிந்துக்களின் துன்பத்தைத் துடைப்பது.

1850 — இவ்வாண்டில் இயற்றப்பெற்ற 21-வது சட்டப்படி மதமாறுவோர் தமது குடும்பச் சொத்துரிமையிலிருந்து விலக்கப்பட்டவர் ஆகார் என்று கூறப்பட்டது. நடைமுறையில் இது இந்து மதத்திலிருந்து கிறித்தவராளேருக்கு உதவியாயிருந்தது. ''நேரடியாகவே மதமாற்றத்தை இச்சட்டம் தூண்டுவதாயமைந்தது'' என்று அக்கால விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டார்.

1850 — சென்னையில் பாடப் புத்தகக் கழகம் (Madras Text Book Society) நிறுவப்பட்டது. **ரொபின்சன்** குருசோ முதலிய மொழிபெயர்ப்பு நூல்களும் பிற வசன நூல்களும் வெளிப்போந்தன.


1852 — சென்னை சுதேசிகள் சங்கம் மக்களின் குறைகளை எடுத்துக்கூறும் மனு ஒன்றை பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தது. குறைகளுக்குப் பரிகாரம் காண அரசியல் ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறும் அது பாராளுமன்றத்துக்கு விதந்துரைத்தது.

1853 — இந்தியாவின் முதலாவது நவீன பஞ்சாலை பம்பாய் நகரில் நிறுவப்பட்டது.

853	கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்கு மேற்கொண்டும் கால அவகாசம் அளிக்கப் பட்டதைத் தொடர்ந்து,சென்னை சுதேசிகள் சங்கமும், சென்னை ஹிந்துவிவாத மன்றமும் புதிய கோரிக்கைகளைப் பாராளும்ன்றத்துக்கு அனுப்பின. சென்னை யில் இம்மனுவுக்கு பதினன்காயிரம் கையொப்பங்கள் திரட்டப்பட்டன.
1854 ஜூலை	பொதுக்கல்வித் திட்டம் ஒன்று வகுக்கப் பட்டது. ''அரசாங்க உதவியுடனும் கட்டுப்பாட்டிலும் அமைந்த கல்விமுறை'' என்று வர்ணிக்கப் பட்ட அத் திட்டத்தைச் செயற்படுத்த, கல்வித் திணைக்களம் நிறுவப்பட்டது. இதுவே டல்ஹௌசி நிறுவிய பிரசித்தி பெற்ற (Dept. of Public Instruction) ஆகும்.
1854	பம்பாயிலிருந்து தானுவுக்குச் செல்லும் புகையிரதப் பாதை அமைக்கப் பட்டது. இதுவே இந்தியாவின் முதலாவது இரும்புப் பாதையாகும்.
1855	தஞ்சை மன்னன் மரணம். சுதேச இராச்சியங்களிலே மன்னன் வாரிசு இன்றி இறக்கும்போது அரசாட்சியுரிமை பிரித்தானிய முடியைச் சாருகிறது. என்ற Doctorine of Lapse கொள்கையின் பிரகாரம் தஞ்சையரசு நேரடி யான ஆட்சிக்கு வந்தது.
1856	சென்னையிலே முதன்முதலாகப் புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது.
1856	கால்டுவெல் பாதிரியாரது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் வெளிவந்தது.
1857	இந்தியாவின் பல பல பகுதிகளிற் கலவரங்கள் வெடித்தன. ''சிப்பாய்க் கலவரம்'' என இவற்றை ஆங்கில ஆசிரியர் கூறுவர்; ''முதலாவது சுதந் திரப் போர்'' என்று இந்தியர் கூறுவர். ஆங்கிலேயக் கம்பெனியின் ஆட்சி யை உலுப்பிய இவ்வெழுச்சி அக்காலத்தில் மாபெரும் பாதிப்பை உண்டு பண்ணியது. எனினும் 1857 விடுதலை எழுச்சியில் சென்னை மாகாணம் கலந்து கொள்ளவில்லை ஆயினும் ஆயுதம் ஏந்திய போர் ஒலி கேட்காது விடினும் அரசியல் அடிப்படையில் எதிரொலிகள் கேட்டன.
1857	கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய முப்பெரு நகரங்களிலும் பல்கலைக் கழகங்கள் தாபிக்கப்பட்டன.
1857	வண. தெய்லர் அவர்கள் (1796—1878) கீழ்நாட்டுக் கையெழுத்துப் புத்தக சாலையில் இருந்த ஏட்டுச் சுவடிகளுக்கு விரிவான விவரணப்பட்டியல் எழுதி வெளியிட்டார். கர்னல் கொலின் மக்கன்ஸி காலத்திலிருந்து (1753—1821) தொடுக்கப்பெற்று வந்த ஏட்டுச்சுவடிகள் பழந்தமிழிலக் சியச் செல்வங்கள் பல வெளிவரக் காரணமாயமைந்தன.
1858 நவம். 1	அதுகாலவரை கம்பெனி ஆட்சியிலிருந்து இந்தியா விக்டோரியா மகாராணி யின்பிரகடனத்தால் பூரண குடியேற்ற நாடாதியது. கவனர்னர் ஜெனரல் பதவி வைஸ்ராய் என்று மாற்றம் பெற்றது. கம்பெனி ஆட்சிக்கு முடிவு கட்டியதைச் சென்னை மக்கள் வரவேற்று ஆட்சிப் பொறுப்பை அரசியாரே நேரடியாக ஏற்றதைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.
1862	வின்ஸ்லோ தமிழ்-ஆங்கில அகராதி வெளிவந்தது.
1865	கிறித்தவரல்லாத தமிழ் அறிஞர் சிலர் சேர்ந்து விவேக விளக்கம் என்ற வெளியீட்டைத் தொடக்கினர். காலத்துக் கேற்கா மூட நம்பிக்கைகளை ஒழித்து, இந்து மதத்தைப் பலப்படுத்துவதே தாபகர்களது நோக்க மாயிருந்தது.

1869, ஒக். 2	போபல்ாரிதர்மகே ந்னதாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தாஷ்.
1870	தென்னிந்தியாவில் புதைபொருள் ஆராச்சித் திணைக்களம் நிறுவப்பட்டது.
1870	'நேட்டிவ் பப்ளிக் ஒப்பினியன்' Native Public Opinion என்ற மும்மொழிப் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. பூண்டி அரங்கநாத முதலியார், வேங்கட ரமண பந்துலு, திவான் பகதூர் ரகுநாத முதலியார் இதனை நடாத்தியவர்கள். இப்பத்திரிகை நாவலரது நூல்களைப் பலவாகப் பாராட்டியது. பிற்காலத்தில் இப்பத்திரிகை ஆங்கிலத்தில் மாத்திரம் வெளிவந்தது.
1872	இந்தியத் தொல்பொருளாராய்ச்சி, புவியியல் ஆராய்ச்சி, வரலாறு, நாணய ஆராய்ச்சி, மொழி, இலக்கியம், நாட்டுப் பாடல், கிராமியக் கலைகள் என்பன சம்பந்தமான ஆய்வுகளை வெளியிடுவதற்காக, டாக்டர் ஜேம்ஸ் பேர்கஸ் ''இந்தியப் பழமை ஆய்வு'' (The Indian Antiquary) என்ற திங்கள் இதழை தொடங்கினர்.
1875	தயானந்த சரஸ்வதி வட இந்தியாவில் ஆரிய சமாசத்தை நிறுவினர். ''மீண்டும் வேத வாழ்வு வாழவேண்டும்'' என்ற குரல் எழுந்தது.
1878	சென்னையில் ஹிந்து (Hindu) பத்திரிகை ஆரம்பம்.
1878	சுதேச மொழிகள் பத்திரிகைச் சட்டம் இயற்றப்பட்டது. இதற்கிணங்க பத்திரிகைச் சட்டம் இயற்றப்பட்டது. இதற்கிணங்க பத்திரிகைச் சொந்தக்காரர் அரசாங்கத்துக்கு விரோதமாக எதுவும் எழுதுவதில்லை என்று ஒப்பந்தம் செய்ய வேண்டியவராயினர். இக்காலத்தில் வைஸ்ராயாக இருந்தவர் லிற்றன் பிரபு. பலத்த கண்டனத்துக்கிடமான இச்சட்டம் (Vernacular Press Act) நான்கு ஆண்டுகளுக்குப் பின் நீக்கப்பட்டது.
1878—80	இந்தியாவின் பல பாகங்களிற் கொடிய பஞ்சம் ஏற்பட்டுப் பெருந் தொகையான மக்கள் இறந்தனர். இக்காலப் பகுதியை யடுத்து ஜெனரல் றிச்சர்ட் ஸ்ராச்சி தலைமையில் ஓர் ஆய்வுக்குழு பஞ்சத்தின் காரண காரியங்களை விசாரணை செய்து அறிக்கை ஒன்று சமர்ப்பித்தது.
1878	லிற்றன் பிரபுவின் ஆட்சிக் காலத்திலேயே உள்நாட்டுச் சுங்க வரிகள் நீக்கப்பட்டு, சுங்கக் கொள்கையில் அமைப்பொற்றுமை ஏற்படுத்தப் பட்டது. அத்தோடு இங்கிலாந்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு இறக்கு மதி செய்த பொருள்களில் அதுகாலவரை விதிக்கப்பட்ட வரியும் நீக்கப்பட்டது. இதனால் இந்தியா அந்நியப் பொருள்களுக்குப் பெருஞ் சந்தையாயிற்று.

ஆசிரியர் மாணாக்கர் பரம்பரை - 1.



கூழங்கைத்தம்பிரான் (?-1795)

இருபாலை
நெ. சேஞ்சிராய முதலியார் (? 1750-1840)
[நெல்லிநாத முதலியார், மாதகல் சிற்றம்பலப் புலவர்,
ட்டு மிழக்கு மு. சுவாமிநாதர் ஆகியோரிடமும் பயின்றவர்.]

மாதகல்
மயில்வாகனப் புலவர்

நல்லூர்
வே. சம்பந்தப் புலவர்

நல்லூர்
மனப்புலி முதலியார் மகன்
சரவணமுத்துப் புலவர்
? 1802-1845

நீர்வேலி
ச. பீதாம்பரப் புலவர்

கந்தரோடை
நாகநாத பண்டிதர்
(அப்பாப்பிள்ளை)

வல்லிபட்டித்துறை
க. ஏகாம்பரப் புலவர்

நீர்வேலி
சி. சங்கர பண்டிதர்
1829-1870

தெல்லிப்பழை
அ. துரையப்பாபிள்ளை
1872-1929

புன்னாலைக்கட்டுவன்
ச. கதிர்காமையர்

ஆவரங்கால்
சு. நமச்சிவாயப் புலவர்

நீர்வேலி
ச. சிவப்பிரகாச பண்டிதர்
-1914

சுன்னாகம்
அ.குமாரசுவாமிப் புலவர்
1854-1922

புன்னாலைக் கட்டுவன்
சி.கணேசையர்
1878-1958

புன்னாலைக் கட்டுவன்
சி. செந்தி நாதையர்
(காசிவாசி)
1848-1924

ஊரெழு
சு. சரவண முத்துப் பிள்ளை
-1916

வட்டுக்கோட்டை
ஆ. அம்பலவாண பண்டிதர்
(-1932)

அச்சுவேலி
ச. குமாரசுவாமிக் குருக்கள்
(1886-)


திருமயிலை
சண்முகசுந்தர முதலியார்

மாவை
வே. விசுவநாத பிள்ளை

சுழிபுரம்
சிவப்பிரகாச பண்டிதர்

வதிரி
சி. தாமோதரம் பிள்ளை

பிரான் (?-1795)


மாதகல்
மயில்வாகனப் புலவர்
வண்ணப்பணை
வைத்தியலிங்கச் செட்டியார்
750-1840)
சிற்றம்பலப் புலவர்,
ரிடமும் பயின்றவர்.]
நீர்வேலி
ச. பீதாம்பரப் புலவர்
கந்தரோடை
நாகநாத பண்டிதர்
(அப்பாப்பிள்ளை)
வல்லிபட்டித்துறை
க. ஏகாம்பரப் புலவர்
வட்டு கிழக்கு
சு. சண்முகச் சட்டம்பியார்
-1849
மறவன்புலம்
சயம்பர்
மானிப்பாய்
அ. சதாசிவம்பிள்ளை
(ஜே. ஆர். ஆர்னோல்டு)
1820-1896
நீர்வேலி
சி. சங்கர பண்டிதர்
1829-1870
தெல்லிப்பழை
அ. துரையப்பாபிள்ளை
1872-1929
வல்லிட்டித்துறை
க. ாம்பரம்
ஆவரங்கால்
சு. நமச்சிவாயப் புலவர்
நீர்வேலி
ச. சிவப்பிரகாச பண்டிதர்
-1914
சுன்னாகம்
அ.குமாரசுவாமிப் புலவர்
1854-1922
சுன்னாக
பூ. முருகே
பண்டித
-1899
கீரிமலை
கா. சபாபதிக் குருக்கள்
ஊரெழு
சு. சரவண முத்துப் பிள்ளை
-1916
வட்டுக்கோட்டை
ஆ. அம்பலவாண பண்டிதர்
(-1932)
அச்சுவேலி
ச. குமாரசுவாமிக் குருக்கள்
(1886-)
சுழிபுரம்
வப்பிரகாச பண்டிதர்
வதிரி
சி. தாமோதரம் பிள்ளை

ஆசிரியர் மாணாக்கர் பரம்பரை - 2.

நல்லூர் மனப்புலி முதல

சரவணமுத்துப்

(1802 - 184

உடுப்பிட்டி
அ. சிவசம்புப் புலவர்
1910

நல்லூர்
வே. கார்த்திகேய
ஐயர்

நல்லூர்
வே. சம்பந்தப் புலவ
(தந்தை வேலாயுத முதலி
இருபாலை நெ. சேனாதி
முதலியார், ஆகியோரிட
பயின்றவர்)

மாதகல்
சு. ஏரம்பையர்
1848-1915

நல்லூர்
சிற். கைலாசபிள்ளை
1857-1916

உடுப்பிட்டி
அ. சிவசம்புப்புலவர்
-1910

அச்சுவேலி
அ. வேன்மயில்
வாகனச்
செட்டியார்

வதிரி
சி. நாகலிங்க
பிள்ளை

புலோலி
வ. குமார
சுவாமிப்
புலவர்
-1925

புலோலி
வ. கணபதிப்
பிள்ளை
-1895

புலோலி
வ. குமார
சுவாமிப்
புலவர்
-1925

சு. சிவபாத
சுந்தரம்
-1953

மாகறல்
கார்த்தி
கேய முத
லியார்
-1907

அல்வாய்
க. சின்னத்தம்பி
உபாத்தியாயர்

சு. சிவபாத
சுந்தரம்
—1953

புலோலி
ம. தில்லை
நாத
நாவலர்

தென்புலோலியூர்
க. க. முருகேசபிள்ளை
1893-1956

கந்த முருகேசன்

கரணவாய்
கை. திருஞான
சம்பந்த
தேசிகர்

சுன்னாகம்
பூ. முருகேச
பண்டிதர்
1899

கரணவாய்
கை. நமச்
சிவாய
தேசிகர்

உடுப்பிட்
சு. ஆறு
உபாத்தி
யாயர்

தும்பளை
ச. சுப்பிரமணிய
சாஸ்திரிகள்

வண்ணார்பண்ணை
ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை
1858-1917

சுன்னாகம்
அ. குமாரசுவாமிப் புலவர்
1854-1922

ச. சரவணமுத்து
-19

தென்கோவை
ச. கந்தையபிள்ளை

தென்கோவை
ச. கந்தைய
பிள்ளை
—1958

மல்லாகம்
இ. நமச்சிவாயப்
புலவர்

பன்னாலை
ச. சிவானந்
தையர்
-1916

வறுத்தலைவிளான்
க. மயில்வாகனப்
புலவர்


புன்னாலைக்
கட்டுவன்
சி. கணேசையர்
1878-1958

உடுப்
வ. மு.
னேசுவ


ɒனப்புலி முதலியார் மகன்

ாமுத்துப் புலவர்


(1802-1845)




ஆசிரியர் மாணாக்கர் பரம்பரை - 3.



நல்லூர் க. ஆறுமுக நாவலர்



நாவலர் (1822–1879)



நாவலர் நூல்கள்

I. நாவலரவர்கள் வெளியிட்ட நூல்கள்

அ

1. கோயிற்புராணம்
2. கந்தபுராணம் (1886)
3. சேது புராணம் (1866)
4. பெரியபுராணம்
5. பாரதம்
6. கந்தரலங்காரம்
7. கந்தரனுபூதி
8 அருணகிரிநாதர் திருவகுப்பு (1867)
9. திருச்செந்தூரகவல்
10. சிதம்பரமும்மணிக் கோவை
11. நால்வர் நான்மணி மாலை
12. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்
13. பட்டணத்துப் பிள்ளையார் பாடல்
14 மறைசையந்தாதி
15. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி
16. விநாயககவசம்
17. சிவகவசம்
18. சத்திகவசம்
19. பதினெராம் திருமுறை (1869)
20. ஏரெழுபது
21. திருக்கை வழக்கம்

ஆ

22. கோயிற்புராணவுரை (1868)
23 சைவசமயநெறியுரை (1868)
24 திருமுருகாற்றுப் படையுரை
25. திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை (1861)
26. சிவதருமோத்தரவுரை
27. மருதூரந்தாதியுரை
28. உபநிடதவுரை
29. திருக்கோவையார் மூலமும் நச்சினர்க்கினியருரையும் (1860)
30. கொலைமறுத்தல் மூலமும் சிதம்பர சுவாமிகளுரையும் (1851)
31. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் (1861)
32 சௌந்தரியலகரியுரை (1849)

இ

33. பெரியபுராண வசனம் (1852)
34. சிதம்பரமான்மியம்

ஈ

35. சைவ வினாவிடை, முதற் புத்தகம்
36. சைவ வினாவிடை, இரண்டாம் புத்தகம்
37. சிவாலய தரிசன விதி
38. புட்ப விதி
39. அநுட்டான விதி, முதற் புத்தகம்
40. அனுட்டான விதி, இரண்டாம் புத்தகமும் குருவாக்கியமும்

உ

41. சுப்பிரபோதம்
42. சைவதூஷண பரிகாரம் (1854)
43. யாழ்ப்பாணச் சமய நிலை (1872)

ஊ

44. முதற் பாலபாடம்
45. இரண்டாம் பாலபாடம்
46. மூன்றும் பாலபாடம் (நான்காம் பாலபாடம்)
47. இலங்கைப் பூமிசாத்திரம்

எ

48. இலக்கண வினாவிடை, இரண்டாம் புத்தகம்
49. இலக்கணச் சுருக்கம்

50. நன்னூற் கண்டிகையுரை
51. நன்னூல் விருத்தியுரை (1851)
52. இலக்கணக் கொத்து (1866)
53. இலக்கண விளக்கச் சூறாவளி (1866)
54. தொல்காப்பிய சூத்திர விருத்தி (1866)
55. பிரயோக விவேகவுரை
56. உபமான சங்கிரகம்
57. இரத்தினச் சுருக்கம்
58. சூடாமணி நிகண்டுரை (1849)
59. தருக்க சங்கிரகம் (1861)
60. தொல்காப்பியம் சேனாவரையம் (பரிசோதித்தது)

II. நாவலரவர்கள் பதிப்பிக்கத் தொடங்கி முடிவுறுதவை

61. பெரியபுராண சூசனம்
62. கந்தபுராண வசனம்
63. திருவிளையாடற்புராண வசனம்

III. நாவலரவர்கள் பதிப்பிக்கும் பொருட்டு எழுதி முடித்தவைகள்

34. சிவராத்திரி புராணம்
65. திருவிளையாடற் புராணம்
66. நைடதவுரை
67. சிவஞானபோதச் சிற்றுரை
68. நன்னூல் விருத்தியுரை, 2 ஆம் பதிப்பு
69. அனுட்டான விதி, மூன்றும் புத்தகம்
70. சிவபூசா விதி
71. சிராத்த விதி
72. போசன விதி
73. குரு சிஷ்யர் கிரமம்
74. பூசைக்கிடம்பண்ணும் விதி
75. தருப்பண விதி

IV. நாவலரவர்கள் பதிப்பிக்கும் பொருட்டு எழுதத் தொடங்கியவைகள்

76. தேவாரம்
77. இரகுவம்மிசம்
78. உபதேச காண்டம்
79. இலக்கண விளக்கம், முதற்புத்தகம்
80. அகராதி (தமிழ்)
81. அகராதி (சமஸ்கிருதம், தமிழ்)
82. அகராதி (இங்கிலிஷ், தமிழ்)
83. தருக்க பரிபாஷை
84. சமஸ்கிருத வியாகரண சாரம்

நாவலரைப் பற்றிய நூல்கள்

1 ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம்

வண்ணைர்பண்ணை வே. கனகரத்தின உபாத்தியாயர் எழுதியது; யாழ்ப்பாணம் சைவப்பிர காசயந்திரசாலையிற் சித்திரபானுவருடம் ஐப்பசிமாதம் (1882) அச்சிடப்பட்டது; இரண்டாம் பதிப்பு, யாழ்ப்பாணம் நாவலர் நூற்றாண்டு விழாச் சபையினராற் சுன்னகம் திருமகள் அழுத்தகத்திற் பதிப்பிக்கப்பட்டது (1968).

2 யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்

சிவகாசி இ, அருணாசலக் கவிராயர் எழுதியது; சென்னை அல்பீனியன் அச்சுக்கூடத்திலே 1898 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது; இரண்டாம் பதிப்பு, மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை அவர்களாற் பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையிலே 1934 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

3 ஆறுமுகநாவலர் அவர்கள் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப் பாமாலையும்

சி. செல்லையாபிள்ளை எழுதியது; 1914 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

5 நாவலர் வசனநடை

பிரமஸ்ரீ சோ. ராமஸ்வாமி சர்மா அவர்களால் எழுதப்பட்டது. கொழும்பு ராபர்ட் அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது. முதலாம் பதிப்பு, 14-11-1932,

6 நாவலர் நடைப்பாங்கு, சி. சரவணனுர்.

7 நாவலர் நினைவு மலர்

கா. பொ. இரத்தினம் அவர்கள் தொகுத்தது; ஈழகேசரி நா. பொன்னையா அவர்கள் வெளியிட்டது; கன்னகம் திருமகள் அச்சியந்திரசாலையிலே 1938 ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பட்டது.

8 நாவலர் பெருமான்

யோகி சுத்தானந்த பாரதியார் எழுதியது; புதுச்சேரி புதுயுக நிலையம் வெளியிட்டது; புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தாஸ்ரம அச்சுக்கூடத்தில் 1948 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

9 **Arumukha Navalar**

S. Sivapathasundaram; Printed at the Jaffna Saiva Prakasa Press (1950).

10 நாவலர் பெருமான்

கா. மாயாண்டிபாரதி எழுதியது; சென்னை பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டது; சென்னை ஏசியன் பிறினடர்ஸ் என்னும் அச்சுக்கூடத்தில் 1955 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

11 நாவலர் சமயப்பணி

சி. சீவரத்தினம் அவர்கள் எழுதியது; வண்ணைர்பண்ணை. யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிலே 1962 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

12 ஆறுமுகநாவலர் கதை

நாரா. நாச்சியப்பன் எழுதியது; சென்னை வுலம்புரி பதிப்பகம் வெளியிட்டது; சென்னை ஐடியல் பிறின்டர்ஸ் என்னும் அச்சுக்கூடத்தில் 1964 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

13 **Sri La Sri Arumuga Navalar, the Champion Reformer of the Hindus A Biographical Study.**

Written by V. Muttucumaraswamy; Published in 1965.

14 நாவலர்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதியது; யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வெளியிட்டது; யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிலே 1968 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது

15 நாவலர் பணிகள்

ச. தனஞ்சயராசசிங்கம்; 1969 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது

99